
# திருவிடைமருதூர்
# ஸ்ரீமஹாலிங்கஸ்வாமி கோயில்
# மஹாகும்பாபிஷேக மலர்

1456




"திருவாவடுதுறை ஆதீனம், 15-7-1970"

உ

# சிவமயம்

## திருவாவடுதுறை ஆதீனத்திற்குச்
சொந்தமான

# திருவிடைமருதூர்
# ஸ்ரீமகாலிங்கஸ்வாமி
## கோயில்
# மகாகும்பாபிஷேக மலர்

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS 41
16107

15-7-1970

ஸ்ரீ மகாலிங்கஸ்வாமி தேவஸ்தான வெளியீடு

*Printed in July 1970*
*At* *Printing Works, Madras-*

உ

சிவமயம்

# முன்னுரை

திருக் கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்ததும், ஸ்ரீ மகாலிங்கப் பெருமான் ஸ்ரீ பெரு நல மாமுலை அம்மையோடும் எழுந்தருளி யிருக்கப்பெற்றதும், பூசத் துறையாற் பொலிவு பெற்றதும், மருதமரத்தைத் தலவிருட்சமாகவுடைய மூவகை அர்ஜுன க்ஷேத் திரங்களில் நடுநாயகமாக விளங்கி மத்தியார்ஜுனம், இடைமருது என்ற திருநாமங்களைப் பெற்றதும், பல தலங்களையே தன்னுடைய பரிவார தேவதைகள் எழுந்தருளும் இடங்களாக உடையதும், வரகுண பாண்டியர், பட்டினத்தார், பத்திரகிரியார் முதலியவர்கள் வழிபட்டதும், ஸ்ரீ லலிதா ஸகஸ்ர நாமத்துக்குப் பாஷ்யமும் ஸ்ரீ மூகாம்பிகையை வணங்கி ஸ்ரீ சக்ர பிரதிஷ்டையும் செய்த ஸ்ரீ பாஸ்கரராயர் சிவகாலம் வாழ்ந்ததும், நால்வர்களாலும் பாடப் பெற்ற சிறப்புடையதும், காவிரிக் கரையில் நிலவுவதுமாகிய திருவிடைமருதூரில் ஸ்ரீ மகாலிங்க மூர்த்திக்கும் பிற மூர்த்தி களுக்கும் 15–7–1970 அன்று இறைவன் திருவருளால் மிகச் சிறப்பான முறையில் அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. அந்தத் திருநாளன்று யாவரும் இத்தலத்தைப் பற்றிய வரலாறுகளையும் சிறப்புக்களையும் அறிந்து கொள்ளவும், நம்முடைய சமய சம்பந்தமான பல கருத்துக்களை அறிந்து கொள்ளவும் வாய்ப்பாக இம் மலர் மலருகிறது. திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குரு மகா சந்நிதானத்தின் பேரருட் சிறப்பால் இந்த மலர் வண்ணமும் வளமும் உடையதாக விளங்குகிறது.

இந்த மலரில் இத்தல சம்பந்தமான திருமுறைப் பாடல்களும் திருப்புகழ், பிள்ளைத்தமிழ் என்பவற்றில் ஒவ்வொரு பாடலும் முதலில் அமைந்துள்ளன. அப்பால் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானங்கள், தவச் செல்வர்கள் ஆகியவர்களின் ஆசியுரைகளும் பல பெரு மக்களுடைய வாழ்த்துரைகளும் உள்ளன. அவற்றின்பின் புலவர் பெரு மக்களும் பேரறிஞர்களும் சித்தாந்தச் செல்வர்களும் வழங்கிய அரிய கட்டுரைகள் இடம் பெறுகின்றன; பொதுவாக ஆலய சம்பந்தமான கட்டுரைகளும், சிறப்பாகத் திருவிடை மருதூரைப் பற்றிய கட்டுரைகளும், இத்தலத்தைப் பற்றிய நூல்களிலுள்ள கருத்துக்களைப் பற்றிய கட்டுரைகளும், திருமுறைகளைப் பற்றிய கட்டுரைகளும் இந்த மலருக்கு மணத்தை ஊட்டுகின்றன.

இந்த ஆதீனத்தில் 16-ஆம் பட்டத்து ஞானாசிரியராக ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் எழுந் தருளி யிருந்த காலத்தில் அப்போது கும்பகோணம் கல்லூரியில் தமிழாசிரியராக இருந்த மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் திருவிடை மருதூர்த் தலபுராணச் செய்தி களைச் சுருக்கி உரைநடையில் எழுதி 'மத்தியார்ச்சுன மான்மியம்' என்ற பெயருடன் வெளி யிட்டார்கள். அந்தப் புத்தகத்தில் அவர்களே இயற்றிய ஏகநாயகர் ஊசல் தாலாட்டு ஆகிய இரண்டையும் சேர்த்திருந்தார்கள். இத்தல வரலாற்றை அன்பர்கள் எளிதில் அறிய உதவியாக இருக்குமென்று அந்த வெளியீட்டிலுள்ள மான்மியமும் ஐயரவர்கள் பாடல்களும் இந்த மலரில் சேர்க்கப் பெற்றுள்ளன. இலக்கியமும் சமயமும் மணந்து ஆழமும் அகலமும் உடைய கட்டுரை களையும் பாக்களையும் பெற்று இம் மலர் திகழ்கிறது.

பல வகையான ஓவியங்கள் இம் மலரில் இடையிடையே அமைந்து இதற்கு வண்ண மூட்டு கின்றன. ஸ்ரீ மகாலிங்கப் பெருமானுடைய திருவுருவ ஓவியமும் ஸ்ரீ மூகாம்பிகையின் ஓவியமும் இம் மலருக்குத் தெய்விகச் சிறப்பைத் தருகின்றன. கோயிலின் பிராகாரம், தலவிருட்சம், மூர்த்திகள் முதலியவற்றைப் புனையா ஓவியங்களாக அன்பர் திரு. சிற்பி அவர்கள் வரைந்து தந்திருக்கிறார். திரு. சித்திரலேகா அவர்களுடைய திருவெம்பாவைக் காட்சிகளாகிய மூவண்ண

ஓவியங்கள் இம் மலரின் சிறப்பை மிகுவிக்கின்றன. மூர்த்திகளின் நிழற் படங்களையும், திருமுறைப் பாடல்களின் விளக்கமாகத் திருக்கோயில் சுவர்களில் உள்ள வண்ண ஓவியங்களின் நிழற் படங்களையும் இந்த மலர் தாங்கி வருகின்றது.

ஆசியுரை வழங்கிய மகா சந்நிதானங்களுக்கும் தவச் செல்வர்களுக்கும் வணக்கமும் நன்றியறிவும் உரியன. வாழ்த்துரை வழங்கிய பெரு மக்களுக்கும் நன்றி கூறும் கடப்பாடுடையேன். கட்டுரைகளை எழுதிய பேரறிஞர்களுக்கும் புனையா ஓவியங்களை வரைந்த ஓவியர் திரு. சிற்பிக்கும், அட்டைப்படம், திருவெம்பாவை ஓவியங்கள் முதலியவற்றை வரைந்தளித்த ஓவியர் திரு. சித்திரலேகாவுக்கும் நிழற்படங்களை எடுத்துதவிய திரு. என். ராமகிருஷ்ணுவுக் தும், மத்தியார்ச்சுன மான்மியத்தையும், ஐயரவர்கள் பாடல்களையும், இதில் சேர்த்துக்கொள்ள இசைந்த ஐயரவர்கள் பேரர் திரு. க. சுப்பிரமணிய ஐயரவர்களுக்கும் நன்றியறிவைத் தெரிவிக்கிறேன்.

இந்த மலரில் வரும் கட்டுரைகளைப் பதிப்பிக்கும் திறத்தில் பலவகையில் உதவி செய்த கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்களுக்கும், திருவாவடுதுறை ஆதீன வித்துவான் சித்தாந்தப் பேரறிஞர் திரு. க. வச்சிரவேல் முதலியாரவர்களுக்கும், இந்த மலரை அழகாகக் குறுகிய காலத்தில் அச்சிட்டுத் தந்த திருவல்லிக்கேணி, கபீர் அச்சகத்தார்க்கும் உளங்கனிந்த நன்றி.

இவ்வளவுக்கும் மூலகாரணமாக இருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானத்தின் திருவடிகளுக்கு எளியேனுடைய வணக்கங்களைச் சமர்ப்பித்துக் கொள்கிறேன். தோன்றாத் துணையாக நின்று எல்லாவற்றையும் நன்கு நிறைவேற்றத் திருவருள்புரிந்த ஸ்ரீ மகாலிங்க மூர்த்தியின் சேவடி மலர்களைச் சிந்தித்து வந்திக்கிறேன்.

டி. என். அருணசலப்பிள்ளை
மேலாளர்
திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்க சுவாமி தேவஸ்தானம்.

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| ஆசிகளும் வாழ்த்துக்களும் | |
| திருவிடைமருதூர்த் திருப்பதிகங்கள் ... | 9 |
| வழிபாட்டின் அவசியம் ... —மதுரை ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமா சாரிய சுவாமிகள். | 33 |
| திருமந்திரம்—சில பாட பேதங்கள் ... —காஞ்சிபுரம் தொண்டைமண்டலாதீன குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள். | 36 |
| தமிழ்த் தெய்வம் ... —தவத்திரு சாந்தலிங்க இராமசாமியடிக ளார், பேரூராதீனம், பேரூர். | 38 |
| மருத மாணிக்கத் தீங்கனி ... —ஜூனியர் வித்துவான் ஸ்ரீமத் முத்துக் குமாரசாமித் தம்பிரான், திருப்பனந்தாள், காசிமடம். | 40 |
| சமய உணர்வு ... —திரு இரா. சதாசிவம், தமிழ்நாடு உயர்நீதி மன்ற நீதிபதி. | 41 |
| ஆலய வழிபாடு ... —திரு டி. எம். நாராயணசாமி பிள்ளை, M.A., B.L., அவர்கள். | 43 |
| தாபம் தணிக்கும் தண்ணளியான் ... —பேராசிரியர் திரு பெ. திருஞானசம்பந் தன், M.A., L.T. | 47 |
| இடைமருதில் யான்பெற்ற இன்னருள் ... —திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணி யம், பி.ஏ., பி.எல். | 48 |
| பட்டினத்து அடிகள் ... —திரு டி. என் சிங்காரவேலு, B.A., B.L., துணை ஆணையர், அறநிலைய ஆட்சித் துறை, தஞ்சை. | 53 |
| திருப்பணி ... —திரு எம். எஸ். பழனியப்ப முதலியார், பி.ஏ. | 55 |
| சிரித்து நின்றான் சிவகுமாரனே! ... —திருவாட்டி சௌந்தரா கைலாசம். | 56 |
| சிவநெறி ... —திருமுருக கிருபானந்தவாரியார். | 57 |
| உழப்பும் கழப்பும் ... —கவியரசு கு. நடேச கவுண்டர். | 60 |
| பூசத்துறை ... —திரு என். இராமகிருஷ்ணா. | 62 |
| திருவாசகம் ... —பேராசிரியர் டாக்டர் மு. வரதராசன், சென்னைப் பல்கலைக் கழகம். | 63 |
| இனியன் தன் அடைந்தார்க்கு இடை மருதனே ... —பேராசிரியர் டாக்டர் வ. ஆ. தேவசேனா பதி, M.A., Ph.D. | 67 |
| மெய் மறந்தேன் ... —புலவர் க. முருகையன், M.L.A. | 69 |
| பெரிய அன்பின் வரகுண தேவர் ... —ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல். | 70 |
| புராணம் போற்றும் வரகுண பாண்டியன். —திரு ஆத்ரேய ராமசேஷன், எம்.ஏ., பி.இடி. | 73 |
| வாலிழை பாகத்தொருவன் ... —திரு. மு. அருணாசலம், எம்.ஏ. | 77 |
| எட்டுநாண் மலர் ... —பண்டித-வித்துவான் திரு. இராம கோவிந்த சாமி பிள்ளை அவர்கள். | 83 |
| திருவிடைமருதூர் மும்மணிக் கோவை... —திரு. க. வெள்ளைவாரணன், தமிழ்த் துணைப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம். | 87 |
| பட்டினத்தார் பாராட்டும் பைந்தமிழ் ... —செஞ்சொற்கொண்டல், புலவர் செ. சிங்காரவேலன், M A., Dip. Ling., அ. வ. அ. கல்லூரி, மாயூரம். | 91 |
| எல்லையில் அருளினன் இறைவன் ... —டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி, எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி, தமிழ்ப் பேராசிரியர், மதுரைப் பல்கலைக்கழகம். | 94 |
| சித்தர்களின் பாடல் ... —திரு மீ. ப. சோமசுந்தரம்—"சோமு". | 97 |
| இறவா நிலை ... —திருக்குறள் வேள் திரு வரதராச பிள்ளை, பி.ஏ. | 100 |
| திருமந்திரம் தெரிவிக்கும் தெய்வச் சிவநெறி ... —தமிழ்ப் பெரும்புலவர் திரு அ. நடேச முதலியார், கடலூர்-2. | 102 |
| உய்வகை வேண்டுதல் ... —வித்துவான் திரு வி. சா. குருசாமி தேசிகர், முதல்வர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி. | 105 |
| கிளர் ஒளியினர் ... —பேராசிரியர் திரு அ. மு. பரமசிவானந்தம், M.A., M.Litt. | 107 |
| மகாலிங்கத்தின் மாண்பு ... —ஒடுக்[illegible] வித்துவான் ஸ்ரீ முத்துக்குமார சாமி தம்பிரான் சுவாமிகள், திருவாவடு துறை ஆதீனம். | 109 |

பக்கம்

திருவெம்பாவை ... 113

கருவூர்த் தேவர் தரும் கரும்பு ... 118
—சித்தாந்தக் கலைமணி, மகாவித்துவான் திரு சி. அருணைவடிவேல் முதலியார், தருமபுரம்.

இடைமருதூர் ஏற்றம் ... 120
—திரு கிரிதாரிப் பிரசாத், பி.ஏ., பி.எல்.

மருதவாணர் மாண்பு ... 122
—திரு பூ. ஆலாலசுந்தரம் செட்டியார், M.A., தமிழ்த்துறைத் தலைவர், சென்னைக் கிறித்தவக் கல்லூரி.

திருவிடைமருதூர்க் கல்லெழுத்துக்கள் ... 124
—கே. எம். வேங்கடராமையா, முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

அட்ட பந்தனம் ... 128
—திரு சா. கணேசன், கம்பன் கழகம், காரைக்குடி.

கும்பாபிஷேக பலன் ... 130
—சிவாகம ப்ரவீணர் சிவத்திரு க. சுவாமிநாத குருக்கள், திருவாவடுதுறை.

மாதவச் சிவஞான யோகிகள் ... 132
—திருவாவடுதுறை ஆதீன வித்துவான், சித்தாந்தம் கலைச்செல்வர் திரு க. வச்சிர வேல் முதலியார், பி.ஏ., எல்.டி.

திருவருள் வெல்க ! ... 137
—திரு நா. மகாலிங்கம், பி.எஸ்ஸி., எம்.ஐ.இ.

ஜோதிர் மகாலிங்கம் ... 139
—தவத்திரு சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், தருமையாதீனம்.

பதிமுதுநிலை ... 144
—திருவாவடுதுறை ஆதீன வித்துவான் திரு த. சு. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்.

ஓடும் நீரும் ஓட்டைக் குடமும் ... 146
—செல்வி சோ. பாகீரதி, எம்.ஏ., எம்.லிட்.

அப்பர் தேவாரத்தில் சைவ சித்தாந்தக் கருத்து ... 148
—முதுபெரும் புலவர், பெருஞ்சொல்வள்ளல், சைவசமய ஞானசிரோமணி, தொண்டை மண்டல ஆதீனப் புலவர், செந்தமிழ்ச் செல்வர், பேராசிரியர், வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார், எம்.ஏ., பி.ஓ.எல்.

அ ! ... 153
—திரு வி. பலராமையா.

சித்தாந்தச் செந்நெறி ... 156
—வித்துவான் பொன். சுப்பிரமணிய பிள்ளை, திருவிடைமருதூர்.

திருக்குறளும் சைவ நெறியும் ... 159
—புலவர்மணி—வித்துவான் மு. இரத்தின தேசிகர், திருவாரூர்.

நிட்டை விளக்கம் ... 161
—திரு டி. எஸ். தியாகராச தேசிகர், கடலூர்—1.

அதுவோ உனதின்னருள் ! ... 164
—வித்துவான் திருமதி ப. நீலா, தருமை.

உய்யும் வழி ... 166
—திருமதி ஆர். இராசரத்தினம் அம்மையார், எம்.ஏ., எல்.டி., திருமலாச்சாரியார் போதனுமுறைக் கல்லூரி, சென்னை.

நம்பியாண்டாரும் அப்பரும் ... 169
ஔவை சு. துரைசாமி, மதுரை.

தெய்வச் சேக்கிழார் ... 173
—ஜி. கலியாணம், எம்.ஏ., டிப். எக்கான்.

பக்திச் சுவையைப் பாடிய பாவலர் ... 177
—கருமுத்து தி. மாணிக்கவாசகம், பி.ஏ.

ஞானத் தமிழில் சாத்திர நுட்பங்கள் ... 178
—பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி, பி.ஏ., திருப்பனந்தாள்.

நாட்டியக் கலை ... 180
—கலாசிகாமணி பரத வித்வான் தஞ்சை குப்பையா பிள்ளை, முதல்வர், ஸ்ரீ ராஜ ராஜேசுவரி பரத நாட்டிய கலா மந்திர், பம்பாய்.

திருமூலர் அன்பும் திருவள்ளுவர் அன்பும் ... 184
—ஜஸ்டிஸ் கிருஷ்ணசாமி ரெட்டியார், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி.

சேக்கிழாரும் சைவசித்தாந்தமும் ... 186
—ராவ்சாகிப் நல். முருகேச முதலியார், சென்னை.

அருள் வீழ்ச்சி ... 191
—வித்துவான் சு. சாமி ஐயா, எம்.ஓ.எல்., தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

ஆனந்தத் தேன் ... 193
—பேராசிரியர் வே. சிவசுப்பிரமணியன், தமிழ்க் கல்லூரி, மயிலம்.

அருள்புரி முறுவல் ... 198
—திரு கி. வா. ஜகந்நாதன்.


யாரை நினைப்பேன் ? ... 202
—திரு ந. சிங்காரம், கல்கத்தா.

எங்கிருந்து கொடுத்தார் ? ... 206
—திரு கி. வா. ஜகந்நாதன்.

ஸ்ரீ மத்தியார்ச்சுன மான்மியம் ... 215
—மகாமகோபாத்யாய உ. வே. சாமிநாதையர்.

ஸ்ரீ ஏகநாயகர் ஊசல் ... 233

ஸ்ரீ ஏகநாயகர் தாலாட்டு ... 235



# ஆசிகளும் வாழ்த்துக்களும்

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரை, திருவாவடுதுறை ஆதீனம் இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அருளும்

# ஆசி உரை

திருச்சிற்றம்பலம்

"இம்மை வானவர் செல்வம் விளைத்திடும்
அம்மை யேபிற வித்துயர் நீத்திடும்
எம்மை ஆளும் இடைமரு தன்கழல்
செம்மை யேதொழு வார்வினை நாசமே." —திருநாவுக்கரசர்

உலக முதல்வன் சிவபெருமான். அவன் உயிர்கள் செய்யும் வழிபாட்டை ஏற்றுக்கொண்டு அருள்புரியும் அருள்நிலைத்தானங்களே திருக்கோயில்கள். எல்லா மக்களும் இறைவனை வழிபட்டே இம்மை மறுமை நலன்களைப் பெறுவதற்கு உரியவர். இதனால்தான் ஔவையார் குழந்தை இலக்கியத்தில் ஆலயந் தொழுவது சாலவும் நன்று எனப் போதித்தார்.

சைவ சந்தான முதற்குரவர் மெய்கண்ட தேவர். அவர் வேதம் ஆகமம் முதலாகிய சகல சாஸ்திரங்களுடைய முடிந்த உண்மைகளை நிச்சயம் பண்ணித் தமிழ் நாட்டுக்குக் கொடுத்தருளியவர். அவர் கொடுத்தருளிய உயர்ந்த ஞான நூல்தான் சிவஞானபோதம். அதில், இறுதியில், சீவன்முத்தர்களைப்பற்றிச் சீவன் முத்தர்களுக்கே உபதேசிக்கிறார். 'ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே' என உணர்த்தி அந்த உயர்ஞான நூலை முடிக்கின்றார்.

தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார்க்குப்பின் தமிழ் மக்களுக்கு நன்னெறியை விளக்கிக் கடைப்பிடிக்கச் செய்தவர்கள் நால்வர்கள்; 'நாலுபேர் சொல்கிறதைக் கேள்; நாலுபேர் நடந்தபடி நட' என்பவை தமிழ்நாட்டில் வழங்கும் பழமொழி. அந்நால்வரும் சிவாலய வழிபாட்டைத்தான் உபதேசித்தார்கள்; செய்தும் காட்டினார்கள்.

இவற்றால், சிவாலயங்களின் பெருமையும், அவற்றை நியதியாகச் சென்று வழிபடுவதன் அவசியமும் விளங்கும். நமது ஆதீனத்திற்குச் சொந்தமாக, பரிபாலனம் செய்யப்பட்டுவரும் தேவஸ்தானங்கள் முப்பதுக்குமேல் இருக்கின்றன. அவற்றுள் நடுநாயகமாக, மிக முக்கியமாக உள்ள பெரிய தேவஸ்தானம் திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி தேவஸ்தானமே ஆகும்.

1916-இல் ஸ்ரீ மகாலிங்கமூர்த்தி, அப்பொழுது இருந்த மகாசந்நிதானம் மூல மாகத் தேவஸ்தானத் திருப்பணிகளை முற்றக்கொண்டு மகா கும்பாபிஷேகத்தைச் செய்வித்துக்கொண்டருளினார். அதே மாதிரி இப்போது நம்மைக்கொண்டு இந்த மகா கும்பாபிஷேகத்தைச் செய்வித்து ஏற்றுக்கொள்வதை நினைக்கும்போது ஸ்ரீ மகாலிங்கசுவாமியின் பெருந்திருக்கருணையை நினைந்துருகி இன்புறுகின்றோம்.

இந்த மகா கும்பாபிஷேக சம்பந்தமாக வெளிவரும் சிவமணமும், பொருளழகும், தமிழ்ச்சுவையும் பொருந்தி மலரும் இக் கும்பாபிஷேக மலரும், மகா கும்பாபிஷேக விழாவும், வேறுபாடின்றிக் கலந்துகொள்ளும் எல்லா மக்களுக்கும் கேள்விச் செல்வத்தையும் கண் பெற்ற பயனையும் கொடுத்து இகபர சௌபாக்கியங்களை முற்றுவிக்கும்படி ஸ்ரீ மகாலிங்கசுவாமியின் பாதமலர்களையும், நமது பூஜா மூர்த்தியாகிய ஸ்ரீ ஞானமா நடராஜமூர்த்தியின் கனைகழற் சேவடிகளை யும் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

உ

குருபாதம்

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ

## கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

செந்தமிழ்த் திருநாடாகிய தென்னாட்டிற்கு உள்ள பெருஞ்சிறப்புத் திருக்கோயில்கள் பலவற்றைப் பெற்றுச் சிவனுறை நாடாக விளங்குவதே. அதனுள்ளும் காவிரியின் தென் கரை வடகரைப் பாங்குகளே சிவாலயங்களை மிகப் பெற்று விளங்குவன. அத்தகைய தலங்கள் பலவற்றுள் மிக்க பழமையும் சிறப்பும் பெற்ற தலங்கள் சில. அவற்றுள் காவிரியின் தென்கரைக்கண் விளங்கும் திருஇடைமருதூர் ஒன்று. இது சமயாசாரியர் மூவர் திருப்பதிகமும் பெற்றிருப்பதோடு, கருவூர்த்தேவர் அருளிச்செய்த திருவிசைப்பா, பட்டினத்துப் பிள்ளையார் அருளிச்செய்த பதினோராந் திருமுறைப் பிரபந்தமாகிய மும்மணிக்கோவை என்பவற்றையும் பெற்று விளங்குவது. திருவாசகத்திலும் குறிக்கப் பெற்ற பெருமையுடையது.

அம்பிகை முதலிய பிறரால் வழிபட்ட தலங்கள் போலன்றிச் சிவபெருமான் தம்மையே தாம் வழிபட்டுக் காட்டிய திருத்தலம் திருஇடைமருதூர். இது பரிவார மூர்த்திகள் சுற்றுத் தலங்களில் விளங்கச் சிவபெருமான் மகாலிங்கமாய் எழுந்தருளி யிருக்கின்ற பெருங்கோயில். இதனைத் திருஞானசம்பந்தர், "பெரியவன் பெண்ணினொடு ஆணும் ஆனார்" எனக் குறித்தருளினார். இப்பெருமானை, "கனியினும் கட்டி பட்ட கரும்பினும், பனிமலர்க்குழற் பாவை நல்லாரினும், தனிமுடி கவித்து ஆளும் அரசினும் இனியன்" என்று அப்பரும், "அந்த இடைமருதில் ஆனந்தத்தேன் இருந்த பொந்து" என்று மாணிக்கவாசகரும் சிறப்பித்தருளினமை அறியத்தக்கது.

காவிரியின் பூசத்துறையில் நீராடி இடைமருதுறை எந்தைபிரானை வழிபடுதலை அருளாளர் பலரும் விரும்பினர் என்பது திருமுறைகளால் நன்கறியக் கிடப்பது.

"பூசம்புகுந் தாடப் பொலிந்தழ காய ஈசன் உறைகின்ற இடைமருது."

"வருந்திய மாதவத்தோர் வானோர் ஏனோர் வந்தீண்டிப்
பொருந்திய தைப்பூசம் ஆடி உலகம் பொலிவெய்தத்
திருந்திய நான்மறையோர் சீரால் ஏத்த இடைமருதில்
பொருந்திய கோயில்."
—சம்பந்தர்.

"பாசம் ஒன்றில ராய்ப்பல பத்தர்கள்
வாச நாண்மலர் கொண்டடி வைகலும்
ஈசன் எம்பெரு மான்இடை மருதினில்
பூசம் நாம்புகு தும்புன லாடவே."
—அப்பர்.

"தேவ தேவ, திருவிடை மருத,
மாசறு சிறப்பின் வானவர் ஆடும்
பூசத் தீர்த்தம் புரக்கும் பொன்னி
அயிரா வணத்துறை ஆடும் அப்ப."
—பட்டினத்துப் பிள்ளையார்.

வரகுணபாண்டியன் பூசத்தீர்த்தத்தில் முழுகித் தன்னைப் பற்றியிருந்த பிரமகத்தி நீங்கப் பெற்றமையைத் திருவிளையாடற் புராணம் விரித்துக் கூறும். பிரமகத்தி நீங்கப் பெற்ற வரகுணபாண்டியன் மருதப்பர்பால் அளவுகடந்த அன்புடையவனாய்த் தான் மணந்த பெண்ணையும் அளித்தமை முதலிய வரலாறுகளைப் பட்டினத்துப்பிள்ளையார் எடுத்து அருளிச்செய்து, "பெரிய அன்பின் வரகுண தேவர்" என்று பாராட்டியுள்ளார்.

இன்ன பல பெருமைகள் வாய்ந்த திருஇடைமருதூர்ப் பெருங்கோயில் திருவாவடு துறை ஆதீன பரிபாலனத்தில் விளங்குவது. இதன்கண் திருப்பணிகள் பல செய்விக்கப் பெற்று, இதுபொழுது மகா கும்பாபிடேக விழா நடைபெற இருப்பது நாட்டிற்கே நலம் பயக்கத்தக்க நற்செயலாகும். முன்னவரால் கோயிலாகிய சிவாலயங்களில் நித்திய நைமித்திகங்கள் சிறப்பாக நடைபெற்று, அவை இனிது விளங்குவதே நாட்டின் நலத்திற்கு இன்றியமையாதது. இம்மகாகும்பாபிடேக விழாவில் மலர் ஒன்றும் வெளிவர இருப்பது மிக்க பயன்தரத் தக்கது.

துறைசை ஆதீனத்தின் ஆன்மார்த்த உடையவர் வேளூர் வைத்தியநாதசுவாமி; அதிகார உடையவர் தில்லை அம்பலவாணர். இவ்வாதீனத்தில் அதிகார உடையவர் திருப் பெயர் கொண்டு விளங்கிய 17-ஆவது 20-ஆவது குருமூர்த்திகளின் ஆட்சிக்காலத்தில் இக்கோயிலுக்கு மகாகும்பாபிடேகம் நிகழ்ந்துள்ளதாக அறிகிறோம். அத்திருப்பெயர் கொண்டு 22-ஆவது பட்டத்திலங்கும் இவர்களது ஆட்சிக்காலத்தில் இம்மகாகும்பாபிடேக விழா, சிறப்புற நிகழ இருப்பது திருவருளால் அமைந்த பொருத்தமாகும்.

மகாகும்பாபிடேக விழா இனிது நிகழ்ந்து அருளொளி சிறக்கவும், விழா மலர் நன்கு மலர்ந்து சிவானந்தத் தேன் பிலிற்றிச் செம்மை நலம் பயக்கவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

# ஸ்ரீமத் காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள், திருப்பனந்தாள்

உ

சோழ நாட்டுத் தலங்களுள் மூவரும் பாடியருளிய திருநெறிய மெய்ஞ்ஞானத் தமிழ் பெற்ற தலமாயதும், தைப்பூச விழாச் சிறப்புடையதும், பட்டினத்தாரும் பத்திரகிரியாரும் வாசம் செய்தருளிய மேன்மையுற்றதும், ஒத்த சிந்தையராய்ப் பதினொரு கோடி உருத்திரர் வழிபாடாற்றப் பெற்றதும், மகாலிங்கசுவாமியை நடுநாயகமாகப் பெற்றுச் சுற்றிலும் பல தலங்களும் பரிவார மூர்த்திகளாக எழுந்தருளப் பெற்ற சிறப்புக் கூறப் பெறுவதும், வெள்ளை நீறு மெய்யிற் கண்டு, கள்ளன் கையில் கட்டவிழ்ப்பித்தது—ஓடும் பன்னரி ஊளை கேட்டரனைப், பாடின வென்று படாம் பல அளித்தது—குவளைப்புனலிற் றவளை யரற்ற, ஈசன் தன்னை யேத்தின வென்று, காசும் பொன்னும் கலந்து தூவியது—வழிபடுமொருவன் மஞ்சனத் தியற்றிய, செழுவிதை யெள்ளைத் தின்னக் கண்டு, பிடித்தலும் அவனிப் பிறப்புக் கென்ன, இடித்துக் கொண்டுஅவன் எச்சில் நுகர்ந்தது—மருத வட்டத்து ஒரு தனிக்கிடந்த, தலையைக் கண்டு தலையுற வணங்கி, உம்மைப் போல எம்மித் தலையும், கிடக்க வேண்டும்என்று அடுத்தடுத்து இரந்தது—கோயில் முற்றத்து மீமிசைக் கிடப்ப, வாய்த்த தென்று நாய்க் கட்டம் எடுத்தது—காம்பவிழ்ந் துதிர்ந்த கனியுருக் கண்டு, வேம்புகட் கெல்லாம் விதானம் அமைத்தது—விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று, புரிகுழல் தேவியைப் பரிவுடன் கொடுத்தது முதலாய சிவத் தொண்டுகளைப் பெரிய அன்பின் வரகுண பாண்டியன் "பொடியேர்தரு மேனியனுகப்" புரிந்த தலமானதும், மத்தியார்ச்சுனம் எனப் பெறுவதுமான தலம் திருவிடைமருதூராகும். இத்தலத் திருக்கோயிலைப் புரந்தருள்பவர்களும், இதுபோன்ற பல தேவாலயங்களைச் சிறப்புறப் பரிபாலனம் செய்தருள்பவர்களும், மடாலய தேவாலய சைவ சமய பரிபாலனம் செய்து அடியார்களுக்கு அருள்பாலிப்பவர்களும் ஆகிய திருக்கைலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து இருபத்திரண்டாவது மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி திருக்கோயிலை ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடத்தியருளுகின்றார்கள். அக் கும்பாபிஷேக நினைவில் ஓர் அரிய மலர் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களின் திருவருள் நோக்கினால் வெளியிடப் பெறுகின்றது. இம்மலர் எத்திக்கும் சிவமணம் கமழச் செய்து மக்களைச் சிவானந்தப் பெருங்கடலில் திளைக்கச் செய்வதாகுக! மகாலிங்கப் பெருமான் புகழ் உலகெலாம் பரவுக!

# வாழ்த்து

## தவத்திரு சுந்தர சுவாமிகள்,

ஆதீனகர்த்தர், கௌமார மடாலயம், சிரவணபுரம்

*

திருவார்கை லாயத் திருமரபிற் றோன்றும்
திருவா வடுதுறையா தீனப்—பெருமாண்பு
மிக்கமத்தி யார்ச்சுனப்பேர் மேவு மிடைமருதூர்
நக்கன் மருதவா ணன். 1

பட்டினத்துப் பிள்ளைபுகல் பாட்டனந்தம் ஏற்றபுகழ்
முட்டித் திகழுமந்த மூதூரிற்—கிட்டியருள்
பெற்ற வரகுணன்சீர், பேசுதுதிப் பாட்டருமை
கற்றவர்க ளேயறிவார் காண். 2

பத்திரகி ரிப்பேர் பயில்மன்ன னுக்கருட்சீர்
வைத்த கருணை மருதீசன்—இத்தரையோர்
போற்றஅணிக் கும்பப் புனலாட்டுப் பெற்றிட்டான்
சாற்றகிலம் இன்பமுறத் தான். 3

ஞானசம் பந்தர்தம் நற்றமிழ்க்குப் பொன்னுலவா
தானகிழி நல்குமரு தப்பெருமான்—கானமறை
வேத விதிப்படிசெய் வேள்வி,கும்ப நீராட்டை
மாதவத்தாற் கண்டார்க்காம் வாழ்வு. 4

ஆவடுது றைப்பதியின் ஆதீன கர்த்தரன்பு
மேவிக்கும் பப்புனல்பெய் மேன்மைவிழா—காவினில்வாழ்
தேவர்களும் சித்தர்களும் செப்புமுல கத்தவரும்
நாவலரும் கண்டுறுவர் நன்று. 5

திருவா வடுதுறையா தீனகர்த்தர் வாழ்க
பொருவாத கும்பப் புனல்பெய்—திருவிழாக்
கண்டவர்கள் வாழ்க கவின்மருத வாணனன்பர்
மண்டலத்தில் வாழ்க மகிழ்ந்து. 6

# திரு கருமுத்து தியாகராச செட்டியார், மதுரை

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி திருக்கோயில் திருப்பணி செய்யப்பெற்று 15–7–'70-ஆம் நாளன்று குடமுழுக்கு விழாச் சிறப்புற நிகழவும், அதுபோழ்து ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் திருவுளக் குறிப்பின்படி விழா மலர் ஒன்று அலர்ந்து சிவமணம் பரப்பித் தமிழ்த் தேன் பிலிற்றவும் இருப்பதறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

"வாசங் கமழ்மா மலர்ச்சோ லையில்வண்டே
தேசம் புகுந்தீண் டியோர்செம் மையுடைத்தாய்ப்
பூசம் புகுந்தா டிப்பொலிந் தழகாய
ஈச னுறைகின் றவிடை மருதீதோ"

என்று திருஞான சம்பந்தராலும்,

"பாச மொன்றிய ராய்ப்பல பத்தர்கள்
வாச நாள்மலர் கொண்டடி வைகலும்
ஈச னெம்பெரு மானிடை மருதினில்
பூச நாம்புகு தும்புன லாடவே"

என அப்பராலும் புகழ்ந்து பாராட்டப் பெற்ற பெருமையுடையது திருவிடைமருதூர் ஆகும். இப்பழம் பெரும் பதியில் உயிர்கள் தம்மை எளிதின் உணர்ந்து வழிபட்டு உய்தற் பொருட்டு அம்மையப்பராம் முழுமுதற் கடவுள் எழுந்தருளி இடம்பெற்றுள்ள ஆலயங்களுள் ஸ்ரீ மகாலிங்க சுவாமி திருக்கோயில் தனிச் சிறப்புடைய தென்பதைச் சைவப் பெருமக்கள் நன்கறிவர். சிவநெறி பூக்கும் தருவாய், தமிழ் மணம் பரப்பும் குளிர் சோலையாய் நம்மிடையே விளங்கும் திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின் அருட் கண்காணிப்பில் இருந்து வருதல் இவ்வாலயத்திற்கு மற்றொரு சிறப்பாகும். இத்தகு பெருமை சான்ற இப்பேராலயத்தின் திருப்பணி இனிது நிறைவுற்றுக் குடமுழுக்கு விழாச் சிறப்புற நிகழ்தல் நம்மனோர் அனைவர்க்கும் உவகை விளைப்பதாகும்.

உலகப் பெருமொழிகளுள் தொன்மைச் சிறப்பும் இலக்கிய நலமும் இலக்கண வளமும் அமைந்து புகழ்சான்று விளங்குபவை என்றுமுள தென்தமிழும் வேதம் மலர்ந்த வடவாரியமும் என்ற உண்மை அறிஞர் அனைவரும் ஒப்ப முடிந்ததொன்றும். அவற்றுள்ளும் தன் சீரிளமைத் திறம் சிறிதும் குன்றாத தெய்வத் தமிழ், மொழிகள் அனைத்தினும் ஒப்புயர்வற்று இலங்குகிறது. உலகையும் ஒழுக்கத்தையும் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலையென ஐந்தாகப் பகுத்து, எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமின்றிப் பொருளுக்கும் இலக்கணம் வகுத்து, மக்கள் வாழ்க்கையை அகம் புறம் என்று பிரித்துத் தந்த பெருமை தமிழுக்கே உரியது.

இனி, ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியம், அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள், கற்பின் கொழுந்தின் பொற்பை உணர்த்தி நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம், கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகை, கல்லையும் கனிந்துருகச் செய்யும் தேவார திருவாசகப் பாடல்கள் போன்ற தமிழ்ச் செல்வத்தோடு ஒப்பிட்டுக் கூறத்தக்க எழுத்தோவியங்கள் உலகின் வேறு எந்த மொழியிலும் இல்லை.

அவ்வாறே உலகம், உயிர், உடையான் ஆகிய முப்பொருளின் உண்மையைத் தெள்ளிதின் உணர்த்தி, வினைகளின் திறமறிந்து உலகத் தளைகளினின்று விடுபட்டு உயிர் இறைவன் திருவடிப் பேற்றை அடையும் உபாயத்தை இனிது கூறி மன்பதைக்கு உய்தி நல்கும் சமயங்களுள் சிவநெறி தலைசிறந்து விளங்குகிறது. தத்துவங்களின் தன்மையையும், மெய்யுணர்வு பெறும் வழியையும், இறைவன் திருவருட் பேற்றின் இலக்கணத்தையும் விஞ்ஞான முறையில் விதந்துரைக்கும் சமயம் ஒன்று உண்டென்றால், அது சைவமே என்று துணிந்து கூறலாம்.

இத்தகு சிறப்பியல்புகளும், தன்னேரில்லாத் தகைமையும் சான்ற செந்தமிழும் சிவநெறியும் நாட்டிலே இன்று நலம் பெருக வளர்ந்து வருதற்கு முதற் காரணமாய் விளங்குவது திருவாவடுதுறை ஆதீனமே என்பதை உலகறியும். சைவச் சுடராய், சிவம் பெருக்குஞ் சீலராய், மன்பதையைச் சூழ்ந்த மலவிருள் நீக்கும் ஞான ஒளியாய் விளங்கிய ஸ்ரீ நமசிவாய மூர்த்திகளின் அருளில் மலர்ந்த இவ்வாதீனம் தன்னகத்தே சுரந்து ஊற்றுப் பெருக்காய் உவந்தோடும் சிவஞானத்தையும், தமிழ் அமுதையும் பல நூற்றாண்டுகளாய் வரையாது வையத்திற்கு வாரி வழங்கி வருகிறது. மெய்ஞ்ஞான நூல்களின் முடிமணியாய்த் திகழும் சிவஞான போதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் முதலிய சைவக் கருவூலங்களை மக்கட்குக் கிடைக்கச் செய்த மாபெரும் பெருமை திருவாவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானங்களையே சாரும்.

இத்திரு மரபிலே தோன்றி, செந்தமிழ்க் குளிர்பூங்காவில் சிவத்தருவின் இன்னிழலிலே அமர்ந்து, நமக்கெல்லாம் நல்வழி காட்டி அருள்பாலித்து வரும் குருமகா சந்நிதானம் அவர்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள் ஆவார். அவர்களுடைய அருளாணையின்படி நிகழும் குடமுழுக்கு விழா இனிதே நிகழ்ந்தேறவும், விழா மலர் கவினுற அலர்ந்து செந்தமிழோடு சிவமணம் பரப்பவும், ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் தமிழுள்ளளவும் சிறப்புயர் புகழ் சான்று வாழ்ந்து உலகுக்கு உய்தி நல்கவும் அங்கயற் கண்ணி தம்மொடு அமர்ந்த ஆலவாய் அவிர்சடையண்ணல் அருள் புரிவாராக!

# MESSAGES

## Hon'ble B. D. JATTI

(Lt. Governor, Pondicherry)

It gives me great pleasure to learn that it is proposed to bring out a Souvenir in commemoration of the "Maha Kumbhabhishekam" of the Tiruvidaimarudur temple on 15th July 1970.

In fact, temples of our country stand as the living monuments of our ancient arts and culture. It becomes essential to preserve the sculptural niceties and artistic fineness of our temples, whenever renovation is made.

'Kumbhabhishekam' of a temple signifies the victorious consummation of the holy endeavour of building the abode of Almighty. I do think that the sanctimonius occasion of this sort would implicitly convey the philosophical meaning that we ought to achieve perfection in building the spiritual outlook within our hearts, which are the noble abode of Ultimate Reality.

I pray God for the success of the "Maha Kumbhabhishekam" of the noted Saivite temple and the Souvenir.

*   *   *   *

## Doctor S. RADHAKRISHNAN

(Former President of India)

Dr. S. Radhakrishnan sends his best wishes for the success of the Mahakumbhabhishekam of Sri Mahalingaswamy Temple, Tiruvidaimarudur which is proposed to be conducted on the 15th July, 1970.

*   *   *   *

## Thiru K. VEERASWAMI

(Chief Justice, Madras High Court)

I am very happy to hear of the Mahakumbhabhishekam of Tiruvidaimarudur Sri Mahalingaswamy, to take place on July 15. By the Grace of Sri Mahalingaswamy, I hope and trust the function will be a succees.

## திரு கே. வி. சுப்பையா, பி.ஏ.

*அறநிலைய அமைச்சர்*

அன்புடையீர்,

கும்பாபிஷேகப் பெருவிழாவின்போது ' தலையாய அறிஞர்கள் பலர் கட்டுரை கொண்ட மலர் ' வெளியிட இருப்பது பாராட்டுக்கும், பெருமைக்கும் உரிய செயலாகும்.

கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாமென்பது மூதாதையர் மொழி. வாய்மை, நேர்மை, நீதி, அமைதி, நிம்மதி, வெற்றி இவற்றையெல்லாம் பக்தர்கட்கு வழங்கும் அருள் நிலையங்களாக மட்டும் இல்லாது, "கல்விகேள்வி"களில் ஒவ்வொரு தமிழ்க் குடிமகனும் உன்னத இமயமலை போல் ஓங்கிடும் கீர்த்திபெற உதவும் அரிய "கல்விப் பணிக்கு" அருளும் அற விளக்காகவும் கொடை விளக்காகவும் அறநிலையங்கள் திகழ்கின்றன. அத்தகைய அறநிலையப் பணிகளின் செயல் போற்றத்தக்கனவாகும்.

தமிழக அரசு அறநிலையங்களின் மூலம் மக்களுக்குச் சேவை செய்யவே, அறநிலையங்கட்கு வேண்டியன செய்துவருகிறது. சிறப்புறச் சேவை செய்யும் ஸ்ரீ மகாலிங்கசுவாமி திருக்கோயிலின் தலைசிறந்த மலர் தமிழர்தம் திருக்கரங்களிலெல்லாம் தவழ என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

# கே. எஸ். நரசிம்மன்

பி.ஏ., பி.எல்., ஐ.ஏ.எஸ்.
(ஆணையாளர், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை.)

சோழ நாட்டில் உள்ள பாடல் பெற்ற தலங்களுள் திருவிடைமருதூர் என்பது மிகவும் சிறப்புடைய பெருந்தலம். மருதமரம் இத்தலத்திற்குரிய புனித மரம். ஆதலின், இத்தலத்திற்கு மருதூர் எனவும், இங்கேயுள்ள சிவபெருமானுக்கு மருதவாணன் எனவும் பெயர் வழங்கும். மருதமரத்தினை வடமொழியில் அர்ச்சுனம் எனக் கூறுவர். வடக்கேயுள்ள மல்லிகார்ச்சுனம், தெற்கேயுள்ள புடார்ச்சுனம் என்னும் இரு தலங்களுக்கும் மத்தியில் இத்தலம் இருத்தலின், இதற்கு மத்தியார்ச்சுனம் என்று பெயர் ஆயிற்று. சுற்றிலும் உள்ள பல பெருந் தலங்களைத் தனக்குரிய பரிவார தெய்வச் சுற்றுலயங்களாகக் கொண்டு, அவற்றிற் கெல்லாம் நடுவே கருப்பக்கிருகம் போல அமைந்திருக்கும் இக்கோயிலில் எழுந்தருளி விளங்கும் சிவலிங்கத் திருவுருவம் "மகாலிங்கம்" எனச் சிறப் பித்துப் போற்றப்பெறும்.

இக்கோயில், அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் என்னும் சைவ சமய ஆசிரியர்களாகிய நால்வர் பாடலும் பெற்றது. அருணகிரிநாதர் தம் திருப்புகழ்ப் பாடல்களால் இத்தலத்தைப் போற்றிப் புகழ்ந்துள்ளார். மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய "திருவிடைமருதூர் உலா" என்னும் நூலும், சிவக்கொழுந்து தேசிகர் பாடிய "மருதவனப் புராணம்" என்னும் நூலும் பிறவும், இத்தலத்தின் சிறப்பை விளக்குனவாகும். இத்தலம் பட்டினத்தார், பத்திரகிரியார், வரகுண பாண்டியர் முதலிய பல பெருஞ் சான்றோர்கள் வழிபட்டு அருள் பெற்ற சிறப்பையுடையது. பட்டினத்தார் பாடிய "திருவிடைமருதூர் மும்மணிக்கோவை" பதினோராம் திருமுறையில் சேர்க்கப் பெற்றிருக்கின்றது.

திருவாவடுதுறை ஆதீனத்தின் அருளாட்சியில் இருந்துவரும் இச்சிறந்த திருக்கோயில், ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் சீரிய பெருங்கருணைத் திறத்தினால், அண்மையிற் பல சிறந்த திருப்பணிகள் செய்யப் பெற்று, 15–7–'70 அன்று மகாகும்பாபிஷேகம் நடைபெற இருப்பது, பக்தர்கள் அனைவருக்கும் பெருமகிழ்ச்சி தரும் ஒரு பெருஞ் சிறப்பு ஆகும்.

திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி தேவஸ்தானத்தில் மகா கும்பாபிஷேக விழா நன்கினிது நடைபெறவும், அதுபோது வெளியிடப் பெறவுள்ள கும்பாபிஷேக விழா மலர் சிறப்புற அமையவும், என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களுக்கும் என் பணிவார்ந்த வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

## திரு தமிழவேள் பி. டி. ராஜன்,

மதுரை

திருவிடைமருதூர் ஸ்ரீ மஹாலிங்கசுவாமி கோவில் கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற இருப்பது யாவருமறிந்ததே. இந்தக் கும்பாபிஷேகம் திருவாவடுதுறை ஆதீனத்தாருடைய திறமையான நிர்வாகத்திற்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது.

கும்பாபிஷேகச் சிறப்பு நிகழ்ச்சியை ஒட்டி ஒரு மலர் வெளியிடப் படுவதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இம்மலர் தமிழ்த் தென்றலை வீசித் தெய்விக மணத்தை நாடெங்கும் பரப்பு மென்று நான் நம்புகிறேன்.

*   *   *   *

## திரு எம். பக்தவத்ஸலம்,

முன்னாள் முதல்வர்


ஸ்ரீ மகாலிங்கஸ்வாமி தேவஸ்தானம் பிரசித்தி பெற்றதாகும். நம் முன்னோர்கள் மக்கள் நல்வாழ்க்கையின் நிமித்தம் இத்தகைய பெரிய கோவில்களைக் கட்டிவைத்திருக்கிறார்கள். கலைச் சிறப்பு மிகுந்த நம் ஆலயங்கள் நம் நாட்டின் பெருமையை வெளிப்படுத்துகின்றன. இத்தகைய பொக்கிஷங்களைப் பாதுகாத்துப் பராமரித்து வருவதே நம் கடமையும், பொறுப்புமாகும். திருவாவடுதுறை ஆதீனம், இதில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டிருப்பது நம் பாராட்டுதற்குரியது. மகா கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெறுமென்று நம்புகிறேன். தாங்கள் வெளியிடும் சிறப்பு மலர் வசீகரம் மிகுந்ததாக இருக்குமென்று எதிர்பார்க்கிறேன். தங்களுக்கும், தங்கள் சகாக்களுக்கும் என் நல்வாழ்த்துக்கள்.

*   *   *   *

## டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

துணைவேந்தர், மதுரைப் பல்கலைக் கழகம்

திருவிடைமருதூர்த் திருக்கோயிலின் மகா கும்பாபிஷேகம் நடைபெறப் போவதைக் கேட்டு மட்டற்ற மகிழ்ச்சியுறுகிறேன். அப்பெருவிழாவினை யொட்டி வெளியிட இருக்கும் கும்பாபிஷேக மலர் இனிது மலர என் நல்வாழ்த்துக்கள்.


சில்பி.

# திருவிடைமருதூர்த் திருப்பதிகங்கள்

## திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரம்

பண் - தக்கராகம்

*திருச்சிற்றம்பலம்*

ஓடேகலன் உண்பதும் ஊரிடு பிச்சை
காடேயிட மாவது கல்லால் நிழற்கீழ்
வாடாமுலை மங்கையுந் தானும் மகிழ்ந்(து)
ஈடாவுறை கின்ற இடைமரு தீதோ. 1

தடங்கொண்டதோர் தாமரைப் பொன்முடி தன்மேல்
குடங்கொண்டடி யார்குளிர் நீர்சுமந் தாட்டப்
படங்கொண்டதோர் பாம்பரை யாரத்த பரமன்
இடங்கொண்டிருந் தான்றன் இடைமரு தீதோ. 2

வெண்கோவணங் கொண்டொரு வெண்டலை யேந்தி
அங்கோல்வளை யாளையொர் பாகம் அமர்ந்து
பொங்காவரு காவிரிக் கோலக் கரைமேல்
எங்கோனுறை கின்ற இடைமரு தீதோ. 3

அந்தம்அறி யாத அருங்கல முந்திக்
கந்தங்கமழ் காவிரிக் கோலக் கரைமேல்
வெந்தபொடிப் பூசிய வேத முதல்வன்
எந்தையுறை கின்ற இடைமரு தீதோ. 4

வாசங்கமழ் மாமலர்ச் சோலையில் வண்டே
தேசம்புகுந் தீண்டியொர் செம்மை யுடைத்தாய்ப்
பூசம்புகுந் தாடிப் பொலிந்தழ காய
ஈசன்உறை கின்ற இடைமரு தீதோ. 5

வன்புற்றிள நாகம் அசைத்தழ காக
என்பிற்பல மாலையும் பூண்டெரு தேறி
அன்பிற்பிரி யாதவ ளோடும் உடனாய்
இன்புற்றிருந் தான்றன் இடைமரு தீதோ. 6

தேக்குந்திமி லும்பல வுஞ்சுமந் துந்திப்
போக்கிப்புறம் பூச லடிப்ப வருமால்
ஆர்க்குந்திரைக் காவிரிக் கோலக் கரைமேல்
ஏற்கஇருந் தான்றன் இடைமரு தீதோ. 7

பூவார்குழ லார்அகில் கொண்டு புகைப்ப
ஓவா தடி யாரடி யுள்குளிர்ந் தேத்த
ஆவா அரக் கன்றனை ஆற்ற லழித்த
ஏவார்சிலை யான்றன் இடைமரு தீதோ. 8

முற்றாததொர் பால்மதி சூடு முதல்வன்
நற்றாமரை யானொடு மால்நயந் தேத்தப்
பொற்றோளியுந் தானும் பொலிந்தழ காக
எற்றேயுறை கின்ற இடைமரு தீதோ. 9

சிறுதேரரும் சில்சம ணும்புறங் கூற
நெறியேபல பத்தர்கள் கைதொழு தேத்த
வெறியாவரு காவிரிக் கோலக் கரைமேல்
எறியார்மழு வாளன் இடைமரு தீதோ. 10

கண்ணார்கமழ் காழியுள் ஞானசம் பந்தன்
எண்ணார்புகழ் எந்தை இடைமரு தின்மேல்
பண்ணோடிசை பாடிய பத்தும்வல் லார்கள்
விண்ணோருல கத்தினில் வீற்றிருப் பாரே. 11

### திருவிருக்குக்குறள் : பண் - குறிஞ்சி

தோடொர் காதினன், பாடும் மறையினன்
காடு பேணிநின், றாடு மருதனே. 1

கருதார் புரமெய்வர், எருதே இனிதூர்வர்
மருதே யிடமாகும், விருதாம் வினைதீர்ப்பே. 2

எண்ணும் அடியார்கள், அண்ணல் மருதரைப்
பண்ணின் மொழிசொல்ல, விண்ணுந் தமதாமே. 3

விரியார் சடைமேனி, எரியார் மருதரைத்
தரியா தேத்துவார், பெரியார் உலகிலே. 4

பந்த விடையேறும், எந்தை மருதரைச்
சிந்தை செய்பவர், புந்தி நல்லரே. 5

கழலுஞ் சிலம்பார்க்கும், எழிலார் மருதரைத்
தொழலே பேணுவார்க், குழலும் வினைபோமே. 6

பிறையார் சடையண்ணல், மறையார் மருதரை
நிறையால் நினைபவர், குறையார் இன்பமே. 7

எடுத்தான் புயந்தன்னை, அடுத்தார் மருதரைத்
தொடுத்தார் மலர்சூட்ட, விடுத்தார் வேட்கையே. 8

இருவர்க் கெரியாய, உருவ மருதரைப்
பரவி யேத்துவார், மருவி வாழ்வரே. 9

நின்றுண் சமண்தேரர், என்று மருதரை
அன்றி யுரைசொல்ல, நன்று மொழியாரே. 10

கருது சம்பந்தன், மருத ரடிபாடிப்
பெரிதுந் தமிழ்சொல்லப், பொருத வினைபோமே. 11

## பண் - வியாழக்குறிஞ்சி

மருந்தவன் வானவர் தானவர்க்கும்
பெருந்தகை பிறவினொ டிறவு மானான்
அருந்தவ முனிவரொ டால்நிழற்கீழ்
இருந்தவன் வளநகர் இடைமருதே. 1

தோற்றவன் கேடவன் துணைமுலையாள்
கூற்றவன் கொல்புலித் தோலசைத்த
நீற்றவன் நிறைபுனல் நீள்சடைமேல்
ஏற்றவன் வளநகர் இடைமருதே. 2

படையுடை மழுவினன் பால்வெண்ணீற்றன்
நடைநவில் ஏற்றினன் ஞாலமெல்லாம்
முடைதலை யிடுபலி கொண்டுழல்வான்
இடைமரு தினிதுறை எம்இறையே. 3

பணைமுலை யுமையொரு பங்கன்ஒன்னார்
துணைமதில் மூன்றையுஞ் சுடரின்மூழ்கக்
கணைதுரந் தடுதிறற் காலற்செற்ற
இணையிலி வளநகர் இடைமருதே. 4

பொழிலவன் புயலவன் புயலியக்கும்
தொழிலவன் துயரவன் துயரகற்றும்
கழலவன் கரியுரி போர்த்துகந்த
எழிலவன் வளநகர் இடைமருதே. 5

நிறையவன் புனலொடு மதியும்வைத்த
பொறையவன் புகழவன் புகழநின்ற
மறையவன் மறிகடல் நஞ்சையுண்ட
இறையவன் வளநகர் இடைமருதே. 6

நனிவளர் மதியொடு நாகம்வைத்த
பனிமலர்க் கொன்றையம் படர்சடையன்
முனிவரொ டமரர்கள் முறைவணங்க
இனிதுறை வளநகர் இடைமருதே. 7

தருக்கின அரக்கன தாளுந்தோளும்
நெரித்தவன் நெடுங்கைமா மதகரிஅன்(று)
உரித்தவன் ஒன்னலர் புரங்கள்மூன்றும்
எரித்தவன் வளநகர் இடைமருதே. 8

பெரியவன் பெண்ணினொ டாணுமானான்
வரியர வணைமறி கடல்துயின்ற
கரியவன் அலரவன் காண்பரிய
எரியவன் வளநகர் இடைமருதே. 9

சிந்தையில் சமணொடு தேரர்சொன்ன
புந்தியில் உரையவை பொருள்கொளாதே
அந்தணர் ஓத்தினொ டரவம்ஓவா
எந்தைதன் வளநகர் இடைமருதே. 10

இலைமலி பொழிலிடை மருதிறையை
நலமிகு ஞானசம் பந்தன்சொன்ன
சலமிகு தமிழிவை பத்தும்வல்லார்
உலகுறு புகழினொ டோங்குவரே. 11

### திருவிராகம் : பண் - வியாழக்குறிஞ்சி

நடைமரு திரிபுரம் எரியுண நகைசெய்த
படைமரு தழலெழ மழுவல பகவன்
புடைமரு திளமுகில் வளமமர் பொதுளிய
இடைமரு தடையநம் இடர்கெடல் எளிதே. 1

மழைநுழை மதியமொ டழிதலை மடமஞ்ஞை
கழைநுழை புனல்பெய்த கமழ்சடை முடியன்
குழைநுழை திகழ்செவி யழகொடு மிளிர்வதொர்
இழைநுழை புரியணல் இடம்இடை மருதே. 2

அருமையன் எளிமையன் அழல்விட மிடறினன்
கருமையின் ஒளிபெறு கமழ்சடை முடியன்
பெருமையன் சிறுமையன் பிணைபெணொடொருமையன்
இருமையும் உடையணல் இடம் இடைமருதே. 3

பொரிபடு முதுகுற முளிகளி புடைபுல்கு
நரிவளர் சுடலையுள் நடமென நவில்வோன்
வரிவளர் குளிர்மதி யொளிபெற மிளிர்வதொர்
எரிவளர் சடையணல் இடம்இடை மருதே. 4

வருநல மயிலன மடநடை மலைமகள்
பெருநல முலையிணை பிணைசெய்த பெருமான்
செருநல மதிலெய்த சிவனுறை செழுநகர்
இருநல புகழ்மல்கும் இடம்இடை மருதே. 5

கலையுடை விரிதுகில் கமழ்குழல் அகில்புகை
மலையுடை மடமகள் தனையிடம் உடையோன்
விலையுடை அணிகலன் இலனென மழுவினொ(டு)
இலையுடை படையவன் இடம்இடை மருதே. 6

வளமென வளர்வன வரிமுரல் பறவைகள்
இளமணல் அணைகரை யிசைசெயும் இடைமரு(து)
உளமென நினைபவர் ஒலிகழல் இணையடி
குளமண லுறமூழ்கி வழிபடல் குணமே. 7

மறையவன் உலகவன் மதியவன் மதிபுல்கு
துறையவன் எனவல அடியவர் துயரிலர்
கறையவன் மிடறது கனல்செய்த கவழ்சடை
இறையவன் உறைதரும் இடம்இடை மருதே. 8

மருதிடை நடவிய மணிவணர் பிரமரும்
இருதுடை யகலமொ டிகலின ரினதெனக்
கருதிடல் அரியதொர் உருவொடு பெரியதொர்
எருதுடை அடிகள்தம் இடம்இடை மருதே. 9

துவருறு விரிதுகில் உடையரும் அமணரும்
அவருறு சிறுசொலை நயவன்மின் இடுமணல்
கவருறு புனல்இடை மருதுகை தொழுதெழும்
அவருறு வினைகெடல் அணுகுதல் குணமே. 10

தடமலி புகலியர் தமிழ்கெழு விரகினன்
இடமலி பொழில்இடை மருதினை இசைசெய்த
படமலி தமிழிவை பரவவல் லவர்வினை
கெடமலி புகழொடு கிளரொளி யினரே. 11

விரிதரு புலியுரி விரவிய அரையினர்
திரிதரும் எயிலவை புனைகணை யினிலெய்த
எரிதரு சடையினர் இடைமரு தடைவுனல்
புரிதரு மனனவர் புகழ்மிக வுளதே. 1

மறிதிரை படுகடல் விடமடை மிடறினர்
எறிதிரை கரைபெரும் இடைமரு தெனுமவர்
செறிதிரை நரையொடு செலவிலர் உலகினில்
பிறிதிரை பெறும்உடல் பெறுகுவ தரிதே. 2

சலசல சொரிபுனல் சடையினர் மலைமகள்
நிலவிய வுடலினர் நிறைமறை மொழியினர்
இலரென இடுபலி யவர்இடை மருதினை
வலமிட வுடல்நலி விலதுள வினையே. 3

விடையினர் வெளியதொர் தலைகல னெனநனி
கடைகடை தொறுபலி யிடுகென முடுகுவர்
இடைவிட லரியவர் இடைமரு தெனும்நகர்
உடையவ ரடியிணை தொழுவதெம் உயர்வே. 4

உரையரும் உருவினர் உணர்வரு வகையினர்
அரைபொரு புலியதள் உடையினர் அதன்மிசை
இரைமருள் அரவினர் இடைமரு தெனவுளம்
உரைகள துடையவர் புகழ்மிக வுளதே. 5

ஒழுகிய புனல்மதி அரவமொ டுறைதரும்
அழகிய முடியுடை அடிகள தறைகழல்
எழிலினர் உறைஇடை மருதினை மலர்கொடு
தொழுதல்செய் தெழுமவர் துயருறல் இலரே. 6

கலைமலி விரலினர் கடியதொர் மழுவொடும்
நிலையினர் சலமகள் உலவிய சடையினர்
மலைமகள் முலையிணை மருவிய வடிவினர்
இலைமலி படையவர் இடம்இடை மருதே. 7

செருவடை யிலவல செயல்செயத் திறலொடும்
அருவரை யினிலொரு பதுமுடி நெரிதர
இருவகை விரல்நிறி யவரிடை மருதது
பரவுவர் அருவினை யொருவுதல் பெரிதே. 8

அரியொடு மலரவன் எனஇவ ரடிமுடி
தெரிவகை அரியவர் திருவடி தொழுதெழ
எரிதரும் உருவர்தம் இடைமரு தடைவுறல்
புரிதரு மனனவர் புகழ்மிக வுளதே. 9

குடைமயி லினதழை மருவிய வுருவினர்
உடைமரு துவரினர் பலசொல வுறவிலை
அடைமரு திருவினர் தொழுதெழு கழலவர்
இடைமரு தெனமனம் நினைவதும் எழிலே. 10

பொருகட லடைதரு புகலியர் தமிழொடு
விரகினன் விரிதரு பொழிலிடை மருதினைப்
பரவிய ஒருபது பயிலவல் லவரிடர்
விரவிலர் வினையொடு வியனுல குறவே. 11

## பண் - காந்தாரம்

பொங்குநூல் மார்பினீர் பூதப் படையினீர் பூங்கங்கை
தங்குசெஞ் சடையினீர் சாம வேதம் ஓதினீர்
எங்குமெழிலார் மறையோர்கள் முறையா லேத்த இடைமருதில்
மங்குல்தோய் கோயிலே கோயி லாக மகிழ்ந்தீரே. 1

நீரார்ந்த செஞ்சடையீர் நெற்றித் திருக்க ணிகழ்வித்தீர்
போரார்ந்த வெண்மழுவொன் றுடையீர் பூதம் பாடலீர்
ஏரார்ந்த மேகலையாள் பாகங் கொண்டீர் இடைமருதில்
சீரார்ந்த கோயிலே கோயிலாகச் சேர்ந்தீரே. 2

அழல்மல்கும் அங்கையி லேந்திப் பூதம் அவைபாடச்
சுழல்மல்கும் ஆடலீர் சுடுகா டல்லாற் கருதாதீர்
எழில்மல்கு நான்மறையோர் முறையா லேத்த இடைமருதில்
பொழில்மல்கு கோயிலே கோயி லாகப் பொலிந்தீரே. 3

பொல்லாப் படுதலையொன் றேந்திப் புறங்காட் டாடலீர்
வில்லாற் புரமூன்றும் எரித்தீர் விடையார் கொடியினீர்
எல்லாக் கணங்களும் முறையா லேத்த இடைமருதில்
செல்வாய கோயிலே கோயி லாகச் சேர்ந்தீரே. 4

வருந்திய மாதவத்தோர் வானோ ரேனோர் வந்தீண்டிப்
பொருந்திய தைப்பூச மாடி யுலகம் பொலிவெய்தத்
திருந்திய நான்மறையோர் சீரா லேத்த இடைமருதில்
பொருந்திய கோயிலே கோயி லாகப் புக்கீரே. 5

சலமல்கு செஞ்சடையீர் சாந்த நீறு பூசினீர்
வலமல்கு வெண்மழுவொன் றேந்தி மயானத் தாடலீர்
இலமல்கு நான்மறையோ ரினிதா யேத்த இடைமருதில்
புலமல்கு கோயிலே கோயி லாகப் பொலிந்தீரே. 6

புனமல்கு கொன்றையீர் புலியி னதளீர் பொலிவார்ந்த
சினமல்கு மால்விடையீர் செய்யீர் கரிய கண்டத்தீர்
இனமல்கு நான்மறையோ ரேத்துஞ் சீர்கொள் இடைமருதில்
கனமல்கு கோயிலே கோயி லாகக் கலந்தீரே. 7

சிலையுய்த்த வெங்கணையாற் புரமூன் றெரித்தீர் திறலரக்கன்
தலைபத்துந் திண்தோளும் நெரித்தீர் தையல் பாகத்தீர்
இலைமொய்த்த தண்பொழிலும் வயலுஞ் சூழ்ந்த இடைமருதில்
நலமொய்த்த கோயிலே கோயி லாக நயந்தீரே. 8

மறைமல்கு நான்முகனும் மாலும் அறியா வண்ணத்தீர்
கறைமல்கு கண்டத்தீர் கபாலமேந்து கையினீர்
அறைமல்கு வண்டினங்க ளாலுஞ் சோலை இடைமருதில்
நிறைமல்கு கோயிலே கோயி லாக நிகழ்ந்தீரே. 9

சின்போர்வைச் சாக்கியரும் மாசு சேருஞ் சமணரும்
துன்பாய கட்டுரைகள் சொல்லி அல்லல் தூற்றவே
இன்பாய அந்தணர்கள் ஏத்தும் ஏர்கொ ளிடைமருதில்
அன்பாய கோயிலே கோயி லாக அமர்ந்தீரே. 10

கல்லின் மணிமாடக் கழும லத்தார் காவலவன்
நல்ல அருமறையான் நற்றமிழ் ஞான சம்பந்தன்
எல்லி இடைமருதில் ஏத்து பாட லிவைபத்தும்
சொல்லு வார்க்குங்கேட் பார்க்குந் துயர மில்லையே. 11

## திருக்ஷேத்திரக்கோவை : பண் - இந்தளம்

மனவஞ்சர் மற்றோட முன்மாத ராரும்
மதிகூர் திருக்கூட லில்ஆல வாயும்
இனவஞ் சொலிலா இடைமா மருதும்
இரும்பைப் பதிமாகாளம் வெற்றியூரும்
கனமஞ் சினமால் விடையான் விரும்புங்
கருகாவூர் நல்லூர்பெரும் புலியூர்
தனமென் சொலிற்றஞ்ச மென்றே நினைமின்
தவமாம் மலமா யினதா னறுமே.

# திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

## திருநேரிசை

காடுடைச் சுடலை நீற்றர் கையில்வெண் டலையர் தையல்
பாடுடைப் பூதஞ் சூழப் பரமனூர் மருத வைப்பில்
தோடுடைக் கைதை யோடு சூழ்கிடங் கதனைச் சூழ்ந்த
ஏடுடைக் கமல வேலி இடைமரு திடங்கொண் டாரே. 1

முந்தையார் முந்தி யுள்ளார் மூவர்க்கு முதல்வ ரானூர்
சந்தியார் சந்தி யுள்ளார் தவநெறி தரித்து நின்றூர்
சிந்தையார் சிந்தை யுள்ளார் சிவநெறி யனைத்து மானூர்
எந்தையார் எம்பி ரானூர் இடைமரு திடங்கொண் டாரே. 2

காருடைக் கொன்றை மாலைக் கதிர்மணி அரவி னேடு
நீருடைச் சடையுள் வைத்த நீதியார் நீதி யாய
போருடை விடைஒன் றேற வல்லவர் பொன்னித் தென்பால்
ஏருடைக் கமல மோங்கும் இடைமரு திடங்கொண் டாரே. 3

விண்ணினூர் விண்ணின் மிக்கார் வேதங்கள் நான்கும் அங்கம்
பண்ணினூர் பண்ணின் மிக்க பாடலார் பாவந் தீர்க்குங்
கண்ணினூர் கண்ணின் மிக்க நுதலினூர் காமற் காய்ந்த
எண்ணினூர் எண்ணின் மிக்கார் இடைமரு திடங்கொண் டாரே. 4

வேதங்கள் நான்குங் கொண்டு விண்ணவர் பரவி ஏத்தப்
பூதங்கள் பாடி யாட லுடையவன் புனிதன் எந்தை
பாதங்கள் பரவி நின்ற பத்தர்கள் தங்கள் மேலை
ஏதங்கள் தீர நின்றூர் இடைமரு திடங்கொண் டாரே. 5

பொறியரவ வரையி லார்த்துப் பூதங்கள் பலவுஞ் சூழ
முறிதரு வன்னி கொன்றை முதிர்சடை மூழ்க வைத்து
மறிதரு கங்கை தங்க வைத்தவர் எத்தி சையும்
எறிதரு புனல்கொள் வேலி இடைமரு திடங்கொண் டாரே. 6

படரொளி சடையி னுள்ளாற் பாய்புனல் அரவி னேடு
சுடரொளி மதியம் வைத்துத் தூஒளி தோன்றும் எந்தை
அடரொளி விடையொன் றேற வல்லவர் அன்பர் தங்கள்
இடரவை கெடவு நின்றூர் இடைமரு திடங்கொண் டாரே. 7

கமழ்தரு சடையி னுள்ளாற் கடும்புனல் அரவி னேடு
தவழ்தரு மதியம் வைத்துத் தன்னடி பலரும் ஏத்த
மழுவது வளங்கை யேந்தி மாதொரு பாக மாகி
எழில்தரு பொழில்கள் சூழ்ந்த இடைமரு திடங்கொண் டாரே. 8

பொன்திகழ் கொன்றை மாலை புதுப்புனல் வன்னி மத்தம்
மின்திகழ் சடையில் வைத்து மேதகத் தோன்று கின்ற
அன்றவர் அளக்க லாகா அனலெரி யாகி நீண்டார்
இன்றுட னுலக மேத்த இடைமரு திடங்கொண் டாரே. 9

மலையுடன் விரவி நின்று மதியிலா அரக்கன் தூக்கத்
தலையுட னடர்த்து மீண்டே தலைவனு அருள்கள் நல்கிச்
சிலையுடை மலையை வாங்கித் திரிபுர மூன்றும் எய்தார்
இலையுடைக் கமல வேலி இடைமரு திடங்கொண் டாரே. 10

## திருக்குறுந்தொகை

பாச மொன்றில ராய்ப்பல பத்தர்கள்
வாச நாண்மலர் கொண்டடி வைகலும்
ஈசன் எம்பெரு மான்இடை மருதினில்
பூச நாம்புகு தும்புன லாடவே. 1

மறையின் நாண்மலர் கொண்டாடி வானவர்
முறையி னால்முனி கள்வழி பாடுசெய்
இறைவன் எம்பெரு மான்இடை மருதினில்
உறையும் ஈசனை உள்குமெம் உள்ளமே. 2

கொன்றை மாலையுங் கூவிள மத்தமும்
சென்று சேரத் திகழ்சடை வைத்தவன்
என்றும் எந்தை பிரான்இடை மருதினை
நன்று கைதொழு வார்வினை நாசமே. 3

இம்மை வானவர் செல்வம் விளைத்திடும்
அம்மை யேற்பிற வித்துயர் நீத்திடும்
எம்மை யாளும் இடைமரு தன்கழல்
செம்மை யேதொழு வார்வினை சிந்துமே. 4

வண்ட ணைந்தன வன்னியுங் கொன்றையும்
கொண்ட ணிந்த சடைமுடிக் கூத்தனார்
எண்டி சைக்கும் இடைமரு தானன
விண்டு போய்அறும் மேலை வினைகளே. 5

ஏற தேறும் இடைமரு தீசனார்
கூறு வார்வினை தீர்க்குங் குழகனார்
ஆறு செஞ்சடை வைத்த அழகனார்க்(கு)
ஊறி யூறி உருகுமென் உள்ளமே. 6

விண்ணு ளாரும் விரும்பப் படுபவர்
மண்ணு ளாரும் மதிக்கப் படுபவர்
எண்ணி னார்பொழில் சூழ்இடை மருதினை
நண்ணி னாரைநண் ணாவினை நாசமே. 7

வெந்த வெண்பொடிப் பூசும் விகிர்தனார்
கந்த மாலைகள் சூடுங் கருத்தனார்
எந்தை யென்னிடை மருதினில் ஈசனைச்
சிந்தை யால்நினை வார்வினை தேயுமே. 8

வேத மோதும் விரிசடை அண்ணலார்
பூதம் பாடநின் றாடும் புனிதனார்
ஏதந் தீர்க்கும் இடைமரு தாஎன்று
பாதம் ஏத்தப் பறையும்நம் பாவமே. 9

கனியி னுங்கட்டி பட்டக ரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளு மரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே. 10

முற்றி லாமதி சூடும் முதல்வனார்
ஒற்றி னார்மலை யாலரக் கன்முடி
எற்றி னார்கொடி யார்இடை மருதினைப்
பற்றி னாரைப்பற் றாவினை பாவமே. 11

பறையின் ஓசையும் பாடலின் ஓசையும்
மறையின் ஓசையும் வைகும் அயலெலாம்
இறைவன் எங்கள் பிரான்இடை மருதினில்
உறையும் ஈசனை உள்குமென் உள்ளமே. 1

மனத்துள் மாயனை மாசறு சோதியைப்
புனிற்றுப் பிள்ளைவெள் ளைமதி சூடியை
எனக்குத் தாயைஎம் மான்இடை மருதனை
நினைத்திட் டூறிநி றைந்ததென் உள்ளமே. 2

வண்ட ணைந்தன வன்னியும் மத்தமும்
கொண்ட ணிந்த சடைமுடிக் கூத்தனை
எண்டி சைக்கும் இடைமரு தாஎன
விண்டு போயறும் மேலைவி னைகளே. 3

துணையி லாமையில் தூங்கிருட் பேய்களோ(டு)
அணைய லாவ தெமக்கரி தேயெனா
இணையி லாஇடை மாமரு தில்லெழு
பணையி லாகமஞ் சொல்லுந்தன் பாங்கிக்கே. 4

மண்ணை யுண்டமால் காணான் மலரடி
விண்ணை விண்டயன் காணான் வியன்முடி
மொண்ணை மாமரு தாஎன்றென் மொய்குழல்
பண்ணை யாயமுந் தானும் பயிலுமே. 5

மங்கை காணக் கொடார்மண மாலையைக்
கங்கை காணக் கொடார்முடிக் கண்ணியை
நங்கை மீர்இடை மருதர்இந் நங்கைக்கே
எங்கு வாங்கிக் கொடுத்தார் இதழியே. 6-11

## திருத்தாண்டகம்

சூலப் படையுடையார் தாமே போலும்
சுடர்த்திங்கட் கண்ணி யுடையார் போலும்
மாலை மகிழ்ந்தொருபால் வைத்தார் போலும்
மந்திரமுந் தந்திரமு மானார் போலும்
வேலைக் கடல்நஞ்ச முண்டார் போலும்
மேல்வினைகள் தீர்க்கும் விகிர்தர் போலும்
ஏலக் கமழ்குழலாள் பாகர்போலும்
இடைமருது மேவிய ஈசனாரே. 1

காரார் கமழ்கொன்றைக் கண்ணி போலும்
காரானை யீருரிவை போர்த்தார் போலும்
பாரார் பரவப் படுவார் போலும்
பத்துப்பல் லூழி பரந்தார் போலும்
சீரால் வணங்கப் படுவார் போலும்
திசையனைத்து மாய்மற்று மானார் போலும்
ஏரார் கமழ்குழலாள் பாகர் போலும்
இடைமருது மேவிய ஈச னாரே. 2

வேதங்கள் வேள்வி பயந்தார் போலும்
விண்ணுலகு மண்ணுலகு மானார் போலும்
பூதங்க ளாய புராணர் போலும்
புகழ வளரொளியாய் நின்றார் போலும்
பாதம் பரவப் படுவார் போலும்
பத்தர்களுக் கின்பம் பயந்தார் போலும்
ஏதங்க ளான கடிவார் போலும்
இடைமருது மேவிய ஈச னாரே. 3

திண்குணத்தார் தேவர் கணங்க ளேத்தித்
திசைவணங்கச் சேவடியை வைத்தார் போலும்
விண்குணத்தார் வேள்வி சிதைய நூறி
வியன்கொண்டல் மேற்செல் விகிர்தர் போலும்
பண்குணத்தார் பாடலோ டாட லோவாப்
பரங்குன்ற மேய பரமர் போலும்
எண்குணத்தா ரெண்ணு யிரவர் போலும்
இடைமருது மேவிய ஈச னாரே. 4

ஊக முகிலுரிஞ்சு சோலை சூழ்ந்த
உயர்பொழி லண்ணுவி லுறைகின் றாரும்
பாகம் பணிமொழியாள் பங்க ராகிப்
படுவெண் டலையிற் பலிகொள் வாரும்
மாகமடை மும்மதிலு மெய்தார் தாமும்
அணிபொழில்சூ ழாரூ ருறைகின் றாரும்
ஏகம்ப மேயாரு மெல்லா மாவார்
இடைமருது மேவிய ஈச னாரே. 5

ஐயிரண்டு மாருென்று மானர் போலும்
அறுமூன்று நான்மூன்று மானர் போலும்
செய்வினைகள் நல்வினைக ளானர் போலும்
திசையனைத்து மாய்நிறைந்த செல்வர் போலும்
கொய்மலராங் கொன்றைச் சடையார் போலும்
கூத்தாட வல்ல குழகர் போலும்
எய்யவந்த காமனையுங் காய்ந்தார் போலும்
இடைமருது மேவிய ஈச னாரே. 6

பிரியாத குணமுயிர்கட் கஞ்சோ டஞ்சாய்ப்
பிரிவுடைய குணம்பேசிற் பத்தோ டொன்ருய்
விரியாத குணமொருகால் நான்கே யென்பர்
விரிவிலாக் குணநாட்டத் தாறே யென்பர்
தெரிவரிய குணமஞ்சுஞ் சமிதை யஞ்சும்
பதமஞ்சுங் கதியஞ்சுஞ் செப்பி னாரும்
எரியாய தாமரைமே லியங்கி னாரும்
இடைமருது மேவிய ஈச னாரே. 7

தோலிற் பொலிந்த வுடையார் போலும்
சுடர்வா யரவசைத்த சோதி போலும்
ஆலமமு தாக வுண்டார் போலும்
அடியார்கட் காரமுத மானர் போலும்
காலனையும் காய்ந்த கழலார் போலும்
கயிலாயந் தம்மிடமாக் கொண்டார் போலும்
ஏலங் கமழ்குழலாள் பாகர் போலும்
இடைமருது மேவிய ஈச னாரே. 8

பைந்தளிர்க் கொன்றையந் தாரார் போலும்
படைக்கணாள் பாக முடையார் போலும்
அந்திவாய் வண்ணத் தழகர் போலும்
அணிநீல கண்ட முடையார் போலும்
வந்த வரவுஞ் செலவும் ஆகி
மாருதென் னுள்ளத் திருந்தார் போலும்
எந்தம் இடர்தீர்க்க வல்லார் போலும்
இடைமருது மேவிய ஈச னாரே. 9

கொன்றையங் கூவிள மாலை தன்னைக்
குளிர்சடைமேல் வைத்துகந்த கொள்கை யாரும்
நின்ற அநங்கனை நீரு நோக்கி
நெருப்புருவாய் நின்ற நிமல னாரும்
அன்ற வரக்கன் அலறி வீழ
அருவரையைக் காலா லழுத்தி னாரும்
என்று மிடுபிச்சை யேற்றுண் பாரும்
இடைமருது மேவிய ஈச னாரே. 10

ஆறு சடைக்கணிவர் அங்கைத் தீயர்
அழகர் படையுடையர் அம்பொற் றோள்மேல்
நீறு தடவந் திடப மேறி
நித்தம் பலிகொள்வர் மொய்த்த பூதம்
கூறுங் குணமுடையர் கோவ ணத்தர்
கோடால வேடத்தர் கொள்கை சொல்லின்
ஈறு நடுவு முதலு மாவார்
இடைமருது மேவி யிடங்கொண் டாரே. 1

மங்குன் மதிவைப்பர் வான நாடர்
மடமா னிடமுடையர் மாத ராளைப்
பங்கின் மிகவைப்பர் பால்போல் நீற்றர்
பளிக்கு வடம்புனைவர் பாவ நாசர்
சங்கு திரையுகளுஞ் சாய்க்கா டாள்வர்
சரிதை பலவுடையர் தன்மை சொல்லின்
எங்கும் பலிதிரிவர் என்னுள் நீங்கார்
இடைமருது மேவி யிடங்கொண் டாரே. 2

ஆல நிழல்விருப்பர் ஆகா யத்தர்
அருவரையி னுச்சியார் ஆரூர் பெண்ணர்
காலம் பலகழித்தார் கறைசேர் கண்டர்
கருத்துக்குஞ் சேயார்தாங் காணா தார்க்குக்
கோலம் பலவுடையர் கொல்லை யேற்றர்
கொழுமழுவர் கோழம்ப மேய வீசர்
ஏல மண நாறு மீங்கோய் நீங்கார்
இடைமருது மேவி யிடங்கொண் டாரே. 3

தேசர் திறம்நினைவார் சிந்தை சேருஞ்
செல்வர் திருவாரூ ரென்றும் உள்ளார்
வாச மலரின்கண் மான்தோல் போர்ப்பர்
மருவுங் கரியுரியர் வஞ்சக் கள்வர்
நேசர் அடைந்தார்க் கடை யாதார்க்கு
நிட்டுரவர் கட்டங்கர் நினைவார்க் கென்றும்
ஈசர் புனற்பொன்னித் தீர்த்தர் வாய்த்த
இடைமருது மேவி யிடங்கொண் டாரே. 4

கரப்பர் கரியமனக் கள்வர்க் குள்ளங்
கரவாதே தந்நினைய கிற்பார் பாவம்
துரப்பர் தொடுகடலின் நஞ்ச முண்பர்
தூய மறைமொழியர் தீயா லொட்டி
நிரப்பர் புரமூன்றும் நீறு செய்வர்
நீள்சடையர் பாய்விடைகொண் டெங்கும் ஐயம்
இரப்பர் எமையாள்வர் என்னுள் நீங்கார்
இடைமருது மேவி யிடங்கொண் டாரே. 5

கொடியார் இடபத்தர் கூத்து மாடிக்
குளிர்கொன்றை மேல்வைப்பர் கோல மார்ந்த
பொடியாரு மேனியர் பூதிப் பையர்
புலித்தோலர் பொங்கரவர் பூண நூலர்
அடியார் குடியாவர் அந்த ணாளர்
ஆகுதியின் மந்திரத்தார் அமரர் போற்ற
இடியார் களிற்றுரியர் எவரும் போற்ற
இடைமருது மேவி யிடங்கொண் டாரே. 6

பச்சை நிறமுடையர் பாலர் சாலப்
பழையர் பிழையெல்லாம் நீக்கி யாள்வர்
கச்சைக் கதநாகம் பூண்ட தோளர்
கலனொன்று கையேந்தி இல்லந் தோறும்
பிச்சை கொளநுகர்வர் பெரியர் சாலப்
பிறங்கு சடைமுடியர் பேணுந் தொண்டர்
இச்சை மிகஅறிவர் என்று முள்ளார்
இடைமருது மேவி யிடங்கொண் டாரே. 7

காவார் சடைமுடியர் காரோ ணத்தர்
கயிலாயம் மன்னினார் பன்னு மின்சொல்
பாவார் பொருளாளர் வாளார் கண்ணி
பயிலுந் திருவுருவம் பாகம் மேயார்
பூவார் புனலணவு புன்கூர் வாழ்வர்
புரமூன்றும் ஒள்ளழலாக் காயத் தொட்ட
ஏவார் சிலைமலையர் எங்குந் தாமே
இடைமருது மேவி யிடங்கொண் டாரே. 8

புரிந்தார் நடத்தின்கட் பூத நாதர்
பொழிலாரூர் புக்குறைவர் போந்து தம்மில்
பிரிந்தா ரகல்வாய பேயுந் தாமும்
பிரியா ரொருநாளும் பேணு காட்டில்
எரிந்தா ரனலுகப்பர் ஏழி லோசை
எவ்விடத்துந் தாமேயென் றேத்து வார்பால்
இருந்தார் இமையவர்கள் போற்ற என்றும்
இடைமருது மேவி யிடங்கொண் டாரே. 9

விட்டிலங்கு மாமழுவர் வேலை நஞ்சர்
விடங்கர் விரிபுனல்சூழ் வெண்காட் டுள்ளார்
மட்டிலங்கு தார்மாலை மார்பில் நீற்றர்
மழபாடி யுள்ளுறைவர் மாகா ளத்தர்
சிட்டிலங்கு வல்லரக்கர் கோனை யன்று
செழுமுடியுந் தோளைந்நான் கடரக் காலால்
இட்டிரங்கி மற்றவனுக் கீந்தார் வென்றி
இடைமருது மேவி யிடங்கொண் டாரே. 10

## தலப்பெயர் வந்துள்ள பாடல்கள்

தீர்த்தப் புனற்கெடில வீரட்டமுந்
திருக்கோவல் வீரட்டம் வெண்ணெய் நல்லூர்
ஆர்த்தருவி வீழ்சுனைநீர் அண்ணுமலை
அறையணி நல்லூரும் அரநெறியும்
ஏத்துமின்கள் நீரேத்த நின்ற ஈசன்
இடைமரு தின்னம்பர் ஏகம்பமும்
கார்த்தயங்கு சோலைக் கயிலாயமும்
கண்ணுதலான் தன்னுடைய காப்புக்களே.

பொழிலானைப் பொழிலாரும் புன்கூ ரானைப்
புறம்பயனை அறம்புரிந்த புகலூ ரானை
எழிலானை இடைமருதி னிடங்கொண் டானை
ஈங்கோய்நீங் காதுறையும் இறைவன் தன்னை
அழலாடு மேனியனை அன்று சென்றக்
குன்றெடுத்த அரக்கன்தோள் நெரிய வூன்றுங்
கழலானை கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே.

நசையானை நால்வேதத் தப்பா லானை
நல்குரவுந் தீப்பிணிநோய் காப்பான் தன்னை
இசையானை யெண்ணிறந்த குணத்தான் தன்னை
இடைமருதுவும் ஈங்கோயும் நீங்கா தேற்றின்
மிசையானை விரிகடலும் மண்ணும் விண்ணும்
மிகுதீயும் புனலெறிகாற் ருகி யெட்டுத்
திசையானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் ருடி னேனே.

அழித்தவன்காண் எயில்மூன்றும் அயில்வா யம்பால்
ஐயாறும் இடைமருதும் ஆள்வான் தான்காண்
பழித்தவன்காண் அடையாரை அடைவார் தங்கள்
பற்றவன்காண் புற்றரவ நாணி னன்காண்
சுழித்தவன்காண் முடிக்கங்கை அடியே போற்றுந்
தூயமா முனிவர்க்காய்ப் பார்மேல் நிற்க
இழித்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே.

இடைமரு தீங்கோ யிராமேச் சுரம்
இன்னம்பர் ஏரிடவை ஏமப் பேறூர்
சடைமுடி சாலைக் குடிதக் களூர்
தலையாலங் காடு தலைச்சங் காடு
கொடுமுடி குற்றாலங் கொள்ளம் பூதூர்
கோத்திட்டை கோட்டாறு கோட்டுக் காடு
கடைமுடி கானூர் கடம்பந் துறை
கயிலாய நாதனை யே காண லாமே.

இணையொருவர் தாமல்லால் யாரு மில்லார்
இடைமருதோ டேகம்பத் தென்றும் நீங்கார்
அணைவரியர் யாவருக்கும் ஆதி தேவர்
அருமந்த நன்மையெலா மடியார்க் கீவர்
தணல்முழுகு பொடியாடுஞ் செக்கர் மேனித்
தத்துவனைச் சாந்தகிலி னளறு தேய்ந்த
பணைமுலையாள் பாகனைஎம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே.

படமூக்கப் பாம்பணையா னோடு வானோன்
பங்கயனென் றங்கவரைப் படைத்துக் கொண்டார்
குடமூக்கிற் கீழ்க்கோட்டங் கோயில் கொண்டார்
கூற்றுதைத்தோர் வேதியனை உய்யக் கொண்டார்
நெடுமூக்கிற் கரியினுரி மூடிக் கொண்டார்
நினையாத பாவிகளை நீங்கக் கொண்டார்
இடமாக்கி இடைமருதுங் கொண்டார் பண்டே
என்னை இந்நாள் ஆட்கொண்ட இறைவர்தாமே.

## சுந்தரமூர்த்திசுவாமிகள் தேவாரம்

பண் - தக்கேசி

கழுதை குங்குமந் தான்சுமந் தெய்த்தாற்
கைப்பர் பாழ்புக மற்றது போலப்
பழுது நான்உழன் றுட்டடு மாறிப்
படுசு ழித்தலைப் பட்டனன் எந்தாய்
அழுது நீஇருந் தென்செய்தி மனனே
அங்க ணாஅர னேஎன மாட்டா
இழுதை யேனுக்கோர் உய்வகை அருளாய்
இடைமருதுறை எந்தை பிரானே. 1

நரைப்பு மூப்பொடு பிணிவரும் இன்ன
நன்றி யில்வினை யேதுணிந் தெய்த்தேன்
அரைத்த மஞ்சள தாவதை அறிந்தேன்
அஞ்சி னேன்நம னாரவர் தம்மை
உரைப்பன் நான்உன சேவடி சேர
உணரும் வாழ்க்கையை ஒன்றறி யாத
இரைப்பனே னுக்கோர் உய்வகை அருளாய்
இடைமருதுறை எந்தைபிரானே. 2

புன்னு னைப்பனி வெங்கதிர் கண்டாற்
போலும் வாழ்க்கை பொருள்இலை நாளும்
என்னெ னக்கினி இற்றைக்கு நாளை
என்றி ருந்திடர் உற்றனன் எந்தாய்
முன்ன மேஉன சேவடி சேரா
மூர்க்க னாகிக் கழிந்தன காலம்
இன்னம் என்றனக் குய்வகை அருளாய்
இடைமருதுறை எந்தைபிரானே. 3

முந்திச் செய்வினை இம்மைக்கண் நலிய
மூர்க்க னாகிக் கழிந்தன காலம்
சிந்தித் தேமனம் வைக்கவும் மாட்டேன்
சிறுச்சிறி தேஇரப் பார்கட்கொன் றீயேன்
அந்தி வெண்பிறை சூடும்எம் மானே
ஆரூர் மேவிய அமரர்கள் தலைவா
எந்தை நீஎனக் குய்வகை அருளாய்
இடைமருதுறை எந்தைபிரானே. 4

அழிப்பர் ஐவர் புரவுடை யார்கள்
ஐவ ரும்புர வாசற ஆண்டு
கழித்துக் காற்பெய்து போயின பின்னைக்
கடைமுறை உனக் கேபொறை ஆனேன்
விழித்துக் கண்டனன் மெய்ப்பொருள் தன்னை
வேண்டேன் மானுட வாழ்க்கையி தாகில்
இழித்தேன் என்றனக் குய்வகை அருளாய்
இடைமருதுறை எந்தைபிரானே. 5

குற்றந் தன்னெடு குணம்பல பெருக்கிக்
கோல நுண்ணிடை யாரொடு மயங்கிக்
கற்றி லேன்கலை கள்பல ஞானங்
கடிய ஆயின கொடுமைகள் செய்தேன்
பற்ற லாவதோர் பற்றுமற் றில்லேன்
பாவி யேன்பல பாவங்கள் செய்தேன்
எற்று ளேன்எனக் குய்வகை அருளாய்
இடைமருதுறை எந்தைபிரானே. 6

கொடுக்க கிற்றிலேன் ஒண்பொருள் தன்னைக்
குற்றஞ் செற்றம் இவைமுத லாக
விடுக்க கிற்றிலேன் வேட்கையுஞ் சினமும்
வேண்டில் ஐம்புலன் என்வசம் அல்ல
நடுக்கம் உற்றதோர் மூப்புவந் தெய்த
நமன்த மர்நர கத்திடல் அஞ்சி
இடுக்கண் உற்றனன் உய்வகை அருளாய்
இடைமருதுறை எந்தைபிரானே. 7

ஐவகை யரைய ரவராகி
ஆட்சி கொண்டொரு காலவர் நீங்கார்
அவ்வ கையவர் வேண்டுவ தானல்
அவர வர்வழி ஒழுகிநான் வந்து
செய்வ கைஅறி யேன்சிவ லோகா
தீவ ணசிவ னேஎரி யாடீ
எய்வ கைஎனக் குய்வகை அருளாய்
இடைமருதுறை எந்தைபிரானே. 8

ஏழை மானுட இன்பினை நோக்கி
இளைய வர்வலைப் பட்டிருந் தின்னம்
வாழை தான்பழுக் குந்நமக் கென்று
வஞ்ச வல்வினை யுள்வலைப் பட்டுக்
கூழை மாந்தர்தஞ் செல்கதிப் பக்கம்
போக மும்பொருள் ஒன்றறி யாத
ஏழை யேனுக்கோர் உய்வகை அருளாய்
இடைமருதுறை எந்தைபிரானே. 9

அரைக்குஞ் சந்தனத் தோடகில் உந்தி
ஐவ னஞ்சுமந் தார்த்திரு பாலும்
இரைக்குங் காவிரித் தென்கரை தன்மேல்
இடைம ருதுறை எந்தை பிரானை
உரைக்கும் ஊரன் ஒளிதிகழ் மாலை
உள்ளத் தால்உகந் தேத்தவல் லார்கள்
நரைப்பு மூப்பொடு நடலையும் இன்றி
நாதன் சேவடி நண்ணுவர் தாமே. 10

### திருஇடையாறு : பண் - கொல்லி

முந்தையூர் முதுகுன்றம் குரங்கணில் முட்டம்
சிந்தையூர் நன்றுசென் றடைவான் திருவாரூர்
பந்தையூர் பழையாறு பழனம் பைஞ்ஞீலி
எந்தையூர் எய்தமான் இடையா றிடை மருதே.

ஊறிவா யினநாடிய வன்றொண் டனூரன்
தேறுவார் சிந்தை தேறுமிடஞ் சிந்தைவெள்ளே
றேறுவார் எய்தமான் இடையா றிடைமருதைக்
கூறுவார் வினைஎவ் விடமெய் குளிர்வாரே.

## திருவாசகம்

### கீர்த்தித் திருவகவல்

இடைமரு ததனில் ஈண்ட இருந்து
படிமப் பாதம் வைத்தவப் பரிசும்.

### போற்றித் திருவகவல்

இடைமரு துறையும் எந்தாய் போற்றி.

### திருப்பூவல்லி

எந்தையெந் தாய்சுற்ற மற்றுமெல்லாம் என்னுடைய
பந்தமறுத்தென்னை ஆண்டுகொண்ட பாண்டிப்பிரான்
அந்த இடைமருதில் ஆனந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ.

### திருவம்மானை

மருவினிய மலர்ப்பாதம் மனத்தில்வளர்ந் துள்ளுருகத்
தெருவுதொறு மிகஅலறிச் சிவபெருமான் என்றேத்திப்
பருகியநின் பரங்கருணைத் தடங்கடலிற் படிவாமாறு
அருளெனக்கிங் கிடைமருதே யிடங்கொண்ட அம்மானே

### திருப்பொன்னூசல்

மூன்றங் கிலங்கு நயனத்தன் மூவாத
வான்தங்கு தேவர்களும் காணு மலரடிகள்
தேன்தங்கித் தித்தித்து அமுதூறித் தான்தெளிந்தங்கு
ஊன்தங்கி நின்றுருக்கும் உத்தர கோசமங்கைக்
கோன்றங் கிடைமருது பாடிக் குலமஞ்ஞை
போன்றங் கனநடையீர் பொன்னூச லாடாமோ

## திருக்கோவையார்

குன்றங் கிடையுங் கடந்(து)உயர் கூறும் நிதிகொணர்ந்து
மின்றங் கிடைநும்மை யும்வந்து மேவுவன் அம்பலஞ்சேர்
மன்றங் கிடைமரு(து) ஏகம்பம் வாஞ்சியம் அன்னபொன்னைச்
சென்றங் கிடைகொண்டு வாடா வகைசெப்பு தேமொழியே.

## கருவூர்த்தேவர் திருவிசைப்பா

வெய்யசெஞ் சோதி மண்டலம் பொலிய
வீங்கிருள் நடுநல்யா மத்தோர்
பையசெம் பாந்தள் பருமணி உமிழ்ந்து
பாவியேன் காதல்செய் காதில்
ஐயசெம் பொற்றோட் டவிர்சடை மொழுப்பி
னழிவழ கியதிரு நீற்று
மையசெங் கண்டத் தண்டவா ணவர்கோன்
மருவிடந் திருவிடை மருதே. 1

இந்திர லோக முழுவதும் பணிகேட்(டு)
இணையடி தொழுதெழத் தாம்போய்
ஐந்தலை நாக மேகலை யரையா
அகந்தொறும் பலிதிரி யடிகள்
தந்திரி வீணை கீதமும் பாடச்
சாதிகின் னரங்கலந் தொலிப்ப
மந்திர கீதந் தீங்குழ லெங்கும்
மருவிடந் திருவிடை மருதே. 2

பனிபடு மதியம் பயில்கொழுந் தன்ன
பல்லவம் வல்லியென் றிங்ஙன்
வினைபடு கனகம் போலயா வையுமாய்
வீங்குல கொழிவற நிறைந்து
துனிபடு கலவி மலைமக ளுடனாய்த்
தூங்கிருள் நடுநல்யா மத்தென்
மனனிடை யணுகி நுணுகியுள் கலந்தேன்
மருவிடந் திருவிடை மருதே. 3

அணியுமிழ் சோதி மணியினுள் கலந்தாங்(கு)
அடியனே னுள்கலந் தடியேன்
பணிமகிழ்ந் தருளு மரிவைபா கத்தன்
படர்சடை விடமிடற் றடிகள்
துணியுமி ழாடை யரையிலோ ராடை
சுடருமிழ் தரவத னருகே
மணியுமிழ் நாக மணியுமிழ்ந் திமைப்ப
மருவிடந் திருவிடை மருதே. 4

பந்தமும் பிரிவுந் தெரிபொருட் பனுவற்
படிவழி சென்றுசென் றேறிச்
சிந்தையுந் தானுங் கலந்ததோர் கலவி
தெரியினுந் தெரிவுறு வண்ணம்
எந்தையுந் தாயும் யானுமென் றிங்கன்
எண்ணில்பல் லூழிக ளுடனாய்
வந்தணு காது நுணுகியுள் கலந்தோன்
மருவிடந் திருவிடை மருதே. 5

எரிதரு கரிகாட் டிடுபிண நிணமுண்(டு)
ஏப்பமிட் டிலங்கெயிற் றழல்வாய்த்
துருகழல் நெடும்பேய்க் கணமெழுந் தாடுந்
தூங்கிருள் நடுநல்யா மத்தே
அருள்புரி முறுவல் முகிழ்நிலா வெறிப்ப
அந்திபோன் றொளிர்திரு மேனி
வரியர வாட வாடுமெம் பெருமான்
மருவிடந் திருவிடை மருதே. 6

எழிலையாழ் செய்கைப் பசுங்கலன் விசும்பி
னின்றுளி படநனைந் துருகி
அழலையாழ் புருவம் புனலொடுங் கிடந்தாங்
காதனேன் மாதரார் கலவித்
தொழிலையாழ் நெஞ்ச மிடர்படா வண்ணந்
தூங்கிருள் நடுநல்யா மத்தோர்
மலையாழ் சிலம்ப வந்தகம் புகுந்தோன்
மருவிடந் திருவிடை மருதே. 7

வையவாம் பெற்றம் பெற்றமே றுடையார்
மாதவர் காதல்வைத் தென்னை
வெய்யவாஞ் செந்தீப் பட்டவிட் டிகைபோல்
விழுமியோன் முன்புபின் பென்கோ
நொய்யவா றென்ன வந்துள்வீற் றிருந்த
நூறுநூ றுயிர கோடி
மையவாங் கண்டத் தண்டவா னவர்கோன்
மருவிடந் திருவிடை மருதே. 8

கலங்கலம் பொய்கைப் புனல்தெளி விடத்துக்
கலந்தமண் ணிடைக்கிடந் தாங்கு
நலங்கலந் தடியேன் சிந்தையுட் புகுந்த
நம்பனே வம்பனே னுடைய
புலங்கலந் தவனே யென்றுநின் றுருகிப்
புலம்புவா ரவம்புகா ரருவி
மலங்கலங் கண்ணிற் கண்மணி யனையான்
மருவிடந் திருவிடை மருதே. 9

ஒருங்கிருங் கண்ணி னெண்ணில்புன் மாக்கள்
உறங்கிருள் நடுநல்யா மத்தோர்
கருங்கணின் றிமைக்குஞ் செழுஞ்சுடர் விளக்கங்
கலந்தெனக் கலந்துணர் கருவூர்
தருங்கரும் பனைய தீந்தமிழ் மாலை
தடம்பொழில் மருதயா முதிப்ப
வருங்கருங் கண்டத் தண்டவா னவர்கோன்
மருவிடந் திருவிடை மருதே. 10

பதினொராந்திருமுறை

## திருவிடைமருதூர் மும்மணிக்கோவை

பொருளும் குலனும் புகழும் திறனும்
அருளும் அறிவும் அனைத்தும்—ஒருவர்
கருதா என்பார்க்கும் கறைமிடற்றுய் தொல்லை
மருதாஎன் பார்க்கு வரும்.

ஓராதே அஞ்செழுத்தும் உன்னுதே பச்சிலையும்
நேராதே நீரும் நிரப்பாதே—யாராயோ
எண்ணுவார் உள்ளத் திடைமருதர் பொற்பாதம்
நண்ணுவாம் என்னுமது நாம்

வளையார் பசியின் வருந்தார் பிணியின் மதனன் அம்புக்(கு)
இளையார் தனங்கண்(டு) இரங்கிநில் லார்இப் பிறப்பினில் வந்(து)
அளையார் நரகினுக்(கு) என்கட வார்பொன் னலர்ந்தகொன்றைத்
தலையான் இடைமரு தன்னடி யாரடி சார்ந்தவரே.

## திரு ஏகம்பமுடையார் திருவந்தாதி

கூறுமின் தொண்டர்குற் றாலம்நெய்த் தானம் துருத்தி அம்பேர்
தேறுமின் வேள்விக் குடித்திருத் தோணி புரம்பழனம்
ஆறுமின் போல்சடை வைத்தவன் ஆரூர் இடைமருதென்
றேறுமின் நீர்எம் பிரான்கச்சி ஏகம்பம் நண்ணுமினே.

## பெரியபுராணம்

### திருஞானசம்பந்தர் புராணம்

ஓங்கு திருப்பதிகம் ஓடேகலன்என் றெடுத்தருளித்
தாங்கரிய பெருமகிழ்ச்சி தலைசிறக்குந் தன்மையினால்
ஈங்கெனையா ளுடையபிரான் இடைமரு தீதோஎன்று
பாங்குடைய இன்னிசையால் பாடிஎழுந் தருளினார்.

அடியவர்கள் எதிர்கொள்ள எழுந்தருளி அங்கணைந்து
முடிவில்பரம் பொருளானார் முதற்கோயில் முன்னிறைஞ்சிப்
படியில்வலங் கொண்டுதிரு மின்பெய்திப் பார்மீது
நெடிதுபணிந் தெழுந்தன்பு நிறைகண்ணீர் நிரந்திழிய.

பரவுறுசெந் தமிழ்ப்பதிகம் பாடிஅமர்ந் தப்பதியில்
விரவுவார் திருப்பதிகம் பலபாடி வெண்மதியோ(டு)
அரவுசடைக் கணிந்தவர்தந் தாள்போற்றி ஆர்வத்தால்
உரவுதிருத் தொண்டருடன் பணிந்தேத்தி உறையுநாள்.

## அருணகிரிநாதர் திருப்புகழ்

புழுகொடுபனி நீர்ச வாதுடன்
இருகரமிகு மார்பி லேபன
புளகிதஅபி ராம பூஷித கொங்கையானை
பொதுவினில்விலை கூறு மாதர்கள்
மணியணிகுழை மீது தாவடி
பொருவனகணை போல்வி லோசன வந்தியாலே
மெழுகெனவுரு காவ னுர்தம
திதயகலக மோடு மோகன
வெகுவிதபரி தாப வாதனை கொண்டுநாயேன்
மிடைபடுமல மாயை யால்மிக
கலவியஅறி வேக சாமிநின்
விதரணசிவ ஞான போதகம் வந்துதாராய்
எழுகிரிநிலை யோட வாரிதி
மொகுமொகுவென வீச மேதினி
இடர்கெடஅசு ரேசர் சேனைமு றிந்துபோக
இமையவர்சிறை மீள நாய்நரி
கழுகுகள்கக ராசன் மேலிட
ரணமுககண பூத சேனைகள் நின்றுலாவச்
செழுமதகரி நீல கோமள
அபிநவமயி லேறு சேவக
செயசெயமுரு காகு காவளர் கந்தவேளே
திரைபொருகரை மோது காவிரி
வருபுனல்வயல் வாவி சூழ்தரு
திருவிடைமரு தூரில் மேவிய தம்பிரானே.

# க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ்

திருவலஞ் சுழியைங்க ரத்தனு லயமெனத்
திருவேர கப்பதியெனும்
திருநகர முன்பொனு லயமெனச் சேய்ஞலூர்
திகழ்தண்டி யாலயமென
மருவுமா வடுதுறைவன் விடையினு லயமென்ன
வந்தசூ ரியனுலயம்
மகிழ்சூரி யன்கோயி லாமெனச் சீகாழி
வடுகனு லயமாமெனப்
பெருகுசிற் சபைசபா பதியினு லயமெனப்
பேசுதிரு வாரூர்நகர்
பெரியநா யகர்கோயி லென்னவா னேர்களும்
பேணுமிவை மத்தியாகத்
தருமருத வனமகா லிங்கநா யகன்மதலை
சப்பாணி கொட்டியருளே
தந்தைவெண் காடர்புக ழெந்தைமுரு கேசனே
சப்பாணி கொட்டியருளே.

திருச்சிற்றம்பலம்.





திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
22-ஆவது குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள்

# வழிபாட்டின் அவசியம்

[மதுரை ஆதீனகர்த்தர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசார்ய சுவாமிகள்]

"கடவுளை நோக்கிச் செய்கின்ற பிரார்த்தனை அல்லது வேண்டுகோள் பயனுடையதாக இருக்குமா? அப்படி ஒரு கடவுள் இருக்கிறாரா? அப்படி இருப்பாரென்றால், நமக்கும் அவருக்கும் எவ்விதத் தொடர்பும் இருக்கிறதாகத் தெரிய வில்லையே? அவ்வித மூட நம்பிக்கை நமது நாட்டை விட்டுப் போனாலன்றி, நம் நாடு முன்னேற முடியாது" என்று சொல்லுகின்ற பலர் ஆலய வழிபாட்டிலும் வீட்டு வழிபாட்டிலும் தலைசிறந்த நமது தமிழகத்திலேயே உற்பத்தி யாகி இருக்கிறார்கள். இவை வெளிநாடுகளி லிருந்து விதைத்த விதைகளால் ஏற்பட்டவை. இப்படிப்பட்ட கேள்விகளையும், இதற்குமேல் அதிகமான கேள்விகளையும் பல்லாயிர வருஷங் களுக்கு முன்பே கேட்டு, அவர்களுக்கெல்லாம் பல நியாயங்களும் நிருபணங்களும் கொடுத்து, ஒப்புக்கொள்ளுமாறு நம் அருளாளர்களும், ரிஷி களும் செய்து, அவற்றைப் பின் சந்ததியார் களான யாவரும் உணர்ந்து கொள்ளுமாறு ஏடு களில் எழுதியும் உதவியிருக்கிறார்கள். அந்த உண்மைகளை நாம் திருவருளால் கண்டுணர்ந்து இன்று வெற்றி முரசு கொட்டிக் கையாண்டு வருகின்றோம். அவ்வாறு கேட்கின்ற ஒருவரிடம் நாம் முதலாவதாக ஒரு கேள்வி கேட்கிறோம்.

"நீ இந்த உலகத்தில் பிறந்து, நன்றாக உண்டு வளர்ந்து, இவ்வாறு பேசுவதற்கு மூல காரணம் உன்னுடைய தந்தையும் தாயுமே என்பதை ஒப்புக்கொள்கிறாயா?" என்பதே அந்தக் கேள்வி. "ஆம்" என்று ஒப்புக்கொண்டால் மட்டும் மேற் கொண்டு பேசுவோம்; மனிதனான எவனும் ஒப்புக்கொள்ளாதிருக்க முடியாது. "உன்னை உன்னுடைய அம்மாதானே பத்து மாதம், சுமந்து பெற்றெடுத்து, பாலூட்டித் தாலாட்டி, உணவு கொடுத்து வளர்த்து வந்தாள்? அப்படி யிருக்க, நீ யாருடைய குழந்தை என்று கேட்டால், நீ ஏன் அம்மாவின் பெயரைச் சொல் லாமல், அப்பாவின் பெயரைச் சொல்லி, அவருடைய மகன் என்று சொல்லுகிறாய்?" என்று பின் கேட்போம்.

"உன்னைப் பெற்றெடுத்தது உன் தாய்தான் என்பதே அவள் சொல்லத்தான் தெரியுமே தவிர நீ அறியாதிருக்க, தகப்பனார் பெயரை உன் தாயார் சொன்னதைக் கேட்டுத்தானே ஒப்புக் கொண்டு சொல்லி வருகிறாய்?" என்போம். "ஆமாம்" என்று சொல்லாமல் தீராது. தாய்க்கே தான் பெற்ற பிள்ளையின் தகப்பனார் யார் என்று தெரியாத நிலை இருந்தால், தாயின் விலாசத்தைப் போட வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை. தாயின் பெயரைச் சொல் லாததும், தகப்பனார் பெயரையே சொல்லி வருவதும் உலக முழுவதிலும் நடைபெறும் வழக்கம் ஆகும். அதற்கு மூல காரணம் ஒன்று உண்டு. அதாவது, ஒரு விளை நிலம் ஒருவனுக்குச் சொந்தமாக இருக்க, அதில் உழவு செய்து வித்திட்ட அவனுக்குத்தான் அந்த நிலத்தில் விளைந்து வந்த பயிர் சொந்தமாகும். அதுபோல், மனைவி கணவனுடைய உடைமை. வித்திட்ட வனும் கணவன். ஆகவே, கணவனுடைய உடைமையான மனைவியிடத்தில் உற்பத்தியான குழந்தைகள் தந்தையின் சொந்தக் குழந்தை களாகின்றன. அதனாலேயே பெண்களெல்லாம் கற்புடையவர்களாக இருக்கவேண்டுமென்பது உலக நீதி ஆயிற்று.

பின்வரும் கேள்வி, "உனக்குக் கல்யாணமாகி யிருக்கிறதா?" என்பதாகும். "ஆம்" என்பான்.

"பிள்ளைகள் இருக்கின்றனவா?"

"ஆம்; இருக்கின்றனர்."

"நீயும் உன் மனைவியும் விரும்பியவண்ணம் குழந்தைகள் பிறந்தனவா?"

"இல்லவே இல்லை" என்பான்.

ஆறாம் ஜார்ஜ் மன்னருக்கும், நேருஜிக்கும் எவ்வளவோ வசதிகள் இருந்தும் ஆண் குழந்தைகள் இல்லை என்பதும், பல பெரிய பணக்காரர்களுக்கும் பதவியில் உள்ளவர்களுக் கும் சில வைத்திய நிபுணர்களுக்கும், விஞ்ஞானி களுக்கும் குழந்தையே இல்லை என்பதும் யாவரும் அறிந்த உண்மையாகும். அதற்கும் உண்மையான ஒரு காரணம் உண்டு. அது எந்த மனிதனும் தன் விருப்பம் போல் ஆண் மகவுக்குரிய வித்தையோ, பெண் மகவுக்குரிய வித்தையோ உற்பத்தி செய்து உண்டாக்கிக் கொள்ள முடியாததே ஆகும். அந்த வித்தை

எல்லாம் வல்ல கடவுள் கொடுத்துத்தான் எந்தத் தந்தையும் பெறவேண்டியிருக்கிறது. கடவுள் கொடுக்க, தந்தை பெற்று, பின் தாய் அதனைப் பெற்றதன் காரணத்தினாலேயே தாய், தந்தை யரைப் பெற்றவர்கள் அல்லது பெற்றோர்கள் என்று சொல்லுகின்றோம்.

இந்த உண்மையை உணர்ந்த அருளாளர்கள் தந்தையை இரண்டு மாதம் தங்குகின்ற நாற்றங் காலாகவும், தாயாரைப் பத்து மாதம் வளர்க்கின்ற விளைநிலமாகவும், இரண்டையும் உடையவர் கடவுளே என்றும் அவற்றில் வித்திட்டவரும் கடவுளே என்றும் கண்டு, ஆண்டவனே உலகத்தில் பிறந்திருக்கிற எல்லா மனிதர்களுக்கும் எல்லாப் பிறவிகளுக்கும் உண்மையான அம்மை யப்பன் ஆகின்றான் என்றும் அருளியுள்ளனர். இந்துக்கள் கடவுளை, "அம்மையே அப்பா" என்றும், "எந்தையாய் எம்பிரான் மற்றும் யாவர்க்கும், தந்தை தாய் தம்பிரான்" என்றும், கிறிஸ்தவர்கள், "நாமெல்லாம் பரமண்டலத்தி லிருக்கின்ற பிதாவின் குழந்தைகளே" என்றும், இஸ்லாமியர்கள், "கடவுளே மனிதர்களைப் படைத்தார்" என்றும் கூறி வருகிறார்கள். யாரும் உயிர்களைக் கடவுள் படைத்ததாகச் சொல்லவில்லை.

மூன்றாவது கேள்வி: "உனக்கு ஒரு பெயரிடப் பெற்றிருக்கிறதல்லவா? அந்தப் பெயர் கண்ணுக்குத் தெரியாத உயிருக்கு இடப்பட்டதா? கண்ணுக்குத் தெரிகின்ற பாரமுள்ள உடலுக்கு இடப்பட்டதா? இரண்டும் சேர்ந்ததற்கு இடப் பட்டதா? அல்லது வேறொரு பாரமில்லாத உள் உடலுக்கு இடப்பட்டதா? எப்பொழுது இடப் பட்டது? யாரால் இடப்பட்டது?" என்று கேட் போம்.

"நான் பிறந்த பின்தான் பெயரிட்டிருக்கிறார்கள். ஆணா பெண்ணா என்று பார்த்து, என் பெற்றோர்களே பெயரிட்டிருக்கிறார்கள்" என்றும், "இந்தப் பாரமுள்ள உடலுக்குத்தான் பெயரிட் டிருக்கிறார்கள்" என்றும் (நாம் எழுதியிருக்கிற புத்தகத்தைப் படித்தறியாத) எவரும் சொல்லுவர். ஆனால், உண்மையில் மனிதராகப் பிறந் திருக்கிற எவருக்கும் பெயரிட்டவர் கடவுளே யாவர்.

ஒருவரை ஆணாகவோ, பெண்ணாகவோ பிறக்கச் செய்ய வேண்டிய தகப்பனாருடைய உடலில் அதற்குரிய அணுப்பிரமாணமுள்ள அதிசூக்குமமான வித்தைச் செலுத்தும் முன்னரேயே அவரவருடைய வினைகளுக்குத் தகுந்த தலையெழுத்தை ஆணுக்கு வலது உள்ளங்கை யிலும், பெண்ணுக்கு இடது உள்ளங்கையிலும் சுருக்கெழுத்துப் போன்ற இரேகைகளாகப் பொறித்து, இன்ன ஊரில், இன்ன சாதியில், இன்ன பெற்றோருக்கு, இன்ன பெயரோடு, இன்ன விநாடியில், இன்ன இன்ன கிரக நிலையில் பிறக்க வேண்டுமென்று கடவுளே தீர்மானித்து, அதன் படி பிறக்கச் செய்து, அவர் இட்ட பெயரையே இடும்படியாகவும், அவரவர் செய்த புண்ணிய பாவத்திற்கேற்ப இன்ன இன்ன இன்பம், இன்ன இன்ன துன்பம் அநுபவித்து வருமாறும் ஆட்சி புரிந்து வருகிறார். அந்தப் பெயரும் சொப்பனத் தில் பாரமுள்ள உடலின் உதவியின்றி, இன்ப துன்பம் அநுபவிக்கின்ற பாரமில்லாத உள் ளுடலுக்கே இட்டிருக்கிறார்.

இந்த அரிய பெரிய பேருண்மையை முதல் முறையாகக் கேட்கின்ற அனைவரும் ஆச்சரியப் படாமல் இருக்க முடியாது. ஒரு வேளை நமக்கு மூளைக் கோளாறாக இருக்கலாமோ என்றுகூடச் சில ஆத்திரக்காரர்கள் நினைக்கக்கூடும். நாம் இதனுடைய உண்மையைச் சோதித்து உணரு வதற்காக ரூபாய் ஒரு லக்ஷத்திற்கு மேல் செலவு செய்த பின் இவ்விதம் கூறுகின்றோம்: திருவள்ளுவர்,

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்—அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு,"

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும்—அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்று கூறியிருப்பதனால், நாம் கூறும் இந்த உண்மையைச் சோதித்துப் பார்த்த பின் அதைப் பற்றி ஏதாவது சொல்ல வேண்டுமே தவிர, கேட்ட மாத்திரத்தில் யாரும் எதையும் மறுத் தால், அது அறிவுடைமையாகாது.

பெயர்களைக் குறித்து, கிறிஸ்துவ வேத நூலில், பிரசங்கி ஆகமம்-அதிகாரம் 6-வசனம் 10-இல் "இருக்கிறவன் எவனும் தோன்று முன் னமே பெயரிடப் பெற்றிருக்கிறான். அவன் மனுஷன் என்பது தெரிந்திருக்கிறது" என்றும், இரேகை சாஸ்திரத்தைக் குறித்து யோபு ஆகமம்-அதிகாரம் 37-வசனம் 7-இல், "தாம் உண்டாக் கின சகல மனுஷரும், தம்மை அறியும்படிக்கு, அவர் சகல மனுஷருடைய கையையும் முத்திரித் துப் போடுகிறார்" என்றும் கூறியிருக்கிறது. உதாரணமாக நாகர்கோவில் ஸ்ரீ ஆறுமுக நாவல ரது நாடி சாஸ்திர ஏட்டில் அவருடைய பெயரை, "ஐந்தும் ஒன்றும் வதனமெனப் பெயரும் சூட்டி" என்று கண்டிருந்தது. ஐந்து + ஒன்று = ஆறு; வதனம் என்றால் முகம். ஆறுமுகம் என்பது ஆண்டவன் இட்ட பெயர். ஸ்ரீவைகுண்டத்திலுள்ள ஒரு கத்தோலிக்கக் கிறிஸ்துவ

அன்பருக்கு, "சாவில் ஆறும் சாவில் ஒன்பதும் இவன்தன் நாமம்" என்று கண்டிருந்தது. 'ச' என்ற எழுத்து வரிசையில் ஆறுவது எழுத்து 'சூ'; ஒன்பதாவது எழுத்து 'சை'; அவரது தந்தை இட்ட பெயரும், ஆண்டவன் கொடுத்த பெயரும் சூசை என்பதாகும். ஓர் இந்துவைப் போல மாறுவேஷம் போட்டுக்கொண்டு சென்ற மதுரையிலுள்ள இஸ்லாமியருக்கு, "அப்துல் ரஹ்மான்" என்று பெயர் கூறப்பட்டிருக்கிறது. ஓர் ஆங்கிலேயர் பார்த்தபொழுது, "முழத்தில் பாதி இவன்தன் நாமம்" என்றிருந்தது. அவரது பெயர் "ஜான்" என்பதாகும். கோவையில் கௌமார மடத்தை நிறுவிய தலைவருக்கு, "இராமக்குட்டி" என்றும், பின் துறவு பூண்டு இராமானந்தர் ஆவார் என்றும் கண்டிருந்தது.

இவற்றின் உண்மைகளை, சென்னை அரசாங்கத்தார் கை இரேகைகள் சம்பந்தமாகச் சப்த ரிஷி நாடியின் பழைய ஏட்டுப் பிரதிகளிலிருந்து பல புத்தகங்கள் வெளியிட்டு இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் கந்தர் நாடி, காக்கையர் நாடி, கௌசிகர் நாடி, சிவசிந்தாமணி, அநாகத வேதம் முதலிய பிற இரேகை சாஸ்திரங்களும் இருக்கின்றன. கடவுள் கொடுத்திருக்கும் அவ்விதத் தீர்ப்புகள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக இருப்பதற்குக் காரணம் அவரவர் சுய அறிவு கொண்டு முன் பிறவிகளில் செய்த நல்வினை, தீவினைகளில் ஏற்பட்ட வேற்றுமைகளே தவிரக் கடவுளது பக்ஷபாதமுள்ள செயலால் அல்ல என்பதற்குரிய நிரூபணங்களும் இரேகை சாஸ்திர ஏடுகளில் காணப்பெறுகின்றன. கடவுள் கொடுக்கிற நியாயத் தீர்ப்பில் தவறு ஏதும் இருக்க முடியாது. ஏனெனில் அவரே நாம் செய்கின்ற செயலைப் பார்த்துப் பதிவு செய்து கொண்டிருக்கிறார். அது எப்படி முடியும் என்று சிலர் கேட்கலாம்.

சிற்றறிவும் சிறு ஆற்றலும் உடைய மனிதர்களே ஒருவர் பேசுகின்ற பேச்சுக்களையும் பாடுகின்ற பாட்டுக்களையும் ரேடியோ (Radio)க் கருவிமூலம் எங்கும் கேட்கவும், அவற்றை ஒலிப்பதிவு செய்து பின்னால் எப்பொழுது வேண்டுமென்றாலும் எந்த இடத்திலும், பிறர் கேட்கும்படி 'டேப் ரிக்கார்டர்' கருவி மூலம் செய்யவும் முடிகின்றதென்ற உண்மையை யாவரும் அறிவர். அதேபோல, ஒருவருடைய உடலின் உருவத்தையும், அசைவையும், தொழிற்பாட்டையும் தொலைக்காட்சி (Television)க் கருவிமூலம் தொலைவிலுள்ளவர்கள் கண்டு கொள்ளுமாறு செய்யவும் முடிகிறதென்ற உண்மையையும் யாவரும் அறிவர். ஆனால் முற்றறிவும் முடிவில்லாத ஆற்றலும் உடைய கடவுள் நமக்கு 'டேப் ரிக்கார்டர்' கருவியையும், டெலிவிஷன் கருவியையும் ஒன்று சேர்த்து ஒவ்வொருவரது நெற்றியிலும் அபூர்வமாக அமைத்திருக்கிறார் என்பதைப் பலரும் சிந்தியாதிருக்கிறார்கள். அதனாலேயே ஏதாவது ஒன்றை நினைவிற்குக் கொண்டுவர வேண்டுமானால் புருவங்களை உயர்த்தி நெற்றியை அழுத்துகிறோம். அவ்வித அபூர்வமான கருவியைக் கருணையுள்ள கடவுள் நமக்குத் தந்து உதவியிருப்பதனாலேயே நாம் 5-ஆவது பிராயத்திலிருந்து படித்தவற்றையும் பார்த்தவற்றையும் நினைவுபடுத்திப் பிறருக்குச் சொல்லக்கூடிய பாக்கியம் பெற்றவர்களாக இருக்கிறோம்.

மனிதர்களுக்கு அவ்வித அபூர்வமான கருவிகளைக் கொடுத்திருக்கும் கடவுளுக்கு நாம் எண்ணுவதையும், பிரார்த்திப்பதையும், பேசுவதையும், செய்வதையும் பதிக்கக்கூடிய ஆற்றல் நிச்சயமாக உண்டு என்பதை யாவரும் ஊகித்து உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

நான்காவது கேள்வி: "உன்னுடைய தாய் தந்தையர் இறந்து போனதாகச் சொன்னாயே; நீ இவ்வுலகில் செய்கின்ற காரியங்களையும், பேசுவதையும், நினைப்பதையும் அறிய முடியாதென்று தானே நினைத்துக் கொண்டிருக்கிறாய்?" என்பதாகும். "அவர்களைத்தான் சுட்டு எரித்து விட்டோமே; அவர்கள் எப்படி அறிய முடியும்?" என்று கேட்கலாம். "உனக்குப் பெயரிடப் பெற்றிருக்கிறதே, அந்தப் பெயர் பாரமுள்ள உடலுக்குமல்ல, உயிருக்குமல்ல. சொப்பனத்தில் தொழிற்படுகின்ற பாரமில்லாத உள்ளுடலுக்கே" என்று முன்னரேயே கூறியிருக்கிறோமல்லவா? அந்த உடலையே "ஆவி உடல்," "நுண்ணுடல்," "புகழுடல்" என்று தமிழிலும், சூக்கும சரீரம், யாதனா சரீரம், பிராணமய கோசம் என்று வடமொழியிலும், கோஸ்ட் (Ghcst), ஸ்பிரிட் (Spirit), ஆஸ்ட்ரல் பாடி (Astral Body), எதிரியல் பாடி (Etherial Body) என்று ஆங்கிலத்திலும் கூறுவர். அந்த உடல் எந்த அணுக்குண்டாலும், ஐம்பூதங்களாலும், எந்தக் கூரிய கருவியினாலும் அழிக்க முடியாதது. அதற்கு இரவு பகல் கிடையாது. உணவு வேண்டியதில்லை. அந்த ஆவி உடல் நான்கு பேர் தூக்கவேண்டிய கட்டை போன்ற உடலிலிருந்து விடுதலை பெற்று, அவரவர் செய்த புண்ணிய பாவங்களுக்கேற்ப அருளுலகிலும், இருள் உலகிலும் தொடர்ந்து வாழ வேண்டியதாகக் கடவுள் அமைத்திருக்கிறார். அதனாலேயே,

" அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை பொருளில்லார்க்கு இவ்வுலக மில்லாகி யாங்கு,"

" அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள்சேர்ந்த இன்னா உலகம் புகல் "

என்று திருவள்ளுவர் அருளியிருக்கிறார். இக் குறள்களில் நம்பிக்கையில்லாதவர்கள் இறந்த வர்களோடு நேரில் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம். அந்த ஆவி உடல் அங்கு அழிக் கப்பெற்று அதிலுள்ள உயிரின் தன்மைகளுக் கேற்பப் பிறவி எடுக்கவோ, பிறவியற்ற மேல் நிலை எய்தவோ செய்யும் காலம் வரை இறந்த உற்றார், உறவினரோடு பேசி, அவர்களுடைய புத்திமதிகளையும் அங்குள்ள உண்மையான நிலை களையும் புரிந்து, திருந்தி நடந்துகொள்ளலாம். நாம் வெளியிட்டிருக்கிற ' இறந்தவர்கள் வாழும் நிலையும் பேசும் முறையும் ' என்ற நூலில் இதற்கு ஆதாரமாக நம் சொந்த 21 அநுபவங் களையும், மேல்நாட்டு மேற்கோள்களையும், மகா பாரதம், இராமாயணம், பெரிய புராணம், திரு விளையாடற் புராணம், சிலப்பதிகாரம், திருக் குறள், திருமந்திரம், சித்தாந்த சாஸ்திரம், பைபிள், திருக்குரான் முதலியவற்றிலுள்ள சான்றுகளையும் யாரும் மறுக்கமுடியாத முறை யில் கொடுத்திருக்கிறோம்.

நம்முடன் இப்பூவுலகத்தில் வாழ்ந்து வந்து இறந்துபோன மனிதர்களுக்கே நாம் பேசுவதை யும், நினைப்பதையும், செய்வதையும் அறியக் கூடுமானால் அவர்களுக்கு அந்த ஆற்றலைக் கொடுத்த ஆண்டவனுக்கு நாம் மனத்தினாலும் வாக்காலும் செய்கின்ற பிரார்த்தனைகளைக் கேட்க வும் அதற்கு வேண்டிய உபகாரங்களைச் செய்ய வும் முடியும் என்பதில் பகுத்தறிவு படைத்த எந்த மனிதர்க்கும் எள்ளளவும் சந்தேகம் இருக்க முடியாது. தமிழகத்தில் பிறந்திருக்கிற பெரும்பான்மையோருக்கு நம்மை ஆண்டு வரு கிற அதி தெய்வங்களின் பெயர்களையே கடவுள் இட்டிருக்கிறார். மேலை நாடுகளில் ஒயிட் (White), பிரவுன் (Brown), பிளாக் (Black), ஸ்டோன் (Stone) என்ற பெயர்கள்கூட இருக் கின்றன. முருகனை வழிபட்டால் முருகன் பெயர் தாங்கினவர்களைக் கொண்டும், விநாயகரை வழி பட்டால் அவரது பெயர் தாங்கியவர்களைக் கொண்டும் அந்த அந்தத் தெய்வம் உதவிசெய்து வருகிறது என்பதே யாவரும் அநுபவத்தில் உணர்ந்து ஆனந்திக்க வேண்டிய அரிய பெரிய மறுக்க முடியாத உண்மையாகும். தனி மனி தன் கொடுக்கிற மனுவைவிட, பொது மக்கள் கொடுக்கிற மகஜருக்கு விசேஷ மதிப்பை அர சாங்கம் கொடுத்து வருவதுபோல, தனி வழி பாட்டைவிடக் கூட்டு வழிபாட்டிற்கு ஆண்டவன் விசேஷமாகவும், விரைவாகவும் அருள் புரிகிறவ ராக இருக்கிறார். ஆனதால் பகுத்தறிவுடைய மக்கள் யாவரும் வீடுகளிலும், ஆலயங்களி லும் தனி வழிபாடும், கூட்டு வழிபாடும் செய்து நல்வாழ்வு வாழ்வதற்குப் பாத்திரர்களாவார் களாக.

# திருமந்திரம்—சில பாட பேதங்கள்

[காஞ்சிபுரம் தொண்டைமண்டலாதீன குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்]

திருமந்திரம் தமிழில் உள்ளதொரு சிவாகமம். இதனைப் போன்றதொரு சைவாகமச் சிறப்பு நூல் வேறு, தமிழில் இல்லை. திருமுறை பன்னிரண்டனுள் இது சாத்திர நூலாகும். ஏனைய திருமுறைகளின் ஞானப் பொருளை யுணரத் திருமந்திரப் பொருளுணர்வே அடிப் படைத் தேவை. அத்தகு மாட்சியுற்ற திருமந் திரம் சுத்தப் பதிப்பாக அமையாமை வருந்தத் தக்கது. எத்துணையோ பதிப்பு வெளிவந்தும் திருமந்திரம் பக்கந்தோறும் பலபல பிழைபட்ட பாடங்களைக் கொண்டிருக்கின்றது.

தொடக்கத்திலேயே ' ஒன்றவன்றானே ' என் றிருந்தது 'தானே' எனப் பிழைத்தது. தாள் சிவாநுபூதி ; ' திருவடியாகிய சிவாநுபூதி ' எனச் சிவஞான மாபாடியத்துள் ஈரிடத்தில் உளது. "ஒன்று அவன்தானே" எனல் வாக்கியப் பிழையுமாகும்; "ஒருவன் அவன்தானே" எனல் வேண்டும். "அவன்தான் ஒன்று" எனலும் பிழையே. அவன் தாள் ஒன்று என்பதே பொருந்துவது. நமச்சிவாய வாஅழ்க, நாதன் தாள் வாழ்க என்புழிக்கொள்ளும் பொருளை இங் கும் கொள்ளற்பாலது.

'ஐந்தும் வென்றனன்' என்றிருந்தது. இப் போதுள்ள பதிப்புக்களில் உம்மையில்லை. சமாசப் பதிப்பில் (1933) இப்பாடங்களைக் கீழ்க் குறிப்பிற் காணலாம் :

" ஞானிக்குக் காயம் சிவமே தனுவாகும்
ஞானிக்குக் காயம் உடம்பே யதுவாகும் " (2135)

என்றிருக்கின்றது. இது தவறு. திருவாவடுதுறை வெளியீடு (சிவயோகப் பகுதி) ஒன்றில் இத் திருமந்திரத்தின் விளக்கவுரை உளது. அதனால் இதன் உண்மைப் பாடம் உணரப்படும்.

" ஞானிக்குக் காயம் சிவமே அஞ்ஞானிக்கு
ஊனிற்கும் காயம் உடம்பேயாம் யோகிக்கு
மேனிற்கும் காயமே விந்துவும் நாதமும்
மோனிக்குக் காயமுப் பாழ்கெட்ட முத்தியே "

என்ற பாடமும் அடிக்குறிப்பால் அறியப்படுகின்றது.

இதன் பொருள் : ஞானி, அஞ்ஞானி, யோகி, மோனி என்னும் நாற்றிறத்தோருள், ஞானிக்குச் சிவமே உடல். அஞ்ஞானிக்கு ஊனுடம்பே உடல். யோகிக்கு விந்து நாதமே உடம்பு. மோனிக்கு முப்பாழுக்கும் அப்பாலாய நிலையே உடல் என்பதாம். இதனைக் கிரியா பூஜை, யோக பூஜை, ஞான பூஜை செய்து அநுபவம் உள்ளவரே அறியவல்லார். பிறர் உணர்தல் அரிதினும் அரிது.

" இலயாம் இடையில் எழுகின்ற காம
முலையாய நேசத்து மூழ்கும் உளத்துத்
தலையாய மின்னுடல் " (2141)

என்றதில் 'முலையாய நேசத்து' என்னும் உண்மைப் பாடம் அடிக்குறிப்பிலும், 'முலைவாய நெஞ்சத்து' என்னும் பிழைப் பாடம் நூலிலும் இருப்பது, பொருளுணர்ச்சியுள்ளோர்க்கு மருள் விளைப்பதே. (2143) 'முப்பதோடாறும்' எனத் தொடங்கும் திருமந்திரம் திருந்திய பாடம் இதுவே என்று அடிக்குறிப்பு உணர்த்துகின்றது. எல்லாப் பதிப்பிலும் அது பிழைபட்டிருக்கின்றது.

" ஆதி பரசிவம் சத்தி சதாசிவம்
ஏதமில் ஈசன்நல் வித்தியாதி தத்துவம்
போதம் கலைகாலம் நியதி நுகர்மாயை
நீதி அராகம் நிலைநிறுத் தினனே " (2190)

என்பது திருமந்திரம். இதன் பிழை நிலையை எல்லாப் பதிப்புள்ளும் பார்க்கலாம். இதனை அடுத்த திருமந்திரத்திலும் இரண்டாவதடியில், " ஈசன் நல்வித்தை " என்றிருந்தது, "ஈசனனல் வித்தை " என்று உள்ளது. சுத்த வித்யா தத்துவமும் அதன் முந்திய மகேசுர தத்துவமும் இடையில் அனலைக் கொண்டிருப்பது தத்துவக் கிரமத்திற்குப் பொருந்தாது. அதன் முடிவிலும், " ஆமாம் ஈராறே " என்றுதல், " ஆமாம் ஆறுறே " என்றுதல் இருத்தல் வேண்டும். சிவ தத்துவம் ஐந்தும், வித்தியா தத்துவம் ஏழும் ஆகப் பன்னிரண்டனையும் குறித்தலின் " ஈராறு ஆம், புருடாதி " என்பதை ஆன்ம தத்துவம் இருபத்துநான்கும் உணர்த்தியதாகக் கொள்ளின் ஆறுறு என்று குறித்ததாம்.

அடுத்த திருமந்திரத்திலும் காணும் முனை அத்தவிடும் என்றிருத்தல் வேண்டும். அதன் அடிக்குறிப்பில் உள்ள பாடபேதம் அதனைக் காட்டுகின்றது.

இன்னோரன்ன பல பல பிழைகளைத் திருமந்திர வெளியீடுகள் உடையன. அவற்றைத் திருத்திப் பொழிப்புரையேனும் எழுதுவித்து வெளியிடல் சைவத்திற்குப் பெருந்தொண்டு செய்ததாகும்.

" அந்தமோ ராறும் அறிவார் அதிசுத்தர்
அந்தமோ ராறும் அறிவார் அமலத்தர் "

என்ற ஈரடிக்கும் பொருள் ஒன்றே. இப்படித் திருமூலர் அருள்வாரோ? 'அந்தமோ ராறும் அறியார் சமலத்தர்' என்று இரண்டாவதடி இருந்தது என்று அடிக்குறிப்பால் ஊகிக்கப் படுகிறது.

" திருந்துநற் சிய்யென் றுதறிய கையும்
அருந்தவர் வாஎன் றணைத்த மலர்க்கையும்
பொருந்திய அமைப்பில் யவ்வென்ற பொற்கையும்
திருந்தநத் தீயாம் திருநிலை மவ்வே "

என்ற திருமந்திரத்தையும் (2797), உண்மை விளக்கத்தில் உள்ள,

" சேர்க்குத் துடிசிகரம் சிற்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம்—பார்க்கில் இறைக்
கங்கி நகரம் அடிக்கீழ் முயலகனுர்
தங்கும் மகரமது தான்."

என்ற திருவெண்பாவையும் ஒருங்கு வைத்துணர்தல் வேண்டும்.

### திருமந்திரம்

1. சி —சிய் யென்றுதறிய கை
2. வா—வா என்றணைத்தை மலர்க்கை
3. ய —அமைப்பில் யவ் வென்ற பொற்கை
4. ந —நத்தீயாம்
5. ம —திருநிலை மவ்வே

### உண்மை நெறி விளக்கம்

1. சி —துடிசிகரம்
2. வா—சிற்கன வா வீசுகரம்
3. ய —யகரம் அபயகரம்
4. ந —அங்கி நகரம்
5. ம —அடிக்கீழ் முயலகனுர் மகரம்

உண்மை விளக்கத்திலே " தோற்றம் துடிய தனில் தோயுந் திதி அமைப்பில் " என்றது கொண்டும், திருமந்திரத்தில் 2798, 2799 ஆக

உள்ள திருப்பாடலில் அமைப்பும் அமைத்தல் அமைப்பில் என்றவற்றைக் கொண்டும் அமைப்பில் என்றுணரலாம். என்ன காரணத்தாலோ இமைப்பில் என்று பதிப்பித்திருக்கின்றது.

"மருவுந் துடியுடன் மன்னிய வீச்சும்
அருவிய அமைப்பும் அனலுடன் கையும்
கருவின் மிதித்த கமல பதமும்
உருவில் சிவாய நமஎன வோதே." (2798)

இத் திருமந்திரமும் முன்னைய உண்மை விளக்கத் திருவெண்பாவும் ஒரு பொருளன. இத்திருமந்திரத்தில் 'அமைப்பு' என்பது அப்பு என்றும் அடுத்த திருமந்திரத்தில் அணைப்பு என்றும் பிழை பட்டது. அடுத்த திருமந்திரத்தில் "அமைத்தல் திதியாம்" என்றதே சான்றாகும். 'இமைப்பு' எவ்வாற்றானும் பிழைப்பாடமே. சைவர்கள் இத் திருமந்திர நிலையை உணர்ந்து திருந்திய பதிப்பு வெளிவரச் செய்ய முயலுதல் பெருந் திருத் தொண்டாகும்.

# தமிழ்த் தெய்வம்

[தவத்திரு சாந்தலிங்க இராமசாமியடிகளார், பேரூராதீனம், பேரூர்.]

தமிழ்மக்களுக்குக் கிடைத்துள்ள இலக்கியங்கள் பல. அவற்றுள் திருத்தொண்டர் புராணம், தமிழ்மொழி, தமிழ்ப்பண்பு ஆகியவற்றைச் சிவநெறியோடு சேர்த்துக் கூறுவது. அதில் தமிழ் கூறும் நல்லுலகத்து அருளார்ந்த வாழ்வு கொண்ட சான்றோர்கள் உண்மை வரலாறுகளை அழகுபடச் சேக்கிழார் பெருமான் அருளியுள்ளார்.

உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற வேறுபாடு சமய நெறியில் இல்லை என்பது தோன்ற நிற்பது இந்நூல். ஆண்டான், அடிமை; செல்வன், ஏழை; அரசன், குடிமகன்; ஆண், பெண்; முதியோர், இளையோர் என்ற பாகுபாடுகளும் திருவருள் பெறுவதற்குத் தடையாகா என்பதை வற்புறுத்தும் காப்பியம் திருத்தொண்டர் புராணம்.

அயல்நெறிகளும், மொழிகளும் தமிழகத்தில் மேலாதிக்கம் செலுத்த முயன்றன. அந்நிலையில், நம் மரபைக் காத்து வளர்த்தவர் சேக்கிழார் பெருமான். தமிழ் இனியது, கனிவுடையது, செம்மொழி. இதனை இறைவன் விரும்பி ஏற்கிறான். ஏன்? தமிழ் வடிவமாகவே விளங்குகிறான் என்பர் நம் திருமுறையாசிரியர்கள்.

சுந்தரர், மன்னவர் திருவும் வைதிகத்திருவும் பொங்க, ஆதி சைவ மரபில் தோன்றித் திகழ்ந்த அருளாளர். அவரைத் தடுத்தாட்கொள்கிறான் இறைவன். அடியவராக மாறிய சுந்தரரை நோக்கி, எண்ணும் எழுத்துமாகிய எம்பெருமான், "அருச்சனை பாட்டேயாகும்; ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுகென்றான்" என்பதைக் கூறும் திறத்தால், தமிழ் வழிபாட்டு மொழி, இறைவன் உகந்த மொழி என்பதை வலியுறுத்தியுள்ளார்.

சுந்தரராகிய நம்பியாரூரர், தித்திக்கும் செந்தமிழால் பாடினார். பொன்னும் மெய்ப்பொருளும் பெற்றார். ஏழிசையிலும் இறைவனைக் கண்டார். தாம் தமிழால் வழிபாடாற்றி அடைந்த நற்பயனையுணர்வது போலவே, முன்னோர்க்கும் உரியதென்ற முறையை விளக்குகிறார், சுந்தரர். திருவீழிமிழலையில் பஞ்சம் தோன்றியது. மக்கள் தவித்தனர். அப்பொழுது அங்கிருந்த திருஞானசம்பந்தருக்கும், திருநாவுக்கரசருக்கும் நீலமணி மிடற்றண்ணல் பொற்காசுகள் நல்கினார். அவற்றைப் பெற்றுப் பறைசாற்றிச் சோறிட்டனர்; அடியவர்கள் துயர் நீங்கினர் என்பதை,

"அல்லார் கண்டத் தண்டர்பிரா
னருளாற் பெற்ற படிக்காசு
பல்லா றியன்ற வளம்பெருகப்
பரம னடியா ரானார்க
ளெல்லா மெய்தி யுண்கவென
விரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச்
சொல்லாற் சாற்றிச் சோறிட்டார்
துயர்கூர் வறுமை தொலைத்திட்டார்"

என்னும் திருத்தொண்டர் புராணப் பாடலால் அறிகின்றோம். இறைவன் ஒரு நாளிலேயே பொற்குவியல் நல்கியிருக்கலாம். ஆனால் ஒவ்வொரு நாளும் பொற்காசுகள் நல்கியது ஏன் என்பதைச் சுந்தரர் குறிப்பிடுகிறார். தமிழ்ப் பாடல்களைக் கேட்கும் விருப்பம் பெரிதாக இருந்தது; அதனால் அவ்வாறு நல்கினான் இறைவன் என்பதைத் 'தமிழ் கேட்கும் இச்சையால் காசு நித்தம் நல்கினீர்' எனப் பாடுகின்றார். தமிழ் மந்திர மொழி, கொடிய நஞ்சையுடைய பாம்பையும் அடங்கச் செய்யும் என்பதைச் சுந்தரர் தம் திருவாக்கால், 'சிவபெருமான்

பாம்புகளை அணிகலனாகக் கொண்டுள்ளார். அவை அடங்கியுள்ளன. இதற்குக் காரணம் பெருமான் தமிழினை உணர்ந்தவர். தமிழில் வல்லவர். அதனால்தான் நஞ்சுடைய பாம்பினையும் அடங்கியிருக்குமாறு செய்துள்ளார்' என்பதனை, "செந்தமிழ்த் திறம் வல்லிரோ செங்கண் அரவம் முன் கையில் ஆடவே" என அருளியுள்ளார். எனவே, திருநெறிய தமிழின் சிறப்பு எத்தகையது என்பதைத் திருமுறைகளால் உணர முடிகின்றது.

சுந்தரர் பல தலங்களை வழிபட்டு மீகொங்கின் திருத்தலமாகிய திருப்புக்கொளியூர் வருகின்றார். காலை நேரம். வருகின்ற திருவீதியில் ஒரு வீட்டில் அழுகை ஒலியும், மற்றொரு வீட்டில் மங்கல ஒலியும் கேட்கின்றன. சுந்தரர் இது என்ன என்று வினவுகின்றார். நீராடச் சென்ற பிள்ளையை முதலை விழுங்கியது. அப்பிள்ளையுடன் சென்ற மற்றொரு பிள்ளையின் மங்கல விழா இன்று நடைபெறுகின்றது. பிள்ளையை இழந்த பெற்றோர்கள் வருந்துகின்றனர் என்றனர் அன்பர்கள். தம்பிரான் தோழராகிய சுந்தரர் குளக் கரைக்குச் சென்று அவிநாசியப்பரை நோக்கி வேண்டுகின்றார்; இல்லை, ஆணையிடுகின்றார். அப்பாடல்,

"உரைப்பார் உரையுகந்து உள்க வல்லார் தங்கள்உச்சி
அரைக்காடரவா ஆதியும் அந்தமும் ஆயினாய் [யாய்
புரைக்காடு சோலைப்புக் கொளியூ ரவிநாசியே
கரைக்கால் முதலையைப் பிள்ளைதரச் சொல்லு
[காலனையே"

என்பது. இப்பாடல் பொருளாழம் உடைய செந்தமிழ்க் கருவூலம். இப்பாடலால் தமிழ் தெய்வமாகின்றது. தெய்வம் நினைத்ததை நினைத்தாங்கு செய்யும் ஆற்றலுடையது; மாற்றாருக்கும், மாட்டாருக்கும் அருளுவது. அதுபோலத் தமிழும் அருள் புரிந்தது. சுந்தரரும் உடன் வழிபடுவோரும் திருக்கோயில் வழிபாட்டாளர்களும் இன்புறக் காரணம், முதலைவாய்ப் பிள்ளையை அழைத்ததாகும். அவ்வாறு அழைத்தது தமிழ்ப்பாடல். இது வியத்தகும் ஆற்றல். ஏனெனில், கல்லைத் தெப்பமாக வர அப்பரடிகள் பாடினார். எலும்பு பெண்ணாக வரத் திருஞானசம்பந்தர் பாடினார். இவை பருப்பொருளாகிய கல்லையும், எலும்பையும் கொண்டு செய்த அருட் செயல்கள். ஆனால் சுந்தரர் முதலைவாய்ப் பிள்ளையை அழைத்தது அருவாய ஒன்றை வெளிப் படுத்தியது. ஆதலின் செயற்கரும் செயல்களுள் மேலானதென்பதனைப்

"போதமுண்ட பிள்ளை என்பு
பொருகண்மாது செய்ததோ
காதல்கொண்டு சொல்லின் மன்னர்
கன்மிதப்ப உய்த்ததோ
வாய்திறந்து முதலை கக்க
மகனைநீ யழைத்ததோ
யாதுநம்பி அரிது நன்றெனக்
கியம்ப வேண்டுமே"

என்கிறார், நால்வர் நான்மணிமாலையில் சிவப் பிரகாசர். எனவே, தமிழ் இங்குத் தெய்வ நிலையை வெளிப்படுத்துகின்றது. இச்செய்திகளை உள்ளடக்கித் திருவாமாத்தூர்த் தவத்திரு தண்டபாணி சுவாமிகள் தமிழலங்காரத்தில்,

"மந்தரக் கொங்கைப் பரவைதன் கேள்வனும் மற்றைய
வந்தனக் காரரும் இன்புறு மாறு மறைபயிலும் [ராம்
அந்தணச் சேயை அவிநாசி யூரில் அழைத்தது
எண்ணில்
சந்தனக் குன்றின் தலைமேற் பிறந்த தமிழ்த்தெய்வமே"

என அருளியுள்ளார்.

ஆதலின், திருவருள் நெறி போற்றி, மூவர் தமிழால் முதல்வனை வழிபடுவது நமது தலையாய கடமையாகும்.



# மருத மாணிக்கத் தீங்கனி

[ஜூனியர் வித்துவான் ஸ்ரீமத் முத்துக் குமாரசாமித் தம்பிரான்,
திருப்பனந்தாள், காசி மடம்]

வாழைப்பழம் என்றால் அழுத பிள்ளையும் வாய்மூடும் என்பது பழமொழி. கனிகளை விரும்பாதவர் எவரும் உலகில் இல்லை. குழந்தைகள்முதல் கிழவர்கள் வரை யாவருக்கும் ஏற்றது கனி.

கனிகளில்தான் எத்தனை வகை! மாங்கனி, பலாக்கனி, வாழைக்கனி, மாதுளங்கனி, திராட்சைக் கனி, ஆரஞ்சுக் கனி இன்னும் எத்தனை எத்தனையோ இருக்கின்றன. ஒவ்வொரு கனியும் ஒவ்வொரு வகையான சுவை! ஒவ்வொரு வகையான தோற்றம்! ஒவ்வொரு வகையான குணம்! எல்லாக் கனிகளும் ஒரே காலத்தில் கிடைக்க மாட்டா. ஒவ்வொரு பருவத்தில் ஒவ்வொரு வகையான கனிகள் கிடைக்கும். இப்படிப்பட்ட கனிகளைக் கிடைத்த காலத்திலிருந்து கிடைக்காத காலத்துக்குப் பாதுகாத்து வைக்க முடியாது. ஏதோ ஓரிரு நாள் அல்லது ஒரு வாரம் வரை பாதுகாத்து வைக்க முடியும். இன்னொரு விஷயமும் இருக்கிறது. கனிகளை எல்லாரும் விரும்பினாலும் எல்லாக் கனிகளையும் எல்லாரும் விரும்புகிறதில்லை. ஒரு கனியை மிக விருப்பமாக உண்ணுகிறவர் மற்றொரு வகைக் கனியை விரும்பாமல் வெறுப்பதும் உண்டு.

ஆகவேதான் அப்பர் சுவாமிகள் அக்கனிகளை விட இனியதை நாடித் தேடினார்; தேடிக் கிட்டினார்; அதனை நமக்கும் அறிவிக்கின்றார். அவர் கூறுவதாவது:

"கனியி னும்கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழல் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளும் அரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே."

திருவிடைமருதூரில் உள்ள இறைவன் கனியினும் இனியன் என்று கண்ட நாவுக்கரசர் நமக்கு அதனை அறிவுறுத்தினார். அதே இறைவனைப் பட்டினத்தடிகள் ஓர் அற்புதம் வாய்ந்த மாணிக்கத் தீங்கனியாக நமக்கு அறிமுகப்படுத்துகின்றார்.

அந்த மாணிக்கத் தீங்கனியை எப்படிப் பெறுவது? முயன்றால் பெறலாம். உழைத்தால் அடையலாம். உழைப்பினால் வாராத உறுதிகளும் உளவோ என்று கேட்கிறார் பட்டினத்தடிகள்.


பட்டினத்தடிகளை ஒத்த உயர்ந்த அடியார்கள் அந்தத் தீங்கனியைப் பெறவேண்டும் என்று விரும்பினார்கள். அதற்காக உழைப்பை மேற்கொண்டார்கள்.

நெஞ்சமாகிய புனத்தை நெருங்கி வஞ்சமாகிய மரக்கட்டைகளை வேரோடு அகழ்ந்து எடுத்தார்கள். குண்டு குழிகளை எல்லாம் தூர்த்தார்கள். உழுது நிலத்தைத் திருத்தினார்கள். அன்பு என்னும் பாத்திகளைக் கோலினார்கள். மெய் என்கின்ற எருவிட்டார்கள். முளை தோன்றுமோ தோன்றாதோ என்ற ஐயத்திற்கே இடமில்லாத பத்தியாகிய ஒப்பற்ற விதையை ஊன்றினார்கள். நாடோறும் ஆர்வம் என்கிற தெளிந்த நீரைப் பாய்ச்சினார்கள்.

இவ்வாறெல்லாம் உழைத்து வருங்கால், அவ்விடத்தே ஐம்புலமாகிய பட்டி மாடுகள் விரைந்தோடி வந்தன. அடியார்கள் அவற்றின் நேர் நின்று தடுக்கவும் அடங்காமல் அப்பட்டி மாடுகள் இடுக்கண் செய்யத் தொடங்கின. ஆகவே அடியார்கள் அவற்றிற்கு அஞ்சிப் புலத்துக்கு உள்ளே சென்று, அம்மாடுகள் வராதபடி சாந்தம் என்னும் வேலியைக் கோலினார்கள்.

இத்தகையதான பாதுகாவல் வாய்த்தபடியால் நெஞ்சப்புலத்தில் ஊன்றிய பத்தியாகிய வித்திலிருந்து ஞானமாகிய பெரிய முளை ஒன்று அழிவின்றி முளைத்தெழுந்தது. சின்னாட்களின் பின் கருணையாகிய இளந்தளிர்கள் தோன்றின. அக்காலத்து அப்பயிரின் சூழலில் காமம், குரோதம் முதலிய களைகள் முளைத்தெழுந்தன. அதுகண்ட அடியார்கள் அக்களைகளை அறவே களைந்தெறிந்து பயிருக்குப் பாதுகாவலைச் செய்தனர்.

அயராது செய்த நெடிய உழைப்பு வீண் போகவில்லை. உழைப்பின் பயன் வெளிப்பட ஆரம்பித்தது. பயிர் செம்மையுற ஓங்கியது. மெய்ம் மயிர்ப்புளகம் தோன்றிக் கண்ணீர் அரும்பி, கள்ளாகிய தேன் ஒழுகிக் கடிமலர் பூத்தது. பின்னர்ப் புண்ணியமயமான திருவைந்தெழுத்து என்று சொல்லப்படுகின்ற இளங்காய் ஒன்று தோன்றியது.




1 ஏதேனும் ஆகாள் கிடந்தாள்
என்னே, என்னே!




எப்போது இப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ! 2

அந்த இளங்காய் நாளாக நாளாக முதிர்ந்தது. காளகண்டமும், மூன்று கண்ணும் நான்கு தோளும், சுடர் விடும் ஐந்து முகமும் பவளம் போன்ற நிறமும் உடையதாய் வெண்ணிறமான நீறு பூசி, அறுவகைப்பட்ட சுவைக்கும் அப்பாற் பட்ட மேலானதொரு சுவை உடையதாகிய தீங்கனியாக விளைந்தது. அந்தக் கனியை உண்டால்தான் சுவைக்கும் என்பதில்லை. அதனைக் கண்டாலும், கேட்டாலும், கருதினாலுங் கூடக் களிப்பு எழும். அந்தக் கனி திருவிடை மருதூரில் திகழும் மாணிக்க நிறமான தீங்கனி யாகும்.

அத்தகைய கனி பையப் பையப் பழுத்தது. அடியார்களின் உழைப்பின் பயனாகக் கைவரப் பெற்றது. அடியார்கள் அக்கனியை இனிமையுற உண்டார்கள். செம்மாந்து இருந்தார்கள்.

ஆகவே, நாமும் அவர்களைப் போலவே அயராமல் உழைத்தால், முறையே பயிரிட்டால் அந்த மருத மாணிக்கத் தீங்கனியைப் பெறலாம்; உண்டு செம்மாந்திருக்கலாம்.

# சமய உணர்வு

[திரு இர. சதாசிவம், தமிழ்நாடு உயர் நீதிமன்ற நீதிபதி]

ஒரு மனிதனின் சமயம் என்பது அவனைப் பொறுத்து அமையும் அடிப்படைப் பண்பாகும். அவன் சமயம் என்று எதைக் கூறுகிறானோ, எதைப் பாவிக்கின்றானோ, அதுவன்று அவனது சமயம். அறிவுக்கு அப்பாற்பட்ட இப் பிரபஞ்சத்திற்கும் அவனுக்கும் உற்ற உறவு பற்றியும் அது குறித்த தன் கடமை, குறிக்கோள்—இவைபற்றியும் அவன் உள்ளத்தின் ஆழத்தில் எதை நம்புகிறானோ அதுவே அவனது சமயம் ஆகின்றது.

ஆறறிவு படைத்த மனிதன் ஆண்டவனைத் தேடி நாடுவதே சமயம் என்பது. இறைவனை நோக்கி ஏங்கும் உள்ளப் பண்பு, ஏங்கி நிற்கும் உள்ளத்திற்கு இறைவன் காட்டும் பாலிப்பு— இவையே எல்லாச் சமயங்களின் சாரமாகும். ஆண்டவனை அடையவேண்டும் என்ற தாபம், மக்களின் மனத்திலே அகலாத வகையில் அமைந்ததொரு குணமாகும். போர், வெள்ளம் போன்ற பெரிய துன்பங்கள் நேரும்பொழுது தான் இறைவன்மீதுள்ள நாட்டம் அதிகமாகிறது. "செல்வம் மிகச் சேர்ந்தால் மனிதன் சீரழிந்து போகிறான்" என்று கவிஞர் கோல்ட்ஸ்மித் கூறுவது இந்த உண்மையைத் தான்.

நாட்டிலே அமைதி நிலவும் காலத்தில், இடர்ப்பாடு ஏதுமின்றிப் பொதுவாழ்வு நடக்கும் காலத்தில், மக்களுக்குப் பெரிய கவலை இல்லாது சோம்பியுள்ள காலத்தில் நாத்திகம் பரவுகிறது என்று பேரறிஞர் ஒருவர் கூறியுள்ளார். நாத்திகம் பரவிய பின் நாட்டின் குலைவு தோன்றுகிறது. இன்னல்களும், இடர்ப்பாடுகளும் நிறைந்த காலத்திலேதான் தந்நல மறுப்பும் தியாகமும் மக்களிடையே தோன்றுகின்றன. இக்காலத்தில்தான் ஐம்புல இன்பத்திற்கு அப்பாற்பட்டு உயர்ந்தது ஒன்று உண்டென்ற உணர்வைப் பெறுகிறான் மனிதன்; சுகபோகங்களைத் துறக்கின்றான்; விலங்கினத்தினின்றும் தான் வேறுபட்டவன் என்பதை உணர்ந்து உயருகின்றான். எனவே தான், மனிதனின் இறைநாட்டமும் இறையின் கருணையும் எல்லாச் சமயங்களின் அடிப்படையாக அமைகின்றன.

மனிதனின் முழு வாழ்வையும் அளாவி நிற்பதே உண்மையான சமய நெறியாகும். சமய உணர்வும், சமயக் கொள்கைகளும், சமயச் செயல்களும் ஒரு நாட்டு மக்களிடம் காணப்பட்டால்தான், அந்நாட்டைச் சமய உணர்வுள்ள நாடு என்று நாம் கூறமுடியும். புலனடக்கம், பகட்டு இன்பத்தை விழையாமை போன்ற ஒழுக்க நெறியை மனிதகுலத்தின் மாண்புமிக்க சமயத் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர். ஒருவன் உடலுக்கு அடிமையாகிவிடக் கூடாது, மனத்தையும் ஆன்மாவையும் உடல் அடக்கிவிடல் கூடாது என்பதையும் போதித்துள்ளனர். முற்காலத்தில் ஒரு நாட்டின் வாழ்வு சமய நெறியால் வளர்க்கப் பட்டது. கோட்பாடுகளை மட்டுமன்றி அன்றாட நடத்தைக்குரிய நெறிமுறைகளையும் ஒவ்வொரு மதமும் போதித்தது. மனிதனுடைய அன்றாட வாழ்வும் சமயமும் ஒன்றி நின்றன. இந்துக்கள் போற்றும் மநுதர்ம நெறியும், மோஸஸ் எழுதிய பழைய விதிமுறைகளும் இதைப் புலப்படுத்தின. ஒழுக்க விதிகளுக்கும் மற்ற வாழ்க்கை விதிகளுக்கும் அன்று வேறுபாடு இல்லை.

சென்ற நூற்றாண்டில் விஞ்ஞான அறிவு முன்னேற்றம் அடைந்தது. அந்த விஞ்ஞானம் புலன்வழி இன்பத்திற்கு வழி செய்தது. ஒவ்வொரு மதத்திலுமுள்ள அறிவியல் கருத்துக்களை மனிதன் தனது விஞ்ஞான அறிவு கொண்டு ஆய்ந்தான். எனவே, நம்பிக்கையின் அடிப்படையில் மதம் வளருவதற்கு வழியில்லை. பேராசிரியர் ஹக்ஸ்லி (Prof. Huxley) போன்ற பெரிய விஞ்ஞானிகள் சமயத்தைச் சந்தேகக் கண்கொண்டு பார்த்தனர். அவர்கள் உலோகாயதவாதிகள் (Agnostics) என அழைக்கப்பட்டனர். ஆங்கிலத்தில் 'Agnostics' என்றால், ஞானமில்லாதவர்கள் என்று பொருள். குறிப்பிட்ட பொருள்பற்றி ஞானமில்லாதவர்கள் என்பது சரியான பொருளாகும். ஆனால் சமயத்தைப்பற்றிச் சந்தேகம் தெரிவிப்பவர்களை ஞானமில்லாதவர்கள் என்று கூறுவது பொருந்தாது. மனிதன் இரு வழிகளில் ஞானம் பெறுகின்றான் என்று பேராசிரியர் ஹக்ஸ்லி கூறுகிறார். புலனுக்குத் தெரியும் வெளித் தோற்றங்களிலிருந்து புலன்வழி அறிவு பெறுதல் ஒரு வகை. அத்தோற்றங்களைக் காரண காரியத்துடன் ஆய்ந்து முடிவு காணுதல் வேறொரு வகை. புலன்களால் கண்டு உணருதல், பகுத்தறிவால் ஓர்ந்து உணருதல் என்ற இரு வழிகளில் ஞானத்தை மனிதன் பெறுவதாக அவர் கூறியுள்ளார். புலன்களுக்கு அப்பாற்பட்டதை வெறும் அறிவால் மட்டும் தெரிதல் இயலாது. ஆன்மிக ஞானத்தை ஆன்மிக வழியிலேயே உணரவேண்டும். அறிவுக்கும் புலன்களுக்கும் அப்பாற்பட்டது ஆன்மிக ஞானம் என்றும், அது எங்கும் என்றும் உள்ளது என்றும் எல்லாச் சமயங்களும் ஒருமித்துக் கூறுகின்றன.

மனிதனின் மனச்சான்றிலே மாறாது பரவிநிற்கும் பண்பு சமய உணர்வுதான் என்பதை வரலாறும், ஞானிகளின் வாழ்க்கைகளும் நமக்குப் போதிக்கின்றன. மனச்சான்றின் அடிப்படையிலேயே நமது ஞானம் அமைகின்றது. மனச்சான்று வழி வரும் ஞானமே ஆழமாகவும் அமுத்தமாகவும் இருப்பதாகும். நம் புலன்கள் நம்மை ஏமாற்றிவிடலாம். ஆதவன் கிழக்கில் தோன்றி மேற்கில் மறைவதாக நம் புலன்களுக்குத் தோன்றுகிறது. ஆனால், உண்மையில் அஃது அவ்வாறு இல்லை; நாம் வாழும் பூமிதான் சுழலுகின்றது. பல புள்ளி விவரங்களைக் கொண்டே நாம் நம் முடிவுகளை எடுக்கிறோம். எனினும், அம்முடிவுகள் தவறுதலாகப் போவதும் உண்டு. ஆனால், உலகத்திலுள்ள பெரிய ஞானிகளின் வாழ்க்கையிலிருந்து நாம் அறிந்துகொள்வது, சமய உணர்வு உலகெங்கிலும் பரவியிருந்தது, இன்றும் இருக்கிறது என்பதுதான்.

நமது நாட்டின் தந்தையான காந்தியடிகளின் புனித உரை ஒன்று இசைத்தட்டில் பதிவாகியுள்ளது. எல்லாப் பொருள்களிலும் நிறைந்து நிற்கும் வர்ணிக்க முடியாத அற்புத ஆற்றல் ஒன்றை அவர் உணருவதாகவும், அவ்வாற்றலை அவர் கண்ணால் காண முடியாவிட்டாலும் அஃது உண்மையானது என்றும், அவ்வுரையிலே காந்தி அடிகள் கூறியுள்ளார். அவருடைய சமய மனச்சான்றுதான் இந்த உண்மையை அவருக்கு உணர்த்தியது. கண்ணுக்குப் புலனாகாத இந்த ஆற்றலை நாம் உணரலாம்; ஆனால் மெய்ப்பிக்க முடியாது. ஏனெனில், புலன்களுக்குத் தெரியும் மற்றப் பொருள்களினின்றும் இந்த ஆற்றல் மாறுபட்டது. அது புலன்களுக்கு அப்பாற்பட்டது. தம்மைச் சுற்றியுள்ள எல்லாப் பொருள்களும் மாறுகின்றன, மடிகின்றன என்பதைக் காந்தியடிகள் கண்டார். ஆனால், இந்த மாற்றங்களின் அடிப்படையிலே மாற்றமில்லாத ஓர் ஆற்றல், யாவற்றையும் படைத்து, அழித்து, மீண்டும் படைத்துக் காத்து நிற்கும் ஆற்றல், அமைந்திருப்பதை அவர் உணர்ந்தார். இந்த அறிவுணர்த்தும் ஆற்றலைக் கடவுள் என அவர் கூறினார்; அதை நன்மையின் வடிவாகக் கண்டார். மரணத்தின் மத்தியில் வாழ்வும், பொய்யின் நடுவில் மெய்யும், இருளின் இடையில் ஒளியும் தொடர்ந்து நிற்பதைக் காந்தியடிகள் கண்டார். எனவே, கடவுளை உயிராக, உண்மையாக, ஒளியாக அவர் கொண்டார். அன்பே கடவுள் என்று அவர் அறிந்தார்.

நம்பிக்கையை வைத்துத்தான் நாம் பெரும்பாலும் உண்மையை உணர முடியும். சமயத்தின்மீது ஆழ்ந்த நம்பிக்கை கொண்டோர்கள் உண்மையிலேயே புண்ணியம் செய்தவர்கள். மெய் உணர்த்தாத வெறும் கல்வி சமய நம்பிக்கைக்கும் ஞானத்திற்கும் தடையாகவே உள்ளது. அதனால்தான் ஞானி தாயுமானவர் 'கல்லாதவரே நல்லவர்கள், நல்லவர்கள்' என்று பாடியுள்ளார். "கல்வியால் எவரையும் வெல்லலாம், ஆனால் இன்பமான மேலுலகம் கிடைக்குமா?" என்று அவர் வினவுகிறார்.

இன்று நமக்கு வேண்டியதெல்லாம் நடைமுறைக்கு உகந்த சமயமாகும். அத்தகைய சமயத்தால் இந்த உலகு நல்லுலகு ஆகவேண்டும். இந்த எண்ணத்தைக் கொண்டுதான், "பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், உற்பத்திச்சாலைகளிலும் நான் கோவில்களையே காணுகின்றேன்"

என்று ஜவாஹர்லால் நேரு கூறினர். கோவில்களிலே கூட்டங்கள் குறையாது உள்ளன. ஆனாலும், கூரிய அறிவு படைத்த பலரும் மனித இனத்தின் நன்மைக்காக அரிய தியாகங்களைச் செய்துகொண்டிருக்கின்றனர். ஆன்மிக ஆற்றல் தங்களிடமுள்ளதாக அவர்கள் கூறுவதில்லை. அவர்கள் எடுத்த கடமையைத் திறம்படச் செய்வதே அவர்களது ஆன்மிகம் ஆகிறது. வழிபாடும், சடங்குகளும் ஓரளவுதான் அவர்களுக்குப் பயனுள்ளவாகின்றன. உழைக்கும் பேற்றினையே அவர்கள் வாழ்விலே பெரிதாகக் கருதுகின்றனர். அவர்களைக் கர்மயோகிகள் என்று நாம் கூறலாம். பள்ளிகளிலும், சேரிகளிலும், வைத்தியசாலைகளிலும், கைத்தொழிற்சாலைகளிலும் அவர்கள் அயராது உழைக்கின்றனர்.

லாங்பெல்லோ (Longfellow) என்ற ஆங்கிலக் கவியின் கவிதையோடு நான் இக் கட்டுரையை முடிக்கின்றேன் :

"உடலிலே ஒன்றுமின்றி உலகிற்கு வந்தோம் ;
உழைப்பும் உளைச்சலுமே வாழ்வில்ல கண்டோம் ;
உலகைவிட்டுச் செல்வதெங்கு என்பதை நாமறியோம்;
உயர்ந்த வாழ்வு இங்கெனில் உயர்ந்த வாழ்வு
அங்குண்டு என்பதை நாம் அறிவோம்."

# ஆலய வழிபாடு

[திரு டி. எம். நாராயணசாமி பிள்ளை, M.A., B.L., அவர்கள்]

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, தெய்விகத்தை அடிப்படையாகவும், வாழ்விற்கு உயிராகவும் கொண்ட நாகரிகத்தை நம் நாடு வளர்த்து வந்திருக்கிறது. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலே அமெரிக்காவில் உலக மத மகாநாடு நடந்தபோது, சுவாமி விவேகாநந்தர் அவர்கள் இந்தியாவின் சநாதன தர்மத்தைக் குறித்துக் கடவுள் அடிப்படையில் இந்திய நாகரிகம் எப்படி விளங்கிச் சிறந்தது என்பதை உலகத்தார் ஒப்பும்படிக்குக் கர்ச்சனை புரிந்தார். மாக்ஸ் மூல்லரைப் போன்ற அறிவாளிகள், உபநிஷத்துக்களைப்போல உபதேச வாக்கியங்கள் வேறு எந்த மொழியிலும் இல்லை என்று வியந்து கூறினர்கள்.

கடவுள் நெறி—வழிபடு முறை—கி. பி. ஏழாம் நூற்றாண்டிலே பல காரணங்களால் தென்னாட்டில் சற்றுக் குறைய ஆரம்பித்தது. மனிதப் பிறப்பின் பெருவாழ்வைப் பெறவைப்பதற்குக் கடவுட் கொள்கையை ஏற்று இறைவன் பாதத்தை அடைய வேண்டுவதில்லை என்ற கொள்கை நாட்டில் பரவ ஆரம்பிக்கவே, எல்லாவற்றையும் இயக்கும் இறைவன் தெய்வ தூதர்களை இந்த நாட்டில் அனுப்பினன். அவர்களால் கடவுள் நம்பிக்கையும் வழிபாடும் நிலை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அவர்களே திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் எனும் சமய ஆசாரியர்கள் நால்வர் ஆவார்கள். இவர்கள் நன்னெறியாகிய பக்தி நெறியை மக்கள் வாழ்வில் படியச் செய்தனர். ஆங்காங்குச் சென்று ஆலய வழிபாட்டினால் பக்தி நெறியை மக்களிடை நிலைநிறுத்தி வந்தனர்.

நம் நாட்டிற்குச் சிறப்பு தேவாலயங்களே. அவை மூலமாக இறைவனை உருவ வகையிலே எழுந்தருளச் செய்து பக்தி வழிபாட்டை உண்டு பண்ணி, பிறப்பின் பயனைப் பெறவேண்டுமென்று காட்டியிருக்கிறார்கள்.

"பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக் கேயிரை தேடி யலமந்து
காக்கைக் கேயிரை யாகிக் கழிவரே,"

"குறிகளும் அடையாளமுங் கோயிலும்
நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரண மோதிலும்
பொறியி லீர்மன மென்கொல் புகாததே"

என்பன அப்பர் வாக்குகள். இவை பக்தியை நிலைநிறுத்தி, கோயில் வழிபாட்டை வலியுறுத்துவன. சந்நியாசிகளுக்கும் ஆலய வழிபாடு அவசியம். இதனைத் திருமூலர் திருமந்திரம் தெரிவிக்கும். பால், பசுவின் உடல் முழுதும் பரந்திருப்பினும் அதன் மடி வழியே வெளிப்படுவதுபோல், இறைவன் எங்கும் இருப்பினும் ஆலயங்களிலே அமர்ந்து அருள் செய்கிறார் என்பது ஆகமத் துணிபு. திருக்குறளில்,

"கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"

என்று குறிப்பிட்டிருப்பது தலையால் வணங்க வேண்டும், கை கூப்பித் தொழவேண்டும், கால்

களால் வலம் வர வேண்டும் என்ற வழிபடும் முறையை விவரித்ததாகவே ஆகும்.

ஆகவே, பிற்காலப் பெரியோர்கள் ஆகம சாத்திர வழிபாட்டை அநுசரித்து இந்நாட்டின் தனிச் சிறப்பாக ஆலயங்களைத் தோற்றுவித்த னர். மக்கள் வாழ்விற்கு ஆலய வழிபாடு அவசியமாகின்றது. சமயநெறி, பக்தி வழிபாடு தேவை. கோவில்கள் அவசியம் வேண்டும்.

இத்தகைய கோவில்களில் திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமி கோவில் மிகச் சிறப்புப் பொருந்தியது. இத்தலம் வரகுண பாண்டிய னால் மிகவும் வளம் பெற்றது. பட்டினத்தார், பத்திரகிரியார் தங்கியமர்ந்தது. பிரம்மஹத்தி யைப் போக்கியது. ஆதி சங்கராசாரிய சுவாமிகளுக்கும் இவ்வூரில் வந்துதான் அத்வைத சித்தாந்தத்தைப் பரப்பத் துணிவு தரப்பெற்நது. சைவ சமயாசாரியர் நால்வரும் தோத்திரித் துள்ளனர். பதிகங்களும் உள்ளன. பதினோராந் திருமுறையில், பட்டினத்தார் பாடிய ‘திருவிடை மருதூர் மும்மணிக்கோவை’ இருக்கிறது. இது இலக்கியத்தில் சிறப்பாக அமைவதுடன் பக்தி நெறியிலும் பாராட்டக் கூடியது.

அநுபூதிமான்கள் இறைவனைச் சோதி, சுடர், விளக்கு என்றும், தாய், தந்தை, தோழன், நாயகன் என்றும் போற்றிப் பாராட்டினர். பட்டினத்தாரோ, இந்நூலில் ‘மருத மாணிக்கத் தீங்கனி’ என்று விதந்துள்ளார். இத்தொடர் என்னை மிகவும் கவர்ந்துள்ளது. இவ்வநுபவ உண்மையை நன்றாகச் சொல்பவர்களும் இருக் கலாம். தீங்கனியாகவும், மாணிக்கமாகவும் சுவாமி விளங்குகிறார். மாணிக்கம் ஒளிதரும் கல்; மனித உள்ளத்திற்கு இருளை அகற்றி ஒளியை அளிப்பது. ஒளி இருந்தால் இருட்டு இருக்குமா? இருக்க முடியாது.

மனிதனுக்கு அகந்தைதான் ஒரு பெரிய குற்றம். அகந்தை இருக்கிறவரையும் ஆண்டவ னைக் காண முடியாது. ஆண்டவனைக் காண அகந்தைக்கிழங்கு அகற்றப்பட வேண்டும். அப்போதுதான் விளக்குண்டாகி வெளிச்சந் தோன்றும். உள்ளத்தில் உண்மையொளி தந்து விளங்கும். இறைவனை வழிபட, வழிபட அவ்வுணர்ச்சியே சுவையாகிறது. கனி உடல் வளத்திற்கு நலம் தருவதுபோல, தீங்கனி உள்ளத்தில் உணர்ச்சி ஏற்பட, உரையாட, உறவாட, எல்லையில்லாத வெளியிலே, எல்லாக் கரணங்களும் ஒருங்கிய பேரின்ப வெள்ளத்தில் திளைத்து, மாறிலா மகிழ்ச்சியின் மலர, உணர் வுக்கு வளந்தந்து, அவ்வுணர்வில் ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்ப அன்பாய்க் கனிகிறது.

இத்தலம், எத்தனையோ தோஷங்கள், கஷ் டங்கள் வந்து வருந்தி வழிபடுவோர்க்கு அவற் றைப் போக்கி அநுக்கிரகம் செய்துள்ளது. தீராத பாவங்களும் தீர்ந்துள்ளன. குற்றங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. இறைவனை அடைய, பக்தி மார்க்கமே சிறந்தது. இங்கு வந்து, வழிபடுபவர்கள் தங்கள் கஷ்டங்கள் போய்த் தெய்வ பக்தி நிறைந்தவர்களாய் விளங்கு கிறார்கள்.

இடை மருதப்பன்—மகாலிங்க சுவாமி—சிவ யோக அநுபவத்திலே மாணிக்கத் தீங்கனியாக விளங்குகிறார். மக்கள் துன்பம் துடைத்து இன்பம் படைக்கும் பெருமானாகவும் விளங்கு கிறார்.






திருவிடைமருதூர்—சித்திரப் பிராகாரம்



மருதமரம்—சிங்கக் கிணறு

# தாபம் தணிக்கும் தண்ணளியான்

[பேராசிரியர் திரு பெ. திருஞானசம்பந்தன், M.A., L.T.]

ஐந்து தலை நாகத்தால் பூசிக்கப் பெற்ற இறைவன், திருநாகேச்சரத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் நாகேசுரராம் சண்பகாரண்யர், மகாலிங்க மூர்த்தியாகக் காட்சி தருகின்றார். மூவர் முதலிகள் திருஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோரால் பாடப் பெற்றவர். அவர் மக்கள் துன்பம் துடைக்கும் பெருமானாக விளங்கியதை ஞானசம்பந்தப் பெருமான் 'நாளும் நாதனமர்கின்ற நாகேச்சுர நண்ணுவார் கோளு நாளும் தீயவேனும் நன்காம் குறிக்கொண்மினே' என்ற அடிகளில் அமைத்துக் காட்டுகிறார். அப்பர் பெருமானும் மகாலிங்க மூர்த்தியை, 'தீவினை தீர்க்கவல்ல நாடறி புகழர் போலும் நாக ஈச்சரவனாரே' என்று குறிப்பிடுகிறார்.

அப்பர் தம் பாடல்களில் நாகேச்சரவரைப் பல கோணங்களில் பார்க்கிறார். தம் பக்தனாக மார்க்கண்டேயனுக்கு அருளும் பொருட்டுக் காலனும் யமனைக் காய்ந்தவர் அவர். எப்படி? காலால் அவனை உதைத்து வீழ்த்தினார்; அன்பன் பொருட்டு அவர் ஆற்றிய வீரச் செயல் காலின் மூலம் வெளிப்பட்டது அல்லவா? ஆகவே, வீரக் கழலைத் தாங்கி நிற்கிறது அவரது திருப்பாதம். அவரது மேனியின் அழகுதான் என்னே! செந் தழல் போன்ற செம்மேனி. சாந்தம் போல வெண்ணீறு அணிந்திருப்பதால், தோற்றத்தில் ஒரு பொலிவு. பெருமானைப் பார்த்தபோது ஆலமரத்து நிழற்கீழ் அமர்ந்து அன்று சனகாதி யருக்கு அறம் ஓதிய தோற்றம் அப்பர் கண் முன்னே தோன்றுகிறது. அவரைத் தரிசித்தால் நமது வினையாம் வெம்மை நீங்கி அவரது குளிர்ந்த திருவடி நிழலில் இளைப்பாறலாம் என்று நமக்கு உணர்த்துகிறார்.

"கழல்கொள் காலினர் காலனைக் காய்ந்தவர்
தழல்கொள் மேனியர் சாந்த வெண்ணீறணி
அழகர் ஆல்நிழற் கீழ்அற மோதிய
குழகர் போல்குளிர் நாகேச்சரவரே."

குன்றுமுலை நாயகியோடு வீற்றிருக்கும் நாக நாதேசுவரரை அப்பர் கண்டதற்கொப்ப, திருப் பெருந்துறையில் குருந்த மரத்தடியில் வீற் றிருந்த பெருமானை மாணிக்கவாசகர் கண்ட பாங்கினை ஒப்பு நோக்கிக் கண்டின்புறலாம்.

"சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே."

அரிது, அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது. இவ்வளவு அருமையான மானிட வாழ்க்கையும் புல்லின் நுனியில் நிற்கும் நீர்த்திவலைபோல் நிலையற்றது. புல்நுனித் திவலை சூரியன் தோன்றியவுடன் வெப்பத்தால் உறிஞ்சப்பட்டு மறைந்துவிடும். ஆகவே, இக்குறுகிய காலத்தில் இன்றே நல்லதைச் செய்தல் வேண்டும். இது வரை வீணாகக் காலத்தைக் கழித்திருந்தாலும், இனியாகிலும் மெய்யுணர்வு பெற முயல வேண்டும். சுந்தரரே வாணாளை வீணாகப் போக்கிவிட்டோமே என்று வருந்துகிறார். பற்றற்றவனாகிய அவன் திருவடியைச் சிந்தித்தலே அவ்வடியைப் பற்றுதற்கு வழி என வழியையும் காட்டுகிறார் சுந்தரர்:

"புல்நு னிப்பனி வெங்கதிர் கண்டாற்
போலும் வாழ்க்கை பொருள்இலை நாளும்
என்ன னக்கினி இற்றைக்கு நாளை
என்றி ருந்திடர் உற்றனன் எந்தாய்
முன்ன மேஉன் சேவடி சேரா
மூர்க்க னாகிக் கழிந்தன காலம்
இன்னம் என்றனக்கு உய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தை பிரானே."

ஆனால் இறைவன் திருவடியைச் சிந்திப்பது இலேசான காரியமா? அதற்கும் நம் மனம் ஒரு வழி நிற்க வேண்டுமே. மனம்தான் ஒரு குரங் காயிற்றே! ஆகவே, ஈசுவரன் அருள் புரிந்தா லன்றி நம் மனம் அவனைச் சிந்திப்பதும் இய லாது. நம் மனம் ஒரு காடு. அதில் மதம், மோகம், மாத்சர்யம் முதலான கொடிய விலங்கு கள் கொம்மாளம் போடுகின்றன. அவற்றைக் கொன்றொழிக்க வேண்டும். அது நம்மால் ஆகிற காரியமா? அதற்கு வேடன் வரவேண்டும். மலையில் வசிக்கும் அந்தக் கிராதன்தான் நம் இறைவன். கிராத வேடம் கொண்டு அர்ஜுன னுக்கு அருள் புரிந்தவனாயிற்றே. அவன் நம்

மனமெனும் காட்டில் புகுந்து மதம், மோகம் முதலான கொழுத்த மிருகங்களை வேட்டையாடி இன்புறட்டும். பிறகுதான் மனம் பண்படும். அத்தகைய மனத்தில்தான் ஈசன் குடியேற முடியும். அப்படிக் குடியேறுமாறு அழைக்கிருர் ஆதிசங்கரர் சிவானந்த லஹரியில்.

“ மா கச்ச த்வம் இதஸ்ததோ
கிரிச போ மய்யேவ வாசம் குரு
ஸ்வாமின் ஆதிகிராத மாமகமனா:
காந்தார சீமாந்தரே
வர்தந்தே பஹுசோ ம்ருகா
மதஜுஷோ மாத்சர்யமோஹாதய:
தாந் ஹத்வா ம்ருகயாவிநோதருசிதாலாபம்
ச ஸம்ப்ராப்ஸ்யஸி.”

அப்பய்ய தீக்ஷிதர் வேருெரு காரணம் சொல்லிப் பரமேசுவரனைத் தம் மனத்தில் குடியிருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிருர்: ‘பரமேசுவரன் திருமுடியில் ஒரு புறம் குளிர்ந்த கங்கை; மற்ருெரு புறம் குளிர்ச்சி தரும் தண்மதி. அங்கங்களில் பூண்டிருப்பவை குளிர்ந்த அரவம். இடப் பாகத்தில் பனிமலையின் புத்திரியான தயை என்னும் ஈரம் நிறைந்த பார்வதி. உடலில் குளிர்ச்சி தரும் சந்தனப் பூச்சு வேறு. இவ்வளவு குளிர்ச்சியையும் தங்களால் எப்படித் தாங்க முடியும்? நான் ஒரு வழி சொல்கிறேன். தாபங்கள் என் மனத்தில் எப்போதும் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டே இருக்கின்றன. அப்படிப்பட்ட என் மனத்தில் தாங்கள் குடியேறிவிட்டால் குளிர் தொந்தரவே இருக்காது. எப்போதும் குளிர் காய்ந்து கொண்டே இருக்கலாம். இவ்வாறு தாங்கள் என் மனத்தில் குடியெழுந்தருள வேண்டும்’ என்று வேண்டிக் கொள்கிருர் நடராஜப் பெருமானைப் பார்த்து.

“ மௌளௌ கங்கா சசாங்கௌ கரசரணதலே
சீதளாங்கா புஜங்கா:
வாமே பாகே தயார்த்ரா ஹிமகிரிதனயா
சந்தனம் சர்வகாத்ரே
இத்தம் கீதம் ப்ரபூதம் தவ கனகசபாநாத
வோடும் க்வ சக்தி:
சித்தே நிர்வேத தப்தே யதி பவதி ந தே
நித்யவாஸோ மதீயே.”

‘பக்தி செய் அடியரைப் பரம்பரத்து உய்ப்பவன்’ வாழ்க!

# இடைமருதில் யான் பெற்ற இன்னருள்

[திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.]

தமிழ் நாட்டில் உள்ள ஆலயங்களில் திருவிடைமருதூர்ச் சிவாலயம், பலவகையாலும் சிறப்புடைய ஒரு சிலவற்றுள் ஒன்ருகும். இவ்வாலயச் சிவலிங்கம் மகாலிங்கம் என்ற திருப்பெயருடைமை ஒன்றே இதன் சிறப்பிற்கோர் உதாரணம் ஆகும். இது, திருஆவடுதுறை ஆதீனத்தின் ஆதிக்கத்தில் இருந்துவருவது மற்ருெரு சிறப்பு ஆகும்.

அரனிடம் பித்துப்பிடித்து அருந்தொண்டாற்றிய வரகுண பாண்டியர் நிகரற்ற சிவத்தொண்டாற்றிச் சிறப்பெய்திய தலமும் இதுவே. இந்த இடை மருதப்பனை மணிவாசகப் பெருமான் ஆனந்தமிக்குப் பாடியுள்ள பாடல் அற்புதமானதாகும்.

“ எந்தை எந்தாய் சுற்றமற்றும் எல்லாம் என்னுடைய
பந்தம் அறுத்தென்னை ஆண்டுகொண்ட
[பாண்டிப்பிரான்
அந்த இடைமருதில் ஆனந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ!”

அதாவது, தம்மை அடியார் நினைத்தொறும், காண்தொறும், பேசுந்தொறும், எப்போதும் தம்மிடத்திலிருந்து ஆனந்தத் தேனை இடையருது பொழிகின்றதோர் தேன்கூடாவர் இச் சிவபெருமான் என்கிருர் மணிவாசகர்.


அதேபோல உலக மக்கள் அனைவருக்கும் அவரவர் பக்குவத்திற்கேற்ற பரமசுகம் பயக்கும் பண்புடையவர் இச் சிவபெருமான் என்கிருர் திருநாவுக்கரசு சுவாமிகள்.

“ கனியி னுங்கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழல் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளும் அரசினும்
இனியன் தன்னடைந் தார்க்குஇடை மருதனே.”

பிள்ளைப் பருவத்தினருக்கு நறுங்கனிபோன்றும், பல்முளைத்த பாலகருக்குக் கற்கண்டு போன்றும், இளங்காளைப் பருவத்தினர்க்கு ஏந்திழையார் போன்றும், நாற்பது வயது ஆண் மக்கட்கு நாடாளும் பொன்முடி போன்



3 சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை ?



‘எண்ணிக் கொடு உள்ளவா சொல்லுகோம் ; அவ்வளவும் கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே !’ 4

றும் அவ்வவர் வயது, பக்குவம், மனோபாவம் இவற்றிற்கேற்ற இனிமையும் ஏற்றமும் நிறைந்த பொருளாக இலங்குகின்றார் இடைமருதீசன் ஆகிய எம்பெருமான் என்று கூறுகிறது இப் பாடல்.

இவ்வாறு வரகுணர், மணிவாசகர், நாவுக்கரசர் போன்ற பண்டைக்காலப் பெரியோர்கள் திருவிடைமருதீசனிடம் பேரின்பம் நுகர்ந்து போந்தமையைக் கண்டோம். நம் காலத்திலுங் கூட இன்று காஞ்சி காமகோடி பீடாதிபதியாக விளங்கும் ஆசாரிய சுவாமிகளாகிய பெரியவர்கள் அடிக்கடி இத்திருவிடைமருதூரில் வந்து தங்கி இருப்பது வழக்கம். அதற்குக் காரணம் அவர்களுக்கு மகாலிங்கப் பெருமானிடம் உள்ள ஈடுபாடும், இணையற்ற அன்பும் ஆகும்.

## என் கனவு

1947-ஆவது ஆண்டில் ஒரு நாள் இரவு காலை நான்கு மணி சுமாருக்குச் சென்னையில் நான் ஒரு கனவு கண்டேன். அக்கனவு பின் வருமாறு :

திறந்த வெளியொன்று. அதில் வட்ட வடிவமானதொரு உயரிய பெரிய மேடை. அதன் நடுவில் ஸ்ரீ நடராஜப் பெருமானின் உயரிய திருவுருவம். அதைச் சுற்றலும் வலம்வரும் நடைபாதை ஒன்று. அதில் மூன்று அடியார்கள் இறைவனை வலம் வந்துகொண்டிருக்கிறார்கள். முதலிலே செல்பவர் சிவந்த மேனியுடன் ஒளிரும் உயர்ந்த தோற்றமுடையவர். அவர் பின்னால் அவரது சீடர் என்று நாம் ஊகிக்கும் வண்ணம் அடக்கத்துடன் ஆனாலும் ஆஜானுபாகுவாய்ச் செல்பவர் காலஞ்சென்ற பழநி சாது சாமிகள். அவரைப் பின்தொடர்ந்து செல்பவர் எனக்குப் பழக்கமான சண்முகாநந்த சாமி என்பவர்.

இவர்கள் இவ்வாறு வலம் வரும் காட்சியை யான் கீழே நின்றவண்ணம் பயபக்தியுடன் பார்த்துக்கொண்டே நிற்கிறேன். அப்போது சண்முகாநந்த அடிகள் ஏனைய இருவரிடம் என்னைச் சுட்டிக்காட்டி 'இதோ கே. எம்' என்று கூறுகிறார். முதலில் செல்லும் துறவி 'காத்திரு' என்று எனக்குத் தம் கையினால் ஜாடை காட்டிவிட்டுச் சுற்றி வருகிறார்.

பின்னர் அம்மூன்று துறவிகளும் கீழே இறங்கி வருகின்றனர். அவர்களுள் முதலில் சென்ற அடியார் என் அருகில் நெருங்கி வந்து நின்று என் இரு தோள்களையும் தம் இரு கரங்களாலும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு சில விநாடிகள் நிற்கிறார். என் மெய்ம்மயிர் சிலிர்க்கிறது. உடனே அவர் என் வலது செவியிற் குனிந்து "நமசிவாய" என்று உரத்துக் கூவிவிட்டு, மீண்டும் என் தோளை உலுக்கிக் குனிந்து என் இடது செவியில் "நமசிவாய" என்று கூவுகிறார். அடுத்த விநாடி யான் அவர் கைகளினின்றும் என்னை விடுவித்துக்கொண்டு சற்றுப் பின்தள்ளி நின்று அவரது திருவடியிரண்டிலும் குனிந்து தொட்டு நமஸ்கரிக்கின்றேன். என் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகி வழிகிறது.

உடனே அந்த அடிகளார் திருக்கரத்தில் வெள்ளித்தட்டு ஒன்று காணப்படுகிறது. அதில் சந்தனம், திருநீறு, குங்குமம், மல்லிகைப்பூ, அக்ஷதை, பவுன், வெள்ளி நாணயம் முதலிய மங்கலப் பொருள்கள் நிறைந்து காணப்படுகின்றன. அவ் அடியார் அந்தத் தட்டை ஏந்தி அடியேன் கரத்தில் வைக்கிறார். தலைவணங்கி அதை யான் பக்தியுடன் ஏற்றுக்கொள்கிறேன். அடுத்த விநாடி கனவு கலைகிறது. எழுந்து பார்த்தேன். வியப்புத் தாங்க முடியவில்லை. என் கண்களைத் தொட்டேன். கண்ணீர் இரு கண்களிலும் நிறைந்துள்ளது. இறையருளை மனமார வாழ்த்தி நன்றி கூறினேன். கண்டறியாதன கண்டேன்; கொண்டறியாத ஆனந்தம் கொண்டேன்!

இத்தகைய திவ்யக் கனவினைக் கண்டு தினைப் பினும், பின்னர் ஓர் ஐயப்பாடு என் மனத்தைத் துளைக்கத் தொடங்கியது. சைவ சித்தாந்த சாஸ்திரங்களின்படி 'நவசிவாய' என்னும் ஸ்தூல பஞ்சாட்சரம் இம்மைப் பயனை மட்டுமே தரவல்லது என்றும், 'சிவாயநம' என்னும் சூட்சும பஞ்சாட்சரந்தான் மோட்சத்தை வழங்க வல்லது என்றும் நான் படித்திருந்ததால் எனக்கு இப்போது கிடைத்த பஞ்சாட்சர உபதேசம் மறுமையை எனக்கு மறுத்துவிட்டதோ என யான் ஐயங்கொண்டு அவலம் உறலானேன். இது நிற்க.

## இடைமருது

அடுத்த ஆண்டில் ஒருநாள் நானும் என் நண்பர் சிதம்பரம் என். தண்டபாணிப் பிள்ளையும் திடீரெனக் காஞ்சிப் பெரியவர்களைத் தரிசிக்க எண்ணினோம். அப்போது அவர்கள் திருவிடைமருதூரில் தங்கியிருப்பதை யறிந்து அன்றிரவு 10 மணி சுமாருக்கு நாங்கள் இருவரும் அவர்களின் முகாமிற்குப் போய்ச் சேர்ந்தோம்.

எங்கள் வரவினைக் கேள்வியுற்ற பெரியவர்கள் எங்களை உடனே வரச்சொல்லி ஆணையிட்டார்கள். நாங்கள் இருவரும் சென்றோம். இரு

ளடைந்த ஓர் அறையில்தான் பெரியவர்கள் வீற்றிருந்தார்கள். முதலில் திரு தண்டபாணிப் பிள்ளை நமஸ்கரித்துவிட்டு எழுந்தார். பின் யான் பழம் தேங்காய்த் தட்டை முன் வைத்துச் சாஷ்டாங்கமாக வீழ்ந்தேன். அதுவரை என் இதயத்தில் கட்டுண்டு, கரையிடப்பட்டுத் தேங்கி நின்ற பக்தி வெள்ளம் திடீரென்று மதகுடைத்துக்கொண்டு கரைபுரண்டு வெளிப்பட்டுவிட்டது. அடியேன் ஆனந்தப் பெருக்கால் தேம்பித் தேம்பி அழுகின்றேன். ஆனால் எழுகின்றேன் இல்லை. ஓரிரு நிமிஷம் நிச்சப்தம் நிலவியது. உடனே பெரியவர்கள், "எழுந்திரு பாலசுப்ரமணியம்" என்று பரிவோடு ஆணையிட்டனர். திக்கித்திணறி மெதுவாக எழுந்து நின்றேன். "உட்காருங்கள்" என்றார்கள் பெரியவர்கள். இருவரும் உட்கார்ந்தோம்.

சிறிது நேரம் யோக க்ஷேமங்கள் பேசப்பட்டன. நமசிவாய உபதேசம்பற்றிய பழைய சந்தேகம் மெதுவாக என் உள்ளத்துள் தலை காட்டியது. அதனைச் சரியானதொரு குருநாதர் வாயிலாகத் தீர்த்துக்கொள்ளும் தருணம் ஒன்றினை இறையருளே வலிய எனக்கு வழங்கியுள்ளமையை யுணர்ந்துகொண்ட யான், ஆசாரிய சுவாமிகளைப் பார்த்து மிகுந்த மரியாதையுடன் கேட்டேன் :

"சுவாமி, பஞ்சாட்சரத்தில் ஸ்தூலம் என்றும் சூட்சுமம் என்றும் இரண்டு வகைகள் உள்ளனவே; இவற்றுள் நாம் எதை உபதேசம் பெறவோ, உச்சரிக்கவோ வேண்டும்? தயை கூர்ந்து விளக்க வேண்டுகிறேன்." சுவாமிகள் சிறிதும் தாமதியாமல் என்னையே ஒரு கேள்வி கேட்டார்கள் :

"உங்களுடைய நாயன்மார்கள் எதை வைத்துப் பதிகம் பாடியுள்ளார்கள்?"

யான் : "நமசிவாயப் பதிகம் என்றுதான் பாடியுள்ளார்கள்."

சுவாமிகள் : "அப்படியானால் நீயும் அப்படியே கூற வேண்டுதல்தானே முறையாகும்?"

யான் : "ஆம். சுவாமிகளே! அதுதான் முறை."

இதற்குமேல் வேறு எத்தனையோ பல விஷயங்களைப்பற்றி நீண்ட நேரம் நாங்கள் சுவாமிகளிடம் பேசிக்கொண்டிருந்துவிட்டு விடை பெற்றுத் திரும்பினோம்.

எனவே, அடியேனுக்கு நேரிடையாகச் சொல்லாமற் சொல்லிப் பஞ்சாட்சர உபதேசம் நிகழ்ந்த இடம் திருவிடைமருதூர். ஆதலால் இத்தலத்திடம் அடியேனுக்கு எப்போதுமே அளவுகடந்த பற்றும் பக்தியும் உண்டு. மேலே கண்ட பெரியோர்களுக்கெல்லாம் இத் திருவிடைமருதூரில் எவ்வளவு இன்ப–அன்பு உண்டோ அதேபோல நாயினேனாகிய என்னிடமும் எள்ளளவிலே இத் தலத்திடை இன்ப–அன்பு இருந்து வருகிறது.


இறுதியாக, இறைவன் திருவிளையாடலின் வியக்கத்தக்க விநோதங்கள் சிலவற்றையும் ஈண்டுக் காண்பது அவசியம்.

குலத்தில் யான் வீரசைவன். ஆனால் கொள்கையில் இன்று சைவ சித்தாந்தி. சித்தாந்தப்படி சிவாச்சாரி அல்லது தேசிகர் இவர்களில் ஒருவரிடந்தான் யான் தீட்சை பெறுதல் வேண்டும். ஆனால் அவ்வாறு உயிருள்ள எவர் மூலமாகவும் எனக்குத் தீட்சை செய்விக்க வில்லை இறைவன். பல்லாண்டுகட்கு முன்பே இறந்துபோன ஒரு துறவிமூலம் இப்போது கனவிலே தீட்சை செய்விக்கப்பெற்றேன். அந்தத் துறவியும் பிறப்பால் சைவர் அல்லர்; வைணவ குலப் பிராமணர். ஆனாலும் அவர் மிகச் சிறந்த திருவாசகப் பக்தர், பித்தர். இவ்வாறு வைணவ குலத்தில் பிறந்து சைவத் திருவாசகத்திற் பித்துக்கொண்ட காலஞ்சென்ற துறவி ஒருவர் சித்தாந்தக் கொள்கையின் வீர சைவனாகிய எனக்கு ஸ்தூல பஞ்சாட்சரத்தை உபதேசம் செய்தார்! இதனினும் பெரியதோர் அதிசயம், இவ்வைணவப் பிராமணர் என் கனவில் எனக்குச் செய்த சிவதீட்சையை ஸ்மார்த்தப் பிராமணக் குருவாகியும் வேதாந்தத் தலைவராகியும் விளங்கும் காஞ்சி காமகோடிப் பீடாதிபதியாகிய ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் என் நனவில் ஊர்ஜிதம் செய்து உறுதிப்படுத்துகிறார்! இஃது எத்தகையதோர் விந்தை, எத்தகைய திருவிளையாடல்!


"சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லலறுத் தாட்கொண்டு [துக்
பேதைகுணம் பிறருருவம் யான்எனதென் உரைமாய்த்
கோதில்அது தானாக் குலவுதில்லை கண்டேனே!"

—திருவாசகம்

ஆதலால் உலக மக்கள் அனைவருக்கும் ஒரே தெய்வமாகி நின்று அவரை உவந்தாட்கொள்ளும் ஒப்பற்ற தெய்வமாகிய இச்சிவனுக்கு மகாலிங்கம் என்ற திருநாமம் மிகமிகப் பொருத்தம் உடையதுதானே?



பட்டினத்து அடிகள்
(திருவிடைமருதூர்க் கோயிலில் உள்ள திருவுருவம்)



பத்திரகிரியார்
(திருவிடைமருதூர்க் கோயிலில் உள்ள திருவுருவம்)

# பட்டினத்து அடிகள்

[திரு டி. என். சிங்காரவேலு, B.A., B.L.]
(துணை ஆணையர், அறநிலைய ஆட்சித்துறை, தஞ்சை)

"பொருளும் குலனும் புகழும் திறனும்
அருளும் அறிவும் அனைத்தும்—ஒருவர்
கருதாஎன் பார்க்குங் கறைமிடற்றாய் தொல்லை
மருதாஎன் பார்க்கு வரும்."

—திருவிடைமருதூர் மும்மணிக்கோவை.

சோழ நன்னாட்டின் நடுநாயகமாக விளங்குந் தலம் திருவிடைமருதூர். திருவலஞ்சுழி விநாயகரும், சுவாமிமலை முருகனும், ஆலங்குடி தட்சிணாமூர்த்தியும், திருவாப்பாடி சண்டேசரும், சூரியனார் கோயில் நவகோள்களும், சிதம்பரம் நடராசரும், சீகாழிச் சட்டைநாதரும், திருவாவடுதுறை திருநந்தி தேவரும், திருவாரூர்ச் சோமாஸ்கந்தரும், சுற்றிலும் அமைந்து விளங்க, இடைமருதில் ஜ்யோதிர் மகாலிங்கப் பெருமான் காட்சியளிக்கின்றார்.

அகத்தியர், உரோமசர் போன்ற முனிவர்களும், மாந்தாதா, வரகுணன் போன்ற அரசர்களும் இங்கே வழிபட்டுப் பேறு பெற்றனர். ஆயினும் பட்டினத்தாரும் பத்திரகிரியாரும், இத்தலத்தில் பேறுபெற்றதோடு நீங்கா இடம் பெற்றுவிட்டனர். அவர்களுள் பட்டினத்தடிகளின் வரலாறு சுவையானது.

காவிரிப்பூம்பட்டினத்தில், வணிகர் குலத்திலே, சிவநேசருக்கும் ஞானகலை யம்மையாருக்கும் திருவெண்காட்டு இறைவன் திருவருளால் ஓர் ஆண் மகவு பிறந்தது. அக்குழந்தை திருவெண்காடர் என்ற பெயருடன் வளர்ந்து, இளமையிலேயே முன்பு செய்தவத்தின் ஈட்டத்தால் சிவஞானச் செல்வம் மிகுந்து விளங்கியது. தக்க பருவத்தில் சிவகலை அம்மையைத் திருவெண்காடர் மணங் கொண்டார். காவிரிப்பூம்பட்டினத்தில் வாணிகத்தில் சிறப்புற்று விளங்கிய திருவெண்காடரைப் பட்டினத்துச் செட்டியார் என அனைவரும் போற்றினர். ஆனால் பட்டினத்துச் செட்டியாருக்கோ நெடுங்காலம் புத்திரப்பேறு இல்லாத பெருங்குறை இருந்து வந்தது. ஆட்கொண்டருளும் திருவிடைமருதன், தானே ஒரு குழந்தை வடிவாய், திருக்கோயிலருகிலுள்ள வில்வ மரத்தடியில் கிடக்க, இறைவனாணைப்படி சிவசருமர் என்னும் கோயிற் குருக்கள் அக்குழந்தையைப் பட்டினத்துச் செட்டியாரிடம் சேர்ப்பிக்க, அவரும் அதனைப் பெருமகிழ்வுடன் ஏற்று வளர்த்து வருவாராயினர். அக்குழந்தை, மருதப்பிரான் என்னும் திருநாமத்துடன் சகல கலைகளிலும் வல்லதாய் வளர்ந்து வரலாயிற்று. வாணிகக் கலையிலும் தேர்ச்சிமிக்க மருதப்பிரான், கடல் கடந்து சென்று, எருமுட்டையையும் அவல்கடலையையும் கொணர்ந்தார். வியப்படைந்த திருவெண்காடர், எருமுட்டையின் நடுவே மாணிக்கக் கற்களும், அவல் கடலைகளுடன் பொன் மணல்களும் கலந்திருப்பதைக் கண்டு பெருமகிழ்வடைந்து, தமதருமைத் திருக்குமாரரைத் தழுவி முத்தமிடக் கிட்டினர். ஆனால் மருதவாணர் மறைந்துவிட்டார்.

திடுக்கிட்ட திருவெண்காடர், மருதப்பிரான் பிரிவாற்றாது வாடினர். அப்பொழுது அவர் மனைவியார், சிறு பெட்டி ஒன்றினைப் புதல்வர் தந்ததாகக் கணவரிடம் கொடுத்தார். அப்பெட்டியைத் திறந்து பார்த்த திருவெண்காடர், அதனுள்ளே காதற்ற ஊசி ஒன்றும், ஓலை நறுக்கு ஒன்றும் இருப்பதைக் கண்டார். அந்த ஓலை நறுக்கில், "காதற்ற ஊசியும் வாராது காண் நுங் கடை வழிக்கே" என்று எழுதப்பட்டிருந்தது. பரிபக்குவமடைந்த பட்டினத்துச் செட்டியார் உடனே பட்டினத்து அடிகளானார். அவரது தனித் துறவின் உண்மை நிலையானது,

"மாடுண்டு கன்றுண்டு மக்களுண்
டென்று மகிழ்வதெல்லாங்
கேடுண் டெனும்படி கேட்டுவிட்
டோமினிக் கேண்மனமே
ஓடுண்டு கந்தையுண் டுள்ளே
யெழுத்தைந்து மோதவுண்டு
தோடுண்ட கண்ட னடியார்
நமக்குத் துணையுமுண்டே"

என்பது முதலாக அப்போது அவர் பாடிய பாக்களால் புலப்படும்.

பித்தரைப் போன்று திரியத் தலைப்பட்ட பட்டினத்தடிகளது உயர்நிலையை அறியாத அவரது தமக்கையார், தமக்கு மானக்கேடு வந்ததென்று எண்ணி, நஞ்சு கலந்த அப்பத்தைப் பட்டினத்தாருக்கு அளிக்க, அதனை அறிந்த பட்டினத்தார் "தன்வினை தன்னைச் சுடும் ஓட்டப்பம் வீட்டைச் சுடும்" என்று கூறித் தமக்கையார் வீட்டுக் கூரைமேல் எறிய, அவ் வீடும் பிறவும் எரியத் தொடங்கின. பின்னர், "தங்களைக் கேட்டுப் பிறந்திலம்" என்றொரு பாடலைப் பாடித் தீயை அவித்தார்.

தம் தாயின் ஈமக் கடன்களைச் செய்துவிட்டுப் பட்டினத்தடிகள் திருவிடைமருதூரடைந்தார். அப்பொழுதுதான் "தெய்வத் தாமரைச் செவ்வி தின் மலர்ந்து" எனத் தொடங்கும் திருவிடை மருதூர் மும்மணிக் கோவையைப் பாடியருளினார்.

பிறகு தலயாத்திரையை மேற்கொண்ட பட்டினத்தடிகள் உஜ்ஜயினி நகரை அடைந்தார். அந் நகர்ப் புறத்தலமைந்த ஒரு பிள்ளையார் கோயிலில் தியானம் செய்துகொண்டிருந்தார். அப்போது, அந்நகர மன்னனது வீட்டில் களவாடி, அவ் வழியே சென்ற கள்வர், தமது விருப்பம் நிறைவேறியமைக்கு மகிழ்ந்து ஒரு மணிமாலையை அப்பிள்ளையார்மீது வீசி எறிய, அது பட்டினத் தடிகளின் கழுத்திலே விழுவதாயிற்று. கள்வரைத் தேடிவந்த காவலர், மணிமாலையுடனிருந்த பட்டினத்தடிகளைக் கண்டு, அவரே திருடன் என்றெண்ணி, அரசனிடம் கொண்டு சென்றனர். அரசனும், ஆராயாமல் அடிகளைக் கழுவிலேற்ற ஆணையிட்டான். கழுமரத்தருகில் சென்ற பட்டினத்தார்,

"என்செய லாவதி யாதொன்று
மில்லை யினித்தெய்வமே
உன்செய லேயென் றுணரப்பெற்
றேனிந்த வூனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று
மில்லை பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோவிங்ங
னேவந்து மூண்டதுவே"

என்று இறைவனை வேண்ட, அக்கழுமரம் தீப் பற்றிச் சாம்பராயிற்று. அரசன் அதனைக் கண்டஞ்சிப் பட்டினத்தடிகளின் அடிமையானான். அவ்வரசனே, பத்திரகிரியார் என்று விளங்கிய அடியாரானார். பட்டினத்தடிகளும் பத்திரகிரியாரைத் திருவிடைமருதூர் செல்ல உத்தரவிட்டார்.

சிவதல யாத்திரை முடித்துக்கொண்டு, பட்டினத்தடிகள் திருவிடைமருதூரை யடைந்து கீழைக் கோபுர வாயிலில் இருந்தார். குரு ஆணையின்படி பத்திரகிரியார் மேலைக் கோபுர வாயிலில் இருந்தார். அப்பொழுது ஒரு நாள் ஒரு பிச்சைக்காரன், பட்டினத்தடிகளிடம் சென்று பிச்சை கேட்டான். 'மேலைக் கோபுர வாசலில் ஒரு குடும்பி இருக்கிறான். அவனைப் போய்க் கேள்' என்று பட்டினத்தடிகள் கூற, அவனும் மேலைக் கோபுர வாசலுக்குச் சென்றான். பத்திரகிரியார் ஓட்டில் பிச்சையேற்று, தாமுண்டு எஞ்சியதை ஒரு நாய்க்கு அளித்து வந்தார். அந்த நாயும் அவருடனே இருந்து வந்தது. பிச்சைக்காரன் பத்திரகிரியாரிடம் வந்து பட்டினத்தடிகள் கூறிய வற்றைச் சொன்னான். தம்மைக் குடும்பி என்று பட்டினத்தடிகள் கூறியதற்குக் கையிலிருந்த ஓடும் அருகிலிருந்த நாயுமே காரணம் என்று உணர்ந்த பத்திரகிரியார், தம் கையில் இருந்த திருவோட்டை நாயின்மீது வீசி எறிந்தார். ஓடும் உடைந்தது; நாயும் இறந்தது. மறு பிறவியில் அரசிளங்குமரியாக அந்த நாய் பிறந்ததென்பர். அந்த நாயின் நினைவாக, திருவிடைமருதூர்க் குளக்கரையில் 'நாயடியாள் கோயில்' இன்றும் உள்ளது.

இனி, பத்திரகிரியாருக்கு வீடுபேறளித்த பின் பட்டினத்தடிகள் சீகாழி அடைந்து திருக்கழுமல மும்மணிக் கோவையும், தில்லை சேர்ந்து கோயில் நான்மணிமாலையும், காஞ்சி மாநகர் அடைந்து கச்சித் திருவந்தாதி, திருவேகம்பமாலை, கச்சித் திருவகவல் முதலியவற்றையும் பாடி, பல தலங்களையும் கண்டு வணங்கித் திருவொற்றியூரடைந்தார். அங்கே திருவொற்றியூர்த் தொகை, முதல்வன் முறையீடு, அருட்புலம்பல் முதலியன பாடியருளினார்.

ஒற்றியூரின் ஊர்ப்புறத்தே மாடு மேய்க்கும் சிறுவர்களோடு வழக்கமாக விளையாடுவது போன்று விளையாடி, அருகிருந்த ஒரு குழியில் அமர்ந்து, தம்மை மணலுஞ் செடி கொடிகளும் கொண்டு மூடச் செய்து, சிவயோகத்தமர்ந்து சிவலிங்க வடிவமாயினார்.

பதினோராந் திருமுறையில் ஏழு மும்மணிக் கோவைகள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்றாக விளங்குவது திருவிடைமருதூர் மும்மணிக்கோவை. முப்பது பாடல்கள் கொண்ட இந்த அருள்நூல் மருதிடங் கொண்ட ஒரு தனிக் கடவுளான மத்தியார்ச்சுனத்து மகாலிங்கப் பெருமானின் அருமையிலெளிய வான்கருணைப் பெருந்திறத்தினைப் பலபட விளக்குகின்றது.

இன்றும் திருவிடைமருதூர்க் கீழைக் கோபுரத்தில் பட்டினத்தடிகளும், மேலைக் கோபுரத்தில் பத்திரகிரியாரும் நமக்குக் காட்சி தருகின்றனர்கள். இறைவன் திருவருளால் மத்தியார்ச்சுனத் தலமான இத் திருவிடைமருதூர்த் திருக்கோயில் கும்பாபிஷேகத்தை இப்பொழுது நாம் காணும் பேறு கிட்டியுள்ளது. "எம்மையாளும் இடைமருதன்கழல் செம்மையே தொழுவார்வினை சிந்துமே" என்று திருநாவுக்கரசு நாயனர் தொழுதவண்ணமே நாமும் வணங்கி, பட்டினத்தார் அருள் நூல்களையும் படித்தின்புறுவோமாக.

"அன்றென்றும் ஆமென்றும் ஆறு சமயங்கள்
ஒன்றொன்றோ டொவ்வா துரைத்தாலும்—என்றும்
ஒருதனையே நோக்குவார் உள்ளத் திருக்கும்
மருதனையே நோக்கி வரும்."

—திருவிடைமருதூர் மும்மணிக்கோவை

* * *

"ஒட்டுடன் பற்றின்றி உலகைத் துறந்தசெல்வப்
பட்டினத்தார் பத்ரகிரி பண்புணர்வ தெந்நாளோ."

—தாயுமானர்

# திருப்பணி

[திரு எம். எஸ். பழனியப்ப முதலியார், பி.ஏ.]

புதுக் கோவில் கட்டுவது தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு இருந்த பழக்கம். இறைவனுக்குக் கோயில் ஆரம்ப காலங்களில் பல வகைகளாக இருந்தன. நாகரிகம் முன்னேற முன்னேற மண் சுவர் செங்கல் சுவர்களாகவும், செங்கல் சுவர் கல் சுவர்களாகவும் மாறலாயின. கல்லில் வேலை செய்யப் பழகியவர்கள் ஸ்தபதிகளாகத் தலைமுறை தலைமுறையாகப் பயிற்சி பெற்றனர். கல்லிலேயே அழகிய உருவங்கள் செதுக்க வல்லவர்களாயினர். கல் தூண்களில் யானை, குதிரை போன்ற சாதாரண உருவங்களைச் செதுக்கினர்கள். அதிகப் பயிற்சியும் பண்பும் உள்ளவர்கள் கல்லிலேயே கல் தூண்களின் ஒட்டிய பாகமாக முழு உருவங்களை வடித்தனர். புராதனக் கதைகளில் வரும் கருத்தோவியங்களைக் கல் ஓவியமாக அமைத்து இறும்பூதெய்தினர். நல்லபடி அமைக்கப்பட்ட இந்த ஓவியங்கள் ஒவ்வொன்றும் உயிரோவியமாகத் திகழ்கின்றன.

ஓர் ஓவியத்தை அமைக்கப் பல மாதங்கள் வேலை செய்திருக்க வேண்டும். உதாரணமாகப் பேரூரில் நடராஜ சபையில் நிறுவப்பட்டிருக்கும் தூண்களில் ஒருங்கிணைந்து காணப்படும் இறை உருவங்கள் வேலை செய்து முடிக்க எவ்வளவு பேர் ஈடுபட்டிருப்பார்கள், எவ்வளவு காலம் பிடித்திருக்கும் என்று அவைகளை நேரில் கூர்ந்து பார்ப்பவர்களுக்குத்தான் தெரியும்.

கல்லில் செயற்கையாகச் செதுக்கப்பட்ட உருவங்கள் இயற்கையாகவும் கம்பீரமாகவும் தோற்றம் அளிக்கின்றன. இந்த வேலைகள் 400 ஆண்டுகளுக்குள் நடைபெற்றவை. இறைவனின் வீரச் செயல்களை வேதாகம மரபுக்குட்பட்டுக் கல்லால் வடித்த சிற்பங்கள் இவை.

ஆயிரம் ஆண்டுகட்கு முன் இம்மாதிரி அமைக்கப்பட்ட சிற்பங்களைப் பார்க்க வேண்டுமானல் திருப்பெருந்துறைக்குப் போகவேண்டும். அத்தலந்தான் மாணிக்கவாசக சுவாமிகளின் ஆவுடையார் கோயில். அத்தலத்தின் கற்றூண்களில் கண்கொள்ளாக் காட்சியாகக் காளியும் வீரபத்திரரும், அரசனும் அமைச்சரும், குறவனும் குறத்தியும், நரசிம்ம மூர்த்தியும் வில்லேந்திய வேலரும் போன்ற பல உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை சிந்தனையைத் தூண்டும் கருத்தோவியங்களாகவும் தெய்விகச் சிறப்பை எடுத்துக்காட்டுவனவாகவும் உள்ளன.

இந்த ஆவுடையார் கோவில் திருப்பணி அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலஸ்ரீ திருவாவடுதுறை ஆதீனகர்த்தரவர்களின் நல்லாசியுடன் வேலைகள் நடைபெற்று வருகின்றன. ஆதீனத்தின் சிறப்புத் தலமாகிய திருவிடைமருதூர்க் கோவில் திருப்பணி முடிவுற்று, கும்பாபிடேகம் நடைபெறும் நன்னளில் திருப்பெருந்துறை ஆத்மநாத சுவாமியின் திருக்கோயில் திருப்பணியும் நலம்பெற முடிவடைய மகாலிங்க சுவாமியைப் போற்றி அருள் பெறுவோமாக.


# சிரித்து நின்ருன் சிவகு மாரனே!

[திருவாட்டி சௌந்தரா கைலாசம்]


(ஞானக் கண்ணினின் நாடுக என்கிறது பாட்டு)

" தோன்றியெம் எதிரில் துள்ளிநீ வாவா!
விழிக்கெதிர் காட்டென வீம்புகள் பேசிப்
பழிப்பவர் கண்டு பணிந்திட நீயும்
அழகு வேலுடன் ஆறு முகத்துடன்
கூவும் சேவல் கொடியுடன் வந்தால்
குறைந்தா போவாய் குமரா" என்றே
உருகிய படிநான் உறங்கிப் போனேன்.
கனவி லற்புதக் காட்சிகள் கண்டேன்.
மூக்கை இறுக மூடியே ஒருவன்
முல்லையைக் கண்ணுல் முகரப் பார்த்தான்!
இரண்டு கண்களை இறுக மூடி
ஒருவன் ஓவியத் துண்மை யறியத்
தாவினுன்; கையால் தடவிப் பார்த்தான்!
மலரில் இல்லை மணமென் றெருவன்
உரைத்தனன்; மற்றவன்—ஓவியந் தன்னைக்
கண்ணை மூடிக் கையில் எடுத்தவன்
மண்ணி லோவியம் உண்டெனச் சொல்வது
பொய்யிலும் பொய்யெனப் புலம்பியே நின்ருன்!
இதனைக் கண்டே எதிரில்
சிரித்து நின்ருன் சிவகு மாரனே!





5 ஏலக் குழலி பரிசு!



"நாளை வந்து உங்களை நானே எழுப்புவன்" என்றலும், 6
நாணுமே போன திசை பகராய்!

# சிவநெறி

[திருமுருக கிருபானந்தவாரியார்]

இறைவன் என்ற சொல் இறு என்ற பகுதியடியாகப் பிறந்தது. எல்லா உயிர்களிலும் எல்லாப் பொருள்களிலும் இறைவன் நீக்கமற நிறைந்து நிற்கின்றான். இனி, எல்லாம் அவனிடத்திலே இருக்க, அவன் அவைகட்கு உறைவிடமாகவும் இருக்கின்றான். இஃது இறைவனுடைய விசுவரூபம்.

எல்லாப் பொருள்களிலும் தங்க வேண்டுதலின், சிறிய—மிகச் சிறிய பொருளாக இருக்கின்றான். மேரு கிரி முதலிய பொருள்கள் யாவும் அவனிடத்திலே தங்கும்படி அப்பெருமான் மிகப் பெரிய பொருளாக விளங்குகின்றான். இதனை உபநிடதம் "அணோரணியாந் மஹதோ மஹீயாநாத்மா" என்று கூறுகின்றது.

அணுவுக்கு அணுவாகவும், மகத்துக்கு மகத்தாகவும் விளங்குபவன் இறைவன். ஒரு பழங்கதை "பழம் கதை."

திருக்கயிலாய மலையில் உமாதேவியாருடன் சிவபெருமான் வீற்றிருக்கின்றார். விநாயகப் பெருமானும், முருகப் பெருமானும் தாய் தந்தையரை வணங்கி வழிபடும் பொருட்டுச் சென்றார்கள்.

தினந்தோறும் பழங்காலத்தில் மைந்தர்கள் தந்தை தாயரை வழிபடுகின்ற வழக்கம் இருந்தது.

"வைகறை யாமம் துயில்எழுந்து தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதின்
தந்தையுந் தாயும் தொழுதுஎழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை"

என்று ஆசாரக்கோவை கூறுகின்றது.

ஆனைமுகனும் ஆறுமுகனும் அம்மையப்பரை வலம் வந்து வணங்கினார்கள். சிவமூர்த்தியின் திருக்கரத்தில் ஒரு தெய்வ மாதுளங்கனி இருந்தது. அதனை இருவரும் கேட்டார்கள்.

அரனார், "அகில உலகங்களையும் ஒரு நொடிப் பொழுதுக்குள் வலம் வருபவருக்கு இக்கனி தரப்படும்" என்று அருளிச் செய்தார்.

முருகப் பெருமான் மயிலின்மீது ஏறி அகில உலகங்களையும் ஒரு நொடிப் பொழுதுக்குள் வலம் வந்தார்.

"ஆகமம் விளைத்தகில லோகமும் நொடிப்பொழுதில்
ஆசையொடு சுற்று மதிவேகக்காரனும்"

"இலகுகனி கடலைபய றொடியல்பொரி அமுதுசெயும்
இலகுவெகு கடவிகட தடபார மேருவுடன்
இகலி முது திகிரிகிரி நெரியவளை கடல்கதற
எழுபுவியை ஒருநொடியில் வலமாக ஓடுவதும்."

—திருவகுப்பு.

"எல்லாம் சிவத்துக்குள் ஒடுக்கம்" என்று சிந்தித்து, ஆனைமுக அண்ணல் அம்மையப்பரை வலமாக வந்து கனி பெற்றார்.

இந்தப் பழங்கதை ஒரு பெரிய தத்துவத்தை உணர்த்துகின்றது :

1. தந்தைக்கு உபதேசித்த தயாபரனுக்குச் சிவத்துக்குள் எல்லாம் ஒடுக்கம் என்பது தெரியாதா? தெரியும்.

2. எல்லா உலகங்களையும் சருவ வல்லமையுடைய விநாயகரால் வலம் வர இயலாதா? இயலும்.

3. சிவபெருமான் இரு மைந்தர்களும் கனி கேட்டபோது உள்ள கனியை உடைத்துப் பகிர்ந்து தரக் கூடாதா?

4. அல்லது ஒரு புதிய கனியை உண்டாக்கித் தரக்கூடாதா? வீதியில் விளையாடுகின்றவன்கூட ஏதேதோ பொருள்களைத் தருவிக்கின்றானே.

5. "தம்பிக்கே தந்துவிடுங்கள். எனக்கு வேண்டாம்" என்று விட்டுக்கொடுக்கின்ற குணம் விநாயகரிடம் இல்லையா?

6. "அப்பா! அண்ணாவுக்கே கொடுங்கள். நான் பிறகு வாங்கிக்கொள்ளுவேன்" என்று ஒதுங்கிப் போகின்ற தியாக புத்தி வேலவன்பால் இல்லையா?

7. ஒரு சிறிய கனி காரணமாக உலகத்தை வலம் வந்தால் கூலி கட்டுமா?

8. பழம் காரணமாகத் திருக்கயிலாய மலையில் முருகனும் விநாயகரும் போட்டியிடலாமா?

9. பழத்தின்மீது ஞானமே வடிவாய விநாயகருக்கும், ஞானபண்டிதனுக்கும் அத்தனை ஆசையா?

இந்த வினாக்கள் அடுக்கடுக்காக எழுகின்றன.

இத்தனை வினாக்களுக்கும் தக்க விடை பகர்கின்றேன் :—

இறைவனைப்பற்றி நாம் முன் என்ன சிந்தித்தோம்? "எல்லா இடங்களிலும் எல்லாப் பொருள்களிலும் அவன் தங்கி இருக்கின்றான்", "அவ

னிடம் எல்லாம் தங்கியிருக்கின்றன" என்று இருவிதமாக நினைத்தோம் அல்லவா?

சிவத்துக்குள்ளே எல்லாவற்றையும் பார்த்தார் கணபதி.

எல்லாவற்றுக்குள்ளும் சிவத்தைப் பார்த்தார் முருகர்.

இந்த அரிய பெரிய உண்மையை உணர்த்து கின்றது அப்பழங்கதை.

இதனைத் தாயுமானவர் கூறுகின்றார்:

"அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது? தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடி எல்லாம்
தங்கும்படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது?"

இனி, "இறைவன் எங்கும் நீக்கமற நிறைந் திருக்கின்றானே? உலக மாயை அவனைப் பற்றாதோ!" என்ற வினா எழும்.

உப்பு விளைகின்ற இடம் கடல். உவர் நீரில் பிறந்து, உவர் நீரைப் பருகி, உவர் நீரில் வாழ் கின்ற மீனுக்கு உவர் ஏறுவதில்லை. மீன் உண் போர் கடல் மீனுக்கும் உப்பிட்டுத்தான் சமைத்து உண்பார்கள். அதுபோல் இறைவன் யாண்டும் உறைந்திடினும் உலக மாயை அவ னைப் பற்றாதென உணர்க.

எங்கும் நிறைந்த பொருள் இறைவன் என் றால், ஏன் அது நம் கண்ணுக்குத் தெரிய வில்லை என்பாரும் உளர். விறகிலே நெருப்பு இருக்கின்றது. பாலில் நெய் இருக்கின்றது. ஆனால் அவை கண்ணுக்குத் தெரிகின்றனவா? இல்லை. விறகிலே தீயும், பாலில் நெய்யும், கண்ணுக்குத் தெரியாமையால், இல்லையென்றால் நமக்கு அறிவு இல்லை என்று உலகம் சிரிக்காதா?

விறகைக் கடைந்தால் தீ வெளிப்படும். பாலைக் கடைந்தால் நெய் வெளிப்படும். அதுபோல, தியானம் புரிந்தால் இறைவன் வெளிப்பட்டுக் காட்சி தருவான். சாதனைகள் செய்தால் தேவ ரும் மூவரும் காணமாட்டாத சிவம் தானே வந்து வெளிப்பட்டுத் தோன்றும்.

"விட்டேன் உலகம் விரும்பேன்
இருவினை வினையுடன்
கிட்டேன் அவருரை கேட்டுமி
ரேன்மெய் கெடாதநிலை
தொட்டேன் சுகதுக்கம் அற்றுவிட்
டேன்தொல்லை நான்மறைக்கும்
எட்டேன் எனும்பரம் என்னிடத்
தேவந்துஇங் கெய்தியதே"

என்கின்றார் பட்டினத்தடிகளார்.

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியும், மற்றவர் அறியா மாணிக்கமலையும் ஆகிய இறைவன் சொரூப நிலையில் 'சிவம்' என்றும், உலகை நோக்கிய தடஸ்த நிலையில் 'பதி' யென்றும் பேர் பெறுகின்றான்.

இறைவனைப்பற்றியும், உயிர்களின் தன்மை களைப்பற்றியும் உயிரின் இயற்கைக் குற்றமாகிய ஆணவத்தைப்பற்றியும்; சைவ சித்தாந்த நூல்கள் தெளிவாகக் கூறுகின்றன. ஏனைய நூல்களில் ஆணவத்தின் பேர்தானும் கூறு மாறில்லை.

**அத்வைதம்** :—அத்வைதம் என்ற சொல்லுக் குப் பலர் பலவாறு பொருள் கண்டார்கள். திருவருள் துணை செய்யாமையால் மற்ற மதா சிரியர்கள் மாறுபட்ட கருத்துக்களைக் கூறிக் குழப்பஞ் செய்தார்கள்.

"ஏகம் ஏவாத்விதீயம்" என்பது வேத வாக்கு. இதன் பொருள் "ஒன்றேதான் பொருள். இரண்டாவதில்லை" என்பது. இதை வைத்துக்கொண்டு சங்கரர் முதலியோர், பிரம் மத்தை யன்றி வேறு பொருள் இல்லையென்று முடிவு கட்டிவிட்டார்கள்.

பிரம்மத்தைத் தவிர வேறு பொருளே இல்லை யானால், இதனை யார் யாருக்குக் கூறுவது? இந்த வார்த்தையினால், சொல்பவன் ஒருவன், கேட்பவன் ஒருவன் இருக்கவேண்டும் அன்றோ? பிரமமே மயங்குகின்றதா? பிரம்மத்தைத் தவிர வேறு பொருள் இருந்தால்தானே இந்த வசனம் உண்டாகும்?

பிரம்மத்தைத் தவிரத் தலைமைப் பொருள் வேறு இல்லையென்பதே இந்த வேத வசனத்தின் உட்பொருள்.

ந-த்வைதம் என்ற சொற்கள் சேர்ந்து அத்வைதம் என்றாயின. ந என்ற சொல்லுக்கு "சப்த கல்பத்ருமம்" என்ற நூல் ஆறு பொருள்கள் கூறியுள்ளது. அவற்றுள் மூன்று: அன்மை, இன்மை, மறுதலை என்பனவாம். இன்மை யென்ற பொருளில், அப்பிரகாசம் எனக்கொண்டு, ஒன்றேதான் என்றார் சங்கரர். மறுதலைப் பொருளில், அநீதி, அதர்மம் எனக் கொண்டு, இரு பொருள்கள் என்றார் மத்வர். மெய்கண்டார் அப்பிராமணன், பிராம்மண தருமம் கெட்டவன் என்று அன்மைப் பொரு ளில் கூறியருளினார். பொன்னும் பணியும் போல் உலகமும் இறைவனும் ஒன்றே என அபேதவாதங் கூறினார் சங்கரர். இதில் ஆபரணத்திற்கு வரும் குறைபாடுகள் யாவும் பொன்னுக்கும் வரும். ஆதலால் இது பொருந்தா தென உணர்க.

இறைவனும் உலகமும் ஒளியும் இருளும் போல் வேறு வேறே என்றனர் மத்வர். இது பேதவாதம். இருளும் ஒளியும் பகைப் பொருள். ஆதலால் உலகமும் இறைவனும் தொடர்பில்லாமல் போவதால் இது பொருந் தாமை யறிக.

பாஞ்சராத்திரிகள், சொல்லும் பொருளும் போல் பேதாபேதம் என்பர். சொல்லும் பொரு ளும் வேறே யாதலால், இவர் கூற்றும் பொருந்து மாறில்லை.

சிவாத்துவித சைவர்களும் மரமும் கிளையும் போல என, பேதாபேதமே கூறுவர். அபேத வாதம், பேதவாதம், பேதாபேதவாதம் என்ற மூன்றுமே பொருந்தா என்றால், உலகத்துக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்புதான் எவ் வகைப்பட்டது?

மேலே கூறிய மூன்றனுள் ஒன்றையே கூறுது, மூன்று தன்மைகளும் தன்னுள் காணப்படும் அத்வைதத் தொடர்பே உலகிற்கும் இறைவனுக் கும் உள்ள தொடர்பு என்கிருர் மெய்கண்ட சிவம்.

எண்ணுப் பெயர்முன் நகரம் அண்மைப் பொருளிலேயே வரும்.

ந ஏகம், அநேகம் என்பது போல நத்வைதம் அத்வைதம் என வந்தது.

அத்வைதம் என்பது இரண்டல்லாமை, பிரி வின்மை என உணர்க. பிரிவின்மை என்றத ஞல் பொருள் இரண்டுதான்; இரண்டாயினும் வேறு வேருய் நில்லாது ஒன்றியே நிற்கும் என்பது கருத்து.

இறைவன் உலகத்தோடு கலப்பினல் ஒன்ருகி யும், பொருள் தன்மையால் வேருகியும், உலகத் துக்கு உதவும் பொருட்டு உடனுகியும் நிற்கின்ருன்.

இறைவன், உலகு உயிர்களோடு, உடலும் உயிரும் போல் ஒன்ருகியும், கண்ணொளியும் கதிரொளியும் போல் வேருகியும், கண்ணொளியும் உயிரறிவும் போல் உடனுகியும் நின்று அருள் புரிவன்.

இந்த நுணுக்கமான கருத்துக்களை மெய்கண் டார் சுருங்கிய சொற்களால், "அவையே தானே யாய்" என்று கூறியுணர்த்துகின்ருர்.

அவையேயாய் - உயிரும் உடலும்போல் ஒன்ருகியும், தானேயாய் - பொருள் தன்மையால் கண்ணொளியும் கதிரொளியும் போல் வேருகியும், அவையே தானேயாய் - கண்ணொளியும் ஆன்ம அறிவும் போல் உடனுகியும், நின்று இறைவன் அருள் புரிகின்ருன்.

"ஈருய்முதல் ஒன்ருயிரு பெண்ஆண் குணம் மூன்ருய்
மாருமறை நான்காம்வரு பூதம்அவை ஐந்தாய்
ஆருர்சுவை ஏழோசையொடு எட்டுத்திசை [தானுய்
வேருய்உடன் ஆனுன்இடம் வீழிம்மிழ லையே"

என்று திருஞானசம்பந்தர் இதனை விளக்கி யுள்ளார்.

இறைவனுடைய பெருங்கருணையை நினைந்து நினைந்து நாம் உருகி வழிபாடு செய்தல் வேண் டும். இல்லையேல் நன்றி மறந்த பாவத்துக்கு ஆளாவோம்.

இறைவனுடைய திரு ஐந்தெழுத்தை இடை யருது ஓதினுல் பிறவிப் பெருங்கடலை எளிதில் கடந்துவிடலாம்.

சித்தத்தில் தித்திக்கும் மந்திரம் பஞ்சாக்கரம். சித்திக்கும் முத்திக்கும் அதுவே காரணம்.

"ஒன்று கண்டீர் உலகுக்கு ஒருதெய்வம்
ஒன்று கண்டீர் உலகுக்கு உயிராவது
நன்று கண்டீர் நமச்சிவாயப் பழம்
தின்று கண்டேற்கிது தித்தித்த வாறே."

—திருமந்திரம்.

சிவபஞ்சாட்சரத்தை அன்புடன் ஓதும் உத்த மர்க்குத் தரித்திரம் உண்டாகாது. இம்மை, மறுமை, வீடு என்ற மும்மை நலங்களும் உண் டாகும்.

"விச்வேச்வராய நரகார்ணவ தாரணுய
கர்ணும்ருதாய சசிசேகர தாரணுய
கர்ப்பூர காந்தி தவளாய ஜடாதராய
தாரித்ர்ய துக்க தஹனுய நமச்சிவாய."

"நரகமாகிய கடலைத் தாண்டச் செய்கின்றவன் சிவன். தரித்திரமாகிய துக்கத்தைத் தகனஞ் செய்கின்றவன்" என்று வசிட்ட முனிவர் சிவ பெருமானைத் துதிசெய்கின்ருர்.

"ஆயிரம் எழுத்தல்ல, நூறு எழுத்தல்ல, பத்தெழுத்தல்ல, ஐந்து எழுத்துத்தானே. இதைக்கூட உச்சரிக்கக் கூடாதா?" என்கின்ருர் இராமலிங்க அடிகளார்.

"ஆயிரமன் றேநூறு மன்றேஈ ரைந்தன்றே
ஆயிரம்பேர் எந்தைஎழுத் தைந்தேகாண்—நீயிரவும்
எல்லும் நினைத்தியென ஏத்துகினும் ஏத்தாய் வீண்
செல்லுமன் என்செய்கேன் செப்பு."

ஆறு நாளில் கண்ணப்பர் முத்தி பெற்ருர் என்று அறிகின்ருேம். அதிதீவிரமாக இறைவ னிடத்தில் அன்பு செலுத்திஞல், கண்ணப்பர் பெற்ற பேற்றை நாமும் பெறலாம்.

திருச்சிராப்பள்ளிக்கு அருகில் ஆனை பூசித்த தலம் திருவானைக்காவும், எறும்பு பூசித்த தலம் திருஎறும்பூரும் காட்சி தருகின்றன. பெரிய பிராணி யானை, சிறிய பிராணி எறும்பு. எறும்பு

மூதல் யானை ஈருக என்பார்கள். யானையும் இறைவனை வழிபட்டது. எறும்பும் இறைவனை வழிபட்டது. மனிதராகப் பிறந்த நாம் இறைவனை வழிபட வேண்டாமா?

இப்பிறவி தப்பினுல் எப்பிறவி வாய்க்குமோ?. ஆதலால் ஒவ்வொருவரும் சிவபூசை செய்தல் வேண்டும். திருமுறைகளை ஓதுதல் வேண்டும். திருவெண்ணீறணிந்து கண்டிகை புனைந்து ஆலய வழிபாடு செய்தல் வேண்டும். இறைவனிடத்தில் இடையருத அன்பு செய்ய வேண்டும். மால் என்றல் அன்பு. மால் ஆனர்க்கு அவன் எளியவன். அன்பு செய்வார் நெஞ்சில் நீங்காது நிற்பன்.

"அன்றுமா லானுர்க் கரிதாகி நீயுலகில்
இன்றுமா லானர்க் கெளிதன்றே—கொன்றைசேர்
பொன்னர் சடா மகுடப் புண்ணியா பொற்சபையின்
மன்ன சிதம்பரதே வா"

"தானவரு மாலும் சதுர்முகனும் மற்றுமுள்ள
வானவருந் தேடி மயங்கவே—ஞானமுடன்
நேயம் பெறுமடியார் நெஞ்சினுள்ளே நிற்பதென்ன
மாயம் சிதம்பர தேவா"

என்கின்ருர் குருநமச்சிவாயர்.

இதுகாறும் கூறியவற்றல், இறைவன் எங்கும் உளன் என்பதும், முருகனும் கணபதியும் சிவனது அத்வைத நிலையைக் காட்டினர்கள் என்பதும், இறைவன் உலகமெங்கும் உறையினும் கடல் மீன் போல் உலக மாயை ஒட்டாதவன் என்பதும், தியானத்தால் அவனைக் காணலாம் என்பதும், அத்வைதம் என்ற சொல்லின் உண்மைப் பொருள் இறைவன் ஒன்றய் வேருய் உடனுய் நின்று தண்ணருள் புரிவதே என்பதும், அப்பரமனை வழிபட்டு ஒவ்வொருவரும் உய்தல் வேண்டும் என்பதும் விளங்கும். இவை சிவநெறியிற் காணும் உண்மைகள்.

# உழப்பும் கழப்பும்

[கவியரசு கு. நடேச கவுண்டர்]

உழப்பும் கழப்பும் ஒன்றற்கொன்று மாருனவை. அவற்றல் விளையும் பயனும் அத்தகையனவே. உழப்பு என்பது உடலை வருத்திப் பயனுள்ள முயற்சி செய்தல். கழப்பு என்பது செய்யத்தக்கதை உரிய காலத்தில் செய்யாமல், சோம்பராய் மனம்போலத் திரிந்து வாணுளை வீணே போக்குவது. அவ்விரண்டனையும்பற்றிப் பட்டினத்துப் பிள்ளையார் திருவிடைமருதூர் மும்மணிக்கோவை பத்தாந் திருப்பாட்டில் அருளிச் செய்துள்ளார். அதனை ஈண்டுச் சிந்திப்பாம்.

உழப்பினுல் வாராத உறுதிகள் (நன்மைகள்) இல்லை. கழப்பினுல் வாராத கையறவு (துன்பம்) இல்லை. எங்ஙனம் எனில், எம்மனேர்கள் ஆகிய தொண்டவுழவர்கள், உழைப்பதைக் கொள்மின்.

அவர்கள் நெஞ்சமாகிய புனத்தில் உள்ள வஞ்சமாகிய கட்டையை அகழ்ந்து போக்கி, அங்கு முளைத்துள்ள அறுகுகளை வேரொடும் களைந்து, அன்பாகிய பாத்தி கட்டி, மெய் (உண்மை) யாகிய எருவைத் தூவி, ஐயம் என்னும் சொத்தையில்லாத பத்தி என்னும் சிறந்த வித்தினை இடுகின்றனர். நாள்தொறும் ஆர்வமாகிய தெளிந்த நீர் பாய்ச்சுகின்றனர். தடுப்பார்க்கு அடங்காமல் இடுக்கண் செய்கின்ற-ஐம்பொறிகளாகிய பட்டி மாடுகள் புகுந்து அழித்துவிடுமோ என்று அஞ்சி, அவை புக ஒண்ணுதபடி சாந்தம் (பொறுமை) ஆகிய வேலி கோலுகின்றனர். இவையெலாம் நன்கு அமைந்த பின்னர் - பத்தியாகிய வித்தினின்று ஞானமாகிய பெருமுளை முளைக்கிறது. கருணையாகிய இளந்தளிர் விடுகிறது.

ஞானப்பயிருக்குக் களையாய் முளைப்பவை காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மாற்சரியம் எனப்படுபவை. அவற்றை அறவே களைகின்றனர். இங்ஙனம் சேமம் அனைத்தும் செய்யவே, பத்திப் பயிர் ஓங்கி மெய்ம்மயிர்ப் புளகம் முகிழ்த்துக் கண்ணீர் அரும்பித் தெளிவாகிய மலர் மலர்ந்து திருவைந்தெழுத்தாகிய அரிய காய் தோன்றி மருதமாணிக்கமாகிய தீங்கனி பழுத்து அத்தொண்ட உழவர்கள் கைக்கு வாய்க்கின்றது. மருதமாணிக்கத் தீங்கனி எப்படி இருக்கின்றது? எனில், நஞ்சுபொதி கழுத்தும் மூன்று கண்களும் நான்கு தோள்களும் ஐந்து முகங்களும் பவள நிறமும் உடையது. நீறு பூசியது. அறுவகைச் சுவையினும் மிக்கு எழு சுவையுடையது. கண்டாலும் கேட்டாலும் கருதினுலும் களிதருவது. உண்டால் சொல்ல வேண்டுமா! அத்தகு அமுதக்

கனியை உண்டு எம்மனோர்கள் செம்மாந்திருக்கின்றனர். இது உழப்பின் வந்த உறுதி.

இனிச் சிலர் உழப்பைவிட்டுக் கழப்பித் திரிவர். அவர்கள், மனம் எனும் புனத்தை வறும்பாழாக்கினர். அங்கே காமமாகிய காடு மூடிற்று. ஐம்புல வேடர்கள் ஆறலைத்து (வழிப்பறி) செய்து திரிகின்றனர். இன்பம் என்ற பேய்த்தேர் (கானல் நீர்) தொடருந்தோறும் எட்டாமல் ஓடுகின்றது. கல்லாத புல்லறிவாகிய மான் அலமந்து வருந்துகின்றது. இச்சை (அவா) என்னும் விதை விழுந்து, யான் (அகங்காரம்) என்னும் நச்சுமா மரம் (எட்டி மரம்) மிக்கு முளைத்து, பொய் எனும் கவடுகளை நீட்டி, பாவமாகிய பல தழைகளைப் பரப்பி, கொடுமை அரும்பிக் கடுமை மலர்ந்து துன்பமாகிய பல காய்களைத் தூக்கிக் கடைசியில் மரணமே பழுக்கின்றது. அதனை நுகர்ந்து நரகில் வீழ்ந்து துன்புறுகின்றனர் கழப்பர்கள். தமக்கேனும் பிறர்க்கேனும் பயன்படாது கழியும் இயற்கையோடும் இவ்வுலகில் உளர். அந்தோ!

இதனைக் கூறுகின்ற திருப்பாட்டு :—

" உழப்பின் வாரா உறுதிகள் உளவோ?
கழப்பின் வாராக் கையறவு உளவோ?
நெஞ்சப் புனத்து வஞ்சக் கட்டையை
வேர்அற அகழ்ந்து, போக்கித் தூர்வை செய்து,
அன்பென் பாத்திகோலி, முன்புற
மெய்யெனும் எருவை விரித்து, ஆங்கு ஐயமில்
பத்தித் தனிவித்து இட்டு, நித்தலும்
ஆர்வத் தெண்ணீர் பாய்ச்சி, நேர்நின்று
தடுக்குநர்க்கு அடங்காது இடுக்கண் செய்யும்
பட்டி அஞ்சினுக்கு அஞ்சி, உட்சென்று
சாந்தவேலி கோலி, வாய்ந்த பின்
ஞானப் பெருமுளை நந்தாது முளைத்துக்
கருணை யிளந்தளிர் காட்ட, அருகாக்
காமக் குரோதக் களையறக் களைந்து,
சேமப் படுத்துழிச் செம்மையின் ஓங்கி
மெய்ம்மயிர்ப் புளகம் முகிழ்த்திட்டு அம்மெனக்
கண்ணீர் அரும்பிக் கடிமலர்மலர்ந்து புண்ணிய
அஞ்செழுத்து அருங்காய் தோன்றி நஞ்சுபொதி
காள கண்டமும் கண்ணொரு மூன்றும்
தோளொரு நான்கும் சுடர்முகம் ஐந்தும்
பவளநிறம் பெற்றுத் தவள நீறு பூசி
அறுசுவை யதனினும் உறுசுவை யுடைத்தாய்க்
காணினும் கேட்கினும் கருதினும் களிதரும்
சேணுயர் மருத மாணிக்கத் தீங்கனி
பையப் பையப் பழுத்துக் கைவர
எம்ம னோர்கள் இனிதின் அருந்திச்
செம்மாந் திருப்பச் சிலர்இதின் வாராது,
மனமெனும் புனத்தை வறும்பா ழாக்கிக்
காமக் காடு மூடித் தீமைசெய்
ஐம்புல வேடர் ஆறலைத் தொழுக
இன்பப் பேய்த்தேர் எட்டா தோடக்
கல்லா உணர்வெனும் புல்வாய் அலமர
இச்சைவித் துகுத்துழி யானெனப் பெயரிய
நச்சு மாமரம் நனிமிக முளைத்துப்
பொய்யென் கவடுகள் போக்கிச் செய்யும்
பாவப் பசுந்தழை பரப்பிப் பூவெனக்
கொடுமை அரும்பிக் கடுமை மலர்ந்து
துன்பப் பல்காய் தூக்கிப் பின்பு
மரணம் பழுத்து நரகிடை வீழ்ந்து
தமக்கும் பிறர்க்கும் உதவாது
இமைப்பில் கழியும் இயற்கையோர் உடைத்தே."



# பூசத்துறை

[திரு என். ராமகிருஷ்ணு]

"திருடமருதூர் போகலாம், வறியா?"

"திருட அங்கே போவானேன்?"

"இல்லேடா சோழப் பிரம்மஹத்தி! திருவிடை மருதூர் போகலாமா என்று கேட்டேன்."

எத்தனையோ அருமையான தலப்பெயர்கள் மனிதர்கள் வாயில் அறைபட்டுக் குற்றுயிரும் குலேயுயிருமாக இருக்கின்றன. திருவிடைமருதூர் என்ற பெயரைத் திருடமருதூர் என்று தேய்த்துச் சொல்லுகிருர்கள். அதனுல்தான் மேலே சொன்ன சம்பாஷணைக்கு இடம் உண்டாயிற்று.

இடைமருதூர் என்பது தலத்தின் பெயர். தலங்களின் பெயர்களுக்குத் திரு என்னும் அடை கொடுப்பது வழக்கமாதலால் திருவிடைமருதூர் என்று வழங்குகின்றது. மருதூர் என்று பல ஊர்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. இந்தத் தலத்தில் மருதமரம் க்ஷேத்திரத்திற்குரிய விருட்சம். ஆதலால் மருதூர் என்று பெயர் பெற்றது. மருத மரத்திற்கு அர்ஜுன விருட்சம் என்று பெயர் கூறுவர் வடமொழியில். இடைமருதூர் என்பது மத்யார்ஜுனம் என்று வழங்கும். வடக்கே உள்ள ஸ்ரீசைலமும் ஒரு மருதூர். அதற்கு மல்லிகார்ஜுனம் என்று பெயர். அது தலேமருதூர். இது மத்யார்ஜுனம் அல்லது இடைமருதூர். தெற்கே திருநெல்வேலி ஜில்லாவில் திருப்புடை மருதூர் என்று ஒரு தலம் இருக்கின்றது. புடார்ஜுனபுரம் என்பது அதற்குரிய வடமொழிப் பெயர். மல்லிகார்ஜுனத்திற்கும் புடார்ஜுனபுரத்திற்கும் இடையிலே இருப்பதால் இதற்கு மத்யார்ஜுனம் என்று பெயர் வந்தது. இத்தலம் தேவாரம் பெற்றது. இங்குள்ள பெருமானுக்கு மஹாலிங்கம் என்று பெயர். அம்பிகையின் திருநாமம் பெருமுலேநாயகி அல்லது பிருகத்குசாம்பிகை. அம்பிகை இங்கே தவம் செய்ததாக ஓர் ஐதிகம் உண்டு. அந்தக் கோலத்தில் மூகாம்பிகை என்ற பெயரோடு அம்பிகை எழுந்தருளியிருக்கும் தனிக் கோயில் ஒன்று இங்கே இருக்கின்றது. அதன் விமானம் வடநாட்டுக் கோயில் விமானத்தைப்போல் தோன்றும்.

நோயுற்றவர்களும், பேய் பிடித்தவர்களும், பைத்தியம் பிடித்தவர்களும் இந்தத் தலம் வந்து சேவை செய்து தங்கள் குறைகள் தீர்ந்து சுகமடைகின்றுர்கள். இன்றும் இவ்வாறு சேவை செய்பவர்களேக் காணலாம்.

விரிந்த பிராகாரங்களேயுடையது இத்திருக் கோயில். இதன் வெளிப் பிராகாரத்தை வலம் வந்தால் பல அசுவமேத யாகங்களேச் செய்த பலனே அடைவார்களாம். அதனுல் அதற்கு அசுவமேத பிரதக்ஷிணம் என்று பெயர் ஏற்பட்டிருக்கின்றது.

கோயிலுக்கு எதிரில் காருண்யாம்ருத தீர்த்தம் இருக்கின்றது.

இத்தலத்தில் வரகுண பாண்டியன், கண்ண பிரான், பட்டினத்தார், நளன், பலராமர், பகீரதன், பரீட்சித்து முதலியவர்கள் வழிபட்டுப் பேறு பெற்றுர்கள்.

பட்டினத்தாரும் அவர் சிஷ்யராகிய பத்திரகிரியாரும் இந்தத் தலத்தில் இருந்தார்கள். பட்டினத்தார் பசித்தபோது யார் வீட்டுக்கேனும் சென்று வாயிலில் நின்று அவ்வீட்டார் இடுவதைக் கையில் ஏற்று உண்டுவிட்டு ஆலயத்தின் கீழ்க் கோபுர வாசலில் இருந்து வருவார். பத்திரகிரியாரோ ஓடு ஒன்று வைத்திருந்தார். அதில் பிட்சை ஏற்று உண்பார். மிஞ்சியதை ஒரு பெண் நாய்க்குப் போடுவார். அந்த நாய் எப்போதும் அவருடனே இருந்தது. அவர் ஆலயத்தின் மேற்குக் கோபுர வாசலில் இருந்து வந்தார்.

ஒருநாள் ஒரு பிச்சைக்காரன் கீழைக் கோபுர வாசலில் இருந்த பட்டினத்தாரிடம், "ஐயா பிச்சை" என்று கேட்டான். அவரே பிச்சைக்காரர் ஆயிற்றே! அவர் சிரித்தபடியே, "என்னிடம் என்ன அப்பா இருக்கின்றது? அதோ மேலேக் கோபுர வாசலில் ஒரு சம்சாரி இருக்கிருன்; அவனேப் போய்க் கேள்" என்றுர். அந்தப் பிச்சைக்காரன் அப்படியே மேலேக் கோபுர வாசலுக்கு வந்து பத்திரகிரியாரிடம் பிச்சை கேட்டான். அவர், "என்னிடம் என்ன அப்பா இருக்கிறது! நான் ஒரு பரதேசி" என்றுர். உடனே பிச்சைக்காரன், "கீழை வாசலில் இருக்கும் பரதேசி உங்களேச் சம்சாரி என்று சொன்னுரே" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

அந்த வார்த்தை பத்திரகிரியார் உள்ளத்தில் தைத்தது. உடனே தம் ஓட்டை முன்னே கிடந்த நாயின்மீது போட்டு உடைத்தார். ஓடு

உடைந்தது. நாயும் இறந்து போயிற்று. இந்த நாய் மறுபடியும் ஓர் அரசனுடைய பெண்ணுகப் பிறந்தது. காருண்யாம்ருதத் தீர்த்தக் கரையில் நாயடியாள் கோவில் என்று, ஒரு சிறிய கோயில் இருக்கின்றது. இறந்த நாயின் சமாதிக் கோயில் போலும். இத்தலம் காவிரிக் கரையில் இருக்கின்றது. காவிரித் துறைக்குக் கல்யாண தீர்த்தம் அல்லது பூசத்துறை என்று பெயர். இங்கே உள்ள புஷ்ய மண்டபத்தை அச்சுதப்ப நாயக்கருடைய மந்திரியாக இருந்த கோவிந்த தீட்சிதர் கட்டினுர்.

தைப்பூசத்தில் இங்கே திருத்தேர் விழா நடைபெறும். இறைவன் பூசத்துறைக்கு எழுந்தருளித் தீர்த்தம் கொடுப்பது உண்டு. பல ஊர்களிலிருந்து பக்தர்கள் இங்கே நீராடக் கூட்டங் கூட்டமாக வருவார்கள்.

இத்தலத்திலுள்ள பெருமான் மஹாலிங்கம் என்று பெயர் பெற்றிருப்பதற்கு ஏற்ப இதைச் சூழ்ந்த பல தலங்களைப் பரிவார தேவதைகளுக்குரிய இடமாகச் சொல்வது வழக்கம். அந்த வகையில் திருவலம்சுழி விநாயகர் தலம், சுவாமிமலை முருகன் தலம், திருவாவடுதுறை நந்திகேசுவரர் தலம், சூரியனுர் கோவில் சூரியத் தலம், சிதம்பரம் நடராஜர் தலம், திருவாப்பாடி சண்டிகேசுவரர் தலம், ஆலங்குடி தட்சிணு மூர்த்தி தலம்.

இதற்கும் பழைய தலபுராணம் ஒன்று உண்டு. கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் மற்ரெரு புராணத்தை இயற்றியுள்ளார். பட்டினத்துப் பிள்ளையார் ஒரு மும்மணிக்கோவை பாடியிருக்கின்றுர். மஹாவித்துவான் ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பாடிய உலாவும், அநந்த பாரதிகள் பாடிய நொண்டி நாடகமும் இத்தலத்திற்கு இருக்கின்றன.

இந்த ஆலயம் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்தது. அந்த ஆதீனத்தைச் சார்ந்த கட்டளைத் தம்பிரான் ஒருவர் இந்தக் கோயிலின் கட்டளையை விசாரணை நடத்தி வருகின்றுர். திருவாவடுதுறை ஆதீனத்திற்குரிய கட்டளை மடம் ஒன்று இங்கே இருக்கின்றது.

இந்தப் பெருமானை மாணிக்கவாசகர், "ஆனந்தத்தேன் இருந்த பொந்து" என்று பாடுகின்றுர்.

# திருவாசகம்

[பேராசிரியர் டாக்டர் மு. வரதராசன், சென்னைப் பல்கலைக்கழகம்]

மாணிக்கவாசகர் ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்குமுன் தமிழ்நாட்டில் வாழ்ந்து, இறைவன் அருளைப் பெற்ற ஞானி. அவருடைய பாட்டுக்கள் உயர்ந்த அநுபவத்தை எடுத்துரைக்கும் ஞானப் பாடல்கள்; நெஞ்சை உருக்கும் கனிவு அமைந்தவை. உருக்கமான பக்தியும், உயர்ந்த மெய்யுணர்வு நிலையும் அந்தப் பாட்டுக்களில் ஒருங்கே காணப்படுகின்றன. "திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்" என்பது பழமொழியாகியுள்ளது. "மாசகன்ற நீ திருவாய் மலர்ந்த தமிழ் மாமறை" என்று இராமலிங்க சுவாமிகள் திருவாசகத்தைப் போற்றிக் கூறியுள்ளார்.

மாணிக்கவாசகர் மதுரையில் பாண்டிய அரசனிடம் அமைச்சராக இருந்தவர். நாட்டை ஆளும் பொறுப்பில் பல காலம் பயின்றவர் ஆகையால், உலகியல் அறிவு நிறைந்தவராக விளங்கினுர். ஆயினும் அந்த அமைச்சர் பதவியோ, அதனுல் பெற்ற செல்வாக்கோ, புகழோ அவர் மனத்துக்கு நிறைவு தரவில்லை. உலக வாழ்வு செல்வத்தாலும், புகழாலும் எவ்வளவு நிறைந்திருந்தபோதிலும் ஏதோ ஒரு பெருங் குறை உடையதாகவே தோன்றியது.

தொலைவே இருந்து ஒரு குன்றைக் காணும் சிறுவனுக்கு, அதன்மேல் ஏறி நிற்க வேண்டும் என்ற ஆசை தோன்றும். அதன் அருகே செல்லும்போது அவனுக்கு ஒரு மகிழ்ச்சி ஏற்படும். அந்த மகிழ்ச்சி நீடிக்காது. அதற்குள் ஒரு குறை தோன்றும். குன்றின் அடிப்பகுதியில் உள்ள ஒரு பாறையின்மேல் சிறுவன் ஏறுவான். அந்தப் பாறைமேல் நின்று கீழே பார்த்தால், தான் ஏறிவந்த உயரத்தை உணர்ந்து மகிழ்வான்; மறுபடியும் திரும்பி அந்தக் குன்றின் மேற்பகுதியைப் பார்த்தவுடன், அந்தச் சிறு மகிழ்ச்சி மறைந்து, குறை தோன்றும். இன்னும் மேலே ஏறிப் பார்க்கவேண்டும் என்ற ஆசை ஏற்படும். அவ்வாறே சிறிது சிறிதாக ஏறி ஒவ்வோர் இடத்திலும் நின்று கீழே நோக்கும்போது மகிழ்ச்சியும், மேலே நோக்கும்போது மறுபடியும், மறுபடியும் குறையும் தோன்றும். குன்றின்

உச்சியை அடைந்து அங்கிருந்து பார்க்கும் போது, பெருமகிழ்ச்சி போல் தோன்றும்; குறிக்கோளை அடைந்துவிட்டாற் போன்ற நிறைவு மனத்தில் ஏற்படும். ஆனால், எல்லையற்று விரிந்து உயர்ந்து கிடக்கும் வானப் பரப்பை நோக்கி உணரத் தலைப்பட்டவுடன், அந்த மகிழ்ச்சியும் மறையும்; வானத்தே உயர்ந்து பறக்கும் பறவைகளைப்போல் பறக்கும் ஆற்றல் இல்லையே என்ற குறை ஏற்படும்.

உலக வாழ்க்கையும் அப்படிப்பட்டதே ஆகும். இளமை முதல், ஆற்றல், செல்வம், பதவி முதலியவற்றில் படிப்படியே உயரவேண்டும் என்ற ஆசையும், ஒவ்வொரு படியையும் அடையும் போது மகிழ்ச்சியும், பிறகு அடுத்த படியை எண்ணி ஏங்கும் குறையும் மாறிமாறி ஏற்படும். உயர்ந்த அமைச்சர் பதவியும், பெருமையும், செல்வாக்கும் பெற்றிருந்த மாணிக்கவாசகரின் வாழ்க்கையில் உணரப்பட்ட குறை, குன்றின் மேல் ஏறி நின்றும் பறக்க முடியவில்லையே என்று உணரும் குறைபோன்றது ஆகும். எல்லாம் பெற்ற பிறகும், சிவபெருமான் திருவருளைப் பெறவில்லையே என்ற குறை அவர் நெஞ்சத்தில் இருந்து வந்தது.

திருப்பெருந்துறை என்ற ஊரில் அந்தக் குறை தீரும் வழி பிறந்தது. சிவபெருமான் அவர் விரும்பும் குருவடிவாய் எழுந்தருளினார். ஒரு குருந்த மரத்தின் நிழலில் அடியார் கூட்டத்தின் நடுவே காணப்பட்டார். மாணிக்கவாசகர் அந்தப் பெருமானின் கருணை நோக்கினால் கவரப்பட்டார்; குருவருளால் ஆட்கொள்ளப்பட்டார்.

"கண்ணால் யானும் கண்டேன் காண்க
அருள்நனி சுரக்கும் அமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க
புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானும் தேறினன் காண்க
அவனெனை ஆட்கொண் டருளினன் காண்க"

என்று அவரே தாம் பெற்ற பெரும்பேற்றை விளக்கியுள்ளார்.

குருவடிவாய் வந்தவரின் திருவருளைப் பெற்றவுடன், மாணிக்கவாசகர் புத்துணர்வு பெற்றார்; உடம்பெல்லாம் தேன்பாய்ந்தது போல் உணர்ந்தார்; உள்ளத்தில் ஆனந்த அநுபவம் உற்றார். தம்மை மறந்தார்; வியந்தார்; மயங்கினார்; இன்னது என்று சொல்ல இயலாத நிலை அடைந்தார்; அந்நிலையில் ஆட்கொண்ட பெருமான் மறைந்தார். தெளிவு பெற்றுத் தேடிய மாணிக்கவாசகர் அவரைக் காணவில்லை. உடனே அலறினார்; கலங்கினார்; ஓலமிட்டார்; ஏங்கினார்; பலவாறு வேண்டினார்; பாடினார். இந்த நிலைகளே அவர் பாடிய திருவாசகப் பாட்டுக்கள் பலவற்றில் காணப்படுவன. சிலவற்றில் அவர் பெற்ற ஆனந்த அநுபவமும், வேறு சிலவற்றில் பெருமானை விட்டுப் பிரிந்த பிரிவாற்றாமையும், இன்னும் சிலவற்றில் அவர் பெற்ற தெளிந்த மெய்யுணர்வும் ஆகிய மூவகைப் பொருள் அமைந்தவை திருவாசகப் பாட்டுக்கள்.

"பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
நாட்டவர் மருளவும் கேட்டவர் வியப்பவும்
கடக்களி றேற்றாத் தடப்பெரு மதத்தின்
ஆற்றே னாக அவயவம் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தனன்......
தடக்கையின் நெல்லிக் கனியெனக் காயினன்
சொல்லுவ தறியேன் வாழி முறையோ
தரியேன் நாயேன் தானெனைச் செய்தது
தெரியேன் ஆவா செத்தேன் அடியேற்கு
அருளிய தறியேன் பருகியும் ஆரேன்
விழுங்கியும் ஒல்ல கில்லேன்
செழுந்தண் பாற்கடல் திரையுரைவித்து
உவாக்கடல் நள்ளுநீர் உள்ளகம் ததும்ப
வாக்கிறந் தமுதம் மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன் கொடியேன் ஊன்தழை
குரம்பை தோறும் நாயுடல் அகத்தே
குரம்பைகொண் டின்தேன் பாய்த்து நிரம்பிய
அற்புத மான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றினன் உருகுவது
உள்ளம் கொண்டோர் உருச்செய் தாஅங்கெனக்கு
அள்ளூ றாக்கை அமைத்தனன் ஒள்ளிய
கன்னல் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையும் இருப்ப தாக்கினன் என்னில்
கருணை வான்தேன் கலக்க
அருளொடு பராவமு தாக்கினன்."

இவ்வாறு அவர் வியந்து சொல்லும் அநுபவம், சொல்லுக்கு அடங்காதது என்கிறார்; சொல்லுவது அறியேன் என்கிறார்.


"அரைசனே அன்பர்க்கு அடியனே னுடைய
அப்பனே ஆவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே
திரைபொரா மன்னும் அமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
உரையுணர் விறந்துநின் றுணர்வதோர் உணர்வே
யான்உன்னை உரைக்குமா றுணர்த்தே."

இது முதலான பல பாட்டுக்களில் அவர் பெற்ற ஆனந்தத்தை நினைந்து மகிழ்கிறார். "அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்" என்று பூரிப்படைகிறார். குருபிரானாக வந்தவர், தம்மையே மாணிக்கவாசகர்க்குத் தந்து, அதற்கு ஈடாக அவரையே பெற்றுக்கொண்டதாகச் சொல்கிறார். "தந்தது உன் தன்னைக் கொண்டது என்





‘ தீசேர் மெழுகு ஒப்பாய் ;...
இன்னம் துயிலுதி யோ ?’



கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
எழில் இயம்ப இயம்பும் வெண் சங்கெங்கும்

றன்னை" என்று சதுரப்பாட்டை எடுத்துப் பேசுகிறார்.

ஆனால் குருபிரான் மறைந்த பிறகு பிரிவாற்றுமையால் நைந்து நைந்து உருகி முறையிடுகிறார். "என்னை நீயே வலிய வந்து ஆட்கொண்டாய். அப்போது காணாத குற்றம் இப்போது என்னிடம் புதிதாகக் கண்டாயோ? என்னை இந்த மண்ணுலகில் தனியே வருந்துமாறு விட்டுச் சென்ற காரணம் என்னவோ!" என்று முறையிடுகிறார்.

"ஒன்றும் போதா நாயேனை
உய்யக் கொண்ட நின்கருணை
இன்றே இன்றிப் போய்த்தோதான்
ஏழை பங்கா எங்கோவே
குன்றே அனைய குற்றங்கள்
குணமாம் என்றே நீகொண்டால்
என்தான் கெட்ட திரங்கிடாய்
எண்தோள் முக்கண் எம்மானே."

இவ்வாறு முறையிடுதல் மட்டும் அல்லாமல், இறைவனைப் பிரிந்த பிரிவால் மிக வருந்துகிறார்; வாடிச் சோர்கிறார். மீண்டும் எழுந்தருளித் தம்மை ஆட்கொள்ள வேண்டும் என்றும், தம்மிடம் வருமாறு அருள்புரிய வேண்டும் என்றும், அவ்வாறு தம்மை ஏற்றுக்கொள்ளாவிடில் தாம் வாழ விரும்பவில்லை என்றும் முறையிடுகிறார். "யாரொடு நோகேன்? ஆர்க்கு எடுத்துரைக்கேன்?" என்கிறார். "வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்" என்று தம் முடிவை எடுத்துரைக்கிறார்.


மதுரையில் அமைச்சர் பதவியில் ஒட்டியிருந்த காலத்திலேயே, அவர்தம் நெஞ்சின் ஆழத்தில் ஒரு குறை இருந்து வந்தது; கடவுளருளை நாடிய பசி இருந்து வந்தது. திருப்பெருந்துறையில் குருபிரானின் அருளைப் பெற்றுப் பிரிந்த பிறகு, அந்தக் குறை தெளிவான வடிவம் பெற்றது. அதுவரையில் எது எதையோ மனத்திற்குத் துணை என்று கொண்டிருந்ததை எல்லாம் துணிந்து கைவிட்டார். கடவுளை மனத்துணை எனக் கொண்டார். பதவி முதலியவற்றை வாழ்முதல் என்று கொண்டிருந்த மயக்கத்தை அடியோடு துறந்தார்; இறைவனே வாழ்முதல் எனத் தெளிந்தார். செல்வம் முதலியவற்றை எய்ப்பில் வைப்பு என எண்ணியிருந்த பொய்ம்மை தீர்ந்தார்; சிவனருளே எய்ப்பில் வைப்பு என்ற மெய்யுணர்வு பெற்றார். "மனத்துணையே என்றன் வாழ்முதலே எனக்கு எய்ப்பில் வைப்பே" என்று பாடினார். அந்நிலையில், இறைவனின் அருளை நாடி அடைவதற்குத் தடையாக—இடையூறாக—இருந்தது தம் உடம்பே என உணர்ந்தார். "துயர்தரும் இந்த உடம்பு என் ஆன்மிக முயற்சிக்கு இடையூறாய், என்னைச் சிறைப்படுத்தும் ஒரு வலிய வலையாக உள்ளதே" என்றார். இந்த வலையை இனி ஒரு தினைப்பொழுதும் பொறுத்திருக்கமாட்டேன் என்றார்: "தினைத் துணையேனும் பொறேன் துயராக் கையின் திண் வலையே."

இத்தகைய பாட்டுக்களில் நெஞ்சை உருக்கும் நீர்மையைக் காண்கிறோம். ஒவ்வொரு தொடரும் நெகிழ்ச்சியைப் பெருக்கி நெக்குருகச் செய்ய வல்ல கனிவுடன் அமைந்திருக்கக் காண்கிறோம். மாணிக்கவாசகர் நெஞ்சத்தின் உருக்கத்திலிருந்து பிறந்த சொற்கள் ஆகையால், திருவாசகப் பாட்டுக்கள் இன்றும் நூறாயிரக்கணக்கானவர்களின் நெஞ்சை உருக்கி வருகின்றன. உள்ளங்காலிலிருந்து உச்சி வரையில் உடம்பு முழுதும் நெஞ்சமே ஆகி உருகவேண்டும் என்று ஆசைப்பட்டவர் அவர். உடம்பெல்லாம் கண்ணாக இருந்து கண்ணீர் வெள்ளம் பெருக வேண்டும் என்று விழைந்தவர் அவர்:

"உள்ளந்தான் நின்றுச்சி அளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா!
வெள்ளந்தான் பாயாதால்."

இவ்வாறான கனிவும் உருக்கமும் மிகுந்த பக்திப் பாட்டுக்களுக்கு இடையே, தெளிந்த உண்மைகளை உணர்த்தும் ஞானப்பாட்டுக்களும் உள்ளன. உயிரின் தன்மை என்ன, உலக வாழ்க்கை எப்படிப்பட்டது, வாழ்க்கையில் உய்வதற்கு வழி என்ன, இறைவன் தன்மை என்ன, திருவருள் கூடுவது எவ்வாறு முதலிய பல உண்மைகளைத் தெளிய உணர்த்தும் உயர்ந்த தத்துவப் பாட்டுக்கள் திருவாசகத்தில் உள்ளன.





பெருநல மாமுலை அம்மை

# இனியன் தன் அடைந்தார்க்கு இடைமருதனே

[பேராசிரியர் டாக்டர் வ. ஆ. தேவசேனபதி, M.A., Ph.D.]

திருவிடைமருதூரில் கோயில் கொண்டிருக்கும் இறைவனை மூவர் முதலிகளும் பாடி வணங்கியுள்ளனர். அவர்களுடைய அருள் வாக்கில் சிலவற்றை நினைவு கூர்வது இக் கோயிலின் குடமுழுக்கு விழா மலருக்குப் பொருத்தமாயிருக்கும்.

நம்மைவிட நமக்கு இனியர் வேறெவருமிலர் என்னும் நிலையில் நம்மில் பெரும்பாலோரின் வாழ்க்கை கழிகிறது. இத்தகைய ஆழ்ந்த தன்னலம், மனைவி, மக்கள், உற்றார், உறவினர், நம் நாட்டவர், நம்மொழியினர் என்பவர்மீது அன்பு செலுத்தும்போது ஓரளவு குறைகிறது. நம்முடன் தொடர்புடையவர்மீது மட்டுமன்றி அனைத்து உயிர்கள்மீதும் அன்பு பரவும்போது தன்னல விருப்பம் மிகக் குறைந்த நிலையில் உள்ளது. இறுதியாக அனைத்தையும் படைத்துக் காத்துத் தன் அருளுக்கு உரிமையாக்கும் இறைவன்மீது அன்பைச் செலுத்தும்போது தன்னல விருப்பமும், தன்முனைப்பும் மறைந்தொழிகின்றன. நமக்குள்ளும் புறம்புமாக உள்ள இறைவனை நம் வாழ்க்கையின் மையமாகக் கொண்டால், நம் வாழ்க்கை வளமுறுவதோடு பிறர் வாழ்க்கையை வளமுறச் செய்யும் ஆற்றலும் பிறக்கும். இவ்வுண்மைகளை நினைவு படுத்தும் வகையில்,

> " என்னி லாரும் எமக்கினி யாரில்லை
> என்னி லும்இனி யாஞெரு வன்உளன்
> என்னு ளேஉயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
> கென்னுள் ளேநிற்கும் இன்னம்ப ரீசனே "

என்று அப்பர் பாடுகிறார்.

இனிமை எத்தகையது? பொதுவாகக் கூறுமிடத்து அதனைப் பருமை நிலையில் உண்பதில் பெறும் இனிமையாகவும், பருமை சற்றுக் குறைந்த நிலையில் பாவை நல்லாரிடம் கொள்ளும் தொடர்பின் இனிமையாகவும், சற்றே நுட்பமான நிலையில் பிறர்மீது ஆட்சி செலுத்துவதில் நுகரும் இனிமையாகவும் வகைப்படுத்தலாம். முன்னவை இரண்டும் உடலளவில் பெறப்படும் இனிமை. மூன்றாவது உள்ளத்தின் அளவில் பெறப்படுவது. ஆயின், நிலையான இனிமை உயிர் அளவில் பெறப்படுவதேயாகும். இவ் வினிமை இறைவனோடு இடைவிடாத தொடர்பு கொள்ளும்போதுதான் பிறக்கிறது. இவ்வினிமையே தெவிட்டாத இனிமை. இறைவன் இவ் வினிமையே உருவானவன் என்பதை அப்பர் நமக்கு அறிவுறுத்துகிறார் :

> " கனியி னும்கட்டி பட்ட கரும்பினும்
> பனிம லர்க்குழல் பாவைநல் லாரினும்
> தனிமு டிகவித் தாளும் அரசினும்
> இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே."

நம்மிலும் இனியன்—தன்னில்தான் இனியன், அனைத்தினும் இனியன், தன்னடைந்தார்க்கு இனியன்—ஆகிய இறைவனிடம் நாம் தொடர்பு கொள்ளாது பிறவற்றோடு, பிறரோடு தொடர்பு கொள்கிறோம். இனிப்பதுபோலத் தொடங்கும் இத்தொடர்பு எட்டிக்காயாகக் கசந்து போகிறது. சுந்தரர் இவ்வுண்மையை நமக்கு நினைவூட்டுகிறார். பெறற்கரிய மனித வாழ்க்கை மின்னலையொத்த நிலையிலா, நொடிப்பொழுதில் தோன்றி மறையும் வாழ்க்கை : 'புல் நுனைப்பனி வெங் கதிர் கண்டாற்போலும் வாழ்க்கை'—நிலையற்ற இவ்வாழ்க்கையில், 'இன்று என் செய்வது, நாளை என் செய்வது?' என்னும் கவலைக்குள்ளாகி இடருறுகின்றோம். இவ்வாறு தக்க குறிக்கோளின்றிக் கவலைக்கே இடமாக உள்ள வாழ்க்கைக்கு, ஓரளவோ பெரிதோ காரணமாக இருப்பது நம் பழவினை.

> " முந்திச் செய்வினை இம்மைக்கண் நலிய
> மூர்க்க னாகிக் கழிந்தன காலம் "
>
> " முன்ன மேஉன சேவடி சேரா
> மூர்க்க னாகிக் கழிந்தன காலம் "

என்றெல்லாம் பழவினை காரணமாக நிகழும் இடர்ப்பாடுகளைச் சுந்தரர் குறிப்பிடுகிறார்.

> " ஏழை மானுட இன்பினை நோக்கி
> இளைய வர்வலைப் பட்டிருந் தின்னம்
> வாழை தான்பழுக் கும்நமக் கென்று
> வஞ்ச வல்வினை யுள்வலைப் பட்டு......"

என்னும் போக்கில் போகின்ற வாழ்க்கை நரைப்பு, மூப்பு, பிணி இவற்றிற்குள்ளானது. வாழ்க்கை தேய்ந்து போவதைச் சுந்தரர் அரைத்த மஞ்சளுக்கு ஒப்பிடுகின்றார். ஐம் புலன்கள் நம் வசப்படாமல் தம் வசமாக நம்மை இழுத்துச் செல்வதையும் அவர் நினைவூட்டுகிறார்.

பிறவி வீணுகப் போகாமல் பயன்படுவதற்கு இறைவனே வழிகாட்ட வேண்டும் :

" எவ்வகை எனக்கு உய்வகை யருள்வாய்
இடைம ருதுறை எந்தை பிரானே "

என்று சுந்தரர் இறைவனை வேண்டிக்கொள்கிறுர்.

தம் பதிகத்தை ஓதுவதால் இறைவனருளால் விளையும் நன்மையையும் சுந்தரர் குறிப்பிடுகிறுர். இடைமருதுறைகின்ற இறைவனை,

" உரைக்கும் ஊரன் ஒளிதிகழ் மாலை
உள்ளத் தாலுகந் தேத்தவல் லார்கள்
நரைப்பு மூப்பொடு நடலையு மின்றி
நாதன் சேவடி நண்ணுவர் தாமே."

திருஞானசம்பந்தர் பதிகங்களிலும் இடைமருதுறை இறைவனை வழிபடுவதால் ஏற்படும் நன்மைகள் விளக்கப் பெறுகின்றன :

" கருதுசம்பந்தன் மருத ரடிபாடிப்
பெரிதும் தமிழ்சொல்லப் பொருத வினைபோமே."

வீடு பேற்றுக்கே தமிழால் வழிகண்டவரல்லரா ஞானசம்பந்தர்? அவர் பதிகங்களை யோதுவதால் இறைவன் மகிழ்ந்து நம் வினைகளைப் போக்கி வீடுபேறுக்கம் பெய்வார் என்பது சைவப் பெருமக்களின் கடைப்பிடி.

பழைய வினைகள், வல்வினைகள் நம்மோடு போர் செய்கின்றன. இவ்வினைகள் நம் செயல்களால் நாமே ஏற்படுத்திக்கொண்டவைதாம். உடன்பிறந்தே கொல்லும் நோய்போன்று இவை நமக்குப் பகையாகிப் போரிடுகின்றன.

ஆயினும்,

" இடைமரு தடையநம் இடர்கெடல் எளிதே "
" இடைமருதினை
வலமிட உடல் நலிவிலது......"

என்றெல்லாம் ஞானசம்பந்தர் பாடுகையில் வினையின் விளைவுகளாகிய உடல்துன்பம் உள்ளத்துயர் ஆயவை யனைத்தும் இறைவனை வழிபடுவதால் அறவே நீங்கும் என்னும் எளிய வழியை நமக்குக் காட்டுகிறுர்.

........" இடைமரு தெனும்நகர்
உடையவ ரடியினை தொழுவதெம் உயர்வே."

எது சரியான உயர்வு என்பதை இங்கே ஞானசம்பந்தர் விளக்குகிறுர். இறைவனைத் தொழுவதற்காகப் பணிவதே உயர்வு. இவ்வாறன்றி இறைவனைத் தொழாமல் நம்மையே உயர்ந்தவர்களாகக் கொண்டு பிறர் நம்மைத் தொழவேண்டும் என்று ஆணவ முனைப்பால் நம் வாழ்க்கையைப் பாழாக்கிக்கொள்கிறோம். இதனுல் விளைவது தாழ்வு. இவ்வாருக ஆன்மிய வாழ்க்கையில் உயர்வு தாழ்வாகிறது; தாழ்வு உயர்வாகிறது! நம்மை உயர்த்திக்கொள்வது தாழ்வில் முடிகிறது. நம்மைத் தாழ்த்தி இறைவனைத் தொழுவதில் உயர்வு பிறக்கிறது.

சுருக்கமாகக் கூறின் இறைவனைத் தொழுவதால் இம்மை அம்மை நலன்களனைத்தும் விளைகின்றன.

" இம்மை வானவர் செல்வம் விளைத்திடும்
அம்மை யேற்பிற வித்துயர் நீத்திடும்
எம்மை யாளும் இடைமரு தன்கழல்
செம்மை யேதொழு வார்வினை சிந்துமே."

எனவே இடை மருதிறைவன் இனியன் அல்லனே?



# மெய் மறந்தேன்

[புலவர் க. முருகையன், M.L.A.]

செந்தமிழ் சிறக்கும் நந்தமிழ் நாட்டில் "வாசகம்" என்ருல் தேனினுமினிய திருவாசகம் என்றே யாவரும் உணர்வர். பத்திச் சுவை நனி சொட்டச் சொட்ட மணிவாசகப் பெருந்தகையார் பாடியருளிய பாடல்களில் ஒன்று என் உள்ளுணர்வைத் தூண்டிற்று. பேராசிரியப் பெருமக்கள் கண்டு தெளிந்து, கவினுரை தந்து விளக்கமும் விரிவும் காட்டிச் சென்றமையைக் கற்றவர் அறிவர்.

மணிவாசகப் பெருமான் அருளிய அத்தனைப் பாடல்களும் தெவிட்டாத தெள்ளமுதப் பாடல்களே என்ருலும் என்னை மிகவும் கவர்ந்து, என் உள்ளத்தில் என்றும் நீக்கமற நிலேத்து நிற்கும் பாடல்,

"பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே"

என்பது.

இப்பாடலைப் பன்முறை பாடும்போதும், இசையாசிரியர் பாடுங்கால் கேட்கும்போதும் மணிவாசகரின் சொல்லாற்றலை எண்ணி எண்ணி வியந்தேன். இப்பாடலில் அவர், 'இறைவனிடம் ஈடுபாடு கொண்டால் ஊனெலாம் உருகும், உள்ளத்தே ஒளி பெருகும், உலப்பிலா ஆனந்தமான தேன் உணர்வில் ஊற்றெழுந்து பெருகும் என்பதை உணராது, எங்கெங்கோ திரிந்தேன். இவ்வாறு உன்னை நினையாது திரிந்த இடங்களில் எல்லாம் முன்னும் பின்னும் வந்து, என் கண்கள் உன்னைக் காணும்படி, புறம்புறந் திரிந்து என் ஊனினை உருக்கினுய், உள்ளொளி பெருக்கினுய், ஆனந்தமான தேனினைச் சொரிந்தாய்' என்று கூறுவதனுல் நாம் இறைவனை விரும்புதல் போலவே இறைவனும் அடியார்களை விரும்புகின்ருன் என்பதை உணரமுடிகிறது. நாம் நம்முடைய அன்பிற்குப் பற்றுக்கோடாக இறைவனை ஆக்கிக்கொள்வதால், பேரின்பம் அடைகிருேம். அஃதே போன்று, இறைவனும் தன்னுடைய அருளுக்குப் பற்றுக்கோடாக நம்மை ஆக்கிக்கொள்ளுகிருன். நாம் அவனைத் தேடி அலேவது போன்றே, அவனும் நம்மில் நல்லவர்களைத் தேடி அலேகின்ருன் என்ற உண்மையை மாணிக்கவாசகரின் திருவாக்கால் உணரமுடிகிறது.

ஆண்டவனின் இவ்வருள் நிலேயை விளக்குதற்கு இவ்வுலகில் ஒரே ஓர் உவமைதான் மாணிக்கவாசகருக்குக் கிடைக்கிறது. குழந்தை பசி மறந்து, தான் உண்ண வேண்டிய பால் மறந்து உறங்குகிறது. இக் குழந்தையின் தாய், குழந்தை பால் உண்ணவேண்டிய நேரம் கடந்து விட்டதைத் தானே உணர்ந்து, குழந்தைக்குப் பசி மிகுதியாக இருக்குமே என்பதையும் தானே உணர்ந்து, குழந்தையை விழிப்புறச் செய்து, பாலே ஊட்டுகிருள். முதலில் பாலே மறந்து உறங்கிய குழந்தை, வயிறு நிரம்பியிருக்கும் என்று தாய் விலக்கினுலும், அக்குழந்தை விடுவதாயில்லே.

இக்காட்சி மாணிக்கவாசகரின் உள்ளத்தை நெகிழ வைத்துவிட்டது. தம்மிடத்தே இறைவன் நடந்துகொண்ட அருட்செயலுக்கு, தாய் தன் குழந்தையிடத்தே நடந்துகொள்ளும் அந்த அன்புச் செயல் ஒப்பாகுமா என்று சிந்திக்கிருர். 'தாயினும் சாலப் பரிந்து' என்று கூறுவதாலே, தாயின் அன்பு வெளிப்பாட்டைக் காட்டிலும், இறைவனின் அருள் வெளிப்பாடு ஒரு படி மேலோங்கி நிற்பதாக உணர்கிருர். குழந்தை பால் குடித்து நீண்ட நேரமாகிவிட்டது என்ற நினைவு தாய்க்கு வந்ததற்குக் காரணம், குழந்தை மேல் கொண்டுள்ள அன்புமட்டுமன்று; நேரம் நீண்டுவிட்டதால் அவள் மார்பகத்தில் பால் நிறைந்து விம்முகிறது. அதனுல் மார்பகத்தில் வலி தோன்றுகிறது. எனவே, குழந்தை நினைவு தாய்க்கு வருகிறது. பால் உண்ணும் இன்பத்தைப் பெறுகிறது குழந்தை. தாய் வலி நீங்கிச் சுமை கழிந்த இன்பத்தைப் பெறுகிருள்.

இதனுற்ருன் மணிவாசகர் குழந்தை நினைந்து நினைந்து என்று கூருது, பால் நினைந்து என்று கூறுகிருர். தாய்க்கு முதலில் நினைவுக்கு வந்தது பால். காரணம், இயற்கை அவளுக்குத் தந்திருக்கிற உடற்கூறு. ஆனுல், இறைவனுக்கு அருள் தேங்கிக்கிடக்கக் காரணமில்லே. கோடான கோடி உயிர்க் கூட்டங்களுக்கு அருள்புரிபவன் ஆண்டவன். எனவே, உயிர்களுக்கு இன்பமூட்டும் எண்ணத்தாலேயே அருள் அளிக்கின்ருன் என்ற வேறுபாடு தோன்ற, 'தாயினும் சாலப் பரிந்து' என்று சொல்லிய பெற்றியும், நான் அறியாதபோதே உன்னை உணருமாறு செய்தாய், உணர்ந்தபின் உன்னை விடுவேனே என்று உரிமையோடு கேட்கும் பெட்பும் நினையுங்கால் மெய்ம்மறக்கச் செய்கின்றன.

# பெரிய அன்பின் வரகுண தேவர்

[ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.]
(ஆசிரியர் : திருக்கோயில், சென்னை–34)

**முன்னுரை :**

உலக வரலாற்று நூல்களில் உரோம நாட்டு நீரோ. பிரெஞ்சு நாட்டு லூயி, மங்கோலியத்துச் செஞ்கிஸ்கான், துருக்கியத்துத் தாமர்லேன் முதலிய பற்பல தீய கொடுங்கோல் அரசர்களைப் பற்றிப் படிக்கின்றோம். ஆனால் தமிழ்நாட்டை ஆண்டுவந்த சேர சோழ பாண்டிய மன்னர்களில் ஒருவரேனும், ஒரு சிறிதாவது நீதிநெறி தவறிய கொடுங்கோலர்களாக இருந்ததில்லை. அவர்கள் அனைவருமே அறநெறி வழாமல் அரசோச்சிச் செங்கோல் செலுத்தி வந்தனர் ; தமிழக வேந்தர்கள் அறிவு திரு ஆற்றல்களிற் சிறந்து விளங்கியதுடன், நீதி, நேர்மை, பக்தி, ஒழுக்கம் முதலிய பண்பாட்டுத் துறைகளிலும் நிகரற்றுத் திகழ்ந்திருந்தனர்.

**சிவஞானச் செல்வர்கள் :**

"அரசியற் பெருந்திறனும், தத்துவ உணர்வின் ஆற்றலும் ஒருங்கே யுடனியைந்து கலந்த நிலையில், ஞானிகள் அரசர்கள் ஆகவோ, அல்லது அரசர்கள் ஞானிகள் ஆகவோ மாறி நின்றால் தான், உலகம் உயர்ந்து வாழ்வும் வளமும் பெறுதல் இயலும். அரசியல் ஆள்வினைத் திறனும், அருள்ஞான மெய்யுணர்வும் ஒருங்கு இயைந்து கலந்து நின்றாலன்றி, உலக மக்களுக்கு உய்தி இல்லை. இவை இரண்டினுள் ஏதேனும் ஒன்றைப் புறக்கணித்துவிட்டுப் பிறிதொன்றினை மட்டுமே கைக்கொள்ளும் இழிகுணமாக்களை ஆட்சிப் பொறுப்பினின்று ஒதுக்கித் தடுத்து நிறுத்தினாலன்றி, மனித குலத்திற்கு உய்வே இல்லை" என மேலைநாட்டுப் பேரறிஞர் ஆகிய பிளேட்டோ[1] என்பவர் குறிப்பிட்டிருப்பது போல, நம் தமிழக அரசர்கள் தத்துவவுணர்வில் தலைநின்ற வித்தகர்களாகவும், சிவஞானச் செல்வர்களாகவும் விளங்கியிருந்தமை வியந்து மகிழ்தற்குரியது.

**பராந்தகன் நெடுஞ்சடையர் :**

இத்தகைய தமிழ் வேந்தர்கள் பலருள், சடில பராந்தகன் நெடுஞ்சடையர் (கி. பி. 765–815), மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவராவர். தமிழக வரலாற்று ஆராய்ச்சித் துறையில் மிகவும் புகழ்பெற்றுத் திகழும் வேள்விக்குடிச் செப்பேடுகளை வழங்கியவர் இவ்வேந்தரேயாவர்[2]. இச் செப்பேடுகளின் துணைகொண்டே, சங்க காலத்திற்குப் பின்னர் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு வரையில் விளங்கியிருந்த பாண்டிய வேந்தர்களைப்பற்றிய குறிப்புகளை, ஓரளவேனும் நாம் தெரிந்துகொள்கின்றோம். இடைக் காலத்துப் பாண்டிய மன்னர்களுள் மிகச் சிறந்த ஒரு பேரரசராக விளங்கியவர், இவ்வேந்தரே எனலாம். பல்லவரையும் சேரரையும் பிற சிற்றரசர்களையும் போரில் புறங்கண்ட வீரப் பெருவேந்தராக, இவர் விளங்கியிருந்தார். பாண்டியநாடு மட்டுமேயன்றிச் சோழ நாடு, கொங்கு நாடு, தென் திருவிதாங்கூர் நாடு, தொண்டைமண்டலம் என்பவைகளும் இவரது ஆட்சிக்கு உட்பட்டு அடங்கியிருந்தன.

இவருடைய ஆஞ்ஞாபதியாக இருந்த மாறன் காரி என்னும் மதுரகவி என்பவரே, ஆனைமலைப் பெருமாள் கோயிலைக் கட்டியவர் ஆவர். (கி. பி. 770). இவ்வரசர் 'காஞ்சிவாய்ப் பேரூரிற் குன்றம் அன்னதோர் கோயில்' எடுத்ததாகவும் தெரிகின்றது. ஆடுதுறை, கும்பகோணம், செந்தலை, திருவெள்ளறை, அம்பாசமுத்திரம், திருச்செந்தூர், திருவிடைமருதூர் முதலிய பல இடங்

---

1. "Until philosophers become kings, or the kings and princes of this world have the spirit and power of philosophy and political greatness and wisdom meet in one and those commoner natures who pursue either to the exclusion of the other are compelled to stand aside, citizens will never have rest from their evils; no, nor the human race, as I believe, and then only will this our State have a possibility of life and behold the light of day."

—*Dialogues of Plato, The Republic.*

2. Prof. R. Sathianathaier, M.A., L.T. History of India P. 326.

களில், இவர்தம் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

### திருவிடைமருதூர் :

இத்தகைய சிறந்த பேரரசராகிய சடில பராந்தகன் நெடுஞ்சடையன் என்பவர், மிகவும் சிறந்த சிவபத்தராகவும் விளங்கியிருந்தார். தம்மை எதிர்த்துப் போர் தொடுத்த சோழ மன்னனை வென்று, சோழ நாட்டைத் தமது ஆட்சிக்கு உட்படுத்திய இவர், தமது தலைநகரம் ஆகிய மதுரையிற் போலச் சோழ நாட்டுத் திருவிடைமருதூரிலும் ஒரு மாளிகை அமைத்துக்கொண்டு, சிலகாலம் தங்கியிருந்தார். திருவிடைமருதூர் ஸ்ரீமகாலிங்கப் பெருமானுக்குப் பல திருப்பணிகள் புரிந்தார். திருவிடைமருதூர்க் கோயிலின் மேற்குக் கோபுரமும், கொடுமுடிப் பிராகாரமும், பிறவும் இவரால் அமைக்கப்பட்டனவேயாகும்.

### பட்டினத்தடிகள் :

திருவிடைமருதூர்ப் பெருமான்பால், இவ்வரசர் கொண்டிருந்த அன்பின் திறம் எல்லையற்றது ; இவ்வாறும் உண்டோ என வியக்கத்தக்கது. அதனைப் பட்டினத்தடிகள், தாம் இயற்றியருளிய 'திருவிடைமருதூர் மும்மணிக்கோவை'யிற் பெரிதும் பாராட்டிப் புகழ்ந்து கூறுகின்றார்.

(1) ஒரு நாள், கொடிய கள்ளன் ஒருவனைத் தேடிப் பிடித்து, அவன் செய்த குற்றங்களுக்காகக் கடுந்தண்டனை தருதற்பொருட்டு, ஊர்க் காவலர்கள் அவனுடைய இரு கைகளிலும் விலங்கிட்டுப் பல வகைகளில் துன்புறுத்தி இழுத்துச் செல்லுதலையும், அக்கள்ளன் நெற்றியில் திருநீறு அணிந்து பொலிதலையும் இவ்வரசர் கண்டார். உடனே இவருடைய உள்ளம் உருகிவிட்டது. ஊர்க் காவலர்களை அழைத்து அக்கள்ளனை மன்னித்து, கட்டுக்களை அவிழ்த்து, இன்சொற்கள் கூறி, விடுதலை செய்துவிட்டார்.

(2) மற்றொரு நாள், ஊரின் புறத்தே நரிகள் இரவில் ஊளையிட்டன. அவ்வொலியைக் கேட்ட இவர், தாம் வழிபடும் திரு ஆலவாய்ச் சோம சுந்தரப் பெருமானையும், திருவிடைமருதூர் மகாலிங்கப் பெருமானையுமே, அந்நரிகள் அன்புடன் அழைத்துப் போற்றிப் பாடுகின்றன என்று, தம்முடைய மனநலத்தின் சால்பாற் கருதி மகிழ்ந்தார். அதனால் வேட்டைக்காரர்களால் கொல்விக்க மனம் வராமல், "இறைவனைப் பாடி வழிபட்ட இவற்றிற்கு ஓர் ஊறும் செய்தலாகாது" என்று சொல்லி, அவற்றிற்கு நல்லாடைகள் பலவற்றை முறைப்படி போர்த்திச் சிறப்புச் செய்து, காட்டிற்கே கொண்டுபோய் விட்டுவிடும்படி செய்தருளினார்.

(3) ஒரு சமயம், மழைக் காலத்தில் திருவிடைமருதூர்த் திருக்குளத்தில் தவளைகள் மகிழ்ச்சி மேலீட்டாற் பேரொலி செய்தன. அது கேட்ட இவர் தவளைகள் இறைவனின் திருப்பெயர்களைக் கூறித் துதித்து வழிபடுகின்றன என்று, தம்முடைய சிவபக்திச் சிறப்புக்கு ஏற்பக் கொண்டு, அத்தவளைகளைப் பாராட்டிப் பரிசு நல்கும் முறையில், நவமணிகளையும் பொற்காசுகளையும் அத் திருக்குளத்தில் வாரி வீசி மகிழ்ந்தார்.

(4) மற்றொரு சமயம், இவர் திருவிடைமருதூர்க் கோயிலிற்குச் சென்று வழிபட்டு வலம் வந்துகொண்டிருக்கும்போது. பிராகாரத்தில் உலரவைப்பதற்காகப் பரப்பியிருந்த கோயிலுக்குரிய எள்ளினைப் பணிவிடைக்காரன் ஒருவன் நிரம்பத் திருடி எடுத்து வைத்துத் தின்றுகொண்டிருத்தலைக் கண்டார். 'சிவாலயத்திற்குரிய இதனை நீ இங்ஙனம் திருடித் தின்னுதல் முறையா?' என்று அவனை வினவினார். அகப்பட்டுக்கொண்ட அவன் தப்பித்துக்கொள்ளுவதற்கு வேறு வழியின்மையால், 'அரசர் பெரும, உண்ட கடனைத் தீர்த்தேயாதல் வேண்டும் என்று பெரியவர்கள் சொல்லப் பலகாலும் கேட்டிருக்கின்றேன். அதனால் இப்போது இந்த எள்ளினையுண்டால், மறு பிறவியிலும் மகாலிங்கப் பெருமானுக்கு மீண்டும் மீண்டும் பணிவிடை செய்து வரும் நற்பேறு வாய்க்கும் என்ற பெருவிருப்பத்தினாலேயே இங்ஙனம் செய்தேன்' என, அரசரின் சிவபக்தி இயல்பறிந்து, அவர் நம்பும்படி நடித்துப் பணிவுடன் கூறினான். அதுகேட்டதும் அரசர் மனமகிழ்ந்தார். 'அவ்வாறாயின், எனக்கும் அதிற் சிறிது கொடு' என்று கூறி, அப்பணிவிடைக்காரனின் எச்சில் எள்ளினை வற்புறுத்தி வாங்கியுண்டு, மகாலிங்கப் பெருமானுக்குப் பனிவிடைகள் செய்யும் பேறு மறு பிறவிகளிலும் தமக்கு மீள மீளக் கிடைத்து வருதல்வேண்டும் என விரும்பி வழிபட்டுச் சென்றார்.

(5) வேறொரு சமயம், திருவிடைமருதூர்க் கோயிலின் அருகில், புறத்தே ஓரிடத்தில் ஒரு மண்டையோடு விழுந்து கிடந்தது. அதனைக் கண்ணுற்றார் இவ்வரசர் பெருமான். இறந்து போயுங்கூட, மகாலிங்கப் பெருமானைப் பிரிவதற்கு மனமின்றி, இக்கோயில் அருகே வந்து விழுந்து கிடக்கின்ற நும் அன்பின் திறம் எத்தகையது என்று வியந்து, இத்தகைய பேறு உம்மைப் போல எனக்கும் வாய்த்தல்வேண்டும்

என்று விரும்பி, அத்தலையோட்டினைத் தம் தலையுற வணங்கி நின்றார்.

(6) பிறிதொரு சமயம், திருவிடைமருதூர்க் கோயிலுக்குச் சென்று வழிபட்டுவிட்டு, அடுத்துள்ள பிராகாரங்களை வலம் வந்துகொண்டிருந்தபொழுது, அங்கே ஓர் இடத்தில் நாயின் மலம் விழுந்துகிடக்கக் கண்டார். அதனை அன்பர்களில் ஒருவராவது கவனித்து அப்புறப்படுத்தித் துப்புரவு செய்யாதிருத்தல் கண்டு, தாமே சென்று அப்புறப்படுத்தித் துப்புரவு செய்து உள்ளம் பூரித்தார்.

(7) ஒருகால் இவ்வரசர் பெருந்தகை, திருவிடைமருதூர்த் திருவீதியை வலம் வரும் பொழுது, வேப்ப மரங்கள் யாவும் நன்றாகப் பழுத்திருத்தலைக் கண்டார். சிவம் பழுத்த இவர்தம் திருவுள்ளத்திற்கு, அவ்வேப்ப மரங்களின் பழங்கள் யாவும் சிவலிங்கங்கள் போலக் காட்சியளித்தன. அதனால் இவர் உடனே அம் மரங்களுக்கு எல்லாம் அழகிய விதானம் கட்டுமாறு கட்டளையிட்டு, உவகை பூத்தார்.

(8) இவைகளையெல்லாம் காட்டிலும், இவர் தம் அன்பின் திறனை யுணர்த்தும் அரியதொரு நிகழ்ச்சியும் உண்டு. சோழ அரசனின் மகள் ஒருத்தி, இவ்வரசரை மணந்துகொள்ள விரும்பினாள். இவரும் அவளைப் பாராமலே, அரசியற் காரணங்களுக்காக உறவு பாராட்டி, மணந்து கொள்ள இசைவு தெரிவித்திருந்தார். பின்னர் அவளை இவர் பார்க்க நேர்ந்தது. அவளுடைய ஒப்பற்ற பேரழகினைக் கண்டு இவர் வியந்தார். ‘சிறந்த பொருள் எதுவும் இறைவனுக்கே உரியது’ என்று எண்ணி வழங்கிவிடும் இயல்புடைய இவர், ‘இவ்வளவு சிறந்த பேரழகுடைய இப்பெண்ணும் இறைவனுக்கே உரிமையாகத் தக்கவள்’ என்று எண்ணி, அவளை அழைத்துச் சென்று மகாலிங்கப் பெருமான்பால் ஒப்படைத்து விட்டார் என்பது வரலாறு.

### வரகுண தேவர் :

இத்துணைச் சிறந்த எல்லையற்ற பேரன்பும், இனிய குணங்களும் நிறைந்த இவரை வரகுண மகாராஜன் என்று மக்கள் அனைவரும் வாழ்த்திப் போற்றினர். பட்டினத்தடிகள் இவரைப் “பெரிய அன்பின் வரகுண தேவர்” என்று குறிப்பிட்டு, இவருடைய இணையற்ற பேரன்பினையும் இறைமைத் தன்மையினையும் இனிதெடுத்துரைத்துப் பாராட்டிப் பின்வருமாறு பாடியருளுகின்றார் :

“வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையிற் கட்டுஅவிழ்ப் பித்தும் (1)

ஓடும் பல்நரி ஊளைகேட்டு அரனைப்
பாடின என்று படாம்பல அளித்தும் (2)

குவளைப் புனலில் தவளை அரவத்து
ஈசன் தன்னை ஏத்தின என்று
காசும் பொன்னும் கலந்த தூனியும் (3)

வழிபடும் ஒருவன் மஞ்சனத்து இயற்றிய
செழுவிதை எள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலும், அவன்இப் பிறப்புக்கு என்ன,
இடித்துக் கொண்டுஅவன் எச்சிலை நுகர்ந்தும் (4)

மருத வட்டத்து ஒருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி,
உம்மைப் போல எம்இத் தலையும்
கிடத்தல் வேண்டும்என்று அடுத்தடுத்து இரந்தும் (5)

கோயில் முற்றத்து மிமிசைக் கிடப்ப
வாய்த்தன என்று நாய்க்கூட்டம் எடுத்தும் (6)

காம்புகுத்து உதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதானம் அமைத்தும் (7)

விரும்பின கொடுக்கை பரம்பரற்கு என்று
புரிகுழல் தேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய அன்பின் வரகுணதேவர்.”

—திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, 28

### நம்பியாண்டார் நம்பிகள் :

இவ்வாறே பதினொன்றும் திருமுறையில் ‘கோயில் திருப்பண்ணியர் விருத்தம்’ என்னும் நூலில், அதனை இயற்றியருளிய நம்பியாண்டார் நம்பிகள், வரகுணதேவரின் பக்திநலச் சிறப்பைப் புலப்படுத்தும் வரலாற்று நிகழ்ச்சி ஒன்றைக் குறிப்பிடுகின்றார்.

வரகுண பாண்டியர் எல்லையற்ற சிவபக்தியில் திளைத்தவர் எனினும், வீரச்சிறப்பிலும் போர்த் திறத்திலும் சிறிதும் குன்றியவர் அல்லர். போர்கள் பல செய்து புகழ்மிக்கவர் அவர் ஒரு சமயம் அவர் போர் ஒன்றிற்குப் புறப்பட்டார். போருக்குச் செல்லும் வீரர்கள் தம் உடலுக்குப் பாதுகாப்பாக இரும்புக் கவசம் அணிந்து செல்வது மரபு அன்றோ! அம்முறையில் இவர் கவசம் அணிந்துகொள்ள முற்பட்டார். ஆனால் இரும்புக் கவசம் அணிந்திலர். “ கங்காளன் பூசும் கவசத் திருநீறு ”தான், தமக்கு உண்மையான கவசம் ஆகற்பாலது எனத் தெளிந்து துணிந்தார்! அதன்படி திருநீற்றைத் தமது மெய்ம்முழுதும் சண்ணித்துப் பூசிக்கொண்டு புறப்பட்டார். போரில் அவர் வெற்றியே பெற்றார். அவர்தம் திருமேனியில் அம்பு ஒன்றும் பாய்ந்திலது. ஊறு எதுவும் நேராமல், அவர் மிக்க பெருமித வீறுடன் வெற்றி பெற்றுத் திரும்பினார். ஆனால் போர்க் களத்தினின்று திரும்புங்கால், அங்கே ஒடிந்து





அன்னவரே எம் கணவர்: ஆவார்



ஏதவன் ஊர்? ஏதவன் பேர்?
ஏதவனைப் பாடும் பரிசு?

விழுந்து சிதறிக் கிடந்த கூரிய அம்புகளுள் ஒன்று, எங்ஙனமோ அவர் தம் காலிற் பொத்துக் கொண்டது. அதனால் இரத்தம் பெருக்கெடுத்தது. அதுகண்டு சூழ்ந்திருந்த படைவீரர்களும் பிறரும் பெரிதும் மனம் வருந்தி, விரைந்து முதலுதவிகள் செய்ய முனைந்தனர். ஆனால் வரகுணதேவரோ ஒரு சிறிதும் வருந்திலர்.

"திருநீறு ஆகிய கவசத்தை, யான் என் உடல் முழுதும் அணிந்துகொண்டேன். அதனால் என் உடலின் ஒரு சிறுபகுதிக்கும் பகைவர் படைகளால் ஊறு நேர்ந்திலது. திருநீற்றைக் காலில் அணிதல் கூடாது என்பதுபற்றி, அக்கவசத்தை இக்காலுக்கு அணிந்திலேன். திருநீற்றுக் கவசம் அணியப் பெறும் நல்லூழ் அமையாத காலுக்கு, இந்த வடிபட்டது பொருத்தமேயாகும்" என்று கூறிப் புன்னகை பூத்து மகிழ்ந்தார். என்னே இவரது திருநீற்றன்பும், சிவபக்தியும் என்று வியந்து புகழ்ந்து நயந்து உருகுகின்றார் நம்பியாண்டார் நம்பிகள்!

பொடிஏர் தரும் மேனியன் ஆகிப் பூசல் புக, அடிக்கே
கடிசேர் கணை குளிப்பக் கண்டு, கோயிற்கருவி இல்லா
வடியே பட அமையும் கணை என்ற வரகுணன் தன்
முடியே தருகழல் அம்பலத்து ஆடிதன் மொய்கழலே,

[வடி - கூர்மை; வடியேபட - தைக்க]

இவ்வாறே, இவ்வரகுண பாண்டிய தேவரின் பத்திநலத்தையும் பண்புநலங்களையும் மிகவும் போற்றிப் புகழ்ந்து, இவருக்கு இறைவன் செய்த இன்னருட்டிறனை விளக்கித் திருவிளையாடற் புராணத்தின்கண், பரஞ்சோதி முனிவர் பாங்குறப் பாடி மகிழ்விக்கின்றார்.

முகவுரை :

இங்ஙனம் பட்டினத்தார், நம்பியாண்டார் நம்பிகள், பரஞ்சோதி முனிவர் போன்ற சான்றோர்கள், பலரும் பாடிப் பரவும் மாட்சிமையுடைய "பெரிய அன்பின் வரகுண தேவர்" பண்பு நலங்களை நாமும் நயந்தினிது போற்றி, நலம் பல பெற்று உய்வோமாக.

# புராணம் போற்றும் வரகுண பாண்டியன்

[திரு ஆத்ரேய ராமசேஷன், எம்.ஏ., பி.இடி.]

"ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" என்பது சிவஞான போதம். திருவிடைமருதூர்த் தலபுராணங்களுள் ஒன்றான மருதவனப் புராணத்தில், இடைமருதின் சிறப்புகள் பலவாகப் போற்றப்படுகின்றன. அதன்கண் விளங்கும் வரகுண தேவச் சருக்கம், வரகுண பாண்டியன் என்னும் அரசனது அன்பின் திறத்தை விளக்குகின்றது :

"பாண்டி நாட்டில் மதுரையம்பதியில் சுந்தரேச பாதசேகரன் மைந்தனான வரகுண பாண்டியன், பகையரசருக்குச் சிங்க ஏறு, வறியோர்க்குக் கற்பக தரு, மகளிருக்கு மன்மதன் என விளங்கிச் செங்கோலோச்சி வரும் நாளில், ஒரு நாள் வேட்டையாடச் சென்றான். வேட்டை முடிந்து தலைநகருக்குத் திரும்பி வரும்போது, விரைந்து வந்த அவனது குதிரையின் குளம்பு, வழியில் துயின்றிருந்த ஒரு மறையவனின் மார்பில் அழுந்தி ஊன்றவே, மறையோன் இறந்தான். மன்னனைப் பிரமபாவம் பற்றியது. அப்பழி தீர மன்னன் பல கழுவாய்கள் செய்தான். துன்பம் அதிகரித்ததே தவிரக் குறைந்தபாடில்லை. ஆலவாயண்ணலை வலம் வந்து கொண்டிருந்த பாண்டியனை நோக்கி, 'அன்பனே! சோழ மன்னன் ஒருவன் உன்னுடன் போரிட வருவான்; புறங்காட்டி ஓடுவான்; நீயும் அவனைத் தொடர்ந்து செல்வாய். அப்போது நம்மை நாமே அருச்சித்து வைகும் தலமாகிய இடைமருதினை அடைவாய். அத்தலத்தை அடையுமுன்னரே உன்னைவிட்டு இப்பழி நீங்கும்' என ஆகாயவாணி கூறியது.

"நாட்கள் சில சென்றன. அசரீரி கூறிய படியே சோழமன்னன், வரகுண பாண்டியனுடன் போரிட்டுத் தோற்றான். புறங்கொடுத்து ஓடுவோரைத் துரத்திச் செல்வது நீதியன்று என்று வரகுணன் எண்ணியபோதிலும், அசரீரிச் சொற்களைக் கருத்திற்கொண்டு, சோழனை வெருட்டிச் சென்றான். சோழநாட்டை அடைந்தான்; திருவிடைமருதூர்க் கோபுரத்தைக் கண்டான். பொன்னி நன்னதியின் பூசத்துறையில் நீராடினான்; காருண்ணியாமிர்த தீர்த்தத்தில் மூழ்கினான். கிழக்குக் கோபுர வழியே கோயிலுள் புகுந்தான். மன்னனைத் தொடர்ந்த பார்ப்பனப் பழி ஒருபால் அகன்று நின்றது.

"சென்று சத்திதன் னருட்புனல் படிந்தனன் செம்பொற்
குன்ற மொத்தொளிர் குணதிசைக் கோபுர வாயில்

ஒன்றி யுட்புகுந் தான்றெடர் கொடும்பழி யொருபால்
நின்ற தந்தகன் விழிகெட நிற்பது போல"

"பின்னர் நோக்கினன் கண்டிலன் பழியினைப் பெரிதும்
துன்னு மானந்தக் கடலிடை மூழ்கினுன் சுருதி
என்னும் வண்டுசூழ்ந் தொலித்திட மருதிடத் திருக்கும்
மின்னு வார்சடைத் தேனினைப் பருகினுன் விழியால்"

என்று வரகுண மன்னன் பழிநீங்கி இன்புற்ற செய்தியை மருதவனப் புராணம் பேசுகின்றது.

மருதவனநாதரை வணங்கிப் போற்றினுன் வரகுண பாண்டியன். மகாலிங்கப் பெருமானும் மன்னனை நோக்கி, "குணதிசை வாயிலின் வழியே செல்லற்க; பழி அங்கேயே நின்றது. ஆகலின் மேலை வாயிலிற் செல்க" என்று அருளினுர். மீனவன் மகிழ்ந்து இறைவன் கருணையைப் பலபடப் போற்றினுன்.

நாள்தோறும் திருக்கோயிலை நூறுதரம் வரகுண பாண்டியன் வலம் வந்தான். சொக்க லிங்கப் பெருமானுக்குத் திருக்கோயிலொன்று இத்தலத்திலேயே அமைத்தான். குடதிசைக் கோபுரத்தைக்கட்டினுன். மருதவனநாதர் மகிழ்ந் தார். "வரகுணு! கயிலையிலுள்ளபடி கொடு முடிப் பிராகாரம் ஒன்று இங்கே அமைப்பாய். அந்தப் பிராகாரத்தை நீ ஒருமுறை வலம் வந்தால் அது ஆயிரம் முறை வலம் வந்ததை ஒக்கும்" என்றருளினுர்.

"......பஞ்சவ னிலங்கெழின் மருதக்
கடவுளைத் தினமுஞ் சதவலம் புரிந்து
காலங்க டோறும் பணிந்தேத்திக்
குடதிசை வாயிற் கோபுர மியற்றிக்
கூடல்வா ழிறையவன் தனக்கு
வடதிசை வயினே ராலய மிழைத்து
வணங்கிப்பின் அரும்பணி செயுநாள்."

"மருதிறை அவனை நோக்கி நங்கயிலை
மணிதிகழ் கொடுமுடி கடுக்கும்
ஒருமதில் வகுத்து நமதுரைப் படிநீ
யொருவலம் புரியினுள் ளஃது
பரவுமாயிர நேராமென வுரைத்தான்
பரவி மற்றவன்சில பகலில்
விரவு மத்திறஞ் செய்தி றைஞ்சினுன்......"

என்று மருதவனப் புராணம் வரகுணன் கொடு முடிப் பிராகாரத்தை அமைத்த செய்தியைச் சாற்றுகின்றது. பாண்டியன் தோரணவாயிலும் இம்மன்னனுல் அமைக்கப்பட்டது.

இம்மன்னனது சிவபக்தித் திறம் மாணிக்க வாசக சுவாமிகளையும் கவர்ந்ததில் வியப்பில்லை. அவரும், "வரகுணனுந் தென்னவ னேத்து திருச்சிற்றம்பலத்தான்" எனவும், "மயலோங் கிருங்களியானை வரகுணன் வெற்பின் வைத்த" எனவும் தமது திருக்கோவையாரில் பாராட்டு கின்றுர். திருவிடைமருதூர் மேலைக் கோபு ரத்தை வரகுணன் தன் பெயரால் அமைத்த திறத்தினை,

"மேலை வாயிலாற் போவான்
அன்ன திருமணிக்கோபுரந் தன்பெயரினுற் செய்து"

என்று திருவிளையாடற் புராணத்து வரகுணப் படலம் போற்றுகின்றது.

இனி, இந்த வரகுண பாண்டியனைப்பற்றிய வரலாற்றினை அறிந்துகொள்ள இம்மன்னனது பல கல்வெட்டுக்கள் நமக்கு உதவுகின்றன. கி. பி. 790–792-இல் பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்த இராஜசிம்ம பாண்டியனின் மைந்தனே வரகுண பாண்டியன். இம் மன்னனது ஆட்சி கி. பி. 792 முதல் 835 வரை நீடித்தது. இம் மன்னன் ஆட்சிக் காலத்தில் சோழமண்டல முழுதும் பாண்டியராட்சிக் குட்பட்டிருந்தது என்பதனை, திருவியலூர், திருநெய்த்தானம், ஆடுதுறை, கும்பகோணம், செந்தலை, திருச் சிராப்பள்ளி, திருக்கோடிகா, திருச்சோற்றுத் துறைக் கல்வெட்டுக்கள் சான்று பகருகின்றன. இம்மன்னனை, "கொற்றவர்கள் தொழுகழற் கால்கோ வரகுண மகராசன்" என்று சின்ன மனூர்ச் செப்பேடுகள் (கி. பி. 916) குறிக் கின்றன.

இம்மன்னன் பல ஆலயத் திருப்பணிகள் செய்துள்ளமையும் இக்கல்வெட்டுக்களால் புல னுகின்றன. சிராப்பள்ளி இறைவற்குத் திரு விளக்குகள் எரிப்பதற்கு நிவந்தமாக 125 கழஞ்சு பொன் இம்மன்னனுல் அளிக்கப்பட்ட செய்தி யைத் திருச்சிராப்பள்ளியிலுள்ள இம்மன்னனது பதினுரும் ஆண்டுக் கல்வெட்டொன்றுல் அறி கிறேம். இம் மன்னனது பதினுரும் ஆண்டுக் கல்வெட்டொன்று அம்பாசமுத்திரத்தில் உள் ளது. அதன் குறிப்பின்படி அங்குள்ள திருக் கோயிலுக்கு நாள் வழிபாட்டிற்கென 290 பொற் காசுகள் இம்மன்னனுல் வழங்கப்பட்டன என்று புலனுகின்றது.

நாங்குனேரி வட்டத்து இராதாபுரத்திலுள்ள கல்வெட்டுக்கள் அவ்வூர்ச் சிவன் கோயிலுக்கு வரகுணீச்சரம் என்றும், அவ்வூர்க்கு வரகுண பாண்டியபுரம் என்றும் பெயர்கள் இருந்தமை யைக் குறிக்கின்றன.

திருவிடைமருதூர்த் திருக்கோயிலுள், பாண் டியன் தோரணவாயிலின் தென்புறம் நின்ற திருக்கோலத்தில் வரகுண பாண்டியனின் திருவுருவம் விளங்குகின்றது. கீழைக் கோபுரத் தில் பட்டினத்தடிகளும், நடுவே பாண்டியன் தோரணவாயிலில் வரகுண மகராசனும், மேலைக் கோபுரத்தில் பத்திரகிரியாரும் விளங்குவது இடைமருதின் தனிச் சிறப்பாகும்.



ஸ்ரீ வரகுணபாண்டியரும் அவருடைய மனைவியும்
(திருவிடைமருதூரில் உள்ள திருவுருவங்கள்)



பிரமஹத்தியின் வடிவம் (கோபுரவாயிலின் மேல் உள்ளது)

# வாலிழை பாகத்தொருவன்

[திரு மு. அருணாசலம், எம்.ஏ.]

கடவுளைப்பற்றி மனிதன் கொண்டுள்ள கருத்துக்கள் காலப்போக்கில் வளர்ந்து வந்திருக்கின்றன. கடவுள் என்றும் உள்ளவர். ஆதி அந்தம் இல்லாமல் என்றும் இருந்தபடி இருந்து வருகிறார். ஆனால் அவரைப்பற்றி மனிதன் கொண்டுள்ள கருத்துக்களே அவன் வளர்ச்சியோடு உடன்மாறியும் வளர்ந்தும் வருகின்றன. கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதையே அறியாத நிலை ஆரம்பகால மனிதனது நிலை. பின்னர் மனிதன் வளர்ந்து அவர் என்றும் உளளவர், எல்லாம் அறிபவர், எல்லாம் செய்பவர், எல்லாம் தருபவர் என்று அறிந்துகொண்ட நிலை மிக்க வளர்ச்சிபெற்ற ஒரு நிலை. இந்த நிலையில்தான் பரம்பொருள் என்ற உணர்வு எழுந்தது.

கடவுள் ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமில்லாதவர் என்று கண்டபோது, ஆன்றோர் அவரை அறிவு வடிவினராகக் கண்டனர். இந்த நிலையில், அவர் பிரபஞ்சத்தை இயக்கி வருவதை உணரவே, தம் உணர்வினுள் பதியும்பொருட்டு இதை ஒரு தன்மையால் குறிப்பிடவேண்டிய அவசியம் வந்தது. இதையே ஞான மயனை இறைவனுடைய சக்தி என்றனர். அறிவு சிவம், ஆற்றல் சக்தி என்று உணர்ந்தனர். அறிவையும் ஆற்றலையும் கண்டால்மட்டும் போதவில்லை. உயிர்களிடத்து இரக்கம் கொண்டு நன்மை புரியவேண்டும், மனிதன் தான் வேண்டியவற்றை இறைவனிடம் இரந்து பெறவேண்டும், இரந்தவற்றை அளிக்கும் தன்மையொன்று இறைவனிடம் இருக்கவேண்டும். இதையே அருள் என்று சொல்லத் தொடங்கினர். 'அருளே உலகெலாம் ஆள்விப்பது' என்று அம்மையார் பாடினார். இந்த அருளே உயிர்க்கூட்டங்கள் எல்லாம் உய்தி பெறவேண்டும் என்ற கருணை. இந்த நிலையில், இறைவனின் அருவத் தன்மையை ஆற்றல் என்றும், அருள் தன்மையாகிய சக்தியைக் கருணையென்றும் பெரியோர் கூறினர். சிவம், சக்தி என்ற இரு பெரும் கருத்துக்களை ஆற்றலின் நிறைவுக்கும் அருளாகிய கருணையின் நிறைவுக்கும் உருவங்களாகப் போற்றி வந்தனர்.

இவ்வாறு வளர்ந்த நிலையில், உலக மக்கள் வேண்டுவார் வேண்டுவதை ஈயவேண்டிச் சிவமும் சக்தியும் எத்தனையோ சந்தர்ப்பங்களில் எத்தனையோ விதமான உருவங்களாகத் தோன்றி அருள் செய்தபோது, இவைகளைப் பெருமானுடைய மூர்த்தி பேதங்களாகப் புராணங்கள் சொல்லின. ஒன்றாக இருந்த பரம்பொருள், ஞான மயமாக மட்டும் விளங்கிய பெரும் சச்சிதானந்தப் பொருள், மனிதனுடைய விவகார தசையில் சிவம், சக்தி என்ற இரண்டாக, அப்பனும் அம்மையுமாகக் காட்சியளித்தது. அவரவர் எந்தப் பக்குவத்திலிருந்து அந்தப் பொருளைக் கண்டார்களோ அந்தப் பக்குவத்துக்கு ஏற்றபடி, அது அம்மையப்பராகவோ, அப்பனும் அம்மையுமாகவோ வெளிப்பட்டது. அப்பனும் அம்மையுமாகிய கயிலைக் காட்சியாக, அப்பர் சுவாமிகள், கண்ணிற்பட்ட பிரபஞ்சம் எல்லாவற்றையும் கண்டார். ஒரே பொருள்தான், அதுவே இப்படிக் காட்சி தந்தது என்றும் கண்டார். 'அப்பன் நீ அம்மை நீ' என்றும் பாடினார். உலகெல்லாம் ஆட்டுவிக்கின்ற பரம்பொருளைத் தானே ஆடுகின்ற நடராசப் பெருமானாகக் கண்ட பெரியோர், அதே பொருள் அம்மையாகவும் அப்பனாகவும் விளங்குகின்றதோடு மனநிறைவு கொள்ளாமல், அம்மையப்பனாகவும், அருளும் ஆற்றலும் வெவ்வேறாக இல்லாமல் ஒன்றாகவே இணைந்திருக்கும் ஒரு நிலையையும் கண்டார்கள். இது அம்மை அப்பர் வடிவம்; அர்த்தநாரீசுவரத் திருக்கோலம். இவ்வடிவம் கற்பனையாக உள்ளத்தில்மட்டும் நிற்பதல்லாமல், உருவ வழிபாட்டுக்கு என்று இதனைக் கல்லிலும் செம்பிலும் வடித்து வைத்துக்கொண்டார்கள்.

உள்ளது ஒரே பொருள். அது வாக்கு மனங் கடந்தது. அதை இரண்டாகக் காண விரும்பாமல் நம் முன்னோர் ஒன்றாகவே கருதினார்கள், கண்டார்கள். கருத்தால் ஒன்றாய்க் கண்டதை உருவத்தில் கண்ணால் காண எண்ணியபோது, அம்மையின் உருவத்தையும் அப்பனின் உருவத்தையும் ஒன்றாக்கி வைத்தார்கள். இடப்பால் அம்மையின் பாதி. இதயம் இயல்பாகவே இடப்பால் அமைந்துள்ளதல்லவா! வலப்பால் சிவத்தின் பாதி. 'அம்மையே அப்பா' என்று அழைத்த மாணிக்கவாசகர், இந்த இருவரும் கலந்து ஒருவரான வடிவையே சென்று போற்றுகிறார்:

"தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும்உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ"

என்ற பாடலில் வெளிப்படையாய்த் தெளிவாய்ச் சுருங்கச் சொல்லி அவர் துதிப்பது நன்கு தெரிந்தது. இப்பாடலில் கூறியது தனித்த ஒரு கூற்றல்ல. திருவம்மானைப் பதிகத்துள் ஆறு இடங்களில், மாதிருக்கும் பாதியன், மாதியலும் பாதியன், பெண் சுமந்த பாகத்தன் என்பன போன்ற சொற்களால் அம்மையப்பர் வடிவத்தைச் சொல்லிச் சொல்லி மகிழ்கிறார். 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து' என்றும், 'தாய்போல் தலையளித்திட்டு', 'தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ' என்றும் அவர் பலமுறை கூறிப் போற்றுகிறார்.

"காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருள்ஆ மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம்ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்"

என்ற பாடலில் எங்கும் எல்லோரும் அப்பனாகவே துதிக்கின்ற பொருளை மாணிக்கவாசகர் அபூர்வமாய் அம்மையாகவே துதிக்கின்றார். இது திருமுறைகளில் வேறெங்குமே காண்பதற்கரியதொரு நிலை. இதையும் கடந்த ஓர் ஈடுபாட்டு நிலையிலேதான் அவர் 'தோலும் துகிலும்' என்ற பாடலைப் பாடினார்.

இவ்வாறெழுந்த அர்த்தநாரீசுவர வடிவத்துக்கு ஒரு புராண கதை சொல்வதும் உண்டு. பிருங்கி என்ற முனிவர் சிவகணத் தலைவர்களில் ஒருவர். சிவ சந்நிதியில் நடனம் ஆடும் தொண்டு புரிபவர். இவர் நாள்தோறும் கயிலாயம் சென்று சிவபெருமானை வலம் வந்து செல்வதை நியமமாகக் கொண்டிருந்தார். வலம் வரும்போது சிவபிரானைமட்டும் வலம் செய்வாரேயன்றி, உமாதேவியை வலம் செய்யமாட்டார். இதை ஒரு சமயம் எண்ணிய தேவியார், இவர் தம்மை வலம் வராத செயலுக்குக் கோபம் அடைந்து, இவர் உடலில் சக்திக் கூறாக உள்ள உதிரம் மாமிசம் முதலான பகுதிகளை எடுத்துவிட்டார். சிவபெருமான் ஒருவரே உள்ளவர் என்ற கருத்தைக் கொண்டிருந்த பிருங்கி முனிவர் அதன்மேல், எலும்புமட்டும் உள்ள வடிவினரானார். இதன்பின் அவர் சிறிதும் அடியெடுத்து நடக்கவும் ஆற்றலற்றவரானார். ஆற்றல் அளிப்பது சக்தியின் கூறு என்பதை அவர் உணரவில்லை. அவருடைய வைராக்கியத்தை உணர்ந்த பெருமான், இரண்டு காலால் மட்டும் அவ்வெலும்பு வடிவு நிற்கவும், நடக்கவும் கஷ்டப்படுவது கண்டு, மீண்டும் அதிகக் காலொன்றை அளித்தார். (ஊன்ற ஒரு தண்டு கொடுத்தார் என்று சொல்வதும் உண்டு.) இவர் நிலைமை இவ்வாறாக, தம்மை விலக்கிச் சிவபெருமானைமட்டும் இவர் வழிபட்டுச் செல்ல இடம் இருக்கக்கூடாது என்று கருதிய அம்மையார் சிவபெருமானை வேண்டி இடப்பாகம் பெற்று, அதுமுதல் ஒரே உருவத்தில் தாம் இடப்பாலும் பெருமான் வலப்பாலுமாக இருக்கும் நிலை பெற்றார். இந்த நிலையே அர்த்தநாரீசுவர வடிவம் என்பது.

யமபயம் இல்லாது காக்கும் மூர்த்திகளுள் அர்த்தநாரீசுவர மூர்த்தியும் ஒருவர். "அர்த்தநாரீசுவரம் தேவம் பார்வதீப்ராணநாயகம்—நமாமி சிரசா தேவம் கிம்நோ ம்ருத்யுர் கரிஷ்யுதி" என்பது மார்க்கண்டேயர் செய்த மிருத்தியுஞ்சயத் தோத்திரங்களில் ஒன்று. காசியப சில்ப சாஸ்திரம், சரஸ்வதி சில்ப சாஸ்திரம், மயமதம், தத்துவ நிதி முதலான சில்ப சாஸ்திரங்கள், அர்த்தநாரீசுவர வடிவத்தை வருணிக்கின்றன. அவை கூறும் விவரங்களில் வேறுபாடு உண்டு.

சிறப்புப் பொருந்திய முருகன் தலமாகிய திருச்செங்கோட்டுச் சிவாலயத்தில், 'சிவபெருமான் அர்த்தநாரீசுவரக் கோலத்தில், மூலமூர்த்தியாகவே காட்சியளிக்கிறார்; வேறு எத்தலத்திலும் இந்த நிலை இல்லை.

அர்த்தநாரீசுவரர் திருக்கோலம், வெறும் திருவுருவம் மட்டுமல்ல, ஒரு பெருந் தத்துவத்தின் உருவம் என்று குறிப்பிட்டோம். உருவங்கள் சமயந்தோறும் வேறுபடும். ஆனால் உருவத்துக்கு அடிப்படையாயுள்ள பெருந் தத்துவங்கள் எல்லாச் சமயங்களுக்கும் பொது என்பதை, எவ்வளவு மத வெறியராயிருந்தாலும், ஒப்புக்கொண்டே யாகவேண்டும். கடவுள் என்றும் உள்ளவர்; அவர் அறிவு மயமானவர்; அவர் எல்லாம் வல்லவர்; அவர் உயிர்களுக்கு இன்பத்தையே தருகிறார். இவை சைவம் கூறும் கருத்துக்களிற் சில. சைவம் கூறியதனாலேயே, பிற மதங்கள் மறுக்க வேண்டுமென்பதில்லை. எல்லா மதங்களுக்கும் இவை பொதுவான கருத்துக்களே. சிவம் என்ற சொல்லைச் சைவம் சொல்லுவதால், பிறர் இதை ஒதுக்க வேண்டுமென்பதில்லை. எல்லா உயிர்களுக்கும் நன்மை தருவது என்ற பொருளில் இதைச் சைனசமயம்

அப்படியே எடுத்துக்கொள்ளுகிறது; முடிவான முத்தியின்பத்தை எல்லாச் சைன நூல்களும் சிவகதி என்றே சொல்லக் காண்கிறோம்.

இது சொல்லாட்சி பொறுத்த வரையில்; இப்படியே கருத்தின் ஆட்சியும் உண்டு. பண்டைய இலக்கண உரையாசிரியர் பலர் தாங்கள் கூறும் இலக்கணத்துக்கு உதாரணமாகச் சுவை மிகுந்த பாடல்களையே எடுத்துக் காட்டுவார்கள். பிற மதங்களில் சுவை கொண்ட பாடல்கள் பாடப்பட்டிருந்தால், அவர்கள் அவற்றை எடுத்துக் காட்டத் தயங்குவதில்லை. வேறு மதத்தினர் பாடிய பாடல் என்பதற்காக அவர்கள் அப்படிப்பட்ட பாடல்களை ஒதுக்குவதில்லை. யாப்பருங்கலம் செய்த அமித சாகரரும் அதன் விருத்தியுரைகாரரும் சைனரே. எனினும், உரைகாரர் இணைக்குறள் ஆசிரியத் துறைக்கு உதாரணம் காட்டும்போது ஓர் அழகான பாடலை எடுத்துத் தருகிறார்; இப்பாடல் சிவபெருமானது அர்த்தநாரீசுவர வடிவத்தைப் போற்றுவது.

" பாடகஞ்சேர் காலொரு பால், பைம்பொற்
கனைகழற்கால் ஒருபால் தோன்றும்;
நீடு குழல்ஒருபால், நீண்ட சடைஒரு பால்;
வீடிய மானின் அதள்ஒருபால்; மேகலை சேர்ந்து
ஆடு துகில்ஒருபால்: அவ்வுருவம் ஆண்பெண் என்று
அறிவார் யாரே!"

இப்பாடலில் இறைவனுடைய அர்த்த நாரீசுவரக் கோலத்தில், ஒரு காலில் பாடகமும் ஒரு காலில் பைம் பொற்கனை கழலும், திருமுடியில் ஒருபால் நீண்ட குழலும், ஒருபால் நீண்ட சடையும், இடையில் மானின் தோலும், ஒருபால் மேகலை சேர்ந்து ஆடும் துகிலும் தோன்றுகின்ற ஒப்பற்ற ஒரு கலையழகைக் கவிஞர் கண்ணாரக் காண்கிறார். கண்டு, 'ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லாத இவ்வுருவை ஆண் என்று சொல்வதா, பெண் என்று சொல்வதா? இதை அறிவார் யாரே?' என்று சைவப் புலவர் வியக்கிறார். அது பெரிதல்ல. ஒரு சைனப் புலவர் இந்த அழகை எடுத்து இலக்கணத்தில் கூறுகிறார். இது வல்லவா பெரிது? இப்பாடல் எந்த நூலில் இருக்கின்றதென்பது தெரியவில்லை. இவர் எடுத்துக் காட்டாவிட்டால் இந்தப் பாடல் நமக்குத் தெரிய வழியில்லை. இவர் மாத்திரம் அன்றி, ஒரு பௌத்த ஆசிரியர் செய்த வீர சோழியம் என்ற இலக்கண நூலின் உரையாசிரியரும், இதே பாடலை எடுத்துத் தருவது அறிந்து மகிழத்தக்கது. இங்கு நாம் கருத்தில் கொள்ள வேண்டுவது, அர்த்தநாரீசுவர வடிவம், தான் உணர்த்துகின்ற பேருண்மை காரணமாகப் பிறமதப் புலவர்களின் உள்ளத்தையும் கவர்ந்திருக்கிறது என்பதே.

சிலப்பதிகார ஆசிரியரையும் எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். (இவர் சைனர் என்பது பொதுவாக வழங்கும் கருத்து; அபிப்பிராய பேதமும் உண்டு.) இவரும் பல இடங்களில் சிவ பெருமானுடைய அம்மையப்பர் கோலத்தைப் பக்திப் பெருக்கோடு குறிப்பிடக் காணலாம். கொற்றவை ஒருகாலிற் சிலம்பும் ஒரு காலில் வீரக் கழலும் அணிந்திருக்கிறாள் என்பார்; 'கண்ணுதல் பாகம் ஆளுடையாள்' என்பார்; 'கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து, மங்கையுருவாய் மறை ஏத்தவே நிற்பாய்' என்று ஓர் இடத்தில் துதிப்பார். 'உமையொரு பாகத்தொருவனை வணங்கி' என மற்றோரிடத்தில் கூறுவார். பெரும் புலவர்கள் நூல் முகப்பில் இறைவன் துதியாக ஒரு பாடல் அமைத்த காலத்தில் உமையொரு பாகனைத் துதிக்கிறார்கள். சங்க இலக்கியமாகிய ஐங்குறுநூற்றின் கடவுள் வாழ்த்துப் பாடல் குறிப்பிடத்தக்கது:

" நீலமேனி வாலிழை பாகத்து
ஒருவனது இருதாள் நிழற்கீழ்
மூவகை யுலகும் முகிழ்த்தன முறையே"

" பெண்ணுரு ஒருதிறன் ஆகின்று, அவ்வுருத்
தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்"

என்பது புறநானூற்றுக் கடவுள் வாழ்த்து. தேவார திருவாசகங்களும் பிற திருமுறைப் பாடல்களும் எண்ணற்ற இடங்களில் இந்த அம்மையப்பர் கோலத்தை அழகுறச் சொல்லி மகிழ்கின்றன.

அனைத்திலும் சிறப்பானவை, பதினோராந் திருமுறையில் பட்டினத்தார் பாடியுள்ள பாடல்கள். திருவிடைமருதூர் மும்மணிக் கோவையின் முதற் பாடலிலேயே மிகவும் விரிவாக அர்த்த நாரீசுவரத் திருவுருவத்தை வருணித்துப் போற்றுகிறார். இங்குள்ள துதியானது, முறையாகப் பாதாதிகேசமாகவுள்ளது. இது 74 அடிகள் கொண்ட நீண்ட ஆசிரியப்பா. திருவடி, திருவிடை, ஆகம், திருக்கரம், திருநாட்டம், திருமுடி என்ற முறையில் இவரது போற்றுதல் அமைந்துள்ளது. கூறுகின்ற வருணனை, புராணக் கதைகளையும் இயல்பாகவே இவர் உள்ளத்துக் காணும் திருவுருவப் பொலிவையும் சொற்சித்திரமாகக் கொண்டு விளங்குகிறது.

வலப்பால் திருவடியானது, மலர்ந்த செந்தாமரைபோன்ற நிறப் பொலிவுடையது; சிலம்புகின்ற கழல் புனைந்தது; மார்க்கண்டேயன் உயி

ரைக் கவரவந்த கூற்றின் ஆற்றலைப் போக்கியது; ஆணவத்தால் திருமால் பன்றியுருவெடுத்து நிலம் அகழ்ந்து தேடியும் காணப்படாதது; ஆனால் பக்தியுடைய அடியவர், மலர் இல்லாமல் வெறும் பச்சிலை கிள்ளி இட்டு வழிபடினும் முத்தி கொடுப்பது;

" தெய்வத் தாமரைச் செவ்வியின் மலர்ந்து
வாடாப் புதுமலர்த் தோடெனச் சிவந்து
சிலம்பும் கழலும் அலம்பப் புனைந்து
கூற்றின் ஆற்றல் மாற்றிப் போற்றுது
வலம்புரி நெடுமால் ஏனமாகி நிலம்புக்கு
ஆற்றலின் அகழத் தோற்றுது நிமிர்ந்து
பத்தி அடியவர் பச்சிலை இடினும்
முத்தி கொடுத்து முன்னின் றருளித்
திகழ்ந்துள தொருபால் திருவடி; அகஞ்சேந்து
மறுவில் கற்பகத்து உறுதளிர் வாங்கி
நெய்யில் தோய்த்த செவ்வித் தாகி,
நூபுரம் கிடப்பினும் நொந்து, தேவர்
மடவரல் மகளிர் வணங்குபு வீழ்த்த
சின்னப் பன்மலர் தீண்டிடச் சிவந்து,
பஞ்சியும் அனிச்சமும் எஞ்ச எஞ்சாத்
திருவொடும் பொலியும் ஒருபால் திருவடி."

இடப்பால் அம்மைக்குரிய திருவடியோ செந்நிற முடையதாய், நெய்யில் தோய்ந்த கற்பக மலரின் பொலிவு பெற்று, சிலம்பும் தாங்கலாற்றுது, தேவ மகளிர் இட்ட மலர் தீண்டினும் பொருத மென்மையுடையதாய், பஞ்சினும் அனிச்ச மலரினும் மென்மை பொருந்திய அழகு பெற்றுள்ளது.

அடுத்து, திரு இடை. வலப்பால் வேங்கைத் தோல்; அதன்மேல் பாம்பின் கச்சு. இடப்பால் செம்பட்டாடை, அதன்மேல் மேகலை!

" நீலப் புள்ளி வாளுகிர் வேங்கைத்
தோலின் கலிங்கம் மேல்விரித் தசைத்து
நச்செயிற்று அரவக் கச்சையாப் புறுத்துப்
பொலிந்துள தொருபால் திருவிடை; இலங்கொளி
அரத்த ஆடை விரித்து மீதுறீஇ
இரங்குமணி மேகலை ஒருங்குடன் சாத்திய
மருங்கிற் றுரும் ஒருபால் திருவிடை."

பின்னர் ஆகம் - திருவுடம்பு. வலப்பால் பவள மலையில் வெண்ணீறு அணிந்த கோலம்; அதில் பூணூல், அரவு, ஆமை ஓடு, பன்றியின் கொம்பு. இடப்பால் கச்சணிந்து முத்துமாலை புனைந்து செஞ்சாந்தும் குங்குமமும் எழுதிய தன பாரம்:

" செங்கண் அரவும் பைங்கண் ஆமையும்
கேழற் கோடும் வீழ்திரள் அக்கும்
நுடங்கு நூலும் இடங்கொண்டு புனைந்து
தவளநீ றணிந்ததோர் பவளவெற்பென்ன
ஒளியுடன் திகழும் ஒருபால் ஆகம்;
வாரும் வடமும் ஏர்பெறப் புனைந்து
செஞ்சாந் தணிந்து குங்குமம் எழுதிப்
பொற்று மரையின் முற்று முகிழ்என
உலகேழ் ஈன்றும் நிலையில் தளரா
முலையுடன் பொலியும் ஒருபால் ஆகம்."

இனி, திருக்கைகள்: வலப்பால் சூலம் பொருந்தியுள்ளது. மழுவும் உடுக்கையும் கைகள் தாங்குகின்றன. இடக்கைகள் சூடகம் அணிந்து பந்தும், கிளியும் ஏந்தியுள்ளன.


" அயில்வாய் அரவம் வயின்வயின் அணிந்து
மூவிலை வேலும் பூவாய் மழுவும்
தமருகப் பறையும் அமர்தரத் தாங்கிச்
சிறந்துள தொருபால் திருக்கரம்; செறிந்த
சூடகம் விளங்கிய ஆடகக் கழங்குடன்
நொம்மென் பந்தும் அம்மென் கிள்ளையும்
தரித்தே திகழும் ஒருபால் திருக்கரம்."

இனி, திருக்கண்கள் (திருநெடு நாட்டம்): வலக்கண் இரவியும் எரியும் விரவிய (சூரியனும் அக்கினியும் கலந்த) வெம்மையுடையது. இடப்பால், மானின் கண் போன்ற அழகுடையதாய் உலகேழுக்கும் அருள் செய்யும் நாட்டம்:


" இரவியும் எரியும் விரவிய வெம்மையின்
ஒருபால் விளங்கும் திருநெடு நாட்டம்;
நல்வி மானின் செவ்வித் தாகிப்
பாலிற் கிடந்த நீலம் போன்று
குண்டுநீர்க் குவளையின் குளிர்ந்து நிறம்பயின்று
எம்மனோர்க் கடுத்த வெம்மைநோய்க் கிரங்கி
உலகேழ் புரக்கும் ஒருபால் நாட்டம்."

இறுதியாகத் திருமுடி. வலப்பால், பால்நிற அன்னம் காணாத திருமுடி; மலர்கள் பல அணிந்தது; கங்கை முதலியன சூடியது; நெருப்பினால் திரித்தது போன்ற பிரகாசமான சிவந்த சடையுடையது. இடப்பால் கற்பகப் பொற்பூப் புனைந்த தெய்வமாலை சூடியது:

" நொச்சிப் பூவும் பச்சை மத்தமும்
கொன்றைப் போதும் மென்துணர்த் தும்பையும்
கங்கை யாறும் பைங்கண் தலையும்
அரவும் மதியமும் விரவித் தொடுத்த
சூடா மாலை சூடிப் பீடுகெழு
நெருப்பில் திரித்தனைய உருக்கிளர் சடிலமொடு
நான்முகம் கரந்த பால்நிற அன்னம்
காணு வண்ணம் கருத்தையும் கடந்து
சேண்இகந் துளதே ஒருபால் திருமுடி; பேணிய
கடவுட் கற்பின் மடவரல் மகளிர்
கற்பக வனத்துப் பொற்பூ வாங்கிக்
கைவைத்துப் புனைந்த தெய்வ மாலை
நீலக் குழல்மிசை வளைஇமேல் நிவந்து
வண்டும் தேனும் கிண்டுபு திளைப்பத்
திருவொடு பொலியும் ஒருபால் திருமுடி."



11 கையால் குடைந்து குடைந்து உன் கழல் பாடி...



தீயாடும் கூத்தன் ... பொற்பாதம் 12
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடு

இவ்வாறு ஈருருவும் ஒன்றாக அமைந்த வடிவத்தைப் பட்டினத்தார் போற்றுகின்றார். 'நெடு நாளாகப் பிறப்பினிலும் இறப்பினிலும் ஊசலாடி யான் இளைத்தேன். மீண்டும் பிறவியில்லாத ஒரு பேரானந்த வாழ்வு பெறுவதற்காக, எல்லா உலகையும் எண்ணற்ற முறைகள் தோற்றுவித்து அருளிய பரம காரணனாகிய ஒப்பற்ற உனது திருவடியைப் பரவுகின்றேன்' என்று முடிக்கின்றார்.


"இனைய வண்ணத்து நினைவருங் காட்சி
இருவயின் உருவும் ஒருவயிற் றாகி
வலப்பால் நாட்டம் இடப்பால் நோக்க
வாணுதல் பாகம் நாணுதல் செய்ய
வலப்பால் திருக்கரம் இடப்பால் வனமுலை
தைவந்து வருட மெய்ம்மயிர் பொடித்தாங்கு
உலகம் ஏழும் பன்முறை ஈன்று
மருதிடங் கொண்ட ஒருதனிக் கடவுள்! நின்
திருவடி பரவுதும் யாமே, நெடுநாள்
இறந்தும் பிறந்தும் இளைத்தனம்; மறந்தும்
சிறைக்கருப் பாசயம் சேரா
மறித்தும் புகாஅ வாழ்வு பெறற் பொருட்டே."

பதினோராந் திருமுறைப் பிரபந்தங்கள் பாடிய பட்டினத்தார், 'தோலும் துகிலும்' என்ற பாடல் பாடிய மாணிக்கவாசகருக்கு அடுத்த நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவர் பாடிய பாடலின் பொருளைத் தாம் நன்கு உணர்ந்து சுவைத்த காரணத்தால் அதைப் பின்னும் பெருக்கிப் பாடியிருக்கிறார். திருவேகம்பமுடையார் திரு அந்தாதியில் 38 முதல் 44 வரை உள்ள பாடல்களில் தொடர்ச்சியாக மீண்டும் இவர் அர்த்தநாரீசுவர வடிவத்தை அழகுபெறப் பாடியிருப்பதும் அறியத் தக்கது. திருவிடைமருதூரில் பாதாதிகேசமாகப் பாடியவர் இங்குக் கேசாதி பாதமாகப் பாடுகிறார். ஏழு பாடல்களிலும் திருமுடி, திருக்கண், திருக்காது, திருமார்பு, திருவயிறு, ஆடை, திருவடி என்ற முறையில் ஏழு பாடல்களிலும் பாடுகிறார். இவ்விரு வகையாலும் அவருக்கு அர்த்த நாரீசுவரர் வடிவத்தில் உள்ள ஈடுபாடு நன்கு புலப்படும்.

அம்மையப்பர் வடிவமானது, இயற்கையைப் படம் பிடித்துக் காட்டுவது போல அப்படியே ஒன்றை எடுத்து அமைத்ததல்ல; காணும் பொருளின் உள்ளீடாய் உள்ள கருத்தையே ஆன்றோரும், புலவர்களும், சிற்பிகளும் உருவமாகக் காட்டுகிறார்கள். வாக்கு மனங்கடந்த வான் கருணையாளனை, வாக்காலும் கண்ணாலும் இவற்றின் வழி மனத்தாலும் உணர்வதற்குப் பெரியோர் எத்தனையோ முயற்சிகளைச் செய்திருக்கிறார்கள். அம்முயற்சியால் விளைந்தனவே இவ்வடிவ பேதங்கள். இவ்வடிவங்களிலே, மிகவும் ஆச்சரியமான படைப்புக்களில் நடராஜ வடிவமும், அர்த்தநாரீசுவர வடிவமும் பெருஞ் சிறப்புப் பொருந்தியவை. நடராச வடிவம் எல்லா உயிருக்கும் உயிராய் எல்லா உயிரினாலும் காணப்படாததாய் இருந்து ஐந்தொழில் நடத்துகின்ற ஒரு பெரும் நிலையை உணர்த்துவது; பேராற்றலை உணர்த்துவது. அப்பெருமானது கூத்தின் பெருமையை எல்லா நூல்களும் மிக்க விரிவாய் எடுத்துரைக்கும். ஆனால் அர்த்த நாரீசுவர மூர்த்தி வடிவம் ஆன்ம கோடிகளுக்குப் புகலிடமாய் உள்ளது. இக் 'கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய்' என்று மாணிக்கவாசகர் குறிப்பிடும்போது, நோக்கி, குளிர்ந்து என்ற சொற்களால் உலகம் உய்வதற்கான ஒரு பெருந் தண்ணளியைச் சுட்டிக் காட்டுகின்றார். இதுவே இவ்வடிவத்தின் உட்பொருள்.

சீகாழி வாவிக்கரையில் திருஞான சம்பந்தப் பிள்ளையார் தமக்கு ஞானப் பாலூட்டித் தம் உள்ளத்தைக் கவர்ந்த கள்வன் இன்னான் என்று தந்தைக்குச் சொல்லாலே சொல்லத் தொடங்கிய போது, அவர் சுட்டியது தோடுடைய செவியனாகிய அர்த்தநாரீசுவர வடிவமே. இடபாரூடராகச் சிவபெருமான் உமாதேவியாருடன் தோன்றியபோது ஞானப்பால் அளித்தது உமா தேவியே. சம்பந்தருக்கு அந்த நிலையில் அருள் செய்தவர் சிவபெருமான் ஆயினும், சிவ ஞானத்து இன்னமுதம் குழைத்தருளி உண்ணடிசில் என ஊட்டியது உமையம்மை. ஆனால் சம்பந்தர் உள்ளங்கவர் கள்வன் என்று பாடுவது பெருமானையே. மற்று, எடுத்தது 'தோடுடைய செவியன்' என்று. இஃது அம்மையின் அடையாளம். எனவே, ஞானப் பாலுண்ட பிள்ளையார் அம்மையப்பரான வடிவையே நமக்குக் காட்டுகிறார் என்றே கருதவேண்டும். 'அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்றறிக' என்றே திருக்களிற்றுப்படியார் தொடங்குவதும் இங்குக் கருதற்பாலது.

இதுகாறும் நாம் கூறியவற்றால் அம்மையப்பர் திருக்கோலம் ஒரு லட்சிய வடிவம், இவ்வடிவமே இறைவனுடைய உண்மை நிலையை மக்களுக்கு உணர்த்தி ஆட்கொள்வது என்றும், சைவசமயப் பெரியோரும் பிறருங்கூட இவ்வடிவப் பொலிவிலும் இதன் பொருட் பொலிவிலும் மிகவும் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றும் அறியலாம்.



# எட்டுநாண் மலர்

[பண்டித—வித்துவான் திரு இராம கோவிந்தசாமி பிள்ளை அவர்கள்]

" எட்டு நாண்மலர் கொண்டவன் சேவடி
மட்ட லர்இடு வார்வினை மாயுமால்
கட்டித் தேன்கலந் தன்னகே டிலவீ
ரட்ட னுர்அடி சேரும வருக்கே."

இப்பாட்டு ஐந்தாந் திருமுறையாகிய திருக்குறுந் தொகையிற் காணப்பெறுவது. அடங்கன்முறை எண்ணுயிரத்திருநூற்றைம்பதில் ஐயாயிரத் தெழுநூற்றெழுபதாவது செய்யுளாகக் காணப் பெறுவது. எட்டு வீரட்டானத் தலத்துள் திருவதிகை வீரட்டானம் பற்றியது. இதனைப் பாடியருளியவர் திருவாமூரில் திருவவதாரம் புரிந்தருளிய திருநாவுக்கரசு சுவாமிகளாவர். இப் பெருமான் ஒப்பிலப்பர் எனத் திருஞான சம்பந்தராற் பெரிதுங் கொண்டாடப் பெறுபவர். இத்திருநாவுக்கரசரே "கலம் பூவொடு தூபம் மறந்தறியேன்" என்பர்.

" பூமன் சிரங்கண்டி யந்தகன்
கோவல் புரமதிகை
மாமன் பறியல் சலந்தரன்
விற்குடி மாப்பழுவூர்
காமன் குறுக்கை யமன்கட
வூரிந்தக் காசினியில்
தேமன்னு கொன்றையுந் திங்களுஞ்
சூடிதன் சேவகமே"

என்னும் பாடல் எட்டு வீரட்டானம் இவையெனலைத் தெளிவிக்கும். இவ்வெட்டனுள் திருவதிகையும் (திரிபுரமெரித்த தலம்) அத்தியினுரி தனை யழகுறப் போர்த்த வழுவூரும் பூர்வதிசையாகிய கிழக்குத் திருவாயிலையுடையன. ஏனைய திருக்கண்டியூர், திருப்பறியலூர், திருக்கடவூர், திருவிற்குடி, திருக்குறுக்கை, திருக்கோவலூர் ஆகிய ஆறுங் குடதிசையாகிய மேற்குத் திருவாயிலை யுடையன.

நம்முடைய நாட்டில் திருமுறையாற் றெளிவிக்கப்பட்டவை 275 திருத்தலங்களாகும். நடு நாட்டில் உள்ளது திருவதிகையாகும். இத்தலம் மருணீக்கியாராகிய நம் அப்பர் பெருமானுக்குச் சூலை நோய் தவிர்த்தருளித் திருவதிகை வீரட்டானப் பெருமானுல் திருநாவுக்கரசு எனத் திருப் பெயர் சூட்டப்பெற்றதாகும். மக்கட் சட்டகம் தாங்கியவர் சைவராதல் அரிதினும் அரிதாகும். சைவ நன்மக்களாயவர், சமயமாதி தீக்கைகள் பெற்றுச் சிவபூசனையாற்றி யோகம் நிட்டை புரிந்து அரனடியயடைதலே முத்தியாக் கோடல் வேண்டும்.

" பண்டைநற் றவத்தாற் றேன்றிப்
பரமனைப் பத்தி பண்ணும்
தொண்டரைத் தானே தூய
கதியினிற் றெருகுப்பன் "

என்பது சித்தியாராகும்.

சிவத்தினை விட்டாற் பவத்தினையறுக்க வொண்ணுதெனும் துணிவு பிறக்க வேண்டும். பல்லூழி காலம் பயின்றரனை யர்ச்சித்தால் நல்லறிவு சற்றே நகும். ஆகலான் சிவபரம் பொருளைச் சிந்திக்குநெறியினைச் சாத்திரமும் தோத்திரமும் தக்கவாறு கூறியிருத்தலை ஆய்வது அறிஞர் கடப்பாடாகும். நான் பெற்ற இன்பம் பெறுக விவ்வையகம் எனத் தோத்திரங் கண்ட தொன்மை இருபான் எழுவரும் இயம்பியருளியுள்ளனர். பதினொராந் திருமுறையாசிரியர் பன்னிருவருள் ஒருவராகிய பட்டினத்தடிகளார்,

" போதும் பெறுவிடிற் பச்சிலை
யுண்டு புனலுண்டு எங்கும்
ஏதும் பெறுவிடில் என்னெஞ்சுண்டென்பர்."

ஆகவே, பூக் கைக்கொண்டான் பொன்னடி போற்றும் பரிசினைப்பற்றி யொரு சிறிது திருமுறைகளைக் கொண்டு நாடுவோம் :

" பெரும்புலர் காலை மூழ்கிப்
பித்தர்க்குப் பத்த ராகி
அரும்பொடு மலர்கள் கொண்டாங்கு
ஆர்வத்தை யுள்ளே வைத்து
விரும்பிநல் விளக்குத் தூபம்
விதியினல் இடவல் லார்க்குக்
கரும்பினிற் கட்டி போல்வார்
கடவூர்வீ ரட்டனுரே,"

" பூவார் மலர் கொண் டடியார் தொழுவார்
புகழ்வார் வானேர்கள்."

முதலிய பாடல்கள்,

தொடுத்த மலரொடு தூபமுஞ் சாந்து கொண்டானடி யர்ச்சித்தலை வற்புறுத்தா நிற்கும்.

" பூவெனப் படுவது பொறிவாழ் பூவே "

என்பர்.

" பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை "

என்பது அதனைத் துணிவுறுத்தும். பூ, போது, மலர், அலர், அரும்பு, புட்பம் என்பன ஒவ்வொரு காரணத்தைக் குறித்து நிற்கும். பூப்பது பூ வாகும். அரும்பினின்று அலர்வதற்கு முன் னுள்ளது போது ஆகும். விரிந்து நிற்பது மலராகும். ஆகவே, பூவும் மலரும் போதும் நறு மணம் கமழும் பருவத்தினவாம் என்பதனைக் குறிக்கும். இங்கு அப்பர் திருவதிகைப்பிரானைப் பற்றிய பாடல்களில், பெரும்பாலும் எட்டுப் பூவினைப்பற்றி மிகமிக வியந்து சிறப்பித்திருப் பதனை நோக்கல் வேண்டும். பூக்கள் நான்கு வகைப்படும் : கோட்டுப் பூ, கொடிப் பூ, புதர்ப் பூ, நீர்ப் பூ என்பனவாம். இவற்றினை முறையே எடுத்து அருச்சித்துப் பேறுபெற்றவருள் தலையா யவர் புலிக்கால் முனிவரேயாவர். இவர் பூசித்த தலங்களே திருப்பாதிரிப்புலியூர், பெரும்பற்றப் புலியூர், பெரும்புலியூர், ஓமாம்புலியூர், திரு வெருக்கத்தம்புலியூர் முதலியனவாம். எட்டுப் பூக்களாவன, பாதிரிப் பூ, புன்னைப் பூ, சண்பகப் பூ, வலம்புரிப் பூ (நந்தியாவர்த்தம்) அலரிப் பூ, எருக்கம் பூ (வெள்ளை), தாமரைப் பூ, செங்கழுநீர்ப் பூ என்பனவாம்.

" கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்,
முப்போது முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே "

என்பது புட்பாஞ்சலி செய்தலை வற்புறுத்து கின்றது. பரார்த்த பூசனையிலோ ஆன்மார்த்த பூசனையிலோ புட்பாஞ்சலி செய்தே தீரல் வேண்டும். இஃது மனவொருமைப்பாட்டிற்கு இன்றியமையாதது. திருக்கரவீரம், திருப்பாதிரிப் புலியூர், திருஎருக்கதத்தம்புலியூர், புன்னையங் கானல் (திருமயிலை) முதலியன அப்பூவினை யுடைய மரத்தாற் பெயர் பெற்றனவாம். அப்பர் அருளிய அக்குறுந்தொகைப் பாடல்களை மேலும் பார்ப்போம் :

" நீள மாநினைந்து எண்மல ரிட்டவர்
கோள வில்வினை யுங்குறை விப்பரால் "

எனவும்,

" கள்ளின் நாண்மலர் ஓரிரு நான்குகொண்டு
உள்கு வாரவர் வல்வினை யோட்டுவார் "

எனவும்,

" பூங்கொத் தாயின மூன்றொடு ஓரைந்திட்டு
வாங்கி நின்றவர் வல்வினை யோட்டுவார் "

எனவும்,

" தேனப் போதுகள் மூன்றொடு ஓரைந்துடன்
தானப் போதிடு வார்வினை தீர்ப்பவர் "

எனவும்,

" ஏழித் தொன்மலர் கொண்டு பணிந்தவர்
ஊழித் தொல்வினை யோட அகற்றுவார் "

எனவும்,

" உரைசெய் நூல்வழி யொண்மல ரிட்டிடத்
திரைகள் போல்வரு வல்வினை தீர்ப்பரால் "

எனவும்,

" ஒலி வண்டறை யொண்மலர் எட்டினால்
காலை யேத்த வினையைக் கழிப்பரால் "

எனவும்,

" தாரித் துள்ளித் தடமலர் எட்டினால்
பாரித் தேத்தவல் லார்வினை பாற்றுவார் "

எனவும்,

" அட்ட புட்ப மவைகொளு மாறுகொண்டு
அட்ட மூர்த்தி யநாதிதன் பாலணைந்து
அட்டு மாறுசெய் கிற்ப அதிகைவீ
ரட்ட ரைடி சேரு மவர்களே "

எனவும் இப்பத்துப் பாடல்களாலும் அட்டபுட் பங்களாகிய எட்டு மலர்களாலும் பூசிக்கப் பெறு வோர் பெறும் பெரும்பேற்றினை யெடுத்துச் சிறப்பித்துள்ளனர். பஞ்சமகா வில்வங்கள் எனப்பெறும். கூவிளம் (வில்வம்), விளா, மாவிலிங்கம், கிளுவை, நொச்சி ஆய பத்திரங் களுட் சிறந்து நிற்பனபோல எட்டுநாள் மலர் களும் சிறந்தவையெனப் போதருகின்றது.

நாறும் பூவுந் தேவர்க்காம், நாறாப் பூவும் தேவர்க்காம் என்பது ஒரு பெற்றியாகவிருப்பி னும் எல்லாம்வல்ல இறைவனை, உருவும் அருவும் அருவுருவும் கொண்டு ஆன்மாக்களின் மலவலி கெடுத்து நலமுறு முக்திப் பேறருளுமுறை யிது வெனலைக் குறிப்பிடல் போற்றற்பாலது. எட்டு நாள் மலர்கொண்டு என்பது நாமறியக் கிடப்பதாம்.

சில பூக்கள் அன்றே அப்பொழுதே நேசித்து விசுவாசித்துப் பூசித்தல்வேண்டும். சில பூக்கள் மூன்றுநாள், ஏழுநாள், சில திங்களும் வைத் துப் பூசிக்கலாம் எனப் புட்பவிதியிற் காணப் பெறுவது. இதழியாகிய கொன்றையும் கூவிள மும், உன்னியும் மத்தமும் செங்காவி, கருங் காவியும் மிகமிகச் சிறப்புற்றன. கோங்கலரும் அப்பெற்றியதே.

பகைவரையும் (அகப்பகை, புறப்பகை) புறங் கொடுத்து ஓடச் செய்ய வேண்டுமெனும் மனப்

பான்மையர், வெள்ளெருக்கம் பூவினையெடுத்துப் பாலினிற் றோய்த்துச் சீலமொடு சிவபூசனை புரிவோர் ஆதல்வேண்டும். பாதிரிப்பூவினை யெடுத்துப் பூசிக்கும் பெற்றியர் தாமும் பாச நீக்கமுற்று சிவநேச வாசமுற்றுத் தம்மைச் சார்ந்தவரையும் அப்பெற்றியராக்குவர். சண்பகப் பூ; வண்டு படாமலர். அதிலுள்ள தேனினை யருந்த வண்டுகள் மொய்க்கப் பெறு. சண்பகாரணியம், சண்பகக்காடு, சண்பகாடவியென்று தலம் அழைக்கப்பெறும். இப்பூவினால், அருவுருவத் திருமேனிகொண்ட சிவலிங்கப் பெருமானை, பஞ்சபூதங்களும் இருசுடரும் இயமானனும் ஆகிய அட்டமூர்த்தியை, அருச்சிக்கப் பெறுபவர், புறச்சமயங்களிற் புக்கு நரக வேதனைக் குள்ளாகாதே சிவபரம் பொருளைச் சார்ந்து சிவமாந்தன்மை யெய்தப்பெறுவர். புன்னைப் பூ: இது நெய்தனிலக் கருப்பொருள்களுள் ஒன்று. நெய்தல் என்பது கடற்கரையடுத்தவூர்களாம். (கடலும் கடல்சார்ந்த விடமும்). இதன் வித்தினை யாட்டி யெண்ணெய் யெடுத்துத் தீபமிடல் சில நாட்டு வழக்காம். இருப்பை வித்தினெய் ஏற்றமுடைத்தாதல்போல இதுவும் ஏற்றமுடைத்தென வியம்புவர். கலைமகள் நோக்கமும் (கடாட்சமும்) திருமகள் நோக்கமும் வேண்டுமவர்-புன்னைப்பூக்கள் கொண்டு பூசனைபுரிதல் வேண்டும். அலரியாகிய கரவீரப் பூவினால் போற்றிப் பூசிப்பவர் சிவவொளி பெற்றுத் திகழ்வர். இவ்வலரிப் பூவினை மூன்று நாள்வரை வைத்துப் பூசிக்கலாம். அலரி என்று சூரியனுக்கொரு பெயர். இதனைக் கண்டலர்வது இவ்வலரியும் கமலமாகிய தாமரையும் ஆம். அடுக்கு அலரி துர்க்கை, காளி, சூரியன் முதலிய மூர்த்திகளுக்கு ஆகும் என்பர். இவ்வலரிப்பூ ஐவகை நிறமுடையதாகக் காணலாம். இது சிவபூசனைக்கு மிகச் சிறந்ததெனற்குப் பல காரணங்களுண்டு. அவற்றினைப்பற்றிய குறிப்பு வரையவில்லை.

இனி நந்தியாவர்த்தமாகிய வலம்புரிப் பூவினைப்பற்றிய குறிப்பினைக் கூறுவாம். இப்பூ, அடுக்காகவும், ஒரிதழாகவும் சிறிய அடுக்குடையதாகவும் காணப்பெறும். நல்ல மணமுண்டு. வெள்ளியாகிய இரசதச் சத்துண்டென்பர். இதனைக்கொண்டு அட்டமூர்த்தியாகிய அரனை யருச்சித்தால் அகக்கண்ணொளியும், புறக்கண்ணாகிய ஊனக் கண்ணொளியும் பெற்று வாழ்வர். மக்களுக்குக் கண்ணிற் சிறந்த வுறுப்புண்டோ? இல்லையல்லவா? ஆகவே, நந்தியாவர்த்தம் பூசனைக்குப் போற்றற்பாலதாயிற்று.

நீர்ப்பூக்களாகிய காவியும், கமலமும்பற்றிய குறிப்பினைக் குறிப்பாம். கமலக்கண்ணன் எனும் பெயர்பெறும் கரிய திருமாலும் சலந்தரனைச் சங்கரித்த சக்கரம் பெறுவான் வேண்டித் திருவீழிமிழலையெனும் திருத்தலத்தைச் சார்ந்து நாளொன்றுக்கு ஆயிரம் அரவிந்தப் பூக்கொடு அருச்சித்தனர் என்றும், ஆயிரத்திலொன்று குறைய நிறையவில்லையெனத் தம் கமலக்கண்ணைப் பறித்துப் பூசித்துச் சக்கரம் பெற்றனர் என்றும் வரலாறு கூறும். திருமகள் தலைவரே தாமரைப்பூவின் ஏற்றங் குறித்துப் பூசித்தனர். எனின், நாம் எங்ஙனம் அதன் சிறப்பினைச் செப்பப்பெறுவோம்? சிவபூசனை செய்பவர் தாமரையை ஏழுநாள் வரை வைத்துப் பூசிக்கலாம். ஆதலின், இன்றியமையாதனவெனக் கொள்ளல்வேண்டும். தாமரைப் பூவினை யென்பதற்குப் போதிய சான்று கிட்டியது.

திரு-திருமகள்; ஊர்-தலம். திருவாரூர்த் தலப் பெயர் கமலாலயம் என்பது ஆயற்பாலது. இவ்வூரில் எழுந்தருளிய பராசக்தி நீலோற்பலாம்பிகையாவள். பராசக்தியின் திருவருள் பெற்றாலன்றிச் சிவப்பேறற முடியாதென்பது பலர் கண்ட முடிபு; ஆகலின், அப்பெற்றியுள்ள நீலோற்பல மலரே தியாகராசப்பெருமானாகிய இருந்தாடும் பெருமானுக்கு உரித்து. இன்றும் அப்பூக்கள் கொண்டு பூசித்து வருகின்றனர். செங்கழுநீர் என்றும் பெயர் உண்டு. இப்பூவும் பலநாள் வைத்துப் பூசித்தல் தகும். சோழநாட்டில் மத்தியார்ச்சுனம் எனப்பெறும் திருவிடைமருதூர்ப் பெருமானைப்பற்றிய தேவாரப் பாடலுள் ஒன்று:

"பாச மொன்றில ராய்ப்பல பத்தர்கள்
வாச நாண்மலர் கொண்டடி வைகலும்
ஈசனெம் பெருமான்இடை மருதினில்
பூச நாம்புகு தும்புன லாடவே,"

"இடைமரு தீசனை யிடைவிடா தெண்ணித்
தடைபல ஒரீஇத் தரணிவா ழியரே."



# திருவிடைமருதூர் மும்மணிக் கோவை

[திரு க. வெள்ளைவாரணன், தமிழ்த்துணைப் பேராசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்]

பதினொராந் திருமுறையில் ஒன்றாகிய இந்நூல் திருவெண்காட்டடிகளால் அருளிச் செய்யப் பெற்றதாகும். இவர் சோழ நாட்டின் கடற் றுறைப் பட்டினமாகிய காவிரிப்பூம்பட்டினத்திற் பிறந்தமையாற் பட்டினத்துப் பிள்ளையாரெனவும் வழங்கப் பெறுவர். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் திருவெண்காடர் என்பது. செல்வக் குடும்பத்திற் பிறந்து மனைத்தக்க மாண்புடைய மங்கையை மணந்து மனைவாழ்க்கை நடத்திய இப்பெரியார், பிறவி நோய்க்குக் காரணமாகிய அவாவை அறவே நீத்துத் துறவறத்தை மேற் கொண்டமையால் திருவெண்காட்டடிகளெனவும், பட்டினத்தடிகளெனவும், அடிகள் என்ற சொல் லாற் போற்றப் பெறுவாராயினர்.

பதினொராந் திருமுறையுள் திருவெண்காட்டடி கள் இயற்றியனவாகக் கோயில் நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவிடை மருதூர் மும்மணிக்கோவை, திருவேகம்பமுடை யார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது என ஐந்து பிரபந்தங்கள் சேர்க்கப் பெற்றுள்ளன. இப்பனுவல்கள் யாவும் சொற் செறிவும் பொருட்பொலிவுமுடையனவாய்க் கற் பார்க்கு நவிலுந்தோறும் சுவை பயப்பனவாக உள்ளன.

சிவபெருமான் கோயில் கொண்டருளிய திருவிடைமருதென்னும் திருப்பதியை, அகவல், வெண்பா, கட்டளைக்கலித்துறையென முறைப் படத் தொடுத்த முப்பது செய்யுட்களாற் போற் றிப் பரவிய பனுவலாதலின் இது திருவிடை மருதூர் மும்மணிக்கோவையென்னும் பெயர்த் தாயிற்று.

'தெய்வத் தாமரை செவ்வியின் மலர்ந்து' எனத் தொடங்கும் இப்பிரபந்தத்தின் முதற் பாடல் உமையொருபாகராகிய அர்த்தநாரீச்சுரர் திருக்கோலத்தின் இயல்பினை அழகுற விரித் துரைக்குந் திறம் படிக்குந்தோறும் இன்பம் தருவதாகும்.

அடியார்கள் பிறிதொன்றில் ஆசையின்றிப் பருகி மகிழ்தற்குரிய பெருந்தேனாக இறைவன் இடைமருதில் வீற்றிருந்து அருள்புரியும் சிறப் பினையும், அத்திருப்பதியை அடைந்து இறை வனை வழிபட்டதனால் தாம் பெற்ற பெரு நலங் களையும் அடிகள் விரித்துரைப்பதாக அமைந்தது,

" வருந்தேன் இறந்தும் பிறந்தும்
மயக்கும் புலன்வழி போய்ப்
பொருந்தேன் நரகிற் புகுகின்றி
லேன்புகழ் மாமருதிற்
பெருந்தேன் முகந்துகொண் டுண்டு
பிறிதொன்றி லாசையின்றி
இருந்தேன் இனிச்சென் றிரவேன்
ஒருவரை யாதொன்றுமே "

என வரும் பாடலாகும். 'அந்த இடைமருதில் ஆனந்தத் தேனிருந்த பொந்தைப் பரவி நாம் பூவல்லி கொய்யாமோ' என்ற திருவாசகத் தொடர்ப்பொருளை உளங்கொண்ட திருவெண் காட்டடிகள் இப்பாடலில் 'புகழ்மாமருதிற் பெருந்தேன்' என இடைமருதீசனைப் போற்றிய திறம் நினைந்து மகிழத்தகுவதாகும்.


" இடைமருதினை இடமாகக் கொண்டு எழுந் தருளிய என் தந்தையே, அடியேன் பிறவிச் சுழியில் அகப்பட்டுத் தடுமாறும் போது யானுற்ற துன்பத்தினையும் என்னைப்பெறும் நிலையில் என் தாயுற்ற துன்பத்தினையும் உள்ளவாறு அறிவார் உயிர்க்குயிராகிய நின்னைத்தவிர வேறு யாருளர்? பெருகிய துன்பந் தருவதாகிய இப்பிறவிச்சுழலிற் பட்டு யான் இனிப் பிறக்கும் வலியுடையே னல்லன். நின்னை உறுதுணையாகப் பற்றி வழி படும் ஒரு நெறியைத் தவிரப் பிறவிநோய் களைதற் குப் பிறிதொரு வழியும் இல்லை. மீண்டு வாராவழி அருளும் நின் திருவருள் நெறியில் ஒழுகுதற்கு விருப்பு வெறுப்பற்ற ஒருமை மனம் வேண்டும். ஐம்புல வேடர்களின் ஆணைவழி கட்டுப்பட்டு நின்று தானல்லாதவற்றைத் தானெனக் கருதும் மயக்க நிலையினையுடையது என் மனம். இம் மனத்தைக்கொண்டு நின்னை நினைந்து போற்று தல் எங்ஙனம் இயலும்? கல்லைத் தெப்பமாகக் கொண்டு கடலைக் கடக்கவெண்ணிய பேதையர் என்னைத்தவிர வேறு யாருளர்? பிறப்பென்னும் பெருங்கடலை அடியேன் கடத்தலும் வேண்டும். அங்ஙனம் கடத்தற்கு உறுதுணையாக நின்னை நினைத்துப் போற்றும்வண்ணம் என் மனத்தை நீ திருத்தியருளுதலும் வேண்டும் " எனத் திரு வெண்காட்டடிகள் இடைமருதீசனை வேண்டுவ தாக அமைந்தது இம்மும்மணிக் கோவையின் நான்காம் பாடலாகும். " அவனருளாலே அவன்றாள் வணங்கி " எனத் திருவாதவூரடிகள் அருளியவண்ணம் இறைவனை நினைந்து போற்றுதற்கும் அவனருள் வேண்டும் என்ற உண்மை இப்பாடலில் நன்கு அறிவுறுத்தப் பெற்றமை காணலாம்.

செல்வத்துடன் வாழ்ந்திருக்கின்றேமெனச் செருக்குற்று இரவலர்க்கு உதவாது தம்முயிரைப் பாதுகாத்தலொன்றையே குறிக்கொண்டு தம்மால் ஏனையுயிர்கள் படுந்துன்பத்தினைச் சிறிதும் பொருட்படுத்தாது இம்மைப் பயனும் மறுமைப் பயனும் இல்லையென்று துணிந்து தாம் விரும்பியவாறு செய்தொழுகி மின்னலைப்போல் தோன்றியழியும் இயல்பினவாகிய உலகியற் செல்வத்தை நிலைபேறுடையதாக விரும்பித் தம்மையும் ஒப்பற்ற பெருந்தலைவராக மதித்து வாழ்தல் கீழ்மக்கள் வாழ்வாகும். இறைவனுடைய திருவடியைப் பற்றிநின்று உலகியலில் நேரும் இடையூறுகளைக் கண்டு அஞ்சுதலை விடுத்து, மக்கள் மனைவி சுற்றம் செல்வம் என்பவற்றைப் பொருளெனக் கருதாது, இறைவனது திருவருளையே பொருளாக எண்ணி, இந்திர பதத்தால் அடையும் பெருஞ்செல்வமும் எட்டுச் சித்திகளும் தாமே வந்த காலத்தும் அவற்றை மறுத்தொதுங்கிக் கிழிந்த கந்தையும் ஒட்டிட்டுத் தைத்த கோவணமும் அறுந்த கீளுடையுமாகக் கிடைத்தவற்றை யுடுத்துச் சிதைவுற்ற ஓடொன்றை உண்கலனாகக் கையில் ஏந்தித் தம்மை நோக்கி வந்து பிச்சையிடுவோர் உளராயின் அவர் தந்தவற்றை நின்ற நிலையிலேயே யுண்டு தரையையே பாயாகக் கொண்டு, நீங்காத சாந்தம் என்னும் மனைவியைக் கூடி, எவ்வுயிர்களையும் தம் மக்களெனக் கருதி யாவரிடத்தும் ஒப்ப அன்பு செய்தல் அருட்செல்வர்களாகிய கடவுட்டொண்டர்களின் உயர்ந்த வாழ்வாகும். இவ்விரு வகை வாழ்க்கையினையும் ஆராய்ந்து நோக்குங்கால், விலங்குகளது காலின் குளம்படியாகிய சிறிய பள்ளத்தில் தங்கிய நீரும், ஊழிக்காலத்தில் அளப்பரியதாய்ப் பொங்கிய பெருங்கடல் நீரும், நீரென்ற பொதுமையான் தம்முள் ஒக்குமாயினும், அளவாற் சிறிதும் ஒவ்வாதனவாம். ஆதலின் சிவனடியார்களுக்குத் தொண்டுபட்டு, அவர்கள் குணத்துடன் நெடுங்காலம் பழகி, அன்னோர் காலாலிட்ட பணியைத் தலையாலே செய்து அத்தொண்டினாலுளதாம் பேற்றினை இன்புறுதலொன்றைத் தவிரப் பெறத்தக்க பேறு பிறிதொன்றுமில்லை என அடிகள் இடைமருதீசனைப் பணிந்து போற்றுவதாக அமைந்தது இம்மும்மணிக் கோவையின் ஏழாம் பாடலாகும். இதன்கண் தாம் மேவன செய்தொழுகும் கயவர் வாழ்வும் இறைவனது அருள்வழியொழுகும் மெய்த்தொண்டர் வாழ்வும் இன்னவென அடிகள் விளக்கிய திறம் அடிகளது செம்மை மனத்தின் சிறப்பினை இனிது புலப்படுத்தல் காணலாம்.

"மருதமாணிக்கத் தீங்கனியாகிய சிவபோகத்தை விளைக்குந் தொழிலினராகிய தொண்டரது உழவின் திறத்தையும், அவ்வுழவினை மேற்கொள்ளாது மனமெனும் புனத்தை வறும் பாழாக்கித் தமக்கும் பிறர்க்கும் பயனின்றிக் கழியும் ஏனையோரது இழிவையும் புலப்படுத்துவது, இம்மும்மணிக் கோவையின் பத்தாம் பாடலாகும். மனமெனும் புனத்தில் முளைத்துள்ள வஞ்சனையாகிய மரத்தை வேருடன் அகழ்ந்து நீக்கி, அன்பெனும் பாத்திகோலி, மெய்ம்மையாகிய எருவிட்டுப் பத்தியென்னும் விதையை விதைத்து, ஆர்வமாகிய நீரைப் பாய்ச்சி, ஐம்பொறிகளென்ற பட்டிமாடுகள் உள்ளே நுழையாதபடி சாந்தமாகிய வேலியை அமைத்துக் காக்க, ஞானமெனும் முளை முளைத்தெழுந்து, அருளாகிய பசுந்தளிர்கள் தளிர்த்து விளங்க, ஒழியாத காமம் வெகுளியாகிய களைகளைக் களைந்தெறிந்து சேமமாகக் காத்துவரும் நிலையில், அப்பயிர் செம்மையாக வளர்ந்து, மெய்ம்மயிர் முகிழ்த்துக் கண்ணீரரும்பிக் கடிமலர் மலர்ந்து திருவைந்தெழுத்தெனுங் காய் தோன்றி, நீலகண்டமும் முக்கண்ணும் எட்டுத் தோள்களும் ஐந்து திருமுகமும் பவளம்போலும் செந்நிறமுடையதாய் வெள்ளை நீறுபூசி அறுசுவையதனினும் மிக்க சுவையுடையதாய்க் காணினும் கேட்பினும் கருதினும் இனிமை தருவதாய் நிலவெல்லையைக் கடந்து மருதமாணிக்கமென்னும் இனிய கனி மெல்ல மெல்ல முற்றிப் பழுத்து எளிதிற் கைவரப்பெற்றுத் தொண்டவுழவராகிய மெய்யடியார்கள் அக்கனியினை இனிதின் அருந்திச்செம்மாந்திருப்பார்கள். இங்ஙனமாகவும், சிலர் தம் மனமாகிய புனத்தைப் பண்படுத்தாது வறும்பாழாக்கிக் காமக்காடு மூடி ஐம்புல வேடர்கள் ஆறலைத்துத் திரியவும் சிற்றின்பமாகிய கானல்நீர் ஓடவும் கல்லாவுணர்வாகிய மானினம் வருந்தியுழலவும் ஆசையெனும் விதை விழுந்து யானெனப் பெயர் கூறப்பட்ட நச்சு மரமாக முளைத்து நீண்டு வளர்ந்து பொய்ம்மையாகிய கிளைகளை எம்மருங்கும் விட்டுப் பாவமாகிய தழைகளைத் தழைத்துப் பூவென்று சொல்லும்படி கொடுமையென்ற அரும்புகளையீன்று தீமை மலர்ந்து துன்பமாகிய பல காய்களைக் கொத்தாகத் தாங்கிப் பின்பு அவை மரணமெனும் கனியாகப் பழுத்து உதிர, நரகிடை வீழ்ந்து, தமக்கும் பிறர்க்கும் பயனின்றிக் கணைப்பொழுதில் இறந்தொழிகின்றார்கள்" என உருவக அணி யமைய இப்பாடலில் அடிகள் விரித்துக் கூறியுள்ளார். இதன்கண் தொண்டவுழவரது அரிய முயற்சியாக அடிகள் வெளியிட்டருளிய செய்திகள்,



13 , எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் பூம் புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்



கோதை குழலாட, வண்டின் குழாமாடச் '14
சீதப் புனலாடிச், சிற்றம்பலம் பாடி...

"மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப்
பொறையெனு நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகிற்
சிவகதி விளையு மன்றே"

என வரும் திருநாவுக்கரசர் திருப்பாடற்குச் சிறந்த விளக்க விரிவுரையாக அமைந்தமை ஒப்பு நோக்கி யுணரத் தகுவதாகும்.

உயிர் எவ்வியல்பினது என ஆராயப் புகுந்து, தத்துவ சோதனை செய்து தம்மியல்பினை யுணராது வருந்திய அடிகள், இறைவனது திருவருள் நாட்டம் பெற்றவுடனே உயிராகிய தம்மையும் இறைவனையும் உணரப்பெற்ற திறத்தை விரித்து உரைப்பது, 'மேவிய புன் மயிர்த் தொகையோ' எனத் தொடங்கும் பதின் மூன்றும் பாடலாகும். "நாடி, எலும்பு, நரம்பு முதலிய உடலுறுப்புக்களுள் உயிராகிய யான் யார் என்று என்னைத் தேடிப்பார்த்தும், என்னைத் தெளிய அறிந்து கொண்டேனல்லன். இவ்வாறு தம்மைப்பற்றி ஆராய்ந்தறிகின்ற ஆராய்ச்சி யறிவின்கண்ணே இதனைத் தெளிவிப்பதாகிய அறிவு வேறு உண்டென்று ஆராய்ந்து நோக்கி, அவ்வாறு நாடுங்கால் விளங்கித் தோன்றும் இறைவனது திருவடி ஞானத்தால் அம்முதல்வனையும் உணர்ந்து, அவனது பேரறிவினுள்ளே தாம் அடங்கி நின்று, அங்ஙனம் அறியும் பொருளாகிய தம்மையும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். அங்ஙனம் உணரும் பயிற்சி பெறுதார் உயிராகிய தம்மை அறிய வல்லுநரல்லர்" என்பதனை,

"நாடியோ என்போ நரம்புசீக் கோழையோ
தேடி யெனையறியேன் தேர்ந்தவகை—நாடிஅரன்
தன்னாலே தன்னையுங் கண்டு தமைக்காணார்
என்னும் எனஅறிவார் இன்று"

என வரும் வெண்பாவில் ஆசிரியர் மெய்கண்ட தேவ நாயனார் தெளிவாக விளக்கியுள்ளார். இவ் வெண்பா திருவிடைமருதூர் மும்மணிக்கோவை யில் வரும் 'மேவிய புன்மயிர்த் தொகையோ' என்ற முதற் குறிப்புடைய திருப்பாடற்பொருளை அடியொற்றியமைந்ததென்பது இவ்விரு செய் யுட்களையும் ஒப்பு நோக்கி யுணர்வார்க்கு இனிது விளங்கும். "நின்னைக் காணு மாந்தர், தன்னை யுங்காணுந் தன்மையோரே" என ஓதியவாற்றான் ஏனைப் பசு பாசங்களும் சிவஞானத் தானன்றி அறியப்படாவென்பது போதரும்" என்றும், "ஆன்மா பிறவுயிர்களைத் தனித்த முதலாய்ப் பிரித்தறியுமாறு இல்லையாயினும் சிவத்தைத் தரிசிக்கும் வழித் தான் அதுவாய் நின்று தன்னை யறியுமாறு போலப் பிறவுயிர் களையும் அச்சிவத்தின் வண்ணமாய்க் கண்டறி தல் அமைவுடைத்தென்பது,

'என்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டேன்
நின்னிலை யனைத்தையுங் கண்டேன்—என்னே
நின்னைக் காணு மாந்தர்
தன்னையுங் காணுந் தன்மை யோரே'

என்பதனாற் புலனாம்" என்றும் சிவஞான முனிவர் இத்திருப்பாடற்பொருளை இனிது விளக்கியுள்ளார். சிவரூபத்தால் ஆன்ம தரிசன மும், சிவ தரிசனத்தால் ஆன்மசுத்தியும் ஆமாறு கூறிற்று இப்பாடல் எனக்கொள்ளுதல் பொருந்தும்.

சிவபெருமானை நினையாமலும் திருவைந் தெழுத்தினை முறைப்படி ஓதாமலும் பச்சிலையும் நீருங்கொண்டு வழிபாடு செய்யாமலும் வேறு யாராகவோ நினைக்கும் புறச்சமயத்தாருள்ளத் திலும் இடைமருதீசன் பொன்னார் திருவடியே நண்ணி அருள் வழங்கும். ஆறு சமயத்தார் செய்யும் வழிபாடுகளெல்லாம் இடைமருதீச னொருவனையே வந்து சார்வன என்னும் உறுதி யுடையவர் திருவெண்காட்டடிகளென்பது,

"ஓராதே யஞ்செழுத்து முன்னாதே பச்சிலையும்
நேராதே நீரும் நிரப்பாதே—யாராயோ
எண்ணுவா ருள்ளத் திடைமருதர் பொற்பாதம்
நண்ணுவா மென்னுமது நாம்."

"அன்றென்றும் ஆமென்றும் ஆறு சமயங்கள்
ஒன்றொன்றோ டொவ்வா துரைத்தாலும்—என்றும்
ஒருதனையே நோக்குவா ருள்ளத் திருக்கும்
மருதனையே நோக்கி வரும்"

என வரும் மும்மணிக்கோவைச் செய்யுட்களால் இனிது புலனாகும். இப்பாடல்கள்,

"எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் தன்னடியார்க்
கிங்கேயென் றருள்புரியும் எம்பெருமான்"

என ஆளுடைய பிள்ளையாரும்,

"விரிவிலா அறிவி னார்கள் வேறொரு சமயஞ் செய்து
எரிவினாற் சொன்னா ரேனும் எம்பிராற் கேற்ற தாகும்,"

"ஆறு சமயத் தவரவரைத் தேற்றுந் தகையன,"

"ஆறொருவ ருள்குவா ருள்ளத் துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந் தோன்றும்"

என ஆளுடைய அரசரும் அருளிய பொரு ளுரைகளை இனிது புலப்படுத்தி அடிகளது விரிந்த உணர்வை நன்கு அறிவுறுத்துவன வாதல் காண்க.

உயிர்களது நலங்கருதி உடல், கருவி, உலகு, நுகர்பொருள் என்பவற்றைத் தந்தருளிய இறைவன், தன் அருளாரின்பப் பெருவாழ்வை

எவ்வுயிர்க்கும் உரியதாக அமைத்து வைத்துள்ளானாதலின், அவன்பால் ஒரு சிறிதும் குற்றமில்லை. அப்பெருமானை நினைந்து போற்றி அவனருளால் இடர்ப் பகைகளைக் களைந்து கூற்றுவனது ஆற்றலையழித்து இறப்பையும் பிறப்பையும் இகழ்ந்து வாளுரது பசுவாகிய காமதேனுவின் கன்றைப்போன்று கவலையற்றுத் திரியும் பேரின்ப வாழ்வினைப்பெறும் வசதி, எல்லா மக்களுக்கும் பொதுவாக இறைவனால் அளிக்கப்பெற்றுள்ளது. அவ்வசதியைப் பயன்படுத்திக்கொள்ளாத தீவினையாளர் கண்ணதே குற்றம். அஃது எவ்வாறென்றால், அறுசுவையுடன் கூடிய நல்ல உணவு சமைக்கப்பெற்றிருக்கவும் அதனைப் புசியாது ஒருவன் பசியால் வருந்துதல் அவ்வுணவின் குற்றமன்று. நல்ல மணப்பொருள் விரவிய இன்சுவைத் தண்ணீர் இருக்கவும் நீர்வேட்கையுடையானொருவன் அந்நீரைப் பருகாது வருந்துதல் நீரின் குற்றமன்று. நன்னிழலைத் தரும் குளிர் பூஞ்சோலை வழியிடையேயிருக்க அவ்வழியே செல்வானொருவன் அதன்கண் தங்கி இளைப்பாறுது உடல் வியர்க்கக் கடுவெயிலில் நடந்து வருந்துதல் நிழலின் குற்றமன்று என இவ்வாறு சார்ந்தவர்க்கு நலஞ்செய்யும் சங்கரனாகிய இறைவன் எவ்வுயிர்க்கும் தன்னருளை உரிமைப்படுத்தி வைத்துள்ள திறத்தையும் அப்பெருமானை நினைந்து உய்தி பெறாத தீவினையாளர்களது அறியாமையையுங் கூறி இரங்குவதாக அமைந்தது, இம்மும்மணிக் கோவையின் பதினாறும் பாடலாகும்.

இறைவனது திருநாமமாகிய திருவைந்தெழுத்தை யோக ஞானங்களால் முதிர்ந்த துறவிகள் ஓதினாலும், அன்றி மனைவி மக்களொடு வாழும் ஏனையோர் ஓதினாலும் அவ்விருதிறத்தாரும் இறைவனருளில் திளைத்தலுறுதியென்பது திருவெண்காட்டடிகள் கருத்தாகும். உடல் வலியிற் சிறந்தானொருவனால் உயர வீசியெறியப்பட்டு விரைந்து சென்ற கல்லும், வலியில்லாதானொருவனால் வீசப்பட்டுத் தாமதித்து மேலே சென்ற கல்லும் நிலத்தின் இயல்பாகிய ஈர்ப்பாற்றலால் நிலத்தின்கண் ஒருங்குவிழக் காண்கிறோம். அதுபோல இறைவனது திருநாமமும் தன்னையோதுவாரது ஞானத்தில் வன்மை மென்மை காரணமாக மாறுபடாது தனக்கு ஆதாரமாகிய இறைவனருளால் ஈர்க்கப்பட்டு ஓதுவாரனைவர்க்கும் ஒப்ப நலஞ்செய்யும் சிறப்புடைத்தென்பதனை,

" வல்லா னொருவன் கைம்முயன் றெறியினும்
மாட்டா ஒருவன் வாளா எறியினும்
நிலத்தின் வழாஅக் கல்லே போல
நலத்தின் வழார்நின் நாமம் நவின்றோரே "

எனவருந் தொடரால் அடிகள் விளக்கிய திறம் வியந்து போற்றத் தக்கதாகும்.

இறைவனை வழிபட்டு வரம் பல பெற்ற வானவர், முனிவர், அடியார்கள் இன்னின்னாரெனக் குறித்துப் போற்றுவது, இம்மும்மணிக் கோவையின் இருபத்தெட்டாம் செய்யுளாகும். இதன்கண்

" வித்தகப் பாடல் முத்திறத் தடியரும்
திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்
அத்தகு செல்வத் தவமதித் தருளிய
சித்த மார்சிவ வாக்கிய தேவரும் "

எனச் சைவசமய குரவர் நால்வரையும் பெருஞ் செல்வத்தைத் துறந்த செம்மனச் செல்வராகிய சிவவாக்கிய தேவரையும் குறித்துப் போற்றிய அடிகள்,

" வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்தும்
ஓடும் பல்நரி யூளைகேட் டரனைப்
பாடின வென்று படாம்பல வளித்தும்
குவளைப் புனலில் தவளை அரற்ற
ஈசன் றன்னை யேத்தின வென்று
காசும் பொன்னுங் கலந்து தூவியும்
வழிபடும் ஒருவன் மஞ்சனத் தியற்றிய
செழுவிதை யெள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலும் அவன்இப் பிறப்புக் கென்ன
இடித்துக் கொண்டவன் எச்சிலை நுகர்ந்தும்
மருத வட்டத் தொருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி
உம்மைப் போல எம்மித் தலையும்
கிடத்தல் வேண்டுமென் றடுத்தடுத் திரந்தும்
கோயில் முற்றத்து மீமிசைக் கிடப்ப
வாய்த்த தென்று நாய்க்கட்ட மெடுத்தும்
காம்பவிழ்ந் துதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதானம் அமைத்தும்
விரும்பின கொடுக்கை பரம்பரற்கென்று
புரிகுழற் றேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய அன்பின் வரகுண தேவர் "

எனச் சிவபத்திச் செல்வராகிய வரகுணதேவர் செய்த பேரன்பின் செயல்களை விரித்துரைத்துப் போற்றியுள்ளார். இங்குப் புகழ்ந்து போற்றப் பெற்ற பெரிய அன்பின் வரகுண தேவராவார்

" புயலோங் கலர்சடை யேற்றவன்
சிற்றம் பலம்புகழும்
மயலோங் கிருங்களி யானை வரகுணன் "

எனவும்,

" வரகுணனாந் தென்னவன் ஏத்து சிற்றம்பலத்தான் "

எனவும் திருவாதவூரடிகளாற் போற்றப்பெற்ற முதல் வரகுண பாண்டியராவார்.

# பட்டினத்தார் பாராட்டும் பைந்தமிழ்

[செஞ்சொற்கொண்டல், புலவர் சொ. சிங்காரவேலன், M.A., Dip. Ling.,]
(அ. வ. அ. கல்லூரி, மாயூரம்)

**உள்ளத்தின் உறுதி :**

உலகம் இன்பம் துன்பம் இரண்டும் கலந்ததே. இதில் வாழ்கின்ற உயிர்க்குலங்கள் இவற்றினிடையே தத்தம் வினைக்கேற்ப ஊசலாடுதல் இயல்பாக உள்ளது. இந்த ஊசலாட்டு,—இன்ப அநுபவங்கட்கும் துன்ப அநுபவங்கட்கும் இடையே பிணைந்து திரியும் பிணக்காட்டுத் தவிர்ந்திடுதல் வேண்டுமாயின் அதற்கும் திருவருள் துணை வேண்டும் என்பது சான்றோர் கொள்கை. 'தம் செயல் ஆவது யாதொன்றும் இல்லை ; எல்லாம் அவன் செயலே' என்ற முடிவில் உறுதி உடையவர்கள் அவர்கள். அதனால் இந்த ஊசலாட்டு அவர்களது மன உறுதியைத் தகர்த்திட இயலவில்லை. 'செஞ்சாந்து பூசினும் செத்தினும் போழினும் நெஞ்சு ஓர்ந்து ஓடா' நிலைமையினை அவர்கள் பெற்றிருந்தார்கள். 'பால் புளித்துப் பகல் இருண்டு நால்வேத நெறி திரியினும், உறழா மயங்கி உறழினும் பிறழாத' பெற்றி அவர்கள் அருந்திறம் ஆகும்.[1] இத்தகைய சான்றோர்கள், 'ஊழி பெயரினும் தாம் பெயரார்,' சான்றாண்மைக்குக் கடல் போன்றார்' என்பார் திருவள்ளுவரும்.[2]

**பட்டினத்தார் பாங்கு :**

முற்றும் துறக்கும் பெருந்திறம் இவர்கட்கு இயல்பாக அமைந்துள்ள திறத்தினைப் புகழ்ந்துரைக்க மொழி இல்லை. தாயுமானவர்,

" ஒட்டுடன் பற்றின்றி உலகைத் துறந்தசெல்வப்
பட்டினத்தார் பத்ரகிரி பண்புணர்வ தெந்நாளோ "

என்று பட்டினத்தாரைப் பாராட்டிப் போற்றுவதையும், அவர்கள் துறவு மேற்கொண்டொழுகிய சீலத்தைப்போல் 'அருந் துறக்கை அரிதரிது' என்று கூறுவதையும் இங்கு நினையாமல் இருத்தல் அரிது.

**இலக்கியப் பனுவல்கள் :**

முழுத் தூய்மையும் துறவும் பூண்ட பட்டினத்தார் பாடல்கள் சைவத்திருமுறைகளில், பதினோராந்திருமுறையுட் சேர்க்கப் பெற்றுள்ளன. பதினோராந்திருமுறையில் அமைந்த இச்சான்றோர், துறவுச் செல்வர் திருப்பாடல்கள் நான்கு நூல்வடிவங்களாய் அமைந்துள்ளன. ஒருபா ஒருபஃது, நான்மணிமாலை, மும்மணிக் கோவை, அந்தாதி ஆகிய சிற்றிலக்கிய வகைகளில் இவை அமைந்துள்ளன. இவை முறையே திருவொற்றியூர், தில்லை, திருவிடைமருதூர், திருக்கழுமலம், திருவேகம்பம் ஆகிய திருத்தலங்களில் உள்ள இறைவர்மேல் பாடப் பெற்றுள்ளன. திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, திருக்கழுமல மும்மணிக்கோவை, கோயில் நான்மணி மாலை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி ஆகிய பெயர்களுடன் இவை அமைந்துள்ளன.

**இணையற்ற துறவு :**

பட்டினத்தடிகள் முற்கூறப்பெற்ற பொதுவிலக்கணத்திற் சிறந்திருந்த அருளாளர். 'எல்லாம் இறைவன் இட்டபடி' என்னும் உறுதியுடன், உலகமே கலங்கினும் தாம் கலங்காத பேருறுதியுடன் விளங்கியிருந்த அடிகளின் விழுப்பம் அவரது செந்தமிழ்க் கவிதை ஒவ்வொன்றிலும் இனிது விளங்குகின்றது. 'பிறப்பறுக்கல் உற்றார்க்கு உடம்பும் மிகை' என்ற தமிழ்மறைப்படி உடம்பையும் மிகையாகக் கருதி ஒதுக்கி, இறைவன் திருவடியில் தம்மைத் தோய்வித்துக் கலந்தவர் இவர்.[3] திருவொற்றியூர்க் கடற்கரையில், இவரது புற வாழ்வு முடிந்தவிடம் இன்றும் உள்ளது ; புற உடலால் மறைந்துவிட்ட போதிலும், தாம் அருளிய தத்துவப் பாடல்களால் எங்கும் என்றும் நிறைந்து நிற்பவர் இச்சான்றோர். தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு சிறந்த இடத்தை இவருடைய தத்துவப் பாடல்களும் தோத்திரப்பாடல்களும் பெறுகின்றன. பக்தி இலக்கியமாக, விழுமிய தமிழ்த்தொடர்கள், சிறந்த அணிவகைகள் இயல்பாகவே நிறைந்து சுவைததும்பிட விளங்குகின்ற இவரது பாடல்களைப் படித்து மனம் உருகாதார் இலர். சிறந்த உருவக அமைப்புடன் உலகியல் நிலையையும்

---

1. புறப்பொருள் வெண்பாமாலை 2. திருக்குறள்—989 3. திருக்குறள்—345.

அருளியல் நிலையையும் விளக்குவதில் 'இவர்க்கு இவரே இணை' என்று கூறுவது தவறாகாது.

**இனிய உருவகம் :**

'உள்ளம் என்பது ஒரு கொல்லை. இதிலே வஞ்சகம் என்பது ஒரு திண்ணிய மரமாக வளர்ந்து கிடக்கின்றது. அதனை வேரற அகழ்ந்து அந்தப் பள்ளத்தை நன்றாக மூடிச் சமப்படுத்துதல் வேண்டும். அதன்பிறகு அன்பு என்ற பாத்தியை வளைத்துக் கட்ட வேண்டும்; உண்மை என்ற உரத்தை இட்டுப் பரப்ப வேண்டும்; ஐயம் இல்லாது தெளிந்த பக்தி என்ற ஒப்பற்ற விதையை ஊன்ற வேண்டும். ஆர்வம் என்ற நீரைப் பாய்ச்சுதல் வேண்டும். ஐம்புலன்களாகிய பட்டிகள் வந்து மேய்ந்திடாதபடி சாந்தம் என்ற வேலி கோலுதல் வேண்டும். சிவஞானம் என்ற மென்முளை தோன்றித் திருவருளாகிய தளிர் அப்போதே தோன்றும். குற்றங்களாகிய களைகளைக் களைதல் வேண்டும். மெய்யிற் புளகமாகிய முகிழ் அரும்பிக் கண்ணீர் வார்ந்து அஞ்செழுத்தாம் காய் தோன்றி அதன் பின் மருத மரத்தின்கீழ் உள்ள மாணிக்கத் தீங்கனி பையப் பையப் பழுத்து அப்போதே கைவரும். அதனை இனிது இனிது அருந்திச் செம்மாப்பு எய்தலாம்' என்பது திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில் உள்ள ஓர் இனிய உருவகம்;[4] திருவாசகத்தில் மாணிக்கவாசகப் பெருமானும், பண்டார மும்மணிக்கோவையில் குமரகுருபரரும் அருளிய சில உருவகங்களை இப் பகுதி நினைவில் எழுப்பாமல் இராது.

இத்தகைய பல இனிய பகுதிகளை உள்ளடக்கிய முப்பது பாடல்களை உடையது திருவிடைமருதூர் மும்மணிக்கோவை. 'தெய்வத்தாமரைச் செவ்வியின் மலர்ந்து வாடாப் புதுமலர்' என்றெடுத்துத் 'தெய்வத்தாமரையே' என்று முடிகின்ற அமைப்புடையது இந்நூல். 'மாமருதிற் பெருந்தேன்' 'மருதமாணிக்கத் தீங்கனி' முதலிய நினைவகலாத் தொடர்களை நிலைநிறுத்தும் நூல் இது. இதன் பொருணலங்கள் அனைத்தையும் இங்கு உணர்த்தவியலாவிட்டாலும் இதன் நுட்பப் பொருளை அறிமுகப்படுத்துவதே இங்குப் போதுமானதாகும்.

**அன்பின் ஆழம் :**

கபிலர், அகத்தியர், நாரதர், தேவார ஆசிரியன்மார் மூவர், மணிவாசகர், சிவவாக்கியர், வரகுணதேவர் ஆகியோரை அடிகள் பாராட்டும் குறிப்புக்கள் இப்பனுவலிற் காணப்படுகின்றன. வரகுண பாண்டியரது அன்பின் திறத்தை எடுத்துரைக்கும் அடிகள் அவரது அன்பினைப் 'பெரிய அன்பு' என்று பேசுதல் ஒன்றே அவரது அன்பின் ஆழத்தை அளந்தறியப் போதுமானது ஆகும்.

> "வித்தகப் பாடல் முத்திறத் தடியரும்
> திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்
> அத்தகு செல்வத் தவமதித் தருளிய
> சித்த மார்சிவ வாக்கிய தேவரும்"

என்ற வரிகளில், மணிவாசகர் அன்பினைத் 'திருந்திய அன்பு' என்றும், தேவாரப் பாடலை 'வித்தகப் பாடல்' என்றும் அடிகள் புகழ்ந்துள்ள திறம் எண்ணி எண்ணி வியத்தற்குரியது.

**'பெரிய அன்பின் வரகுண தேவர்' :**

வரகுண தேவரைப்பற்றி அடிகள் கூறும் நிகழ்ச்சிகள், அந்த மன்னர் அயரா அன்பு பெரிய அன்பு ஆதலை இனிது விளக்கும். அவரது அன்பினை எடுத்துக் காட்டியனவாக அடிகள் குறிப்பன இவை : (1) திருவெண்ணீறு உடம்பிலே படிந்திருக்கக் கண்டு கள்வனைக் கட்டவிழ்ப்பித்து விடுதலை அளிக்கச் செய்த செயல். (2) காடுகளிலே ஓடித்திரியும் நரிகள் ஊளையிட்டு ஒலிக்க, அவற்றின் ஓசை அரனைப் புகழ்ந்த அருள் ஓசையே என்று பாராட்டி ஆடைகள் பலவற்றை வழங்கிய நிகழ்ச்சி. (3) குவளை முதலிய நீர்ப் பூக்கள் மலர்ந்த பொய்கையில் தவளைகள் மாறி மாறி ஒலிக்கும் ஒலியில், இறைவன் திருப்புகழ் கேட்டுக் காசும் பொன்னும் கலந்து தூவிய நிகழ்ச்சி. (4) திருமஞ்சனத்துக்கு உரிய என்னை ஒருவன் தின்னக் கண்டபோது, மறு பிறப்பிலே மாடாகப் பிறந்து செக்கிழுக்குந் திருத்தொண்டு புரியத் தின்றான் என்று கூறக்கேட்டு அவன் வாயின் எள்ளைக் கீழே விழும்படிச் செய்து அந்த எச்சிலைத் தாம் உண்ட நிகழ்ச்சி. (5) திருவிடைமருதூரில் தனியே உருண்டு கிடந்த தலையெலும்பைக் கண்டு, அதனை வணங்கி, அடுத்த பிறப்பிலே எம்முடைய தலையும் இத்தலத்தே உருண்டு கிடக்கவேண்டும் என்று இரந்து நின்ற இணையருஞ் செயல். (6) கோயிலிற் கிடந்த நாயின் கட்டத்தை நீக்கித் துப்புரவு செய்த நிகழ்ச்சி. (7) வேப்பமரத்துக் கனிகளை

---

4. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை—திருவிடைமருதூர் ஸ்ரீமகாலிங்கசுவாமி தேவஸ்தானம்—(1962)—சித்தாந்த சைவமணி திரு த. ச. மீனுட்சிசுந்தரப் பிள்ளை அவர்கள் பதிப்பு—பா. 10.

5. அதே நூல்—பா. 28

யெல்லாம் சிவலிங்கங்களாகவே கண்டு, விதானம் அமைத்துக் காத்த விழுமிய செய்கை. (8) தம் முடைய துணைவியாரையே சிவபிரானுக்கு அர்ப் பணம் ஆகுக என்று வழங்கிய செய்கை.

இவற்றைக் கூர்ந்து நோக்குங்கால், பட்டினத் தாரால் பாராட்டப் பெற்று, இருபத்திரண்டு வரி களைப் பெற்றுள்ள வரகுண தேவரது மாட்சி எண்ணி எண்ணி உருகுவதாக உள்ளது. அன்பின் வடிவாக, அன்பின் பிழம்பாக, அன் பின் உருவாக, அன்பின் விளைவாக விளங்கிய விழுப்பத்தாலேயே, அரியணை அமர்ந்த வர குணர், அடியவர் ஆகிய பட்டினத்தாரின் பாட் டணை யேறும் பெரும்பேறு பெற்றார்.

**'பக்திமடம்':**

படைமடம், கொடைமடம் என்ற இரண்டும் பற்றிச் சங்க இலக்கியத்துள் ஒன்றாகிய புற நானூறு கூறும். பாரி படைமடம் படான், ஆனால் கொடை மடம் படுவான் என்பார் சங்கக் கவிஞர். கொடுப்பதிலே அறியாமை உடைய கொற்றவனாய் விளங்கியவன் என்றால், வறுமை அறிந்து, வாட்டம் அறிந்து எவர் வரினும் எதனை யும் ஈயும் திறம் என்று பொருள். பட்டினத்தடிகள் இவ்விடத்துப் புதிய மடம் ஒன்றைக் காட்டு கின்றார்; ஆம்; 'பக்திமடம்' என்றோ, 'அன்பு மடம்' என்றோ இதனைக் குறிப்பிடுவது பொருந் தும். சிவபிரான்மீது வைத்த பெரிய அன்பினால், உலகியல் நிலையைக் கடந்த 'அன்புணர்வு நிலை' யில் வாழும் பெற்றி வரகுணர்க்கு இயல்பாக அமைந்தது. 'நோக்குவ எல்லாம் அவையே போதல்' என்றபடி இறைவனையே எங்கும் காணும் பெரும்பேறு பெற்றிருந்தார் வரகுண தேவர். தம்முடைய துணைவி எனக் கருதாது சிறந்த பொருள் இறைவனுக்கே உரியது என எண்ணி, இறைவனுக்கு வழங்கி மகிழவும் வர குணர்க்கு இயல்பாயிற்று எனின் 'அன்பின் மடம்' என்றன்றி அதனை வேறு எவ்வாறு கூறிட இயலும்!

**அன்பின் கொடுமுடி:**

'பக்தி என்பதோர் பாடும் இன்றிச் சுத்தனாயி னும் தோன்றாக் கடையேன்' என்று தம்மை அடிகள் கூறிக் கொள்வதுடன், 'நின்னை இறைஞ் சிலன் ஆயினும் ஏத்திலன் ஆயினும், வருந் திலன் ஆயினும், வாழ்த்திலன் ஆயினும் கருதி இருப்பன் கண்டாய்' என்று முடிக்கின்றார். திரு விடைமருதூர் மும்மணிக்கோவையில் அமைந்த இவ்வொரே திருப்பாட்டில் இந்த அன்பின் கொடு முடியை அழகாக நமக்குக் காட்டுகின்றார் அடிகள்.[6]

**கற்புணையாகக் கடலினை நீந்தல்:**

'ஐம்புலன்களின் ஏவல்வழி நின்று தானல் லாத ஒன்றைத் தான் என்று நினைவது என் உள்ளம்; இதனைக் கொண்டு நின்னை எப்படி நினைப்பேன்? கல்லைத் தெப்பமாகக் கொண்டு கடல்நீரைக் கடக்க முற்படுவதாகும் இது; என்னைத் தவிர வேறு யார் இது செய்ய வல்லார்?' என்ற பொருள்பட,

> "கற்புணை யாகக் கடல்நீர் நீந்தினர்
> எற்பிறர் உளரோ இறைவ!"

என்று அடிகள் பாடுமிடத்துக் 'கற்றூணைப் பூட்டி ஓர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச் சிவாயவே' என்ற அப்பரடிகளின அமுதவாக்கு நினைவில் எழுவது இயல்பே.[7] 'கற்புணையாகக் கடல்நீர் நீந்தினர் எற்பிறர் உளரோ' என்ற பட்டினத்தார் குறிப்பினால், அப்பரடிகளது கடல் மிதப்பு நிகழ்ச்சி குறித்து ஐயுறுவாரும் உண்டு. ஆயினும், இந்த இடத்துத் தம்முடைய இயலாமை யைக் குறித்திட உலகியல் நிலையினைக் காட்டு வதே அடிகள் திருவுள்ளம் ஆதலின், இதனை அப்பர் அடிகள் வரலாற்றோடும் இணைத்து ஐயுறவு கொள்வது அறிவுலகின் சிந்தனைக்கு மேலும் உரிய ஒன்றே ஆகும்.

**நினைத்தொறும் இன்பம்:**

ஆன்ம அறிவினால் தன்னை அறியாமையை விளக்கியபின், தன்னை அறிந்தவனே தலைவனைக் காண்பான் என்னும் கருத்தை நிலைநாட்டுவர் அடிகள்.[8]

> "தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின்
> மாயப் படலங் கீறித் தூய
> ஞான நாட்டம் பெற்றபின், யானும்
> நின்பெருந் தன்மையும் கண்டேன்; காண்டலும்
> என்னையுங் கண்டேன்; பிறரையுங் கண்டேன்;
> நின்னிலை யனைத்தையுங் கண்டேன்; என்னை
> நின்னைக் காணா மாந்தர்
> தன்னையுங் காணாத் தன்மையோரே"

என்ற வரிகள், அடிகள் தன்னையறிந்து தலைவனை யும் அறியும் அளவிற்கு உயிர் தன்னைப் பண் படுத்திக்கொள்ள வேண்டும் என்ற கொள்கை யினர் என்பதைக் காட்டுகின்றன.

> "வல்லான் ஒருவன் கைம்முயன் றெறியினும்
> மாட்டா ஒருவன் வாளா எறியினும்
> நிலத்தின் வழாஅக் கல்லே போல
> நலத்தின் வழார்நின் நாமம் நவின்றோரே"

6. அதே நூல்—பா. 28 7. அதே நூல்—பா. 24 8. அதே நூல்—பா. 13

என்ற உவமை நினைக்குந்தோறும் நயம் அளிப்பது.[9] எறிந்த கல் மீண்டும் நிலத்தின்கண் வீழ்ந்திடுதல் இயற்கையிற் கண்டதே; நிலத்தின் ஈர்ப்பாற்றல் விஞ்ஞானத்தால் மெய்ப்பிக்கப் பட்டதே. அதுபோன்றே நின் திருப்பெயர் நவின்றோர் நலம் பெறுதலும் தப்பாது என்று கூறுதல் மெய்ம்மையாக உள்ளது.

**வாழ்வின் விழுப்பயன் :**

அடிகளின் எல்லாப் பாடல்களும் உருக்கம் ததும்பியவையே. இவற்றில் முடிமணியாக உள்ள பல பாடல்கள் கற்பனை, உருவகம் முதலிய அமைப்புக்களால் சிறப்பிடம் பெற்றுள்ளன. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை இங்கு எடுத்துக்கொள்ளப் பெற்ற வகையிலும், எடுத்துக் கூறப்பெற்ற கருத்துவகையிலும் சிறந்து நிற்றல் ஒருதலை. இதன்கண் அமைந்த வரகுணதேவர் பற்றிய அன்பின் திறம் குறித்த நிகழ்ச்சி அகங் கொண்டு போற்றுதற்கும் பின்பற்றி உய்தற்கும் ஏற்ற பெற்றி உடையதாகும். அன்புநெறிப் பட்டு, உலகியல் வாழ்வு தலைப்பட்டால் பற்றின்மை தோற்றும்; அது தோற்றப்பெற்றால் தூய வாழ்வு தலைக்கூடும். அதுவே வாழ்வின் விழுப்பயன். அதனைப் பட்டினத்தாருடைய பாட்டு விளக்கும் என்பது உறுதி. இத்தகு அருளாளர்கள் பாட்டையே பின்பற்றத்தக்க பாட்டையாகக் கொண்டால் வாழ்வில் நலங் கூடும்; 'நலத்தின் வழார்' என்று அடிகள் கூறும் நிலை எய்தலாம் என்பது இக்கட்டுரையாளன் கொள்கை.

# எல்லையில் அருளினன் இறைவன்

[டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி, எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி.,
தமிழ்ப் பேராசிரியர், மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை-10.]

"எல்லாம் வல்ல இறைவன் நம்மால் எட்டி அறியவோ அடையவோ முடியாதவன்; மனமொழி மெய்களுக்கு அப்பாற்பட்டவன்; அவனை அடைந்தால்தான் பிறவிப்பிணி அறுத்துப் பேரின்பம் பெறலாம். ஆனால், அதற்கு அரும் பெருந்தவம் செய்யவேண்டும்"–இவ்வாறு மறைமுடிபுகள் (உபநிடதங்கள்) கூறுகின்றன. இக்கூற்றைக் கேட்டவுடனே, நம்மில் பெரும்பான்மையோர், "அரும்பெருந்தவம் செய்வதென்பது நம்மால் முடியுமா? ஆகவே, நம்மால் எப்போதும் பிறவிப்பிணி அறுத்துப் பேரின்பம் அடையவே முடியாது" என்று கூறி மனம் உடைந்து நிற்பர்.

மறைமுடிபுகள் பொய் உறையா. ஆகவே, இங்ஙனம் கூறப்பட்ட கூற்றென்னவோ உண்மை தான். ஆனால், ஈது எல்லார்க்கும் பொதுவாகக் கூறப்பட்டதாகக் கொள்ளுதல் ஆகாது. தாமே முயன்று எல்லாம் பெற முடியும்; தம் அறிவால் எல்லாவற்றையும் அறியமுடியும் என்று கூறி அறிவு நெறி நிற்பார்க்கே அரும்பெருந்தவத்தால் பேரின்பம் அடையமுடியும் என்ற வழி உணர்த்தப்பட்டதாகும்.

இறைவன் அருளே வடிவமானவன். உயிர்கள் இருக்கும் இடம் தேடிவந்து அவன் தன் திருவடியைக் காட்டி, 'தன்னிடம் அன்பு கொண்டு நின்றால் பிறவிப்பிணி நீங்கிப் பேரின்பம் பெறலாம்' என்று கூறுகின்றான். அன்பர்க்கு அவன் மிகவும் எளியவன் என்பதும் மறைமுடிபுகளின் கருத்தேயாகும். ஈது அன்பு நெறி நிற்பார்க்கு உணர்த்தப்பட்ட உண்மையாகும்.

அன்புநெறி பற்றி நின்று பிறவிப்பிணி அறுத்துப் பேரின்பம் பெற்றவர்கள் அடியார்களும் ஆழ்வார்களும். அவர்கள் தாங்கள் பெற்ற பேற்றை உள்ளம் உருக்கும் செந்தமிழ்ப் பாக்களால் நம்பொருட்டு உணர்த்திச் சென்றிருக்கின்றனர். மறைமுடிபுகளின் பிழிவாகக் கருதப்படும் அவர்கள் பாடல்களை ஓதி உண்மையுணர்ந்து அன்புநெறி பற்றி நிற்போமானால், நாமும் பிறவிப்பிணி யறுத்துப் பேரின்பம் பெறலாம். பெறுவதற்கரிய மக்கட்பேறு பெற்ற நாம், அதன் பயனாகிய பேரின்பம் பெறவில்லை என்றால், நாம் பெற்ற பிறப்புப் பயனின்றியதாகு மன்றோ? அரும்பயன் பெறற்கு முயலாது நம் பிறவியை வீணாக்குவது அறிவுடைமை ஆகுமா?

9. அதே நூல்—பா. 19

அடியார்களுள் ஒருவர் மணிவாசகர். அவர் பாடியது திருவாசகம். "திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்பது பழமொழி. மேல் நாட்டாரும் அயல் சமயநெறி நின்றவருமான போப் என்பவர், நம் திருவாசகத்தைப் பயின்றபின், பிறிதொன்றனை நாட நினையாமல் அதற்கே தம் உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டார் என்றால், திருவாசகத் தின் பெருமையை அளவிட்டுரைக்க முடியுமோ? அத்தகையதொரு புதையலைத் தமிழையே தாய் மொழியாகப் பெற்றுள்ள நாம் பெற்றிருப்பது நாம் அரிதிற் செய்த பெருந் தவப்பயனே எனலாம் அன்றோ!

இறைவனுடைய எளியனாந் தன்மையையும், எல்லா ஆற்றலும் உடையனாந் தன்மையையும் முன்னிட்டுக்கொண்டு அவனோடு உரையாடும் வகையாகத் திருவாசகத்தில் மணிவாசகர் ஒரு பாடல் பாடியிருப்பது நமக்கெல்லாம் புத்துயி ரளிப்பதாகும். நாமும் அவ்வாறு சொற்போரிட்டு இறைவன் திருவருளை அடையமுடியும் என்ற உறுதியை அப்பாடல் நமக்கு அளிப்பதாகும். அப் பாடற் கருத்தை இப்போது நாம் அறிய முற்படுவோம். அவர் ஆண்டவனிடம் முறையிடு கின்றார். எவ்வாறு?

"ஆண்டவனே, நீ குற்றமற்றவன்; எல்லா ரிடமும் ஒத்த அருளை வாரி வழங்குபவன். வானுலகத்தில், ஒப்பாரும் மிக்காரும் இன்றி ஒரு பெருந்தலைவனாய் இருந்து எல்லா உலகத்துயிர் களையும் ஆட்சி செய்பவன் நீ. அத்தகைய பெருமையுடைய நீ, வானுலகத்தில் உள்ள நீ, என்னை ஒரு பொருளாகக் கருதி என்னைத் தேடி வந்தாய். மறு இல் வானனே! உண்மையாகக் கூறுகிறேன். என்னிடம் உன் திருவடிக்கண் அன்பு என்பது சிறிதும் இல்லை. நீயோ அன்பே வடிவமானவன். அதற்கு ஓர் அடிப்படையும் உண்டு. உன்னை ஒரு பங்கில் தனக்கு உடைமை யாகக் கொண்டு இலங்குகின்றாள் எல்லார்க்கும் தாயான இறைவி. உன் ஒரு பங்கில் நீங்காது உறைபவள் அவள். அன்பு உடையவள் இறைவி என்று கூறுவது மிகை உரையாகும். அன்பிற் சிறந்தது தாயன்பு ஆகும். ஆனபின், எல்லார்க் கும் தாயான இறைவி அன்பே வடிவமானவள் என்று எடுத்துரைக்கவும் வேண்டுமோ? எல்லார்க்கும் தாய் என்றுமட்டும் கூறினால் போதுமா? உயர்திணை அஃறிணை எல்லாவற்றை யும் படைத்தவள் அவளாதலால், உயர்திணை அஃறிணை உயிர்கள், உயிரல்பொருள்கள் எல்லா வற்றிற்கும் அவள் தாயாவாள்.

ஏலம் என்பது கூந்தலுக்கு நறுமணம் ஊட்டும் ஓர் உயிரல்பொருள். அதற்கு மணமூட்டும் தன்மை இயற்கையாக ஏற்பட்டதா? இல்லவே யில்லை. இறைவியின் கூந்தல் இயற்கை மணம் உடையது. அந்த நறுமணத்தைத் தனக்கு வழங்கவேண்டும் என்று அஃது இறைவியை இரந்து வேண்டிற்று. வேண்டுவார்க்கு வேண்டியவாறு வழங்கும் தாய், ஏலம் வேண் டியதை வழங்காமல் போவாளா? அவள் அதற் குத் தன் கூந்தல் நறுமணத்தை வழங்கினாள். ஏலம் நறுமணத்தை ஏற்றது. அத்தகைய அருட் செயலை உடைய இறைவியைப் பங்காக உடைய வன் நீ. ஏலம் ஏலும் நற்குழலி பங்கன் நீ. எனவே, தாயன்பு உனக்கும் இயற்கையாக அமைந்தது. அவ்வன்பை எல்லாரிடத்தும் வாரி வழங்கவேண்டும் என்று, உயிர்கள் இருக்கும் இடமெல்லாம் நீ நாடி அலைந்தாய். எல்லார்க்கும் வாரி வழங்கும் அன்புதானே அருள் என்பது. அந்த அருளை உயிர்கள் ஏற்க வேண்டும் என்றால், அவை சிறிதாவது அன்பு உடையன வாக இருத்தல் வேண்டும் என்பது முறையே ஆகும். ஏன்? பால் வைக்கும் கலத்தில்தானே, பாலை ஊற்றிவைப்பது இயற்கையும் முறைமை யும் ஆகும்; எண்ணெய் வைக்கும் கலத்தில் யாராவது பாலை ஊற்றிவைக்கக் கருதுவார்களா? அதுபோல அன்பு இருத்தற்கு உரிய உயிரிடத் தில்தானே அன்பின் வெள்ளமாகிய அருளைப் பெய்வது இயற்கையாகும்; எனவே, சிறிதள வாவது இயற்கையில் அன்பு உடைய உயிர், உன் பேரருளைப் பெற்று அதனால் பேரின்பம் பெற முடியும்.

என்னிடத்தில்தான் அன்பென்பது மருந்துக் குக்கூட இல்லாத பொருள் ஆயிற்றே. அன்பு புகவே முடியாத இறுக்கமான உள்ளம் படைத்த, கல் உள்ளம் படைத்த என்னுள், உன் பேரன்பு, அருள் எவ்வாறு புகமுடியும்?

பேரருளாளனே, என் பொருட்டு நீ மேற் கொண்ட செயலை எண்ணிப் பார்க்கும்போது எவ்வகையில் நான் நினக்கு நன்றி செலுத்த முடியும் என்பது எனக்கு விளங்கவேயில்லை. கல்லை யாராவது கனியாக்க முடியுமா? ஒருவ ராலும், மக்களாகப் பிறந்தவர்களுள் எவராலும், அது முடியவே முடியாது. உனக்கு அஃது எளிய செயலாகும்; வித்தையாகும்; விச்சை யாகும். எல்லா ஆற்றலும் உடைய உனக்குக் கல்லைத்தானா கனியாக்க முடியும்? மணலையும் நீ கயிறாகத் திரிப்பாய்; மலையையும் நீ வில்லாக வளைப்பாய்; கல்லை மென்மையான கனியாக ஆக்கும் விச்சையில் வல்ல நீ, என் கல் உள்ளத் தைக் கனிவித்து, நெகிழ்வித்து, உன் திருவடி

களுக்கு என்னை அன்பன் ஆக்கினாய். கல்லை மென்கனி ஆக்கும் விச்சைகொண்டு என்னை நின் கழற்கு (திருவடிகளுக்கு) அன்பனாக்கினாய். இதைப் பார்க்கும்போது உன் அருளுடைமைக்கு ஓர் எல்லை வகுத்துக் கூற முடியுமா? எல்லை யில்லை நிற் கருணை எம்பிரான்!

பேரருளால், பெருங்கருணையால், என் கல் உள்ளத்தைக் கனியாக நெகிழ்வித்து என்னை வலிந்து நின் திருவடிகளுக்கு அன்பனாக்கினாயே! அவ்வன்பையே முதலாகக் கொண்டு, இடைவிடாமல் அன்பு செய்து பிறவியறுத்துப் பேரின்பம் அடையலாமே! ஆனால், கவர்ச்சியான உலகப் பொருள்கள், என் பொறிகளைத் தம் வயப்படுத்தி என்னைத் தமக்கு அடிமையாக்கி அதனால் நின் திருவடிகளில் இடைவிடாத அன்பினைச் செலுத்த ஒட்டாமல் செய்கின்றனவே! நானும் சிறிது முயன்று அவற்றிற்கு ஆளாகாமல் தப்பலாம். என்றாலும், அத்தகைய முயற்சியில் ஏனோ நான் ஈடுபடவில்லை! உன் அருளைப் பெற்ற நாள் முதலாய், உனக்கே அடிமையாய், உன் கழல்களிலேயே அன்பு செலுத்தி உய்ய வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இல்லாமல் இல்லை. ஆனால், உனக்கு அடிமை ஆவதற்கு முன்பு என் பொறி கரணங்களுக்குச் சுவையூட்டிய புலன்களுக்கு அடிமையாயிருந்த அந்த உரிமையை நழுவ விடாமல் அப்புலன்கள் மறுபடியும் மறுபடியும் என்னைத் தம்பால் வலிந்திழுக்கின்றனவே; அவற்றின் வலிமைக்கு முன் என்னால் எதிர்த்து நிற்க முடியவில்லையே! நான் என் செய்வேன்?

இறைவா, அளவிலாற்றல் உடையவன் நீ என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை. நான் எந்தக் காரணம் கொண்டு யாது செய்தாலும், முன்போல் உன் திருவடிகளைக் காட்டி, அத்திருவடிகளையே பற்றுக்கோடாகக் கொண்டு உன்னை வந்தடையுமாறு நீ செய்யவல்லாய். ஆதலால், நீ அவ்வாறு செய்து நான் உய்யுமாறு செய்தருளுவாயாக! குற்றமொன்றும் இல்லாத நீ, என் குற்றத்தைப் பொறுத்தருளி என்னை ஆட்கொள்ளுவாயாக! ஏது கொண்டு நான் ஏது செய்யினும், வல்லையே எனக்கு இன்னும் உன்கழல் காட்டி மீட்கவும் மறுவில் வானனே.'' இம்முறையீடு நமக்கெல்லாம் ஊக்கம் ஊட்டும் சாவா மருந்தாகும். இக்கருத்துடைய பாடலை நாம் ஈண்டு நினைவு கூர்வோமாக:


"இல்லை நின்கழற்கு அன்பதன்கணே
ஏலம் ஏலும் நற்குழலி பங்கனே
கல்லை மென்கனி ஆக்கும் விச்சைகொண்டு
என்னை நின்கழற்கு அன்பன் ஆக்கினாய்
எல்லை இல்லைநின் கருணை எம்பிரான்
ஏது கொண்டுநான் ஏது செய்யினும்
வல்லை யேஎனக்கு இன்னும் உன்கழல்
காட்டி மீட்கவும் மறுவில் வானனே."

இப்பாடலை உடைய பதிகம் ஒன்றைமட்டுங் கூடத் திருவாசகத்தில் ஈடுபட்டுப் பாராயணம் செய்வார், அதன் பொருளில் தோய்ந்து அப்பொருள் தாமாகி இறைவனிடம் இடையறாத அன்பு செய்யும் பேறு பெறுவர் என்பது உறுதி. எல்லையில் அருளினன் இறைவன் ஆதலால், அவனருளால் அவனிடம் இடையறாத அன்பு செய்து பேரின்பம் அடையலாம் என்பது உறுதி.





15 பேரரையற் கிங்கனே பித்தொருவர்
ஆமாறும் ஆர் ஒருவர்?



அவன் நமக்கு முன் சுரக்கும் 16
இன்னருளே என்னப் பொழியாய் மழை!

# சித்தர்களின் பாடல்

[திரு மீ. ப. சோமசுந்தரம்—"சோமு"]

சித்தர் பாடல் என்னும் இலக்கியம் தமிழ் நாட்டில் பலநூறு ஆண்டுகளாக மிகுந்த பக்தியோடு ஆராதிக்கப்பட்டு வந்திருக்கிறது. படித்த மக்களைப்போலவே பாமர மக்களும் இந்தப் பாடல்களை மெய்யுருகி அநுபவித்து வந்திருக்கிறார்கள். நாட்டுப் பாடல்கள் என்று வழங்குகிற நாடோடி இலக்கியத்திலுமே இந்தச் சித்தர் பாடல் ஒரு தனியான தெய்வ மணத்தோடு கமழ்கிறது.

"வினைக்கு ஈடாய் மெய்" என்னும் திருமந்திர வாக்குப்படி, உயிரின் வினைக்குத் தக்கவாறு உடம்பு அமைகிறதல்லவா? அதுபோலவே ஒரு கவிதையின் வடிவமும், மெய்யும் அமைகின்றன. சித்தர்கள் கூறுகிற தத்துவத்திற்கு ஏற்ப அவர்களின் பாடலும் உருவ அமைப்பு எடுக்கிறது. கருத்துக்கு இயைந்த வடிவம் கொள்கிறது. மற்ற இலக்கியப் பாடல்களின் போக்கு, நடை, அமைப்பு ஆகியவற்றிலிருந்து சித்தர்களின் பாடல் மாறுபட்டிருப்பதற்கு இந்த நுட்பமே காரணமாகும்.

சித்தர் பாடல்கள் எல்லாம் ஒரே யாப்பு முறையில் அமைந்திராவிட்டாலும், இவற்றின் அமைப்பு முறையில் ஓர் ஒருமைப்பாடு இருக்கும். அந்தந்தச் சித்தரின் முதிர்ச்சிக்கும், மொழியாற்றலுக்கும் ஏற்ப யாப்புமுறை மாறினாலும், இந்தப் பாடல்கள் அனைத்திலுமே ஓர் எளிமை துலங்கும். சித்தர்களுடைய தோற்றத்தில், முகத்தில், காண்கிறோமே ஒரு குழந்தையின் பாலைத்தன்மை, ஓர் இங்கித எளிமை, அந்தப் பண்பை அவர்களுடைய பாடலின் சொற்களிலும் காணலாம். ஆனால் ஒரு முக்கியமான உண்மையை மறந்துவிடக் கூடாது. அதாவது, எளிமை என்பது சொற்களின் எளிமைதான். கருத்து வேறு. குழந்தையைப் போன்றதோர் எளிமை ஒளி வீசினாலும், குழந்தைகளா சித்தர்கள்? இல்லையே! எளிமை என்பது சொற்களிலே உள்ள எளிமைதான். கருத்து மிகமிக ஆழமாக இருக்கும். ஆழமான சுனை அல்லது ஏரியின் தண்ணீர் பரிசுத்தமாக இருந்தால், அடி மணல் தெரியும். அப்படிப்பட்ட சுத்தமான சுனை இந்தப் பாடல்கள். ஆனால் கருத்தாழமோ என்றால், தண்ணீருக்குள் முங்கி மணல் எடுக்கப் போனால் உள்ளே உள்ளே போய்க்கொண்டே இருக்கும். நம்முடைய ஆணவமே அதில் கரைந்து அழிந்துவிடும்படியாக இருக்கும். அஃது அந்த எளிய சொற்கள் தாங்கிக்கொண்டிருக்கிற தத்துவத்தின் ஆழம்; ஆன்ம ஆழம் அது!

எளிமையைப் போலவே இன்னொரு சிறப்பு என்னவென்றால், அந்தப் பாடல்களிலே அங்கங்கே உள்ள அலை வீச்சாகும். ஏரி நீர் காற்றிலே அலை மோதிக்கொண்டிருக்கும் அல்லவா? அந்த அலைகள் சிரிப்பது ஒரு சித்தனுடைய சிரிப்பாகும். அந்த அலைகள் விசிவீசிக் கரையிலே வந்து தட்டுவது ஒரு சித்தனுடைய உல்லாச விளையாட்டாகும்! சில சமயங்களில் சில பாடல்கள் சலனமே இல்லாமல் மோன அமைதியைப் பிரதிபலித்து நிற்கும். காற்று இல்லாத போது நடுநிசியிலே தடாகத்தின் தண்ணீர் உறங்குவதுபோலே, ஆழமும் மோனமும் பயபக்தி கொள்ளும்படியாகத் தோற்றம் தரும். இது சித்தர்களின் நடையிலே உள்ள சித்தியாகும்.

இனி, மூன்றாவது சிறப்பு, மிகப் பெருஞ்சிறப்பு என்னவென்றால், இந்தப் பாடல்களில் உள்ள மெய்யான உருவகம், மெய்யான உள்ளுறை. சொல்லுகிற சொற்களின் வெளியீடு ஒன்றாக இருக்கும்; சொல்லப்படுகிற கருத்து மற்றொன்றாக இருக்கும். சரீரத்துக்குள் சரீரமாக ஆன்மசரீரம் இருப்பதுபோல, இந்தப் பாடல்களுக்குள்ளே உருவக தத்துவம் ஒன்று ஒப்பற்ற விலாசத்தோடு இயங்குகிறது.

## 2

நமது பாரத நாட்டின் புண்ணியத்தையும், சிறப்பையும் ஆனந்தக் குனிப்போடு பாடுகிற பாரதியார்,

"யாகத்திலே தவ வேகத்திலே—தனி
யோகத்திலே பல போகத்திலே
ஆகத்திலே தெய்வ பக்திகொண்டார்தம்
அருளினிலே உயர்நாடு—இந்தப்
பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள்
பாரத நாடு!"

என்று விம்முகிறார்.

'ஆகமாகிய இந்த மனித உடம்பிலே தெய்வ பக்தி கொண்டார் யார்? அவர்தம் அருள் எது?'

என்ற கேள்விகளுக்கு விடையே சித்தரும், சித்தர்களின் பாடல்களும்.

ஆகமாகிய இந்த மனித உடம்பிலே தெய்வ பக்திகொண்டு, இதனுள் அருட் சக்தியை வளர்த்து, ஆன்ம பரிணாமத்தில் மக்களிடையே வானவர்களாகவும், மனித தெய்வங்களாகவும், உலவி அருள் வாழ்வு வாழ்ந்து அருளை வழங்கி வருகிற பெரியோர்களே, மகான்களே, சித்தர்கள்.

பாரத நாட்டில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வனங்களிலே தவம் செய்து, ஆன்ம நேயம் கூடி, அரிய சமாதி நிலையிலே இருந்து, எல்லையற்ற பரம்பொருளின் பேரின்ப அமுதை உண்டு அமரர்களாக வெளிவந்து, மக்களையெல்லாம் தெய்வ நெறியிலே வழிப்படுத்தி ஆண்டு அருளியிருக்கிறார்கள் நம் முன்னோர்கள். இமயமலையிலும் பொதிகை மலையிலும் இன்றைக்கும் அந்த மரபு ஒளி வீசிக்கொண்டிருக்கிறது! அஃது அணையாத தீபம், நந்தா விளக்கு. புயலும், மழையும், வெயிலும், பனியும் அந்த ஒளியைத் தொடுவதில்லை. அது, காலனைக் காலால் உதைத்த கடவுள் தன்மையோடு நிலையாகி ஒளிவீசி நமது சமுதாயத்தைப் பாதுகாத்து வருகிறது. அந்த ஒளிவிளக்கே சித்தர்களின் இலக்கியமாகும். அதனுடைய சுடரே இருள் சூழ்ந்த உலகில் என்றென்றும் ஒளி பரப்பி வருகிறது.

சித்தர்கள் என்ற சொல்லுக்குச் சித்தி கைகூடினவர்கள் என்று பொருள். இந்தச் சித்தி அவர்களுக்கு எப்படிக் கிட்டியது? திருமூலர் கூறுகிறார்:

"யோக சமாதியின் உள்ளே அகலிடம்
யோக சமாதியின் உள்ளே உளஒளி
யோக சமாதியின் உள்ளே உளசக்தி
யோக சமாதி உகந்தவர் சித்தரே!"

யோக சமாதியை உகந்தவர் யாரோ, அவரே சித்தர் என்று வரையறை செய்கிறார் திருமூலர். இதுவே "ஆகத்திலே தெய்வபக்தி கொண்டார்" என்ற பாடலின் பொருளுமாகும்.

சித்தர்களுடைய அடிப்படை இதுதான், திருமூலர் சொல்லுகிற யோக சமாதி. இந்த உடம்பிலே தெய்வ சத்தியைக் கூடுகிற தவயோகம் இருக்கிறதே, அந்த யோகமே சித்தர்களுடைய தவநெறியாகும்!

## 8

மனித உடம்பு நிலையற்றது, மனித வாழ்வு பயனற்றது என்றெல்லாம் கூறுகிற வெறுப்பு நிலை ஒரு புறம் இருக்க,

"மனித்தப் பிறவியும் வேண்டுவதேஇந்த மாநிலத்தே"

என்கிற நிலையே வேறு!

இந்த மனித உடம்பும் இந்த மனித வாழ்வுமே தெய்வத்தைக் காணுவதற்குரிய ஒப்பற்ற சாதனங்கள் என்று தெளிகிற நிலை இருக்கிறதே, அதுவே சித்திகளுக்கெல்லாம் அடிப்படையான சித்தி. திருமந்திர மாமுனிவரான திருமூலர் பாடுகிறார் :—

"உடம்பினை முன்னம் இழுக்கென்(று) இருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்(று)
உடம்பினை யானிருந்(து) ஓம்புகின் றேனே!"

இந்த உடம்பு மிகப் பெரிய சாதனம். இதனுள் புருடோத்தமனாகிய பரமாத்மா, இறைவன், கோயில் கொண்டிருக்கிறான் என்று கண்ணாரக் கண்டு, இந்த உடற் கோயிலைப் பக்குவமாகப் பாதுகாத்து, இறைவனுக்குரிய இடமாகப் பரிசுத்த நிலையிலே பேணி, யோக சமாதி உகந்தவர் யாரோ அவரே மெய்யான சித்தர்கள். அவர்கள் பெற்ற தெய்வ ஆற்றல்கள் வெறும் செப்பிடுவித்தைகள் அல்ல. அந்தத் தெய்வ ஆற்றல்கள் உலகையே உய்விக்கிற பேரின்ப ஆற்றல்கள் ஆம்.

"உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே" என்று பாடுகிறார் அல்லவா? இந்தக் காரணத்தினாலேதான், உடம்பின் நுட்பங்களையும், இயல்புகளையும், மனத்தின் தன்மைகளையும், ஆதாரங்களையும், ஆராய்கிற காய சித்தி உபாயங்களும், வைத்திய முறைகளும், மனத் தத்துவ இயலாகிய பெரிய விஞ்ஞான அறிவும், சித்தர் இலக்கியத்தின் உப அங்கமாக எழுந்தன. உடல் தத்துவத்தோடு இணைந்து, மனத் தத்துவமும், விஞ்ஞான தத்துவமும், மெய்ஞ்ஞான தத்துவமும் பாதுகாக்கப்பட்டன. எல்லாவற்றுக்கும் ஆதாரமாக இருப்பது சரீர யோக சித்தி.

இந்த உடம்புளே தெய்வ தரிசனம் பெற்று, இறை ஆற்றலை இந்த உடம்புளே வளர்த்து, உலகிற்குத் தங்கள் யோக சாதனையினால் ஒளியூட்டி மனித சமுதாயத்தைப் பாதுகாப்பதே சித்தர்களின் குறிக்கோள்.

"யான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்"

என்பதே சித்தர் இலக்கியத்தின் ஆதார சுருதி.

உடம்பின் மூலம் இறைவனை வழிபடுகிற ஞான நெறிக்கு நம்மை அழைத்துச் செல்வதற்கு ஆரம்பப் பயிற்சி தருவதற்காகவே நம்முடைய முன்னோர்கள், நம் நாட்டு ஞானிகள், நாடெங்கும் கோயில்களை நிறுவி அவரவர் பக்குவ நிலைக்கு

ஏற்பத் தெய்வத்தை வழிபடும் முறைகளையும் வகுத்துத் தந்தார்கள். நம்முடைய தமிழ் நாட்டில் எழுந்துள்ள பெரிய பெரிய கோயில்கள் எல்லாம் மகான்களும் சித்தர்களும் நமக்காக நிறுவித் தந்த ஆன்ம விடுதிகள், தெய்வ நிலையங்கள். விநோதக் காட்சிகளைப் பார்க்கச் செல்கிற கூடங்கள் அல்ல அவை. கலையழகும் தெய்வ சாந்நித்தியமும் இரண்டறக் கலந்த நிலையங்கள் அவை. கல்யானையிலே யானையைப் பார்த்தால், கல் மறைந்துவிடுகிறது; கல்லைப் பார்த்தால் யானை மறைந்துவிடுகிறது! உள்ளத்துக்குள்ளே இருக்கிற யானைதான் கல்லிலே யானையாகப் பிறப்பெடுக்கிறது. உள்ளத்தில் யானை இல்லை என்றால், கல்லிலும் இல்லைதானே! இது போலவே நம்முடைய கோவில்களின் அமைப்பிலும் நுட்பமான பத்தி தத்துவத்தைப் பொதிந்து வைத்துள்ளார்கள் நம் முன்னோர்களாகிய மகான்கள்!

வெளிச் சடங்குகளையும், வெளிச் செயல்களையும் உதறிப் பேசுகிற பேச்சானது, சித்தனுடைய ஆன்ம பக்குவத்திலிருந்து தெறித்து வருகிற ஞானப் பொறி; ஊருக்குப் போய்ச் சேர வேண்டியவன், கைகாட்டி மரத்தையே பார்த்துக் கொண்டு அந்த இடத்திலேயே நின்றுவிடக் கூடாதே என்ற பரிவிலும் கவலையிலும் எழுந்த எச்சரிக்கைப் பேச்சு அது. அவநம்பிக்கையினாலோ அல்லது அலட்சியத்தினாலோ, எழுந்த வார்த்தைகள் அல்ல அவை. போலித்தனத்தைச் சீறுகிற சீற்றத்துக்கும், உண்மையை வெறுத்துப் பேசுகிற பேச்சுக்கும் உள்ள வித்தியாசத்தை நாம் புரிந்துகொள்ளவேண்டும். அப்படியானால் தான் சித்தர்களுடைய பாடலின் உட்பொருள் நமக்குத் துலங்கும்.

ஆம்; நம்முடைய நாட்டுச் சித்தர்கள் எல்லாரும் ஆழ்ந்த தெய்வபக்தி நிரம்பியவர்கள். தெய்வ வெறி நிரம்பிய தெய்வமாக் காதலர்கள் அவர்கள். அவர்கள் பொது மக்களுக்காகத் தெய்வ சாந்நித்தியத்தைப் புறவடிவிலே காட்டி இயங்கச் செய்த வெளி அமைப்புக்களே நம் நாட்டுக் கோயில்கள். இவை அனைத்தும் சீராக ஓங்கித் தவறாது வளர்ந்தால்தான் சமுதாயத்தின் ஆன்மா செம்மைப்படும் என்ற இரகசியத்தை உணர்ந்த சித்தர்கள், இந்தக் கோயில்களில் தங்கள் சித்திகளையும் காப்பாக அமைத்து, இவற்றின் நெறி முறைகளையும் அருவத்திலே நின்று கண்காணித்து வருகிறார்கள். இவை தவறக் கூடாது என்பதற்குத் தங்கள் இலக்கியத்திலும் பலமான எச்சரிக்கைகளைப் பாடிவைத்திருக்கிறார்கள். கோவில்களில் பூசனை முறைகள் தவறாமல் நடத்தவேண்டும் என்பதில் திருமூலர் போன்ற மகான்களுக்கு அளவில்லாத கவலையும் ஆர்வமும் இருந்து வந்துள்ளன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

ஆம்; நமது உடம்புளே ஆன்மலிங்கம் இருக்கிறது என்றால், மகாலிங்கம் கோயிலில் இருக்கிறது. நாதலிங்கமாகிய மகான்களினுடைய பாடல்களிலும் அதுவே காட்சி தருகிறது. இந்த வழிபாடு நம்மை என்றென்றும் வழி நடத்துமாக!



# இறவா நிலை

[திருக்குறள் வேள் திரு வரதராச பிள்ளை, பி.ஏ.]

சேக்கிழார் சுவாமிகளால் புகழ்ந்து பேசப் பட்ட அறுபத்துமூன்று நாயன்மார்களில் திருமூலர் ஒருவர் இவர் சிறந்த ஞானியாக விளங்கியவர். ஞானம் முதலிய நான்கு நெறியினைத் தெள்ளு தீந்தமிழால் அருளிச் செய்த சான்றோர்களில் தலையாயவர்.

"உள்ளுணர் வானஞான முதலிய வொரு நான்குண்மை தெள்ளுதீந் தமிழாற் கூறுந் திருமூலர்" என்பது சேக்கிழார் வாக்கு. சமய குரவர் நால்வரில் சுந்தரமூர்த்தி சுவாமிகள், "நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்" என்று வாயாரப் புகழ்ந்து பாராட்டுகிறார்.

"குடிமன்னு சாத்தனூர்க் கோக்குல
மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன்
றன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி
யேபர விட்டென்னுச்சி
அடிமன்ன வைத்த பிரான்மூல
னாகின்ற அங்கணனே"

என்று திருமூலரின் வரலாற்றை நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதியில் சுருக்கமாகக் கூறுகிறார்.

இவர் வாழ்ந்த காலம் சரியாகத் தெரியவில்லை. தற்கால ஆராய்ச்சியாளர்கள், கி. பி. மூன்றாவது நூற்றாண்டிலிருந்து ஐந்தாவது நூற்றாண்டுக்குள் வாழ்ந்திருக்கலாம் என்ற கருத்தினைத் தெரிவிக்கிறார்கள். ஆனால் பலகாலம் சாவாமூவா நிலையில் இருந்திருக்கிறார் என்பதுமட்டும் இவரது பாடல் வரிகளால் புலனாகிறது.

"தப்பில்லா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பில் எழுகோடி யுகம்இருந் தேனே"

என்பது அப்பகுதி.

இவர் அருளிச் செய்த நூல் திருமந்திரமாலையாகும்.

"ஞானமுதல் நான்குமலர் நற்றிருமந்திரமாலை" என்ற சேக்கிழார் திருவாக்கால் நூலின் பெயர் விளங்கும்.

"மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது"

என்ற திருமூலர் வாக்கால் இந்நூல் மூவாயிரம் பாடல்களைக் கொண்டது என்பது புலனாகும். இதனைச் சைவத்திருமுறை பன்னிரண்டில் பத்தாவது திருமுறையாகப் பெரியோர் தொகுத்துள்ளனர். இதனுள் நெஞ்சை உருக்கும் பாடல்கள் பல உள.

"முத்தினின் முத்தை முகிழிள ஞாயிற்றை
எத்தனை வானோரும் ஏத்தும் இறைவனை
அத்தனைக் காணா தரற்றுகின் றேனையோர்
பித்தன் இவனென்று பேசுகின் றாரே"

என்று உருகிப் பாடுகின்றார் திருமூலர். இதனை விடச் சிறந்த தோத்திரம் எங்குக் காணமுடியும்? இதனைத் தோத்திர நூலாக மட்டுமின்றிச் சாத்திரமாகவும் பெரியோர் மதித்துப் பாராட்டியுள்ளனர். பதிபசுபாசம் அல்லது இறை உயிர் தளையாகிய முப்பொருள் உண்மையைக் கூறுவதே சாத்திரமாகும்.

"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசம் நிலாவே"

என்ற இம்மந்திரத்தால் எத்துணைத் தெளிவாகச் சாத்திரக் கருத்துக்கள் விளக்கப்பட்டுள்ளன! "தோத்திரத்தில் திருவாசகமும் சாத்திரத்தில் திருமந்திரமும் ஊன்றிப் படிக்க" என்ற இராமலிங்க அடிகளின் ஆணைமொழியால் இவ்வுண்மையை உணரலாம்.

இனி, இதனை ஒரு சிறந்த வாழ்க்கை நூலாகவும் கொள்ளலாம். வாழ்க்கைக்கான சீரிய அறங்கள் இங்குப் பேசப்பெறும். கொல்லாமை, புலால் மறுத்தல், பிறர்மனை நயவாமை, கள்ளுண்ணாமை, அன்புடைமை யாகின்ற அறங்களைப்பற்றி இவர் கூறும் முறையே மிகச் சிறப்புடைய ஒன்றாகும். இந்திரியங்களை அடக்கு முறைமையைப்பற்றிக் கூறுவார்:

"அஞ்சும் அடக்கடக் கென்பர் அறிவிலார்
அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கிலை
அஞ்சும் அடக்கில் அசேதன மாமென்றிட்
டஞ்சும் அடக்கா அறிவறிந் தேனே"

என்பது அவர் வாக்கு. ஐந்து இந்திரியங்களையும் அடக்கவேண்டும் என்று அறிவில்லார்

கூறுவர். ஆனால் இந்திரியங்களை அடக்கவும் முடியாது; அடக்குவதால் பயனும் இல்லை. அவற்றோடு கூடியிருந்தே அவை பெற்ற பயனை அடைந்து விடவேண்டும் என்பது அவர் கருத்து. இவ்வுபதேசம் வாழ்க்கைக்கு எத் துணைப் பொருத்தமுடையதாகவுள்ளது! ஆத லின் உலக இன்பங்களை நன்முறையில் துய்த்துக் கொண்டே பேரின்பம் பெறமுடியும் என்பதே திருமூலர் உள்ளக்கிடக்கையாம்.

"பெற்றசிற் றின்பமே பேரின்ப மாயங்கே
முற்ற வரும்பரி சுந்தீபற
முளையாது மாயையென்
றுந்தீபற"

என்ற ஞான நூலாகிய திருவுந்தியாரும் இவ் வுண்மையினையே கூறுகிறது.

அடுத்துச் சரீர சித்தி உபாயத்தைக் கூறும் பகுதி திருமந்திரத்தில் மிகவும் சிறப்புடையது:

"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே."

'உடம்பு அழிந்துவிடுமாயின், உயிர் அடைய வேண்டிய பயனை அடையமுடியாது. உயிர் அடைய வேண்டிய பயன் மெய்ஞ்ஞானமாகும். அதனைப் பிறந்த பிறப்பிலேயே பெற்றுவிட வேண்டும். ஆதலின் உடம்பை வளர்க்கும் உபா யத்தை அறிந்து உடம்பை வளர்க்கவேண்டும். அப்போதுதான் உயிர் பெறவேண்டிய பயனைப் பெற முடியும்' என்பது இம் மந்திரத்தின் கருத் தாம். உடம்பை வளர்க்கும் உபாயத்தினை அறிய வேண்டாமா? அதுதானே வாழ்க்கையின் குறிக் கோள்!

"முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்"

என்று உடம்பின் அகத்தை நாடவேண்டும் என் கிறார் ஆசிரியர்.

உடம்பினுள் ஆறு ஆதாரங்கள் உண்டு. என்று யோகநூல் கூறும். அவை மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்பனவாம். ஆஞ்ஞைக்கு மேலிடம் பிரமரந்திரம் என்பர். மூலாதாரம் என்பது குதத்துக்குப் பக்கத்திலுள்ளது. குதத் துக்கு மேலும் நாபிக்குக் கீழும் உள்ளது சுவா திட்டானம். நாபித்தானம் மணிபூரகம்; நெஞ்சு அநாகதம்; கண்டம் விசுத்தி; புருவநடு ஆஞ்ஞை; சிரசு உச்சி பிரமரந்திரம்—இவை இடங்களாம். இவற்றைச் சக்கரங்கள் என்று கூறுவர். தற்கால மருத்துவ நிபுணர்களும் இம்மாதிரி சக்கரங்கள் உடம்பில் உள்ளன என்று கூறுகின்றனர்.

இத்துணைச் சக்கரங்களையும் இணைப்பது நடு நாடியாகிய சுழுமுனை. இது மூலாதாரம் தொடங் கிப் பிரமரந்திரம் வரையிலும் ஊடுருவி அதற்கப் பாலும் செல்கின்றது. இதன் அடிப்பாகம் அக் கினி மண்டலம் என்றும், நடுப்பாகம் சூரிய மண்டலம் என்றும், புருவ நடுவுக்கு மேற்பகுதி சந்திரமண்டலம் என்றும் கூறப்பெறும். மனித னிடம் உள்ள அறிவே அக்கினிச் சத்தியாக வுள்ளது. அறிவு போகப் பொருள்களின் வழிச் செல்லும்போது உடலில் கீழ்ப்பகுதிகள், உணர்ச்சி மிகுந்து காமாக்கினியை எழுப்பி உஷ்ணத்தைத் தூண்டி நிற்கும். இவ்வறிவு உலகைச் சுட்டி அறியாதபோது கருவி கரணங் களின் தொழில் நிலை கெடும். அதனால் உடலில் அக்கினியின் கூறுகெட்டு அதே அக்கினி, ஒளி யாக மேலே பிரகாசிக்கத் தொடங்கும். கீழே யுள்ள சத்தி எண்ணத்தினால் தூண்டி நடப்பது. மேலேயுள்ள ஒளிமயமான சத்தி எண்ணமற்ற அகண்ட சத்தி. சிந்தனை அகண்டமானபோது சிந்திப்பவனாகிய ஆன்மாவின் திறனும் அகண்ட மாகிறது. இதையே எண்ணமிலா அன்பு என் கின்றது திருவாசகம். தாம் கொண்ட உரு வத்தைக் கடந்து அகண்டாகாரமாகச் சிந்தனை செய்பவரிடம் உயிரையும் உருவத்தையும் பிரிக் கும் எமனுக்கு வேலையில்லை. கீழேயுள்ள அக்கி னியைப் பிரகாசிக்கச் செய்யும் எண்ணத்தை மேலே செலுத்துதலினால் இஃது அங்கியோகம் என்று பெயர் பெற்றது. சில ஹடயோகிகள் பிராணஜயம் அடைய முயற்சி செய்து பயன்பெறு கின்றனர். ஞானயோகிகள் பிராணனை ஜயிக்க முற்படாமல் சிந்தனையை மாற்றி அகண்டத்தை அடைந்து பிராணனை ஜயித்து இறவாநிலை அடைகிறார்கள்.

"மூலத் துவாரத்து மூளும் ஒருவனை
மேலைத் துவாரத்து மேலுற நோக்கிமுற்
காலுற்றுக் காலனைக் காய்ந்தங்கி யோகமாய்
ஞாலக் கடவூர் நலமாய் இருந்ததே."

# திருமந்திரம் தெரிவிக்கும் தெய்வச் சிவநெறி

[தமிழ்ப் பெரும்புலவர் திரு அ. நடேச முதலியார், கடலூர்-2]

திருமந்திரம் என்ற பெருநூலைப்பற்றி இளமையிலிருந்தே அறிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணமுடையவன்தான் என்றாலும், திருமந்திரத்தைப்பற்றிப் பல அறிஞர்கள் கூறும்போது, அந்நூல், மந்திரமாகவே, உண்மை இன்னதுதான் என்றறிய முடியாத புதிராகவே உள்ளது என்ற எண்ணமே மேலோங்கி நிற்கிறது. அப்பெருநூலை, உரை வாயிலாகவும், சொற்பொழிவு வாயிலாகவும் படிக்கும்போதும், கேட்கும்போதும், பேருண்மைகள் அந்நூலில் பொதிந்துள்ளன என்ற அளவுக்கு உளங்கொள்ள முடிகிறதேயன்றி, அது தான் அம்மந்திரப் பொருளென்று, மனம் அமைதியும் நிறைவும் பெறுவதில்லை என்ற எண்ணத்தை உங்கள்முன் பொய்யாது சொல்ல வேண்டியிருக்கிறது.

உலகியலில் 'மந்திரம் பேசுகிறார்கள்' என்றால், அது, பிறரறியக் கூடாததை மறைவாக, இரகசியமாக, நம்பிக்கைக்குரியவர்கள் மாத்திரம் கூடிப் பேசுவதைக் குறிப்பதாக உள்ளது. இன்னும், மந்திரம் என்றால், தகுதி நிறைந்த சீடனுக்குக் குரு, அநுபவப் பொருளை அறிவுறுத்துவது என்றும் பொருள்படும். ஆகையால் திருமந்திரம் என்பது குரு சிஷ்ய முறையில், அநுபவநிலையில் உள்ளவர், பரிபாகர்களுக்கு, உபதேச முறையில் அறிவிக்கக்கூடிய நிலையில் உள்ள நூல் என்று பொருள்படும் போலும். மேலும் மந்திரம் என்பது, சமய நூல்களில், ஆசாரியனிடம் பெறும் உபதேசமாகிய ஐந்தெழுத்து, ஆறெழுத்து, எட்டெழுத்து மந்திரங்களைக் குறிக்குமன்றோ? அங்ஙனமே, மனிதனைப் பக்குவப்படுத்தி யழைத்துச் சென்று, மந்திரங்களை உச்சரிக்கும் முறை, மந்திரப் பொருளைத் தியானிக்கும் முறை, மந்திரங்களை யந்திரங்களில், கிரியைகளில், பயன்படுத்தும் முறை என்பவற்றைக் காட்டி, அதுதான் இன்னது என்பதனையும் கூறி, அதனோடு நில்லாமல், அதன் பயனையும் காட்டுவதால், மந்திரம் என்று இந்நூலுக்குப் பெயர் வந்தத என்றும் கொள்ளலாம்.

இப்படியே, திருமந்திரம் என்ற நூலின் பெயரே பல பொருளைக் கொடுக்கக் கூடியதாய், அவரவர் தகுதிக்கும் நிலைக்கும் ஏற்பப் பொருள்படும்படி அமைந்துள்ளது என்றால், நூல் நுவலும் பொருளும், அதனினும் பன்மடங்கு ஆழமும், அகலமும், நுட்பமும் உடைய பொருளாகத் தானே இருக்கமுடியும்? அப்படியே இருக்கிறது.

நூலைச் செய்த ஆசிரியரும், அவ்வாறே, பெயராலும், வாழ்வாலும், வரலாற்றாலும், பல நுண்பொருள் உள்ளடக்கிய பெயரும் வாழ்வும் வரலாறும் உடையவராக உள்ளார்.

திருமூலர் என்ற பெயர், ஓர் ஆயர் குலத் தோன்றலின் பெயராக அமைவதோடு நில்லாது, அவ்வாயர் குலத் தோன்றலின் உடலில் வாழ்ந்த, ஒரு முனிபுங்கவரைக் குறிப்பதாகவும், அவர் உடல் விட்டு, வேறு உடலில் வாழும், அத்தனை சித்தி பெற்ற பெருமான் ஆகவும் அமைந்துள்ளமையை நாமறிகிறோம்.

அப்பெருமகனார் செய்தருளியதாகிய திருமந்திரத் தொகையும், மூவாயிரம், முந்நூறு, முப்பது, மூன்று என்ற அடுக்கில் பேசப்படுவதை நாம் உற்று நோக்கும்போது, மூன்றில் முளைத்து, முப்பதாய்ச் செழித்து, முந்நூறாய்ப் பருத்து, மூவாயிரமாய் விரிந்து, திருமந்திரம் என்ற பொருளாழத்தையும் விளக்கிக் கொண்டிருக்கிறது போலும். மூன்று என்ற முதல் எண்ணோடு ஆயிரம் சேர்கிறது. மூன்றே முதல் எண். அங்ஙனமே, திருமந்திரம் என்ற நூலை, ஆசிரியர் திருமூலர் மூன்று பொருள் உண்மைகளை மூவாயிரம் மந்திரங்களால் விளங்க வைத்துள்ளார் என்று கொள்வதும் பொருத்தமே.

திருமூலர், பிறநூற் பொருளையோ, பிற அறிஞர் கருத்துக்களையோ, உட்கொண்டு கூறிய கருத்துக்களாகத் திருமந்திரத்தில் யாண்டும் காணப்படவில்லை. ஆனால், அங்குக் காணப்படும் அனைத்தும், அநுபவ வாயிலாக வெளிப்படுவனவாகவே அமைந்துள்ளன. திருமூலர் யோக முதல்வர்; சித்த மூர்த்தி. ஆகையால், தாம் அடைந்த யோக அநுபவங்களை, சித்திகளை நாம் அடைய வேண்டும் என்ற கருணையினால் கூறியவையே திருமந்திரம். "யான் பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்" என்பது அவர் வாய்மொழிதானே? திருமந்திரம், மூன்று பொருளுண்மைகளையும் விளக்கும் முறை, பிற சாத்திரங்களிற் காணப்படும் முறையினும் மாற்றமும்,

புதுமையும் உடையதாகும். அந்த முறையினை நம் திருவாவடுதுறை ஆதீனத்தின் மூலமாக வெளிவரும் திருமந்திர உரை நூல்களால் அறியலாம்.

ஆனால் திருமந்திரத்தைக் கொண்டு, நாம் அறியவேண்டிய வேறு பல உண்மைகளும் உள. வாழ்வியலை இரண்டாகப் பிரித்து, உடல் வாழ்வு, உயிர் வாழ்வு என விளக்கிச் செல்லும் முறை, சித்தர்கள், யோகிகள் ஆகியோரது செயலாகும். உடல் வாழ்வை, நோயின்றி வாழ்வதற்கும், நீண்ட நாள் வாழ்வதற்கும் துணை செய்யும் முறைகளைச் சித்தர்களும், யோகிகளும், நமக்கு விளக்கியுள்ளார்கள். யோகிகள், ஆசனப் பயிற்சி, மனப்பயிற்சி என்பவற்றால், இவ்வுலகில் நோயின்றி வாழ நமக்கு வழிகாட்டியுள்ளார்கள். சித்தர்கள், கிழங்கு, வேர், இலை, பூ, காய், கனி, மண், கல், பாஷாணங்கள், முப்பூ இவற்றை ஆராய்ந்து, பயன்படுத்தும் முறை கூறி, உடலை நோயின்றி வாழவும், நீண்ட நாள் வாழவும் வழி வகைகளைக் காட்டியுள்ளனர்.

திருமூலர், சித்தரும் யோகரும் ஆகையால், நமக்குத் திருமந்திரத்தில், இவ்விரு முறைகளையும் கூறியிருப்பார்—கூறியிருக்கிறார். அம் முறைகளை அறிந்தால், உடல் வாழ்வுக்குப் பெரிதும் உதவும்.

'உடம்பாரழியில் உயிரார் அழிவர்' என்பது திருமந்திரம்.

இன்றைய உலகில் நாம், பலவகைப்பட்ட கொள்கைகளையுடைய பலவேறுபட்ட கருத்துடைய மக்களோடு உடனுறை வாழ்வினைப் பெற்றுள்ளோம்.

பிற சமயத்தவர் உலகியலறிவைக் கொண்டு, மக்களை, உணவு, உடை, மருத்துவம் இவற்றைக் கொடுத்து, அதனோடு வாழ்வுக்கு இன்றியமையாத கல்வித்துறையையும் பிடித்து, நம் சமுதாயத்தவருடைய எளிமையையும், அறியாமையையும் அறிந்து செயல்படுவாராய்த் தம் சமயத்திற் சேர்த்து வருகின்றனர் என்பது நாம் அறிந்த உண்மை. நாம் அதனை அறிந்தும், கண்டும், செயலின்றி, நம் உண்மை வழிகளை அவர்களுக்குப் பயன்படுத்தாமையாலும், பயன்படாமையாலும், நம் சமய நெறியும் உண்மைகளும், ஏழை மக்களால் உணரமுடியாமல், நம் சமயம் நம்மவராலேயே புறக்கணிக்கப்படுகிறது. இந்த அவலநிலை மாற, உண்மைநிலை மறுபடியும் நிலைக்க, திருமந்திரத்தில் தெளிவாக விளங்கும் உடல் வாழ்வுக்குரிய போதனைகள், வெளிவரல் நன்று.

இன்றைய உலகம் சமயத்தையோ, சமுதாயத்தையோ செயலால்தான் அளந்து பார்க்கிறது. ஆகையால், நம் சைவ சமய உண்மைகள், சமுதாயத்துக்கு எந்த அளவு பயன்படுகின்றன, எந்த அளவு சமயப் பெரியவர்கள் பயன்படுகிறார்கள், சமய நூல்கள் எந்த அளவு மக்களைப் பண்படுத்தி வாழ்வில் மலர்ச்சியை உண்டாக்குகின்றன என்ற அளவு கருவியைப்பற்றியே சமய வளர்ச்சியுள்ளது என்பதனை நாம் நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளோம். இந்த நிலையில், நாம் ஒரு விரதமாக இத்திருமந்திர நூலை, மக்கள் வாழ்விற்குத் துணை செய்யும் நூலாக, சமுதாய நலனுக்குரிய நூலாக ஆக்கிக்கொடுக்க முன்வர வேண்டும். இது காறும் கூறிப்போந்த நோக்கம் எளியேனுடையது அன்று. திருமூலரே ஐந்தாம் தந்திரத்தில், சன்மார்க்க நெறி உபதேசிக்கும் பகுதியில், ஒரு மந்திரத்தால் கூறுகிறார்.

உலகில் தோன்றிய சமயங்களிற் சில ஆசிரிய வசனமானவற்றை வேதம் எனக் கூறுவதை நாம் அறிவோம். கிறித்துவர்களும், முகம்மதியர்களும், பௌத்தர்களும், பிறரும், தம்தம் ஆசிரிய வசனங்களையே வேதமெனக் கோடலையும், வேதமென வழங்கலையும் நாம் காண்கிறோம். ஆனால், சுத்தாத்துவித சைவசித்தாந்திகளாகிய நாம் வேதமெனக் கொள்வது, இறைவனுடைய வசனமெனும் வேதங்களையும், ஆகமங்களையுமே என்பதும், அவன் அருளிற் கலந்து, சாக்கிரத்தில் துரியாதீத அநுபவ நிலையில் நின்ற ஆசிரியர் வசனங்களையுமே என்பதும் நாம் அறிந்த ஒன்று. திருமூலர் வகுத்துரைக்கும் திருமந்திரமாகிய இந்நூலில் நுவலப்படும் பொருளை, யாருக்கு யார் உரைத்தது என்பதனை அவர்களே கூறுகிறார்கள் :

"சைவப் பெருமைத் தனிநாயகன் நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு ;
தெய்வச் சிவநெறி சன்மார்க்கம் சேர்ந்துய்ய
வையத்து ளார்க்கு வகுத்துரைத் தானே."

இஃது ஐந்தாம் தந்திரத்தில் 60-ஆவது திருமந்திரம். சன்மார்க்கம்–உண்மைவழி, நன்னெறி, சிவநெறி, குருநெறி, பெருநெறி, அறிவுநெறி, அன்புநெறி, இன்பநெறி என்பன. ஒரு நெறியைக் கூறும் பல பெயர்கள். கூறும்போது எடுத்துக்கொண்ட பொருளுக்கேற்ப, இடத்துக்கேற்ப வேறு வேறு பெயர் கூறுவரே அன்றி, பொருளால் ஒரு நெறியையே குறிக்கும் என்பதனைத் திருமூலரே கூறியுள்ளார். நாம் எடுத்துக்

கொண்ட இத்திருமந்திரத்திலேயே, குருநெறி, சிவநெறி, சன்மார்க்கம் என மூன்று பெயர்களை, ஒரு நெறிக்குக் கூறியுள்ளமை காணலாம். அந் நெறிகளின் பெருமையை, அருமையை, அறிய வேண்டிய முறையை, அடைவதற்கு அனுட்டிக்க வேண்டியவற்றைப் பல மந்திரங்களால் விளக்கு கிறார்கள். இங்கு அதனை விரிக்காமல், அப்பெரு நெறியாம் குருநெறியை, சிவநெறியை, சன்மார்க் கத்தை, யார் கூறியது, யாருக்குக் கூறியது என்பதனை மாத்திரம் நாம் அறியக் கடமைப் பட்டிருக்கிறோம். 'நந்தி வகுத்துரைத்தான்' சிவநெறியை நந்தியே வகுத்துரைத்தான். அந்நந்தி தான் யார்? இங்கேதான் நமக்குத் திரு மூலர் கூறும் உண்மையும், திருமந்திரம் என்ன என்பதும் விளங்குகிறது.

"சைவப் பெருமைத் தனிநாயகன் நந்தி" உலகச் சமயங்களுள் ஒப்பற்ற பெருமையுடைய சைவ சமயத் தனித்தலைமை நாயகனும் சிவ பரம்பொருள் என்று கூறி அவனருளியது சன் மார்க்கம் என்பதனை நமக்கு அறிவுறுத்துகிறார். இந்நெறியினைத்தான், 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இராமலிங்க அடிகளார் மனித சமுதாயத் திற்குப் பெருநெறியாய், குருநெறியாய், சிவ நெறியாகிய சன்மார்க்கம் என்று கூறி, வாழ்ந்து வகுத்துக் காட்டினார்கள். அந்தத் தனித் தலைமை நாயகனும் சிவ பரம்பொருள், ஞானமா நடராஜப் பெருமான் உயிர்களாய நாமெல்லாம் உய்ய வகுத்த நெறி குருநெறி. அஃதே ஒப்பற்ற ஒன்று. அஃது என்றும் உள்ளது.

'உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு'. அந்நெறி எப்படிப்பட்டது? தெய்வத்தன்மை உடையது; தெய்வம் வகுத்தது. அதனால் அது தெய்வநெறி. தெய்வந்தான் எது? சிவமே தெய்லம். அதனால் அது சிவநெறி. அந்நெறி தான் சன்மார்க்கம்.

'தெய்வச் சிவநெறி சன்மார்க்கம்.'

யாருக்கு அந்நெறி? ஒரு கூட்டத்தார்க்கு, ஒரு சமயத்தார்க்கு, ஒரு மொழியினர்க்கு, ஒரு தேசத் தார்க்கு, ஒருகாலத்து வாழ்வார்க்கு மாத்திரம் அன்று. ஆனால் 'வையத்துள்ளார்க்கு! எத்தனை பரப்பு! எத்தனை பொதுநோக்கு! தெய்வ நெறியல்லவா இது! தெய்வம் பொது, சிவம் பொது, சிவநெறி பொது, குருநெறி பொது. சன்மார்க்கம் அனைவர்க்கும் பொது. அந் நெறி ஏன் வகுக்கப்பட்டது? 'சேர்ந்து உய்ய'. அனைவரும் அந்நெறி சேர்ந்து சிவமாம் பெரு வாழ்வு பெற வகுத்துரைக்கப்பட்டது. அதனால் சிவமாம் பெருவாழ்வு பெற, உலகத்து மக்கள் அனைவர்க்கும் உபதேசிக்கப்பட்ட சன்மார்க்கப் பொதுநெறியாம் சைவநெறி, குருநெறி வகுக்கப் பட்டது என்பது போதரும். ஆகையால் அந் நெறியில் நிற்போமாக!





17 எங்கும் இலாததோர் இன்பம் நம் பாலதா......
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளி.



அண்ணாமலையான் அடிக்கமலம் சென்று இறைஞ்சும் 18
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறு அற்றாற் போல்

# உய்வகை வேண்டுதல்

[வித்துவான் திரு வி. சா. குருசாமி தேசிகர்]
(முதல்வர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி)

திருக்கயிலை மால் வரையில் சிவபிரானுக்கு மலர் கொய்து மாலை தொடுத்து அணிதலும், திருநீற்றை ஏந்தி நிற்றலுமாகிய அணுக்கத் தொண்டுகளைப் புரிந்த ஆலால சுந்தரர் மாதவம் செய்த தென்திசை வாழவும், தீதிலாத் திருத் தொண்டத் தொகை அருளிச் செய்யவும் இறைவன் திருவருளால் மண்ணுலகிற் பிறந்தார். திருவெண்ணெய் நல்லூரில் இறைவனால் அற்புதப் பழ ஆவணங் காட்டி ஆட்கொள்ளப் பெற்றார். 'அர்ச்சனை பாட்டேயாகும். ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக' என்ற இறையாணைப்படி தலங்கள்தோறும் சென்று தேவாரத் திருப்பதிகங்கள் பாடினார். இறைவனுக்குத் தோழராம் உரிமை பெற்றார்.

சுந்தரர் வாழ்வில் இறைவன் நிகழ்த்திய அருள் விளையாட்டுக்கள் பலவாகும். திருவருள் ஒன்றையே நம்பி அவற்றை ஏற்றருளிய சுந்தரர் இறைவனைப் பாடிப் பரவும் திருத்தொண்டை இடையறாமல் செய்து வந்தார். உலக மக்கள் அவற்றை அறிந்து கடைத்தேற வேண்டும் என்ற கருணையால் அத்திருப்பதிகங்களைச் சுந்தரருடன் வந்த அடியவர்கள் எழுதித் தொகுக்கும் பணியைச் செய்தனர். இவ்வாறு சுந்தரர் பெருமான் பாடிய பதிகங்கள் நாமுய்ய நாடுய்ய நமக்குக் கிடைத்துள்ளன.

### தமிழ் வேதம் :

இம்மை, மறுமை இரண்டு நலன்களையும் நமக்கு வழங்குவன அத்திருப்பதிகங்கள். இறைவனே உள் நின்றுணர்த்தியும், அடியெடுத்துக் கொடுத்தும் அருளிச் செய்யப் பெற்ற தேவாரத் திருப்பதிகங்களைத் தமிழ்வேதம் என வழங்குவது மரபு. ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் பாடிய தேவாரத் திருப்பதிகங்களைப் பெற்ற சில தலங்களைப் பாடல் பெற்ற தலங்கள் எனக் கூறுகிறோம். இத்தலங்கள் தனித் தெய்விகத் தன்மையுடன் சிறந்து விளங்குவதையும் காணுகின்றோம். இத்தகைய தெய்விகத் தலங்களுள் ஒன்றாய், சமய குரவர் நால்வர் திருப்பாடல்களையும் பட்டினத்தடிகள் முதலிய அருளாளர்களால் பாடப் பெற்ற சிறப்பினையும் உடையதாய் விளங்குவது திருவிடைமருதூர்.

இடைமருதுறையும் இறைவனை வழிபட்டுச் சுந்தரர் பாடிய திருப்பதிகம், உய்யும் நெறி வேண்டும் தனிச் சிறப்புடைய திருப்பதிகமாகும். சுந்தரர் இத்திருப்பதிகத்தில் பல்வகை உவமைகளைக் கையாண்டு தம்மை இழித்துரைத்துக் கொண்டு பாடும் பாடல்கள் கற்போர் நெஞ்சைக் கனியச் செய்வன.

### உவமைகள் :

குங்குமப் பொதியைச் சுமந்து மெய் வருந்தும் கழுதையைக் கண்டு பெருமை கொள்வோர் இலர். கற்பூரப் பொதி சுமக்கும் கழுதை அறியுமோ அதன் மணத்தை என உலகவழக்கில் ஒரு பழமொழி உண்டு. உயர்ந்த மணப் பொருள்களைச் சுமக்கும் கழுதைக்குப் பெருமை இல்லை. தன்னிடம் வைத்த சிறந்த பொருளைச் சுமக்கத்தான் தெரியுமே தவிர அதன் சிறப்பறியும் ஆற்றல் அதற்கு இல்லை. இதனைக் கையாண்டு சுந்தரர் விளக்கும் கருத்து, சிறப்புடையதாகும். தம்மை இழித்தும் தம்மிடம் வைத்த பொருளை உயர்த்தியும் சொல்ல வந்த சுந்தரர் இதனைக் கூறுகிறார். "இறைவனுக்குரிய மிகச் சிறந்த தொண்டுகளைச் செய்யும் பணியை மேற்கொண்டிருந்தும் அதன் பெருமையை நான் அறியாமல் மனந் தடுமாறிச் சுழியிடை அகப்பட்டவன் போல மனம் சுழல்கிறேன்" என்று தம் மனத்தை விரித்துக் கூறும் திருப்பாட்டு கற்போர் நெஞ்சினைக் கரைக்கும் அரிய அறவுரையாகும் :

"கழுதை குங்குமம் தான்சுமந் தெய்த்தால்
கைப்பர் பாழ்புக மற்றது போலப்
பழுது நானுழன் றுள்தடு மாறிப்
படுசு ழித்தலைப் பட்டனன் எந்தாய்
அழுது நீயிருந் தென்செய்தி மனனே!
அங்க ணாஅர னேயென மாட்டா
இழுதை யேனுக்கோர் உய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தை பிரானே."

### அரைத்த மஞ்சள் :

அரைத்து வைக்கப்பட்ட மஞ்சள் அப்பொழுது அழகும் மணமும் உடையதாய் விளங்கும். வெயில் காயக் காய மஞ்சள் நிறம் மாறி அழகிழக்கும்; வெளுக்கும். அதுபோல 'இளமைப் பருவம் அழகுடையதாய்க் காட்சி அளிக்கும். காலம்

செல்லச் செல்ல நரைப்பும் மூப்பும் பிணியும் நலிய உடல் அழகிழக்கும் - என்று நிலையாமையை விளக்கும் வகையில் அரைத்த மஞ்சளை உவமை காட்டி அருளிச் செய்கின்றார் :

" நரைப்பு மூப்பொடு பிணிவரும் இன்னே
நன்றி யில்வினை யேதுணிந் தெய்த்தேன்
அரைத்த மஞ்சள தாவதை அறிந்தேன்
அஞ்சி னேன்நம ராரவர் தம்மை."

**வாழை பழுக்கும் :**

ஒருமுறை குலை தள்ளிப் பழுத்த வாழை மீண்டும் குலை தரும், சுவையான கனிகளை நமக்குத் தரும் என்று எண்ணிக் காத்திருப்பது அறியாமையல்லவா? அது போன்ற அறியாமை உடையவர்களும் உலகில் உள்ளார்களே !

இளமை உடையராய் இன்பம் தந்த மகளிர் பின்னும் இளமையுடையராயிருந்து இன்பம் நல்குவர் எனக் கருதும் மக்களின் மன மயக்கத்தை 'வாழை இன்னும் பழுக்கும் என்று கருதுவோர் மனநிலையைத்தானே காட்டுகிறது' என்று பாடுகிறார்.

**புல்நுனைப் பனி :**

வாழ்வு அழியும் இயல்பினது. பார்ப்பதற்கு நிலையுடையது போலத் தோன்றினும் நிலையாமை அதனுடன் பிறந்த தன்மையாயுள்ளது. பனிக் காலத்தில் புல்லின் நுனியில் பல துளிகள் தேங்கியிருக்கும். காலையிளங் கதிர் தோன்றுகையில் சிறு முத்துக்கள் போலப் பளிச்சிடும். கதிரொளி காயக் காய மறைந்தொழியும். அதுபோலவே வாழ்க்கை புகழும் போற்றுதலும் உடையதாய்ப் பளச்சிடும். கால சக்கரச் சுழற்சியில் வாழ்வு அழிகிறது. எனவே, இன்று நன்று நாளை நன்று என்றில்லாமல் உய்யும் நெறிகாட்டி என்னையாட் கொள்க என்று வேண்டுகின்றார்.

" புல்நு னைப்பனி வெங்கதிர் கண்டாற்
போலும் வாழ்க்கை பொருளிலை நாளும்
என்னெ னக்கினி இற்றைக்கு நாளை
என்றி ருந்திட றுற்றனன் எந்தாய்."

**உய்யும் நெறியருள் :**

" நன்மைகளை அழித்துத் தீமைகளைத் தேடத் திசை திருப்பும் ஐவர் என்னை இதுவரை ஆட்சி செய்தனர். இனி இவனால் பயனில்லை என்று கழித்து உன்காற்கீழ்ப் போட்டுப் போயினர். நான் உனக்குச் சுமையானேன். விழிப்படைந்து உண்மைப் பொருளாகிய உன்னை அறிந்தேன். வாழ்க்கை இழிபுடையது என்பதை உணர்ந்தேன். உய்யும் நெறி அருள்" என்று கூறிச் சுந்தரர் வேண்டும் வேண்டுகோள் நமக்குரிய நல்ல அறவுரையாகும்.

" நல்வினை தீவினைகளைப் பெருக்கி மகளிரோடு மயங்கி நின்று மெய்ந்நூலறிவு பெறாது கொடுமைகள் செய்து திரிகின்றேன். பற்றுக்கோடு இலனாயினேன். பாவங்களையே விரும்பிச் செய்கின்றேன். பெற்ற செல்வத்தை மற்றவர்க்குக் கொடுக்கும் குணம் இலேன். பகைமை எனும் தீய குணத்தை விட்டிலேன். ஐம்புலன் வசமாயினேன் என்று தம் நிலையை உணர்ந்து பாடுவதாகச் சுந்தரர் பாடிய திருப்பாட்டுக்கள் நம்மனோர் பொருட்டுப் பாடிய அருட் பாடல்களல்லவா?

" ஏழை மானுட இன்பினை நோக்கி
இளைய வர்வலைப் பட்டிருந் தின்னம்
வாழை தான்பழுக் கும்நமக் கென்று
வஞ்ச வல்வினை யுள்வலைப் பட்டுக்
கூழை மாந்தர்தம் செல்கதிப் பக்கம்
போத மும்பொரு ளொன்றறி யாத
ஏழை யேனுக்கோர் உய்வகை அருளாய்
இடைம ருதுறை யெந்தைபி ரானே."

இவ்வாறு இறைவன் முன் நம் நிலையுணர்ந்து பாடித் தோத்திரம் செய்ய நல்லதோர் திருப்பதிகத்தை இத்தலத்திற்கு வழங்கியருளியுள்ளார் சுந்தரர். இப்பதிகத்தை உள்ளத்தால் உகந்து ஏத்த வல்லார்கள் நரைப்பு மூப்பு நடலை இன்றி நாதன் சேவடி நண்ணுபவர் என்று பதிகப் பயனையும் அருளிச் செய்துள்ளார்.

இடைமருதுறையும் ஈசன் அருள்பெற ஆற்றுப் படுத்திய இத்திருப்பதிகத்தை 'உய்யும் நெறியருள்' என்று வேண்டி நாமும் பாடிப் பரவுவோமாக.

# கிளர் ஒளியினர்

[பேராசிரியர் திரு அ. மு. பரமசிவானந்தம், M.A., M.Lit.]

'அங்கிங்கெனதபடி எங்கும் பிரகாசமாய்' இறைவன் தங்கி உறையும் கோயில்கள் பல. அப்பாலுக்கப்பாலாய் உள்ள ஆண்டவனை உயிர்கள் கண்டு தொழுது உய்யும் பொருட்டு அமைந்தவை அவை. உலகெங்கணும் இவ்வுண்மை நன்கு உணர்ந்து போற்றப்படுகின்றது என்றாலும், சிறப்பாகத் தமிழகத்தில்தான் இத் தெய்வநெறி தெளிந்து போற்றப் பெறுகின்றது. 'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்று இக்கருத்தை உணர்ந்தே ஔவையார் இதை வலியுறுத்தியுள்ளார். இந்த அடிப்படையிலேதான் தமிழ்நாட்டில் எங்கெங்கும் எண்ணற்ற கோயில்கள் காணப்பெறுகின்றன. கல்லே கிடைக்கப் பெறாத தஞ்சைப் பெருநிலத்தில் விண்முட்டும் கோபுரங்களுடன் கண்ணுக்கெட்டாத நீண்ட சுற்றுமதில்களைக்கொண்ட பெருங் கோயில்களைக் காண்கிறோம். அக்கோயில்களில் அன்றும் இன்றும் இறைவழிபாடாற்றப் பயனுற்றவர்-பயன் பெறுகின்றவர் மிகப் பலராவர். அத்துணைப் பெருங்கோயில்களைக் கட்டிய தமிழ்நாட்டுப் பழம்பெரு மன்னர்களையும் செல்வர்களையும் வள்ளல்களையும் சிற்பிகளையும் பிறரையும் எண்ணும்போது, நம் உள்ளம் உருகுகின்றது; உயர்கின்றது.

அத்தகைய பெருங்கோயிலை வழிபட்டுப் பலர் தம் உள்ளத்தையும் வாழ்வையும் தூய்மைப் படுத்திக் கொள்ளுகின்றனர். ஒருசில வாய்ப்புள்ள மெய்யடியார்களே அக்கோயில்களைப் புதுப்பித்தும், பொய்ம்மை நீங்கும் வகையில் விளக்கமாக அவற்றைச் செப்பனிட்டும் அறப்பணி ஆற்றுகின்றனர். ஆம்; கோயில்களும் அவற்றின் கலைகளும் அவற்றைச் சுற்றிப் பிற நல்ல அமைப்புக்களும் இல்லையாயின், தமிழ்நாட்டின் சிறப்பும் செம்மையும் பண்பும் பிறவும் இல்லையெனலாம். இத்தகைய அடிப்படை வாழ்வினைக் கருத்தில் கொண்டு, வரலாற்றுப் பெட்டகங்களாக விளங்கும் கோயில்களைச் செப்பனிடும் பணியே சிறந்த தெய்வப் பணியாகும். இப்பணி தற்போது பல பெருங் கோயிலில் நடைபெறுவ தறிய மனம் அமைதியுறுகின்றது. வழிவழியாக அன்னைத் தமிழையும் அருமைச் சைவநெறியையும் போற்றி வளர்க்கும் எங்கள் திருவாவடுதுறை ஆதீனத் தெய்வக் குரு முதல்வர் இன்று திருவிடைமருதூர் நன்முலைநாயகி மருதவாணர்தம் பொற்கோயிலைப் புதுப்பித்துக் குடமுழுக்கும் செய்வித் தருளுகின்றார்.

இத் திருவிடைமருதூரை நினைக்கும்போது அவ்வூரில் அருள்பெற்ற அடியவர்தம் 'பொய்யிலா மெய்வாழ்வும்' அவர் வடித்த வாய்மொழிகளும் நம் மனக்கண்முன் தோன்றுகின்றன. தம்மை மறந்த மெய்யடியார் - ஐயத்தின் நீங்கித் தெளிந்து, ஆண்டவன் நமக்கு உற்றவனாகி அருள்வான் என்ற உணர்வோடு வழிபாடாற்றிய அடியார் - பெற்ற பயன்கள் எத்தனை, எத்தனை! தேவாரம் பாடியருளிய மூவரும் இத்தலத்தின் பெருமையை எப்படி எப்படிப் புகழ்ந்து போற்றுகின்றனர்! பின்னர் வந்த பெரியவர்தம் வாய்மொழிகள்தாம் எத்துணைச் சிறப்புடையன! இத்தகைய தெய்வத் தலத்தை வணங்கிய அடியவர் பெற்ற பேறுகள் பல; பெறும் சிறப்புக்கள் பல. அவற்றை எண்ணிய திருஞான சம்பந்தர் தம் பதிகம் ஒன்றின் இறுதியில் இடைமருது எந்தையைப் பணியும் நல்லடியவர் தம்வினை கெடும் என்றும், அவர் புகழ் அடைவர் என்றும், என்றென்றும் மங்கா ஒளிபெறுவர் என்றும் கூறுகின்றனர். ஆம்; பொன்றாப் புகழும் பூத்தொளிரும் நல்லொளியும் வாழ்விடை விரும்பாதவர் யாவர்? அவற்றை வேண்டுவார் இடைமருதுறை மருதவாணன் மலரடி பரவுதல் வேண்டும் என்பதை அவர் சுட்டிக் காட்டுகிறார் :—

"தடமலி புகலியர் தமிழ்கெழு விரகினன்
இடமலி பொழில்இடை மருதினை இசைசெய்த
படமலி தமிழ்இவை பரவவல் லவர்வினை
கெடமலி புகழொடு கிளர்ஒளி யினரே"

என்னும் சம்பந்தர்தம் திருக்கடைக்காப்பின் வழி ஒளிபெற்றார் பலர்; விழிபெற்றார் பலர்; வாழ்க்கை விளக்கமுற்றார் பலர். அவர்தம் வாழ்வும் வளமும் பிறவும் நம்முன் நிழலிடுகின்றன. ஆம்; நாம் அவர்களைப் பின்பற்றிச் செம்மை நெறியில் செல்வோமாயின் 'கிளர் ஒளியின'ராவோம்.

இந்த இடைமருதீசரைப் பாடிய அப்பர் பெருமான் அவர் 'இம்மைமறுமை நோய்களைத் தீர்க்கும் செம்மலார்' என்பதைச் சுட்டிக் காட்டுகின்றார். நன்முலைநாயகியோடு நல்லவர் வாழ அருள்புரிவதற்கெனவே இங்கே தங்கியுள்ள நம்பர், அந்த அடியவர்தம் வாழ்வாகவும் வைப்பாகவும் வரமாகவும் வளமாகவும் வினைதீர்க்கும் மருந்தாகவும் மந்திரமாகவும் தந்திரமாகவும் தங்கியுள்ளார் என்பதைத் தம் தாண்டகத்தில் அப்பர் அழகுறக் காட்டியுள்ளார். அவர்தம் பாடல்களுள் ஒன்று காண்போம்:

"சூலப் படையுடையார் தாமே போலும்
சுடர்த்திங்கட் கண்ணி உடையார் போலும்
மாலை மகிழ்ந்தொருபால் வைத்தார் போலும்
மந்திரமும் தந்திரமும் ஆனார் போலும்
வேலைக் கடல்நஞ்சம் உண்டார் போலும்
மேல்வினைகள் தீர்க்கும் விகிர்தர் போலும்
ஏலக் கமழ்குழலாள் பாகர் போலும்
இடைமருது மேவிய ஈசனாரே"

என்று, மருதவாணனார், அல்லாரை ஒறுத்தருளும் சூலப்படை உடைமையையும், அஞ்சலென்று அருள்குறிக்கும் கண்ணி உடைமையையும், இணைந்த நல்உணர்வோடு வேறுபாடற்றுக் கலந்த மாலை ஒருபால்வைத்த சத்தி நிலையினையும், மந்திரம் தந்திரம் மருந்தாகும் திறனையும், மற்றவர் வாழத் தாம் நஞ்சுண்டு அமுதருளிய பேரருட்டிறனையும், சென்ற வினையன்றி மேல்வரும் வினையையும் தீர்க்கும் பேராற்றலையும், அன்னையொடு அத்தனாகி அருளும் காட்சியையும் காட்டி நம்மையெல்லாம் மகிழ்விக்கின்றார் அப்பர்!

இத்தகைய இறைவனைக் கண்டு கசிந்து உருகிய சுந்தரர் தம் கடந்த கால வாழ்வினையும் இடைமருதுறையும் ஈசனைக் காணாது கழித்த காலத்தையும் எண்ணி எண்ணிக் கவல்கின்றார். ஒருமணத்தைச் சிதைத்த அவனைக்கொண்டே இருமணம் புணர்ந்து, இன்ப வாழ்வு வாழ்ந்த சுந்தரர், இறைவன் அருளாளனும் தன்மையை எண்ணி எண்ணிப் பார்க்கின்றார். மேலும், அவர்தம் இளமையில் அவரை ஆட்டிப்படைத்த ஐம்புலத்தார் செயல்களையும், அவற்றின் வழியே தம் சிந்தை திரிந்துநின்ற நிலையினையும், பிறவற்றையும் நினைக்கின்றார். அந்த நிலையில் கடந்த செயல்களுக்கு அவற்றின் பயன்களிலிருந்து தப்பி, உய்தி பெறத்தக்க வழி உண்டோ என உள்ளம் உளைகின்றார். உணர்வு பிறக்கிறது. ஆம்; உய்தி உண்டு என்று அவர் உள்ளுணர்வு உரைக்கிறது. வாய் பாடுகிறது. மக்கள் துன்பத்தை நீக்கி உய்யும் வழிகாட்டுபவர் இடைமருதுறையும் மருதவாணரே என்ற—என்று தாம் உணர்ந்த—உண்மையை வையம் உய்யப் பாட்டாக வழங்குகின்றார் சுந்தரர். பதிகம் முழுவதும் 'உய்வகை அருளாய்' என இறைவனை வேண்டும் வேண்டுகோளாகவே அமைகின்றது. 'அஞ்சல்' என்று ஆட்கொள்ளும் இறைவனது செம்மை நலம் பேசப்பெறுகின்றது. ஒன்று காண்போம்:

"கொடுக்க கிற்றிலேன் ஒண்பொருள் தன்னைக்
குற்றம் செற்றம் இவைமுத லாக
விடுக்க கிற்றிலேன் வேட்கையும் சினமும்
வேண்டில் ஐம்புலன் என்வசம் அல்ல
நடுக்கம் உற்றதோர் மூப்புவந் தெய்த
நமன்த மர்நர கத்திடல் அஞ்சி
இடுக்கண் உற்றனன் உய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தைபி ரானே"

என்ற சுந்தரர் வாக்கினை – பாட்டினை – நாம் நாடொறும் பாடக் கடமைப்பட்டவரல்லரோ! ஆண்டவனையே தம் தோழராகக் கொண்ட சுந்தரர் இவ்வாறு கழிந்ததற்கிரங்கி அவனருள் வேண்டுகின்றார் என்றால், நம்போன்றார் வாளா இருக்கலாகுமோ? நம்மால் பாடுதற்கியலாதாயினும் அவர்பாடிய பாடலையாவது பாட வேண்டாவா? ஆம்; பாடின் உய்தி உண்டு.

புன்னுனைப்பனி போன்று அழிதன்மாலைத் தாய வாழ்க்கையில், பெற்ற நாட்களில் நல்லறம் ஆற்றக் கடமைப்பட்ட மக்கள் அவ்வாறு அறமாற்றாமையால்தான் பலவகை அல்லல்களைத் தாமும் அடைந்து வாடி, உலகையும் வாட்டுகின்றனர். அவர்கள், தம்வாழ்வினைச் செம்மையாக்கிக்கொள்ளவும், வையத்தை வாழவைக்கவும் மேற்கொள்ளத்தக்க ஒரே வழி, இறை உணர்வோடு அறம் ஆற்றுவதேயாகும். அவ்வாறு, மனத்துக்கண் மாசுநீங்கி அறமாற்றும் உணர்வைத் தூண்டுவனவே ஆலயங்கள். இத்தகைய பெருங் கோயில்களைக் கண்டு, போற்றி, வணங்கி, வாழ்த்தி, வழிபாடியற்றி, நல்ல நெறியிலே நம் வாழ்வை அமைத்துக் கொள்வோமேயானால் நாம் உலகில் என்றென்றும் கிளர் ஒளியினராகத் திகழ்ந்து வாழ்வோம் என்பது உறுதி. சம்பந்தர் திருவாக்கே நம் வாழ்வாக அமையும் என்பது தேற்றம். மருதவாணர்தம் மலரடி வணங்கி, நன்முலை நாயகியின் நற்பதம் போற்றி, வாழ்வாங்கு வாழ்ந்து, அறம் ஆற்றி நலம்புரிந்து வாழ்வோமாக! அவ்வாழ்வில் வையம் சிறப்பதாக!

# மகாலிங்கத்தின் மாண்பு

[ஒடுக்கம், வித்துவான் ஸ்ரீ முத்துக் குமாரசாமி தம்பிரான் சுவாமிகள்,
திருவாவடுதுறை ஆதீனம்]

**திருவாசகம்**

திருச்சிற்றம்பலம்

"எந்தை யெந்தாய் சுற்றமற்று மெல்லா மென்னுடைய
பந்தமறுத் தென்னையாண்டு கொண்ட பாண்டிப்பிரான்
அந்த விடைமருதி லானந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ."

—மாணிக்கவாசக சுவாமிகள்

**மருதவனப் புராணம்**

"அணிமருவு மிடைமருதீ சருக்கு நந்தி
ஆவடுதண் டுறைசோமாக் கந்த ராரூர்
திணி புகழா லங்குடியில் குருமூர்த்தி யானைத்
திருமுகத்தோன் வலஞ் சுழியே ரகத்திற் செவ்வேள்
கணிதருமாப் பாடியிற்சண் டீசன் தில்லைக்
கதிர்ப்பொதுவில் நடக்கடவுள் வடுகன் காழி
பணைமருவு மாந்தறையின் இரவி யாகும்
பரமனெழிற் பதமலருக் கன்பு மிக்கீர்."

—கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர்

**திருக்கோயில்கள் :**

விண் முட்டும் கோபுரங்கள்—வினை தீர்க்கும் ஆலயங்கள். தமிழகத்தின் தனித் தன்மைக்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும். ஆம்! "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்; நன்றே நினைமின்; நமனில்லை" என்றும், "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்றும் கூறும் திருமூலர் பொன்மொழிகள் நம் சமய நெறியின் மாண்பை - விரிந்த அறிவுப் பண்பாட்டை - விளக்குவனவாகும்.

**தமிழர் சமயச் சிறப்பு :**

தமிழரின் சமயநெறி தொன்மையானது; செம்மையானது. அன்பை அடிப்படையாகக் கொண்டது. 'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்' என்பது திருமந்திரம் எனவே, சிவநெறி என்பது அன்பு நெறியாம். அன்பு நெறியாவது கொல்லாமை - கொன்று தின்னாமை. உயிரை மட்டுமன்றி உள்ளத்தையும் நோவச் செய்யாமை ஒப்பற்ற அன்புடைமை - சைவநெறி ஆகும்.

இலை, தளிர், தண்டு, மலர், பழம், கிழங்கு இவற்றால் இறைவனை வழிபட்டும், இவற்றையே உண்டும் வாழ்ந்து சிவநெறியை - அன்பு நெறியை (கொல்லாமையை)ப் பண்டுமுதல் வளர்த்தவர் தமிழர்.

நம்முடைய ஒப்பற்ற சமயக் கருவூலங்களே திருக்கோயில்கள். தமிழ் மக்களின் சமயநெறி திருக்கோயில் நெறியாகவே அமைந்து விளங்குகின்றது.

திருக்கோயில்களை மையமாகக் கொண்டுதான் நமது பண்பாட்டு வாழ்வு அமைந்துள்ளது.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோபுர வாசல்
தெள்ளத் தெளிவார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே"

—திருமந்திரம்

என்றவாறு திருக்கோயில்கள் தத்துவக் ஞானக் கருப்பொருளாகவும் நாம் வழிபட்டு உய்யும் அருள்நிலையங்களாகவும் விளங்கி வருவதோடு நமது இம்மை வாழ்வுக்கும் வாயிலாக அமைந்துள்ளன.

**வாழ்முதலாகிய கோயில்கள் :**

திருக்கோயில்கள் பண்டைக் காலத்தில் கல்விச் சாலைகளாகவும், கலைக் கூடங்களாகவும், கல்லூரிகளாகவும், சுவடிச் சாலைகளாகவும், அறங்களைப் பதியும் ஆவணக் களரியாகவும், முறை வழங்கும் மன்றங்களாகவும், நோய் தீர்க்கும் மருத்துவச் சாலையாகவும், ஏதிலார்க்கு ஊண் - உடை நல்கி வாழ்வளிக்கும் ஆதுலர்ச் சாலையாகவும், மக்கட்குத் தொழில் தரும் பணிமனையாகவும் பொருள் கொடுத்தும் கொண்டும் உதவும் வங்கிகளாகவும், நெருக்கடியான போர்க் காலங்களிலும் பிற காலங்களிலும் இளைஞர்கட்குச் சிலம்பம், மற்போர் முதலியன பழக்கவும்—இளவட்டக்கல், கர்லா முதலிய கருவிகளை வைத்திருந்து இளைஞர் வலிவும் வனப்பும் பெற்றுத் திகழ வாய்ப்பளித்தலோடு படைவீடுகளாகவும் பயன்பட்டன. அவற்றில் இசை, நடனம், ஓவியம் முதலிய நுண்கலைகளும் பயிற்றுவிக்கப் பெற்றன.

அயல்நாட்டுப் பொறியியல் விஞ்ஞானி ஒருவர், ஒரு சிறு கோயிலின் கருப்பக்கிருகத்து வெளி

மூலை அமைப்பு ஒன்றனைப் பார்த்துவிட்டு, இன்னும் இரண்டாயிரம் ஆண்டுகட்குப்பின் ஒரு பொறியாளர் மாபெரும் கட்டிடம் ஒன்றுக்கு எப்படி அடிப்படை அமைக்கவேண்டும் என எண்ணுவாரோ அப்படி முன்பே அமைக்கப் பட்டுள்ள அடிப்படைகளைக் கொண்டவை தமிழ கத் திருக்கோயில்கள் என்றார்.

**உலக அதிசயங்கள் :**

'அறிஞர் உலகம்' எதை எதையோ உலக அதிசயங்கள் என வியக்கின்றது. தமிழகத்துச் சிற்பிகள் கோயில் அமைக்கும்போது எழுதித் தரும் ஒப்பந்தத்தில் (முச்சலிக்கா) பின்வருமாறு எழுதுவது வழக்கம் :

"திருவலஞ்சுழிப் பலகணியும் - ஆவுடையார் கோவில் கொடுங்கையும், (திருப்பெருந்துறை) திருவீழிமிழலை வௌவால் நந்தி மண்டபமும், கடாரங் கொண்டான் மதிலும், தஞ்சாவூர்ப் பிரம ரந்திர தளவிமானமும் தவிர, தாங்கள் குறிப் பிடும் எல்லாத் திருப்பணிகளையும் செய்து தருவோம்" என்று எழுதுவார்கள் என்றால் அவற்றை ஆக்கிய சிற்பிகட்கு இறைவன் அருளிய திறத்தை என்னென்பது!

**திருவிடைமருதூர்த் 'திரு' :**

'திருவிடை மருதூர்த் திருஅழகு; திருவா ரூர்த் தேரழகு; திருவிரிஞ்சை மதிலழகு' என் னும் தொன்மொழிகளுள் திருவிடை மருதூர்த் 'திரு' அழகு என்பதனைத் திருவிடைமருதூர்த் 'தெரு' அழகு என மக்கள் வழங்குகிறார்கள். தமிழ்நாட்டில் பல ஊர்களின் பெயர்கள்கூட இவ் வாறு பேச்சு வழக்கில் திரிந்தும் சிதைந்தும் உள் ளன. திருவிடைமருதூர்த் திரு அழகு என்றால் திருவிடைமருதூரில் உள்ள இறைவனது அருள் திருமேனி பேர் எழில் உடையதாகத் திகழ் கின்றது என்பது பொருள் ஆகும். ஆம்: தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களிலே திரு விடைமருதூர் மகாலிங்கமூர்த்தியின் அருள் திருமேனியைப் போன்று பெருவனப்பு உடை யது வேறு ஒன்றும் இல்லை என்று கூறினால், அது மிகையாகாது.

**சுவாமி சந்நிதியின் பேரெழில் :**

திருவிடைமருதூர்த் திருக்கோயில் பல்லாற்று னும் அழகுபெற விளங்குவது. எல்லாவற்றுக் கும் மேலாக மற்றக் கோயில்களைவிட நந்தியெம் பெருமானுக்கும் மகாலிங்கப் பெருமானுக்கும் இடையில் உள்ள தொலைவு மிகவும் அதிகமாகும். அந்த இடைவெளி அழகான மண்டபங்களால் நிருமாணிக்கப் பெற்றுள்ளது. நந்தியடியி லிருந்து மாலை நேரங்களில் மகாலிங்கப் பெரு மானைத் தரிசிப்பது கண்கொள்ளாக் காட்சி யாகும். நந்தியடியிலிருந்து கருவறை வரை ஒவ்வொரு வாயிலும் தீபங்கள் ஏற்றப்பெற்று ஒளிக்கோலமாகக் காட்சி தரும். கருவறையில் இருக்கின்ற மகாலிங்கப் பெருமான் பச்சை மணியால் (மரகதத்தால்) அமைந்தவர். அலங் கார தீபம் எடுத்துச் சிவாசாரியர் பெருமானைச் சுற்றி வரும்போது இறைவன் திருமேனி ஒளிப் பிழம்பாகத் தோன்றிக் கண்பெற்ற பயனைப் பெறச் செய்யும். அதைவிடப் பேரெழில் வாய்ந்த ஒரு காட்சி வேறு என்ன இருக்கமுடியும்! அதற்கு இணை அதுவேதான். அதனைக் காணும் அன்பர்கள் 'ஜோதி மகாலிங்கம்! ஜோதி மகா லிங்கம்' என்று அழைப்பதைக் கேட்கலாம். இங்ஙனம், திருவிடைமருதூர் இறைவனுக்கு இணையாகப் பேரெழில் படைத்த இலிங்கத் திருமேனி யாண்டும் இல என்பதைப் புலப் படுத்தவே, 'திருவிடைமருதூர்த் திருஅழகு' என்ற தொன்மொழி ஏற்பட்டது.

**'மகாலிங்கம்' - பெயர்க் காரணம் :**

நம் திருவிடைமருதூர் மருதவாணருக்கு மகாலிங்கம் என்ற பெயர் எப்படி அமைந்தது என எண்ணிப் பார்த்தால் அது மிகுந்த சுவை தரும் செய்தியாகும்.

ஒரு திருக்கோயில் என்றால் அதன் அமைப்பு முறையில் பழங்காலந் தொட்டே ஒரு மரபு இருந்து வருகின்றது. இறைவன், கருவறை யைச் சுற்றி, நந்திதேவர், விநாயகர், சோமா ஸ்கந்தர், தட்சிணாமூர்த்தி, முருகர், நடராசர், நவக்கிரகங்கள், சண்டேசர், வைரவர் என இம் மூர்த்திகளுக்குத் தனித்தனியே சிறு கோயில்கள் அமைந்து விளங்கும். இச்சிறு கோயில்களே பரிவாரக் கோயில்கள் எனக்கொண்டு இவற்றிற் கெல்லாம் நடுவே கருவறை விளங்க, அவற்றுள் அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கம் எழுந் தருளி அருள் வழங்கும்.

**தமிழ்நாடே ஒரு சிவாலயம் :**

பொதுவாக இந்த அமைப்பில்தான் எல்லாச் சிவாலயங்களும் அமையும். சில கோயில்களில் இந்த அடிப்படைத் தத்துவத்திற்கு மாறுபா டின்றி மூர்த்திகளின் இடங்கள் சிறிது மாறுபட்டு அமையலாம். நாம் வடநாட்டிலோ அல்லது வேறு எந்த நாட்டிலோ சென்று கோயில் அமைப்பதாக இருந்தாலும் இவ்வாறுதான் ஆகமப்படி அமைத்தல் வேண்டும்.

நம் மருதவாணர் திருக்கோயில் எப்படி அமைந்துள்ளது என்று பார்ப்போம். நம் நாட்டில் சில சில ஊர்களில் சில சில மூர்த்தி கட்குப் பெருமை உண்டு. சிதம்பரம் நடராஜர், திருவாரூர்த் தியாகராஜர், சுவாமி மலை முருகன், திருவாவடுதுறை நந்தி—இப்படி உள்ள சிறப் புத் தலங்கள் (விசேடித்த மூர்த்திகளின் திருக் கோயில்கள்) பரிவார மூர்த்திகளின் திருக் கோயில்களாக அமைந்துள்ளமை பெருவியப்பிற் குரிய அருட்செயலாகும். இந்த அமைப்பால் தமிழகமே ஒரு சிவாலயமாகத் தோன்றுகின்றது.

திருவாவடுதுறை, திருவலஞ்சுழி, சுவாமிமலை, திருவாப்பாடி, சூரியனார் கோயில், சீர்காழி, சிதம்பரம், திருவாரூர், திருஆலங்குடி ஆகிய ஊர் களில் உள்ள சிறப்பு மூர்த்திகளின் திருக் கோயில்கள் - பரிவாரச் சுற்று ஆலயங்களாக அமைய, அவற்றிற்கெல்லாம் நடுநாயகமாக அமைந்து, திருவிடைமருதூரே கருப்பக்கிருக மாகவும், மகாலிங்கமே பேரிறைவராகவும் விளங் கும் மேம்பாடு பேரின்பம் தரும் செய்தியாகும்.

## சிறப்பு மூர்த்திகளின் திருக் கோயில்கள்

**திருவாவடுதுறை நந்தியெம்பெருமான் :**

இத்தலம் நரசிங்கன்பேட்டையிலிருந்து ஒரு கல் கிழக்கே உள்ளது.

சிவபெருமான் ஆணையால் பசுவடிவம் பெற்ற உமாதேவியார் இங்குவந்து இறைவனை வழி பட்டுப் பசுவடிவம் நீங்கினர். திருமூலர் மூவாயிர மாண்டு மோனத் தவமிருந்து மூவாயிரம் திரு மந்திரங்களை அருளினர். பின், போகர் - கொங்கணர் முதலான சித்தர்கட்கு அட்டமா சித்திகளை அருளினர் இறைவர். மணிவாசகர் குருகாட்சி பெற்றார்; திருமாளிகைத் தேவர் தங்கிப் போகர்க்குத் தொண்டு செய்தார்; சைவ நிறுவனம் அமைத்தார். தருமதேவதையாகிய நந்தி எம்பெருமான் தமது போதி அம்பலமாகிய அரசமரத்தினடியில் கோயில் கொள்ள வரம் தந்தார்; மிகப் பெரிய நந்தி உள்ளது. முசுகுந்தனுக்குப் புத்திரப்பேறு அருளிப் புத் திரத் தியாகர் ஆனார். ஞானசம்பந்தருக்கு அப்பொன் ஆயிரமும், சுந்தரருக்குத் தியாகர் காட்சியும் அளித்தார்.

திருக்கயிலாய மரபில் நந்தி வழியில் வந்த ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகள் சித்தாந்த சைவ ஆதீனம் நிறுவி ஞானச் சுடரை ஏற்றினர். அஃது இன்றும் அணையாது எரிந்து அறியாமை இருளையும், 'பசி' என்னும் புற இருளையும் போக்கி வருகின்றது. பழைய மரபுகளையும் கோயில்களையும் புரக்கும் பழமையான திரு மடாலயம் இதுவே.

இது மகாலிங்கப் பெருமானுக்கு நந்தித் தல மாகும். (கிழக்குத் திசை).

**திருவலஞ்சுழி - விநாயகப் பெருமான் :**

இத்தலம், சுவாமிமலை நிலையத்திலிருந்து அரைக்கல் தொலைவில் உள்ளது. இந்திரன் வழி பட்ட தலம் ; தல விநாயகர்—வெள்ளை விநாயகர் ; விநாயக மண்டபம் உலகப் புகழ் பெற்ற 'பலகணி'யை உடையது. பிலத்தில் சென்று விட்ட காவிரி, ஏரண்ட முனிவரைப் பலிகொண்டு வலமாகச் சுழித்து எழுந்த காரணத்தால் திரு வலஞ்சுழி என்ற பெயர் வந்தது. இது மருத வாணருக்கு, விநாயகத்தலம் (தென்மேற்குத் திசை).

**சுவாமிமலை - முருகப்பெருமான் :**

திருவேரகம் என்பது இதுவே. ஆறுபடை வீடுகளில் ஒன்று ; திருவலஞ்சுழியிலிருந்து ஒரு கல் வடக்கே உள்ளது. மகாலிங்கத்துக்கு நேர் மேற்கே அமைந்த முருகன் சந்நிதியாகும். சிறந்த பிரார்த்தனைத் தலம். சோழ நாட்டின் எழில் மிகுந்த மலைக்கோயில்.

**திருவாப்பாடி - சண்டேசுவரர் :**

ஆடுதுறையிலிருந்தும் குடந்தையிலிருந்தும் வரலாம் ; பேருந்து வழி உண்டு. சண்டேசுர நாயனார் தொண்டு செய்த இடம். தந்தை இவரது சிவபூசையைக் கெடுக்க, அவரது காலை வெட்டி அருள்பெற்றுச் சண்டேசுவரரானார். (வடக்கு) இது மகாலிங்கப் பெருமானின் சண்டேசுவரர் சந்நிதி.

**சூரியனார்கோயில் - சூரியன் :**

இத்தலம் ஆடுதுறைக்கு வடக்கே ஒரு கல் தொலைவில் உள்ளது. நவக்கிரகங்களுக்குத் தனிக்கோயில்களுடன் நடுநாயகமாகச் சூரியன் அமைந்த மாபெரும் நவக்கிரகத் தலம். இந்தியா விலேயே இதற்குச் சிறப்பிடம் உண்டு. பிரார்த் தனைத் தலம்.

இது மகாலிங்கப் பெருமானின் நவக்கிரகத் தலம்.

**சிதம்பரம் – நடராசர் :**

இத்தலம் காண முத்தி தருவது. இந்தியாவில் 'கோயில்' என்று அழைக்கப்படும் சிறப்பு

வாய்ந்தது. இங்கு இறைவன் உலகு உய்யப் 'பரானந்த போதக் கூத்து' ஆடுகிறான். அந்த ஆனந்தக் கூத்தை இறைவி அருகிலிருந்து கண்டு அருளுகின்றாள். நடராசப் பெருமான் சிறப்பு மூர்த்தியாக விளங்கும் இத்தலம் மகா லிங்கப் பெருமானுக்கு நடராஜ மூர்த்தி ஸ்தல மாக அதே திசையில் அமைந்து பேரின்பம் தரு கின்றது. இக்கூத்தப்பிரானே உமாபதி சிவாசாரி யரின் பெட்டகத்தில் ஞானமா நடராசப் பெருமானாக எழுந்தருளித் திருவாவடுதுறை ஆதீன மடாலயத்தில் வீற்றிருந்து சிவஞானம் அருளுகிறார்.

**சீர்காழி – வைரவர் :**

பிரமனால் நிருமாணிக்கப் பெற்று வழிபடப் பெற்றது. நரசிம்மமூர்த்தியைத் தன்னுள் அடக் கம் செய்துகொண்ட இறைவனின் திருத்தலம். வைரவக் கடவுளுக்குச் சிறப்புத் தலமாகும். இது திருவிடைமருதூர் இறைவர்க்கு வைரவர் (வடுகர்) சந்நிதியாகும். திருஞான சம்பந்தர் அவதரித்த தலம்.

**திருவாரூர் – தியாகராசர் :**

இத்தலம், பிறக்க முத்தி தருவது. உலகிலேயே மிக அழகிய தேரை உடையது. தமிழகத்தின் பெருங்கோயிலுள் ஒன்று. இது தியாகராசப் பெருமானைச் சிறப்பு மூர்த்தியாக உடைய சோழர்களின் பழைய தலைநகரம் ஆகும். திரு மகள் பூசித்த தலம். இது மருதவாணராம் மகா லிங்கத்துக்கு, சோமாஸ்கந்தர் சந்நிதியாக விளங் கும் சிறப்புடையது. தேர்–தெப்பம்–கோயில்–குளம் எல்லாம் இணையற்ற சிறப்புடையன.

**ஆலங்குடி – தட்சிணாமூர்த்தி :**

இத்தலம் நீடாமங்கலம் நிலையத்திலிருந்து வடமேற்கே நான்கு கல் தொலைவில் உள்ளது. குடந்தையிலிருந்து பேருந்து வசதி உண்டு. இறைவன் ஆலகால நஞ்சைக் குடித்த இட மாகையால் இப்பெயர் பெற்றது. தட்சிணா மூர்த்தி சிறப்பாக எழுந்தருளியுள்ள இங்கு விழாவெல்லாம் தென்முகக் கடவுளுக்கே. இத் தலம் மருதூர் இறைவர்க்குத் தெற்கே அமைந்த தென்முகர் சந்நிதியாகும். திருவிரும்பூளை யென்ற திருநாமம் உடைய தலம்.

இவ்வாறு பிற திருக்கோயில்களின் சிறப்பு மூர்த்திகட்கெல்லாம் மூலக்கடவுளாகப் பெரிதும் சிறப்புடன் விளங்கும் காரணம் கருதியே வேறு எந்த மூர்த்திக்கும் இல்லாமல் திருவிடை மருதூர் ஈசர்க்கு மகாலிங்கப் பெருமான் என்ற பெயர் விளங்கித் திகழ்கின்றது. ஏகாதச உருத் திரர்களால் உலக சிருட்டியின் பொருட்டுப் பூசிக் கப்பெற்றது. இச்சிறப்பினை உணர்ந்து, 'சிவ ராத்திரி' போன்ற புண்ணிய காலங்களில், மிகவும் விரைந்த ஊர்திகளை உடைய இக்காலத் தில் வாழ்கின்ற நாம், ஒரே நாளில் இத்தலங்களை ஆகம முறையில் தரிசிக்கச் செல்வது தவத்தில் சிறந்த தவமும் புண்ணியத்தில் சிறந்த புண்ணி யமும் ஆகும். அன்பர்கள் முயல்க.

**நிறைவு :**


இடைமருதீசரை வணங்க எண்ணி ஒருவர் எழுந்தால் அவர் வினையும் அவரை விட்டு நீங்க எழும்; நடந்து செலின் அவ்வினை புறத்தே நடந்து செலும்; நடக்க இயலாது அவர் திரும்பி னாலும் அவ்வினை திரும்ப வராது, சென்றது சென்றதே; காசியை அடைந்து கங்கை ஆடிய பலன் கிட்டும். கொலையாளரும் மருதரை வணங்கச் செல்லின் அப்பாவம் வாயில் புறத்தே நிற்கும்; பின்தொடராது. பட்டினி கிடந்து நோற்கும் பயனும், பல காலம் தவம் செய்த பலனும் இத்தலத்தில் ஒரு நாழிகை பஞ்சாக்கர செபம் செய்து பெறும் பேற்றுக்கு இணை யாகாது. இதன் பெருமை ஆதிசேடனாலும் சொல்ல இயலாது.

மேற்கண்ட கருத்துள்ள மருதவன புராணப் பாடலைச் சிந்திப்போம்:


"இடைமரு தீசனைப்பணிதற் கொருவ ரெண்ணாற்
றெழுந்திடிலங் கவர்வினையு மெழுந்து நிற்கும்
நடையுறிலவ் வூர்நோக்கிப் புறவூர் நோக்கி
நடக்குமது சொல்லாம லவர்க ளேகத்
திடமிலரா யுடனொருகாற் றிரும்பி னாலும்
திரும்பாது சென்றவினை சென்ற தேயாம்
புடவிபுகழ் காசியினுற் றிலகு கங்கைப்
புனல்படிந்து வருபலன்மற் றவருக் கெய்தும்."

நாம் இதுவரை திருவிடைமருதூர்த் திருப் பற்றியும் மகாலிங்கத்தின் மாண்புபற்றியும் சிந்தித்தோம். ஞானமா நடராசப் பெருமான்–செந்தமிழ்க் கூத்தன்–திருவருளால் உலகு உய்ய அருட்செங்கோல் ஓச்சும் குருவருள் ஆணையை வாழ்த்துவோம்.

ஸ்ரீ நமசிவாய மூர்த்திகள் திருவடி வாழ்க.



19 எம்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க ;



போற்றி! யாம் உய்ய ஆட் கொண்டருளும் பொன் மலர்கள்;

20

# திருவெம்பாவை

## 1

'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும், வாள்—தடங்கண்
மாதே! வளருதியோ? வன்செவியோ நின்செவிதான்?'
'மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே, விம்மி விம்மி, மெய்ம்மறந்து,
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்(டு),இங்ஙன்
ஏதேனும் ஆகாள், கிடந்தாள்; என்னே! என்னே!
ஈதேஎம் தோழி பரிசு' ஏலோர் எம்பாவாய்.

## 2

'பாசம் பரஞ்சோதிக்(கு) என்பாய், இராப்பகல்நாம்
பேசும்போ(து); எப்போ(து)இப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ? நேரிழையாய்!' 'நேரிழையீர்!
சீ! சி! இவையும் சிலவோ?'—,விளையாடி
ஏசும் இடம்ஈதோ? விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன், சிவலோகன், தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க்(கு) அன்(பு) ஆர்?யாம்ஆர்? ஏலோர் எம்பாவாய்.

## 3

முத்தன்ன வெண்ணகையாய்! முன்வந்(து) எதிர் எழுந்(து),''என்
அத்தன்! ஆனந்தன்! அமுதன்!'' என்(று) அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய்; வந்(து) உன் கடைதிறவாய்!
'பத்துடையீர்! ஈசன் பழஅடியீர்! பாங்குடையீர்!
புத்தடியோம் புன்மைதீர்த்(து) ஆட்கொண்டால் பொல்லாதோ?'
'எத்தோநின் அன்புடைமை? எல்லோம் அறியோமோ?'
'சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை?'
'இத்தனையும் வேண்டும் எமக்கு' ஏலோர் எம்பாவாய்.

## 4

'ஒண்ணித் திலநகையாய்! இன்னம் புலர்ந்தின்றோ?'
'வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ?'
'எண்ணிக் கொ(டு) உள்ளவா சொல்லுகோம்; அவ்வளவும்
கண்ணைத் துயின்(று) அவமே காலத்தைப் போக்காதே!'
'விண்ணுக்(கு) ஒரு மருந்தை, வேத விழுப்பொருளை,
கண்ணுக்(கு) இனியானைப் பாடிக் கசிந்(து), உள்ளம்
உள்நெக்கு நின்(று) உருக, யாம் மாட்டோம்; நீயே வந்(து)
எண்ணிக் குறையில் துயில்!' ஏலோர் எம்பாவாய்.

5

'மால்அறியா, நான்முகனும் காணா, மலையினை "நாம்
போல்அறிவோம்!" என்(று) உள்ள பொக்கங்களே பேசும்
பால்ஊறு தேன்வாய்ப் படிறீ! கடைதிறவாய்';
'ஞாலமே, விண்ணே, பிறவே, அறிவரியான்
கோலமும், நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் "சிவனே! சிவனே!" என்(று)
ஓலம் இடினும் உணராய், உணராய்காண்!
ஏலம் குழலி பரி(சு)!' ஏலோர் எம்பாவாய்.

6

'மானே! நீ நென்னலை, "நாளை வந்(து) உங்களை
நானே எழுப்புவன்" என்றலும், நாணாமே
போன திசை பகராய்! இன்னம் புலர்ந்தின்றோ?
வானே, நிலனே, பிறவே, அறிவரியான்
தானே வந்(து), எம்மைத் தலையளித்(து) ஆட்கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்(கு), உன்வாய் திறவாய்;
ஊனே உருகாய்; உனக்கே உறும்! எமக்கும்
ஏனோர்க்கும் தம்கோனைப் பா(டு)' ஏலோர் எம்பாவாய்.

7

'அன்னே! இவையும் சிலவோ? பல அமரர்
உன்னற்(கு) அரியான், ஒருவன், இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் "சிவன்" என்றே வாய்திறப்பாய்;
"தென்னா" என்னாமுன்னம் தீசேர் மெழு(கு) ஒப்பாய்;
"என்னானை, என்அரையன், இன்னமு(து)" என்(று) எல்லோமும்
சொன்னோம்கேள், வெவ்வேறாய்; இன்னம் துயிலுதியோ?
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்;
என்னே துயிலின் பரிசு!' ஏலோர் எம்பாவாய்.

8

'கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்;
ஏழில் இயம்ப, இயம்பும்வெண் சங்கெங்கும்;
கேழில் பரஞ்சோதி, கேழில் பரங்கருணை,
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம்; கேட்டிலையோ?
வாழி ஈ(து) என்ன உறக்கமோ? வாய்திறவாய்;
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ?
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை,
ஏழை பங்காளனையே பாடு' ஏலோர் எம்பாவாய்.

## 9

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே!
உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியோம்
உன்அடியார் தாள்பணிவோம்; ஆங்கவர்க்கே பாங்காவோம்;
அன்னவரே எம்கணவர் ஆவர்; அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்;
இன்ன வகையே எமக்(கு) எம்கோன்! நல்குதியேல்,
என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய்.

## 10

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்;
போதார்புனை முடியும் எல்லாப் பொருள்முடிவே!
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்;
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்,
ஓதஉலவா ஒருதோழன்; தொண்டர் உளன்;
கோதில் குலத்(து) அரன்-தன் கோயில் பிணாப்பிள்ளைகாள்!
ஏதவன் ஊர்! ஏதவன்பேர்? ஆர் உற்றார்? ஆர் அயலார்?
ஏதவனைப் பாடும் பரி(சு)?ஏலோர் எம்பாவாய்.

## 11

மொய்யார் தடம்பொய்கை புக்கு, முகேர்என்னக்
கையால் குடைந்து குடைந்(து), உன் கழல்பாடி,
ஐயா! வழி அடியோம் வாழ்ந்தோம்காண்; ஆரழல்போல்
செய்யா! வெண் ணீருடி! செல்வா! சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா!
ஐயா நீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்,
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்;
எய்யாமல் காப்பாய் எமைஏலோர் எம்பாவாய்.

## 12

ஆர்த்த பிறவித் துயர்கெட, நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன், நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன், இவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி,
வார்த்தையும் பேசி, வளைசிலம்ப, வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய, அணிகுழல்மேல் வண்டார்ப்ப,
பூத்திகழும் பொய்கை குடைந்(து), உடையான் பொற்பாதம்
ஏத்தி, இருஞ்சுனைநீர் ஆ(டு)ஏலோர் எம்பாவாய்.

## 13

பைங்குவளைக் கார்மலரால், செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால், பின்னும் அரவத்தால்,
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்,
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்(று) இசைந்து
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்து,நம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்(து) ஆடேலோர் எம்பாவாய்.

## 14

காதார் குழையாட, பைம்பூண் கலனாட,
கோதை குழலாட, வண்டின் குழாமாட,
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி,
வேதப் பொருள்பாடி, அப்பொருளா மாபாடி,
சோதி திறம்பாடி, சூழ்கொன்றைத் தார்பாடி,
ஆதி திறம்பாடி, அந்தமா மாபாடி,
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆ(டே)லோர் எம்பாவாய்.

## 15

ஓர்ஒருகால் 'எம்பெருமான்' என்றென்றே, நம்பெருமான்
சீர்ஒருகால் வாய்ஓவாள், சித்தம் களிகூர,
நீர்ஒருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்ப,
பார்ஒருகால் வந்தனையாள், விண்ணோரைத் தான்பணியாள்,
பேரரையற்(கு) இங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆர்ஒருவர்? இவண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்,
வார்உருவப் பூண்முலையீர்! வாயார நாம்பாடி,
ஏர்உருவப் பூம்புனல்பாய்ந்(து) ஆடேலோர் எம்பாவாய்.

## 16

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்(து), உடையாள்
என்னத் திகழ்ந்(து), எம்மைஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்(து),எம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பில் சிலம்பி, திருப்புருவம்
என்னச் சிலைகுலவி, நந்தம்மை ஆளுடையாள்
தன்னில் பிரிவிலா எம்கோமான் அன்பர்க்கு
முன்னி, அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழை!ஏலோர் எம்பாவாய்.

## 17

செங்கண் - அவன்பால், திசைமுகன்பால், தேவர்கள்பால்,
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதா,
கொங்குண் கருங்குழலி! நந்தம்மைக் கோதாட்டி,
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை,
அங்கண் அரசை, அடியோங்கட்(கு) ஆரமுதை,
நங்கள் பெருமானைப் பாடி நலம்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்(து) ஆடேலோர் எம்பாவாய்.

## 18

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்(று)இறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீறு அற்றாற்போல்,
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்ப,
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம்அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி, மண்ணாகி, இத்தனையும் வேறாகி,
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே! இப் பூம்புனல்பாய்ந்(து) ஆடேலோர் எம்பாவாய்.

## 19

'உங்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம்'என்(று)
அங்(கு)அப் பழஞ்சொல் புதுக்கும்எம் அச்சத்தால்,
எங்கள்பெருமான்! உனக்(கு)ஒன்(று) உரைப்போம், கேள்:
எம்கொங்கை நின்அன்ப ரல்லார்தோள் சேரற்க;
எம்கை உனக்கல்லா(து) எப்பணியும் செய்யற்க;
கங்குல் பகல்எம்கண் மற்றொன்றும் காணற்க;
இங்கிப் பரிசே எமக்(கு) எம்கோன்! நல்குதியேல்,
எங்(கு)எழில்என், ஞாயி(று) எமக்கு? ஏலோர் எம்பாவாய்.

## 20

போற்றி அருளுக, நின் ஆதியாம் பாத மலர்;
போற்றி அருளுக, நின் அந்தமாம் செந்தளிர்கள்;
போற்றி! எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்;
போற்றி! எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்;
போற்றி! எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்;
போற்றி! மால் நான்முகனும் காணாத புண்டரிகம்;
போற்றி! யாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்;
போற்றி! யாம் மார்கழிநீ ரா(டு)ஏலோர் எம்பாவாய்.

—மாணிக்கவாசகர்.

# கருவூர்த் தேவர் தரும் கரும்பு

[சித்தாந்தக் கலைமணி, மகாவித்துவான் திரு சி. அருணைவடிவேல் முதலியார், தருமபுரம்.]

"பாட்டான நல்ல தொடையாய் போற்றி" என்பது அப்பர் இறைவனைப் போற்றிய அருந் தொடர்களில் ஒன்று. தொடை - மாலை. மாலைகள் எத்தனையோ வகையில் அமைகின்றன. அவற்றுள் பாட்டால் அமைந்த மாலையும் ஒன்று. இதனை, 'பாமாலை' என்பர். ஏனைய மாலைகள் பலவும் நாள் செல்லச் செல்லச் சிதைந்தொழியும். பாமாலையோ என்றும் சிதைவின்றிப் புத்தம் புதிய பொலிவும், மணமும் பெற்று விளங்கும். அதனால் அப்பர் இதனை, 'நல்ல தொடை' என்று அருளிச் செய்தார். அஃதாவது, 'பலவகை மாலைகளுள் பாமாலையே சிறந்தது' என்பதற்கு, 'பாட்டான நல்ல தொடை' என்று இனிது விளங்க அருளினார்.

இத்தகைய சிறப்புடைய பாமாலையே ஏனைப் பலவகை மாலைகளினும் இறைவனுக்குப் பெரிதும் உவப்பானது என்பதையே முதற்கண் காட்டிய அருள்தொடர் நன்கு விளக்குகின்றது. 'நல்ல தொடையாய்' என்பதற்கு, 'தொடை வடிவாய் உள்ளவனே' என்றும், 'தொடையை உடையவனே' என்றும் இருவகையாகப் பொருள் கூறலாம். 'பன்மாலைத் திரள் இருக்கப் பாமாலைக்கே பட்சம் பரமற்கு' என்று தாயுமானவரும் கூறினார்.

இப்பாமாலை இசைத் தமிழாய் அமைவது மிகச் சிறப்பு. அதனாலேயே திருமுறைகளுள் தேவாரங்கள் முதன்மை பெற்று விளங்குகின்றன. இசைத் தமிழால் இறைவனைப் போற்றும் சீரிய தேவார மரபைப் பின்பற்றி எழுந்தனவே ஒன்பதாந் திருமுறையாகிய திருவிசைப்பாக்கள். இவை தேவாரத் திருப்பதிகங்களின் பண்களோடு பொருந்தியிருத்தல் வெளிப்படை. தேவாரத் திருப்பதிகங்களின் இறுதிப் பதிகமாகிய, சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய நொடித்தான் மலைத் திருப்பதிகத்தின் திருக்கடைக் காப்பில் அத்திருப்பதிகத்தை நாயனார், 'கரும்பின் சுவை......ஏழிசை யின்தமிழ்' என்று அருளிச் செய்தார். அங்ஙனமே திருவிசைப்பாப் பாடிய ஆசிரியர்களுள் 'கருவூர்த் தேவர்' என்பவர், தாம் அருளிய ஒரு திருப்பதிகத்தை, தாம் தரும் 'தீங்கரும் பனைய தீந்தமிழ் மாலை' என்று அருளுகின்றார். அப்பர் ஓரிடத்தில், மனிதர்களை, 'மனிதர்காள்' என்று விளித்து, 'கனி தந்தால் கனி உண்ணவும் வல்லிரே ?' என வினவுகின்றார். அதுபோலக் கருவூர்த் தேவர் தரும் தீங்கரும்பை நாம் நுகர இயல்கின்றதா என்று பார்த்தல் வேண்டும். அத்தீங் கரும்பனைய தீந்தமிழ் மாலை திருவிடைமருதூர்ப் பெருமான்மீது அவரால் அருளிச் செய்யப்பட்டது; பஞ்சமப் பண்ணில் அமைந்தது; 'வெய்ய செஞ்சோதி மண்டலம்' எனத் தொடங்குவது.

இத்திருப்பதிகத்துள் சில திருப்பாடல்கள் சிவபெருமானது அருட்டிருக்கோலத்தின் அழகில் நம்மை ஈடுபடச் செய்வன. மிக்க இருள்செறிந்த நள்ளிரவிலும் சூரிய மண்டலம் தோன்றினாற் போலச் சிவபெருமானது திருச்செவியில் அணியப்பட்ட செம்பொன் தோட்டில் பதிக்கப்பட்ட, பாம்பு உமிழ்ந்த மாணிக்கம் (நாகரத்தினம்) அவரது கரிய கண்டத்தின் அருகே ஒளி வீசுகின்றதாம். அவற்றிற்கிடையே அவரது சடை புரளுதலால், சிவந்த திருமேனி மறையும்படி பூசப்பட்ட திருநீறு இடையிடையே சிறிது அழியச் செவ்வொளியும், வெள்ளொளியும் விரவிக் காணப்படுகின்றனவாம். என்னே வியத்தகு காட்சி! (பாட்டு-1)

புலித்தோல், அரையில் உடுக்கும் உடையாகவும், தோள்மேலிடும் ஆடையாகவும் (உத்தரீயமாகவும்) பல நிறத்தோடு விளங்க, அவற்றின் அருகே ஆரமாகவும், கச்சாகவும் அணிந்த பாம்புகள் உமிழ்ந்த மாணிக்கங்கள் ஒளி வீசுகின்றனவாம் (பாட்டு-4). அந்தி வானம் போன்று விளங்குகின்ற திருமேனியையுடைய இறைவன் அத்திருமேனி அசைய, காட்டில் பேய்களோடு நள்ளிரவில் நடனமாடும்பொழுது, அவன் அணிந்துள்ள பாம்புகளும் ஆடுதல் தனித்ததோர் அழகு(பாட்டு-6). இப்படி இறைவனது திருக்காட்சியை வழங்கும் தீங்கரும்பனைய திருப்பாடல்கள் சில.

ஒரு திருப்பாடல், சிவபெருமானது இறைமைத் தன்மையை வியந்து போற்றுகின்றது (பாட்டு-2). அஃதாவது, "தேவலோகம் முழுதும் 'எது எமைப் பணிகொளுமாறு அது கேட்


போம்' என்று சிவபெருமானது திருவடிகளில் விழுந்து பணிந்து கைகட்டி வாய் புதைத்து நிற்கின்றன. ஆனால், அவனோ வெற்றரையோடு சென்று வீடுகள்தோறும் பிச்சை எடுக்கின்றான்'' என்கின்றது.

இனி இத்திருப்பதிகத்துள் இறைவன் தமது உள்ளத்தில் இரண்டறக் கலந்து நிற்கும் நிலையையும், அதனால் தமக்கு உண்டாகிய பயனையும் வியந்துரைக்கும் திருப்பாடல்களே மிகுதி.

மணியில் (இரத்தினத்தில்) ஒளி எங்கும் நிறைந்து இரண்டறக் கலந்து நிற்பதுபோல, இறைவன் தேவர் உள்ளத்தில் கலந்து நிற்கின்றானாம்(பாட்டு–4). இவ்வாறு இறைவன் கலந்து நிற்றற்குத் தேவரது திருவுள்ளம் பன்னெடுநாள் சிறிது சிறிதாகப் பக்குவம் எய்திப் பழுத்து நின்றது என்கின்றார். அஃதாவது, 'கட்டு, வீடு, என்னும் இரண்டனையும் ஆராய்கின்ற சமய நூல்கள் பலவற்றையும் ஓதி உணர்ந்து அவற்றுள் ஒவ்வொன்றன் கூற்றையே உண்மையென்று கொண்டு, பின் அவை உண்மையல்ல வாதலை அவற்றின் மேம்பட்ட நூல்களை ஓதிய காலத்து அறிந்து, இவ்வாறே படி முறையால் மேலேறிச் சைவ சமயமே மெய்ச் சமயம் என்று உணர்ந்த காலத்தே இறைவன் அவரது உள்ளத்தில் விளங்கித் தோன்றினான். அங்ஙனம் தோன்றிய காலத்து எத்துணைப் பிரித்தறிய முயன்றும் அவன் வேறாகவும், தமது உள்ளம் வேறாகவும் தோன்றவில்லையாம். இவ்வாறு அவன் விளங்கித் தோன்றுவதற்கு முன்பும் அவன் தமக்குத் தந்தை போலவும், தாய் போலவும் பல்லூழி காலம் உடன் இருந்தே தம்மை வளர்த்துவந்தான் என்று சொல்லித் தேவர் வியக்கின்றார். (பாட்டு–5).

இறைவன் வெளிப்படுதற்கு முன்பு உலக பாசத்தால் தாக்குண்டு மெலிந்த தேவரது உள்ளம், அவன் வெளிப்பட்ட பின்பு அப்பாசத்தால் தாக்கப்படாது வலிமை பெற்றுத் திகழ்கின்றதாம்.

இதற்குத் தேவர் கூறும் உவமைகள் மூன்று. அவை வருமாறு: குலாலனால் செய்யப்பட்ட மட்கலம் சூளையில் இட்டுச் சுடாதபொழுது மழைத்துளி விழுந்தால் குழைந்து தனது வடிவை இழக்கின்றது. ஆயினும், சுட்டெடுத்த பின் மழையிலே மூழ்கிக் கிடந்தாலும் அது சிறிதும் கேடுறுதல் இல்லை(பாட்டு–7). இட்டிகையது (மண்ணாலாகிய செங்கல்லினது) நிலையும் இத்தகையதே(பாட்டு–8). இனித் தனித்துள்ள பொழுது நீர், சேற்றால் கலக்கமுற்றுத் தேற்றாங் கொட்டை சேர்ந்தபொழுது சேற்றால் கலங்காது தெளிந்தே நிற்கின்றது (பாட்டு–9). இவ்வாறே தமது உள்ளம் இறைவன் திருவருள் கிடைப்பதற்குமுன் மாயை கன்மங்களால் மயங்கி, அது கிடைக்கப் பெற்றபின் அவற்றால் சிறிதும் கலக்கமின்றித் தெளிந்து நிற்கின்றது என்கின்றார். கருவூர்த்தேவர் இத்தகைய தமது அரிய சிவானுபவத்தை வழங்குவது இத்திருப்பதிகம் என்றால், இதனை, 'கிடைத்தற்கரிய தீங்கரும்பு' எனக் கூறுதற்குத் தடை என்னை? 'இவ்வநுபவத்தைத் தமக்குத் தந்தருளிய பெருமான் எழுந்தருளியிருக்கும் திருத்தலம் திருவிடைமருதூரே' எனக் குறிப்பிட்டு, 'அவனைப் போற்றிய இத்திருப்பதிகமே மக்கட்குத் தாம் தரும் தீங் கரும்பு' என்பதை இறுதித் திருப்பாடலில் தேவர் அருளிச் செய்துள்ளார். ஆகவே, இத் திருப்பதிகத்தை ஓதியுணரும் நல்லுணர்வுடையோர்க்கு, இடைமருதுறை எந்தைபிரான், அப்பர் அருளியவாறு கனியினும், கட்டி பட்ட கரும்பினும், பனிமலர்க் குழல் பாவை நல்லாரினும், தனிமுடி கவித்து ஆளும் அரசினும் இனியனாய் நின்று, எல்லையில்லா இன்பத்தை வழங்குதல் உறுதி.



# இடைமருதூர் ஏற்றம்

[திரு கிரிதாரிப் பிரஸாத், பி.ஏ., பி.எல்.]

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவற்றை முறையாக மேற்கொண்டு ஒழுகும் இயல்புடைய சமயம் சைவ சமயம். சிவவேடம் தாங்கிய அருளாளர்களையும் அரனுடைய ஆலயங்களையும் அரன் எனவே எண்ணி வழிபடும் நெறியும் அவர்களுடையதே. நமச்சிவாய வாழ்க என்றும், நாதன்தாள் வாழ்க என்றும் இடையறுது பஞ்சாக்கரத்தை ஓதி, 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்னும் இலட்சியத்தைப் பரப்பி வருபவர்களும் சைவர்களே. சைவ சமயத்தின் மாண்பைப் பரந்த இப்பரதகண்டம் முழுவதிலும் காணலாம் என்றாலும், அதன் தனிச் சிறப்பைத் தமிழகத்தில் காண்பதுபோல் வேறு எங்கும் காண இயலாது. வானளாவிய ஆலயங்களும் அவற்றுள் வளமிகு சிற்பங்களும், காண்தொறும் காண்தொறும் களிப்பை யூட்டும் கவின்பெறு ஓவியங்களும் நிரம்பி நிற்பது தமிழ்நாடு. அலையும் மனத்தை ஒருமுகப்படுத்தி, அன்பு நெறியை அகில முழுதும் பரப்பி, ஆன்மநேய ஒருமைப்பாட்டுணர்ச்சியைப் பெருக்கி அன்பே சிவம் என்று பறைசாற்றும் சமயமும் அதுவே.

சிவபெருமானின் சீடர்கள் சனத்குமார் முதலிய நால்வருக்கு இயைய, நம்தம் தமிழகத்தில் சைவத்தின் மாண்பை இயம்பவந்த சமய குரவர்களும் நால்வர். இவர்கள் காட்டிய பாதை, சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நிலைகளை உணர்த்துவனவாக இருக்கின்றன. இவர்கள் பாடிய தீந்தமிழ்ப் பாடல்கள்தாம் தோத்திரங்கள் அல்லது புகழ்ப் பாடல்கள் என்பவை. இப்பாடல்கள் அனைத்தும் முழுமுதல் பொருளாம் சிவனையும் அவன் வதியும் திருத்தலங்களையும் பேசுகின்றன. இவற்றுள் தலைசிறந்த ஒரு திருத்தலம் திருஇடைமருதூர் என்பதாகும். இத்திருத்தலத்தைப் புகழ்ந்து பாடியவர் பலர். முதலிகள் மூவராலும் போற்றப்பெற்ற திருத்தலம் இதுவே. திருமுறைகளுள் ஒன்பதாம் திருமுறையாக விளங்குவது, திருவிசைப்பா-திருப்பல்லாண்டு. இதனுள் கருவூர்த்தேவர் பாடிய திருவிசைப்பாவும் இத்திருத்தலத்திற்கு உண்டு. திருஆலவாயுடையார் முதல் நம்பியாண்டார் நம்பிவரை பன்னிருவர் பாடிய பதினொராம் திருமுறையில், பட்டினத்துப் பிள்ளையார் பாடிய திருவிடைமருதூர் மும்மணிக்கோவை என்ற நூலும் இத் திருத்தலத்திற்கு உண்டு. இத்தகு சிறப்புப் பெற்ற, சைவத் திருமுறைகள் பலவற்றாலும் போற்றப்பெற்ற திருத்தலத்தின் கும்பாபிஷேக விழா நடைபெற இருக்கிறது என அறிந்து இதனை ஊக்குவித்தும், ஆக்குவித்தும், அருள் பாலிக்கின்ற திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் அவர்களுக்கு அடியேன் வணக்கங்கள் உரியன.

இத்தலம் வடமொழியில் மத்தியார்ச்சுனம் எனவும், தமிழில் திருஇடைமருதூர் எனவும் பெயர் பெறும். அருச்சுனன் என்பது மருதமரத்தைச் சுட்டும் ஒரு வடமொழிச் சொல். மருதமரத்தைத் தலவிருக்ஷமாக கொண்டு விளங்கும் தலங்கள் மூன்று. அவை வடக்கே ஆந்திரத்திலுள்ள ஸ்ரீசைலம் என்று அழைக்கப்படும் மல்லிகார்ச்சுனமும், தெற்கே பாண்டி நாட்டில் அம்பாசமுத்திரத்தை அடுத்து இருக்கும் திருப்புடைமருதூராகிய புடார்ச்சுனமும், சோழ நாட்டிலுள்ள கும்பகோணத்தை அடுத்த மத்தியார்ச்சுனம் என்று அழைக்கப்படும் திருஇடைமருதூருமேயாகும். இத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனை ஸ்ரீ மகாலிங்கேசுவரர் அல்லது மருதவாணர் என்றும், இறைவியை நன்முலைநாயகி என்றும் அழைப்பர். இறைவன் எல்லாமாயிருப்பவன். இவ்வுலகில் தென்படும் தோற்றங்கள் அனைத்தும் அவனே. நன்மை தீமையும், இன்ப துன்பமும், எல்லாம் அவனே. நிகழ்வன அனைத்தும் இறைவன் திருஆணை வழியே. இன்பம் வந்த காலத்து மகிழ்வுறாமலும், துன்பம் வந்த காலத்து துடிக்காமலும், எல்லாம் அவன் செயலே என எண்ணி அடைக்கலம் புகுதற்குரிய இறைவன் இடைமருதனே என்கிறார் ஞானசம்பந்தர்:

"பொழிலவன் புயலவன் புயல் இயக்கும்
தொழிலவன் துயரவன் துயர்அகற்றும்
கழலவன் கரிஉரி போர்த்துஉகந்த
எழிலவன், வளநகர் இடைமருதே."

அவனுடைய பெருமையையும் இனிமையையும் யாரால் இயம்ப முடியும்? வெறுப்பும் விருப்பும் நிறைந்த இவ்வுலகில், நம்பியவர்கள் நம்மை நயவஞ்சகம் செய்யும் இவ்வுலகில், தோன்றி மறையும் சிற்றின்பங்களே நம்மை மயக்கும்

இவ்வுலகில், இன்று செங்கோலோச்சி நாளை மறைந்துபோகும் அரசர்களும் அமைச்சர்களும் நிறைந்த இவ்வுலகில், என்றும் தெவிட்டாது தன் அடைந்தார்க்கு இன்பம் தரும் தனித் தெய்வம் இடைமருதனே என்கிறார் நாவுக்கரசர் :

" கனியினும் கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழல் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித்து ஆளும் அரசினும்
இனியன் தன்அடைந் தார்க்குஇடை மருதனே."

" கழுதை ஒன்று குங்குமம் சுமக்கிறது ; ஆனால் அதற்கு அக்குங்குமத்தின் பெருமை தெரியாது. அதுபோல, இறைவா ! இம்மானிட தேகத்தைப் பெற்ற எனக்கு உன் பெருமை தெரியாது. பயன் ஏதுமின்றி வாழ்நாட்களை வீழ்நாட்களாக்கி விட்டேன். எனக்கும் நற்கதி பிறக்குமா? ஒரே ஒரு வழிதான் உண்டு. அந்த வழிதான் திருஇடை மருதூரிலே இருக்கின்ற உன்னைக் கதி என்று சரண் அடைவது" என்பார் வன்தொண்டர்.


" கழுதை குங்குமம் தான்சுமந்து எய்த்தால்
கைப்பர் பாழ்புக மற்றுஅது போலாம்
பழுது நான்உழன்று உள்தடு மாறிப்
படுசு ழித்தலைப் பட்டனன் எந்தாய்
அழுது நீஇருந்து என்செய்தி மனனே !
அங்க ணா !அர னே!என மாட்டா
இழுதை யேனுக்குஓர் உய்வகை அருளாய்
இடைம ருதுஉறை எந்தைபி ரானே."

" இறைவா ! மலத்தோடு கட்டப்பட்டிருக்கும் நிலையினையும், மலத்தைவிட்டு நீங்கும் நிலையினையும் அறிவிக்கும் ஞான நூல்களை அறிந்து, அவற்றின் வழி ஒழுகி, சிறிது சிறிதாக உயர்நிலையை அடைந்து, உன்னைத் தாயும் தந்தையுமாக எண்ணி யானும் என் சிந்தையுமாகப் பல்லூழி காலம் தவம் இருந்தாலும், அடையமுடியாத உன்னை உன் திறத்தால் வந்து அணுகும் இடம் திருஇடைமருதூர்தானே" என்கிறார், திருவிசைப்பாப் பாடிய கருவூர்த்தேவர்.

" பந்தமும் பிரிவும் தெரிபொருட் பனுவல்
படிவழி சென்றுசென்று ஏறிச்
சிந்தையும் தானும் கலந்ததோர் கலவி,
தெரியினும் தெரிவுறு வண்ணம்
எந்தையும் தாயும் யானும்என்று இங்ஙன்
எண்ணில்பல் ஊழிகள் உடனாய்
வந்துஅணு காது நுணுகிஉள் கலந்தோன்
மருவிடம் திருவிடை மருதே."

" இத் திருவிடைமருதூர் இறைவனே நமக்கு, காண்கின்ற உலகம் முழுவதையும் காட்டுகின்ற கண்ணாகவும், அருள் திறத்தால் நம்மைப் புறம் போகாது காத்து நிற்கும் காப்பாகவும், கற்றவர்களுக்கு ஆக்கம் நல்கும் எண்ணாகவும் எழுத்தாகவும் இருக்கின்றான். இவனே எல்லாப் பொருள்கட்கும் தலைவனாகவும், பிறப்பிடமாகவும், தந்தையாகவும் இருக்கின்றான்" என்கின்றார் பட்டினத்துப் பிள்ளையார்.

" கண்என்றும், நம்தமக்குஓர் காப்புஎன்றும், கற்றிருக்கும்
எண்என்றும், மூல எழுத்துஎன்றும்,—ஒண்ணே
மருதப்பா என்றுமுனை வாழ்த்தார்ஏன் ? மற்றும்
கருதஅப்பால் உண்டோ கதி."



# மருதவாணர் மாண்பு

[திரு பூ. ஆலாலசுந்தரம் செட்டியார், M.A., தமிழ்த்துறைத் தலைவர்,
சென்னைக் கிறித்தவக் கல்லூரி]

திருவிடைமருதூரில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள மருதவாணரின் மாண்பு முற்றுந் துறந்த பட்டினத்தடிகள் பாடியுள்ள திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில் நன்கு விளக்கப்பட்டுள்ளது. பட்டினத்தடிகள் பாடியுள்ள பாக்களுள் கோயில் நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது என்ற ஐந்தும் சைவத் திருமுறைகளுள் பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன.

திருவிடைமருதூர் மும்மணிக்கோவையின் செய்யுள்நடை சங்கநூல் நடையைப்போன்று அமைந்துள்ளது என்பதைக் கற்றோரும் மற்றோரும் நன்கு அறிவர்.

"ஆண்டகவல் முன்முறையே வெண்பாகலித்
துறையவந்தாதி மும்மணிக் கோவைக்கு முதல்."

என்றபடி அகவல் வெண்பா, கலித்துறைகளால் செய்யுள் இயற்றப்பட்டு அந்தாதித்தொடையால் அமைவது மும்மணிக்கோவையாகும். திருவிடைமருதூர் மும்மணிக்கோவை முப்பது பாக்களைக் கொண்டுள்ளது. அப்பாக்களில் அமைந்துள்ள சிறப்பியல்புகளை இனிக் காண்போம்.

பட்டினத்தடிகளின் பாக்களில் அமைந்துள்ள உவமைநயம் படித்து இன்புறத் தக்கதாகும். கருணைக்கடலாக விளங்கும் சிவபெருமானை நினைந்து வாழ்த்தி வணங்காமல் தம் வாழ்நாளை வீணுக்கும் பாவிகளாகிய மக்களின் அறியாமைக்கு இரங்குகின்ருர் பட்டினத்தடிகள். முப்பழங்களோடு கலந்த அறுசுவை உண்டி செம்மையாகச் சமைத்திருக்கப் பசியால் வருந்தும் ஒருவன் அதனைப் புசித்துப் பசி போக்காது வருந்துதல் அந்த உணவின் குற்றமன்று. வெயிலில் வைத்து ஆற்றிய தெளிந்தநீர் நறுமண மிக்க பொருள்களுடன் கலந்து விளங்க, அதனைத் தண்ணீர் வேட்கைமிக்க ஒருவன் உண்ணுது இருத்தல் அத்தெள்ளிய நீரின் குற்றமன்று. தேன்சிந்தும் பூக்களோடு கூடிய சோலையிருப்ப, வெயிலில் வியர்வை அரும்ப நடந்துவரும் ஒருவன் அச்சோலையிற் செல்லாமல் வருந்துதல் அச்சோலையின் குற்றமன்று. அதைப்போலக் கருணைக் கடலாகித் திருவிடைமருதூரில் வீற்றிருக்கும் மருதவாணரை நினைந்து இறப்புப் பிறப்புக்களின் அச்சத்தைப் போக்கி வாழாத மக்களது குற்றமேயன்றி இறைவனிடத்தில் சிறிதும் தவறில்லை என்று பாடியுள்ளார், முற்றுந்துறந்த பட்டினத்தடிகள். இக்கருத்தமைந்த கீழ்க்காணும் வரிகளை நோக்குக :

"மருதிடங் கொண்ட மருத வாண
நின்னது குற்றம் உளதோ நின்னினைந்து
எண்ணருங் கோடி இடர்ப்பகை கடந்து
கண்ணுறு சீற்றத்துக் காலனை வதையா
இறப்பையும் பிறப்பையும் இகந்து சிறப்பொடு
தேவர் ஆவின் கன்றெனத் திரியாப்
பாவிகள் தமதே பாவம் யாதெனின்
முறியாப் புழுக்கல் முப்பழம் கலந்த
அறுசுவை அடிசில் அட்டினி திருப்பப்
புசியா தொருவன் பசியால் வருந்துதல்
அயினியின் குற்றம்அன்று வெயிலின் வைத்து
ஆற்றிய தெண்ணீர் நாற்றமிட் டிருப்ப
மடாஅ ஒருவன் விடாஅ வேட்கை
தெண்ணீர்க் குற்றம் அன்று கண்ணகன்று
தேந்துளி சிதறிப் பூந்துணர் துறுமி
வாலுகம் கிடந்த சோலை கிடப்ப
வெள்ளிடை வெயிலிற் புள்ளிவெயர் பொடிப்ப
அடிபெயர்த் திடுவான் ஒருவன்
நெடிது வருந்துதல் நிழல்தீங் கன்றே."

—திருவிடைமருதூர் மும்மணிக்கோவை–16

கருணைக் கடலாக இறைவன் விளங்குகின்ருன் என்றும், இறைவனை வணங்காமல் இருப்பது மக்கள் குற்றமே என்றும் கூறிய பட்டினத்தடிகள் இறைவனைப் போற்றுவதால் நாம் பெறக் கூடிய நன்மைகளையும் கூறியுள்ளார். திருவிடைமருதூரை இடமாகக்கொண்ட இறைவனைப் போற்றுவார்க்கு உலகத்திற் சிறந்த பொருள்களும், உயர்குலமும், புகழும், உடல் வன்மையும், பிற உயிர்களிடத்து அருளும், நல்லறிவும்

ஆகிய இவை யனைத்தும் வந்து சேரும் என்றார் அடிகள். இவற்றைக் கீழ்க்காணும் திருப் பாடல் விளக்குகின்றது :

" பொருளும் குலனும் புகழும் திறனும்
அருளும் அறிவும் அனைத்தும்—ஒருவர்
கருதாஎன் பார்க்கும் கறைமிடற்றாய் தொல்லை
மருதாஎன் பார்க்கு வரும்."

—திருவிடைமருதூர் மும்மணிக்கோவை–2

எனவே, சிவபெருமானைப் போற்றுவோர்க்கு மேற்கூறிய செல்வங்கள் அனைத்தும் தாமே வந்து சேரும் என்பது பெறப்படுகின்றது.

பட்டினத்தடிகள் சிவபெருமானாகிய தேனைத் தாம் உண்டு திளைத்ததால் தமக்கு உண்டாகிய நலன்களை ஒரு பாடலில் குறிப்பிட்டுள்ளார் : "யான் திருவிடைமருதூரில் எழுந்தருளியுள்ள இறைவனாகிய தேனை உண்டு களித்தேன். அதனால் இனி எனக்கு இறப்பும் பிறப்பும் இல்லை ; இனி ஐம்புலன்களில் யான் அழுந் தேன் ; எனக்கு நரகத் துன்பமும் கிடையாது ; உலகத்திலுள்ள பொருள்களின்மீதுள்ள ஆசை யும் அற்றது. எனவே, யான் எவரிடமும் சென்று எப்பொருளையும் இனி இரவேன்" என்றார். அக்கருத்தமைந்த திருப்பாடலை நோக்கு வோம் :

" வருந்தேன் இறந்தும் பிறந்தும்
மயக்கும் புலன்வழிபோய்ப்
பொருந்தேன் நரகிற் புகுகின்றி
லேன்புகழ் மாமருதிற்
பெருந்தேன் முகந்துகொண் டுண்டு
பிறிதொன் றில் ஆசையின்றி
இருந்தேன் இனிச்சென் றிரவேன்
ஒருவரை யாதொன்றுமே."

—திருவிடைமருதூர் மும்மணிக்கோவை–3

"தேனுண்டான் ஒருபுலன் இன்ப நுகரச் சிற்றின்பம் அடைந்து இழப்பன். அங்ஙன மன்றி எல்லாப் புலன்களுக்கும் பேரின்பம் அளித்து அதனிடை மறவாது வைத்தலின் இறைவனைப் பெருந்தேன் என்றார்" என்ற உரையாசிரியர் குறிப்பு ஈண்டுப் படித்து இன் புறத் தக்கது. இத்திருப்பாடலில் பட்டினத் தடிகள் சிவபெருமானைப் பெருந்தேன் என்று பாராட்டித் தேனோடு உருவகப்படுத்துகின்றார். இதே கருத்தினைத் திருவாசகத்திலும் காண லாம் :

" சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்"

என்ற வரிகள் ஈண்டு ஒப்புநோக்கத்தக்கன. மேலே காட்டிய திருப்பாடலில் பட்டினத்தடிகள் தாம் இறைவனாகிய தேனை அடைந்ததால் தமக் குப் பிறப்பு இறப்பு இல்லையென்றும், தமக்கு எப்பொருளிடத்தும் பற்றில்லை என்றும் குறிப் பிட்டுள்ளார். இதே கருத்தினைப் பின்வரும் திரு வாசகத்துள் காண்க :

" வேண்டேன்புகழ் வேண்டேன் செல்வம்
வேண்டேன் மண்ணும் விண்ணும்
வேண்டேன் பிறப்பிறப் புச்சிவம்
வேண்டார் தமை நாளுந்
தீண்டேன் சென்று சேர்ந்தேன்
திருப்பெ ருந்துறை இறைதாள்
பூண்டேன் புறம்போ கேன்இனிப்
புறம் போக லொட்டேனே."

—உயிருண்ணிப் பத்து–7

மக்கள் மருதப்பிரான் திருவடியை அடைதற் குரிய வழியினைப் பட்டினத்தடிகள் எதிர்மறை முகத்தான் ஒரு திருப்பாட்டில் விளக்கியுள்ளார். அவர் இவ்வுலகில் வாழும் மக்களை நோக்கி, "வாழ்நாட்களை வீணாகக் கழிக்கும் பயனற்றவர் களே ! நீங்கள் திருவைந்தெழுத்தினைக் கற்க வில்லை ; உங்கள் வலிமைக்குத் தக்கவண்ணம் இறைவன் திருப்பணிகளைச் செய்ய விரும்பு கின்றிலீர் ; அவனது திருப்புகழை எடுத்துச் சொல்லீர் ; ஆசையுடன் உருத்திராக்கத்தினைப் பூணீர் ; விபூதியினை உடல் முழுதும் பூசுகிலீர் ; இவ்வாறு ஒன்றும் செய்யாத உங்களுக்கு மருதப் பிரான் திருவடியினை அடைதல் எளிதாகுமோ ? (ஆகாது) ஆதலால் எத்தகைய நற்கதியினையும் நீங்கள் பெற முடியாது" என இறைவனை வணங்காத மக்களுக்கு அடிகள் எதிர்மறைமுகத் தான் இறைவனை அடையும் வகையினைக் காட்டி யுள்ளார். இதனை,

" காணீர் கதியொன்றும் கல்லீர்
எழுத்தஞ்சும் வல்லவண்ணம்
பேணீர் திருப்பணி பேசீர்
அவன்புகழ் ஆசைப்பட்டுப்
பூணீர் உருத்திர சாதனம்
நீறெங்கும் பூசுகிலீர்
வீணீர் எளிதோ மருதப்
பிரான்கழல் மேவுதற்கே"

—திருவிடைமருதூர் மும்மணிக்கோவை–12

என்ற திருப்பாடலில் அறிக. இதே கருத்தினைச் சேரமான் பெருமாள் நாயனார் பாடிய பொன் வண்ணத்தந்தாதியிலும் காணலாம்.

" சிந்தனை செய்ய மனம்அமைத்
தேன்செப்ப நாஅமைத்தேன்
வந்தனை செய்யத் தலைஅமைத்
தேன்கை தொழஅமைத்தேன்
பந்தனை செய்வதற் கன்பமைத்
தேன்மெய் அரும்பவைத்தேன்
வெந்தவெண் ணீறணி ஈசற்
கிவையான் விதித்தனவே."

—பொன்வண்ணத்தந்தாதி-92

திருநாவுக்கரசர் திருவாய்மலர்ந்தருளியுள்ள திரு விருத்தமும் ஈண்டு ஒப்புநோக்கத் தக்கது.

" கருவாய்க் கிடந்துன் கழலே
நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம்
பயின்றேன் உனதருளால்
திருவாய்ப் பொலியச் சிவாய
நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா
திரிப்புலி யூர்அரனே."

—4-ஆம் திருமுறை : 94-6

இத்திருப்பாட்டில் கூறியவண்ணம் இறைவன் திருவடியை நினைந்து, அவனது திருநாமத்தினைப் பலகாலும் கூறி அவனது திருவருளால் திருநீறு அணிந்து சிவாயநம எனக் கூறினால் சிவகதியினைப் பெறலாம் என்பது அறியக் கிடக்கின்றது. இறைவனை நினைக்க நெஞ்சும், வாழ்த்த வாயும், வணங்கத் தலையும் அவர் நமக்கு அளித்துள்ளார். எனவே, நாம் இறைவனை மனத்தால் நினைத்து வாக்கால் துதித்துத் தலையால் வணங்கினால் சிவகதி பெறுவது எளிதாகும் என்பதைக் கீழ்க்காணும் திருநாவுக்கரசர் திருப்பாடலால் அறியலாம் :

" வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே"

—5-ஆம் திருமுறை : 90-7

இதுகாறும் கூறியவற்றால் இறைவன் கருணைக் கடலாக விளங்குகின்றான் என்பதும், அவனைப் போற்றினால் பொருளும் புகழும் அருளும் அறிவும் பிறவும் பெறலாம் என்பதும், சிவபெருமானாகிய தேனை உண்டு திளைத்தவர் இருவகைப் பற்றினின்றும் நீங்கி இம்மை மறுமைப் பயன்களைப் பெறுவர் என்பதும், இறைவன் திருவருள் கொண்டு திருநீறு பூசி, அஞ்செழுத்து ஓதி, மனம் வாக்குக் காயங்களால் இறைவனை இறைஞ்சுபவர் சிவகதி பெறுதல் திண்ணம் என்பதும் சுருக்கமாக விளக்கப்பட்டன. இதன் விரிவினைப் பட்டினத்தார் திருப்பாடல்களில் படித்து மகிழ்க.

# திருவிடைமருதூர்க் கல்லெழுத்துக்கள்

[கே. எம். வேங்கடராமையா, முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்]

**முன்னுரை :**

திருவிடைமருதூரில் உள்ள திருக்கோயிலில் பல கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றுள் சில 1895-ஆம் ஆண்டு 130-ஆவது எண் முதல் 159 வரை எண் கொடுக்கப் பெற்றுத் தென்னிந்திய சாஸனங்கள் 5-ஆவது தொகுதியில் எண் 694 முதல் 723 வரை அச்சிடப் பெற்றுள்ளன. எஞ்சியவற்றுள் பல 1907-இல் படி யெடுக்கப் பெற்று, 1908-ஆம் ஆண்டறிக்கையில் எண் 193 முதல் 313 வரை கல்வெட்டுள்ள இடம், அரசன், ஆட்சியாண்டு மொழி, குறிப்பு ஆகியவை மட்டும் கொடுக்கப் பெற்றுள்ளன. இவற்றை ஆதாரமாகக் கொண்டு திருவிடைமருதூர்க் கல்வெட்டுக்களைப்பற்றித் தருமபுர ஆதீன வெளியீடுகளாகிய முதல் இரண்டு திருமுறைகளிலும் சுருக்கம் தரப் பெற்றுள்ளது. திருவாவடுதுறை ஆதீனத்திலும் திருவிடைமருதூர்க் கல்வெட்டுக்கள் சில அச்சிடப் பெற்றுள்ளன. இவற்றின் துணைக்கொண்டு சில செய்திகள் மட்டும் இனித் தரப்பெறும்.

*** ஏகநாயகன் :**

"ஏகன் அநேகன் இறைவன் அடிவெல்க" என்பது திருவாசகம். "ஏகநாயகனை இமையவர்க்கரசை" என்பது திருவீழிமிழலைத் திருவிசைப்பா.

* மருதவன புராணம்—கடவுள் வாழ்த்து—ஏகநாயகன் காண்க. ஷ புராணம் தவநிலைச் சருக்கம் செ. 38-39 காண்க. மூகாம்பிகைக்கு இறைவன் மான் மழு வரத அபயங்களுடனும் பிறை சூடிய முடியுடனும் தரிசனம் தந்தான். அவ்வுருவமே 'ஏகநாயகன்' எனப்பெறும்.

இவ்வேக நாயகன் என்ற சொற்றொடரால் இறையகத்துத் திருவாசலை முதலாம் இராசேந்திர சோழன் காலத்துப் பெருமக்கள் குறிப்பிடலாயினர். முதல் இராசேந்திரனின் மூன்றும் ஆட்சியாண்டில் ஏகநாயகன் திருவாசலில் இரவில் ஒரு விளக்கு எரிக்க 45 ஆடுகள் அளிக்கப் பெற்றன என்று ஒரு கல்லெழுத்து (200 of 1907) இயம்புகின்றது. இனி விக்கிரம சோழனுடைய 7-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் (272 of 273 of 1907) ஏகநாயகன் திருவெடுத்துக் கட்டி என்ற இடம் குறிக்கப் பெற்றுள்ளது. இது மகாமண்டபத்தில் உள்ளது. இதில் அரசன் இருந்து கொண்டு வண்ணக்குடி என்ற ஊரைத் தியாக சமுத்திரச் சதுர்வேதி மங்கலம் என்று பெயரிட்டுத் தேவதான இறையிலியாக்கினான். முதற் குலோத்துங்கன் காலத்தில் ஒரு வேலிக்கு 60 கலம் என்று நிர்ணயிக்கப் பெற்றது என்று இக் கல்லெழுத்து இயம்புகிறது.

### சிற்றிங்களுடையான் :

இவன் இயற்பெயர் கோயில்மயிலை என்பதாம். இவன் இரண்டாம் பராந்தகனாகிய சுந்தரசோழன் காலத்தில் பராந்தக மூவேந்தவேளான் எனப் பெற்றான். இச்சுந்தரசோழன் மகனாகிய ஆதித்த கரிகாலன் கல்வெட்டுக்களில் இவன் குறிக்கப் பெற்றுள்ளான். இவன் திருவிடைமருதூர்க் கோவிலில் ஸ்ரீகார்யம் ஆராய்கின்ற அதிகாரியாகத் திகழ்ந்தவன்.

திருவிடைமருதிலாழ்வார் ஸ்ரீகார்யம் ஆராய்கின்ற அதிகாரிகள் சிற்றிங்களுடையான் கோயில் மயிலை பராந்தக மூவேந்தவேளானும், திரைமூர்ச் சபையாரும், திருவிடைமருதில் நகரத்தாரும், தேவகன்மிகளும் நாடகசாலையில் கூடினர். அவ்வூரில் சித்திமறைக்காடனான திருவெள்ளறைச் சாத்தை என்ற ஆடல் வல்லான் ஒருவன் இருந்தான். அவன் தைப்பூசத் திருநாளிலும், தீர்த்தமாடின பிற்றை நாள்தொடங்கி மூன்று நாட்களும், வைகாசித் திருவாதிரையின் பிற்றை நாள் தொடங்கி மூன்று நாட்களும் ஆக ஏழு தடவை திருவிடைமருதில் உடையார் முன் ஆரியக்கூத்து ஆடுவதற்கு 14 கல நெல் கொடுப்பதற்காக ஒரு வேலி நிலத்தை ஒதுக்கினர். இச்செயல் இரண்டாம் ஆதித்தனின் 4-ஆம் ஆட்சியாண்டில் நடைபெற்றதென (154 of 1895; S.I.I. Vol. V, 718) ஒரு கல்வெட்டு இயம்புகிறது.

ஆதித்த கரிகாலனது 4-ஆவது ஆட்சியாண்டு குறிக்கப்பெற்ற மற்றொரு கல்லெழுத்து (214 of 1907; S.I.I. Vol. III, 203) ஓர் அரிய செய்தியை அறிவிக்கிறது. திரைமூர்ச் சாஸனத்துள் கண்ட வண்ணம் ஒரு குடிநீக்கி தேவதானம். ஆண்டு தோறும் பஞ்சவாரமாக 260 கலம் நெல் கொடுக்க வேண்டும். ஆனால் படிமாற்றில் 160 கலம் நெல் வரவு வந்தது. திரைமூர்த் தேவதானம் இருபதிற்று வேலியும் குடி நீக்கிற்றில்லை என்று கூறி 800 கலம் நெல் கொடுக்கப் பெற்று வந்தது. சிற்றிங்கள் உடையான் திரைமூரைத் தேவதானமாக்கிய மூலவோலையை வருவித்தான்; குடிநீக்கி என்பதைக் கண்டறிந்தான்; இனி அடைவோலைப்படி திருவிடைமருதன் என்னும் மரக்காலால் 2800 கலமும், பஞ்சவாரமாக 260 கலமும் கொடுத்துவரல் வேண்டும் என்று உத்தரவிட்டான். இதுகாறும் கொடுக்காத தொகையை முதற் பொருளாக்கி, அம்முதற் பொருளினின்றும் கிடைக்கும் வட்டியைக் கொண்டு, படிமாற்றை மிகுவித்தான்.

இச் சிற்றிங்களுடையான், உத்தமசோழன் (970–84) காலத்துத் திருவிடைமருதூரில் சில காலம் ஸ்ரீகாரியம் ஆராய்கின்றவனாகக் காணப் பெறுகிறான்; மதுராந்தக மூவேந்தவேளான் எனப் பெற்றான் (219 of 1907).

### புராண கணபதி :

இவர் மூலத்தானத்துக்குத் தெற்கில் இருப்பவர். ஏமநல்லூரவர் ஒருவர் இவருக்கு விளக்கு எரிக்க 8 ஈழக்காசு அளித்ததாக ஒரு கல்வெட்டுக் (239 of 1907) கூறுகிறது. ஏமநல்லூர் என்பது இந்நாளில் திருலோக்கி என்று வழங்கப் பெறும்.

### தைப்பூசம் :

தைப்பூசத் திருவிழா, திருவிடைமருதூர்க்குச் சிறப்பு விழாவாகும். இது பல கல்வெட்டுக்களில் (246 and 248 of 1907) குறிக்கப் பெற்றுள்ளது.

### செண்பக நந்தவனம் :

திருவெண்காட்டுப் பிச்சன் என்ற ஒருவன் சிறு செண்பக நந்தவனத்தை அமைத்தான் (249, 260 of 1907). மல்லிகைத் தோட்டம் வைக்க நிலம் அளிக்கப்பட்டது (216 of 1907).

### மகேந்திர மங்கலத்தார் :

மகேந்திர மங்கலம் ஒரு பிரமதேயம். இம் மங்கலத்தார் சிறிது நிலத்தை விற்றனர். படையிலார் அவ்வமயம் மக்களைத் துன்புறுத்தினர். மகேந்திர மங்கலத்தார் தஞ்சாவூருக்குச் சென்று முறையிட்டும் பலன் இல்லை. பின்னர் இந் நிலத்தைக் கொள்வாரில்லையோ என்று கூறப் பொன் மாளிகைத் துஞ்சினதேவர் தேவியார் சேரமானார்

மகளார் பிராந்தகன் தேவியம்மனர் விலக்குக் கொள்வர் என்று கூறி விலக்குப் பெற்றர். (159 of 1895; 723 of Vol. V). பொன் மாளிகைத் துஞ்சினதேவர் என்பது சுந்தரசோழனைக் குறிக்கும்.

### பலருடைய தொண்டுகள் :

இராசராசனுடைய மனைவி ஸ்ரீபஞ்சவன் மாதேவியாரின் கோதண்டராம வேளத்துப் பெண்டுகளுள் ஒருத்தி, உமாபட்டாரகியார்க்கு இராசராசனின் 9-ஆம் ஆண்டில் அணிகலன்களையளித்துள்ளாள்-(278 of 1907). திருப்புத்தூர் இருதய சிவன் என்பான் பொன்மலர் அளித்தனன் (197 of 1907). பஞ்சவன் மாதேவியார் உமா சகிதர் திருமேனியைப் பொன்னல் அளித்தார் (254 of 1907). ராஜகேசரி வர்மனின் 6-ஆம் ஆண்டுக் கல்வெட்டு (215 of 1907), சோழவரசி வானவன் மாதேவி கடவுளை வழிபட வந்த செய்தியை அறிவிக்கிறது. இவ்வரசனின் 3-ஆம் ஆண்டில் ஸ்ரீகார்யம் ஆராய்கின்ற இருமுடி சோழப் பல்லவ அரையர் கவரிப்பிணுக்களை ஏற்பாடு செய்தார் (152 of 1895; S.I.I. Vol. V, 716). ஆனைமேல் துஞ்சிய உடையாரின் ஆச்சியார் உடைய பிராட்டியாரின் பரிவாரத்துப் பெண்டுகளில் ஒருத்தி பொதுவன் சிற்றடி என்பாள் விளக்குவைக்க 20 ஈழக்காசும், திருவிடைமருதூருடையார் அமுது செய்யும் தண்ணீரமுது வட்டிலுக்கு இருபத்துநாற் கழஞ்சு பொன்னும் அளித்தாள். (156 of 1895; 720 of Vol. V). ஒரு மண்டபத்துக்குப் பெயர் திசை ஆயிரத்தைந் நூற்றுவர் என்பதாகும். இதற்குக் கைக்கோளப் பெரும் படையினர் ஜன்னல், வாசல் நிலை, கதவு, படிக்கட்டு ஆகியவற்றை அமைத்தனர் (253 of 1907). பாண்டி நாட்டுத் துலக்கிலி மங்கலத்தார் ஒருவர் வெள்ளிக் கவசம் அளித்தார் (247 of 1907). நவரத்தினங்கள் பதிக்கப் பெற்ற பொற்கை (ஹஸ்தம்) ஒன்றை ஒரு வணிகர் அளித்தார் (198 of 1907) வெண்ணுட்டு வரம்புசலுடையான் சந்திராதிச்சன் சத்துருகண்டான் என்பான் திருவிடைமருதூருடையார் சாலையுண்ணும் பிராமணர்க்கு 18 தாலம், சட்டுவம் ஆகியவற்றை அளித்தான் (150 of 1895; 714 of Vol. V).

கருவறை கருங்கல் திருப்பணி செய்யப்பட்ட காலத்தில் பழைய கல்வெட்டுக்கள் படி யெடுக்கப் பெற்றன என்றும், அக்கல்வெட்டுக்கள் விளக்கு நிபந்தங்களாம் என்றும், அவற்றுள் ஒன்று காடுபட்டிகள் நந்திப் போத்தரையருடையது என்றும் ஒரு கல்வெட்டு (199 of 1907; S.I.I. III, 124) இயம்புகிறது. பராந்தகனின் 18-ஆம் ஆட்சியாண்டில் குமார மார்த்தாண்டபுரத்தவர் விளக்கு வைக்கப் பொன் அளித்தனர் (262 of 1907). இப்பராந்தகனின் 20-ஆம் ஆண்டில் பயறு நிவேதிக்கப் பொன் அளித்த செயல் ஒரு கல்வெட்டில் (201 of 1907) கூறப்பட்டது. இவ்வரசனின் 27-ஆவது ஆண்டில் சபையாரும் பிறரும் நாடகசாலையில் இருந்து திருவிடைமருதூருடையார்க்குத் திருவோலக்கத்து மூன்று சந்தியும் உடுக்கை வாசிப்பாரொருவனுக்கு நிவந்தம் அளித்தனர் (157 of 1895; 721 of Vol. V). புலியூர்க் கோட்டத்து மயிலாப்பில் வியாபாரி விளக்கெரிக்க நிலம் அளித்தார் (147 of 1895; 711 of Vol. V). அரிஞ்சிகைப் பிராட்டியார் என்னும் சோழ அரசியின் நினைவில் முதற் பராந்தகனின் 38-ஆம் ஆண்டில் விளக்கெரிக்கப் பொன் அளிக்கப்பட்டது (252 of 1907). உத்தம சீலி என்பது முதற் பராந்தகனுடைய மக்களுள் ஒருவன். இவன் பொன் கொடுத்து விளக்கு எரிக்கச் செய்தான் (196 of 1907). இராசாதிராசனின் 32-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் அரையன் திருவிடைமருதூருடையானை மும்முடிச் சோழ நிருத்தப் பேரரையனுக்கும் அவன் குழுவினர்க்கும் அறம் செய்த செயல் கூறப்பட்டது (264 of 1907).

### சில சிறப்புச் செய்திகள் :

ஒரு கல்வெட்டு இரண்டாம் ஆதித்தன் வீரபாண்டியனை எறிந்து தலை கொண்டவன் என்று கூறுகிறது (256 of 1907). பொன் மாளிகைத் துஞ்சினதேவர் என்று சுந்தரசோழன் குறிக்கப் பெறுகிறன். அவன் மனைவிகளுள் ஒருத்தி சேரமானர் மகளார் பிராந்தகன் தேவியம்மனர் என்று ஒரு கல்வெட்டில் (159 of 1895) உள்ளது. ஒருவன் பெயர் வன் தொண்டன் (158 of 1895); கோயில்கணக்கு குண்டையூர் கிழவன் (141 of 1895); ஒருவன் பெயர் திருவாலி (138 of 1895); இன்னொருவன் சிவலோக நாயகன் (138 of 1895); ஒருவன் பெயர் மாடலன் (159 of 1895); கவரா மொழித் தேவனை தொண்டரடிப்பொடி (207 of 1907) என்று இன்னோரன்ன பெயர்கள் காணப்படுகின்றன. ஒரு சிற்பத்தினிடத்தில் திருத்துருத்திநம்பி ஸ்ரீகண்டர், சிவசரண சேகரன் என்ற பெயர்கள் காணப்படுகின்றன (267 of 1907). கஞ்சனூர்க்குச் சிம்மவிஷ்ணு சதுர்வேதி மங்கலம் என்பது பெயர் என்றும், அது ஒரு பிரமதேயம் என்றும் ஒரு கல்வெட்டில் (265 of 1907) உள்ளது.

முதற் குலோத்துங்க சோழரின் 26-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் கலிங்கப் போர் குறிக்கப் பட்டுள்ளது. நம்பிராட்டியார் சீராமன் அருமொழி நங்கையான ஏழுலகமுடையார் என்ற அவன் மாதேவி மூன்று விளக்குகள் அமைத்தனள் (304 of 1907). நேரியன் மாதேவியார் என்ற அரசமாதேவி விக்கிரம சோழனது 6-ஆவது ஆண்டுக் கல்வெட்டில் குறிக்கப்பட்டாள் (136 of 1895).

### கங்கை கொண்ட சோழபுரத்தவர் தொண்டுகள் :

குலோத்துங்க சோழனின் 41-ஆவது ஆண்டில் கங்கைகொண்ட சோழபுரத்தவர் ஒருவர் திருமஞ்சனம் ஆடியருள நிவந்தம் அளித்தார் (279 of 1907); விக்கிரமசோழனின் 4-ஆவது ஆண்டில் திரு மஞ்சனக்குடம் வாங்கப் பொருள் அளித்தார் (293 of 1907).

### சுவாமிதேவர் :

விக்கிரமசோழனது 4-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் (301 of 1907) சுவாமிதேவர் ஸ்ரீகண்ட சிவர் என்று ஒருவர் குறிக்கப் பெறுகிறார். இவர் திருமங்கலக்குடியில் குலோத்துங்க சோழீச்சரமுடைய மகாதேவரை எழுந்தருளுவித்து அதற்குப் பத்துவேலி நிலம் தேவதான இறையிலியாக்கினார்.

### மாணிக்கக் கூத்தர் :

திருவிடைமருதூருடையார் திருக்கற்றளியில் மாணிக்கக் கூத்தர்க்கு அமாவாசைதோறும் திருவமுது உள்ளிட்டவற்றுக்கு நிலம் மூன்று காணியும் ஒருமாவும் விக்கிரசோழனது 5-ஆவது ஆண்டில் அரிகுல ராஜ மாராயன் அளித்தனன் (130 of 1895; 694 of Vol. V).

### பாணரைப் பாட்டுவித்தல் :

பாணன் இருமுடி சோழன்பிரானை அசஞ்சலப் பெரியன் என்ற பெயருடைய பாணன் ஒருவன் இரண்டாம் குலோத்துங்கனுடைய 9-ஆவது ஆண்டுக் கல்வெட்டில் குறிக்கப் பெறுகிறன் (141 of 1895; 705 of Vol. V). இவன் திருவிடைமருதூருடையார்க்குப் பாடவும், இக்கோயிலில் தளியில்லார் தேவரடியாரைப் பாட்டுவிக்கவும் வேண்டும். இதற்கு இவனுக்கும் இவன் வமிசத்தார்க்குமாகப் பாணப்பேறு அளிக்கப் பெற்றது.

மூன்றுங் குலோத்துங்க சோழனுடைய 12-ஆம் ஆண்டுக் கல்வெட்டில் (142 of 1895) உடுக்கை வாசிப்பார் பங்கு காணியுடைய எண்ணரியான் பக்கலில் உள்ள நட்டுவரில் குலோத்துங்க சோழ நிருத்தப் பேரரையன் என்பான் அநுபவித்து வருகிற பங்கு இரண்டும் உறுதி செய்யப் பெற்றது. இனி இன்னொரு கல்வெட்டில் அகமார்க்கத்தில் நடிக்க வல்ல நடிகர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது கூறப்பட்டது (306 of 1907).

### வாணுதிராசர் :

மூன்றாங் குலோத்துங்கனுடைய 16-ஆவது ஆட்சியாண்டில் வாணுதிராசர் என்ற ஒருவருடைய வேண்டுகோளின்படி திருவிழா நாட்களில் இறைவனை எழுந்தருளுவிக்கும் வழிகளும், தெருக்களும் மாற்றியமைக்கப்பட்டன (392 of 1907).

### நல்லூர்க் கல்வெட்டு :

மூன்றும் இராசராசனுடைய நல்லூர்க் கல்வெட்டு (49 of 1911) தத்தனூருடையார் ஈசான தேவர் என்று ஒருவரைப்பற்றிக் கூறுகிறது. அவர் திருவிடைமருதில் மாளிகை மடத்து முதலியார் சந்தானத்தைச் சேர்ந்தவர் என்று அறிய வருகிறது.

### யோகிருந்த பரமேசரி :

திருபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டானுடைய 22-ஆம் ஆண்டுக் கல்வெட்டு பிடாரி யோகிருந்தபரமேசுவரி கோயில் 4-ஆவது பிராகாரத்தில் இருப்பதாக விவரிக்கிறது (307 of 1907). அக்கோயிலுக்கு நிலதானம் அளிக்கப் பெற்றது.

### சம்பந்தரும் சுந்தரரும் :

மேற்கண்ட அரசனது 21-ஆவது ஆண்டில் உய்யக் கொண்டான் வளநாட்டு இருமரபும் தூய பெருமாள் சதுர்வேதிமங்கலத்து நிலம் இறையிலியாக்கப்பட்டு ஆளுடைய பிள்ளையார்க்கும் ஆளுடைய நம்பிக்கும் வழிபாடு செய்ய அளிக்கப் பெற்றது. (309 of 1907).

### முடிவுரை :

இத்திருக்கோயிலில் பெரும்பாலும் சோழர் கல்வெட்டுக்களே உள்ளன. பாண்டியர் கல்வெட்டுக்களும் விசயநகர அரசர் கல்வெட்டுக்களும் ஓரிரண்டே உள்ளன. மூலபாடம் முழுவதும் அச்சிடப் பெறுதவை. அச்சிடப்பெறின் இன்னும் பல செய்திகள் வெளியாகக் கூடும்.

# அட்ட பந்தனம்

[திரு சா. கணேசன், கம்பன் கழகம், காரைக்குடி]

திருக்கோயில்களில் கடவுண் மங்கலம் (பிரதிஷ்டை) செய்யப்பெறும் கல்லால் ஆன தெய்வப் படிமங்கள் ஆடாமல் நிலைபெற, இருப்பிடம் (பீடம்), படிமத்தின் அடிப்பகுதி இரண்டையும் பொருத்திப் படியச் செய்யும் ஒரு கூட்டுக் கட்டுப் பொருளை அட்ட பந்தனம் என்பர். இப்பொருள் ஓர் அருமையான படைப்பு; அற்புதமான கண்டுபிடிப்பு. எட்டுப் பண்டங்களின் கலவையானதாலும், இருப்பிடத்தையும், தெய்வப் படிமத்தையும் இணைத்துப் பிணைப்பதாலும் இது 'அட்ட பந்தனம்' எனப் பெயர் பெறுவதாயிற்று.

அட்டபந்தன மருந்தில் கலக்கும் பொருள்கள் :—

1. கொம்பரக்கு 2. சுக்கான் தூள்
3. குங்கிலியம் 4. கற்காவி
5. செம்பஞ்சு 6. சாதிலிங்கம்
7. தேன் மெழுகு 8. எருமை வெண்ணெய்

ஆகிய எட்டுமே.

இவற்றை எல்லாம் கலந்து செய்யும் முறை இருவகையாகும். ஒன்று இடிமுறை; மற்றது காய்ச்சுமுறை. காய்ச்சுமுறை மிக விரைவாக ஆகிவிடும். ஆனால் காய்ச்சு மருந்து சார்த்தியதை அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டால் அகற்றல் கிட்டத்தட்ட இயலாது. வலிந்து செயற்படும் பொழுது சிலையுருவிற்குச் சேதம் விளையவும் கூடும். ஆனதால் மிகப் பெரும்பாலும் இடிமுறையை மேற்கொள்ளலே நன்று.

மேலே சொன்ன பண்டங்களை நன்கு சோதித்து வாங்கவேண்டும். பின்னர், தூசு, துப்பட்டை முதலிய களைந்து தூய்மை செய்ய வேண்டும். அதன் பின்னர் அளவுப்படி கலக்க வேண்டும். கலந்தபின் இடிக்க வேண்டும்.

1. **கொம்பரக்கு:** இது அவலரக்கு அல்ல. மரப்பட்டையுடன் ஒட்டிக்கொண்டிருக்கும். இது தான் தூய்மையானது; இயற்கையானது; கலப்பற்றது. இதை வாங்கிப் பொடித்து மரப்பட்டை முதலியவற்றை நீக்கிச் சுத்தமாக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

2. **சுக்கான் தூள்:** சுக்கானில் பல நிறமும் இருவகையும் உண்டு. வெள்ளை நிறம் நன்று; கபில நிறம் கொள்ளலாம்; கருமை நிறம் கூடாது. இதைக் கொண்டு வந்ததும் முதலில் சிறிது சுக்கானைத் தூளாக்கி, அடுப்பில் காயும் இரும்புச் சட்டியிலிட்டு வறுத்துப் பார்க்க வேண்டும். படபட என்று (உப்பைப் போல) வெடித்தால், அவ்வகைச் சுக்கான் கூடவே கூடாது. ரவை, மணல் போல வெடிக்காமல் இருந்தால் அவ்வகைச் சுக்கான்தான் உகந்தது.

3. **குங்கிலியம்:** துண்டுத்துகள், தூசி இல்லாமல் பொறுக்கி எடுத்துப் பொடித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

4. **கற்காவி:** இஃது அழுக்குச் சிவப்பு நிறமாகக் கட்டியாய் இருக்கும். பூங்காவி என்பதல்ல இது. கடைகளில் காவித்தூள் என்று பலவகைக் கலப்படங்கள் உண்டு. அவற்றை வாங்கக்கூடாது. கட்டிகட்டியாய் இருக்கும் கற்காவியையே வாங்கி, மேலே படிந்துள்ள தூசிகளைப் புடைத்துப் போக்கிவிட்டு, இடித்துப் பொடியாக்கி வைத்துக்கொள்ள வேண்டும்.

5. **செம்பஞ்சு:** இஃது இயற்கையாகவே வாதாம்கொட்டை நிறமுடையது. பிகார்ப் பக்கத்திலிருந்து வருவது. 'கோத்தி' என்று பெயர். இதுதான் உகந்தது. சிவப்புச் சாயம் ஏற்றி அடை அடையாய்த் தட்டி வைத்துக்கொண்டு அதுதான் செம்பஞ்சு என்று ஏமாற்றுவோரும் ஏமாறுவோரும் மிக அதிகம். 'கோத்தி' பஞ்சு கதர்க்கடைகளில் சொல்லி வரவழைக்கச் செய்யலாம். இதையும் சருகு, சொத்தை, காம்பு முதலியன இல்லாமல் பழுது நீக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

6. **சாதிலிங்கம்:** இதில் பலவகை உண்டு. உலாந்தாவிலிருந்து வருவதுதான் தரத்தால் உயர்ந்தது. கலவைப் பண்டம் எட்டிலும் விலை மிக்கது சாதிலிங்கமே. அட்டபந்தனத்தின் முக்கியமான பொருள் இது. விலை மிகுதியை எண்ணி அளவைக் குறைப்பதும், தரமற்ற மலிவுச் சரக்கை வாங்குவதும் இன்று மலிந்து காணப்படுகின்றன. அப்படிச் செய்வது முறை கேடாகும். இஃது இரும்பைப் போலக் கனமிக்க பண்டமாகும். இதைப் பொடி செய்தல் எளிது. இதையும் நன்கு பொடித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

7. **தேன்மெழுகு:** இதில் இருவகை உண்டு.

ஒன்று மஞ்சள் நிறமுள்ளது. அதை மஞ்சண மெழுகு என்பர். மற்றொன்று வெண்மை நிற மாக இருக்கும். மஞ்சண மெழுகில் தேன் கலந்திருக்கும். வெண் மெழுகில் தேன் இல்லை. இதுதான் உகந்தது. வெண் மெழுகு என்று சில இடங்களில் மெழுகுவர்த்திக் குழம்பை ஆறவைத்து ஏமாற்றுவார்கள். வாயில் சிறிது கிள்ளிப் போட்டுச் சுவைத்துப் பார்த்தால் உண்மை புலப்பட்டுவிடும்.

8. எருமை வெண்ணெய்: பசுவின் வெண்ணெயில் கொழுப்புச் சத்துக் குறைவு. ஆகவே, அது கூடாது. எருமை வெண்ணெய்தான் உகந்தது. இதிலும் சிறிதும் நீர்ச்சத்தின்றி முழுதும் அகற்றப்பட வேண்டும். நெருப்பு, வெயில், வேறுவகை வெம்மை பயன்படுத்தப்பட முடியாதவை. அவற்றால் வெண்ணெய் உருகி விடும். ஆனதால் புதிய மண்பானையை எடுத்துப் பானைக்கு ஒரு வீசை வெண்ணெயைப் புறத்தில் கால் அங்குலக் கனமாக அப்பி வெம்மை தாக்காத குளிர்ந்த, இருண்ட அறையில் இரண்டல்லது மூன்று நாட்கள் வாய் கீழாகப் பானையைக் கவிழ்த்து வைத்திருக்க வேண்டும். பானை வெண்ணெயில் உள்ள நீர்ச்சத்து முழுவதையும் உறிஞ்சிக்கொள்ள, வெண்ணெய் பக்குவமாய் ஆகிவிடும். தேவைக்கேற்பப் பானைகளின் எண்ணிக்கையைக் கூட்டிக்கொள்ள வேண்டும்.

எல்லாப் பண்டங்களும் ஆயத்தமான பிறகு மர உரலில் இடிக்க வேண்டும். கல்லுரல் கூடாது. ஒவ்வோர் உருண்டைக்கும் குறிப்பிட்ட அளவாக ஏழு பண்டங்களையும் உரலில் இட்டுத் தேவைக்கு ஏற்ப வெண்ணெயைச் சிறிது சிறிதாகச் சேர்த்து ஒவ்வோர் உருண்டையையும் சுமார் அரை மணி நேரம் இடித்துப் பின்னர் உரலிலிருந்து எடுத்து உருட்டித் தலையில் ஆணிக் கொண்டையால் ஒரு குத்துக் குத்தி வைத்துக்கொள்ள வேண்டும். முதல் இடி முடிந்ததும் ஒரு குத்து. இரண்டாம் முறை இடித்தபின் இரண்டு குத்து. இப்படி எட்டு முறை இடிக்க வேண்டும். ஓர் இடிக்கும் அடுத்த இடிக்கும் இடையில் குறைந்தது இரண்டு நாள் இடைவெளி இருக்க வேண்டும்.

இனி அளவைப் பார்ப்போம். ஒவ்வோர் உருண்டைக்கும்:

| | | |
|---|---|---|
| சுக்கான் தூள் | ... ... | $25\frac{1}{2}$ தோலா |
| குங்கிலியம் | ... ... | 9 ,, |
| கற்காவி | ... ... | $7\frac{1}{2}$ ,, |
| இலிங்கம் | ... ... | $7\frac{1}{2}$ ,, |
| அரக்கு | ... ... | $3\frac{3}{4}$ ,, |
| மெழுகு | ... ... | $3\frac{3}{4}$ ,, |
| செம்பஞ்சு | ... ... | 1 ,, |
| எருமை வெண்ணெய் | ... | $7\frac{1}{2}$ ,, |

(இஃது எட்டு இடிக்கும் சேர்த்துள்ள உத்தேச அளவு. சிறிது கூடவும் ஆகலாம்)

இவற்றை எல்லாம் மர உரலில் ஒவ்வொரு சரக்காக இட்டு ஒன்றோடு ஒன்று கலந்து ஒன்று சேரும்படி இடிக்க வேண்டும். முதல் ஆறு பொருள்களும் செமண்டு, சுண்ணாம்பு, மணல் போன்றவை. ஏழாவதாக உள்ள பஞ்சு கம்பிவலை போன்றது. வெண்ணெய்தான் இந்தக் காங்கிரீட்டிற்கு நீர் போன்றது.

இந்த மருந்து கலந்து இடிப்பதில் பண்டத் தூய்மை, பண்டங்களின் சேர்மான அளவு, இடிக்கும் கால அளவு மூன்றும் மிக முக்கியம். அத்துடன் இடிக்கின்றவர்களின் உடல் தூய்மை, மனத்தூய்மை முதலியன மிக மிக முக்கியம். இடிக்கும்பொழுது இடிக்கும் ஆட்கள் ஆலயத்திற்கு ஏற்ப, "சிவ-சிவ" அல்லது "நாராயணா" அல்லது "வேல் வேல் முருகா" என்பன போன்ற இறைவன் திருப்பேர்களை உச்சரித்துக் சொண்டே இடிக்க வேண்டும். இப்படிச் செய்த அட்டபந்தன மருந்து சார்த்திக் குடநீராட்டுச் செய்த திருக்கோயில்களில் அம்மருந்து எவ்விதக் குறைபாடும் நேராது, மிக நீண்ட நாட்களாய் இலங்கி வருதலைக் கண்கூடாகக் காண முடிகிறது.

எனவே, இடிக்கப் புகுமுன் இடிப்போர்களைக் குளிக்கச் செய்து, திருநீறு முதலானவற்றை அணிந்துகொண்டு விநாயகர் வணக்கம் செய்துகொண்டபின் ஒவ்வொரு குத்துக்கும் "சிவ சிவ" போன்ற நாமங்களைச் சொல்லிக்கொண்டே இடிக்கச் செய்ய வேண்டும் என்பது எளியேன் ஏற்பாடு. இவற்றில் பெரும்பாலோர் போதிய அக்கறை காட்டுவதில்லை. வாணவேடிக்கை, பந்தல் அலங்காரம், யாகசாலைச் சோடனை போன்றவற்றில் ஆயிரம் ஆயிரமாகப் பொருள் விரயம் செய்பவர்கள் இன்றியமையாத அட்டபந்தன மருந்தைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை. யார் யாரோ செய்யும் செங்கல் தூள் உருண்டைகளை ரூ. 3 அல்லது 4 கொடுத்து வாங்கிவந்து எப்படியோ வெண்ணெய்ப் பலத்தால் குழைத்து அப்பி விட்டுக் 'கும்பாபிஷேகம்' என்ற பெயரில் பல்லாயிரம் ரூபாய்களை விரயம் செய்வதை எண்ணி வருந்தாதிருக்க முடியவில்லை. இதற்குக் காரணம் குடநீராட்டு விழாவின் உண்மைத் தத்துவத்தையும், அதன் இன்றியமையாத துறைகளையும் அறியாமையே என்னலாம்.

என்னைக் கேட்டால் அட்டபந்தன மருந்து தான் அனைத்திலும் தலையானதென்பேன். இதில் சிக்கனம் அல்லது அலட்சியம் காட்டுபவர்களை ஆத்திகர் என எங்ஙனம் கூறமுடியும்?

மேலே கூறிய முறை இருப்பிடத்தையும் படிமத்தையும் இணைத்துப் பிணைப்பதற்குச் செய்வதாகும். இருப்பிடத்தையும், துணையிருப் பிடத்தையும் (பீடத்தையும், உப பீடத்தையும்) இசைப்பதற்குத் திரிபந்தனம் என்னும் முக் கூட்டுப் பொருளே உகந்தது. இதற்கு வேண்டி யவை: சுக்கான் தூள், சுத்தம் செய்த சர்க்கரை, முற்றக் கனிந்த பேயன்பழம் ஆகிய மூன்றுமே. சுக்கானைச் சோதித்து வெடி சுக் கான் அல்லாத நற்சுக்கான் கற்களை நன்கு பொடித்துப்பெருஞ்சல்லடையாகச் சலித்து அதில் வேண்டிய அளவை எடுத்து வாயகன்ற மண் அல்லது களிப்பேருத ஒரு பாத்திரத்தில் இட்டுச் சிறிது சிறிதாகச் சர்க்கரையையும், தோல் கறுத்துக் கிட்டதட்ட அழுகியது போலத் தோன்றும் பேயன் வாழைக்கனியையும் சேர்த் துப் பிசைந்துகொண்டே வரும்பொழுது கைதாங்காத அளவு சூடு வந்ததும் கையை எடுத்துவிட்டு மத்து முதலிய மரக்கருவியால் நன்கு குழப்பி மத்திக்க வேண்டும். கூழ்போல ஆனதும் எடுத்து இரு கற்களுக்கும் இடையில் அரைக்கால் அங்குல அளவு வைத்துக் கற்களை முறைப்படி ஒன்றின்மேல் ஒன்ருய்ப் படிய வைத்துவிடவேண்டும். கூட்டுமுறை செம்மை யாக அமைந்துவிட்டால் பிடிமானம் உறுதியாக இருக்கும்.

மெய்யான ஈடுபாடும் தெய்வ பக்தியும் உள்ள வர்களை எல்லாம் தொழுது வேண்டுகிறேன், நல்ல முறையில் மேலே கண்டவண்ணம் ஆக்கித் தெய்வத் திருப்படிமத்திற்கு மருந்து சார்த்த வேண்டுமென்று. அன்றேல் கண்ட வற்றை 'அட்டபந்தனம்' என்ற பெயரால் சார்த்துவதை விட 'டால்மியாபந்தனம்' செய்துவிடுவது மேலாகும். 'டால்மியா பந்தனம் என்ருல் என்ன?' என்று கேட்கிறீர் கள். செமெண்டுக் கலவையைத்தான் இப்படிப் பெயரிட்டுக் கூறுகிறேன். சரிதானே?

"கொம்பரக்குச் சுக்கான்தூள், குங்கிலியம், கற்காவி,
செம்பஞ்சு, சாதிலிங்கம், தேன்மெழுகு—தம்பழுது
நீக்கி எருமைவெண் ணெய்கூட்டி, நன்கிடித்து,
ஆக்கல்அட்ட பந்தனம் ஆம்."

"சுக்கான்தூள், சர்க்கரை, தொல்பேயன் நற்கனியும்
ஒக்கக் கலந்தமைத்தல் உற்றதிரி பந்தனம்ஆம்."

# கும்பாபிஷேக பலன்

[சிவாகம ப்ரவீணர் சிவத்திரு க. சுவாமிநாத குருக்கள், திருவாவடுதுறை]

ஸ்ரீ பரமேசுவரர் என்னும் பெயரை யதார்த்த மாக உடைய ஸ்ரீ சதாசிவப் பெருமான் இவ்வுலகப் படைப்பின்போதே அதிலுள்ள பிராணிகளுக்கு அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்களை அடையச் செய்யவே காமிகம் முதலிய சிவாகமங்களையும், ரிக்வேதம், யஜுர் வேதம், ஸாம வேதம், அதர்வ வேதம் என்னும் நான்கு வேதங்களையும் தமது மேல், கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு நோக்கிய முகங்களினின்றும் அருளிச் செய்தார். ஆதலால், இந்தச் சிவாகம வேதங்கள் ஸ்ரீ பரமேசுவர ருடைய திருவாக்காகும்.

ஸ்ரீ சதாசிவப் பெருமானைக் குறித்துச் செய்யும் தர்மம் சிவதர்மம் என்றும், இந்தத் தர்மங்களைக் காட்டிலும் உயர்ந்த தர்மம் இருந்ததுமில்லை, உண்டாகப் போவதுமில்லை, ஆதலால் இது பதி தர்மமென்றும் அந்த நூல்கள் கூறுகின்றன. சாலோகம் தேவரது உலகையடைதல்; சாமீபம் தேவரது அருகிலேயே இருத்தல்; சாரூப்யம் சிவகணங்களாக இருக்குந் தன்மை; சிவதருமம் இவற்றையும், சிவனது திருவடி நிழலை அடைத லெனும் பரமுத்தியையுங் கொடுக்கும். ஏனை யவை பசு தர்மங்கள். அவை பல நுகர்ச்சி யின் இறுதியில் இப்புவியையே அடையச் செய்யும்.

பதி தர்மங்களுள் சிவாலயப் பிரதிஷ்டை மிக மிக முக்கியம். ஆதலாலே, இதைத் தேவர்கள், ரிஷிகள் இவர்களுடன் அரசர்கள், செல்வர் களான புண்ணியசீலர்கள் முறைப்படி செய்து, நித்தியப்படி, ஏறுபடி, பிரார்த்தனை என்ற பூஜை

களை வகுத்துள்ளார்கள். இப்பிரதிட்டையும் அருவுருவான சிவலிங்கத்திற்குச் செய்து வைப்பது மிக முக்கியமானது. ஏனெனில், சிவலிங்கத்தில் எல்லாத் தேவர்களும், கங்காதி தீர்த்தங்கள் யாவும் அடங்கும். சிவலிங்கத்தின் மேல் பாகம் ருத்திராம்சம்; நடுப் பாகம் விஷ்ணுவின் அம்சம்; கீழ்ப் பாகம் பிரம்மாவின் அம்சம். சிவாலயங்களில் உள்ள பரிவார தேவர்களைப் போல ஏனைய தேவர் யாருக்குமே இல்லை. சிவலிங்கங்களில் பூஜை முதலியவை கூடினாலும், குறைந்தாலும், பூர்ணமான பூஜையாகவே ஆகும். நம் முன்னோர்கள் சிவலிங்கம் மணல், கருங்கல், தங்கம், வெள்ளி, ரஸங்களது சேர்க்கை - இவற்றால் செய்து ஆலயங்களில் சிவாகம விதி வழுவாது பிரதிஷ்டை செய்து பூசித்தனர். சிவலிங்கப் பிரதிஷ்டையை விதி வழுவாது செய்தவர்கள், அவர்களுக்கு உறு துணையாக இருந்தவர்கள், செய்யத் தூண்டிய வர்கள், தரிசித்தவர்கள் யாவரும், சிவலிங்க பீடங்களிலும், யாகசாலை, அதிலுள்ள வேதிகைகள், குண்டங்கள் இவைகளிலும் எவ்வளவு பரமாணுத் தூளிகள் உள்ளனவோ அவ்வளவு காலம் போகபோக்கியங்களை அநுபவிப்பார்கள். தம் தலைமுறை, தாய் வம்சத்தினர் பத்துத் தலைமுறை, தகப்பன் வம்சத்தவர் பத்துத் தலைமுறை ஆக இருபத்தொரு தலைமுறையினரும் சிவலோகத்தில் பெரும் போகபோக்கியங்களை அநுபவித்து, முடிவில் ஸ்ரீ சிவபெருமான் திருவடி நிழலை அடைவார்கள்.

வியாதி நீக்கத்தைச் சூரியனிடமிருந்தும், பொருள்களைச் சிவாக்கினி வளர்த்து ஹோமஞ் செய்வதிலிருந்தும், ஸம்ஸாரபந்த நீக்கத்தை விஷ்ணுவிடமிருந்தும், சிவஞானத்தை ஸ்ரீ ஸதாசிவப்பெருமானிடமிருந்தும் அடையலாம் என்பது நூல்களின் துணிபு.

இந்தத் தர்மங்களை ஒருவர் புதிதாகச் செய்வதைக் காட்டிலும் முன்னோர்கள் செய்தவற்றைக் காப்பாற்றுவது இரண்டு பங்கு புண்ணியங்களைத் தரும்; தாம் செய்யும் புண்ணியங்களால் சுவர்க்கவாஸமும், முன்னோர்கள் செய்த தர்மங்களைக் காப்பாற்றுவதால் மீளாத சாயுஜ்யமும் பெறுவார்கள். ஒருவன் முன்னோர்கள் செய்த தர்மங்களை அழிப்பதால், அவன் செய்த தருமங்களும் வீணாகும். இப்படியே, பழைய ஆலயத்தையும் பின்ன பிம்பங்களையும் விதிப்படி திருத்தியமைத்து மகா கும்பாபிஷேகம் செய்வித்தலால் நான்கு மடங்கு புண்ணியம் கிடைக்கும். ஸ்ரீ சிவபெருமானுக்கு உகந்த சிவாலயம் கட்டுவதற்கு முன் இளங் கோவிலைக் கட்டி, அதனுள் சிவலிங்கப் பெருமானை முக்கிய பரிவாரங்களுடன் விதிப்படிப் பிரதிஷ்டை செய்து, நித்தியப்படி பிரார்த்தனை பூஜைகளைச் செய்விக்க வேண்டும். அவ் விளங்கோவிலிலுள்ள மூர்த்திகளுடன், 16, 32 பரிவார மூர்த்திகளையும் செய்வனே கட்டப்பட்ட ஆலயத்தில் விதிப்படியான யாகசாலாதிவாஸனத்துடன் கும்பாபிஷேகமுஞ் செய்விக்கவேண்டும். பிறகு நித்தியப்படி, ஏறுபடி பிரார்த்தனை, பூஜை உத்ஸவங்களைச் செய்விக்க வேண்டும். இவ்வாறு கட்டப்பெற்ற ஆலயம் காலங் கடந்ததால் ஜீர்ணமானபோது, முதலில் சொன்னபடி சிறு ஆலயத்தில் அங்குள்ள சிவலிங்கத்தை அந்த லிங்க அளவுக்குத் தக்கபடியாக யாகயோக்கியமான மரங்களில் செய்து யாகாதிவாஸனத்துடன் கும்பாபிஷேகஞ் செய்வித்து, சக்திக்குத் தக்கபடி நித்தியம், ஏறுபடி, பிரார்த்தனா பூஜைகளையும் உத்ஸவங்களையுஞ் செய்வித்தல் வேண்டும். இது தருணாலயப் பிரதிஷ்டையாகும்.

பின்பு ஜீர்ணமான ஆலயத்தைச் செப்பனிட்டு முன்போல யாகசாலாதி வாஸனத்துடன் அவ் வாலயத்தில் சேர்த்து நித்தியப்படி முதலிய பூஜைகளையும் உத்ஸவங்களையுஞ் செய்விக்க வேண்டும். இந்த நான்கு செயல்களையும் ஒரு புருஷனின் வாழ்நாளுக்குள் செய்ய முடியாது. ஆதலால், ஜீர்ணாலயச் சீர்திருத்தத்துடன் செய்விப்பதில் நான்கு மடங்கு முன் கூறப்பட்ட புண்ணியத்தைப் பெறுவார்கள்.

சிவலிங்கப் பெருமானின் பிரதிஷ்டையைப் போல ஏனைய சிவபிம்பங்களான சந்திரசேகரர், ஸோமாஸ்கந்தர், நடராஜர், சிவபரிவார தேவர்களான – அம்பிகை – விநாயகர் – சுப்பிரமணியர் – பைரவர் முதலிய தேவர்களின் பிரதிஷ்டையால் அந்த அந்தத் தேவர்களது உலகை அடைந்து அவர்களுடைய உருவம் பெற்று வாழ்ந்து பின்பு சிவபெருமானுடைய திருவடி நிழலையும் அடைவார்கள்.

# மாதவச் சிவஞான யோகிகள்

[திருவாவடுதுறை ஆதீன வித்துவான், சித்தாந்தக் கலைச்செல்வர்
திரு க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ., எல்.டி.]

நீரில் வளரும் மலரின் உயர்ச்சி நீரளவே ஆதல் போல், மக்களது உள்ளத்து உயர்ச்சி அவர் கற்றுணரும் கலையின் அளவே ஆகும். ஒரு நாட்டு மக்களின் உணர்வின் பெருக்கமும், அறிவின் திறனும், செய்வினைத் தூய்மையும் அவர் இயல்பாகப் பயில்கின்ற தாய்மொழியின் இலக்கிய வளத்திற்கும், இலக்கண வரம்பிற்கும் ஏற்றபடி அமையும் என்பது யாவர்க்கும் ஒப்ப முடிந்த துணிபு. "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்றார் தெய்வப் புலவர்; அவ்வறிவு தாய்மொழிப் பயிற்சி வளர வளரும்; குறையக் குறையும். இதனால், ஒரு மொழி வளமும் செப்பமும் பெறுமாறு அதன்கண் கருத்துநலன் வாய்ந்த செய்யுள் இயற்றும் நல்லிசைப் புலவரும், பல தலைப்பட்ட மக்களுணர்வை ஒழுங்குபடுத்தவல்ல சொல்லழகும் பொருளாழமும் உள்ள பேரிலக்கியங்கள் இயற்றும் மாக்கவிகளும், அறிவுத் திறனை வளர்க்கும் முறையில் அளவை நெறியால் உரைகள் இயற்றும் உரையாசிரியர்களும் பெரிதும் போற்றுதலுக்கு உரியவர்கள் என்பது விளங்கும்.

இக்கருத்துப்பற்றி நோக்கின், மாதவச் சிவஞான யோகிகள், தம் தூய துறவு நிலையாலும், தவ ஒழுக்கத்தாலும், தமிழ் ஆக்கப் பணியாலும் தமிழ் நன்மக்கள் உள்ளங்களில் குலதெய்வமாக வீற்றிருக்கத்தக்கவர் என்பது விளங்கும். இச் செம்புலச் செல்வர், தென்மொழி வடமொழிப் பயிற்சியின் பயனாக, தமிழ்மொழியில் ஆக்கி அளித்துள்ள பாட்டும் உரையுமாகிய இலக்கிய, இலக்கண, அளவை, மரபு நூல்கள் உயர்தனிச் செம்மையும், பொருள் ஆழமும், செறிவும், குற்றமின்மையும் ஒருங்கே பெற்றுத் திகழ்வன. அவை, அளவாலும் முன்மாதிரி அமைவாலும் பலதுறைப் புலமை தேற்றும் மாண்பாலும், ஈடும் எடுப்பும் இன்றிக் குன்றின்மேலிட்ட விளக்கம் எனத் திகழ்வன. ஆற்றின் அளவறிந்து கற்பார்க்கும், மொழிப்பயனும் மெய்ப்பொருள் துணிபு காணலுறுவார்க்கும், அவை என்றென்றும் இன்றியமையாச் சிறப்பினவாய் நிலைபெறுவன. அரிய கற்று, ஆசற்று, மெய்ப்பொருள் கண்ட இவ்வாசிரியருடைய நல்லிசைப் புலமையும், மலைவுதீர்க்கும் தெளிவுணர்வும், பலதுறைப் படைப்பின் சிறப்பும், தலையாய அறிவினர் எல்லாரானும் போற்றிப் பாராட்டப் பெறுவன; இவரை, தென்மொழிக் கடலும் வடமொழிக் கடலும் நிலைகண்டுணர்ந்த மாதவச் சிவஞான யோகிகள் எனவும், திராவிட மாபாடிய கர்த்தர் எனவும், உளங்குளிரப் போற்றிக் குறித்தல் அறிஞர் பெருமக்களிடை மரபாக உள்ளது.

இத்துணைச் சிறப்பெல்லாம், இம் முனிவர் பெருமானை உலகத்தோடும் செந்தமிழ் மொழியோடும் தொடர்புபடுத்திக் காணும் காட்சிபற்றி, இவர்க்கு உளதாகும் பொதுவியல்பே ஆகும்; மற்றிவர்தம் உண்மை இயல்பாவது, பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் கண்ட சிவானுபூதிச் செல்வர் என்னுந் தொடரால் குறிக்கத்தகுவது. இவர்தம் வரலாற்றிலும் படைப்புக்கள் சிலவற்றிலும் சிலவற்றை நினைவு கூர்ந்து அநுபவிப்போம்:

சிவஞானயோகிகள், இருநூறு ஆண்டுகளுக்கு முன், தென்பாண்டி நாட்டிலே, பொதியமலைச் சாரலில் உள்ள விக்கிரமசிங்கபுரத்திலே, பரம்பரைச் சைவ வேளாண் குலத்திலே, ஏழு தலைமுறை அளவும் அருட்புலமை நிரம்பிய மகப்பேறு குறித்து அகத்திய முனிவர்பால் வரம் பெற்ற நற்றவக்குடியிலே, ஆனந்தக்கூத்தர், மயிலம்மை என்னும் சிவநேயச் செல்வர்களுக்கு அருந்தவ மகவாய் அவதரித்தவர். முக்களாலிங்கர் என்னும் பிள்ளைத் திருநாமம் உடையவராய் வளர்ந்து, கல்வி பயில்வார் ஆயினர். இவர், இளம்பருவத்திலே, திருந்திய கல்வியும், பொருந்திய நுண்மாண் நுழைபுலனும், பாடுந்திறனும், அறன் அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மையை நயக்கும் இயற்கைப் பண்பும் உடையவராய் விளங்கினர்.

ஒருநாள் பள்ளியிலிருந்து மனைக்கு ஏகும் வழியில், திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த முனிவர் சிலர் எதிர்வரக் கண்டார். அவர்களைத் தொழுது வரவேற்று மனைக்குக் கொண்டு சென்று, தம் அன்னையாரால் திரு

வமுது செய்வித்து, அவர்தம் வாழ்த்துப் பெற்ருர். பின்வந்த தந்தையார் தம் மகனரது அருங்குணத்தை நினைந்து மகிழ்ந்து, அம்முனிவர்களைச் சென்று கண்டு தொழுதார். அந்நிலையில், உடனிருந்த முக்களாலிங்கர், பெற்ருேர்களைத் துறந்து, சைவ முனிவர்கள் தமராகச் சற்குருவை நாடிச் சென்ருர். இந்நிகழ்ச்சி இவர் முன்னைத் தவத்தால் தோன்றிய அருளாளர் என்பதைத் தேற்றுகின்றதன்ருே! இப்படி ஒப்பதோர் அற்புதம் யாண்டு உளது?

தாம் அழைத்துச் சென்ற தவமுனிவர்களை வரவேற்றுத் திருவமுது செய்வித்த அருமை அன்னையை முக்களாலிங்கர் வியந்து போற்றிய பாட்டு,

"அருந்ததிஎன் அம்மை அடியவர்கட் கென்றும்
திருந்த அமுதளிக்குஞ் செல்வி—பொருந்தவே
ஆனந்தக் கூத்தர் அகமகிழத் தொண்டுசெயும்
மானந் தவாத மயில்"

என்பது. இது பெற்ருேர் மாண்புடன் ஆசிரியர் மாண்பையும் பிரதிபலித்தல் காண்க.

ஆதீன முனிவர்களுடன் சென்ற முக்களாலிங்கர், சுசீந்திரத்தில், சின்னபட்டத்து ஞானதேசிகராய் எழுந்தருளியிருந்த (பேரூர்) வேலப்ப தேசிகரால் ஆட்கொள்ளப் பெற்ருர்; அவர்பால், சமய விசேட தீக்கைகளும் சைவத் துறவும் பெற்று, மெய்யறிவு நூல்கள் பலவும் கற்றுணர்வாராயினர். சிலகாலஞ் சென்றபின் ஞானதேசிகர், முக்களாலிங்கருடைய மெய்யறிவுத் திறனையும், நல்லிசைப் புலமையினையும், பக்குவ முதிர்ச்சியினையுங் கண்டு, அவருக்கு நிருவாண தீக்கை செய்வித்துச் சிவஞானம் என்னும் தீக்கைத் திருப்பெயர் கொடுத்தார். மேலும், தலையாய பிரமாண நூல்களாகிய மெய்கண்ட ஞான நூல்களையும், அவற்றின் அநுபவப் பொருள்நிலை மரபு உணர்த்தும் கிளைஞான நூல்களாகிய பண்டார சாத்திரங்களையும் முறையாகப் போதித்து, 'ஞானக் கண்ணினிற் சிந்தை நாடு' தலாகிய வாய்ப்பசீ சாதிக்குமாற்றை, மறைமொழியின் வைத்து உணர்த்தியருளினர். அதுமுதல் முக்களாலிங்கர், ஆதீனப் பொது மரபின்படி சிவஞானத் தம்பிரான் எனவும், ஞானயோக ஒழுக்க நெறிச் சிறப்புப்பற்றிச் சிவஞான யோகிகள் எனவும் வழங்கப் பெறுவார் ஆயினர்.

அக்காலத்தில், ஆதீனத் தலைமைத்தானமாகிய திருவாவடுதுறையில், ஞானபீடத்தில் எழுந்தருளியிருந்தவர் வேலப்பதேசிகர் ஆவர்; இவர் ஆதீனப் பிரதிட்டாசாரியர் குரு 'நமச்சிவாய மூர்த்திகள் முதலாக, அவர் வழியில் பத்தாவது ஆசிரியர் ஆவர். இவர் காலத்திலேயே, சிவஞான யோகிகளுக்கு ஞானசிரியராய் இருந்த வேலப்ப தேசிகர், பேரூரில், சிவபிரான் திருவடி கூடினர். அதனுல், வேருெருவர், வேலப்பத் தம்பிரான் என்பவர், இரண்டாம் ஆசிரியராகப் பட்டஞ் சூட்டப்பெற்றனர். இவர் பத்தாம் குரு முதல்வருக்குப்பின், பீடாதிபதி ஆகி, பதினேன்ருங் குரு முதல்வர், பின் வேலப்ப தேசிகர் என வழங்கப்பட்டார். இவர் காலத்தில் இரண்டாம் ஆசிரியராக இருந்த திருச்சிற்றம்பல தேசிகர் இவருக்குப்பின் குரு முதல்வராயிருந்தார். மாதவச் சிவஞான சுவாமிகள் இக்குரு முதல்வர்கள் மூவர் காலத்திலும், ஆதீனத் திருக்கூட்ட முனிவர்களுள் ஒருவராகவேயிருந்து, கற்பன மேலுங் கற்று, சிவதல யாத்திரையும், சித்தாந்த சைவச் செந்நெறி விளக்கமும், செந்தமிழ் ஆக்கப் பணியும் மேற்கொண்டு, செம்மை பெருகு அருள் நெறிக்கண் ஒழுகி வந்தனர்.

இவர் சிவதல யாத்திரை செய்து தங்கிய இடங்களிலும், தலைமைத்தானத்தில் இருந்த காலத்திலும், உலகம் உண்மை உணர்ந்து உய்தற்பொருட்டுத் தாமாகவும், ஆதீனப் பெரியோர்கள் மாணக்கர் முதலாயினர் வேண்டுகோளுக்காகவும் இயற்றியருளிய நூல்கள் இருபத்தொன்பது கிடைத்துள்ளன; வேறு தனிச் செய்யுள்களும் உள.

இவற்றுள், தமிழ் மக்களுக்கு எழுத்துச் சொல் லிலக்கணங்களைக் குற்றமின்றி, அறிவடிப் படைமேல் உணரும் நெறியைப் புலப்படுத்துவன மூன்று: அவை, தொல்காப்பியப் பாயிர விருத்தி, முதற்சூத்திர விருத்தி, சங்கர நமச்சிவாயப் புலவர் நன்னூல் விருத்தி, உரைத் திருத்தம், இலக்கண விளக்கச் சூருவளி என்பன.

சிற்றிலக்கிய பேரிலக்கியங்களாய் அமைந்தவை பதினெட்டு. அவற்றுள் தலைசிறந்த நூல் காஞ்சிப்புராண முதற்காண்டம். இது மொழி பெயர்ப்பு நூலே ஆயினும், ஆசிரியருடைய குணநலன்களை நன்கினிது பெற்றுத் திகழ்வது; அவர்தம் ஆசற்ற அறிவின் சுவடு பதியப் பெற்றது; கற்போர்க்கு மெய்யுணர்வும், நல்லொழுக்கமும், இன்ப அன்பும் தோற்றுவிப்பது.

இதன்கண், கடவுள் வாழ்த்துச் செய்யுள்களில், ஞானசிரியர் துதியாக உள்ள செய்யுள்:

"எவ்வெவகோட் படுபொருளும் அஞ்செழுத்தின்
அடக்கிஅவற் றியல்பு காட்டி
மெய்வகைஅஞ் சவத்தையினும் நிற்குமுறை
ஓதுமுறை விளங்கத் தேற்றி

அவ்வெழுத்தின் உள்ளீடும் அறிவித்துச்
சிவபோகத் தழுத்தி நாயேன்
செய்வினையும் கைக்கொண்ட வேலப்ப
தேசிகன்றாள் சென்னி சேர்ப்பாம் ''

என்பது.

திருவைந்தெழுத்து, பிரணவ கலைகள் ஐந்தன் பருவடிவாகவும், ஐந்தொழில் செய்யும் சத்தி பேதங்களாகிய ஈசான, பூரணி, ஆர்த்தி, வாமை, மூர்த்தி என்பவற்றை ஐம்பெருமனுக்களோடு ஒப்பக் குறித்து நிற்பனவாகவும் உள்ளவை; மேலும், சகல சாத்திரப் பொருளும் தன் பொருளேயாகத் திரண்டு கூடிய பெரும் பெயர் (மகாவாக்கியம்) ஆகவும் நின்று, சாதகர்களை ஞான நெறிக்கண் உய்ப்பனவாக உள்ளவை. "கருத்தின் பயனும் எழுத்தஞ்சும்'' எனவும், "ஞானமெய்ந் நெறிதான் யார்க்கும் நமச்சிவாயச் சொலாம்'' எனவும் சேக்கிழார் அடிகள் எடுத்தோதியதும், இவற்றின் மூலமாக உள்ள தேவார மறைத் தொடர்களும் கருதத் தக்கவை. இத்துதியின் முன்பகுதி, "ஓதுவார் தமை நன்னெறிக்குய்ப்பது......நமச்சிவாயவே'' என்னும் மறையின் அநுபவப் பொருள், திருவாவடுதுறை ஆதீன ஞானகுரவர்களால், உணர்ந்து போற்றிப் பாதுகாக்கப் பெற்று வந்ததைக் குறிக்கின்றது. முதல்வனுக்குத் தானம் செய்யும் உடல், பொருள், ஆவி மூன்றனுள் பொருள் என்பது உடல்முகந்த வினையே ஆகும் என்பது மரபு. அஃது, "உடல் பொருள் ஆவி மூன்றும் ஞானதீக்கையின் முதல்வனுக்கெனப் பூநீரொடு தானஞ் செய்தளிக்குமிடத்து, பொருள் என்றது, உடம்பு போல் ஒற்றுமை உடைத்தாய்த் தன்னால் நுகரக்கிடந்த உடல் வினையேயன்றி முன்பே தன்னால் துறக்கப்பட்டொழிந்த புறப்பொருள் அன்று'' என ஆசிரியர் தாமே சித்தாந்த மரபு கண்டன கண்டனத்தில் (பிரிவு-48) கூறுதல் பற்றித் தெளியப்படும். நாயேன் செய்வினையும் கைக்கொண்ட என்னும் தொடர் இம்மரபு தேற்றுவதாதல் காண்க. இப்பாட்டின் எஞ்சியுள்ள பகுதி 'பஞ்சாக்கரப் பஃறொடை' கொண்டு ஓர்ந்து உணரத்தக்கது.

" மாயை வாரிய உருக்களும் எம்பிரான் வடிவம்
ஆய வேல்அவை அருள்மய மாகுமற் றதுபோல்
பேய னேன்பிதற் றுரையும்ஏ கம்பர்தம் பெருமைத்
தூய காதையுள் ளுறுதலால் துகளறத் தோன்றும் ''

என்னும் அவையடக்கச் செய்யுள் இறைவன் திருமேனிகள் திருவருளுக்குக் குறியாகக் கொள்ளப்படும் உண்மையை உணர்த்துகின்றது. உவமையில் "அருள்மயமாகும்'' என்றவர் தம் செய்யுளை அங்ஙனம் எடுத்தோதாது "துகளறத் தோன்றும்'' என்றது "பணியுமாம் என்றும் பெருமை'' என்பதற்கு எடுத்துக்காட்டு. சிவன் என்னும் பெயர்க் காரணத்தைப் பின்வருஞ் செய்யுள் உணர்த்துகிறது :

" குறைவிலா மங்கலக் குணத்த னாதலின்
நிறைமலம் அநாதியின் நீங்கி நிற்றலின்
அறைகுவர் சிவன்என அறிவின் மேலவர்;
இறையவன் பெருமையை யாவர் கூறுவார் ''

என வரும். இதன்கண், இறையவன் என்னும் சொல், "இறையாகிய அவன்'' எனவும் பொருள் பட்டு விழுப்பொருள் தந்து இன்புறுத்துவது காண்க.

காஞ்சிப் புராணத்தில் உபநிடத முடிவுகளும், வைதிக கன்மங்களும், சிவாகம விதிகளும் ஒழிவின்றிக் கொடுக்கப்பட்டுள்ளன.

மாணவர் பயின்று தமிழ் அறிவு பெறுவதற்கு உதவும் யமக, திரிபு அந்தாதிகளும், பிள்ளைத் தமிழ் முதலிய பிரபந்தங்களும் ஆசிரியரால் செய்யப் பெற்றுள்ளன.

பஞ்சாக்கரமாலை, அகிலாண்டேசுவரி திருப்பதிகம், திருவேகம்பர் ஆனந்தக் களிப்பு முதலியவை நித்திய தோத்திரமாகக் கொள்ளத் தக்கவை.

ஆசிரியர் தம் ஞானாசிரியருடன் செப்பறைப் பதி சென்று, அங்குள்ள அம்மையை வணங்கிய போது, இயற்றப்பெற்றது அகிலாண்டேசுவரி பதிகம். அது பெரும்பாலும் நூலியற்றத் தொடங்கும் முதற் காலத்தே செய்யப்பட்டது எனக் கொள்ளுதல் தகும். ஆயின், அது, ஞானாசிரியர்பாற் கேட்டுணர்ந்த சைவ சித்தாந்த ஞானத்திரளைப் பதத்துக் கருப்புக் கட்டிகளாக வார்த்து அமைத்தது போல, அருமையில் எளிய அழகுடைத்தாய் உள்ளது. இதில் நான்காவது பாட்டு, உயிரின் வீட்டு நெறிச் செலவை, அதன் தொடக்கம், நடு, ஈறு என்னும் மூன்று பகுதிகளாகப் பிரித்து அவற்றுக்குக் கேவலம், சகலம், சுத்தம் என்னும் மரபுப் பெயர்களைக் கொடுத்து இனிது விளக்குகிறது.

உயிர் தனித்து நிற்பதன்று; ஒரு கொடி கொழுகொம்பைச் சார்வது போல, யாதேனும் ஒரு பொருளைச் சார்ந்தே நிற்கும். முதற்கண் அதற்குச் சார்பாய் அமைந்த பொருள் ஆணவம் எனப்படும் இருள்மலம். இவ்வாணவம் உயிரின் உணருந்தன்மையை முற்றிலும் மறைத்து, அறியாமையில் அழுத்திவிட்டது. இதுவே கேவல நிலை. கேவலம் - தனிமை.

இந்நிலையில் பிணிப்புண்டு துன்புற்ற உயிர்க்கு அப்பிணிப்பு நெகிழ்ந்து அறிவுஞ் செயலும் ஒருபுடை விளங்கும்படி, முதல்வன் அதற்கு உடம்பு, கருவி, உலகம், நுகர்ச்சிப் பொருள் நான்கையும் படைத்துக்கூட்ட, உயிர் அவற்றைச் சார்ந்து, தன்னை வேறு உணராது, அவையேதான் என மயங்கி, இருவினைகளைச் செய்து, அவற்றின் பயனாகிய இன்ப துன்பங்களை நுகர்ந்து வருவதாயிற்று. இங்குக் குறித்த நான்கு பொருளும் மாயையின் காரியம். மாயை யாவது, நித்தமாய், அருவாய், வியாபகமாய், பல்வேறு பொருள்களாகக் கன்மத்தோடு விரவிக் காரியப்படக்கூடிய சடசத்தி (அறிவில்லாத ஆற்றல்). இவ்வாறு மாயை காரியங்களைக் கூடி, மயங்கி அறிந்து, வினைக்கீடாக இறந்தும் பிறந்தும் வரும் நிலை சகலம் எனப்படும். சகலம்—கலையோடு கூடியது. கலை மாயையின் காரியத்துள் முதற்கண் எழும் திரள்: இங்கு மாயையினால் ஆகிய உரு எனக் கொண்டால் போதும். உயிருக்கு முதலில் இருந்த கேவல நிலை, நள் இருளில் உள்ள, அலர விழிக்கும் கண்ணின் நிலை போன்றது; மாயையின் காரியங்கள் நான்கும் விளக்குகள் போன்றவை. விளக்கின் உதவியால் இருளின் வலிமை ஒரு சிறிது கெடுத்து வாழலாம். அது போன்றதே சகல நிலை. ஆயினும், இந்நிலையும் துன்பந்தருவதே ஆகும். "பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்—பற்றி விடாஅ தவர்க்கு" என்பது பொது மறை அன்றோ!

இந்நிலையில், உயிர் ஆணவப் பிணிப்பினின்றும் சிறிது சிறிதாக விடுபட்டுத் தன் உணர்வு மேன்மேலும் நுணுகி விரியப்பெறும். முடிவில், உயிர் தன் இருப்பையும், தலைவன் இருப்பையும் தெளிந்து, பற்றற்றான் பற்றினைப் பற்ற விரும்பும். அதுவே உயிர்க்குப் பக்குவ முதிர்ச்சி. அப்போது, முதல்வன் சற்குருவாய்த் தோன்றி, மாயைப் பற்றை நீக்கி, வல்வினையைச் சுட்டு, இருள் மலத்தை மேலிடாதபடி வலிகொடுத்து, உயிரைத் தன் அருள் ஒளியில் தோய்வித்து, இறவாத இன்ப அன்பை விளைத்து, பேரானந்த வெள்ளமாய்த் தன்னைக் காட்டி, தன்கண் அழுந்தச் செய்து, தன் வண்ணம் ஆக்குவான். இஃது இருளும் மருளும் நீங்கிய அருளின்பநிலை ஆதலின், சுத்த நிலை எனப்படும்.

இக்கருத்தொழுங்கினைத் தெளிவாக, நிரல்படக் கொண்டு உணரவைத்து, இன்பூட்டுகின்றது கீழ்வரும் பாட்டு:

"செம்புறு களிம்பென அநாதிமலம் மூழ்கிஇருள்
சேரும்அலர் விழிஎன்னவே
தெளிவற்ற கேவலத்து அசைவற் றிருந்துமலச்
சேட்டையால் குழவிகுருடர்
தம்பிணியி னுலுற்ற பால்கோலை நோக்கஅவை
தமைஅளிப் பார்என்னநான்
சார்கன்ம மாயையை விரும்பநீ தந்திடச்
சகலனுய்ச் சுழல்கறங்கு
பம்பரம தென்னநீள் பிறவிச் சுழிக்குளே
பட்டுழல் பெரும்பாவியேன்
பாழான மலம்அற்று வினையற்று மாயையின்
பற்றுவிட் டெனையறிந்துன்
அம்பொன்அடி நிழல்சேர்ந் தானந்தம் உண்டு
அதுவாய் இருப்பதென்றே [நான்
அருண்ஞான வாரியே, ராசைமே வியசெல்வ
அகிலாண்டம் என்னும்அரசே"

சோமேசர் முதுமொழி வெண்பா என்னும் நூல் திருக்குறளின் தொகைப் பொருளை உணரவைக்கும் ஒரு பிரபந்தம். திருக்குறளில் உள்ள குறட்பாக்களில், அதிகாரத்திற்கு ஒன்றனைத் தேர்ந்தெடுத்து, பிரபந்த வெண்பாவின் பிற்பகுதியாக வைத்து, அதன் கருத்தை எளிதின் விளக்கும் புராண இதிகாச நிகழ்ச்சி ஒன்றினை உள்ளத்தைப் பிணிக்கும்படி முற்பகுதியாய் அமைத்துப் பாடியது. 133 வெண்பாக்களையும் காப்புச் செய்யுளையும் உடையது. படிப்போர்க்கு உணர்வும், இன்பும், வியப்பும் ஊட்டுவது.

"பல்லவர்கோன் வந்து பணியக் கருணைசெய்தார்
தொல்லைநெறி வாகீசர் சோமேசா—கொல்ல
இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று"

என்பது அதில் வரும் ஒரு பாட்டு. பல்லவர் கோன் - மகேந்திரவன்மன், வாகீசர் - அப்பர். வரலாறு வெளிப்படை. இதன் உரையில், பரிமேலழகர், "இன்னாசெயினும், செய்தானை வெகுளாமை புணரின் (ஒருவருக்கு உண்டாயின்) நன்று" என மொழி மாற்றி உரைத்தார். அவ்வுரையின் சிறப்பின்மையை இப்பாட்டுக் குறிப்பித்தல் அறியத்தக்கது.

"ஆக்கையும் ஆயிரத்தெட் டண்டங்களும் நிலையாத்
தூக்கியழிந் தான்சூரன் சோமேசா—நோக்கியிடின்
நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை"

என்பது மற்றொரு பாட்டு. ஓரோர் காலத்தில் அரசியல் வெற்றி பெறுவார் இதன் தாற்பரியம் உணர்தல் இன்றியமையாதது அன்றோ!

"ஓதாநாள் ஓதுகலை ஒத்திளைத்தான் சீதையென்றான்
சூதாரா வான்மிகி சோமேசா—கோதில்

பணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள் "

என்பது படித்தின்புறத் தக்கது.

தலைவிக்கு இயற்கை வனப்பும் அழகும் உள்ளன; தலைவனைப் பெற்றபோது மேலும் புத்தொளியும் பூரிப்பும் உளவாகின்றன; தலைவனைப் பிரிந்தவுடன், அவன் புணர்ப்பால் வந்த புதுப் பூரிப்பும் ஒளியும்மட்டும் நீங்குவதில்லை; அவை, பழைய வனப்பையும் அழகையுங்கூடச் சேர்த்துக்கொண்டு போய்விடுகின்றன, புதுவெள்ளம் பழைய வெள்ளத்தையுஞ் சேர்த்து அடித்துக் கொண்டு போவதுபோல. இவ்விழப்பு இராமனைப் பிரிந்திருந்த சீதையிடம் காணப்பட்டது. அமாவாசை (சதுர்த்தி, பிரதமை) முதலியவை புதுப்பாடம் ஓதக்கூடாத நாட்கள் எனச் சோதிடஞ் சொல்லும்; அப்படி ஒருவன் ஓதக் கூடாத நாளில் ஓதினால்,புதுக்கல்வி மட்டுமன்றிப் பழைய கல்வியும் பயன்தராது கெடும் என்பர். இதனை உவமையாக வான்மீகி முனிவர் ஆண்டது சிவஞான முனிவர் உள்ளத்தைப் பிணித்துள்ளது; கற்றாரைக் கற்றார்தாமே காமுறுவர்!

நம் முனிவர் பெருமான் எப்பொழுதும் ஆழ்ந்த சிந்தனையிலேயே இருந்துவிடுவதில்லை; நம் போன்ற எளியவர்களைக்கூட நேசித்து மகிழ்வர். காஞ்சிபுரத்தில் இருந்தபோது அவருக்கு ஒரு மடைத்தொழில் செய்வான் இருந்தான்; ஒருநாள் அவன் இன்றைக்கு என்ன காய்கறி சமைப்பது என்று கேட்டான். முனிவருக்கு உற்சாகம். அவனுக்குப் புரியும்படி வெண்பாவில் பதில் சொல்லுகிறார் :—

" சற்றே துவையல்அரை தம்பிஒரு பச்சடிவை
வற்றலே தேனும் வறுத்துவை—குற்றமிலை
காயமிட்டுக் கீரைகடை ஈம்மென வேமிளகுக்
காயரைத்து வைப்பாய் கறி "

என்கிறார். காயம் இடுவதில் குற்றம் இல்லை; கறி கம் என்று மணமும் சுவையும் பெறவேண்டும் என்கிறார்.

திருவேகம்பர் செயல்களை எண்ணும்போதெல்லாம் சுவாமிகளுக்கு ஆனந்தக் களிப்பு வந்துவிடும். அப்பொழுது அவர்தம் பொருந்தாத வேடங்களைக்கூட எடுத்துச் சொல்லி நகைத்து மகிழ்வர் :

" உடுப்பது காவி உடையாம்—மறை
ஓதிமந் தேடுஞ் சிரமேற் சடையாம்
எடுப்பது பிச்சை அமுதாம்—மார்பில்
ஏர்பது காமாட்சி கொங்கைச் சுவடாம்—
ஆனந்தம் ஆனந்தம் தோழி !"

எனப் பாடி ஆனந்தத்தில் மூழ்குகின்றார்.

தமிழ் கற்போர் அளவை முறையாற் சிந்திக்கவும் பேசவும் எழுதவும் உபகாரமாதற் பொருட்டுத் தருக்க சங்கிரகம் என்னும் வைசேடிக நூலை, அதற்கு அன்னம்பட்டர் செய்துள்ள உரையுடன், செந்தமிழில் மொழிபெயர்த்துள்ளார். சித்தாந்த சைவக் கொள்கைகளை உணரப் புகுவார் முதற்கண் சற்று உளங் கொள்ளுதற் பொருட்டுச் சித்தாந்தப் பிரகாசிகை என்னும் நூலை மொழிபெயர்த்தருளினார். இக்காலத்து மொழிபெயர்ப் புத்துறையில் உள்ளவர்கள் சுவாமிகளுடைய உரைநடை நூல்களைக் கற்றால் கற்போர்க்கு முழுப் பயனை விளைக்கக்கூடிய மொழிபெயர்ப்புக்கள் செய்யவல்லுநர் ஆவர்.

இங்ஙனம், இலக்கியப் படைப்பாலும், இலக்கண ஆய்வாலும், தருக்க மொழிபெயர்ப்பாலும் நம் உணர்வை வளர்த்து, அறிவை நெறிப்படுத்தும் முனிவர் பெருமான் சமய, மரபு நூல்களாகவும், தத்துவ நூல்களாகவும் பத்து நூல்கள் அருளிச் செய்துள்ளார். அவை யாவும் முதல் நூற்பொருள் உணர்ந்து கட்டு அறுத்து வீடு பெறுவதற்குச் சமைந்தவை.

அவற்றுள் தலைசிறந்தவை சிவஞானபோதச் சிற்றுரை, சிவஞான சித்தியார் பொழிப்புரை, சிவஞான மாபாடியம் என்பவை. இவை வேதசிவாகமப் பொருட்பரப்பைத் திருவள்ளுவர், நால்வர், திருமூலர் என்னும் செந்தமிழ்த் திருநெறித் தலைவர்களுடைய துணிபுகளுக்கு மாறுபடாதபடி, அளவை முறைக்கும் இலக்கண வரம்பிற்கும் பொருந்துமாற்றிற்கும் ஒப்பக் கொண்டு, தெளிவுபடுத்தி மக்கட்கு வழங்குவன.

சிவஞானபோதம் என்பது பிரம்ம சூத்திரத்திற்குப் பதிலாக உள்ளதாய் வேதாகம புராண இதிகாசப் பொருள் அனைத்தையும் உள்ளடக்கி, இந்திய தத்துவக் கொள்கையை 12 சூத்திரங்களில் 39 தெரிவு(propositions)களாக வரிசைப்பட வைத்து விளக்குவது. இந்நூலில் இந்திய தத்துவம், சமயம், அறநெறி என்னும் மூன்றும் அடங்கும். பிரம்ம சூத்திரம் விரிந்ததற்குக் காரணம், அதில் சொற் பொருளாராய்ச்சி மேற்கொளளப் பெற்றமையே ஆகும். அது பல வகைக் கொள்கைகளுக்கு இடந்தருதலின், அதன் பொருண் முடிபு காணுதல் அரிதாயிற்று. சிவஞானபோதம், மகாவாக்கியத்தில் உள்ளவாறே முதற்பொருள் உண்மை, அதன் இயல்பு, உயிரின் உண்மை, அதன் இயல்பு, முதற்பொருளுக்கும் உயிர்க்கும் உள்ள சம்பந்தம், உயிர்க்குப் பகையாக உள்ள பொருள்கள், அவற்றினியல்பு, உயிர் பகையின் நீங்கி உறவை

எய்து நெறியில் அதற்கு உள்ள உணர்வு நிலைகள், உணர்வு வகைகள், அவ்வகைகளுள் முதற் பொருளைத் தலைப்படவல்ல மெய்யுணர்வின் இயல்பு, அதனை எய்தும் வகை, அதன் பயன் எனப் பொருள் நிலையைக் குறிக்கோளாகக் கொண்டு ஆரம்பித்து, முடிநிலையாக உண்மையின் இணைப்பு நிலையை (The Synthesis of truth)த் திட்பமாகவும் தெளிவாகவும் வரிசைப் படக் கொண்டு விளங்குவது. ஆதலினால், இது சுருங்கி நின்று, "சிறிய ஆடியிற் பெரிய மால் வரைப் பொருள் செறிந்தாங்கு—அறிவு நூல்களின் முடிவெலாம் அகப்படுத்தவற்றின்—நெறியெலாம்" விளங்குவதாய் அமைந்து உள்ளது.

சிவஞான போதத்தின் விரிவுரையாகவும் ஆகமார்த்தங்களின் உரையாணியாகவும் செய்யுள் வடிவில் இயன்றதே சிவஞான சித்தி. இவற்றின் உண்மைப் பொருள் நிலையை முன்பின் முரணின்றித் தெளியக் கண்டு வெளிப்படுத்திய ஆசிரியர் சிவஞான சுவாமிகள் ஒருவரே ஆவர். இவர்கள் இயற்றிய நூல்கள் தமிழில் இல்லையாயின், சித்தாந்த சைவம்பற்றியோ இந்திய தத்துவம், சமயம், மரபு என்பவற்றில் பிற எத் துறைபற்றியோ, பிற மொழிப்பயிற்சி இன்றி, ஒரு தமிழ் மகன் தெளிவாக ஒன்றும் அறியவோ பேசவோ முடியாது.

இவர் கண்டனமாக இயற்றிய நூல்களைக் கண்டால், இவர் வெறும் ஆரவாரத்தால் சொற்சாலம் செய்தவர்களைத்தான் மறுத்துள்ளார் என்பது விளங்கும். "என்னை இப்பவத்திற் சேரா வகை எடுத்து" எனச் சித்தியாரில் ஒரு தொடர் உள்ளது. அதன் பொருள், "என்னைப் பிறவிக் கடலில் வீழ்ந்து அழுந்தாதபடி தன் கருணைக் கையால் எடுத்து" என்பது தெளிவு. அதில் எடுத்து என்பது உருவகம். ஒருவர் அதற்கு, "சகளாந்தம் பாசக் கூட்டம் கூடாத வகை சின்மாத்திர சுத்த கேவலமாகச் சேடிக்கப் பண்ணி" என உரை எழுதுகிறார். ஒரு சொற்குப் பொருள், செம்பொருள், ஆகுபெயர்ப் பொருள், குறிப்புப் பொருள் என்னும் மூன்று வகையில் அடங்கும்; இஃது அம்மூன்றினுள் யாதொன்றும் அன்று எனக் காட்டி மறுத்துள்ளார், நம் முனிவர் பெருமான். இப்படியே பிறவும். விரிவஞ்சி இதனோடு நிறுத்துகின்றேன்.

"நற்பாலர் வேண்டின் மயிலம்மை
யார்தவம் நாடுக ; நூல்
கற்பான் நசையிற் சிவஞான
தேவன் கலையுணர்க ;
சொற்பால் அறத்துற வுன்னில்அன்
னுனின் துறக்கஇப்பா
ரிற்போகம் வேட்கின் சிவபோ
கம்மவிரைந் தெய்துக வே."

—பொ. பாண்டித்துரைத் தேவர்

# திருவருள் வெல்க !

[திரு நா. மகாலிங்கம், பி. எஸ்ஸி., எம். ஐ. இ.]

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது ஒரு முதுமொழி. ஊரில் வாழும் மக்களுக்கு ஊருணியும், சோலைகளும் சாலைகளும் நல்வாழ்வுக்குப் பயன் தருவது போல அகத்தூய்மைக்கு வழிபாடு செய்ய உதவும் கோயிலும் தமிழ் மக்களின் வாழ்வில் மிக்க சிறப்பான இடம் பெற்றிருக்கிறது.

தமிழ்நாடு ஏராளமான தலங்களையும் ஆலயங்களையும் உடைய நாடாகும். வானோங்கிய கோபுரங்களை எங்கும் எழுப்பி வழிபாடு செய்வதில் தமிழர்கள் பேரூக்கம் காட்டி வந்தனர். பெரிய ஆலயங்களுக்கு உரிய பெருஞ்சிறப்பாகும். ஆலயங்கள் அமைப்பது அரசர்க்கு அழகு என்றே கருதினர். 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்ற பழமொழி மூலம் தமிழ் முழுவதும் தெய்வமணம் கமழும் ஆலய வழிபாடாகவே விளங்குவது என்றறியலாம். பேரரசர்களால் பெருஞ்சிறப்போடு விழாக்கோலம் பூண்டு விளங்கிய ஆலயங்களைப் போற்றிப் பாதுகாப்பது நம்முடைய பெருங் கடமையாகும். சோழ மன்னர்கள் இந்தப் பெரும் பணியில் பெரிதும் ஈடுபட்டு மிகப் பெரிய அளவில் திருக்கோயில் திருப்பணிகளைச் செய்துள்ளார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டுமுதல் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களாகிய நகரத்தார் ஆலயத் திருப்பணி செய்வதில் மிகச் சிறப்படைந்தார்கள். அவர்களால் ஆயிரக்கணக்கான திருக்கோயில்கள் திருப்பணிகளால் புதுப்பிக்கப் பெற்றன. 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என விளங்கும் இன்றைய நிலையில், நாட்டு மக்கள் அனைவரும் நம் பழம் புகழையும், பண்பாட்டையும் நாட்டும் வகையில் இத்திருப்பணிகளில்

ஈடுபடுதல் வேண்டும். போற்றுபவர்களும், கவனிப்பவர்களுமின்றிப் பெரிய கோயில்கள் பல நம் நாட்டில் சீரழிந்து நிற்கின்றன. நிறைந்த செல்வமுடைய கோயில்களின் வருவாய்த் தொகையில், சிறு பகுதியைத் திருப்பணித் திட்டத்துக்கென ஒதுக்கிச் செல்வ வசதியில்லாத ஆலயங்கட்கு வழங்க வேண்டும் என்ற கருத்தினை இந்து அறநிலைய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள். அகமதாபாத்தைச் சேர்ந்த ஆனந்தாஜி, காலியன்ஜி அறக்குழு, இவ்வகையில் பல சமண ஆலயங்களுக்குத் திருப்பணி புரிந்து வருகிறது. 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பராக்கிரமபாண்டியன் என்பவன் தென்காசியில் ஆலயம் ஒன்றை எழுப்பி முடிக்காது போனான். தொடர்ந்து அத்திருப்பணி செய்வாரை வேண்டி அவன் எழுதிய பாடலில், 'சேல் ஏறிய வயல் தென்காசி ஆலயம் தெய்வச் செயலாலே சமைந்தது, இங்கு என் செயலல்ல, அதனை இன்னும் விரிவு செய்தே புரப்பார் அடி வீழ்ந்து, அவர் தம்பால் ஏவல் செய்து பணிவேன்' என்று திருப்பணி செய்வாரை மன்னன் பணிந்து வேண்டிய முறை நம் நெஞ்சை உருக்குகின்றது.

காவிரியின் தென் கரையில் அருள் மணங் கமழத் திகழும் திருவிடைமருதூர்த் திருக்கோயில் பெருஞ் சிறப்பு வாய்ந்தது. இந்தத் தலத்தைத் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும், சுந்தரரும் உளம் கசிந்து பாடிப் பரவியுள்ளார்கள். இது வரகுண பாண்டியனுடைய பாவத்தைப் போக்கிய தலம். தேவர்கள் பலர் இங்கு வழிபாடியற்றினர். கிழக்கே கோபுர வாயிலில் பட்டினத்தார் திருவுருவமும், மேற்குக் கோபுர வாயிலில் பத்திரகிரியார் திருவுருவமும் இருக்கின்றன. அருளாலயமாக விளங்கும் இத்திருக்கோயிலில் நாடக அரங்கொன்றிருந்தது என்றும், தைப்பூசத் திருவிழாவின் பிற்றைநாள் தொடங்கி மூன்று நாள் வரை இங்கு ஆரியக் கூத்தாடுவது வழக்கமென்றும் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. சித்தம் கலங்கி உன்மத்த நிலையிலுள்ள ஆடவர், பெண்டிர் யாவரும் இக்கோயில் பிராகாரத்தைச் சுற்றி வந்து கோயில் பூசை வேளையில் எம்பெருமான் திருமுன் நின்றுகொண்டிருந்தால் உன்மத்த நிலை மாறிச் சித்தத் தெளிவு பெறுகிறார்கள் என்பது பிரசித்தம். இத்தகைய சிறப்பும் சக்தியும் வாய்ந்த ஒரு திவ்ய க்ஷேத்திரத்தைப் பேணிக்காத்து வருவது நமது தலையாய கடமை என்பதை ஞாபகப்படுத்துகிறேன். மகாலிங்கப் பெருமானின் மணிக் கோயிலாகத் துலங்கும் இப்பெருங் கோவிலைத் திருவாவடுதுறை ஆதீனத்தார் கண்ணும் கருத்தும் கவரத்தக்க அளவில் கவினுறப் போற்றி வருகின்றனர். தஞ்சை மாவட்டம் கோயில்களின் நிலைக்களமாக விளங்குகிறது. அங்குள்ள அருமையான சிற்பங்கள், கோபுரங்கள், மூர்த்திகள் முதலியவற்றினுடைய வண்ணப் படங்கள் பக்தர்களுக்குக் கிடைக்கும் வகை செய்தல் வேண்டும்.

ரோம் நகரில் போப் ஆண்டவர் மாளிகையில் சிற்பிகள், சித்திரகாரர்கள் பல கிறிஸ்தவ சமயச் சித்திரங்களைச் சிறிதாக எழுதி விற்பனைக்குக் கொடுக்கிறார்கள். அதுபோல ஏற்பாடுகள் தஞ்சையில் அதிகம் செய்யப்பட வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் கோயில்களைத் தரிசிக்கும் பொருட்டுச் சுற்றுப்பயணம் வரத் தனியாக ஏற்பாடுகள் செய்யவேண்டும். மூன்று நாட்கள், ஏழு நாட்கள், பதினைந்து நாட்கள் என்று பயணங்கள் ஏற்பாடு செய்து உணவு, உறைவிடம் முதலியவற்றோடு பஸ் வசதி செய்து கொடுத்துப் பிரயாணம் செய்ய ஊக்கப் படுத்துதல் அவசியம். மேலும், வெளி மாகாணப் பக்தர்களுக்காகப் பல மொழிகள் அறிந்த உதவியாளர்கள் வாகனங்களில் உடன் பிரயாணம் செய்து விளக்கம் கொடுப்பது அவசியம்.

சென்னை நகரில் தமிழகத்தில் உள்ள முக்கியமான கோயில்கள், சிற்பங்கள், சித்திரங்கள் முதலியன கொண்ட ஒரு கண்காட்சிச் சாலையை அமைத்துத் தமிழகத்திற்கு வரும் வெளிநாட்டார் அதைப் பார்க்க ஏற்பாடு செய்வது அவசியம். அதன்மூலம் தமிழகத்தின் நாகரிகச் சிறப்பும், பழமையின் பெருமையும், கலைஞர்களின் கைவண்ணமும் சுலபமாக வெளியே தெரியும். வெளிநாட்டார் மட்டுமன்றி நம் இளைஞர்களும் தமிழகத்தின் பெருஞ் செல்வங்களைப்பற்றி நன்கு தெரிந்துகொள்ள ஒரு வாய்ப்பு ஏற்படும். முக்கியமான கும்பாபிஷேகங்களைத் தனியாகச் சினிமாப்படமாக எடுத்து அதை மக்கள் பார்க்க ஏற்பாடு செய்வது நல்லது. தவறான சிந்தனைகளுக்குச் சினிமாத்துறை உபயோகப்படுவதற்குப் பதிலாக நல்ல விஷயங்களைப் பரப்பவும் அதை உபயோகப்படுத்துவது இன்றியமையாதது.

இத்திருக்கோவில் கும்பாபிஷேகம் நிகழ்வதும் நாம் கண்டு மகிழ்வதும் தென்னாடு செய்த தவப் பயனாகும். திருவிடைமருதூர்ப் பெருமானின் திருவருள் உலகெலாம் பரவி நம்மையும் உய்விக்குமாக!

# ஜோதிர் மகாலிங்கம்

[தவத்திரு சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், தருமையாதீனம்]

இறைவன் அறிவுமயமாக, அறிவே உருவாக உள்ளவன். அறிவு ஒளிவடிவாக இருப்பது ஆகவே, நம் ஆன்றோர்களும், சான்றோர்களும் சோதியாய் சுடராய் சூழொளி விளக்காய் இறைவனைக் கண்டு அநுபவித்தனர்; நமக்கும் அறிவித்துள்ளனர். ஆண்டவன், ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதியாய்த் தோன்றிய நிகழ்ச்சியைச் சிவ மகாபுராணமும், ஏனைச் சிவபுராணங்களும் கூறுகின்றன.

திருமாலின் உந்தித் தாமரையில் தோன்றிய பிரமன், தந்தையாகிய திருமாலைப் பார்த்துப் படைப்புக் கடவுளாகவுள்ள யானே பரம்பொருள் என்ருன். பிரமனைத் தம் உந்தியிலே தோற்றுவித்து உலகமனைத்தையும் காக்கும் கடவுளாகத் திருமால் தாமே பரம்பொருள் என்ருர். இருவரும் பொருளல்லவற்றைப் பொருளென்று உணரும் மருள் வயப்பட்டுள்ளமையை அறிந்த சிவ பரம்பொருள், ஆதி நடு அந்தமிலா அளவில் சோதிப் பிழம்பாய் இருவருக்கும் இடையே தோன்றித் தாமே பரம்பொருள் என்பதை உணர்த்தினர். உணர்த்தியும், இருவரும் தெளிவடையாதவராய் அச்சோதியின் அடியையோ அல்லது முடியையோ காண்பவரே நம்முள் பெரியவர் எனத் தருக்கினர். திருமால் பன்றி வடிவெடுத்து அடியைக் காண்பேன் என்று பூமியினை அகழ்ந்து சென்ருர். பிரமனே அன்னப் பறவை வடிவெடுத்து முடியைக் காண்பேனென விசும்பிற் பறந்து சென்ருன். இருவரும் தேடிக் கொண்டே இருக்கின்றனர்; இன்னும் கண்டார்களில்லை. இதனை அப்பர் அடிகள்,

> " தேடிக் கண்டு கொண்டேன்
> திருமாலொடு நான்முகனும்
> தேடித் தேடொணுத் தேவனை என்னுளே
> தேடிக் கண்டு கொண்டேன் "

என்ற திரு அங்கமாலைத் திருப்பாட்டால் தெளிவிக்கின்ருர்.

இங்ஙனம், சோதிப் பிழம்பாய்த் தோன்றிய இடமே திருவண்ணுமலை. அவ்வண்ணுமலை இன்னும் செம்மை நிறத்துடன் செம்மாந்திருப்பதே சிறந்த சான்று. இதே வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு விளங்குபவைதாம் துவாதச ஜோதிர்லிங்கத் தலங்கள்.

துவாதசம் - பன்னிரண்டு. பன்னிரண்டு தலங்கள் என்பது இதன் பொருளாம். சோமநாதம், மல்லிகார்ச்சுனம், உஜ்ஜைனி, மகாகாளம், ஓங்காரம், வைத்தியநாதம், பீமசங்கரம், இராமேசுவரம், நாகேசம், விசுவேசம், திரியம்பகம், கேதாரம், குஸ்மேசம் என்பன பன்னிரு ஜோதிர்லிங்கத் தலங்களாகும்.

**1. சோமநாதம் :**

சௌராஷ்டிரம் எனப்படும் பம்பாய் நகரத்தை அடுத்த குஜராத் மாநிலத்தின் கத்தியவார்த் தீபகற்பத்தின் தென்கரையில் அமைந்த பட்டினமாக விளங்குவது சோமநாதம். பன்னிரு ஜோதிர்லிங்கத் தலங்களுள் முதன்மையாக வைத்து எண்ணப்படும் சிறப்பு மிக்கது; வரலாற்றுச் சிறப்பு மிக்கது. மொகலாய மன்னர்களால் பதினன்கு முறை கொள்ளையிடப் பெற்றும் இக்காலத்தில் சர்தார் வல்லபபாய் படேல் அவர்கள் முயற்சியால் கோடிக் கணக்கில் செலவு செய்து திருப்பணி செய்யப் பெற்றுப் பொலிவுடன் திகழ்கிறது. இக்கோயில் கோட்டை வடிவில் அமைந்துள்ளது. இத்தலத்தை வழிபட்டோர் மூற்பிறப்பை உணர்வர். பிரதான லிங்கம் பூமிக்கடியில் மறைவாக உள்ளது. இரண்யா முதலிய ஐந்து நதிகள் சோமநாதத்திற்கு அருகில் பாய்கின்றன. முத்தியளிக்கும் ஏழு தலங்களுள் முக்கியமானது இது

சோமன் எனப்படும் சந்திரன் ரோகிணியிடம் மட்டும் அன்பு செலுத்தியதனுல் தட்சனுல் சாபம் பெற்ருன். சாப நீக்கம் பெறுவதற்குப் பிரம தேவன் கட்டளைப்படி இத்தலத்தின் சிவ பெருமானைக் குறித்துப் பத்துக்கோடி முறை 'மிருத்யுஞ்சய' மந்திரத்தைச் செபித்தான். சிவபரம்பொருள் வெளிப்பட்டுச் சந்திரனுகிய சோமனுக்கு வளரவும் தேயவும் அருள் வழங்கினர். சோமன் அருள் பெற்ற தலமாதலின் சோமநாதம் எனப்பெற்றது. சோமவாரத்தில் வரும் அமாவாசை இரவும், சிவராத்திரியும் இத்தல வழி பாட்டிற்குச் சிறந்த காலமாகக் கருதப் படுகின்றன.

**2. மல்லிகார்ச்சுனம் :**

அர்ச்சுனம் - மருத மரம். குப்த பரம்பரையில் வந்த இளவரசி சந்திராவதி என்பவர் மல்லிகை

மலர் கொண்டு இங்குள்ள இறைவனைப் பூசித்தமையாலும், அர்ச்சுன விருட்சம் (மருத மரம்) தல விருட்சமாக இருப்பதாலும் மல்லிகார்ச்சுனம் எனப் பெயர் பெற்றது இத்தலம். இது ஸ்ரீசைலம், மல்லிகார்ச்சுனம் எனவும், தேவாரத்துள் திருப்பருப்பதம் எனவும் வழங்கப்படுகிறது. இது பாரத நாட்டின் நடுவிடமாகிய ஆந்திர மாநிலத்தில் உள்ளது.

மருத மரத்தைத் தலவிருட்சமாகக் கொண்ட மூன்று தலங்களுள் இது வடக்கில் உள்ளது. தெற்கில் நெல்லை மாவட்டத்தில் புடார்ச்சுனமும் (திருப்புடை மருதூர்), தஞ்சை மாவட்டத்தில் இவ்விரண்டிற்கும் நடுவிலிருப்பதாகிய மத்தியார்ச்சுனமும் (திரு இடை மருதூர்) உள்ளன. சோதிர்லிங்கத் தலங்களுள் மூவர் தேவாரமும் பெற்ற சிறப்புடைத் தலம் இது. ஞான சம்பந்தர் 'சுடுமணி உமிழ் நாகம்' எனத் தொடங்கும் பதிகத்தாலும், நாவரசர் 'கன்றினர் புரங்கள் மூன்றும்' என்னும் பதிகத்தாலும், நாவலர் கோன் 'மானும் மரையினமும்' எனத் தொடங்கும் பதிகத்தாலும் போற்றி வழிபட்டுள்ளனர்.

நந்தி யெம்பெருமான் பர்வத (மலை) வடிவமாகிச் சிவபெருமானைத் தாங்குவதால் பருப்பதம் எனப் பெற்றது. உலகத்தை முதலில் சுற்றி வருபவருக்கே முதலில் திருமணம் என விநாயகருக்கும், முருகனுக்கும் பெருமானும் பிராட்டியும் ஒரு போட்டியமைத்தனர். விநாயகர் அம்மையப்பரை 'அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர்' என்ற கருத்தொடு இருவரையும் ஏழுமுறை வலம் வந்து போட்டியில் வெற்றி பெற்றுச் சித்தி, புத்தி இருவரையும் திருமணம் புரிந்து கொண்டார்; உலகம் முழுவதும் சுற்றி வந்த முருகன் விநாயகர் வெற்றியுற்றது கண்டு சினமுற்றவராய்க் கிரவுஞ்சகிரிக்குச் சென்று பிரம்மசாரியாய் வாழ்கிறார். தாய் தந்தையர் தேடி வந்தனர்; வருவதை அறிந்த முருகன் மேலும், அப்பாற் செல்ல, தேவர்களின் வேண்டுகோட்படி மூன்று யோசனை தூரத்தில் தங்கினார். இவரைத் தேடிவந்த அம்மையப்பர் தங்கிய இடமே ஸ்ரீசைலம் என வழங்குகிறது. இது கயிலை மலைக்குச் சமமாக எண்ணப்படுகிறது. அமாவாசையில் சிவனும், பௌர்ணமியில் அம்மையும் குமரனைச் சென்று கண்டு மகிழ்கின்றனர் என்பது ஐதிஹ்யம். லிங்காயத்துக்களான வீர சைவர்கள் இத்தலத்தைப் பூகைலாசம் எனப் பெறிதும் போற்றுகின்றனர். இது கிருஷ்ணா நதிக்கரையருகில் உள்ளது.

3. மகாகாளம் :

உஜ்ஜைனி என்னும் ஏழு மோட்சத் தலங்களுள் ஒன்றாகிய அவந்திகா எனப்படுவது. இது மத்தியப் பிரதேசத்தில் அமைந்துள்ள சோதிர்லிங்கத் தலமாகும். இத்தலம் பண்டைக் காலத்தில் அமராவதி, அவந்திகா என வழங்கியது. மாளவ தேயத்தின் தலைநகர். விக்கிரமாதித்தனும், அவனுக்கு எதிரியாகிய சாலிவாகனனும் தோன்றிய இடம். இவ்விருவர் பெயராலும் சகாப்தங்கள் தோன்றியுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது. காளிதாசன், தண்டி முதலிய புலவர்கள் வாழ்ந்த இடம் இரு காளிகோயில்கள் இங்கே சிறப்புறத் திகழ்கின்றன. மகாகாளருடைய திருக்கோயில் சிப்ரா நதிக்கரையில் அமைந்துள்ளது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் கும்பமேளா இங்கேதான் நடக்கிறது.

அவந்தி தேசத்தில் வேதப்பிரியன் என்ற அந்தணனுடைய குமாரர்கள் நால்வரும், சிவபூசைச் சிறப்பாலும் நல்லொழுக்கத்தாலும் அந்நாட்டை வளமுடையதாக்கினர். அப்பொழுது, இரத்தினமாலா என்னும் மலையிலிருந்து வந்த தூஷணன் என்ற அரக்கன் எங்குமே நன்மை நடக்கவொட்டாது தடுத்தனன். பல ஊர்களிலும் உள்ள அந்தணர்கள் ஒன்றுகூடி வேதப்பிரியனின் குமாரர்களோடு சேர்ந்து இவ்வரக்கனை அழிக்க இயலாது என்று கருதியவர்களாய் நாள்தோறும் பார்த்திவ பூசை செய்து வந்தனர். அவர்கள் நாள்தோறும் பூசை செய்வதற்கு மண் எடுத்த இடம் பெரிய குளமாக ஆயிற்று. அந்தணர்கள் யாவரும் பூசை புரிந்து தியானத்தில் இருக்கும்போது தூஷணன் என்னும் அரக்கன் அவர்களைத் துன்புறுத்தத் தொடங்கினான். அப்பொழுது அக்குளத்தினின்றும் மகாகாளேசுவரர் தோன்றி அரக்கரை அழித்து அமரர்களைக் காத்தார். அவர்கள் வேண்டுகோளின்படி சிப்ரா நதிக் கரையிலேயே பெருமான் எழுந்தருளினார்.

4. ஓங்காரம் :

நர்மதா நதியும் காவேரி எனப்படும் நதியும் சங்கமமாகி ஓடிவரும் அமைப்பு ஓங்கார வடிவமாக உள்ளதால் இத்தலம் ஓங்காரம் எனப் பெற்றது. மத்தியப் பிரதேசத்தில் நர்மதை நதிக்கரையில் அமைந்துள்ளது. நர்மதா நதியில் பலநிறமுள்ள பாண லிங்கங்கள் கிடைக்கின்றன. கங்கையாற்றின் இடக் கரைமட்டுமே புனிதமானது என்பர். ஆனால் நர்மதையின் இரு கரைகளுமே புனிதமானவையென்று கூறுவர்.

வேட்டுவ முருகன்






பிட்சாடனர்

இப்புண்ணிய நதி இத்தலத்தில் பிரணவ வடிவாக ஓடுவது சிறப்பாகும்.

விநாயகர் ஐந்து முகத்துடன் காட்சியளிக்கிறார். விந்தியமலை, மேருமலைபோல் சிறப்புற வேண்டி, நாரதர் சொற்படி சிவபூசை செய்யக் கருதி ஓங்கார ரூபமாய் ஓர் எந்திரம் அமைத்துப் பார்த்திவ லிங்க பூசை ஆறுமாத காலம் இயற்றி வரம் பெற்றது. இதுவே ஓங்காரேசுவரம் ஆயிற்று என்பர்.

## 5. வைத்தியநாதம் :

இத்தலம் ஆந்திர மாநிலத்தில் (ஹைதராபாதீ) முற்காலத்திருந்தது. தற்போது மகாராஷ்டிர மாநிலத்தில் விளங்குகிறது. மாபெருந் தூண்களுடன் மர வேலைப்பாடு மிக்கதாகச் சிறந்து விளங்குவது இக்கோயில். தென்னாட்டில், தஞ்சை மாவட்டத்தில் உள்ள வைத்தியநாதர் ஆலயத்தைப் போலவே முடி இறக்குதல், மாவிளக்குப் போடுதல் முதலிய பிரார்த்தனைகளை மக்கள் இங்கே நிகழ்த்துகின்றனர்.

சாமகானம் இசைத்துச் சிவனருள் பெற்ற இராவணன், அவரிடமிருந்து ஆத்மலிங்கத்தைப் பெற்று இலங்கைக்கு எடுத்துச் செல்ல முற்பட்டான். இயலாமையினால் சிவபெருமானிடம் முறையிட, அதனை அவர் இரு பிளப்பாக்கிக் காவடியில் வைத்துச் செல்ல அருளினார். அவ்வாறு தூக்கிச் சென்ற இராவணன் இத்தலத்திற்கு வந்தவுடன், சிறுநீர் கழிக்கவேண்டியிருந்ததால், அருகில் நின்ற சிறுவனிடம் காவடியைக் கொடுக்க, சிறுவனாக வந்த விநாயகர் காவடியைக் கீழே வைத்து மறைந்தார். முற்பகுதிப் பிளப்பு கோகரணத் தலமாகவும், பிற்பகுதிப் பிளப்பு இத்தலமாகவும் விளங்கலாயின.

## 6. பீமசங்கரம் :

இத்தலம் மகாராஷ்டிர மாநிலத்தில் பம்பாயிலிருந்து 60 கல் தொலைவில் உள்ளது. காட்டின் நடுவிடத்தில் உள்ளது. ஆலயம் இப்போது சிறிது சிதைந்துள்ள நிலையில் காணப்படுகிறது. ஆலயம் சிறியது. பீமாநதி இவ்வாலயத்தின் அருகில் உற்பத்தியாகிறது. இங்கே இலிங்க மூர்த்தி ஒரு முழ உயரத்தில் காட்சி தருகிறார்.

கும்பகர்ணனுக்கும் கற்கடி என்ற அரக்கிக்கும் பிறந்த பீமன் என்ற அசுரன் பிரியதர்மன் என்ற அரசனின் சிவபூசையைத் தடுத்து அவனைக் கொல்ல முயன்றபோது சிவபெருமான் அவ்வரசன் பூசித்த மண்ணாலாகிய சிவலிங்கத்திலிருந்து வெளிப்பட்டு, பீமனைச் சங்கரித்து, தேவர் வேண்டுகோட்கிணங்கிச் சாந்தமூர்த்தியாகப் பீமசங்கரர் என்ற பெயரில் விளங்குகிறார். பீமனைச் சங்கரித்ததால் பீமசங்கரம் என்ற பெயர் பெற்றது இத்தலம்.

## 7. இராமேசுவரம் :

தமிழ் நாட்டின் தென் பகுதியில் வங்கக் கடலில் அமைந்த ஒரு சிறு தீவாக உள்ளது இத்தலம். கடல் நீராட்டு இத்தலத்தில் சிறப்பு மிக்கது. ஆலயத்துள் பதினான்கு நீர்த்தேக்கங்களுக்குமேல் உள்ளன. எல்லாவற்றிலும் கோடி தீர்த்தம் மிக்க சிறப்பு வாய்ந்தது. காசி யாத்திரை செய்தவர்கள் இராமேசுவர யாத்திரை செய்தால்தான் யாத்திரை நிறைவு பெற்றுப் பயனடைகின்றனர் என்பது ஐதிஹ்யம். தமிழ் நாட்டிலுள்ள ஜோதிர் லிங்கத்தலம் இது ஒன்றே என்பது குறிப்பிடத் தக்கது. ஞானசம்பந்தரும், நாவரசரும் பாடியுள்ள நன்மை மிக்க தலம். ஆலயம் மிகப் பெரியது. உலகிலேயே மிகப் பெரிய பிராகாரத்தை உடையது.

இராவணனைக் கொன்ற பழி நீங்குவதற்குக் கழுவாயாக இராமன் மணலால் சிவலிங்கம் அமைத்து வழிபட்ட சிறப்புடைமையின் இராமேசுவரம் எனப் பெயர் பெற்றது. இராவணனை அழிப்பதற்கு முன்பு அவனை அழிப்பதற்காகவே இங்குள்ள இறைவனை இராமன் வழிபட்டு அருள் பெற்றார் என்பதும் மற்றொரு வரலாறாகும்.

## 8. நாகேசம் :

மகாராட்டிர மாநிலத்தில் கோண்டி ரெயில் நிலையத்திலிருந்து 14 கல் தொலைவிலுள்ளது நாகேசமென்னும் இத்தலம்.

சிவலிங்கத்தின் கோமுகம் கிழக்கு முகமாக இத்தலத்தில் திரும்பியுள்ளது. நாமதேவ சுவாமிகளின் பெருமையை வெளிப்படுத்துவதற்காகச் சிவபிரான் இவ்வாறு திரும்பியுள்ளார் என்பது ஐதிஹ்யம். சிவலிங்கம் ஒரு மலைக் குகைக்குள் இடம் பெற்றுள்ளது.

மோகினி வடிவங் கொண்ட திருமாலும், பிட்சாடனர் வடிவங் கொண்ட சிவபெருமானும் தாருகாவனம் சென்ற வரலாறு இத்தலத்தோடு தொடர்புபடுத்திப் பேசப்படுகிறது. அயோத்திக் கருகிலுள்ள சரயூ நதிக்கரையில் நாகேசுவரர் என்ற பெயரோடு ஒரு சிவலிங்கம் உண்டு. இதனையே நாகேசம் எனச் சிலர் கூறுவர். ஆனால், வரலாற்றுப்படி ஔண்டாவில் உள்ள சிவலிங்கமே ஜோதிர்லிங்கம் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**9. விசுவேசம் :**

வருணை, அசி என்ற இரு நதிகளின் சங்கமத்திற்கு இடையில் உள்ளதால் இத்தலம் வாரணசி எனப்பட்டது. கர்மங்களைப் போக்குவதாலும், சிவஞானத்தால் உயிர்கள் ஒளிபெறுவதாலும் காசி எனவும் பெயர் பெற்றது. இது உத்தரப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. முத்தி தரும் தலங்களில் இதுவும் ஒன்று. கங்கை இத்தலத்தில் உத்தரவாகினியாக (வடக்கு நோக்கி)ச் செல்கிறது. இவ்வாறு செல்வது சிறப்புடையதாகும். கங்கையின் மேற்குக் கரையில் அமைந்துள்ளது இப்புனிதத் தலம். கங்கைக் கரையில் விசுவ நாதர் ஆலயமும், கேதாரநாதர் ஆலயமும் சிறப்புடையவை. வருணை, அசி என்ற இரு நதிக்கும் இடையில் 64 தீர்த்தக் கட்டங்கள் அமைந்துள்ளன. அவற்றுள் மணிகர்ணிகா கட்டம் மிகச் சிறந்துள்ளது.

அன்னபூரணி, விசாலாட்சி, காலபைரவர், துண்டிராஜ கணபதி முதலிய மூர்த்திகட்குத் தனித்தனிக் கோயில்கள் உள்ளன. இத்தலத்தில் இறப்பவர்கள் முத்தி பெறுவர் என்பது வரலாறு.

**10. திரியம்பகம் :**

மகாராஷ்டிர மாநிலத்தில் நாசிக்கிலிருந்து தென்கிழக்கில் 18 கல் தொலைவில் உள்ளது இத்தலம். பிரமகிரி என்ற மலையைச் சார்ந்துள்ளது இத்தலம். இம்மலையில் கோதாவரி, அகல்யா, வைதர்ணு, மேற்கு நோக்கிச் செல்லும் கங்கை ஆகியவை உற்பத்தியாகின்றன. அங்குள்ள காட்டில் மூன்று லிங்கங்கள் மூன்று கண் போல் உள்ளன. இதனால் திரியம்பகம் எனப் பெயர் வந்ததென்பர்.

பிரமன் சிவபெருமானின் திருமுடியைக் கண்டதாகப் பொய் உரைத்ததால் அவனை மலையாகு மாறு சபித்தார் பெருமான். பிரமனது தவத்திற் கிரங்கிப் பேத பாவனையின்றிப் பிரமகிரியில் இருப்பதாக அருள் பாலித்தார். இது காரணமாகவே இம்மலைக்குப் பிரமகிரி எனப் பெயர் வந்ததென்பர். அஷ்ட பைரவர் முதலிய திருவுருவங்கள் இங்கே உள்ளன. மாக்கல்லாலான லிங்கத்திற்குரிய பீடம் மட்டுமே உள்ளது. பீடத்தின் நடுவில் ஒரு சிறு செம்பு கொள்ளக்கூடியதாகிய ஒரு குழி உண்டு. இதனுள் மூன்று சிவலிங்க வடிவங்கள் இருக்கின்றன. இக்குழியிலிருந்து கங்கை வெளிப்படுகிறது.

**11. கேதாரம் :**

உத்தரப் பிரதேசத்தில் இமயமலையில் உள்ளது திருக்கேதாரம். தெற்கு நோக்கிய சந்நிதி. திருஞான சம்பந்தர், சுந்தரர் ஆகிய இருவராலும் பாடப் பெற்ற சிறப்புடையது. ஹரித்துவாரம் வழியாக ருத்திரப் பிரயாகை வரை சென்று, அங்கிருந்து முப்பது கல் தொலைவு நடந்து செல்லவேண்டும். குப்த காசிவரை பேருந்துகளில் செல்லலாம். கேதாரம் செல்லும் வழியில் இந்திர நீல பருப்பதம், அநேகதங்காவதம் ஆகிய பாடல் பெற்ற தலங்களையும் தரிசிக்கலாம். 'கேதார' என்னும் சொல் சிவபெருமான் கங்காதேவியை முடியில் வைத்திருக்கிறான் என்பதை உணர்த்தும். கேதார நாதர் ஆலயம் கடல் மட்டத்திலிருந்து 11,750 அடி உயரத்தில் உள்ளது. இங்குள்ள விஷ்ணுவைத் தரிசித்தால் பத்ரியிலுள்ள நாராயணனைத் தரிசித்த பலன் உண்டு. திருமால் நரநாராயண வடிவத்தில் இருந்து பார்த்திவ லிங்கத்தில் சிவபெருமானைப் பூசித்து, 'கேதார மலையில் தேவரீர் எழுந்தருளியிருக்க வேண்டும்' என்ற பிரார்த்தனைக்கு இணங்கச் சுவாமி இங்கு எழுந்தருளியுள்ளார் என்பது ஐதிஹ்யம். கேதார நாதர் ஏப்ரல் முதல் செப்டம்பர் முடிய மனிதர்களால் பூசிக்கப் படுகிறார். அக்டோபர் முதல் மார்ச்சு முடியப் பனியால் மூடப்பட்ட நிலையில் சிவபெருமானுக்குத் தேவ பூஜை நிகழுகிறது.

**12. குஸ்மேசம் :**

ஆந்திர மாநிலத்தில் ஔரங்காபாத்தில் இறங்கி இத்தலத்திற்குச் செல்லவேண்டும். சுதர்மன் என்ற அந்தணன் மனைவியான குஸ்மையின் பெயரால் இறைவன் குஸ்மேசுவரன் எனப் பெயர் பெற்றான். இங்குள்ள சிவலிங்கம் செந்நிறம் உள்ளதாகக் காட்சி அளிக்கிறது. அம்பிகை குங்குமப் பூவால் வழிபட்ட சிறப்புடையது. சுதர்மனின் இரண்டாவது மனைவியான குஸ்மையின் புத்திரன் கொலை செய்யப்பட்டபோது அவள் பூசைக்கிரங்கி இறைவன் அவளுக்கு மகனை எழுப்பியருளிய சிறப்புடையது.

பின்னே சொல்லப்பட்ட இரண்டு சோதிர் லிங்கத் தலங்களிலும் உள்ள புண்ணிய தீர்த்தங்களில் நீராடுதல் சகல பாவங்களையும் போக்கி, மனத்திற்கு அமைதியை அளித்து வீட்டுலகையும் நல்கும். இங்குள்ள இலிங்கங்களின் பெயர்களை நாடோறும் காலையில் நினைத்த மாத்திரத்தே பாபம் அகன்று நினைத்த செயல் நிறைவேறும் என்பது ஆன்றோர் துணிபு.

இப்பன்னிரு தலங்களுள் வைத்தியநாதம், மல்லிகார்ச்சுனம், ஸ்ரீசைலம், நாகேசம் என்ற நான்கு தலங்களுக்கும் மாற்றுத் தலங்களாகத்

தமிழகத்தில் வைத்தீசுவரன் கோயில், திரு இடைமருதூர், சிவசைலம், திருநாகேச்சுரம் என்ற தலங்கள் சிறப்புடன் திகழ்கின்றன. இவற்றுள்ளும் திருஇடைமருதூரில் (மத்யார்ச் சுனத்தில்) எழுந்தருளியுள்ள இலிங்க மூர்த்தி யைத்தான் மகாலிங்கம் என்ற பெயரால் அழைக் கிறோம். மற்ற எல்லாத் தலங்களிலும் உள்ள இலிங்க மூர்த்திகளை இப்பெயரால் அழைப்பது வழக்கத்தில் இல்லை என்பது குறிப்பிடத் தக்கது. சோதிர் லிங்கத் தலங்களில் உள்ள இலிங்கங் கட்குக் கூட மகாலிங்கம் என்ற பெயர் அமைய வில்லை. இடைமருதில் உள்ள இலிங்க மூர்த்தி யைத்தான் மகாலிங்கம் என்று அழைப்பதோடு 'ஜோதிர் மகாலிங்கம்' என்றும் போற்றி வழி படுகிறார்கள் பக்தர்கள். அம்மகாலிங்கப் பெரு மானுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறும் இக்காலத்தே அம்மகாலிங்கத்தை வழிபட்டுப் பயனடைவோமாக!

# பதிமுதுநிலை

[திருவாவடுதுறை ஆதீன வித்துவான் திரு த. ச. மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்]

தோடுடையசெவி யன்விடை யேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடி பூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடையபிர மாபுர மேவிய பெம்மானிவ னன்றே.

—முதல் திருமுறை - சம்பந்தர்

புறச் சந்தான குரவர்களில் நாலாம் ஆசாரிய ராகிய ஸ்ரீ உமாபதி தேவநாயனுர் தாம் அருளிச் செய்த திருவருட் பயன் என்னும் சாத்திர நூலுக்கு இயையத் தேவார முதலிகள் மூவர் அருளிச் செய்த திருமுறைகளிலிருந்து தொண்ணூற்றென்பது பாடல்களைத் திரட்டி, அதற்கு அருண்முறைத் திரட்டு என்னும் பெய ரும் அருளிச் செய்தனர். அது பதிமுதுநிலை முதலாக அணைந்தோர் தன்மை ஈருகப் பத்துப் பிரிவுகளை உடையது.

அவற்றுள் பதிமுதுநிலை என்பது மேலாகிய இறைவனது இயல்பு எனப் பொருள்படும். பதிப் பொருள் சிவமே. 'சிவத்துக்குமேல் தெய்வ மில்லை, சித்திக்கு மேல் நூலில்லை' என்பது பழ மொழி. பதியின் சொரூபநிலை: முதல் நடு இறுதி இல்லாதது, தூலசூக்கும சூனிய வடிவமில்லா தது, குணங்குறி இல்லாதது, ஒன்ருய் அசலமாய் அகண்டாகார சச்சிதானந்த பரிபூரணசோதி யாய், பஞ்சகிருத்தியத்திற்கு அதீதப்பட்டு நின் மல வடிவாய் விளங்குவது. தடத்த நிலை: சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என் னும் பஞ்ச கிருத்தியங்களைப் பண்ணுவதாம் என்க.

இதனுல் எவ்விடத்தும் வியாபகமாகிய சிவம் கருவி காரணங்களால் அறியப்படாததாய், எவ் வாற்ருனும் அறியப்படாதது அன்ருய், சிவ ஞானம் ஒன்ருலேயே அறியப்படும் சித்துச் சத்தாய் நிற்பது என்பது பெறப்படும்.

'தோடுடைய செவியன்' என்று தொடங்கும் பாடல் திருஞான சம்பந்தப் பிள்ளையாரைச் சிவ பாத இருதயர் 'இப்பாலமுது தந்தார் யாவர்' என வினுவியபொழுது அருளப் பெற்றது. இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் என்று சுட்டறிவாற் காணப்படாத பரம் பொருளைச் சம்பந்தப்பிள்ளையார் 'இவனன்றே' என்று சுட்டிக் காட்டினுர். சத்தியும் சத்தனும், மரமும் வைரமும் போலக் குணகுணி பாவமாக நிலைத்தவர்; ஒளியின்றிச் சூரியனும், சூடின்றி அக்கினியும் விளங்காதவாறு போலச் சத்தியை யின்றிச் சத்தன் விளங்கான்.

"வரும்வடி வெல்லாஞ் சத்தி;
சத்திதான் மரமும் காழ்ப்பும்
இருமையும் போல மன்னிச்
சிவத்தினே டியைந்து நிற்கும்"

என்பது சிவஞானசித்தியார்.

சிவபெருமான் ஞான சொரூபி ஆதலால் ஞான முடையவன் சிவபெருமான் என்றும், உமாதேவி யார் அருட் சொரூபி ஆதலால் அருளுடையவள் உமாதேவியார் என்றும், சிவஞானம் அருளொடு

கலந்தால் சிவத்தை அறியமுடியும் என்றும், அருளொடு கலவாதாயின் சிவத்தை அறிய முடியாதென்றும் விளக்குதற்காகவே ஞான வடிவினராகிய சிவபெருமான் சிவஞானத்தை, அருளொடு கலந்து பிள்ளையாருக்குக் கொடுத்து, அதனை அவர்வழியால் யாவர்க்கும் வழங்கத் திருவுளங் கொண்டான் என அறிக.

சிவபெருமான் தனது அருட்சத்தியையே தனக்கு உடம்பாகக் கொண்டு ஒரு கூற்றுனே சிவன் எனவும், மற்றெரு கூற்றுனே சத்தியெனவும் நிற்பன். அவ்வாறு இரண்டுருவாய் நிற்பினும், அவ்விரண்டு உருவிற்கும் தனித்தனி வேறு செயல்கள் உள என்பதின்றி, ஒரு செயலே உளது என அறிக. எனவே, சத்தி உடம்பளவாய் நிற்பதேயன்றிச் செயலை மேற்கொண்டு நிற்பதன்று என்றும், செயலை மேற்கொண்டு நிற்பவன் சத்தியையுடைய சத்தனே ஆவான் என்றும் அறிக. இறைவன் எவ்வுயிர்களுக்கும் நிமித்த காரணனாய் முன்னிற்பவன் என்றும், கருணையாகிய தூய உடம்பினன் என்றும், தூய உடம்பாக இருக்கும் அச்சத்தியைத் தன் வயத்ததாகவே வைத்திருப்பவன் என்றும் கொள்க.

சிவபெருமான், காழிப்பிள்ளையாருக்கு உண்பித்தற்குக் கறந்த பாலில் குழைத்த சிவஞானம், பாசஞான பசுஞானச் சார்புகளால் குன்ற வரும் பொய் கலந்தார்க்கு உணர்த்தத் தகும் ஞானம் அன்று, மெய் கலந்த அன்பர்க்கு ஊட்டத்தகும் சிவஞானம் என்றும், களிம்பில்லாத பொற்கலம் போன்று வேண்டப்படுவன எல்லாம் வேண்டாது மறந்து மிக்க அன்பே வேண்டும் மெய்கலந்த அன்பராகிய இப்பிள்ளையாரே இந்தச் சிவஞானத்துக்குரியார் என்றும், இச் சிவஞானப் பாலமுதம் உண்ணப் பெற்ற பிள்ளையார் 'உள்ளந்தாள் நின்று உச்சியளவும் நெஞ்சாய் உருகி, உடம்பெல்லாம் கண்ணாய் ஆனந்த வெள்ளம் பாய்ந்து' அவ்வன்பே சிவமாய் அமர்ந்திருந்தார் என்றும் உணரக் கிடந்தது காண்க.

'யாவருக்குந் தந்தை தாய் எனுமவர்' இப் பிள்ளையாருக்கு இப்படித் தந்தை தாயாக வந்து பால் கொடுத்தமையால் சிவஞானசம்பந்தராயினர். சம்பந்தப் பிள்ளையார் தீவிரதர அன்புடையவர். பிள்ளைப் பருவத்திலேயே அவ்வன்பு மேலிட்டெழுந்தது. அதற்குக் காரணம் முன்னைப் பிறவிகளிற் செய்த மேலாகிய உண்மைச் சரியை கிரியா யோகங்களேயாம். அவைகளே நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டுவன. நன்னெறியாகிய ஞானம் என்றது வீடுபேற்றுக்கு ஏதுவாகிய ஞானமாம். நன்மை எனப்படுவன எல்லாவற்றினும் சிறந்த நன்மையாவது வீடுபேறென்பது. நன்னெறி, சன்மார்க்கம் என்பன ஒரு பொருட் சொற்கள். சத்-ஞானம். அது பெருநெறி. படிமுறையானன்றி இவ்வொரு பிறவியிற் செய்த தவந்தானே அமையாதாகலின் முற்பிறவிகளிற் செய்த தவமாம் என்க. இதனை, ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள் தாம் அருளிச் செய்த சிவஞான போதச் சிற்றுரையில், "ஈண்டு இவ்வான்மாக்களுக்கு முற்செய்தவத்தான் ஞானம் நிகழும் என்றது" என்னும் மேற்கோளின் ஏதுவாகிய "மேற் சரியை கிரியா யோகங்களைச் செய்துழி நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டியல்லது மோக்ஷத்தைக் கொடாவாகலான்" என்பதற்குரிய உரையில், "ஆளுடைய பிள்ளையார் முதலாயினர்க்குத் தவமின்றியும் ஞானம் நிகழ்ந்தவாறென்னை என்னும் கடாவை விடுத்தற்கு மேற் செய்துழி என ஈண்டும் வலியுறுத்தார்" எனக் கூறியமை காண்க.

ஸ்ரீ சிவஞான யோகிகள் இவ்வாறு உரை வரைதற்குக் காரணம், "சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம், பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கியஞானம், உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம், தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில்" என்னும் ஸ்ரீ சேக்கிழார் நாயனர் அருளிச் செய்த திருப்பாடலின் குறிப்பேயாகும். 'தவமுதல்வர்' என்று அருளிச் செய்தலின், அதனையே அனுவதித்து 'முற்செய் தவத்தான்' என்று இவரும் அருளினர். சேக்கிழார் நாயனர் 'தவமுதல்வர் சம்பந்தர்' என்றதற்கும் காரணம் வேண்டுமே! அது இத் தேவாரத் திருப்பாடலில் 'ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த அருள்செய்த பெம்மான்' எனக் குறித்த அகச்சான்றே காரணமாம் என்க. முனைநாள் என்றது முன்னைப்பல பிறவிகளில் எனக் குறிப்பித்தபடி. இனி, கண்ணப்ப நாயனர் புராணத்திலும், "முன்பு செய்தவத்தினீட்டம் முடிவிலா இன்பமான, அன்பினை யெடுத்துக் காட்ட" என்று அருளிச் செய்தமையும் இதனை வலியுறுத்தும்.

எனக்கு 'அருள் செய்த பெம்மான் இவன்,' 'பிரமாபுரம் மேவிய பெம்மான்,' 'பீடுடைய பெம்மான் இவன்' என்றூர். பிரமதேவரால் வழிபடப் பெற்று, அதனல் பிரமாபுரம் என்னும் பெயரையடைந்த இத்தலத்து வீற்றிருக்கும் பெம்மான். அவன் பீடுடையனுயிருந்து தன்னையடைந்த ஆன்மாக்களையும் பீடுடையராகச் செய்பவன்; பீடு-பெருமை: பெருமையாவது பிறந்திறவாத்தன்மை. அது மங்கலம். மங்கலமா

வது சிவம். சிவமல்லாததெல்லாம் அமங்கலமாம்.

சாதல் பிறத்தல்கள் அமங்கலம் எனவே, சாதல் பிறத்தலின்மை மங்கலம் என்பதாயிற்று. அதுவே சிவப்பொருள். தான் சிவமாயிருந்து தன்னையடைந்தாருக்குச் சிவமாந்தன்மைப் பெருவாழ்வு அளிப்பவன் அப்பீடுடைய பெம்மான் ஆவன். அவனே இச் 'சிவஞானப் பாலமுது' அளித்தவன்; பிறர் அல்லர்.

'செவியன்' என்று அடையாளங் கூறுவாராய்த் தோடுடைய செவியன் என்று "அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்றறிக, அம்மையப்பர் அப்பரிசே வந்தளிப்பர்" என அப்பெருமானின் தடத்த லக்கணம் கூறினர். 'தோடுடைய செவி' அம்மையாரின் கூறு; அம்மை முகமாகவே தமக்குச் சிவஞானப் பாலமுதை இறைவன் அளித்தான். "பல்லுயிருங் களிகூரத் தம்பாடல் பரமர்பால், செல்லுமுறை பெறுவதற்குத் திருச்செவியைச் சிறப்பித்து" என்று சேக்கிழார் நாயனர் அருளினர்.

# ஓடும் நீரும் ஓட்டைக் குடமும்

[செல்வி சோ. பாகீரதி, எம்.ஏ., எம்.லிட்.
முதல்வர், ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்ருலம்]

"கனியி னுங்கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளு மரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே."

—திருநாவுக்கரசர் தேவாரம்

திருவிடைமருதூரில் திருக்கோயில் கொண்டிருக்கும் மருதப்பரைத் தெவிட்டாத் தெள்ளமுதம் என்று ஏத்துகின்ருர் நற்றமிழ்க் காவலர் நாவுக்கரசர். தீஞ்சுவைமிக்க மாங்கனியும் தின்னத் தின்னத் தெவிட்டிவிடும். கருப்பஞ் சாற்றினின்றும் எடுக்கப்பட்ட கற்கண்டின் சுவையும் தெவிட்டும். மணிமுடி புனைந்து மாநில முழுவதுமாளும் அரச பதவி அளிக்கும் இன்பமுங்கூடக் காலப்போக்கில் களைப்பையுஞ் சலிப்பையுந் தந்திடும். ஆனல் இன்ப வாரியாம் இறைவன் என்றும் இனியனாய் நின்று தன்னை அடைந்தவர்களுக்கு நிகரற்ற இன்பத்தை வாரி வழங்குகின்ருன்.

தொல்லையால் தாக்குண்டு துயரக் கடலிலே கிடந்துழலும் மனிதன் இன்பத்தின் எல்லையைக் காணத் துடியாய்த் துடிக்கின்ருன். 'இன்பம் எங்கே? இன்பம் எங்கே?' என்று ஏங்கிடும் அவனுக்கு உண்மையான இன்பத்தைக் காணும் அமைதியும் பொறுமையும் இல்லை.

பணமும் பதவியும் சுற்றமும் சூழலுந்தான் இன்பத்தைத் தர முடியும் என்றெண்ணி, அவற்றை அடையவே செல்லாத நெறியெல்லாஞ் செல்லுகின்ருன்; பொல்லாத வழியிலும் புகுகின்ருன். அவனே தேடிய அச்செல்வமுஞ் சிறப்பும் நிலையான இன்பத்தை அவனுக்குத் தந்தனவா? சிறிது காலம் இன்பம் பயப்பன போல் போக்குக் காட்டி இறுதியில் துன்பத்திற்கே அவனை இழுத்துச் செல்கின்றன. என் செய்வான் பாவம்! கலங்குகின்ருன்—கண்ணீர் வடிக்கின்ருன். பட்ட துன்பங்கள் அவன் அறிவைக் கூர்மையாக்குகின்றன. தெளிந்த நற்சிந்தையோடு சிந்திக்கின்ருன். இன்பத் தமிழில் நம் சான்ருேர் இதமுடன் பாடிய பாடல் அவன் இதயத்தில் ஒலிக்கின்றது:

"தந்தையார் தாயா ருடன்பி றந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தா மாரே,
வந்தவா றெங்ஙனே போமா றேதோ
மாயமா மிதற்கேதும் மகிழ வேண்டாம்,
சிந்தையீர் உமக்கொன்று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வாளரவுந் திளைக்கும் சென்னி,
எந்தையார் திருநாமம் நமச்சி வாய
என்றெழுவார்க் கிருவிசும்பி லிருக்க லாமே."

—திருநாவுக்கரசர் தேவாரம்

இம்மண்ணுலகில் காணும் உறவும் பிறவும் தோன்றி மறைவன; வாழ்விற்கு இவை தேவை. ஆனல் இவையே நிலைபெற்றவை என்றெண்ணி ஏமாற்றமடைதல் அறிவீனம். என்றும் இன்பம்

வேண்டின் இறைவனைச் சிக்கெனப் பிடித்திட வேண்டும். அப்பிடி ஒன்றுதான் மனத்திலே தோன்றிடும் எண்ணற்ற சிக்கலை அகற்றி அமைதியை நல்கிடும்.

மனிதன் உருவத்தால் மட்டுமன்றி உள்ளத் தாலும் மனிதனாய் வாழ இறைவனையே சார்தல் வேண்டும். ஆனால் கண்ணிற்குத் தெரியாதும் கருத்திற்கு எட்டாதும் இருக்கின்ற கடவுளை எங்கே காண்பது? எப்படிக் காண்பது? எவ் வாறு அவனை அடைவது?

சிந்தை வளமும் சொல்லிலே உறுதியுங் கொண்ட நாவுக்கரசர், ஆடுங்கூத்தனின் அழகுப் பொற்பாதத்தைக் கண்ணாரக் கண்டு களித்தார். தாம் பார்த்து மகிழ்ந்த இறைக் காட்சியை நாமுங் காணவேண்டும் என்று விழைந்து, எழிலோடும் எளிமையோடும் அவற் றைக் காட்டுகின்றார். கண்ணெதிரே அக்காட்சி படமாகத் திரையிலே ஓடுகின்றது. ஆயினும் கண்ணிருந்தும் குருடராய் அதனைப் பார்க்க முடியாமல் பரிதவித்து நிற்கின்றோம்.

வீட்டிலே இருள் மண்டிக் கிடக்கிறது. உள்ளே இருக்கும் எப்பொருளுந் தெரியவில்லை. அவ்வீட் டில் பழக்கப்பட்டவர், பையவே நுழைந்து வீட் டில் இருக்கும் அகல்விளக்கில் எண்ணெய் ஊற்றி நல்ல திரியும் இட்டு அதனை ஏற்றிவிடின், இருள் ஓடி மறைகின்றது—உள்ளே இருக்கும் எல்லாப் பொருளுமே தெள்ளெனத் தெரிகின்றன. இதே போல் நம் இருதயத்திலேயே குடிகொண்டிருக் கும் இறைவனைக் காண எங்கும் தேடவேண் டாம்; எத்திசையும் அலையவேண்டாம். மனித னின் உடம்பெனும் வீட்டில் உள்ளம் என்னும் அகல்விளக்குள்ளது. அதில் அன்பென்னும் உணர்வாம் நெய்யை வார்த்து, உயிர் என்னும் திரியைச் சரியாய் அமைத்து, அறிவென்னும் எரிகொண்டு ஏற்றிவிட்டால், உள்ளத்தே நிறைந் திருந்த கள்ளமாம் இருள் ஓடிட, அங்கே இன்பந்தரும் இறைக் காட்சி தோன்றிடும். இதனைத்தான் நாவுக்கரசர்,

> “ உடம்பெனும் மனைய கத்துள்
> உள்ளமே தகளி யாக
> மடம்படும் உணர்நெய் யட்டி
> உயிரெனும் திரிம யக்கி
> இடம்படு ஞானத் தீயால்
> எரிகொள இருந்து நோக்கின்
> கடம்பமர் காளை தாதை
> கழலடி காண லாமே ”

என்று அழகாகக் கூறுகின்றார்.

அகத்திலே அன்பு நிறையவே உயிர் தன்னைச் சிறிது சிறிதாக இழந்து இறைவனோடு இரண் டறக் கலக்கின்றது. அங்கேதான் இன்பம் பெருக் கிடுகின்றது. சோதியாய், சுடராய் உள்ள இறைக் காட்சியும் அப்போதுதான் புலப்படுகின்றது. அன்பால், அன்பிலே, அன்பிற்காகத் தன்னைத் தான் இழப்பதுதான் இறைவனைக் காணும் ஒரே வழி, இன்பத்தைத் தந்திடும் ஒப்பற்ற நன் மார்க்கம் என்ற உண்மையை உணர்த்த இதனினும் சிறந்த சான்றும் வேண்டுமோ?

இத்தகைய அன்பில் ஊறிக்கிடக்கும் உள்ளம், தன்னை இழக்க இழக்க ஒளியை ஊட்டிய உயிர், அகிலத்தில் நிற்கும் அனைத்திலுமே ஆண்டவ னைக் காணும் என்பதில் ஐயமுண்டோ! திரு வையாறு அடைந்தார் நாவரசர். அங்கு எல்லாம் சிவனாய், எங்கும் சிவனாய் இலங்கும் கண்கொள் ளாக் காட்சியைக் கண்டு களித்தார். தாம் கண்ட அக்கடவுட் காட்சியைப் பிறரும் காண வேண்டும் என்ற ஆர்வத்தில்,

> “ காதல் மடப்பிடியோடுங் களிறு வருவன கண்டேன்
> கண்டேன் அவர்திருப் பாதங் கண்டறி யாதன
> [கண்டேன் ”

என்று நெஞ்சம் நெக்குருகிப் பாடுகின்றார்.

கோழியும் பேடையும் கூடி வருகின்ற காட்சி யும், வரிக்குயில் பேடையோடு ஆடி வருவதும், அவருக்கு அன்னை சக்தியோடு காட்சி தரும் அப்பனாகவே தோன்றியது. மலையும் மண்ணும், விண்ணும் வெளியும், தீயும் நீரும், கடலும் காற்றும் எல்லாம் இறையாய், இன்பமயமாய் இலங்குகின்றன.

இத்தகு இறைவனை, நம் இதயத்தில் நிறைந் தானை, நம்மைச் சூழ்ந்துள்ள பொருளிலெல்லாம் ஊடுருவி நிற்பானைக் காணக் கங்கையை நாடி ஓடவேண்டாம். காவிரியிலும் ஆடவேண்டாம். குன்றமேறிக் கடுந்தவமும் இயற்ற வேண்டாம். வாடியூனை வருத்தியும் திரியவேண்டாம். இருக்கு மிடத்திலேயே இருந்து இதயக் கோவிலில் கள்ளமகற்றி மெள்ளப் பார்க்கின் அங்கே அவனைக் காணலாம். இதனை விடுத்து, இதய மதில் அன்பைப் பெருக்காது, இறைவனையும் குறுக்கு வழியில் அடைந்துவிடலாம் என்ற அறியாமையில் வேடமும் விரதமும் பூண்டு பூசனையும் விழாக்களும் எடுத்துவரும் மக்களைப் பார்த்து நல்ல தமிழ்ச் செல்வர்—சிந்தையழகியார் நாவுக்கரசர்,

> “ கோடி தீர்த்தங் கலந்து குளித்தவை
> ஆடி னாலும் அரனுக்கன் பில்லையேல்

ஓடும் நீரினை ஓட்டைக் குடத்தட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனே டொக்குமே ”

என்று கூறி எள்ளி நகையாடுகின்றார்.

உறுதியான உலோகத்தால் ஆக்கப்பட்ட குடம், புறத்திலும் அழகான பூ வேலைப்பாடு அமைந்துள்ளது. ஆனால் கண்ணிற்கு உறுதியாகத் தோற்றமளிக்கும் அக்குடத்தின் அடிப் பகுதியிலே ஓர் ஓட்டை விழுந்துள்ளது. உலோகத்தால் ஆக்கப்பட்ட குடம்—அழகிய குடம்—என்று எண்ணி அதில் ஓடுந்தன்மையையே தன் இயல்பாய்க் கொண்ட நீரினை நிறைத்து மூடி வைக்கின்றான். நீரும் அதில் தங்கியிருக்குமோ? குடத்தில் இட்டு வைத்த நீர் ஒழுகிப் போய்விடுகின்றது. ஓட்டைக் குடத்தில் நீரை வைத்தால் அது நிலைத்து நிற்காது என்பதை அறிந்திருந்தும் தெரிந்திருந்தும் அதனைச் செய்கின்றவனை மூர்க்கன் என்று அழைக்கின்றார் நாவுக்கரசர். “மூர்க்கனும் முதலையுங் கொண்டது விடா” என்ற முதுமொழிக்கேற்ப ஓட்டைக் குடத்தில் நீரினை அடைத்து வைத்தான்.

இந்த அழகிய உவமையைக் கொண்டு நாவரசர், சைவ சமயத்தின் அடிப்படைத் தத்துவத்தையே அழகாக விளக்கிவிடுகின்றார். எளிய உவமை; ஆனால் எழில் மிக்க கருத்துடையது. எல்லோரும் அறிந்த ஒரு சாதாரணச் செய்தி, ஓட்டைக் குடத்தில் வைக்கும் நீர் ஒன்றுக்கும் உதவாது ஓடிவிடும் என்பது. ஆனால் அந்த எளிய காட்சியைக் கொண்டே ஏற்றமிகு உண்மையை விளக்கி விடுகின்றார் நாவுக்கரசர். மனிதனின் இதயமெனும் குடம் அன்பெனும் பண்பால்தான் இறுக்கமாகும். அன்பற்ற மனித மனம் இறுக்கமற்ற ஓட்டைக் குடத்தையே ஒக்கும். அம்மனத்தில், இறைவனிடம் பாசத்தை வளர்க்க, சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் எவ்வளவுதான் கைக்கொண்டாலும் அவையெல்லாம் பக்தியை வளர்க்காமற் பயனற்றுப் போய்விடுகின்றன. இறைவனைக் காண, அவ்விறை தந்திடும் நிலையான இன்பப் பெருக்கிலே மூழ்கித் திளைக்க, இதயத்திலே இன்ப அன்பை நிறைத்து வைக்கவேண்டும். ஓட்டை இல்லாத உள்ளம்—கள்ளமும் கரவுமற்ற உள்ளம்—அதுவே நல்ல உள்ளம். அந்த உள்ளத்தில்தான் இறையன்பு, பரமனிடத்தில் உள்ள ஆழ்ந்த பக்தி தங்கி நின்று தழைக்க முடியும் என்ற அருமையான கருத்தை விளக்குவதே, “ஓடும் நீரும் ஓட்டைக் குடமும்” என்ற இந்த உவமை.

# அப்பர் தேவாரத்தில் சைவ சித்தாந்தக் கருத்து

[முதுபெரும் புலவர், பெருஞ்சொல் வள்ளல், சைவ சமய ஞான சிரோமணி,
தொண்டைமண்டல ஆதீனப் புலவர், செந்தமிழ்ச் செல்வர்,
பேராசிரியர், வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார், எம்.ஏ., பி.ஓ.எல்.]

அப்பர் என்பார் யாவர்? அவரே நந்தம் ஆளுடைய அரசாம் வாகீசப் பெருந்தகையார். அப்பர் என்பதன் பொருள் யாது? தந்தையார் என்பதன்றோ பொருள். இப் பெயரால், பொருளால் அழைத்தவர் யாவர்? வேத நெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்கப் பூத பரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத சீதவளவயல் புகலித் திருஞான சம்பந்தர் அல்லரோ! இந்த உண்மையை,

“ எழுதரிய மலர்க்கையால் எடுத்தி றைஞ்சி
விடையின்மேல் வருவார் தம்மை
அழுதழைத்துக் கொண்டவர்தாம் அப்பரே என ”

என்று தெய்வப் புலவர் சேக்கிழார் பெருமானார் உணர்த்துமாற்றால் உணர்கின்றோம்.

இதனால், தாண்டக வேந்தர் திருஞான சம்பந்தர்க்கு அன்பு முறையில் தந்தையார் ஆயினார் போன்று நமக்கும் அவர் தந்தையார் அல்லரோ!

அடுத்த சொல் ‘தேவாரத்தில்’ என்பது; இந்தச் சொல்லுடன் அப்பரையும் இணைத்துப் பொருள் காண்கின்றபோது, அப்பருடைய தேவாரத்தில் என்று பொருளாகின்றது. இதனால் அப்பர் பாடியதுதான் தேவாரம் என்பது பெறப்படுகின்றது. இந்த உண்மையினைச் சிறிது சிந்திப்பது சிந்தனைக்கு ஒரு விருந்தே ஆகும்.

பிற்காலத்தில் தேவாரம் என்பது மூவர் முதலிகளான அப்பர், சம்பந்தர், சுந்தரர் பாடிய பாடல்களின் தொகுதிக்கே பெயராக அமைந்து விட்டது. முதல்முதல், அதாவது, கி. பி. பதினன்காம் நூற்றாண்டில் திகழ்ந்த இரட்டையர்தாம்

மூவர் திருப்பாடல்களைத் தேவாரம் என்று கூறியுள்ளனர். இதனை அவர்கள் பாடியுள்ள ஏகாம்பரநாதர் உலாவில்,

“ மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும்
தேவாரம் செய்த திருப்பாட்டும் ”

என வரும் அடிகளில் காணலாம். இவர்களுக்குப் பிறகு கி. பி. பதினேழாம் நூற்றுண்டினரான சைவ எல்லப்ப நாவலர் தம் அருணைக் கலம்பகத்தில் நால்வர்களுக்கு வணக்கப் பாடலைப் பாடும் போது,

“ சைவத்தின் மேற்சம யம்வே
றிலைஅதில் சார்சிவமாம்
தெய்வத்தின் மேல்தெய்வம் இல்எனும்
நான்மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்திருத் தேவார
மும் திரு வாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர்பொன்
தாள்எம் உயிர்த்துணையே ”

என்று பாடியுள்ளனர். இதில் தேவாரமும், திருவாசகமும் எனப் பிரித்துக் கூறி இருப்பதனுல் திருவாசகத்தைப் பாடியவர் திருவாதவூரர் என்பது உலகறிந்த உண்மை ஆதலின், தேவாரம் என்பது நாவலரின் குறிப்புப்படி மூவர் பாடிய பாடல்களின் தொகுதி என்பது பெற்றும். கி.பி. பதினைந்தாம் நூற்றுண்டினர் எனக் கருதப்படுகின்ற குதம்பைச் சித்தரும் தம் பாடல் ஒன்றில்,

“ தாவரம் இல்லை தனக்கொரு வீடில்லை
தேவாரம் ஏதுக்கடி ?—குதம்பாய் !
தேவாரம் ஏதுக்கடி !”

என்று தேவாரத்தைக் குறிப்பிட்டுள்ளார். ஈண்டு மூவர் முதலிகளின் குறிப்பு இல்லை என்றுலும், தேவாரம் என்பதை மூவர் முதலிகளின் திருப்பாடல்கள் என்று கருத வேண்டியுள்ளது. (தேவாரம் என்பதற்கு வழிபாடு என்றும் பொருள் கல்வெட்டுக்களின் அறிய வருதலின், அப்பொருளை ஈண்டுக் கருதினும் கருதுக.)

ஆனுல், இற்றைக்கு நானூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள், பேரூர்ச் சாந்தலிங்க சுவாமிகள் பாடியருளிய கொலை மறுத்தல், வைராக்கிய தீபம், வைராக்கிய சதகம், அவிரோத உந்தியார் ஆகிய நூல்களுக்கு உரை எழுதி மேற்கோள்களைக் காட்டும்போது நால்வர்களின் திருப்பாடல்களைத் தனித் தனித் திருப்பெயர்களால் குறிப்பிட்டுள்ளனர். இந்த உண்மையினைத் திருஞான சம்பந்தருடைய பாடலைக் காட்டி இது திருக்கடைக் காப்பு என்றும், சுந்தரர் பாடலை எடுத்து எழுதி, இது திருப்பாட்டு என்றும், மாணிக்க வாசகரின் பாடலை எடுத்து மொழிந்து இது திருவாசகம் என்றும் எழுதி அப்பருடைய பாடல்களில் ஒன்றுன,

“ பழகி ருல்வரும் பண்டுள சுற்றமும்
விழவி டாவிடின் வேண்டிய எய்தொணு
திகழ்கொள் சேறையில் செந்நெறி மேவிய
அழக ளுர்உளர் அஞ்சுவ தென்னுக்கே ”

என்பதைக் காட்டி, இது தேவாரம் என்று உணர்த்தியுள்ளனர். இந்த உண்மையினை அவிரோத உந்தியாரின் பதினேழாவது பாட்டின் உரையில் காண்க. இதனுல் அப்பர் பெருமானின் திருப்பாடல்களே தேவாரம் என்பதைத் திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகளின் திருவாக்கால் உணர்கிறேம்.

அப்பர் தேவாரத்தில் என்னும் தொடருக்கு அடுத்துள்ள சொல் சைவம் என்பது. சைவம் என்பதன் பொருள் சிவத்தின் தொடர்புடைய சமயம் என்பதாகும். இந்தச் சொல் வடசொல் அன்று. தூய செந்தமிழ்ச் சொல்லே. சிவம் என்பது தமிழ்ச் சொல் என்பது மேனுட்டு மொழி நூலார் கண்ட உண்மையாகும். பித்தம் என்பதன் அடியாகப் பைத்தியம் பிறந்தாற் போல் சிவம் என்பதன் அடியாகச் சைவம் என்பது ஆயது. இந்தச் சைவ சமயமே உலக முதற் சமயம், இதற்குமேல் ஒரு சமயம் இல்லை. இந்த உண்மையினை வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற தவராச சிங்கமாம் தாயுமானவர்,

“ அயர்வறச்சென் னியில்வைத்து ராசாங் கத்தில்
அமர்ந்ததுவை திகசைவம் அழகிது ”

என்றும்,

“ சைவ சமய மேசமயம்
தீதப் பழம்பொருளைக்
கைவந் திடவே மன்றுள்வெளிக்
காட்டும் இந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந் துழலும் சமயநெறி
புகுத வேண்டா முத்திதரும்
தெய்வச் சபையைக் காண்பதற்குச்
சேர வாரும் செகத்தீரே ”

என்றும் கூறுமாற்றுலும், சைவ எல்லப்ப நாவலர்,

“ சைவத்தின் மேற்சம யம்வே
றிலைஅதில் தார்சிவமாம்
தெய்வத்தின் மேல்தெய்வம் இல் ”

என்றும் அறிவித்திருக்கும் ஆற்றுலும் இனிது உணரலாம். இதுதான் உண்மை என்பதை நன்கு உணர்ந்த மேனுட்டறிஞர்களும் இச் சைவ

சமயத்தின் தொன்மையினையும் சிறப்பினையும் பாராட்டியுள்ளனர்.

"Saivisim is the most ancient living religion in the world" என்றும் "Saivisim has a history going back to the Chalcolithic Age or perhaps even further still and it thus takes its place as the most ancient living faith in the world" என்றும் ஸர் ஜான் மார்ஷல் புகழ்வர்.

"It is the choicest product of the Dravidian intellect and the most elaborate influential and undoubtedly the more intrinsicably valuable of all the religions of India" என்று டாக்டர் போப் அவர்கள் உளமாரப் போற்றுகின்றார்.

இப் பத்தியின் திரண்ட கருத்து: சைவ சமயம் திராவிட மக்களின் மூதறிவின் விளைவு. இந்தியாவில் உள்ள எல்லாச் சமயங்களிலும் பரந்த நிலையுடையது. எல்லாராலும் செல்வாக்கும் பெருமதிப்பும் பெற்றுளது என்பது.

ஆகவே இத்தகைய பெருமைக்குரிய சைவ சமயத்தில் நாம் பிறந்திருக்கும் பேற்றை எண்ணிப் பெருமகிழ்வு கொள்ள வேண்டியவராக உள்ளோம்.

அடுத்துள்ள சொல் சித்தாந்தம் என்பது. சித்தாந்தம் என்றதும் வேற்றுச் சமய சித்தாந்தங்களைக் குறிக்காமல் சைவ சித்தாந்தத்தையே குறிக்கும். சித்தாந்தம் என்பதன் பொருள் சித்தர்கள் (அறிஞர்கள்) கண்ட முடிந்த முடிபு என்பதாகும். சைவ சித்தாந்தக் கருத்துத்தான் எந்நாட்டிலும் எம்மதத்திலும் நிறைந்த கருத்தாகும். சைவ சித்தாந்தத் துறையில்தான் தத்துவங்கள் ஒழுங்கான முறையில் நன்கு விளக்கப்பட்டுள்ளன. பிற சமயங்களில் விளக்கம் சரிவர இல்லை என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறிவிடலாம். இந்த உண்மையினை மேனாட்டவர்கள் நன்கு உணர்ந்துள்ளனர். இங்ஙனம் உணர்ந்தவர்களுள் ஒருவர் திரு. கவோலிக் என்பவர். அவர் ஒளிவு மறைவு இன்றி,

"There is no school of thought and no system of faith or worship that comes to us with anything like the claims of Saiva Siddhantha. The system possesses the merits of great antiquity. In the religious world, the Saiva system is the heir to all that is most ancient in South India; it is the religion of the Tamil people by the side of which every other form is of comparatively foreign and recent origin. As a system of religious thought, as an expression of faith and life, the Saiva Siddhantha is for the best that South India possesses" என்று வாயார மனமாரப் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

இந்த ஆங்கிலப் பகுதியின் திரண்ட கருத்து: "சைவ சித்தாந்தக் கொள்கை போன்ற கருத்து உண்மையும் வழிபாட்டு ஒழுங்கும் அமைந்த சமயம் எதுவும் இல்லை. சைவ சித்தாந்தக் கொள்கை மிகப் பழம் பெருங் கொள்கை. சைவ சமயமே பிற சமயங்களுக்கு வழி காட்டியாக உள்ளது. தமிழர் சமயம் இதுவே. மற்றைய சமயங்கள் இதற்கு வேறானவை. மேலும் அண்மையில் தோன்றியவை; தென்னிந்தியாவில் சமய உணர்வையும் உண்மை வாழ்வையும் வெளியிடும் ஆற்றல் கொண்டு இது சிறந்து விளங்குகிறது" என்பது.

இன்னோரன்ன சிறப்புகளுக்கு உறைவிடமான சைவ சித்தாந்தம் அறிவிப்பது யாது? இஃது இறை, உயிர், தளை ஆகிய இம் முப்பொருள்களைப்பற்றிய உண்மைகளை அறிவிக்கிறது. இம் முப்பொருளையும்பற்றிச் சுருக்கமாக நம் திருமந்திரம்,

> "பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
> பதியினைப் போல்பசு பாசம் அனாதி
> பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
> பதியணு கில்பசு பாசம் நில்லாவே"

என்று கூறுகிறது. இக் கருத்தை அடிப்படையாகக் கொண்டே திருமுறைகளான தோத்திர நூல்களுள் சிவஞான போத முதலான சித்தாந்த சாத்திரங்களும் திரிபதார்த்தங்களைப்பற்றி அறிவிப்பனவாயின. இந்த மூன்று பொருள்களை விளக்கும்போது பல அரிய கருத்துக்கள் சித்தாந்த நூல்களுள் கூறப்படும். மேலே காட்டிய திருமந்திரக் கருத்தை ஒட்டியே திருத்தருமை ஆதீன முதல் குருமகா சந்நிதானம் அவர்கள்,

> "என்னை அறிவென்றான் என்னறிவில் ஆனந்தம்
> தன்னைச் சிவமென்றார் சந்ததமும்—என்னைஉன்னைப்
> பாரா மறைத்ததுவே பாசமென்றார் இம்மூன்றும்
> ஆராய்ந் தவர்முத்த ராம்"

என்று பாடியுள்ளனர்.

இனிச் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் பல வற்றுள் இரண்டொரு கருத்துக்களைப்பற்றி மட்டும் இங்குச் சிறிது ஆய்வோமாக.

சிவஞான போதத்தின் பன்னிரண்டாம் நூற்பா,

“ செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடும் மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரனெனத் தொழுமே ”

என்பது.

இச்சூத்திரத்தின் கருத்து “ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களையும் (பாசங்களையும்) நீக்குக. அவற்றை நீக்கவில்லையாயின் இறைவனின் திருவடிகளை ஆன்மா அடைய ஒட்டாமலும் அவை தடுத்துவிடும். அத்தடையிலிருந்து நீங்க வேண்டுமானால் சிவனடியார்களுடன் இணங்குக. சிவத்தினிடத்து அன்பு கொண்ட சிவ வேடத்தாரையும், தூய இலிங்கமாக விளங்கும் திருக்கோயிலையும் சிவபெருமானாகவே எண்ணி வணங்குக ” என்பதாம்.

இக்கருத்தினால் பாசமானது ஆன்மாவை இறைவன் திருவடிகளில் பற்றில்லாமல் செய்ய முனைந்தாலும், அம்முனைப்பை அன்பர்களுடன் இணங்குவதாலும் சிவ வேடத்தாரையும், திருக்கோயில்களையும், சிவபெருமானாகவே எண்ணி வழிபடுவதனாலும் ஒழிக்கலாம் என்பது விளங்குதல் காண்க. இந்தக் கருத்துக்கள் எந்த அளவுக்கு அப்பர் தேவாரத்தில் காணக் கிடக்கின்றன என்பதை இனிச் சிந்திப்போமாக. இப்படிச் சிந்திப்பதற்கு முன் இந்த நூற்பா தோன்றுதற்கே அடிப்படையாக இருந்தது அப்பர் பெருமானார் தேவாரம் என்பதை மறுத்தல் கூடாது.

“செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா அம்மலம் ” என்பதன் கருத்துக்கு அரண் செய்யும் அப்பர் திருவாக்குத் திருவாவடுதுறைத் திருத்தாண்டகத்தில்,

“ மலந்தாங் குயிர்ப்பிறவி மாயக் காய
மயக்குளே விழுந்தழுந்தி நாளும் நாளும்
அலந்தேன் அடியேனை அஞ்சேல் என்னுய
ஆவடுதண் துறைஉறையும் அமரர் ஏறே ”

என்பதே ஆகும்.

“அன்பரொடும் மரீஇ ” என்னும் தொடரின் சிறப்பை விளக்கும் எடுத்துக்காட்டு, அப்பரது அருள்வாக்கில், திருவையாற்றில் கயிலைக் காட்சியைக் கண்டபோது பாடிய திருப்பாடலில் முதலில் வரும்,

“ மாதர்ப் பிறைக்கண்ணி யானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவார் அவர்பின் புகுவேன் ”

என்பது.

அடுத்து, “மாலற நேயம் மலிந்தவர் வேடமும்......அரனெனத் தொழுமே” என்பதன் கருத்துக்கு அரண் செய்யும் திருத்தாண்டகம்,

“ எவரேனும் தாமாக இலாடத் திட்ட
திருநீறும் சாதனமும் கண்டால் உள்கி
உவராதே அவரவரைக் கண்ட போதே
உகந்தடிமைத் திறம்நினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றுப்பூர் நடுதறியைக் காண லாமே ”

என்பது.

இறுதியாக ‘ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே” என்னும் கருத்துக்கு உகந்த எடுத்துக்காட்டுகளே மிகுதியும் அப்பர் தேவாரத்தில் காணப்படுகின்றன. இந்த உண்மையினை,

“ ......மயி லாடு துறை என்று
போற்று வார்க்குமுண் டோபுவி வாழ்க்
கையே ”

என்றும்,

“ கொன்றை மாலையும் கூவிளம் மத்தமும்
சென்று சேரத் திகழ்சடை வைத்தவன்
என்றும் எந்தை பிரான்இடை மருதினை
நன்று கைதொழு வார்வினை நாசமே ”

என்றும்,

“ விண்ணு ளாரும் விரும்பப் படுபவர்
மண்ணு ளாரும் மதிக்கப் படுபவர்
எண்ணி னார்பொழில் சூழ்இடை மருதினை
நண்ணி னாரைநண் ணாவினை நாசமே.”

என்றும்,

“ புல்லம் ஊர்தியூர் பூவனூர் பூம்புனல்
நல்ல மூர்திநல் லூர்நனி பள்ளியூர்
தில்லை யூர்திரு வாரூர்சீர் காழிநல்
வல்ல மூர்என் வல்வினை மாயுமே”

என்றும் பாடி இருத்தலால் அறிக. இந்த அளவோடு சிவனார் திருக்கோயில்களை அரனாக எண்ணி வழிபடுக என்று கூறி நிறுத்தாமல் தாண்டக வேந்தர், க்ஷேத்திரக் கோவை என்னும் தலைப்பின்கீழ்ப் பதினொரு திருத்தாண்டகங்களைப் பாடி இறைவன் உறைவிடங்களைச் சிவனாக எண்ணி வணங்குக என்று அறிவித்துள்ளனர். அவற்றுள் ஒன்று,

“ தில்லைச்சிற் றம்பலமும் செம்பொன் பள்ளி
தேவன் குடிசிராப் பள்ளி தெங்கூர்
கொல்லிக் குளிர்அறைப் பள்ளி கோவல்
வீரட்டம் கோகரணம் கோடி காவும்

முல்லைப் புறவம் முருகன் கண்டி
முழையூர் பழையாறை சக்தி முற்றம்
கல்லில் திகழ்சீ ரார்கா ளத்தியும்
கயிலாய நாதனையே காண லாமே"

என்பது.

அடைவுத் திருத்தாண்டகம் என்னும் பதிகமும் அப்பரது திருவாக்கில் உண்டு. அதில் பதினொரு திருத்தாண்டகங்கள் உள்ளன. அவை யாவற்றிலும் திருத்தலங்களின் பெயர்களையே எடுத்துப் போற்றி ஒவ்வொரு திருத்தாண்டகத்தின் இறுதியிலும், "இத்தலங்களைப் பகர்வோர் எல்லாம் பரலோகத்தில் இனிதாகப் பாவிப்பாரே" என்றும், "தொழ இடர்கள் தொடரா அன்றே" என்றும், "தாழ்ந்து இறைஞ்சத் தீவினைகள் தீரும் அன்றே" என்றும், "அடையவினை வேரும் அன்றே" என்றும், "புகுவாரைக் கொடுவினைகள் கூடா அன்றே" என்றும், "என்றென்றேத்தி இறைவனுறை வாம்பலவும் இயம்புவோமே" என்றும், "ஏத்துவோம் இடர்கெடநின் றேத்துவோமே" என்றும், "அனைத்தும் கூறுவோமே" என்றும், "அனைத்தும் வணங்குவோமே" என்றும் பாடி இறைவ னுறைவிடங்களை அரணாகக் கொண்டு வணங்குக என்று அறிவுறுத்தி யிருப்பதைக் காண்க. இவ்வடைவுத் திருத்தாண்டகங்களுள் ஒன்று,

"பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோ டெட்டும் மற்றும்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியல் பெரும்பனைய கொகுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட்டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்
திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்க
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரும் அன்றே"

என்பது.

காப்புத் திருத்தாண்டகப் பதிகம் என்னும் தலைப்பில் ஆறும் திருமுறையில் ஒன்று உண்டு. இதில் பன்னிரண்டு திருத்தாண்டகங்கள் உள்ளன. இப்பதிகத்திலுங்கூடத் திருக்கோயில்களையே எடுத்து மொழிந்துள்ளனர். இதன் குறிப்பும் இறைவன் உறைவிடங்களைப் போற்றினாலே இறைவனைப் போற்றியதாகும் என்பது. இந்த நுட்பத்தை உணர்த்தவே இத்திருத்தாண்டகங்களில் "கண்ணுதலான் காப்புக்களே", "தம்முடைய காப்புக்களே" என்றும் கூறப்பட்டுள்ளன. இத் தாண்டகங்களுள் ஒன்று,

"தீர்த்தப் புனல்கெடில வீரட்டமும்
திருக்கோவல் வீரட்டம் வெண்ணெய் நல்லூர்
ஆர்த்தருவி வீழ்சுனைநீர் அண்ணு மலை
அறைஅணிநல் லூரும் அரநெறியும்
ஏத்துமின்கள் நீர்ஏத்த நின்ற ஈசன்
இடைமருதும் இன்னம்பர் ஏகம் பமும்
கார்த்தயங்கு சோலைக் கயிலா யமும்
கண்ணுத லான் தன்னுடைய காப்புக்களே"

என்பது. இத்திருத்தாண்டகத்தில் ஆலயங்களையே அரணுகத் தொழுங்கள் என்பதை நமக்கு உபதேசம் செய்யும் முறையில் **ஏத்துமின்கள்** என்று கருணையுடன் கழறி யிருப்பதையும் உற்று நோக்குக.

இவ்வாறு பல அரிய சைவ சித்தாந்தக் கருத்துக்கள் அப்பர் தேவாரத்தில் மலிந்து கிடக்கின்றன. அவை அனைத்தையும் எழுதப் புகின் ஏடு இடந்தராது; என்றாலும் மற்றும் ஒரு சைவ சித்தாந்தக் கருத்தினைமட்டும் எடுத்துக்காட்டி இக்கட்டுரையினை முடிப்போமாக.

சிவஞான சித்தியாராம் சைவ சித்தாந்த சாத்திர நூலில்,

"யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்"

என்று ஒரு திருவிருத்தம் காணப்படுகிறது. இத்திருவிருத்தத்தை அருணந்தி சிவாசாரியர் இத்துணைத் திட்டவட்டமாகக் கூறுதற்குரிய ஆற்றல் அவர்க்கு எங்கிருந்து கிடைத்தது? அப்பர் பெருமானாரின் அருள் வாக்கின் கருத்துக்களின் பொருள் செறிவினால் கிடைத்தது அன்றோ! அவ்வருள் வாக்குகள் யாவை?

"யாதோர் தேவர் எனப்படு வார்க்கெல்லாம்
மாதே வன்னலால் தேவர்மற் றில்லையே"

என்று, ஆதிபுராணத் திருக்குறுந்தொகையுள்ளும்,

"பலவாய வேடங்கள் தானே ஆகிப்
பணிவார்கட் கங்கங்கே பற்றா னானை"

என்று, திருப்புள்கூரும், திருநீரும், திருத்தாண்டகத்துள்ளும் 'கொண்ட சமயத்தார் தேவனாகி' என்று, திருக்கருகாவூர்த் திருத்தாண்டகத்துள்ளும்,

"ஆரொருவர் உள்குவார் உள்ளத் துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்"

என்று, திருப்பூவணத் திருத்தாண்டகத்துள்ளும் கூறப்பட்ட கருத்துக்கள் அல்லவோ?

ஆகவே, அப்பர் தேவாரத்தில் இவை போன்ற சைவ சித்தாந்தக் கருத்துக்கள் பல இருத்தலின், அன்பர்கள் அவற்றைத் தாமே துருவித் தேடியுணர்ந்து சைவ சித்தாந்த அறிவில் திகழ்ந்து பொலிய யான் வழிபடும் அம்மை அப்பருடைய பொன்னார் திருவடிகளை வாழ்த்தி வணங்குகின்றேன்.

# அ!

[திரு வி. பலராமையா]

அ = அகாரம்

உ = உகாரம்

ம = மகாரம்

இது அகரத்தின் தூலரூபம்.

மெய்ப்பொருளைக் குருமுகமாய் அறியவேண்டும்: அதுவே சாகாக் கலை.

**அகரத்தின் மெய்ப்பொருள்:**

தமிழ்நாட்டு ஆசிரியர்கள் பரம்பரையாகக் குழந்தைகளுக்கு அட்சராப்பியாசம் செய்விக்கும்போது, 'அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை' என்று ஆரம்பம் செய்வர்.

ஆனால் இக்காலத்தில் பள்ளிகளில் நாய், கழுதை, பூனை, எலி, மீன், என்ற அட்சராப்பியாசமே நடந்து வருகின்றது. "அரிஓம்" என்ற வாசகத்தை இக்காலத்து ஆசிரியர்கள் விட்டதற்குக் காரணம் என்னவோ ஆண்டவனுக்குத்தான் தெரியும்.

இக்கட்டுரை ஆசிரியருக்கும் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் 1915-ஆம் ஆண்டு "அரிஓம்; நன்றாக; குருவாழ்க; குருவே துணை" என்ற உபதேசமே செய்யப்பட்டது.

தூலமாக இந்த உபதேசம் செய்யப்பட்ட போதிலும், அதன் மெய்ப்பொருளைப் புரிந்து கொள்ளக்கூடிய வயது இல்லாவிடினும், சிறு வயதிலிருந்தே 'ஆசிரியர் (குரு) நீடூழி வாழ வேண்டும்; அவர் துணை என்றும் வேண்டும்' என்னும் அவா, மனத்திலே பதிந்து அட்சராப்பியாசம் செய்த குருவிடம் பக்தியும், மரியாதையும் உள்ளத்திலேயே ஆழ்ந்து கிடந்தன.

வருடங்கள் செல்லச் செல்ல "அரிஓம்" என்ற சொற்களுக்குப் பொருள் அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஏக்கம் இருந்து வந்தது. அதன் சூட்சும விளக்கத்தைக் குருமுகமாய் நான் அறிந்ததை இங்கு எழுத முற்பட்டுள்ளேன்.

"அரி" என்பது என்ன? ஓம் என்பது என்ன? இவை இரண்டும் தனித்தனிப் பொருள்களா? அல்லது இரண்டும் ஒரு பொருளா?

இரண்டும் ஒரு பொருளேயாம். அதுவே சிவமாம்! சிவமும் சத்தியும் சிவத்திலிருப்பதாம். "ஓம்" என்பதே சிவமாம். 'அ' என்பதே சக்தியாம். சிவமின்றிச் சக்தியில்லை; சக்தியின்றிச் சிவமில்லை.

இந்தச் சக்தியென்ற "அகரம்" வாயு, வன்னி, வருணன் என்ற மூன்று பூதங்களுடையதாம். இந்த அகரத்தில் அகரம், உகரம், மகரம் என்ற மூன்று பூதங்கள் கூடியதால் இதற்கு ஓங்காரமென்ற பெயரும் அமைந்தது.

இந்த "அகரம்" என்ற சக்தி பஞ்சபூத தேகத்தையுடைய "வித்து" ஒன்றை ஈன்றது. இதையே சிவவாக்கியர்,

"ஐந்தும் மூன்றும் எட்டடா அநாதி யான மந்திரம்"

என்றார். ஐந்தும் மூன்றும் எட்டு (அ) என்ற எண் அகரத்தைக் குறிக்கும்.

இதையே பட்டினத்தடிகளும்,

"ஓங்கார மாய்நின்ற வத்துவி லேஒரு வித்துவந்து
பாங்காய் முளைத்த பயனறிந் தால்பதி னாலுஉலகும்
நீங்காமல் நீங்கி
நிறையா நிறைந்து நிறையுருவாய்
ஆங்கார மானவர்க் கெட்டாக் கனிவந் தமர்ந்திடுமே"

என்று சொன்னார்.

இந்த வித்தின் பயனறிந்தால், அதாவது மூன்று பூதங்களிலுள்ள உயிரையும் பஞ்சபூதங்களிலுள்ள மெய்யையும் அட்சராப்பியாசத்தின் விதிப்படி பிரித்துக் கூட்டி வைத்து அதை விரலால் தொட்டு இயங்கிக் கொண்டிருக்கும் 14 உலகங்களையும் பார்த்து, "சூனியமாகக் கடவது" என்று சொன்னமாத்திரத்தில் வெட்ட வெளியாய்த் தோன்றும்.

அதேபோல் வெட்டவெளியைப் பார்த்து "இதில் உலகம் தோன்றி இயங்குக" என்று நினைத்த மாத்திரத்தில் அவ்வண்ணமே உலகம் தோன்றி இயங்கக் காணலாம். அப்படிப்பட்ட வித்தாகிய சிவக்கனி ஆங்காரமானவர்க்கு விளக்கமுறாது என்கிறார்.

உலக சிருஷ்டியின் நிமித்தம் அறிவு வெளியிலிருந்து இரண்டாகப் பிரிந்த சக்தி நான் என்ற அகங்காரம் கொண்டவளாய் "அ" என்ற நாதத்துடன் காற்று, மழை, மின்னலுடன் கூடிய இடி "அ" என்ற நாத ஆவியாகத் தோன்றிற்று. தோன்றி நாம் வாழும் அண்ட சராசரங்களையும்

இச்சாமாத்திரத்தினால் சிருஷ்டித்து இயங்க விட்டது. ஆவி குளிர்ந்து இன்பமழையாய்ப் பூமியில் இறங்கிற்று. இதுவே அமுதமாம்.

இதை விளக்கவே தமிழ்த் தாயாகிய ஔவை,

> " ஆதியாய் நின்ற அறிவு முதலெழுத்து
> ஓதிய நூலின் பயன் "

என்று கூறலானார்.

முதல் எழுத்தாகிய "அ" சடமற்ற அமிர்த மாகும். இதை அஞ்ஞானிகள் காண்பதரிது. இந்த அமுதத்தைச் சித்தர்கள் சுத்தகங்கை, சந்திரபானம், சுரோணிதம், அமுரி, ஊசிநீர், பிரணவம் எனப் பலவகைப் பெயர்களால் அழைக்கலாயினர்.

சக்தி சிவநாத விந்துக் கலப்பால் பெய்த மழை பூமியில் சார்ந்ததும் கர்ப்பவாசமாகி, கருவுரு வாகி, தாவரவித்தாய் முளைத்து, மரமாகி நின்றது. இதற்குச் சீவ விருட்சமென்று பெயர்.

இந்தச் சீவவிருட்சம் தோன்றியதின் காரணம்: இறைவனின் மெய்யடியார்கள் வாழ்க்கை நலனைக் கருதி அவர்களுக்கு இகபரசாதனங்களுக்கு உதவி புரியவேண்டி, தாயின் கடமை கொண்ட கடவுள், ஆதியில் தோன்றிய எல்லாம் செய்ய வல்ல நாதத்தைக் "கரம்" என்ற சடத்துள் புகுந்து நிற்கும்படி கருணை பாலித்தார்.

இக்கருத்தினையே வலியுறுத்தித் தமிழ்த் தந்தையென்று சொல்லக்கூடிய வள்ளுவர்,

> " அகர முதல எழுத் தெல்லாம் ஆதி
> பகவன் முதற்றே யுலகு "

என்றார். எழுத்துக்களெல்லாம் "அ" என்ற நாத உயிர்வாழும் கரத்தை ஆதாரமாகக் கொண்டு வாழ்வதைப்போல் சிருஷ்டிப் பொருள்களெல்லாம் கடவுளை ஆதாரமாகக் கொண்டுள்ளன வென்று தூலமாகப் பொருள் கூறுவர்.

இதன் தத்துவார்த்தம் இன்னதென விளக்கில் அறிவுடையோர்களுக்கு நாம் கூறும் ஞானம் இன்னதென விளங்கும்.

தோன்றிய பொருள்களெல்லாம் தோன்றியது போல் மறைந்து போகின்றன. ஆனால் சீவ விருட்சம் ஒன்றுமட்டும் அழிவற்ற நிலையில் வாழ்ந்துகொண்டு, சுணைக்கதிர் வாங்கி மஞ்சள் கிழங்குபோல் பூ பூக்கு முன் "கரம்" போன்ற தேகத்தைப் பெற்றுத் துரிய நிலையிலிருந்து காட்சியளித்துக் கொண்டுளது.

கரத்துள் மறைமுகமாக வாழ்வது சத்திசிவ அமிர்தமாகும். "அ" என்ற நாத உயிரும், "கரம்" என்ற உடலும் கூடிய பொருளுக்கு, அ + கரம்—அகரம் என்று தமிழகச் சித்தர்களால் காரணப் பெயர் வழங்கலாயிற்று.

இந்த ரகசியத்தை உலகம் தோன்றிய நாளாய் ஒரு நூலாரும் தெளிவுபடக் கூறியதாகத் தெரியவில்லை.

"கரம்" என்ற சொல்லுக்குத் தொல்காப்பியம், நன்னூல் போன்ற நூல்கள் "சாரியை" என்று கூறி அத்துடன் விடுத்தன.

உயிரென்றால் அது அசைவோ, துடிப்போ, திரவ ரூபமோ பெற்றிருந்தாக வேண்டும். ஞானத்தைத் துன்மார்க்கர்கள் உணராது இருக்க வேண்டிப் பெரியோர்களால் சாபம் இடப் பட்டிருக்கிறது.

எழுத்துக்கெல்லாம் "அ" வாழும் "கரம்" முதலாகத் தோன்றியதுபோல் "கரம்" அந்தியம் உற்றதும் தன் கர்ப்பத்துள் உலக சிருஷ்டிக்குக் காரணகாரிய பூதங்களாகிய சிவசக்திகளே ஆதி சக்தியும் அந்தமுற்ற சிவம்; பகவனுமாகத் திரவ ரூபமாகப் பெற்றிருந்தார்கள்.

ஓரெழுத்தாகிய அமிர்தம் வாழும் இடம் "அகரம்" என்பதை விளக்கினோம். அகரம் தன் கர்ப்பத்துள் ஈரெழுத்தாகிய மெய் வாழும் சடம் ஃ—என்ற கனியையும் உயிர் நிலைக்கு வாழ உபகரணமாகச் சிருஷ்டிக்கப்பட்டுள்ளதென் பதை நாம் உணரவேண்டும்.

இந்த அகரத்தையே, ஆதிசக்தி, சூரியன், எண் கோணம், நாதம், எழுகடல்கள், எழுநிலை மாடம், ஏழு சபைகள், ஏகாட்சரம், அஷ்டாட்சரம், 51 அட்சரம், ஏழுமலையான், பிண்டம், ஜோதி, கந்தனுக்கு முன் பிறந்தவன், என்று பலதரப் பட்ட பரிபாஷை நாமங்களை இடங்களுக்குத் தக்கவாறு பெயரிட்டு அழைப்பது சித்தர்கள் வழக்கம்.

இறைவன் மெய்யடியார்கள் பிறவிச் சூழலிலிருந்து தப்பவேண்டின் ஆதியந்தப் பொருள்களின் உயிர்மெய்த் திரவங்களைப் பெற வேண்டும்.

"இளமையிற் கல்" என்று ஔவை கூறியது யாது? "அரிவோம்" என்ற பொருளிலுள்ள இரு சரக்குகளையும் நன்குயறிந்து சுத்தி செய்து, சுண்ணம் செய்து வைக்கப்பட்ட பொருள் குரு மருந்தாகும்.

குருமருந்தென்றால் அழிவற்ற நிலைபெற்று வாழ்ந்து கொண்டிருக்கவல்லது என்று பொருளாகும். அந்தத் திருநீற்றை எக்கருமங்களுக்கும் விரலில் தொட்டு நெற்றியிலணிந்து சிந்தனை செய்தால் எக்காரியமும் கைகூடும். அதைக் கொண்டே கற்ப சாதனை செய்தால் உயிரும்

மெய்யும் இணைந்து காயசித்தி பெறக்கூடும் என்பதைக் குழந்தைகளுக்குத் தூலமாகக் கற்றுக் கொடுத்தால் போதும்.

'அ' உயிரெழுத்தென்று மொழியாயிரம் கூறிடினும் 'அ' உயிர் உறைந்திருக்கும் உடலதனை கூறியது யார்?

இன்று உலகத்தில் நடைமுறையில் வழங்கும் மொழிகள் சுமார் 1000 இருக்குமென்று கருதப்படுகிறது. அவற்றுள் தமிழ் மொழி நீங்கலாக மற்ற மொழிகள் யாவும் உயிர்முதலெழுத்தை "அ" என்றுதான் உச்சரிக்கின்றன.

ஆனால் அந்த மொழிகளில் சொல்லின் பொருள் உணர்ந்து கொள்ளக்கூடுதில்லை. தமிழ்மொழியின் உயிர் முதலெழுத்து மட்டும் சித்தர்களால் "அகரம்" என்னும் காரணப்பெயர் இட்டு அழைக்கலாயிற்று.

சொல்லின் பொருள் உணரும் வாய்ப்பு தமிழ் மொழிக்கு மட்டும் அமைந்துள்ளது. அப்படியிருந்தும் "அ" என்ற உயிரும் "கரம்" என்ற உடலும் எத்தகைய உருவத்தைப் பெற்றுக் காட்சியளிக்கின்றன என்பதை அதிகம் கற்றறிந்தவர்களாலுங்கூட யூகித்து உணரக் கூடாத வகையில் மாயையின் வல்லமை அவர்களை ஞான சூன்யர்களாக வைத்துள்ளது.

ஆயிரம் மொழிகளை இயற்றிய அதிபர்களுள் உடலும் உயிரும் கூடிய அகரத்தின் இயற்கை உருவத்தை அகத்தியர் சொல்வாராய்:

"கம்பத் தெழுத்தோ கடையெழுத்தோ
கால்மே லாகுங் கடந்தெழுந்தோ
உம்பர்க் குரிய உயிரெழுத்தோ
ஒருகால் இருகால் ஓரெழுத்தோ
செம்பொற் கிரியைச் சார்ந்தோர்க்கென்றும்
அருள் புரியும்
51 அட்சரத்தில் அய்யா அகரமுத "ஔ"
எழுத்தென்று அறி"

(அகத்தியர் வாத காவியம்.)

என்றார்.

(ஔ—என்பது ஃ)

அதாவது பாய்மரம்போல் அசைவுறும் கம்பமாக நிற்கும் உயிர் முதலெழுத்து அகரமும் கடை எழுத்தாகிய அஃகரமும், ஈரெழுத்துகளுள் ஒரு காலாகிய அகரம் மேல் வளர்ந்தும் தன்னிலிருந்து இரு காலாகிய கடை எழுத்தை அப்புறப் படுத்திக் சொண்டும் வானோர்க்கு இகபரசாதனங்களை வழங்குவதற்கு அவற்றினுள்ளிருக்கும் உயிர்மெய்த் திரவங்களைப் பிரித்து ஒன்று சேர்த்துக் கைவசம் வைத்துக்கொண்டு செம்பொன் மலைபோல் விளங்கும் சிகரத்தை ஒத்த அஃகை உற்று உற்றுப் பார்த்துத் தியானித்திருப்பவர்களுக்கல்லவா இறைவன் அருள் வழங்கும்.

51 அட்சரங்களையும் ஆட்சி புரியும் அதிபதியாய் இருப்பது சீவ விருட்சத்தில் விளையும் ஆதி அந்தப் பொருள்கள் ஆகு மென்றார்.

ஆதியந்தப் பொருள்களில் வாழும் நாத விந்துக்களே காயசித்திக்குரிய முப்பு மருந்து. அதை விதிப்படி அட்சராப்பியாசம் மூலம் தயாரித்து அமுத பானம் செய்துவரின் மரணமற்ற வாழ்வைப் பெறலாமென்பதற்குக் கீழ்வரும் பாடல் ஆதாரமாகும்.

"நாத மென்ற உப்பி னோடு
நவின்ற விந்து கூடியே
ஆதி கார சாரத் தாலே
அமைந் ததுசொல் முப்புவும்
நீதி யாகய விந்த அந்த
ரங்கங் கண்டு நேர்த்தியாய்
சாத னை செய் வாரு மாகில்
சண்ட னேது ஆண்டையே."



# சித்தாந்தச் செந்நெறி

[வித்துவான் பொன். சுப்பிரமணியபிள்ளை, திருவிடைமருதூர்]

முன்னுரை :

தமிழ் தனிச் சிறப்புடைய தெய்வமொழி. இதனைச் சேக்கிழார் பெருமான் "ஞாலமளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்" என்று குறிப்பிடுகின்றார். இம்மொழியுணர்வு பெற்றோர் இறைவனுக்கு ஆளாகும் பெரு நெறியினை அறிவர். தமிழ்நெறியே சிவநெறி. சிவ சம்பந்தம் சைவம். சிவன் அநாதியாயுள்ளவன்; காலங் கடந்தவன். ஆதலின் அவனது சம்பந்தமும் அநாதி. அந்த அறிவை வெளிப்படுத்தும் இறைவனது வாய் மொழிகளும் பழமையுடையன. சைவம் என்றது சிவம் என்னும் சொல்லினடியாகப் பிறந்து சிவனுடன் தொடர்புடையது எனப்பொருள்படும்.

சித்தாந்தம் என்பது சித்த அந்தம் என்னும் இரண்டு சொற்களால் ஆகி முடிபின் முடிபு என்று பொருள் தரும் ஒரு சொல்லாம். சைவ சாத்திரங்களின் முடிந்த முடிபைக் கூறும் நூல்களைச் சைவ சித்தாந்தம் என்பர் பெரியோர். அச் சைவ சித்தாந்த நூல்கள் சிவபெருமானை எளிதில் அடைதற்கு உரியவழி இதுவென விளக்கிக் காட்டுவன. அந்த வழியே, கடவுளை நாடிச்செல்லும் வழிகள் பலவற்றுள்ளும் மிகச் சிறந்ததாகலின் சேக்கிழார் பெருமான் அதனை "முதற் சைவ நெறி" என்று குறிப்பிடுகிறார். சைவ நெறியே இறைவனுடன் கலத்தலாகிய திருவை அளிக்கவல்லதாகலின் திருமூலரும் அதனைத் "திருநெறி" என்று சுட்டுகிறார். திருநெறி, சிவநெறி, செந்நெறி என்பவை ஒரே பொருளைக் குறிப்பவை.

சிவபுண்ணியச் சிறப்பு :

சித்தாந்த நூல்கள் யாவும் சிவபுண்ணியங்களையும் சிவஞானத்தையும் செந்நெறியாகக் குறிப்பிடுகின்றன. அவைகள் குறிப்பிடும் புண்ணியங்களின் வகை பசுபுண்ணியம், சிவ புண்ணியம் என்பனவாம். பசுபுண்ணியமாவது அநாதிமல பெத்த பசுக்களாகிய ஆன்மாக்களைச் சுட்டிச் செய்யும் புண்ணியமாம். சிவபுண்ணியமாவது அநாதிமல முத்தபதியாகிய சிவபெருமானைச் சுட்டிச் செய்யும் புண்ணியமாம். அப் புண்ணியமாவது, ஆலயங்கட்டுதல், ஆலயஜீர்ணோத்தாரணஞ் செய்தல், திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், சுகந்த தூபமிடுதல், சிவபூஜை செய்தல் முதலிய பலவாம்.

குடிகளுக்குச் செய்யும் தீமையினும் அரசனுக்குச் செய்யும் தீமை மிகக்கொடியது. அங்ஙனமே ஆன்மாக்களுக்குச் செய்யும் துரோகத்தினும் சிவபெருமானுக்குச் செய்யும் துரோகம் மிகக் கொடியது. குடிகளுக்குச் செய்த தீமை அரசரால் ஒரு போழ்து பொறுக்கப்படினும் பொறுக்கப்படும். அரசனுக்குச் செய்த தீமையோ ஒரு போழ்தும் பொறுக்கப்படமாட்டாது. அதுபோல ஆன்மாக்களுக்குச் செய்த துரோகம் சிவபெருமானால் ஒருசமயம் பொறுக்கப்படினும் பொறுக்கப்படும். சிவபெருமானுக்குச் செய்த துரோகம் ஒருபோதும் பொறுக்கப்படமாட்டாது. ஆக, சிவத்துரோகத்தினும் மேலாகிய துரோகமுமில்லை. சிவபுண்ணியத்தினும் மேலான புண்ணியமும் இல்லை. இத்தகைய தீயவழிகளை விலக்கும் நெறிகளைக் கூறி நல்ல வழிகளை நிலைநாட்டுவதே சித்தாந்தச் செந்நெறியாகும்.

தக்கன் சிவதூடணஞ் செய்தபோது, அவியாசையாலும், அச்சத்தாலும், அபிமானத்தாலும் அதனைக் கேட்டுக்கொண்டிருந்த தேவர், முனிவர் முதலாயினோர் வீரபத்திரக் கடவுளால் அப்போது தண்டிக்கப்பட்டதோ டமையாது, பின்னரும் சூரன் முதலிய அசுரர்களால் துன்புறுத்தப் பட்டமையைக் கந்தபுராணத்தால் அறியலாம்.

சித்தாந்தச் செந்நெறி நிற்கும் சைவ சமயத்துக்குப் பரசமயிகளால் இடையூறு நேருகின்ற காலத்திலே அதனை நீக்கிச் சைவ சமயத்தை நிலைநிறுத்துதல் சிவபுண்ணியம் என்று சிறப்பித்துச் சொல்லப்படும். இதனை,

"நிறுத்திடவல் லாமைல னூனெறியை வென்று
மறுத்திடவல் லாவைல மார்க்கமய லுற்றே
நிறுத்திலன் மறுத்தில னெனிற்கரிசு நேசு
மறுத்தவனை மாகைகரி சல்லவற மாமே"

என்னும் சிவதருமோத்தரப் பாடலானறிக.

இதனாலன்றோ திருஞானசம்பந்தர் சமணரால் சைவ சமயத்துக்கு இடையூறு நிகழ்ந்துழி, திருவாலவாய்ப் பெருமானை நோக்கி, "ஞால

நின் புகழேயாகவேண்டு நான்மறைகளேத்துஞ்— சீலமே யாலவாயிற் சிவபெருமானே" என்று வேண்டியருளினர். ஒரு செயலை ஒருவன் தனக்குப் பயன்படுமாறு செய்தலாலும், பிறர்க்குப் பயன்படுமாறு செய்தலாலும், தனக்கும் பிறர்க்கும் பயன்படுமாறு செய்தலாலும் அச் செயல் மூவகைப்படும். இம்மூவகைச் செயல்களுள்ளும் தனக்கும் பிறர்க்கும் பயன்படுமாறு செய்யுஞ் செயலே மிகச் சிறப்புடையதாகும். அக்கருத்தினுற்ருன் திருஞானசம்பந்தர் யாவர்க்கும் பயன்படுமாறு அதியுத்தம சைவத்தாபன புண்ணியத்தை ஆலவாயண்ண லருட்டுணை பற்றிச் செய்தருளினர்.

**சைவசந்தான ஆசிரியர்கள் :**

அதன்பின் திருஞானசம்பந்தர் முதலிய நாயன்மார்களின் தேவாரங்களின் மெய்ப் பொருளை உள்ளடக்கிய சைவ சித்தாந்த சாத்திரத்தை வெளிப்படுத்திச் சைவஸ்தாபனஞ் செய்ய வல்ல ஆசாரியனைப் பெருமான் திருவெண்ணெய் நல்லூர் அச்சுதகளப்பாளர்பால் தோன்றச் செய்தார். அவருக்குத் திருவெண்காட்டு இறைவர் திருப்பெயராகிய சுவேதவனப் பெருமாள் என்று திருநாமஞ் சூட்டப்பட்டது.

பரமேசுவரன் சாதாக்கிய தத்துவத்திலே சதாசிவ மூர்த்தியாக எழுந்தருளியிருந்து சிவ ஞான போதத்தை அனந்தேசுவரர்க்கு அருளிச் செய்ய, அவர் ஸ்ரீகண்ட பரமேசுவரர்க்கு அருளிச் செய்ய, அவர் கல்லாலின் கீழிருந்து தமது மாணவராகிய நந்தி பெருமானுக்கு அருளிச்செய்ய, அவர் சனற்குமார முனிவர்க்கும், அவர் சத்திய ஞான தரிசனிகளுக்கும், அவர் பரஞ்சோதி முனிவருக்கும் அருளிச் செய்தார்.

பரஞ்சோதி முனிகள் கருணையினாலே, திருக்கயிலையை விடுத்து, அகத்திய முனிவரைக் காணவிரும்பிப் பொதியமலை நோக்கி விண் வழியாகச் செல்லுங்கால், அவர் எழுந்தருளிய விமானமானது திருவெண்ணெய் நல்லூருக்கு நேராகவந்து நின்றுவிட்டது. உடனே பரஞ்சோதி முனிவர் அதனைத் தெளிந்து சாமுசித்தராய்ச் சிவபெருமானை வழிபாடு செய்துகொண்டிருந்த மிகு பரிபக்குவமுற்ற சுவேதவனப் பெருமாளிடம் வந்து, சிவதீட்சை செய்து, பொய்ச் சமயங்களின் நெறி இது இது என்று கண்டு கழித்து மெய்ச்சமயமாகிய சைவ சித்தாந்தத்தின் உண்மையை உணர்ந்து சைவ ஸ்தாபனஞ் செய்ய வல்லவரென்றோர்ந்து, தமது ஆசிரியராகிய சத்தியஞான தரிசனிகள் திருநாமமாகிய மெய்கண்டார் என்னும் திருப்பெயரைச் சூட்டிச் சிவஞான போதத்தை உபதேசித்து, இதற்குப் பொழிப்பு உரைக்க என்று ஆணையிட்டு நீங்கி யருளினர். மெய்கண்டதேவர் அருணந்தி சிவாசாரியருக்கு உபதேசிக்க, அருணந்தி சிவாசாரியர் மறைஞான சம்பந்த சிவாசாரியருக்குச் சிவஞான போதத்தை உபதேசஞ் செய்தார். அவர் உமாபதி சிவாசாரியருக்கு உபதேசித்தார்.

உமாபதி சிவாசாரியரிடத்திலே அநுக்கிரகம் பெற்றவர் அருணமச்சிவாய தேசிகர். அவர் நவகோடி சித்தவாசபுரம் என்ற பெயருடைய திருவாவடுதுறையில் சித்தமூர்த்தியாக எழுந்தருளியிருந்த சித்தர் சிவப்பிரகாச தேசிகருக்கு உபதேசித்தருளினர். சித்தர் சிவப்பிரகாசர் திருமூவலூரிலே பரம்பரைச் சைவ வேளாள குலத்திலே திருவவதாரஞ் செய்த பஞ்சாட்சர தேசிகர் எனப்படும் நமச்சிவாய மூர்த்திகளுக்கு உபதேசித்தருளினர். இம்மூர்த்திகளே திருவாவடுதுறை ஆதீனத்துப் பிரதம ஞானாசாரிய சுவாமிகள்.

நமச்சிவாய மூர்த்திகள் திருவாவடுதுறையில் எழுந்தருளியிருந்து சிவப்பிரகாச தேசிகருக்கு உபதேசம் அருளிச்செய்தார். அவர் குருவாணையேற்றுத் தில்லை சென்றவர் அங்கு நிட்டையில் வீற்றிருந்தருளினர். பின்னர் நமச்சிவாய மூர்த்திகள் திருவாவடுதுறையிலே திருவவதாரஞ் செய்து தீவிரதரபக்குவராய் எழுந்தருளியிருந்த மறைஞானதேசிகருக்கு அபிஷேகஞ்செய்து உபதேசித்தருள, அவர் சைவ சித்தாந்த சாத்திரோபதேசங் கேட்டமாத்திரத்திலே சிந்தித்துத் தெளிந்து இடையறாது நிட்டையிலே வீற்றிருந்தருளினர்.

நமச்சிவாய மூர்த்திகள் ஆதீனபரம்பரையாகச் சித்தாந்தோபதேசம் விளங்கிவரும் வண்ணம் திருவுளம் கொண்டு அம்பலவாண தேசிகருக்கும், தட்சிணாமூர்த்தி தேசிகருக்கும் அபிஷேகம் செய்து சைவ சித்தாந்தோபதேசஞ் செய்தருளினர். தட்சிணாமூர்த்தி தேசிகர் சிவ ஞான போதக் கருத்தை உள்ளடக்கித் தசகாரியம், உபதேசப் பஃறொடை என்னும் இருநூல்களை அருளிச் செய்து பரிபூரணதசை அடைந்தார்.

அம்பலவாணதேசிகர், தசகாரியம், சன்மார்க்க சித்தியார், சிவாச் சிரமத் தெளிவு, சித்தாந்தப் பஃறொடை, சித்தாந்த சிகாமணி, உபாய நிட்டை வெண்பா, உபதேசவெண்பா, நிஷ்டை விளக்கம், அதிசயமாலை, நமச்சிவாயமாலை என்னும் பத்து

ஞான நூல்களையும், பூப்பிள்ளையட்டவணை எனப் படும் உயிரட்டவணையையும் அருளிச் செய்தார். அம்பலவாண தேசிகர் உருத்திரகோடி தேசிகருக்கும், அவர் வேலப்ப தேசிகருக்கும், அவர் குமார சாமி தேசிகருக்கும், அவர்பின் குமாரசாமி தேசிகருக்கும், அவர் மாசிலாமணி தேசிகருக்கும் அபிஷேகஞ் செய்து சைவ சித்தாந்தோபதேசஞ் செய்தருளினார்கள். மாசிலாமணி தேசிகர் பால் தீட்சை பெற்றுத் திருநெல்வேலியில் ஈசான மடாலயத்திலிருந்த சுவாமிநாத தேசிகர் இலக்கணக் கொத்து என்னும் நூலையும், தசகாரிய ஞான நூலையும் இயற்றியருளினார்.

மாசிலாமணி தேசிகர் இராமலிங்க தேசிகருக்கும், அவர் வேலப்ப தேசிகருக்கும், அவர் பின் வேலப்ப தேசிகருக்கும் உபதேசஞ் செய்தருளினார். பெரியபட்டத்து வேலப்ப தேசிகர் திருப்பறியலூர்ப் புராணம் பாடியருளினார். சின்ன பட்டத்துப் பின் வேலப்ப தேசிகர் பஞ்சாக்கரப் பஃறொடை என்னும் ஞானநூலை இயற்றினார்.

அம்பலவாண தேசிகர் அருளிய தசகாரியம் முதலிய பத்தும், தட்சிணாமூர்த்தி தேசிகர் அருளிய தசகாரியம், உபதேசப் பஃறொடை இரண்டும், சுவாமிநாத தேசிகர் அருளிய தசகாரியம் ஒன்றும், பின் வேலப்ப தேசிகர் அருளிய பஞ்சாக்கரப் பஃறொடை ஒன்றும் ஆகிய பதினான்கு ஞான நூல்களும் பண்டார சாத்திரங்கள் எனப் பெயர் பெற்று வருவனவாயின. இந்நூல்கள் யாவும் ஆதீன வெளியீடாக வெளி வந்துள்ளன.

பின் வேலப்ப தேசிகர்பால் சைவ சந்நியாசமும், சிவதீட்சையும் பெற்றவர்களே மாதவச் சிவஞான யோகிகள் ஆவார். அவர்கள் அருளியதே சிவஞான போத மாபாடியம். சிவஞான சுவாமிகள் திருக்கரத்தால் எழுதிய மாபாடிய ஏடு இன்றும் எங்கள் ஆதீன குரு முதல்வர்பாலுள்ளன. பின் வேலப்ப தேசிகர் திருச்சிற்றம்பல தேசிகருக்கும், அவர் அம்பலவாண தேசிகருக்கும், அவர் வேலூர் சுப்பிரமணிய தேசிகருக்கும், அவர் அம்பலவாண தேசிகருக்கும், அவர் மேலகரம் சுப்பிரமணிய தேசிகருக்கும் உபதேசம் செய்தருளினார். மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் சிவஞானசித்தியார் சுபக்கத்துக்குப் பதவுரை ஒன்று எழுதியிருக்கிறார்கள். இக்குரு முதல்வர் தொழுவூர் அம்பலவாண தேசிகருக்கு அபிஷேகம் செய்து வைத்தார்கள்.

அம்பலவாண தேசிகர் வைத்தியநாத தேசிகருக்குச் சுப்பிரமணிய தேசிகர் எனத் தீட்சா நாமஞ் சூட்டி அபிஷேகம் செய்தருளினார்கள். அவர் வைத்திலிங்க தேசிகருக்கும், அவர் அம்பலவாண தேசிகருக்கும், அவர் சுப்பிரமணிய தேசிகருக்கும் அபிஷேகம் செய்தருளினார்கள்.

அந்த ஞானபரம்பரையில் இது பொழுது இருபத்திரண்டாவது குரு மகா சந்நிதானமாக ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் பட்டமேற்று ஞானச் செங்கோல் செலுத்தி வருகின்றார்கள்.

இக் குரு முதல்வர்களது அருளாட்சியில் திருவிடைமருதூர் ஸ்ரீமகாலிங்க சுவாமி கோயில் பல இலட்ச திட்டத்தில் செப்பஞ் செய்து சிறந்த முறையில் நிறைவெய்திக் கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. அக் கும்பாபிஷேக நினைவாக வெளியிடும் மலரில் அடியேனையும் ஒரு கட்டுரை எழுதுமாறு குருமகா சந்நிதானம் அவர்களின் அருளாணை பிறந்தது. அவ்வாணையின் விளைவே இச் சிறிய கட்டுரையாகும்.

**சித்தாந்த சைவத்தின் பொருள்நிலை :**

ஞான பரம்பரையின் அடிச் சுவட்டை ஒட்டிச் சில கருத்துக்களைச் சுருக்கமாக ஈண்டுக் காண்போம்.

முழு முதற் கடவுளாகிய பரமசிவனால், உலகினருக் கென்று அருளிச் செய்யப்பட்ட சமயம் சைவ சமயமாம். அது சிவனால் ஆக்கப் பெற்றமையின் அப்பெயர் பெற்றது. சிவஞான சித்தியிற் கூறும் பொருள்கள் இறைவனும், இறைவனலருளப்பட்ட நூலும், அளவைகளும், பொருளியல்புகளும் முதலியவையாம். நம் முடைய சைவத்துக்குரிய இறைவன் சிவபெருமானே என்பது வெளிப்படை.

இறைவனியம்பிய நூல்கள் வேதசிவாகமங்கள். பொருள்கள் பதிபசுபாசங்கள். செய்திமுறைமைகள் சரியை கிரியை யோக ஞானங்கள். பெத்த நிலையாவது ஆன்ம ஞானம் மும்மலங்களால் மறைப்புண்டு கிடத்தலாம். ஆன்மா மும்மலங்களும் நீங்கப் பெற்றுச் சிவானந்தம் அநுபவிக்கப் பெறுதலே முத்தியின்பமாம். இதனை,

> படிக்கு நூல்கள் சிவாக மம்பசு
> பாசமோடு பதித்திறம்
> எடுத் தியம்புவ தீசன் வார்கழ
> லேத்திடுந் தொழிலொன்றுமே
> விடுத் திடும்பொருள் காம மாதிகள்
> வேண்டிடும் பொருளீண்டருள்
> முடித்து மும்மலம் விட்டு நின்மல
> னோடு நின்றிடல் முத்தியே

என்னும் சிவஞான சித்தித் திருவிருத்தத்தால் உணரலாம்.

சித்தாந்தச் செந்நெறிபற்றி நிற்கும் சைவ சமயத்தை விளக்கும் அருள் நூலாகிய சிவாகமங்கள் கூறும் நாற்பாதங்களுள் ஞானபாதத்து ஓதும் பொருள்களை ஆராய்ந்து நிர்ணயம் செய்வதற்கு எழுந்தது சிவஞான போதச் செந்நூல் என்பது திருக்கயிலாய பரம்பரைச் சந்தான குருமரபில் வந்த எங்கள் குரு முதல்வர்கள் எல்லோரும் எடுத்து அருளிய உண்மையாகும். சிவஞான போதம் என்ற பெயரும் இப்பொருள் தருவதென்பது திராவிட மாபாடியகாரராகிய எங்கள் மாதவச் சிவஞான யோகிகள் முதலிய அருளாளர்கள் நாட்டியவாறு பற்றியுணரப்படும்.

அதாவது சிவஞானம் இரண்டு வகைப்படும். ஒன்று திருவருள். ஏனையது திருவருளை அநுமானஞ் செய்துணர்த்தும் சிவாகமம். இதனை,

"உயர்ஞான மிரண்டாம் மாரு
மலமகல அகலாத மன்னு போதத்
திருவரு ளொன்று ஒன்றனைத் தெளிய வோதுஞ்
சிவாகமமென் றுலகறியச் செப்பு நூலே."

என்று உமாபதி சிவாசாரியர் விளக்கியருளியுள்ளார்.

சிவாகமம் பற்றி அநுமானஞ் செய்து திருவருண் ஞானத்தை உணர்த்துமாறு நமது சந்தான குரவருள் ஒருவராகிய அருணந்தி சிவாசாரியார்,

"ஆரியமாய் அறம்பொருளோ டின்பம்வீ டெல்லாம்
அறைந்துயிர்கட்கு அறிவுசெயல் அளிப்பதுநூல் அந்
கூரியராய் உண்ணவர்கள் ஓத வோதிக் [நூல்,
கொண்டுவர லால்முன்னே குற்ற மின்றிச்
சீரியபே ரறிவுடையோன் செப்ப வேண்டும்"

என்று அருளியவாற்றன் உணரப்படும்.

திருவருள் ஞானத்தை உணர்த்துவது சிவாகமங்கள் எல்லாவற்றிற்கும் உரியதேயாம். ஆக, இங்குச் சிவஞானத்தைப் போதிப்ப தென்பது சிவாகமங்களின் முடிந்த முடிபு. இதன் விளக்கத்தைச் சிவஞான மாபாடியத்துக் காணலாம்.

சிவஞானத்தை முற்றுணர்வுடைய இறைவனே அருளிச் செய்யற்பாலர். அவரால் அருளப்பட்டதே சிவஞான போதம். அதனைக் கருணையோடு நமக்கு அருளிய அருட்குரவர் மெய்கண்டதேவர். அவரே எங்கள் ஆதீனக் குரு பரம்பரையின் முதல்வர். அவரருளிய நூலே சிந்தாந்தச் செந்நெறியை விளக்கும் அருள் நூலாகும். அந்நெறியே நன்னெறியாகும்.

# திருக்குறளும் சைவ நெறியும்

[புலவர்மணி - வித்துவான் மு. இரத்தின தேசிகர், திருவாரூர்]

உலகப் பொதுமறையாகப் போற்றப் பெறுவது திருக்குறள். இதற்குக் காரணம், உலகத்துள்ள பல்வேறு மறைகளிலும் கூறப்பெறும் பொது அறக் கொள்கைகளையும் திருக்குறள் தன்னகத்தே கொண்டுள்ளமையே யாகும். குணங்குறியற்ற பரம்பொருளுக்குப் பல்வேறு பெயர்களையும் வடிவங்களையும் அவ்வச் சமயங்களின் தலைவர்கள், தாம் தோன்றிய நாட்டின் இயல், மக்கட் பண்பாடு ஆகியவற்றிற்கு ஏற்பக் கூறியமையால் சமயங்கள் பலவாயின. அவ்வச் சமயங்களின் உட்கிடைகளாகிய நுண்ணிய கருத்துக்களை எண்ணிப் பார்த்தால் சமயக் காழ்ப்பின்றி அனைவரும் ஒத்து வாழ இயலும் என்பது புலனாகும்.

முழுமுதற்றன்மைக்கு ஒவ்வாத இயல்புகளை இறைமைக்கு ஏற்றிக் கூறுவதனாலும் மத வேறுபாடுகள் தோன்றுகின்றன. இவற்றை யெல்லாம் உன்னித் தெள்ளி வடித்தெடுத்து அனைவரும் ஒப்ப ஏற்கும் உயர் கருத்துக்களை வள்ளுவர் தம் திருக்குறளுள் கூறி உள்ளமை யாற்றன் திருக்குறள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப் பெறுகிறது.

சைவ நெறியும் உலகப் பொது நெறியே. உலகாயதர் முதல் உயர்ஞானி வரையுள்ள அனைவரையும் படிமுறையில் வைத்துக் கூறுவது சைவநெறி ஒன்றே. ஒவ்வோருயிரும் இறைவன் அளித்த தனு, கரண, புவன போகங்களைப் பெற்று அவற்றின் வினைக்கீடாக முன்னேறி முடிவில் இன்பெய்துகின்றது என்பது சைவத்தின் துணிபு. இப்படிச் செல்லும் உயிர்கள் அவ்வந்நிலைகளுக்கு ஏற்பத் தெய்வக் கொள்கைகளிலும் மாறுபட்டிருத்தல் இயல்பு. இதனால் பரம்பொருளாகிய இறைவன் அவ்வுயிர்களை ஒறுப்பதில்லை. அவையும் தன் அருளாணை

யின் வண்ணம் வாழுமாறே செய்து அருள் பாலிக்கின்ருன்.

" விரிவிலா அறிவி ஞர்கள்
வேறெரு சமயம் செய்தே
எரிவினல் சொன்ன ரேனும்
எம்பிராற்கு ஏற்ற தாகும்
பரிவினல் பெரியோ ரேத்தும்
பெருவேளூர் பற்றி ஞனை
மருவிநான் வாழ்த்தி உய்யும்
வகையது நினைக்கின் றேனே "

என்பது அப்பர் பெருமான் திருவாக்கு.

" யாதொரு தெய்வங் கொண்டீர்
அத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாக ஞர்தாம்
வருகுவர் "

என்பது சாத்திர உண்மை.

மேற்சொன்ன உண்மைகளைக் கொண்டு திருவள்ளுவரை அணுகுவோம். அவர் கூறும் கொள்கைகள் சைவ நெறிக்கு எவ்வாறு இணைந்து நிற்கின்றன என்பதைக் காண்போம்.

முப்பொருள் உண்மையைக் கூறுவது சைவம். அவை, இறை, உயிர், உலகு என்பன. உலகு என்பது அசுத்த மாயா சம்பந்தமுடைய ஒன்று. உயிர்கள் எண்ணில சிற்றறிவும் சிறு தொழிலும் உடையன. உணர்த்த உணர்வன. இறை பேரறிவும் பேராற்றலும் படைத்தது. அனைத்தையும் தன் அருளாணையின் வண்ணம் இயக்குவது. இறையுணர்வை வள்ளுவர் பல இடங்களில் ஊட்டுகின்ருர். கடவுள் வாழ்த்து என்ற அதிகாரம் இறையுண்மைக்குத் தனித்த முறையில் அமைந்திருப்பினும்,

" முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும் "

என்ற திருக்குறளில் இறையுண்மையைப் பசுமரத்தாணிபோற் பதிக்கின்ருர் வள்ளுவர்.

" உண்ணுமை உள்ளது உயிர்நிலை ஊன்உண்ண
அண்ணுத்தல் செய்யாது அளறு "

" குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு "

என்பனபோன்ற திருக்குறள்கள் உயிருண்மையை வலியுறுத்துகின்றன.

" புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற "

என்ற அருமைத் திருக்குறளில் " ஈண்டும் " என்ற சொல்லால் இவ்வுலகையும், " புத்தேளுலகத்தும் " என்ற தொடரால் தேவருலகத்தையும் புலப்படுத்தியுள்ளார்.

" உண்ணுமை உள்ளது உயிர்நிலை "

என்ற குறட்பாவில் " அளறு " என்ற சொல்லால் நரக உலகத்தை நினைவூட்டுகின்ருர். இவற்ருன் சைவ நெறியெனும் முப்பொருளுண்மை வள்ளுவருக்கு உடன்பாடென்பது புலனுகின்றது.

பிறவி என்பது சங்கிலிப் பிணைப்புப்போல் உயிர்களை என்றும் பற்றி நிற்பது. இறப்பு என்பதும் அப்படிப்பட்டதே. இந்தப் பிறப்பு, இறப்பு என்ற இரண்டும் வள்ளுவருக்கு உடன்பாடானவையே. இதனை,

" உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு "

என்ற குறட்பாவில் எடுத்தியம்புகின்ருர்.

" பிறவிப் பெருங்கடல் நீந்துவர்
நீந்தார் இறைவனடிச் சேர்ந்தார் "

என்றும்,

" பற்றற்றே கண்ணே பிறப்பறுக்கும் "

என்றும் பிறப்பறுத்தற்கு வழிகளையும் கூறுகின்ருர்.

முத்திநிலை என்பது சைவத்தில் சொல்லப்படுகின்ற ஒரு பேருண்மை. இதுவே உயிர் எய்தும் முடிந்த இன்பநிலை. இதனை உயிர் அடைந்தபொழுதே பிறப்பிறப்பற்ற நிலைத்த நிலையினை உயிர் அடைகின்றது. இதனையே "சீவனர் சிவனுயிட்டிருப்பரே" என்று திருமந்திரம் சொல்லும். இதுவே உயிர் எய்தும் நீண்ட வாழ்க்கை, பேராத வாழ்க்கை. இந்த உண்மையினை,

" பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்ருர் நீடுவாழ் வார் "

" ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும் "

என்ற திருக்குறள்களால் புலப்படுத்துகின்ருர்.

இன்னும், இருவினை, பொறி, புலன், இம்மை, மறுமை, இன்பம், துன்பம், அறம், மறம்போன்ற, சைவ சமயத்திற்கு உடன்பாடான உண்மைகள் பலவும் குறள் நூலில் பரந்து கிடப்பதை நுனித்தறிந்து இன்புறுவது நம் கடனுகும்.

# நிட்டை விளக்கம்

[திரு டி. எஸ். தியாகராச தேசிகர், கடலூர்–1]

உடம்பு, உள்ளம், உணர்வு இம்மூன்றின் பிண்டமாக நாம் இப்போது சகலநிலையில் இருந்து வருகிறோம். இந்த நிலையில் இந்த உலகில் இன்பம் இருப்பதுபோலக் காணப்பட்டா லும் நிலைத்து நிற்பதில்லை. நிலைத்த இன்பத்தை எப்படிப்பட்டதெனத் தெரிந்து அதனை அடை வதற்கே நமக்கு உடம்பு முதலியன உதவப்பட் டுள்ளன. ஆனால் இம்மூன்றும் இந்த உலகத்தில் உள்ள சிறு போகத்தினை ஈட்டுவதிலும் துய்ப்பதி லும் ஈடுபட்டு அலுத்திடுகின்றன. இந்த அலுப்பு நீங்கி உடம்பு நீடிக்க வேண்டும்; உள்ளம் கள்ளம் அறப்பெற வேண்டும்; உணர்வு திருந்த வேண்டும். உடம்பு நீடிப்பதற்கு யோகம் உதவுகிறது. உள்ளம் கள்ளம் நீங்கப் பெறுவதற்கு ஞான நூற்பயிற்சி தேவைப்படு கிறது. உணர்வு திருந்துவதற்குச் சற்குருவின் பால் கேட்டல், கேட்டவற்றைச் சிந்தித்தல், சிந்தித்தவற்றை ஐயமறத் தெளிதல், தெளிந்த நெறியே நிட்டை கூடல் ஆகிய நான்கும் வேண்டியுள்ளன. சதாசாரியர்களை வழிவழிக் கொண்டு விளங்குவனவே ஆதீனங்கள். இவர் கள், மக்கள் யாவரும் இம்மையிலேயே நற்கதி பெறவேண்டுமென்கிற நாட்ட முடையவர்கள். ஆகையினால் இத்தகைய ஞானதபோதனர்கள் தம்மை அணுகியவர்களுக்குச் சாத்திர ஞானத் தினை அறிவுறுத்துகிறார்கள். சாத்திரஞானம் மட்டும் முத்தி பயந்துவிடாது. ஆனால் முப் பொருளுண்மையைத் தெரிவிக்கும். பாசம் என்பது எது? பசு (ஜீவன்) என்பதன் இயல்பு எது? இவ்விரண்டையும் கூட்டி நற்கதிக்கு உடனிருந்து நடத்தும் பதியின் பொது இயல்பு யாது? சிறப்பு இயல்பு யாது? இவற்றையெல்லாம் தெரிவிப்பதே சாத்திரங்களின் உட்கோள். இவற்றை நாம் அறியும்போது இடையிடையே அவரவர் பக்குவத் தரங்களுக்கு ஏற்றவாறு ஐயப்பாடுகள் அவ்வப்போது எழும். இந்த ஐயப்பாடுகளை நாம் நீக்கிக்கொண்டாலன்றித் தெளிவு ஏற்படாது. தெளிவு ஏற்பட்டாலல்லது நிட்டை கூடுதல் நிகழாது. ஆகையினால்தான், ஞானசாரியர்கள் தெளிவான முறையில் சிக் கறுத்து அநுபவ உண்மைகளையும் அருளிச் செய்திருக்கிறார்கள்.

நாம் சாத்திரங்களை இரண்டு வகையாகக் கொள்ளுகிறோம். அவை, சித்தாந்த சாத்திரங் கள் என்றும் பண்டார சாத்திரங்கள் என்றும் சொல்லப்படுவனவாம். முப்பொருள் உண்மை களை மெய்கண்ட சாத்திரங்களால் நாம் அறிய வேண்டும். அவ்வுண்மை வழி ஒழுகத் தலைப் படும்போது அநுபூதிமான்கள் அருளிச் செய் துள்ள பண்டார சாத்திரங்களைப் பயிலவேண் டும். இந்த முறையில் சித்தாந்த சாத்திரங்கள் சிவஞானபோதம் முதலாகப் பதினான்காம். பண்டார சாத்திரங்கள், துறைசையாதீனத்து மூன்றாம் பட்டத்து ஞானகுரவராகிய ஸ்ரீ அம்பல வாண தேசிகர் அருளிச்செய்துள்ள தசகாரியம் முதலாகப் பேரூர் ஸ்ரீவேலப்ப தேசிகர் அருளிய பஞ்சாக்கரப் பஃறொடை இறுதியாகக் கூறப்படும் பதினான்காம். சித்தாந்த சைவ நெறியியல் உணரும்போது ஏற்படும் குழப்பங்களையெல்லாம் இப்பண்டார சாத்திரங்கள் நீக்கும் தகையன.

இந்தவிதமான பதினான்கு பண்டார சாத்திரங் களுள் ஏழாவதாக உள்ள நூலே 'நிட்டை விளக் கம்' எனப்படுவது. இது ஸ்ரீ அம்பலவாண தேசிகர் அருளிச்செய்த பத்து நூல்களுள் ஒன்று கும். நிட்டை கூடுவதற்கான உபாயத்தைக் கூறியருளிய தேசிக மூர்த்திகள், உண்மை நிட்டை இன்னதென்பதையும் அதனைச் சாதித் துக் கொள்ளும் முறைமையையும் இந்த 'நிட்டை விளக்கம்' நூலினால் நமக்குப் போதித்துள்ளார் கள். நிட்டையில் பலவிதங்கள் உள்ளன. அவைபற்றிய நூல்களும் பல உள. ஆனால், நாம் எதுதான் உண்மை நிட்டை என்பதை அறியாவிடில் சீவன் முத்தி பரமுத்திகளாகிய பயன்களை இம்மையிலே எய்த முடியாது. ஆகையாலும் இந்த நிட்டை விளக்க நூல் சாதகர்களுக்கு உறுதுணையாயிருப்பதாகும்.

இனி, 'நிட்டை' என்னும் சொல்லானது "நிலையாகப் பற்றி நிற்பது" எனப் பொருள் தருவதாகும். உலகில் அவரவரும் தத்தம் அறிவுத் தரத்துக்கும், விருப்பப்படி நிலைகட்கும் தக்கவாறு நிட்டை மேற்கொள்வர். உலகாயத மான எந்த நிட்டையும் நிலைத்திருப்பதில்லை. ஏனெனில், பற்றப்படும் உலகப் பொருள்கள், அதாவது பாசப் பொருள்கள் நிலைத்திருப்ப

தில்லை. இவ்வாறு, தாமே நிலையில்லாதவையான பாசப் பொருள்களின்மீது பற்று வைத்து ஏமாற்றம் அடைவதே பாசநிட்டை எனப்படுகின்றது. மனைவி, மக்கள், மாடு, வீடு, செல்வம், பதவி, சுகம், போகம் இவற்றினிடமாக நாம் வைக்கும் எண்ணம்—விருப்பம்—யாவும் விரைவில் மறைந்து விடுகின்றன. இதனால் பாசநிட்டையை நாம் பற்றுவதால் பயனில்லை எனத் தெரியலாம். உழைப்புக்குத் தக்க பலனில்லாமையால் இப் பாசநிட்டை உதவாத ஒன்றாகும். இதனை மாயை நிட்டை என்றும் கூறுவர். பாசநிட்டை பற்றித் 'தத்துவப் பிரகாசம்' புலப்படுத்தும் பாடல் வருமாறு :—

" பொறிகெட இருத்தல் நிட்டை
போகநூல் தெரித்தல் நிட்டை
அருள்நெறி பாச ஞானம்
அப்பசு ஞான நிட்டை
தெருள்தெரி யோக நிட்டை
திகழ்காரணம் கெட்டால்
வருமெனும் நிட்டை எல்லாம்
மாயையின் நிட்டை யாமே."

இதுகாறும் பாசப்பொருள்களிலே நெஞ்சம் வைத்தல் வீண் என்பது கூறப்பட்டது.

மற்றும் சிலர், உள்ளத்தை வலிவுறச் செய்து அதனால் நன்மைகள் யாவும் அடையலாம் என எண்ணி, அதற்கான யோகநிட்டை புரிவதும் உண்டு. ஆன்மாவினிடம் மனத்தை நிறுத்தி விடுவதே போதும்; அதற்கு மேற்பட்ட பொருள் எதுவும் இல்லை என்றும், ஆன்மா அழியாதது, ஆதலால் அதுவே அழியா நிட்டையாகும் என்றும் கூறுவர். சுதந்தரக் குறைபாடுடைய ஆன்மாவையே முதற்பொருள் என மதித்து ஆன்மநிட்டை ஒன்றே சிறந்தது என்பதும் சரியன்று. இவ்வித நிட்டையால் அடையப்பெறும் நன்மைகள் பூரணமான பலனைத் தருவனவல்ல. இவ்வாறான நிட்டையினைப் பசுநிட்டை என்பர். பசுநிட்டையாவது,

" அட்டமா குணத்தின் நிட்டை
அருஞ்சித்தி எட்டின் நிட்டை
அட்டமா ருருவின் நிட்டை
அருநவ உருவின் நிட்டை
அட்டமாம் ஒளியின் நிட்டை
அதிற்செல்ஆ னந்த நிட்டை
அட்டமாம் வெளியின் நிட்டை
யவைபசு நிட்டை ஆமே."

ஆகையால் சீவனையே பெரிதென மதித்து அதனிடமே மனத்தினை இலயிக்க வைத்து, அடையப்பெறும் இன்பங்கள் கால நீட்டிப்பினை உடையனவாயினும், நிலையுதலுடையனவல்ல. ஆதலால் பசுநிட்டையும் நாம் மேற்கொள்ளற்பாலதன்றாம். இக்கருத்தினை,

" தாமே தமக்குச் சுற்றமும்
தாமே தமக்கு விதிவகையும்
யாமார் எமதார் பாசமார்
என்ன மாயம் இவைபோகக்
கோமான் பண்டைத் தொண்டரொடும்
அவன்தன் குறிப்பே குறிக்கொண்டு
போமா றமைமின் பொய் நீக்கிப்
புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே "

என்னும் திருவாசகப் பாடலால் அறிதல் கூடும்.

இவ்வாறு நிட்டைகள் பலவிதமாகப் பன்னப்படும். இவற்றையெல்லாம் நாம் ஞானநூல்களைக் கொண்டும், சதாசாரியருபதேசத்தைக் கொண்டுமே தெரிந்து தெளிந்து உண்மை நிட்டை கூடுதற்கு முயல வேண்டும். பிரமநிட்டை, ஞானநிட்டை, நிர்விகல்பநிட்டை, மவுனநிட்டை, சகஜநிட்டை, சமாதிநிட்டை இப்படியெல்லாம் பற்பலவிதமாக நிட்டைகள் உள்ளன. அவரவர்களும் இம்மாதிரியான பலவித நிட்டைகளில் ஈடுபட்டு அற்பமான பலன்களையும் அழிவுடைய பலன்களையுமே அடைந்து முடிவில் சலிப்படைவர். "சகச நிட்டைக்கும் என் சிந்தைக்கும் வெகு தூரமே" என்பது தாயுமானார் வாக்கு. அறிவு எங்கே போய் அடங்கி நிற்கவேண்டுமோ அங்கே போய் நிலையாக நின்று விடுவதே உண்மை நிட்டையாகும். உண்மை நிட்டையின் இயல்பை மெய் கண்ட தேவநாயனார் அருளிச் செய்துள்ள சிவஞான போதம் பதினொன்றாவது சூத்திரம் உணர்த்துகின்றது. சிவப்பேற்றினை அளிப்பது எதுவோ அதுவே உண்மை நிட்டை ஆகும். இதனையே சித்தாந்தம் ஞான நிட்டை என்றுரைக்கும். இதனைப் பரமசுக நிட்டை என்றும் சொல்வர். சீவ அறிவு சுத்தமாய் அருள் வயப்பட்டு, இறையறிவுள் நிலையாக நின்றிடுவதே சித்தாந்த நிட்டையாம். இதனை,

" பாசமா ஞானத் தாலும்
படர்பசு ஞானத் தாலும்
ஈசனை அறிய ஒண்ணாது
இறைஅருள் ஞானம் நண்ணித்
தேசுறும் அதனால் முன்னைச்
சிற்றறி வொழிந்து சேர்ந்து
நேசமோ டுஉயர்ப ரத்து
நிற்பது ஞான நிட்டை "

எனச் சிவப்பிரகாச நூல் சொல்லுகின்றது.

பாசம் நீங்கினால் போதாது; பாசப்பற்றும் நீங்கவேண்டும். இதற்கு நாம் பற்றற்றான்

பற்றினையே இடையறாமல் பற்றி (அறிவால் பற்றி) நிற்கவேண்டும். அகத்திலே முதல்வனோடு ஒற்றுமைப்பட்டிருக்கவேண்டும். புறத்திலே பிராரத்தம் உணரப்பெறாமல் இருப்பதற்கு இறை பணியில் நிறைவு கொள்ளவேண்டும். இதனால் தற்செயல் அற்றுப்போம். முதல்வனுடைய அருளுடன் உயிரினுடைய அறிவு, இச்சை, செயல் மூன்றும் கலந்து நிலைத்திடும். இங்ஙனம் நிற்பதனால் அருளுதயம் ஆகும். இவ்வருளுதயத்தால் உண்மை உணரப்படும். அந்த உண்மை இன்னதென்பதையே,

“ காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போற்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே ”

என்ற சூத்திரம் தெரிவிப்பதாகும்.

கண்ணானது உருவத்தைக் காணவேண்டுமாயின் உயிர் காட்டினால் அன்றிக் காண முடியாது. உயிர் காட்டக் காணும் இயல்புடையதே கண். இந்தக் கண்ணானது உருவத்தைக் காணவேண்டுமானால் அந்தக் கண்ணோடு உயிர் கலந்து நின்று காணவேண்டியுள்ளது. ஆகவே, கண்ணுக்கு உருவத்தைக் காட்டியும் கண்ணோடு கலந்து நின்று உருவத்தைக் கண்டும் வருகின்றது உயிர்.

இவ்வாறே அறிவிக்க அறியும் இயல்புடைய உயிர்க்குப் பொருளை அறியுமாறு, முதல்வன் அவ்வுயிரோடு கலந்து நின்று அறிவித்தும் அறிந்தும் வருவன். இந்த அத்துவித நிலையினை உறுதியாகக் கொண்டு அயரா அன்புடன் முதல்வன் இணையடியையே பற்றி நிற்கவேண்டும். அங்ஙனம் நிற்பதே உண்மை நிட்டை எனப்படும். பதினோராம் திருமுறையில் கூறப்படும் அடியார் பெருமக்கள் யாவரும் இவ்வுண்மை நிட்டையாளர்க்கு எடுத்துக்காட்டாவர்.

“ பனிமதி மருமான் கோயில் பாணிசைக் கிழமை நீத்துக்
குனிமதி மிலைந்த நாதன் கோயில்முப் போதும் எய்திக்
கனிமதி அன்பிற் பாடும் கடப்படு நியமம் பூண்டான் ”

என்று திருவிளையாடற் புராணத்தே, பாணபத்திரர் புரிந்துள்ள உண்மை நிட்டையின் வாயிலைக் காணலாம்.

நாம் பதிஞானமே நாடி, ஏனைய இரண்டையும் நீத்து அருள் வழியே சென்று, ஆனந்தம் அடைய முயல்வதே உண்மை நிட்டையின் வாயில் ஆகும்.

“ நன்று மாதர நாவினுக்
கரசடி நளினம்வைத் துயின்அல்லால்
ஒன்று மாவது கண்டிலம்
உபாயம்மற் றுள்ளன வேண்டோமால்;
என்றும் ஆதியும் அந்தமும்
இல்லதோர் இகபரத் திடைப்பட்டும்
பொன்று வார்புகும் சூழலிற்
புகேம்,புகிற் பொறியில்ஐம் புலனோடே ”

என்பது பதினோராம் திருமுறை இறுதிப் பாடலாகும். இதிலும் உண்மை நிட்டை எய்துவதற்கு உரிய உபாயம் கூறப்படுதல் உணரத்தகுவதாம்.

முடித்துக்கூறின், நாம் யாவரும், நிட்டைமுறைகள் பற்பல உள எனத் தெரிந்து, உண்மை நிட்டை யாதெனக் குருவருளால் தெளிந்து அந்நெறியே நிலைத்து நிற்போமாயின், இம்மையிற் சீவன் முத்தியும் அம்மையில் பரமுத்தியும் பெறுதல் திண்ணமாம். நிலைத்த இன்புக்குரிய வழி, நிட்டை விளக்கம் பெறுதலேயாம்.



# அதுவோ உனதின்னருள் !

[வித்துவான் திருமதி ப. நீலா, தருமை]

" வேத மோதும் விரிசடை யண்ணலார்
பூதம் பாடநின் ருடும் புனிதனுர்
ஏதந் தீர்க்கு மிடைமரு தாவென்று
பாத மேத்தப் பறையும்நம் பாவமே."

வேதம் விரித்த விரிசடையண்ணல் திருவிடைமருதூரின்கண் அமர்ந்து அருள்பாலிக்கிருன். அவனது அருளைப்பெற மனித இனம் எவ்வாறெல்லாமோ முந்துகிறது. அப்பர் பெருமான் அருளுகிருர். 'இடைமருதா' என்று கசிந்து சொன்னுல் போதும் அவன் நம் கவலையுடன் நம்மைப் பற்றிய பாவத்தினையும் தீர்த்திடுவான். அவன் எப்படிப்பட்டவன்? கனியினும் இனியன், கட்டிபட்ட கரும்பினும் இனியன், பனிமலரணிந்த பாவை நல்லாரினும் இனியன்! ஆனுல் அவனது இனிமையை அவனடியடைந்தாரே உணர முடியும். அந்நிறை குணத்தவன் ஏரி நிறைந்தனைய செல்வனுக இருக்கிருன். சென்ருேர் முகந்துகொண்டு இன்புறலாம். அவனை விண்ணுளாரும் மண்ணுளாரும் விரும்பும் இரகசியம் இதுதான் என்று வெளிப்படுத்துகிருர் நாவுக்கரசர். வினை கெடவேண்டின் வித்தகன் பாதம் பற்றிடுக என்கிறது பாடல்.

" விண்ணு ளாரும் விரும்பப் படுபவர்
மண்ணு ளாரும் மதிக்கப் படுபவர்
எண்ணி ஞர்பொழில் சூழிடை மருதினை
நண்ணி ஞரைநண் ணுவினை நாசமே."

படைத்து, காத்து, அழித்து, மறைத்து, அருளி ஐந்தொழில் புரிந்து ஆனந்தத் தாண்டவமாடும் அம்பலத்தரசன் தன் பக்தர்களுக்காக எத்துணை எத்துணையோ அருட்செயல்களைச் செய்துள்ளான். அவை எண்ண எண்ண இனிக்கும்; எழுத எழுத வளரும். பண்ணுேடு இயைபுற்ற பாடலால் பக்தர்கள் பாடிப் பரவி அவ்விறைவனைப் பக்தி வலையில் பிணித்துவிட்டார்கள்.

சீர்பெற்ற புவனம் பின்னும் செழிக்கவந்த சைவ ஆசாரியர்கள் நால்வர். பூழியர் கோனின் வெப்பை யொழித்த புகலியர் கோனும், ஆழி மிசைக் கல்மிதப்பில் அணைந்த பிரானும், அவிநாசியில் அந்தணக் குழந்தையை முதலைவாயிலிருந்து தருவித்த ஆலால சுந்தரரும், நரியைப் பரியாக்க நாயகனைத் தூண்டிய வாதவூரரும் சைவம் செய்த தவத்தால் பூமியில் பிறந்து புழுதியாடிப் பின் பூதியாடிப் பெருமானருள் பெற்ருர்கள். இவர்கள் செய்யாத அற்புதமில்லை. இவர்களுடைய தெய்வவாக்கால் சவமும் உயிர் பெற்றுச் சைவமாகும். (திருமருகலில் ஞானக் குழவியார் இறந்தவனை உயிர்ப்பித்த அற்புதத்தினை நினைக்க.) நாம் செய்ய வேண்டுவதெல்லாம் மீண்டும் சைவம் உயிரிழந்து முன்னை நிலையாகாமல் காக்க வேண்டுமென்பதே.

சிவநெறித்தலைவர் நால்வரும் நான்கு முறையில் ஈசனேடு தொடர்பு கொண்டவர்கள். சத்புத்ர, தாச, சக, சன்மார்க்கங்களை முறையே திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், திருநாவலூரர், திருவாதவூரர் சிறப்பாக விளக்கஞ் செய்தனர். இதில் அப்பருக்கும் வாதவூரமைச்சருக்குமில்லாத தனியுரிமை சுந்தரர், சம்பந்தர் இருவருக்கும் இருந்தது.

ஈசனருள்பெற்ற தேசில்மிக்க சீர் திருநாவலூரர் திருவாரூர்ப் புற்றிடங்கொண்ட பெருமான் சந்நிதியில் பரவையென்ற பேரழகியைக் கண்டு காமுற்ருர். மோகம் என்ற பரவையில் மூழ்கித் தடுமாறும் தம் தோழனுக்குப் பரவையென்ற புணையையே தந்து மகிழ்வித்தார் எம்பெருமான். அம்மட்டில் விட்டாரா சுந்தரர்? வலிய வந்து தோழமை தந்த ஏந்தலிடம் என்னென்ன வேலைகளை வாங்குகிருர் பாருங்கள் :

குண்டையூரில் நெல் பெற்ருர். சுமக்க ஆள் வேண்டுமே; என் செய்வது! நெல்லின்றிச் சென்ருலோ காதல் மயிலின் கண்கள் கலங்கிவிடும். யாரிடம் சொல்வார்—சொல்லமுடியும்! நண்பனிடம் மனந்திறந்து பேசுகிருர்; 'நீள நினைந்து அடியேன் உம்மை நித்தலுங் கைதொழுவேன். வாளன கண் மடவாள் வாடி வருந்துவாள். கோளிலிப் பெருமானே! குண்டையூரில் நான்பெற்ற நெல்லை அட்டித்தரப் பணி' என்று பாங்காகவும் பரிவாகவும் பேசி வேலையை முடித்துக் கொண்டார்.

பின்பொருநாள் செறிபுன் சடையார் திருவாரூர்த் திருப்பங்குனியுத்தரத் திருநாள் வந்தது. பரவையின் கொடைக்குக் குறைவில்லாமல் பொன் வேண்டும். என் செய்வார்? திருப்புகலூர்ப் பெருமானை நம்பி எழுந்தார்; பொன் வேண்டினார்; வெள்ளிமலையானின் உள்ளம் இளகவில்லை. வறிதே மீளேன் என்பார்போல் திருமுன்றிலில் கிடந்துறங்கினார். விரிசடையான் செங்கற்களைப் பொற்றின் கற்களாக மாற்றியருளினான். இறையருள் பெற்ற பின்பு மகிழ்ந்து பாடினார் நம்பியாரூரர்.

பல பதிகளையும் பரிந்து வணங்கிச் செல்லும் ஆரூரர் மழபாடியுள் நுழைய மறந்தார். மண் மேல் சொற்றமிழ் பாடுக என்றாணையிட்ட முதல்வன் முதியவனாகத் தோன்றி 'மழபாடியினில் வருவதற்கு நினைக்க மறந்தனையோ?' என்று கேட்டு, சுந்தரரின் பாட்டாம் அர்ச்சனையைப் பெற்றார். தடுத்தாளும் பெருமானின் தகைமை நெஞ்சைப் புல்ல,

"பொன்னார் மேனியனே புலித்
தோலை அரைக் கசைத்து
மின்னார் செஞ்சடை மேல்
மிளிர் கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழ
பாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி
யாரை நினைக்கேனே"

என உளங்கரைந்துருகிப் பாடி அத்திருத்தலத்தில் சிலநாள் தங்கி இன்புற்றார் நம்பி ஆரூரர்.

வன்றொண்டருக்கு ஏத்துவதும் போற்றுவதும் எப்படி இயல்போ அப்படியே ஏசுவதும் இகழ்வதும். இஃது அவருக்கும் இறைவனுக்குமுள்ள தோழமையைத் தெளியக் காட்டுகிறது. திருப்பாச்சிலாச்சிரமத்தில் பொன் வேண்டி நிற்கிறார். பால்மதி வேணியன் இவர் படும் பாட்டோடு பாடும் பாட்டையும் சுவைக்கும் பண்பாளன். இங்கும் சற்று விளையாட எண்ணினான் போலும்! வன்றொண்டர் வேண்டியும் பொன்தர மறுத்து விட்டான். நன்று பெருகும் பொருட் காதல் நயப்புப் பெருக நாதரெதிர் நின்று பரவியும் நினைத்த பொருள் கிடைக்காதொழியவே திருத்தொண்டர்கள் முன்னின்று 'இவரலாது இல்லையோ பிரானார்' என்று முறையிடுகிறார். அன்பு நீங்கா அச்சமுடன் அடுத்த திருத்தோழமைப் பணியால், பொன் பெறாத திருவுள்ளம் புழுங்க அழுங்கிப் புறம் போந்து,

"அன்னையே என்னேன் அத்தனே என்னேன்
அடிகளே யமையுமென் றிருந்தேன்
என்னையும் ஒருவன் உளனென்று கருதி
இறைஇறை திருவருள் காட்டார்"

என்று உள்ளம் வெதும்புகிறார். 'அன்னையும் அப்பனும் நீயே என்றிருந்தேன். ஆனால் இறைவனே நீயோ திருவருளை இறையுங் (சிறிதும்) காட்டாமல் என்னை ஏங்கவிடுகிறாய்' என்று பாடினார். பின்னும் 'யானுனக்கு ஒருமை மட்டுமல்ல, எழுமையும் அடிமையல்லவா! இப்படி நான் கூறிய சொற்கள் உன்னை ஏசுவதாகவோ இகழ்வதாகவோ அமையா. அப்படியே அமைந்தாலும் பொறுப்பதன்றோ நின் கடன்? நான் பேசின பேச்சைப் பொறுத்திலராகில் இவரலாது இல்லையோ பிரானார்! எனக்கு இவரன்றித் துணை வேறு யார்?' என்று பரிந்து பாடக் கேட்டும் பொன் தராது போவாரா பிரான்! பொன் பெற்றார்; உள்ளம் மகிழ்ந்தார்.

இசைஞானி காதலன் இறைவனிடம் இப்படிப் பேசிப் பழக வழிகாட்டுவார் போலே புகலிக் காவலர் பெருமானிடம் பிள்ளைமை முறையில் பேசிப் பொன் பெற்றார். இந்நிகழ்ச்சி திருவாவடுதுறைக் கண்ணே நிகழ்ந்த அற்புதமாகும். நம்மலத்துயர் நீக்க வந்த ஞானச் செம்மலார் திருவாவடுதுறையை யடைந்து நீடுகோபுரம் இறைஞ்சி உள்புகுந்தார். 'ஆடும் ஆதியை ஆவடுதுறையுள் அமுதை, நாடுகாதலுடன் பணிந்து' அருந்தமிழ்ப் பா இசைத்தார். துன்பு போம் மனத்திருத் தொண்டர் தம்முடன் அப்பதியில் தங்கிய காலத்துச் சண்பையர் தலைவற்குத் தாதையார் வேள்விக்குப் பொன் வேண்டினமையை நினைப்பித்தார். சம்பந்தர் முந்தை நாளிலே மொழிந்ததை நினைந்து, 'அந்தமில் பொருளாவன ஆவடுதுறையுள் எந்தையார் அடித்தலங்க ளன்றோ' என்று துதித்துப் பெருமானைப் பாடினார்.

"சென்று தேவர்தம் பிரான்மகிழ் கோயில்முன் பெய்தி
நின்று போற்றுவார் நீள்நிதி வேண்டினார்க் கீவது
ஒன்று மற்றிலேன் உன்னடி யல்லதொன் றறியேன்
என்று பேரருள் வினவிய செந்தமிழ் எடுத்தார்."

'இடரினும், தளரினும், எனதுறுநோய் தொடரினும் உன்னடிகளையே தொழுமியல் புடையேன். ஆகவே, என்னையாளுங் கோவே! கேட்டார்க்கு இல்லை என்னாது ஈயும் திறன் அருளுவதன்றோ உனது இன்னருள்!' என்று அலைபுனல் ஆவடுதுறையமர்ந்த இலைநுனை வேற்படை இறைவனை விலையுடை அருந்தமிழ் பாடி ஆயிரம் பொன் பெற்றார். கயிலைமலையானின் அருளாணையால்

அகல் பீடத்தில் ஆயிரம் பொன்னை வைத்தது பூதம்.

" நச்சி இன்தமிழ் பாடிய ஞானசம்பந்தர்
இச்சை யேபுரிந் தருளிய இறைவர்இன் னருளால்
அச்சி றப்பருள் பூதமுன் விரைந் தகல்பீடத்து
உச்சி வைத்தது பசும்பொன்னு யிரக்கிழி யொன்று."

பின்னே வந்த திருநாவுக்கரசரும் இந் நிகழ்ச்சியை வியந்து,

" கரயிரும் பொழில்கள் சூழ்ந்த
கழுமல வூரர்க் கம்பொன்
னுயிரம் கொடுப்பர் போலும்
ஆவடு துறைய னுரே"

என்று பாடினர். அடியவர்களின் அன்புக்குரல் வைதாலென்ன ? வாழ்த்தினுலென்ன ? வைதாரையும் வாழவைக்கும் கருணையாளன் நம்மிறைவன். நாம் இவற்றை யெல்லாம் படித்துணர்ந்த பின் எதுவோ அவனருள் என்று ஏங்காமல், ஒல்லும் வகையால் இறைபணி செய்து இன்புறுவோம். அங்கே அவன் அருள் தானே வந்து தலைப்படும்.

# உய்யும் வழி

[திருமதி ஆர். இராசரத்தினம் அம்மையார், எம்.ஏ., எல்.டி.]
(துணைத் தலைவியார், திருமலாச்சாரியார் போதனுமுறைக் கல்லூரி, சென்னை.)

இந்தப் பரந்த உலகத்தையும் இதிலுள்ள பொருள்களையும் காணுங்கால் அவற்றை உண்டாக்கிய தலைவன் ஒருவன் உண்டென்று ஊகிக்க இடமுள்ளது. தான்தோன்றியாக நின்று மற்றவற்றைத் தோற்றுவித்திருப்பவனைத் தேவன், முதல்வன், சிவன் என்று பல நாமங்களால் அழைக்கிறோம்.


பிறவா யாக்கைப் பெரியோனுகிய நீலகண்டனுக்கு அமைந்த பெயர்களுள் 'சிவன்' என்பது மங்கலத்தைக் கொடுப்பவன் என்று பொருள் படுகிறது. ஆலகால விடமுண்டு பெரிய தியாகியாக விளங்கி, விரைவில் கருணை புரியும் தன்மையை வியந்து பாடுகிறுர் ஆதி சங்கரர். முக்கண் எம்மானை, அருணுசலம் அல்லது அண்ணுமலை என்று சொன்னுல் முத்தி உண்டாகும் என்பர்.

சிதம்பரத்தில் சென்று அவனது திருக்கூத்தைத் தரிசிக்க வீடுபேறெய்தலாம் என்பர். வாரணுசியாம் காசியில் வசித்து உலக யாத்திரையை முடித்துக்கொண்டால் முத்தி நிச்சயம் என்பர். கமலாலயம் என்னும் திருவாரூர் மண்ணில் பிறந்தாலே நல்லது என்பார்கள். இக்கூற்றில் அமைந்த உண்மையை ஆராய்ந்தால் செம்மேனி எம்மானை நாம் உள்ளன்போடு நினைத்து வழிபடுதல் வேண்டுமென்பது புலனுகிறது. அதற்கு உறுதுணையாய் அமையவே பல தேவாலயங்களை நம் பெரியோர்கள் கட்டி இருக்கிறுர்கள். பெரும்பாலான கோயில்கள் தென்னுட்டிலும், சிறப்பாகச் சோழவள நாட்டிலும் உள்ளன. அவ்வாலயங்களுள்ளும் சமய குரவர்களாலும் பெரியோர்களாலும் பாடப் பெற்றவை தூய்மையும் சிறப்பும் மிக்கவை என்பது மரபு. இடத்தின் அமைப்பாலும், தீர்த்தத்தின் நீர்மையாலும், மூர்த்தத்தின் அருளினுலும் ஈர்க்கப்படும் ஆன்மாக்கள் பலவாகும். " அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" என்பதற்கேற்ப, நல்வினை கூட்டுவிக்கின்ற காரணத்தினுல் பலரும் இறையருளுக்குப் பாத்திரமாகின்றனர். இன்னும் சிலர் தூயோர் அருள் நோக்கத்தினுலும், பெரியோரின் உபதேச மொழிகளாலும் தீவினை விலகப் பெற்று மேலான நெறியில் செலுத்தப் பெறுகின்றனர்.

இறைவன் தடங்கருணைப் பெருங் கடலாக விளங்குகின்றுன். அவனுடைய கருணை வெள்ளத்தை அப்படியே வாரிப் பருக முடியாத இளங் குழவிகளாக உயிர்கள் இருக்கின்றன. ஆகையால் உயிர்களின் பக்குவ நிலைக்கேற்ப அவனே நானுவித உருவில் வந்து நல்லுபதேசம் செய்து கரையேற்றுகின்றுன். அதனுல் போலும் மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற தொடரில் தெய்வத்துக்கு அடுத்துக் குருவை அமைத்துள்ளார்கள்.

பண்டைத் தவமானது பெரிதும் உடையவருக்குக் குருநாதர் தேடிவந்து உபதேசம் செய்வாராம். இக்கருத்தானது மாணிக்கவாசகர் சரித்திரத்தில் புதைந்துகிடக்கிறது. தீவினையின் பயனுக இறைவனை விட்டு விலகிச் சென்றுலும், பெருங்

பாவை விளக்கு



கருணை வள்ளலாகிய இறைவன் அருள் காட்டி ஆட்கொள்வான் என்ற உண்மை, தருமசேனராக இருந்து, சைவ சமயம் புக்கு, அப்பர் என்று அழைக்கப்பட்ட மருள்நீக்கியாருடைய சரித்திரத்திலிருந்து புலனாகிறது. பரசமயக் குழியிலிருந்து எடுத்தாண்ட குருவாகிய திலகவதியார் தம் தம்பியாகிய திருநாவுக்கரசருக்கு ஏற்ற ஒரு வழிகாட்டியாக அமைந்தாரன்றோ? இல்லற வாழ்வில் உழலாமலிருக்கச் செய்யவேண்டு மென்றே இறைவன் முதுவேதியராக வந்து சுந்தரரைத் தடுத்தாட்கொண்டு, தன் புகழையும் பாடச் செய்தான்.

மாறனும் மதுரையும் சைவத்தை மறந்த போது 'தோடுடைய செவியன்' ஞானப்பால் தந்து திருஞானசம்பந்தரை ஆட்கொண்டு திருநீற்றின் ஒளியைப் பரப்பிய சரிதமும் இறைவனுடைய குருவருளாம் தன்மையையே காட்டுகிறது. பேரருளாளனாகிய இறைவன் தன் அன்பர்மாட்டுள்ள கருணையினால் காலை சூலை ஓலை (அடிமை என்பதற்கு அடையாளம்)யைக் காட்டியும் பாலைத் தந்தும் ஆட்கொண்டான் என்பது நால்வர் வரலாற்றிலிருந்தும் விளங்குகிறது. இறைவன் அடியார்மாட்டுக் காட்டிய இரக்கத்தின் விளைவாகவே நாம் தேவார, திருவாசகப் பாக்கள் கிடைக்கப் பெற்றோம். அவற்றைப் பக்தியோடு ஓதி உணர்வதனால் நாமும் நல்வழியடையலாம். ஈடெடுப்பில்லாத கருவூலமாகிய அவற்றைப் பயன்படுத்தினால் நாம் ஐம்புல அடக்கத்தை அடைவதன்றியும் ஆசை, வெகுளியாகிய பகைமை ஒழிந்து விருப்பு வெறுப்பற்ற அமைதியான நிலையை எய்தலாம். வாழ்க்கைக்குக் குறிக்கோள் இருத்தல் இன்றியமையாதது. தம் வாழ்க்கையில் நீண்ட காலம் "குறிக்கோள் இலாது கெட்டேன்" என்று அப்பர் பெருமான் கூறி வருந்துகிறார். செல்வமும், யாக்கையும், இளமையும் நிலையற்றவை. எப்போதாகிலும் கூற்றுவன் வருவது உண்மை. இன்னும் நூறு ஆண்டுகள் கழித்துக் காண்பேம் ஆயின் இன்றுள்ள அத்தனை உயிர்களும் மறைந்து புதியதோர் பரம்பரை தோன்றி இருக்கக் காணலாம். ஆகையால் இவ்வுடல் இருக்கும்போதே உயிர் உய்வதற்கேற்ற உறுதுணையைத் தேடிக் கொள்ளவேண்டும். மீண்டும் பிறப்பெய்தாத நிலைக்குச் செல்லும் பாதையை வகுத்துக்கொள்ளுதல் இன்றியமையாதது.

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை உண்ணுவதுதான் பிறப்பை ஒழிக்கும் வழியாகும். 'நாரி பாகன்றன் நாமம் நவில வேண்டும்'; 'குறியே என்னுடைய குருவேயுன் குற்றேவல் செய்வேன்' என்று கூறி அடிமை செய்யவேண்டும். அதற்கும் கைம்மாறு கருதாது நம் காரைக்கால் பேயம்மையார் கேட்டது போலவே இறைவனை வேண்டுதல் வேண்டும் :

"இறவாத இன்ப அன்பு
  வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
  பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
  வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போதுன்
  அடியின்கீழ் இருக்க என்றார்."

இந்த விண்ணப்பம் விடுத்ததனால்தான் அம்மையாரைச் சிவபெருமானே, "இவள் நம்மைப் பேணும் அம்மைகாண்" என்று அன்புடன் மொழிந்தார். எம்பெருமான் செந்தமிழ்ப் பாட்டிலும், இசையிலும் விருப்பம் உள்ளவன். "நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க அர்ச்சனை பாட்டேயாகும்" என நம்பியாரூரருக்கு இறைவன் அருளினமையைக் கருதுக.

அடிமை செய்யுங்கால், மாதினியார் பயந்த மாதரசியைப்போலப் புலனடக்கத்தோடு தொண்டு செய்ய வேண்டும். திருக்கோயிலில் திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், திருநந்தவனம் புக்கு மலர் கொய்து மாலை தொடுத்தல் முதலிய திருத்தொண்டுகளுடன், வாய்ப்பும் வசதியும் இருப்பின் பாமாலையும் புனைந்தேத்தலாம். அவ்வாறு செய்வதால் நம் இடர்களைக் களைந்து மகிழ்ந்து வாழ வழி கோலியவர்களாவோம்.

# நம்பியாண்டாரும் அப்பரும்

[சித்தாந்த கலாநிதி, உரைவேந்தர், பேராசிரியர் ஔவை. சு. துரைசாமி, மதுரை.]

நம்பியாண்டார் நம்பிகள் கி. பி. 9-ஆம் நூற்றுண்டின் இறுதியிலும் 10-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த சிவவேதியர். தில்லைச் சிதம்பரத்திற்கு மேற்கில் சுமார் 10, 12 கல் தொலைவில் உள்ள திருநாரையூரிற் றேன்றி வாழ்ந்தவர்; அவ்வூர், அவர்க்கு முன்பே ஏழாம் நூற்றுண்டில், திருஞானசம்பந்தர், "சிவன் மேயசெல்வத் திருநாரையூர்" என்றும், திருநாவுக்கரசர், "நாறுபூம்பொழில் நாரையூர்" என்றும் மகிழ்ச்சியோடு வந்திருந்து பாடிய மாண்புடையது

நம்பிகள் இளமையிலேயே திருவருட் கல்வியும் சிவநெறித் தெளிவும் சிறக்கப் பெற்றவர். தந்தை, ஊரில் இல்லாதபோது சிறுவராகிய நம்பிகள், அவ்வூர் விநாயகர்க்குப் பூசைத் திருப்பணி புரிந்து தாம் கொண்டு சென்ற திருவமுதை உண்பித்த பெருமையுடையவர். அந்நாளைய சோழர் அரசியற் குறிப்புக்கள், இவ்வூருக்கு "வடகரை விருதராச பயங்கர வளநாட்டுத் தனியூர் வீர நாராயணச் சதுர்வேதி மங்கலத்துப் பிடாகையான திருநாரையூர்" என்றும், இங்குள்ள சிவபெருமானுக்குத் "திருக்கயிலாயமுடைய மகாதேவர்" என்றும், பெருமாளுக்குத் "திருவாய்ப்பாடி ஆள்வார்" என்றும் பெயர் தெரிவிக்கின்றன. (ஏ. ஆர். எண். 542-3/1921) நான்மறை வல்ல வேதியர் வாழ்தலால், வைதிக ஞானவொழுக்கங்களும் சைவ நெறியின் பெருக்கமும் இவ்வூர்க்கண் சிறந்து நின்றமை அறியலாம். வடமொழிப் புலமையுடன் நம்பிகள் தமிழில் இயற்புலமையும் திருமுறைகளை யோதுதற்குரிய இசைப் பயிற்சியும் நன்கு பெற்றிருந்தார். அதனால், அவரது புகழ் காவிரி வடகரை நாட்டில் நன்கு பரவியிருந்தது.

சோழ வேந்தனை இராசராசன் தேவாரத் திருப்பதியங்கள் தில்லைப் பெருங்கோயிலில் இருப்பதை அறிந்து அவற்றை வெளியிற் கொணர்ந்து முறை வகுக்க விரும்பினுன். அக்காலத்தே மக்களிடையே திருப்பதியங்களை ஓதுவதில் மிக்க விருப்பமுண்டாகி யிருந்தது. ஆங்காங்கே அவற்றில் காணப்படும் இனிய தொடர்களைக் கொண்டே, மக்களுக்கும், வீடு மனை நிலம் முதலியவற்றிற்கும் பெயரிட்டுப் போற்றுவது வழக்கம்.

திருப்பதியங்களைக் கண்டு ஆராய்ந்து இசை வகையில் முறைப்படுத்தும் திறம், நம்பிகட்குண்டெனச் சோழர் பெருமானுக்கு நாட்டு நல்லறிஞர் தெரிவிக்கவும், அவன் நம்பிகளைக் கொண்டு தில்லைக்குச் சென்று திருப்பதியங்களை வெளிப்படுத்திப் பண் வகையில் முறை செய்யுமாறு வேண்டினுன். பண்முறைகளை அறிந்தவராயினும், திருவெருக்கத்தம்புலியூரில் திருநீலகண்ட யாழ்ப்பாணர் குடியில் பெண்ணெருத்தி பண்முறையில் மிக்க புலமையுற்றிருந்ததை அறிந்துஅரசனைக் கொண்டு அவளை வருவித்துப் பண்முறை வகுத்தார்.

நம்பியாண்டார்க்கு இயல்பாகவே திருஞானசம்பந்தர் திருப்பதியங்களில் மிக்க ஈடுபாடு உண்டு; அவருடைய திருப்பாட்டுக்களை விரும்பிப் பயிலும் விழைவு மேம்பட்டவர். ஞானம் பெற்ற பிள்ளையாகிய அவரைச் சிவமாகவே கருதி மெய்யால் வணங்கியும் வாயாற் பல நூல்களைப் பாடியும் வழிபடும் இயல்பினர். ஞானசம்பந்தரோடு உடனிருந்து யாழ் இசைப் பணி புரிந்த நீலகண்டப் பாணர் வழியினள், எருக்கத்தம்புலியூர் நங்கை என்றது, நம்பிகட்கு அவள்பால் பெருமதிப்பை உண்டுபண்ணிற்று. அவரது திருவுள்ளமும் சாதி வேற்றுமைச் சேற்றில் அழுந்திக் கெடாமல் பண்ணிசைப் புலமையையே பொருளாகக் கருதியது; அஃதொன்றே நம்பியாண்டார் நம்பிகளின் பெருமைக்கு உயரிய சான்று; அவரே திருப்பதியங்களை முறை செய்தற்குத் தகுதி வாய்ந்தவர் என்பதையும் வற்புறுத்துகிறது.

நம்பி ஆரூராகிய சுந்தரமூர்த்திகளிடத்தும் நம்பியாண்டார்க்குப் பெருமதிப்பு இருந்தது. அவர் பாடிய திருத்தொண்டத் தொகையில் தொக்கு நின்ற வரலாறுகளை, நேர்மை நிறைந்த மனத்தோடு தெரிந்து, திருத்தொண்டர் திருவந்தாதி என்ற நூல் செய்து தமது நன்றிக்கடனை அவர்க்குச் செலுத்தினர். அதன்கண் நம்பி ஆரூரரின் பெருமைகளை நற்றேன் பிலிற்றும்

சொற்றொடர்களால் நயம் கனியப் பாடியிருப்பது தமிழ் அறிஞர்க்கு இன்பம் தருவதாகும்.

பின்பொருகால், சோழவரசின் பேரமைச்சராய்ப் பிறங்கிய சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் வரலாறு எழுதும் திருப்பணியை மேற்கொண்டபோது, நம்பிகளின் நேர்மையில் பெருகிய அன்பினராய் அவர் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியையே, தாம் முதலாகக் கொண்ட திருத்தொண்டத் தொகைக்கு, வழிநூலாகக் கொண்டார்.

திருவாசகம் பாடியருளிய திருவாதவூரரிடத்தும் நம்பிகள் மிக்க அன்பும் ஆர்வமும் கொண்டவர் என்று அவருடைய இனிய நூல்களால் அறிகின்றோம். திருவாசகமும் திருக்கோவையாரும் நம்பிகளின் புலமையுள்ளத்தில் நிலைபெற்று நின்று, வெளிப்படற்கு இடம் வாயாமையால், ஆங்காங்கு ஒளி செய்து தமது இருப்பைப் புலப்படுத்துகின்றன. நம்பிகள் காலத்து வாழ்ந்தோருள் ஒருவர் திருக்கோவை போன்ற நூலொன்று எழுதியது காண்கின்றார் நம்பிகள்; அதுகண்டு அவர் மனத்தெழுந்த நகைப்பை,

“ வருவா சகத்தினில் முற்றுணர்ந்
தோனைவண் தில்லைமன்னை
திருவாத வூர்ச்சிவ பாத்தியன்
செய்திருச் சிற்றம்பலப்
பொருளார் தருதிருக் கோவைகண்
டேயும்மற் றப்பொருளைத்
தெருளாத உள்ளத் தவர்கவி
பாடிச் சிரிப்பிப்பரே ”

என்று தெரிவிக்கின்றார்.

இங்ஙனம் ஞானசம்பந்தரையும் நம்பி ஆரூரரையும் திருவாதவூரரையும் சிந்தித்து மகிழும் நம்பியாண்டார், திருநாவுக்கரசரை மறப்பரா? மறக்கத்தான் அவர்க்கு இயலுமா?

திருத்தொண்டத் தொகை பாடிய நம்பியாரூரர், தாமே தம்முடைய தண்டமிழால் கூறாமல், நாவுக்கரசர் மொழிந்தருளிய நன்னெறியேபற்றி, “சிவனெனும் ஓசையல்ல தறையோ உலகில் திருநின்ற செம்மை யுளதே” என்பதே கொண்டு, “ திரு நின்ற செம்மையே செம்மையாகக்கொண்ட திருநாவுக்கரையன் ” என்று குறித்தருளினார்; நம்பியாண்டார், திருநாவுக்கரசரை.

“ நற்றவன்; நல்லூர்ச் சிவன்திருப்
பாதம்தன் சென்னி வைக்கப்
பெற்றவன்; மற்றுஇப் பிறப்பற
வீரட்டர் பெய்கழல்தாள்,
உற்றவன்; உற்ற விடம்அடை
யார்இட ஒள்ளமுதாத்
துற்றவன் ஆமூரில் நாவுக்
கரசென்னும் தூமணியே ”

என்று பாராட்டி, அவருடைய அருள் பெருகு திருப்பாட்டுக்களை வியந்து,

“சைவப் பெருநெறிக்கே அணியன நாவுக் கரையர்
பிரான்தன் அருந்தமிழே ”

எனச் சுருங்க வுரைத்துத் தெரிவித்தார்.

திருநாவுக்கரசு தேவர் திருஏகாதச மாலை என்ற நூல் ஒன்றைத் தனியாகப் பாடிப் பரவினார் நம்பியாண்டார் நம்பிகள். இதன்கண் உள்ளவை அந்தாதியாக அமைந்த பதினொரு பாட்டுக்கள். பதினொன்று என்பதை வடமொழி ஏகாதசம் என்று கூறும்; பதினோராம் நாளை ஏகாதசி திதி (தியதி, தேதி) என்றாற்போலப் பதினொரு பாட்டுக்களால் ஆகிய பாமாலை ஏகாதச மாலை என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாட்டும் இனிய சந்த உருவாகியிருப்பது, படிப்பவர்க்கும் இசைப்பவர்க்கும் இசைக்கக் கேட்பவர்க்கும், சருக்கரைக் கட்டியால் இயன்ற பண்டத்தை வடித்த செந்தேனிற் பெய்து உண்பது போன்ற சுவை நிறைந்துளது.

சிவநெறிக்கு அருட் செல்வங்களாகிய திருமுறைகள் மிக்க பெருமை தருவன.

வேற்றுச் சமயத்தில் வீறுபெற்று விளங்கினவர் மருணீக்கியார் என்னும் பிள்ளைத் திருநாமம் உடைய தருமசேனர். அவர் சூலைநோய் உற்று வருந்திப் போந்தது கண்ட அவருடைய தமக்கையாரான திலகவதியாரால் அவர், திருவைந்தெழுத்து ஓதித் திருநீறணிவிக்கப்பெற்று, நோயும் சமணசமயப் பிணிப்பும் நீங்கிச் சிவநெறிச் செல்வத் திருநாவுக்கரசரானார் என்ற வரலாற்றை இந்நூலில்தான் முதன் முதலாக நம்பியாண்டார் குறிக்கின்றார்; “ தமக்கையார் புணர்வினால் உற்று உரைசெயக் குடர்சுலவு சூலைப்பிணி கெடுத்து ஒளிர் வெண்ணீறிட்டு அமண் அகற்றிய துணிவினன் ” எனத் திரு ஏகாதச மாலையின் முதற் பாட்டிலேயே மொழிகின்றார்.

திருநாவுக்கரசர் பிறந்த ஊர் நடுநாட்டுத் திருவாமூர் என்பதை, “ ஆமூரில் நாவுக்கரசு எனும் தூமணி ” எனத் தொகுத்துச் சுட்டி, இந்நூலின்கண், “ வண்ணத் திண்சிலை மாடம் திகழ்புகழ் ஆமூர் உறை திருநாவுக்கரசு ” என்று விளக்குகின்றார். இதனைக் காணும் சேக்கிழார் பெருமான், திருப்பாசுரங்கட்குத் தெளிவுரை காணும் சிவஞானச் செல்வராதலால், அறிவு

நெறி (Scientific outlook)யிற் பொருள் காண்கின்றார். "வண்ணத்தின் சிலைமாடம் திகழ் ஆமூர்" என உரைக்க வேண்டிய நம்பிகள், புகழ் என்ற சொல்லை இடையிற் பெய்வது ஏன் என்று எண்ணி, "ஆமூர் உறை திருநாவுக்கரசு" என்பதோடு இயைவதால், அஃது அவரது தந்தையின் பெயராதல் வேண்டுமெனத் துணிகின்றார். தமது திருத்தொண்டர் புராணத்தில், "உளராளுர் திக்கு நிலவும் பெருமை திகழவரும் புகழனார்" எனப் பாடி மகிழ்கின்றார்.

சமண சமயத் தருமசேனராக விளங்கியவர், ஒருவர்க்கும் சொல்லாமல், ஒரு கருத்தும் வெளிப்படுத்தாமல், திடீரெனச் சைவத் திருநாவுக்கரசரானது கண்ட சமண தலைவரும் அவரைத் தழுவிப் புரக்கும் அரசும் சும்மா இராமல் கடிய செயல் பல மேற்கொண்டிருக்குமே என்ற ஐயம் யாவர் மனத்திலும் எழும்; அஃது அகலும் பொருட்டு, "அவர்கள் வாதை பல செய்தனர்; அவற்றை அதிகைப் பெருமான் திருவருளால் வென்றுயர்ந்தார் நாவரசர்" என்பாராய், "அதிகை மாநகர் மேவி அருளினால் அமன் மூடரவர் செய் வாதைகள் தீரும் அனகன்" என்று இயம்புகிறார்; வாதைகளில் ஒன்றான கல்லொடு பிணித்துக் கடலின்கண் தள்ளின செய்தி மனத்தில் மறக்கப்படாது நின்றதால், அதனை விதந்து, "ஏற்றுணையின் மிதவாமல் கற்றுணையின் வரும் ஆதி" என மொழிகின்றார். இக் குறிப்பின் தலைமை நலம் கண்டே நாவுக்கரசரை நினைப்பவர் அனைவரும், கன்மிதப்பிற் கரையேறிய இச்செயலை எடுத்துரைப்பதை இயல்பாகக் கொண்டு இன்றும் "ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான்" என்று ஓதி வருகின்றார்கள்.

திருநாவுக்கரசரானபின் அவர் செய்த செயல் வகைகளை எண்ணுகின்றார், நம்முடைய நாரையூர் நம்பி. அவர் பாடிய திருப்பதியங்கள் நெஞ்சில் காட்சி தருகின்றன. ஏழ் எழுநூறு பதிகங்கள் என்ற எண்ணிக்கை முன் நிற்கிறது. இத்தனையும் பாடுதற்கு நாவரசு மேற்கொண்ட "கவி யோகம்" அவர் கருத்தைப் பிணிக்கிறது. பரவுகின்றார்; பணிகின்றார். "பதிகம் ஏழெழு நூறு பகரு மாகவி யோகி பரசு நாவரசான பரம காரண ஈசன்" எனப் பாடி மகிழ்கின்றார். மேலும், காம மயக்கில் வீழ்ந்து கலக்குற்று வருந்தும் மனத்தை நோக்கி, "உள் நோய்க்கு மருந்து இன்பம்தானே, இதற்கு மருந்து இதோ தருகின்றேன்; எங்கள் திருநாவுக்கரசு தந்தருளும் திருப்பதியமே இன்பத் திருமருந்து; வேறு மருந்து கிடையாது" என்று கூறுகிறார்.

நன்மடவார்,

"அழிந்த பொசியதிலே கிடந்து இரவுபகல் நீ
அளைந்து அயரும்அது, நீ அறிந்திலைகொல், மனமே!
கழிந்த கழிகிடு; நாள் இணங்கு இதயம் நெகவே;
கசிந்து இதயம் எழுநூறு அரும்பதிய நிதியே
பொழிந்தருள திருநாவின் எங்கள் அரசினையே
புரிந்து நினை; இதுவே மருந்து; பிறிது இலையே"

எனத் தெருட்டுகின்றார்.

'இந்த மயக்கம் மண்ணினிற் பிறந்தார் அனைவரையும் ஒழியாது வருத்துவதாயிற்றே; நாவுக்கரசர் என்னானார்?' எனச் சிலர் வினவுகின்றார்கள். "காம வெகுளி மயக்கங்கள் முற்றவும் கெடும் குற்றங்கள் அல்லவே" எனச் சாத்திரங்களைக் காட்டுகின்றனர். 'ஆம். சாத்திரங்கள் கூறுவன உண்மைதான்; எங்கள் நாவுக்கரசை அவை அடர்த்தழிக்க முயன்றன; கவி யோகம் இல்லாதபோது அவர் உழவாரப் படையோகம் கொண்டார்; அதனால் பொல்லாத அம்மயக்கம் அவர்முன் நில்லாதாயிற்று; அவர் திருவுள்ளத்தையும் வெல்லாதாயிற்று' என்பாராய்,

"தெளிதேன் ஒத்த இனியசொல் மடவார் ஊர்ப்பசிமுதல்
வருவானத்து அரிவையர் நடமாடிச் சிலசில
வசியாகச் சொலும்அவை துகளாகக் கருதி, மெய்
உருஞானத் திரள்மனம் உருகா நெக்கு அமுது
உழவாரப் படைகையில் உடைய ஞயினன்"

என உரைக்கின்றார். காமவுணர்ச்சி கருத்தை ஈர்க்கும்போது கைத்தொழில் வகையில் அதனைச் செலுத்துக என இக்காலக் கருத்தடை விஞ்ஞானம் கூறுவதை நினைந்து பார்மின்; கருநாடக இசையை எருவிட்டு வளர்க்கும் பெருமக்களுக்குத் திருமுறைகளின் பெருமை தெற்றென விளங்கும்.

இந்நிலையில் பதியம் ஏழெழு நூறு பகரும் பரம கவியோகத்தில் நம்பிகள் தமது ஆராய்ச்சி வழிபாட்டைச் செலுத்துகின்றார். நாற்பத்தொன்பது நூறு பதியங்களில், நாவுக்கரசு என்ன நவில்கின்றார் என, எழும் அவாய்நிலைக்குத் தெளிவு கூறும் நம்பிகள், 'மாயையாலாகிய இவ்வுலகு, உயிர்களை மயக்குவதும் செய்வது; அதன் பொய்ம்மயக்கத்தைப் போக்குவன வாய்மைப் பொருள்கள்; அவற்றை மிகுதியாகத் தருவன நாவரசின் †நற்பதியங்கள்.

† பதியம்: பதியாகிய ஊரைப் பொருளாகக் கொண்டது தமிழ்ச் சொல்; பதிகம், பத்துப் பாட்டுக்களை உடையது என்று பொருள்படும் வடசொற் திரிபு.

" உலகின் மாயப் பிறவியைத் தரும்
உணர்விலா அப்பெருமயக்கினை
ஒழிய, வாய்மைக் கவிதை "

என்றும்,

அவற்றின் வழியாகச் சிவஞானமாகிய கடலின் கண் உள்ள அமுதாகிய சிவவொளியில் ஆன்மாக்கள் புகுந்து உய்திபெறுதற்கு இன்றியமையாத திருவருள் நல்கப்படுகிறது என்றும் விளக்குவாராய்,

" வாய்மைக் கவிதையிற் பல
உபரிபாகப் பொருள் பரப்பிய
அலைவ்ல் ஞானக் கடலிடைப்படும்
அமுத யோகச் சிவவொளிப் புக
அடியரேமுக்கு அருளினைச் செயும் "

என்று பரிவோடு உரைக்கின்றார். முடிவில், இவர் திருப்பதியங்களை ஓதுவார் பெறும் பயனையும், நாட்டு மக்கள் பயன்பட வாழ்ந்த நாவுக்கரசர்க்கு நாம் செய்யலாகும் கடமைகளையும் இவ்வேகாதச மாலையில் இனிமை கமழ எடுத்து இயம்புகின்றார்.

திருநாவுக்கரசரைச் சிவகுருவாகவும் அவருடைய திருப்பதியங்களைச் சிவஞானவுரையாகவும் கொண்டு வாழ்பவர், பிறவி யறுத்துப் பேரின்பப் பெருவாழ்வு எய்துவர். இதனை,

" உழவாரப் படைகையில் உடையான் வைத்தனதமிழ்
குருவாகக் கொடுசிவன் அடிசூடத் திரிபவர்
குறுகார்புக்கு இடர்படு குடர்யோனிக் குழியிலே "

எனப் பாடுகின்றார்.

அப்பெருமானை விரும்புபவர், அவரது " திருநாவுக்கரசு " என்ற திருப்பெயரையே மந்திரமாகக் கொண்டு ஓதுதல் வேண்டும். அவ்வாறு ஓதி முழுப் பயன் பெற்ற வேதியரான அப்பூதியடிகளின் நலங்களை,

" தனமா வதுதிரு நாவுக் கரசின்
சரணம்என்னு
மணமார் புனற்பந்தர் வாழ்த்தி வைத்
தாங்கவன் வண்தமிழ்க்கே
இனமாத் தனது பெயரிடப்
பெற்றவன் ; எங்கள் பிரான் ;
அனம்ஆர் வயல் திங்களூரினில்
வேதியன் அப்பூதியே "

என்று ஓதினாராதலால், இங்கே அப்பூதியின் வாழ்வைக் கருத்தில் நினைவு கூர வைத்து,

" இலைமாடு என்று இடர்பரியார்
இந்திரனே ஒத்து உறுகுறைவற்றாலும்
நிலையாது இச்செல்வம் எனவே கருதுவர் ;
நீள்சன்மக் கடலிடையிற் புக்கு
அலையார் ; சென்று அரன்நெறி யாகும் கரை
அண்ணப் பெறுவர்கள், வண்ணத் திண்
சிலைமாடம் திகழ்புகழ் ஆமூர்உறை
திருநாவுக்கரசு என்போரே "

என்று அறுதியாக அறிவிக்கின்றார். அவர் திருவடிகளைப் பணிபவர்,

" நிதியராகுவர் ; சீர்மையுடையராகுவர் ; வாய்மை
நெறியராகுவர் ; பாவம் வெறியராகுவர் ; சால
மதிய ராகுவர் ; ஈசன் அடியராகுவர் ; வானம்
உடையராகுவர், பாரில் மனிதரானவர் தாமே "

என்றும் இசைத்தருளுகின்றார்.

இத்தகைய பெருநலம் அருளும் பெருமானாகிய திருநாவுக்கரசரின் திருவடிகள் நமக்கெல்லாம் உய்தி தரும் பெருந்துணையாவது காண்கின்ற நாம், அதுவல்லது பற்று மற்று இல்லை என்று கொண்டு வாழ்வோமாக என அறிவுறுத்துகிற நாரையூர் நம்பிகள்,

" நன்றும் ஆதரம் நாவுக்கரசு அடி
நளினும் வைத்து உயின் அல்லால்
ஒன்றும் ஆவது கண்டிலம் ; உபாயம் மற்று
உள்ளன வேண்டேமால் "

என்றும், " ஆதியும் அந்தமும் இல்லதோர் இக பரத்து இடைப்பட்டுப் பொன்றுவார் புகும் சூழலில் புகேம் புகில் பொறியில் ஐம்புலனோடே " என்றும் திட்டவட்டமாக உரைத்துத் தமது திருவேகாதசத்தைத் தேனொழுக்குப் போலப் பாடி முடிக்கின்றார். வாழ்க திருநாவுக்கரசர், வண்திருநாரையூர் நம்பி வான்கழல்கள்.



# தெய்வச் சேக்கிழார்

[ஜி. கலியாணம், எம். ஏ., டிப். எக்கான்.]

*" தில்லைவா ழந்தணரே முதலாகச் சீர்படைத்த*
*தொல்லையதா ந் திருத்தொண்டத் தொகையடியார் பதம்போற்றி*
*ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த*
*செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழா ரடிபோற்றி."*

*—உமாபதி சிவாசாரியர்.*

தமிழ் நாட்டில் இரண்டு பெரும் புலவர்களையே தெய்வப்புலவர் என்று அழைத்தனர். ஒருவர் தெய்வப்புலவர் திருவள்ளுவர்; மற்றவர் 'தெய்வ' என்ற அடைமொழியை நேரே பெயரோடு சேர்த்து அழைக்கப்பெறும் தெய்வச் சேக்கிழார். சேக்கிழார் பெருமானின் வரலாறு, அவர் அருளிய பெரிய புராணத்தின் சிறப்பியல்புகள் முதலியனபற்றி ஒருவாறு சிந்திக்க எழுவதே இக்கட்டுரை.

மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் தம்முடைய 'சேக்கிழார் பிள்ளைத் தமிழ்' என்ற நூலில் தாலப் பருவத்தில் "தெய்வ மணக்கும் செய்யுளெலாம்", "சகலாகம பண்டித தெய்வச் சைவா" என்று கூறியிருப்பது சேக்கிழார் சுவாமிகள் புலமையின் தெய்வத் தன்மையையே பாராட்டியதாகும்.

**வரலாறு:** சேக்கிழார் பெருமான் சான்ருேருடைத் தென்று புகழப்பெற்ற தொண்டை நாட்டில் குன்றத்தூரில் செல்வவேளாளர் குடியில் தோன்றினர். அருள்மொழித்தேவர் என்பது அவருடைய பிள்ளைத் திருநாமம். இளமையிலேயே கல்வி அறிவு—ஒழுக்கங்களில் சிறந்து விளங்கினர். உலகில் மூன்று பெரியவை எவை என்ற வினவை விடுத்த சோழ மன்னனுக்கு மூன்று திருக்குறட்பாக்களை எழுதி யனுப்பிய செய்தி நாடறிந்ததொன்று. கம்பநாடர், "காவலவன் மண்ணினின், கடலின், மலையின் பெரிதென எண்ணி யெழுதிக்கொடுத்த ஏற்றக்கை" என்று திருக்கைவழக்கம் என்னும் நூலில் சேக்கிழார் திருக்கரத்தைப் புகழ்ந்திருக்கிருர். சேக்கிழார் என்பது குடிப்பெயர். பொதுவாயமைந்த குடிப் பெயரே அந்தக் குடியையே விளக்கவந்த அருள் மொழித்தேவருக்குச் சிறப்புப் பெயர் ஆயிற்று. அவரது குணநலங்களை யறிந்த சோழ மன்னன் அவரைத் தன் முதலமைச்சராக நியமித்தான். அவருக்கு "உத்தம சோழப் பல்லவராயன்" என்ற பட்டத்தையும் வழங்கினன். சேக்கிழார் வாழ்ந்த காலத்தைப்பற்றி ஆராய்ச்சியாளர்கள் பலவிதமான கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றனர். இரண்டாம் குலோத்துங்க சோழன் காலம்—கி. பி. 1133–1150, அதற்கு முன் பின்னுகச் சேக்கிழார் வாழ்ந்த காலம் இருக்கலாம் என்பது பெரும்பாலோர் கருத்து. திருமழபாடிக் கோயில் கல்வெட்டொன்றில் "ஜயங்கொண்ட சோழமண்டலத்துக் குன்றத்தூர் நாட்டுக் குன்றத்தூர்ச் சேக்கிழான் மாதேவடிகள் இராமதேவனுன் உத்தம சோழப் பல்லவராயன்" என்று வரும் கூற்றையே இதற்கு ஆதாரமாக எடுத்துக் காட்டுகின்றனர். சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் பத்து இடங்களில் சோழமன்னனைப் புகழ்ந்து பேசுகிருர். ஒன்பது இடங்களில் அநபாயன் என்று கூறி ஓர் இடத்தில் சென்னி அபயன் குலோத்துங்கன் என்று குறித்திருக்கிருர்.

**பெரிய புராணம்:** கற்பனைக் காவியங்களில் புலவருடன் கலந்து காலத்தைப் போக்கிக்கொண்டிருந்த அரசனுடைய மனத்தை அடியார் வரலாற்றில் செலுத்தும்படி அறிவுரை கூறினர் சேக்கிழாரான அமைச்சர். அதில் ஈடுபட்ட மன்னன் அவ்வரலாறுகளை ஒரு நூலாகச் செய்தருளும்படி வேண்டினன். குன்றை முனிவர் சிதம்பரம் சென்று நூல் இயற்ற எல்லா வசதிகளும் செய்தமைத்தான். அவ்வப்போது ஆள் விடுத்து நூல் இயற்றல் எந்த நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்டான். புராணம் எழுதி முடிந்ததும் மன்னன் தில்லைக்குச் சென்று, அவரையே அதற்கு உரைவிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டான். ஒரு சித்திரைத் திருவாதிரையில் தொடங்கி மறு சித்திரைத் திருவாதிரையில் நூல் அரங்கேற்றம் முடிந்தது. சேக்கிழாரையும், பெரிய புராணத்தையும் யானைமீதேற்றி, தான் பின் இருந்து கவரி வீசி, ஊர்வலம் செய்வித்து, "தொண்டர் சீர் பரவுவார்" என்று பட்டமும் வழங்கிச் சிறப்பித்தான். இந்த நிகழ்ச்சியைச் சொல்லும்போது மற்ருேர் உலகப் பெரும் புலவர் வரலாறு நினைவுக்கு வருகிறது. உரோமாபுரியில் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தவர் வரசிலர் (Virgil) என்ற மகாகவி. அக்காலத்திருந்த மன்னன் அகத்தீசன் (Augustus) அவரை,

ஈனியசு என்ற வீரனின் தீரச் செயல்களைப்பற்றி ஒரு காவியம் எழுதும்படி வேண்டினன். அவரும் நேபிள்சு நகரம் சென்று காவியம் எழுதத் தொடங்கினர். அரசன் அடிக்கடி கடிதப் போக்கு வரவு செய்தான். சில சமயங்களில் தலைநகரி லிருந்து நேபிள்சுக்குப் போய் அவர் இயற்றிய பாடல்களில் சிலவற்றைக் கேட்டு மகிழ்ந்தான். நூல் முடிந்ததும் அவரைக்கொண்டே அரசவை யில் ஈனியடு என்ற அந்த வீரகாவியத்தை அரங் கேற்றும்படி செய்தான். சேக்கிழார், வரசிலர் இந்த இரு பெரும் புலவர்கள் நூல் இயற்றிய செய்திகளின் ஒற்றுமையைக் காண நம் மனம் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறது.

கடவுள் வாழ்த்தில் மாக்கதை என்று சொன்ன சேக்கிழார் நூலின் பெயர் கூறும்போது திருத் தொண்டர் புராணம் என்றே சொல்கிறர். சுந்தரரின் திருத்தொண்டத்தொகை என்னும் வித்து, நம்பியாண்டார் நம்பிகளின் திருத் தொண்டர் திருவந்தாதியாக முளைத்து, அத னின்று எழுந்தமரம் திருத்தொண்டர் புராண மாகத்தானே இருக்க முடியும். செயற்கருஞ் செயல் செய்த பெரியார் பலர் வரலாறுகள் இருக் கின்றமையின் பெரிய புராணம் என்ற பெயரும் ஏற்பட்டது.

பெரிய புராணத்தில் இரண்டு காண்டங்கள், பதின்மூன்று சருக்கங்கள் உள்ளன. திருமலைச் சருக்கம், வெள்ளானைச் சருக்கம் இவை நீங்க லாக, பதினொரு சர்க்கங்களுக்கும் திருத் தொண் டத் தொகை பதினொரு பாடல்களின் முதற்சொற் களைக் கொண்டே பெயர்களை அமைத்திருக்கிறர். சேக்கிழார் புராண ஆசிரியர் நூலில் 4253 பாடல் களே உள்ளன என்று கூறியிருக்கிறர். தொண்டைமண்டல சதகத்தில் 4283 பாடல்கள் பெரிய புராணத்தில் உள்ளன என்று கூறப் பட்டிருக்கிறது. சில பாடல்களை வெள்ளியம்பலத் தம்பிரான் என்பவர் சேர்த்தார் என்ற கர்ண பரம்பரைச் செய்தியும் கேட்கிறேம். இந்த இடைச் செருகல் பாடல்களை வெள்ளிபாடல் என்று கூறுவது வழக்கம்.

**சிறப்பியல்புகள்:** "உலகெலாம்" என்று தில்லைக்கூத்தப் பெருமானே முதலடி எடுத்துக் கொடுத்தார் என்ருல் இந்நூலின் பெருமையைக் கூறவும் வேண்டுமோ! "மெய்ம்மொழி வான் நிழல் கூறிய பொருளின் ஆகும்" என்று ஆசிரி யரே கூறியிருக்கிறர். அந்த ஒப்பற்ற சொல்லைப் பொன்னேபோல் போற்றி, நூலில் பதினைந்து இடங்களில் கூறியிருக்கிறர். சிறப்பாக முதல், நடு, இறுதிகளில் பெய்து அமைத்திருக்கிறர். ஏறக்குறைய, சரிபாதியில் 2119-ஆம் செய்யுளில் சம்பந்தர் முத்துச் சிவிகையில் ஏறியதை "அஞ்செழுத்தோதி ஏறினர் உய்ய உலகெலாம்" என்று கூறியிருக்கிறர். இதை, பல்லக்குப் பாட்டு என்று ஆன்றேர் கூறுவர்.

**உலகப் பொது நூல்:** பெரிய புராணத் தொண்டர்களில் வெவ்வேறு காலத்தவர், இடத்த வர், குலத்தவர், மிக உயர்ந்தோர், மிகத் தாழ்ந் தோர் இவர்களுக்கு ஏற்ற உதாரணங்களைக் காணலாம். ஏசுநாதர், புத்தபகவான், மகாவீர வர்த்தமானர், முகம்மது நபிகள் போன்ற உயர்ந்த இலட்சியமுடைய பல தொண்டர்கள் பெரிய புராணத்தில் இடம் பெற்றுள்ளனர். அவற்றை விரிவஞ்சி விடுகின்றனம். "மூவேந் தர் மொழி வழங்கும் நாட்டுக்கப்பால் முதல்வனுர் அடிச்சார்ந்த முறைமையோடும்" என்று உலகம் எங்கும் தோன்றும் தெய்வத் திருவருள் தொண் டர்களையும் பெரிய புராணம் போற்றுகிறதென் ருல் அதை உலகப் பொது நூல் என்று சொல் வதற்கு வேறு சான்றும் வேண்டுமோ?

**காவியம்:** புராணம் என்ற பெயர் இருப்பி னும் அது சிறந்த காவியம்; சைவ முதற் காவியம். திராவிடப் பிரகாசிகை ஆசிரியர் "திருவருட்காவியம்" என்று கூறுகிறர். காவிய இலக்கண உறுப்புக்களெல்லாம் தன்னகத்தே கொண்டது. அதன்கண் உலகம், உயிர், கடவுள் என்னும் மூன்றன் இயல்பும், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பயனும் இடம் பெற்றிருக்கின்றன. மலை, நாடு, ஆறு, நகர் முதலிய எல்லாவற்றின் வருணனைகளையும் காணலாம். காவியத் தலைவர் சுந்தரர்; அவர் வரலாறு முதலிலும், நடுவிலும், இறுதியிலும் அமைக்கப்பட்டிருக்கிறது. மற்றைய அடியார் களின் வரலாறுகள் இவற்றினிடையே மிளிர் கின்றன. கதை திருக்கயிலையில் தொடங்கி, திருக்கயிலையில் முடிகிறது. "மூலமான திருத் தொண்டத்தொகைக்கு முதல்வராய் இந்த ஞால முய்ய எழுந்தருளும் நம்பிதம்பிரான் தோழர்", "சைவ முதல் திருத்தொண்டர் தம்பிரான் தோழர் நம்பி" என்பவற்ருல் காவியத் தலைவர் சுந்தரர் என்பதைக் குறிக்கிறர். "தேசம் உய்யத் திருத்தொண்டத்தொகை முன்பணித்த திருவாளன் வாசமலர் மென்கழல் வணங்கவந்த பிறப்பை வணங்குவாம்" என்று அவரை வணங்கிப் பெறும் பிறப்புக்கே வணக்கம் கூறு கிறர்.

**பத்தி நூல்:** சேக்கிழார் பிள்ளைத்தமிழ் பாடிய பிள்ளையவர்கள், "பத்திச் சுவைநனி சொட்டச்

சொட்டப் பாடிய கவிவலவ", "கல்லுங்கரையக் கவிபாடுங் கனிவாய் முத்தம் தருகவே", "நெஞ்சம் கனியக் கனியக் கண்ணீர் வாரக் கவி பாடிய இறைவ" என்றெல்லாம் பாராட்டுகிருர். காதற் காட்சியைப் படைக்கும்போதுகூடப் பத்திச் சுவையையும் குழைத்து அளிக்கிருர். சுந்தரரும் பரவையாரும் சந்திப்பதைக் கூறும் பாடல்களில் 'சிவன் அருளோ', 'செஞ்சடை யண்ணல் மெய்யருள் பெற்றுடையவனே' என்பவற்றைக் காண்க.

சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல்: சுந்தரர் அவிநாசியில் அந்தணர் வீதிவழியே செல்லும்போது, ஒரு வீட்டில் மங்கல ஒலியும், எதிர் வீட்டில் அழுகை ஒலியும் கேட்டன. அங்குள்ளோரை உசாவிஞர். அந்த நிலையில் ஒரு காட்சியை நம் கண்முன் நிறுத்துகிருர் கீழ்க் காணும் ஒரு பாடலில் சேக்கிழார் பெருமான்:

"அந்த ணுளர் வணங்கி அரும்
புதல்வர் இருவர் ஐயாண்டு
வந்த பிராயத் தினர்குளித்த
மடுவில் முதலை ஒருமகவை
முந்த விழுங்கப் பிழைத்தவனை
முந்நூல் அணியும் கலியாணம்
இந்த மனைமற் றந்தமனை
இழந்தார் அழுகை என்றுரைத்தார்."

இதைவிடச் சுருக்கமாகத் தெளிவுபட இந்த நிகழ்ச்சியை உரைக்க முடியுமா என்றும், பாட்டிலுள்ள ஏதேனும் ஒரு சொல்லை எடுத்துவிட்டு வேறு பொருத்தமான ஒரு சொல்லைப் போடவும் இயலுமா என்றும் அறிஞர்கள் சிந்திப்பார்களாக.

அமங்கலச் சொல் புணராமை: அடியார்க்கு இழைத்த தீங்குகளையும் அமங்கலச் சொற்களால் கூறமாட்டார் சேக்கிழார் பெருமான்; அவ்வளவு தூய்மை, பயபக்தி. 'நினைந்த அப்பரிசே செய்தான்' என்று மெய்ப்பொருள் நாயனர் புராணத்திலும், 'தன் கருத்தே முற்றுவித்தான்' என்று ஏனுதி நாதர் வரலாற்றிலும் கூறியவை காண்க. சிறுத்தொண்டர் புராணத்தில் "இருவர் மனமும் பேருவகை எய்தி அரியவினை செய்தார்" என்பது செயற்கரும் செயல் செய்தார் என்பதைக் குறிப்பதோடு குழந்தையை அரியும் செய்கையைச் செய்தனர் என்றும் பொருள்படும்.

சாதிவேற்றுமையின்மை: ஐயர் என்பதற்குத் தலைவர் என்பது பொருள். பல இடங்களில் தாழ்ந்த வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினரைச் சேக்கிழாரடிகள் ஐயர் என்றே அழைப்பிக்கிருர். வேடர் குலக் கண்ணப்பரை இரண்டு இடங்களில் ஐயர் என்கிருர். அரிசன அடியாரான திருநாளைப் போவாரை (நந்தனுரை) ஐயரே என்று தில்லைவாழந்தணர் அழைக்கக் காண்கிறேம். சம்பந்தர் திருநீலகண்ட யாழ்ப்பாணரான தாழ்ந்த வகுப்பினருடன் திரு எருக்கத்தம்புலியூர் செல்கிருர். "இப்பதி அடியனேன்பதி" என்றுர் பாணர். அவ்வளவில் சம்பந்தப் பெருமான் "ஐயர் நீர் அவதரித்திட இப்பதி அளவில் மாதவம் முன்பு செய்தவாறெனச் சிறப்புரைத் தருளினர்."

பெண்ணுக்குப் பெருமை: சங்ககாலப் புலவர்கள் பெண்ணுக்குப் பெருமை தந்து பேசிஞர்கள். கம்பருக்குப் பிற்பட்ட புலவர் பலர் பெண்களைப் பழித்து இழிவு கற்பித்தார்கள். பெண்ணின் பெருமை உணர்ந்து பேசுவதில் சேக்கிழாரை விஞ்சிய புலவரும் உண்டோ! எடுத்த எடுப்பில் தடுத்தாட்கொண்ட புராண முதற்பாட்டில், "மங்கையர் வதன சீதமதியிரு மருங்கும் ஓடிச் செங்கயல் குழைகள் நாடும் திருமுனைப்பாடி நாடு" என்று கூறுவதைவிட வேறு சான்றும் வேண்டுமோ! பெண்களை அர், ஆர் விகுதிகளில்தான் பேசுவார். இல்லங்களில் பணி செய்யும் பெண்களை வேலைக்காரி என்றுதான் இன்றும் அழைக்கிறேம். சேக்கிழார் சுவாமிகள் சிறுத்தொண்டர் வீட்டுப் பணிப்பெண்ணைச் "சந்தனமாம் தையலார்", "சந்தனத்தார் எனும் தாதியார்" என்று கூறக் காண்கிறேம். சிவஞான சுவாமிகள் தம் சமையற்காரரை அழைத்து, "சற்றே துவையல் அரை தம்பி ஒரு பச்சடிவை, வற்றல் ஏதேனும் வறுத்துவை" என்று கூறியது ஈண்டு நினைவுக்கு வருகிறது. சுவாமிகளுக்குத் தம் வேலைக்காரரிடமிருந்த அன்புதான் என்னே! சேக்கிழார் வழியில் வந்த செம்மல்தாமே அவர்.

முன்னேர் மொழி பொருள்: சேக்கிழார் சங்க நூல்கள், திருமுறைகள் இவற்றில் ஆழ்ந்தகன்ற நுண்ணிய புலமையுடையவர். திருக்குறளைப் பல இடங்களில் உண்மைப் பொருள் விளங்கப் பயன்படுத்தியிருக்கிருர். தேவாரத்தில் அப்படியே தோய்ந்து விட்டார். சம்பந்தர் "மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை வரிவளைக்கைமடமானி" என்று அருளியதை "மங்கையர்க்குத் தனி அரசி எங்கள் தெய்வம் வளவர் திருக்குலக் கொழுந்து வளைக்கைமானி" என்று சேக்கிழார் எடுத்தாண்டு பெருமிதம் கொள்ளுகிருர்.

வரலாற்றுக் கருவூலம்: சேக்கிழார் பெரிய புராணத்தைப் பாடியிராவிட்டால் பல மன்னர்கள், அடியார்கள் இவர்களுடைய இடம், காலம்,

செயல் எல்லாம் மறைந்தே போயிருக்கும். கோச்செங்கட்சோழன் "எண்டோள் ஈசற்கு எழுபது மாடங்கள் அமைத்தது", பரஞ்சோதியார் என்ற சிறுத்தொண்டர் நரசிங்கவர்மன் சேனாதிபதியாய் "மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித் தொன்னகரம் துகளாக்கியது," மகேந்திரவர்மன் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்துக்கு வந்தபின் குணபரேசுவரம் என்ற சிவன் கோயில் கட்டியது, ஐயடிகள் காடவர்கோன், நரசிங்கமுனையரையர், கழற்சிங்கன் முதலியோரைப் பற்றிய குறிப்புக்களெல்லாம் இந்தப் புராணத்தில் காட்டப்பெற்றுள்ளன.

இசைக்கலை: சேக்கிழார் இசைக்கலை பற்றிய பல குறிப்புக்களைக் கூறியிருக்கிறார். 'பித்தா பிறைசூடி' என்ற பதிகத்தைச் சுந்தரர் பாடியதைச் சொல்லும் சேக்கிழார், "கொத்தார்" என்று தொடங்கும் புராணப் பாடலைச் சுந்தரர் பாடிய இந்தளப்பண்ணிலே அமைத்துப் பாடியிருக்கிறார். குழல், யாழ் முதலியவை பற்றியும் பண்களின் இயல்பு பற்றியும் குறிப்புக்கள் புராணத்தில் உள்ளன.

அரசியல்: முதல் அமைச்சராக இருந்த சேக்கிழாருக்கு நீதிமன்ற நடப்பும் நன்கு தெரியும். ஆட்சி (custom or oral evidence), ஆவணம் (Documentary evidence) காட்சி, (Eye witness) என்பவற்றைத் தடுத்தாட்கொண்ட புராணத்தில் கூறியிருக்கிறார். இக்கால நீதிமன்றங்களும் இந்த அடிப்படையைத்தான் பின்பற்றுகின்றன.

செய்யுள் நயம்: இதற்கு உதாரணங்கள் எண்ணிறந்தன காட்டலாம். "சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்", "ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள", "சென்ற காலத்தின் பழுதிலாத்திறமும்" என்ற தொடக்கத்தையுடைய பாடல்களை நாம் என்றும் மறக்க முடியாது. வேடர் வாழ்க்கை, அரிசனச் சேரியின் காட்சி, நால்வகை நிலவருணனை, ஆயுதப் பயிற்சி, சமையற்கலை, தமிழ்நாட்டுப் பழக்க வழக்கங்கள், விருந்தோம்பல் முதலியவற்றையெல்லாம் இந்தப் புராணத்தில் காணலாம். எல்லாப் பொருளும் இதன்பாலுள, இதில் இல்லாத எப்பொருளுமில்லை யென்றே கூறிவிடலாம்.

எண்ணழகு: 'உலகெலாம்' என்று தொடங்கும் முதற் பாடலில் 63 எழுத்துக்கள் உள்ளன. அவை 63 தனியடியார்களைக் குறிக்கும். அதிலுள்ள ஒன்பது உகரங்கள் ஒன்பது தொகையடியார்களைக் குறிக்கும். கண்ணப்பர் புராணத்தில் 94-ஆம் பாட்டு தீர்த்தப் பெருமை, 95-தலப் பெருமை, 96-மூர்த்திப் பெருமை கூறியிருப்பது இறைவன் 96 தத்துவங்களையும் கடந்து நிற்பவன் என்பதைக் காட்டுகிறது. முருகநாயனார் - அறுமுகன் பெயருடையவர்; பாடல்கள் ஆறு சீருடையன. அவர் தொடுத்தவை அறுவகைப் பூமாலைகள்; அவர் பயின்றது ஆறங்கம்; அவர் ஊரான திருப்புகலூரைப் பற்றிச் சொல்லும் பாடலில் 'சூழும்' என்ற சொல் ஆறு தடவை அமைந்திருக்கிறது. உருத்திர பசுபதி நாயனார் எண்ணியது ஐந்தெழுத்து. அவர் புராணப் பாடல்களும் ஐந்து சீர்களை உடையன. திருமூலர் 28 ஆகமப் பொருள்களைத் தொகுத்தார். அவர் புராணத்தில் 28 பாடல்களே உள்ளன. எண்ணலங்காரம் உள்ள பாடல்களும் உள்ளன.

சேக்கிழார் சுவாமிகள் திருவருள் துணைகொண்டு புராணத்தைப் பாடியதோடு, கண்ணால் பார்த்தது, காதால் கேட்டது இவற்றையெல்லாம் ஆராய்ந்து அறிந்தவற்றையே கூறினார். ஆகவேதான் நாயன்மார் புராணங்களில் பாடல்கள் கூடியும் குறைந்தும் காணப்படுகின்றன. திருநாவுக்கரசர் புராணத்தை "அடியனேன் ஆதரவால் ஆண்ட அரசின் சரிதப்படியை யான் அறிந்தபடி பகர்ந்தேன்" என்கிறார்; திருஞான சம்பந்தர் வரலாற்றை 'அருந்தமிழாகரர் சரிதை அடியேனுக் கவர்பாதம்தரும் பரிசால் அறிந்தபடி துதி செய்தேன்" என்கிறார்; வெள்ளானைச் சருக்கத்தில் "தம்பிரான் தோழர் காலைமலர்ச் செங்கமலக் கண் கழறிற்றறிவாருடன்கூட ஆலமுண்டார் திருக்கயிலை அணைந்தது அறிந்தபடி யுரைப்பாம்" என்று கூறுகிறார்.

சேக்கிழார் மிக்க நன்றியுள்ளம் படைத்தவர். புராணம் பாடத் தூண்டிய சோழ மன்னனைப் பத்து இடங்களில் சிறப்பித்திருக்கிறார். தேசமுய்யத் திருத்தொண்டத் தொகையருளிய சுந்தரமூர்த்திகளைத் தம்முடைய அழியாப் பெருங் காவியத்திற்குத் தலைவராக்கிய பெருமை அவருடைய நன்றிமறவாமையையே குறிக்கும்.

இதுகாறும் சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணத்தின் சிறப்பியல்புகளைச் சொன்னேன். அது, இலக்கிய ஊற்று, காவியச் சோலை, ஓவியச்சாலை, அன்புக்கடல், பத்திப் பெருவெள்ளம், கற்பனைக் களஞ்சியம், பல்கலைக் கூடம் இன்னும் பலவாறெல்லாம் புகழ்ந்து பேசலாம். அவர் அருளிய புராணத்தைப் படித்து நம் வாழ்வைச் செம்மைப்படுத்திக்கொண்டு இறையருளுக்குப் பாத்திரமாவோமாக.

சேக்கிழார் சேவடி வாழ்க.

# பக்திச் சுவையைப் பாடிய பாவலர்

[கருமுத்து தி. மாணிக்கவாசகம், பி. ஏ.]

பக்திச் சுவையைச் சுவையாகப் பாடிய சேக்கிழாரின் தெய்வப் புலமையை அனைவரும் நன்கு அறிவர். பக்திச் சுவையைச் சிறப்பியல் பாகக் கொண்டு விளங்கும் பெரிய புராணத்தைப் பாடிய சேக்கிழாரின் பெருமையை யாரே அளவிட வல்லார்! மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள், சேக்கிழாரின் பெருமையைப் போற்றிப் பாடும்பொழுது, "பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ" என்றன்றோ பாடுகின்றார். எல்லாச் சுவைகளும் பெரியபுராணத்தில் அமைந்திருப்பினும் பக்திச் சுவையே விஞ்சி நிற்கிறது எனக் கூறின் அது மிகை ஆகாது. பெரிய புராணத்தில் தொட்ட தொட்ட இடமெல்லாம் பரிமளிப்பது பக்திச் சுவையேயாகும். சேக்கிழார், இறைவனின் பேரருளை நினைந்து, வியந்து, போற்றி வாழ்த்தும் முறை நெஞ்சை உருக்குவதாகும்.

"உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்"

என்னும் வாழ்த்துப்பாடல் இறைவனின் பேராற்றலையும் பேரருள் திறத்தையும் எவ்வளவு அழகாக எடுத்தியம்புகிறது? 'உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்' என்பதிலே இறைவனின் பேராற்றலையும் 'நிலவுலாவிய நீர்மலி வேணியன்' என்பதில் இறைவனின் பேரருள் திறத்தையும் காண்கின்றோம்.

அடியவரின் பக்தியிலே இறைவன் ஈடுபடுகின்ற தன்மையைச் சுந்தரமூர்த்தி நாயனாரின் வரலாற்றைக் கூறும்பொழுது சேக்கிழார் அழகாகக் குறிப்பிடுகின்றார். சுந்தரரோ இறைவனை வன்மையாகப் பேசிவிடுகிறார். இறைவனுக்குச் சினம் அல்லவா வரவேண்டும்? சினம் வரவில்லை. சினம் கொள்வதற்குப் பதிலாக மனம் மகிழ்கின்றார். 'வன்றொண்டன்' என்னும் நாமமும் சூட்டி மகிழ்கின்றார். சுந்தரரின் பக்திப் பாடல்களைக் கேட்க விரும்புகின்றார். தம்மையும் மறந்து, பக்தர்கள் பாடும் தமிழ்ப் பாடல்களின் சுவையிலே ஈடுபடப் பெருவிருப்பம் கொள்கிறார். இக்கருத்தைச் சேக்கிழார் பாடும் திறம் ஈடு இணையற்றதாகும்.

"மற்றுநீ வன்மை பேசி
வன்றொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கும் அன்பில்
பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே ஆகும்
ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார்
தூமறை பாடும் வாயார்"

என்னும் இப்பாடல் இறைவன் தமிழ்ப் பாடல்களின் சுவைகளிலே ஈடுபடும் தன்மையை எவ்வளவு அழகாக எடுத்தியம்புகிறது! அதுமட்டும் அன்று. பக்தர்கள் இடத்திலே இறைவன் கொண்டிருக்கும் அன்புத் திறத்தையும் எவ்வளவு அழகாக எடுத்தியம்புகிறது! தில்லையின் எல்லையை நெருங்குகிறார் சுந்தரர். பலவகை மரங்கள் நிறைந்த சோலைகளையும் மலர்ப் பொழில்களையும் பார்த்து மகிழ்கிறார். வண்டுகள் மலர்களின் மகரந்தப் பொடியைப் பூசிக் கொண்டதனாலே தூய திருவெண்ணீற்றை அணிந்த பக்தர்களைப் போல் காணப்படுவதை நோக்கி மகிழ்கிறார். இதனைச் சேக்கிழார்,

"மன்று ளாடுமது வின்நசை யாலே
மறைச்சு ரும்பறை புறத்தின் மருங்கே
குன்று போலுமணி மாமதில் சூழும்
குண்ட கழ்க்கமல வண்டலர் கைதைத்
துன்று நீறுபுனை மேனிய வாகித்
தூய நீறுபுனை தொண்டர்கள் என்னச்
சென்று சென்றுமுரல் கின்றன கண்டு
சிந்தை அன்பொடு திளைத்தெதிர் சென்றார்"

எனப் பக்திச் சுவை விளங்கப் பாடுகின்றார். இயற்கைப் புனைந்துரையிலும் பக்திச் சுவையை நனி ஊட்டிப் பாடும் திறன் சேக்கிழாருக்கு அமைந்த அருட் செல்வ ஆற்றலாகும். இதனாலன்றோ, திருவானைக்காப் புராணமும், "தகையா அன்பின் விரித்துலகோர் தம்மை அடிமைத் திறப்பாட்டின், உகையா நின்ற சேக்கிழான் ஒளிர்பொற் கமலத் தாள்பணிவாம்" எனச் சேக்கிழாரைப் போற்றிப் புகழக் காண்கின்றோம்.

இளையான்குடி மாற நாயனார் சென்று, பாத்திகளிலே தலை நீட்டிக் கொண்டிருந்த கீரைகளைப் பறித்ததைச் சேக்கிழார்,

" குழிநிரம் பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப்
பாசப் பழிமுதல் பறிப்பார் போலப்
பறித்தவை கறிக்கு நல்க "

எனப் பாடிப் பக்திச் சுவையை ஊட்டுகிறார்.

நாணனும் காடனும் போய்த் திண்ணனாரின் செய்தியை நாகனுக்கும் தத்தைக்கும் உரைத் தனர். நாகனும் தத்தையும் தேவராட்டியை அழைத்துக்கொண்டு வந்து, திண்ணனாரைப் பிடித்திருக்கும் தெய்வ மருளைப் போக்கப் பல வகையானும் முயன்று முடியாமல் கைவிட்டுச் சென்றனர். இதைப்பற்றிப் பாடும்பொழுது சேக்கிழார்,

" முன்புதிருக் காளத்தி முதல்வனார் அருள்நோக்கால்
இன்புறுவே தகத்திரும்பு பொன்னானல் போல்யாக்கைத்
தன்பரிசும் வினைஇரண்டும் சாருமல மூன்றும்அற
அன்புபிழம் பாய்த்திரிவார் அவர்கருத்தின் அளவினரோ "

எனப் பாடுகின்றார்.

ஏனாதி நாதரின் வாளுக்கு அஞ்சிப் புறங் கொடுத்து ஓடியவர்களைப்பற்றிப் பாடும் பொழுது,

" நிலைப்பட்ட மெய்யுணர்வு நேர்பட்ட போதில்
அலைப்பட்ட ஆர்வமுதல் குற்றம்போல் ஆயினர் "

எனப் பாடுவார். இங்ஙனம் எப்பக்கம் நோக் கினும் அப்பக்க மெல்லாம் தெய்வ மணம் கமழ்ந்து ஞான ஒளி திகழும் பக்திப் பாடல்கள் நிறைந்திருக்கும் பெரிய புராணத்தைப் படித்துப் பயன் பெறுவோமாக! பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய சேக்கிழாரின் பெரு மையைப் போற்றித் திருவருட் செல்வர்களாக வாழ்வோமாக!

# ஞானத்தமிழில் சாத்திர நுட்பங்கள்

[பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி பி. ஏ., திருப்பனந்தாள்]

சைவ நன்மக்கள் செய்த தவப்பயனாகத் தோன்றியவை திருமுறைகள் ஆகும். இம்மைக்கும் மறுமைக்கும் வருத்தம் வந்தடை யாதவாறு அத்திருமுறைகள் உயிர்களை உய்விக்க வல்லன. அவற்றில் முதல் மூன்று திருமுறை களையும் அருளிய அருளாளர் திருஞானசம்பந்தப் பெருமான் ஆவர். உவமையிலாக் கலைஞானத் தையும் உணர்வரிய மெய்ஞ்ஞானத்தையும் ஒருங்கு பெற்ற ஞானப்பிள்ளையார் அருளிய திருமுறையை 'ஞானத்தமிழ்' என்பர்.

ஞானத்தமிழ் என்னும் தொடர் ஞானத்தால் உண்டாய தமிழ், ஞானத்தை அடைதற்குரிய தமிழ், ஞானமாகிய தமிழ் என்றெல்லாம் விரித்துச் சுவைத்தற்குரியதாகும்.

" பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவியெனும் தொல்தோணி கண்டீர்—நிறையுலகில்
பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
தண்மாலை ஞானத் தமிழ் "

என்பது நம்பியாண்டார் நம்பியின் திருவாக்கு.[1] ஊழிப்பெருவெள்ளத்தில் அனைத்துலகும் அமிழ்ந் திடத் தோணிபுரம் (சீர்காழி) ஒன்றே மிதந்தது என்பது வரலாறு. ஆதலின் அத்தோணிபுரத்து எழுந்த ஞானத்தமிழும் பிறவிப் பெருங்கடலை நீந்தத் துணை செய்தலில் வியப்பில்லையன்றோ!

இத்தமிழில் அமைந்த இயற்கை நயங்கள் பல. இனிய உவமைகள் பல. அரிய உள்ளுறைகள் பல. பெரிய வரலாற்றுக் குறிப்புக்கள் பல. சாத்திர நுட்பங்கள் பல. அவற்றுள் சாத்திர நுட்பங்களாக அமைந்த சில குறிப்புக்களை மட்டும் ஈண்டுக் காண்போம்.

ஞானசம்பந்தப் பெருமான் மூன்று ஆண்டி லேயே ஞானப்பால் உண்டவர். இறைவன் உமையொருபாகனாக எழுந்தருளி அத்தவமுதல் வரை ஆட்கொண்டு, அவருக்கு ஞானப்பால் உண்பித்தருளினன். இதனைப்

[2] ' போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தான்எனை யாண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்
பேதையாள் அவளொடும் பெருந்தகை யிருந்ததே '

என அப்பெருமானே குறித்துச் செல்கின்றார்.

1. ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை-11.
2. மூன்றாம் திருமுறை : திருக்கழுமலம்-2.

இத்தகைய அருட்கோலத்தைத் தாம் கண்டும் உலகிற்குக் காட்டியும் உய்வித்த பெருமை அப்பிள்ளையாருக்கு உண்டு. ஆதலின் அவர்தம் பாடல்களில் இறைவனை உமையொருபாகனைக் கண்டு களித்து நமக்கும் காட்டி மகிழ்கின்றார் ஞானசம்பந்தர். 'தோடுடைய செவியன்', 'வேயுறு தோளிபங்கன்', 'எருதேறி ஏழை யுடனே பொன் பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்னுளமே புகுந்த அதனால்', 'உருவளர் பவளமேனி ஒளி நீறணிந்து உமையோடு', 'செப்பிள முலைநன் மங்கையொரு பாகமா', 'கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர், பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை யிருந் ததே' என்பன அவற்றிற்குக் காட்டாகும். இவ் வநுபவத் திருவாக்குக்கள்,

3 "அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்றறிக
அம்மையப்பர் அப்பரிசே வந்தளிப்பர்"

என்னும் சாத்திர நுட்பத்தை அறிய ஏது வாகின்றன.

இறைவன் உயிர்களை உய்விக்க ஐந்தொழில் களைச் செய்தருளுகின்றான். அவை படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்பன.

4 "அழிப்பிளைப் பாற்றல் ஆக்கம்
அவ்வவர் கன்ம மெல்லாம்
கழித்திடல் நுகரச் செய்தல்
காப்பது கன்ம வொப்பில்
தெழித்திடல் மலங்க ளெல்லாம்
மறைப்பருட் செய்தி தானும்
பழிப்பொழி பந்தம் வீடு
பார்த்திடின் அருளே எல்லாம்"

என்பர் அருள்நந்தி சிவாசாரியர்.

5 'ஆவிப்புலனுக்கு அறிவளிப்ப ஐந்தொழிலும் ஏவித் தனிநடத்தும் எங்கோவே' என்பர் குமர குருபர அடிகள்.

எனவே உயிர்களுக்கு மன்னிய புத்திமுத்தி வழங்கவும் துன்னிய மலங்களெல்லாம் துடைக்க வும் இறைவன் இவ்வைந்தொழில்களைச் செய் கின்றான் என்பது கருத்தாகின்றது. இவ்வைந் தொழிற் குறிப்பை வாய்வழி வழிந்த பாலைக் கண்டு யார் ஊட்டியது என வினவிய தந்தையா ருக்கு அங்ஙனம் ஊட்டியவரை அடையாளம் காட்டிய திருப்பாடலில் குறிக்கின்றார் காழிப் பிள்ளையார்.

6 "தோடுடையசெவி யன்விடை யேறியோர்
தூவெண் மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடி பூசியென்
னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந்
தேத்த வருள்செய்த
பீடுடையபிர மாபுர மேவிய
பெம்மா னிவனன்றே."

இதன்கண் 'விடையேறி' என்பதால் படைத்த லையும், 'தூவெண் மதிசூடி' என்பதால் காத்த லையும், 'காடுடைய சுடலைப் பொடிபூசி' என்ப தால் அழித்தலையும், 'உள்ளம்கவர் கள்வன்' என்பதால் மறைத்தலையும், 'அருள் செய்த' என்பதால் அருளலையும் குறித்தல் காண்க.

உயிர்கள் செய்த வினைப்பயன்களை மூவகை யாகப் பிரிப்பர். 1. பழவினை, 2. நுகர்வினை, 3. வருவினை என்பன. இவற்றுள் பிறந்த உடம்பான் முகந்து நின்ற வினையை நுகர் வினை (பிராரப்தம்) என்பர். இவை போகப் பின்னும் அநுபவிக்கக் கடவனவாய் எஞ்சி நிற்பனவற்றைப் பழவினை (சஞ்சிதம்) என்பர். நுகர்வினையை அநுபவிக்கும்பொழுதே மேற் கொண்டு செய்துகொள்ளும் வினையை வருவினை (ஆகாமியம்) என்பர். இவற்றுள் இடையறாத திருவருள் உணர்ச்சியால் நீக்கிக்கொள்ள இயலு வது பழவினையும் வருவினையுமாகும். நுகர்வினை (பிராரப்தம்) உடல் அழியும்பொழுதே நீங்குவ தாகும். இதனையே,

"திருநெறியதமிழ் வல்லவர் தொல்வினை
தீர்தல் எளிதாமே"
"சுருங்க எம தொல்வினையே"
"பற்று நின்றாரைப் பற்றாபாவமே"
"அறும்பழி பாவம் அவலம் இலரே"

என்னும் அருமைத் திருவாக்குக்களால் குறிக் கின்றார் ஞானசம்பந்தர். இவற்றுள் முன்னைய இரண்டும் பழவினை நீக்கத்தையும், பின்னைய இரண்டும் பழவினை வருவினை ஆகிய இரண்டின் நீக்கத்தையும் குறிப்பனவாகும். இவ்வருமை நுட்பத்தையே,

7 "ஏன்ற வினைஉடலோ டேகும்இடை யேறும்வினை
தோன்றில் அருளே சுடும்"

எனக் குறிப்பர் திருவருட்பயன் ஆசிரியர்.

மயேந்திரப்பள்ளி என்னும் பதியில் எழுந் தருளியிருக்கும் பெருமானை ஞானசம்பந்தர் 'மங்கையோர் பங்கினன்' எனக்குறித்து மகிழ்

3. திருக்களிற்றுப்படியார்–1. 4. சிவஞானசித்தியார் : சுபக்கம்–57. 5. கந்தர்கலிவெண்பா–64, 65.
6. முதல் திருமுறை : திருப்பிரம்மபுரம்–1. 7. திருவருட்பயன்–98.

வதுடன் 'யோகணைந்தவன்' என்றும் குறித்து மகிழ்கின்றார்.

இங்கு இறைவன் போகியாகவும், யோகியாகவும் இருந்து அருள் செய்கின்றான் என்னும் சாத்திர நுட்பத்தைக் கண்டு மகிழலாம்.

8 "போகியா யிருந்து யிர்க்குப்
போகத்தைப் புரிதல் ஓரார்
யோகியா யோக முத்தி
உதவுதல் அதுவும் ஓரார்
வேகியா னுற்போற் செய்த
வினையினை வீட்ட லோரார்
ஊகியா மூட ரெல்லாம்
உம்பரின் ஒருவ னென்பர்"

என வருவது காண்க.

ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்கிக் கூடும் அன்பினில் கும்பிடுதலையே விரும்பும் அடியார்களுக்குத் தேவர் உலகு ஒரு பொருளாகாது. அந்தமில் இன்பமாய அழிவில் முத்தியே வேண்டப்படுவதாகும். 'சிவனடியைச் சேரும் முத்தி செப்புவதிங்கு யாமே' என்னும் ஞான நூல். இக்குறிப்பினை,

"கொங்குலா வரிவண்டு இன்னிசை
பாடும் மலர்க்கொன்றைத்
தொங்கலான் அடியார்க்குச் சுவர்க்கங்கள்
பொருள் அலவே"

எனக் குறிக்கின்றார் ஞானசம்பந்தர். இங்ஙனமே குமரகுருபர அடிகளும், இந்திரன், மால், பிரமன் எழிலார் மிகு தேவர்களாக இருந்து துய்க்கும் நுகர்ச்சி ஆராவின்பம் என்று அரும்பெயர் பெறினும் வாராவல்வினை வருவிக்கும்மே என்று கூறி அவற்றை உவர்த்துத் தள்ளி, அடியார்களின் பரிகலசேடத்தையுண்ணும் வரனுடைனுமலியாகும் வரத்தையும், குருவருளையும் தம் குருமூர்த்திகளிடம் வேண்டும் பான்மையும் ஈண்டு நினைவு கொள்ளுதற்குரியதாகும்.

இறைவன் தோத்திரமும் சாத்திரமும் ஆனவன் எனக் குறிக்கின்றார் நாவரசர். அவற்றுள் தோத்திரமாகவுள்ள ஆளுடையபிள்ளையார் ஞானத்தமிழ் சாத்திர மூலமாக அமைவதைக் கண்டின்புறுகின்றோம். பிறவும் அத்தகையவே.

# நாட்டியக் கலை

[கலாசிகாமணி பரத வித்வான் தஞ்சை, குப்பையா பிள்ளை, முதல்வர் ஸ்ரீ ராஜ ராஜேசுவரி பரத நாட்டிய கலா மந்திர், பம்பாய்.]

நடனக்கலை தொன்மையும், தூய்மையும், பெருமையும் வாய்ந்த ஓர் அழகிய கலை. முற்காலத்தில் பெரிதும் போற்றப்பட்டும், மதிக்கப்பட்டும் வந்த கலைகளுள் ஒன்று இந்நடனக் கலை.

பரதம் என்பது 18 வகைப்பட்டது. அதில் தற்போது நடைமுறையில் நாட்டியம் ஆடுவதற்கு உகந்தது 'நந்தி பரதம்' தான். அந்த நந்தி பரதகிரந்தத்தில் உள்ளதை, என் தகப்பனார், திரு பஞ்சாபகேச பிள்ளை அவர்கள் தமிழில் எழுதி, அதற்கு 'அபிநய நவநீதம்' என்று பெயரிட்டு ஒரு புத்தகமாக வெளியிட்டுள்ளார்கள். அப்புத்தகத்தைச் 'சென்னைச் சங்கீத கர்நாடக சபையினர்' பிரதி எடுத்து வெளியிட்டிருக்கிறார்கள். அதில் பல விளக்கங்கள் அடங்கியுள்ளன.

நாட்டியத்திற்கு உகந்ததாக 'நந்தி பரதம்' கருதப்படுவதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. என்றும் எப்பொழுதும் ஈசுவரனின் பக்கத்திலேயே இருந்து இறைவன் நடனத்தைப் பார்த்தவர் நந்தி என்பதும் அக்காரணங்களுள் ஒன்று. இக்காரணத்தை மேலும் வலியுறுத்தும் வகையில் அமைந்துள்ளது கீழ்வரும் ஸம்ஸ்கிருதச் செய்யுள் :


"கல்யாணசலவாஸாய கருணாரஸஸிந்தவே
நமோஸ்து நந்திகேசாய நாட்யசாஸ்த்ரார்த் தாயதே"

இச்செய்யுளில் இந்திரன் நந்திகேசுவரரிடம் நாட்டிய சாஸ்திரத்திற்கு விளக்கம் கூறுமாறு வேண்டுகிறான். அதற்கு நந்திகேசுவரர் கீழ்வருமாறு பதில் அளித்தார் :

"நாட்யம், ந்ருத்தம், ந்ருத்யமிதி
முநிபி : பரிகேர்த்திதம்
நாட்யம் தந் நாடகச்
சோயம், யோக்ய பூர்வகதாயுதம்..."

தற்போதும் பரதத்தை நாட்டியம், நிருத்தம், நிருத்தியம் என்று மூன்றுவகைப் படுத்தியுள்ளார்கள். தந் நாடகஸ்சோயம், யோக்யபூர்வகதா

8. சிவஞானசித்தியார் : சுபக்கம்–70.



ஆடவல்லானும் அம்மையும்
(திருவிடைமருதூர்த் திருக்கோயில்)

திருநாவுக்கரசர் தேவாரம்

சாட எடுத்தது தக்கன்றன் வேள்வியிற் சந்திரனை ;
வீட எடுத்தது காலனை ; நாரணன் நான்முகனும்
தேட எடுத்தது ; தில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
ஆட எடுத்திட்ட பாதமன் றோநமை ஆட்கொண்டதே.



அர்த்தநாரீசர்
(திருவிடைமருதூர்)

திருவாசகம்
(கோத்தும்பி)

தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையு முடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ !

யுதம், பிரஹ்லாத சரித்திரம், இரண்ய சரித்திரம் போன்ற புராண சரித்திரங்கள் ஆடுவது ‘நாட்டியம்’ என்று குறிப்பிடப்படுகிறது. ரஸங்களும், பாவங்களும் கூடித் தாளக்கட்டுகள் குறைவாக உள்ளதே ‘நிருத்தம்’ எனப் படுவது. பாவம், ரஸம், அடவுகள், ஜதி பேதங்கள் முதலியன பொருந்தியதே “நிருத்தியம்” என்பதாகும். “லாஸ்யம்” என்பது பாவங்கள் பிடிப்பது. “தாண்டவம்” என்பது நின்று ஆடுவது. இவை இரண்டும் அடங்கியதே நாட்டியமாகும்.

முற்காலத்து நடனத்தையும், தற்போது நடைபெறும் நடன நிகழ்ச்சிகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இரண்டிற்கும் அதிக வித்தியாசங்கள் இருப்பது தெள்ளென வெளிப்படுகிறது. முன்பு, நாட்டிய நிகழ்ச்சிகள் எல்லாம் பெரும்பாலும் கோயில்களில்தான் அரங்கேற்றப் பட்டு வந்தன. நாட்டியத்தில் கடவுளையே தலைவனாகக் கொண்டு தன் தொண்டுகளனைத்தையும் அவருடைய திருப்பாதத்தில் அர்ப்பணிப்பதாகப் பாடல்கள் அமைக்கப்பட்டும், ஆடப்பட்டும் வந்தன. பின்பு காலச் சுழற்சியில் இம்முறை மாறி, நாட்டிய நிகழ்ச்சிகள் வேந்தர்கள் முன், அரசவையில் மன்னவர்தம் புகழ்பாடி நிகழ்த்தப்பட்டு வந்தன.

முற்காலத்தில் ‘ருத்ரகணிகைகள்’ எனப் படும் தேவதாசிகள் நாட்டியக் கலைக்குத் தம்மை அர்ப்பணித்துக் கலைத்தொண்டு புரிந்து வந்தனர். தற்போது அந்நிலை மாறி, எல்லாப் பிரிவினரும் நடனம் பயின்று வருகின்றனர்.

இடையில், இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் ‘நாட்டியம்’ என்ற ஒரு கலை இருந்த சுவடே தெரியாமல் மறைந்துவிடுமோ என்ற நிலை ஏற்பட்டது. அந்நிலை ஏற்படாவண்ணம்—நாட்டியக்கலை அழியாவண்ணம்—தடுத்து நாட்டியம் தழைத்தோங்கவும் நாலு திசைகளிலும் பரவவும் பல இன்னல்களுக்கிடையே ஒரு சில குடும்பத்தினர் அரும்பாடுபட்டு அதில் வெற்றியும் கண்டனர். அவ்வாறு கலைப்பணி புரிந்தோரே திருவாரூர் ஞானத்தம்மாள், சேலம் மீனாட்சி அம்மாள், தோவூர்ச் சுப்புலக்ஷ்மி, பங்களூர்ச் சீதா, புதுக்கோட்டை அம்மாளு அம்மாள், திருவாளப்புத்தூர் கல்யாணி அம்மாள், காரைக்கால் சாரதாம்பாள், அம்மணி முதலாயினோர்.

இவ்வாறு போற்றப்பட்ட இந்நாட்டியக் கலை இன்று கடல்கடந்து, பல மேலைநாடுகளிலும் மதிக்கப்பட்டுவருவது பெருமைக்குரியதாகும்.

இந்நாட்டியத்தில் பல நாட்டிய-நாடகங்களும், குறவஞ்சி நடனங்களும் இடம்பெறுவது குறிப்பிடத் தக்கதாகும். அவற்றுள் முதன்மையான சிலவற்றுள் ‘சரபேந்திர பூபால குறவஞ்சி’, ‘மத்யார்ஜுனக் குறவஞ்சி’ முதலியவை குறிப்பிடத்தக்கவை.

மத்யார்ஜுனக் குறவஞ்சி:—

இடைமருதூர் எனும் மத்யார்ஜுன க்ஷேத்திரத்தில் ஸ்ரீ பிருகத்சுந்தரகுசாம்பிகா சமேத ஸ்ரீ ஜ்யோதிர்மய மகாலிங்கப் பெருமானைத் தரிசிக்க வந்த அகஸ்தியரும், முனிவர்களும், தேவர்களும், சிவபெருமானையும், தேவியையும் திருமணக் கோலத்தில் காண விருப்பமுற்று, அவ்வாறே காட்சி அளிக்குமாறு இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டனர். அதன்படி அருள் செய்யப் பராசக்தியான அம்பிகை குழந்தை வடிவத்தில் தோன்றி, வாணியர்கள் இல்லத்தில் வளர்ந்து பருவமடைகிறாள். கலைமகளான தேவி ஜ்யோதிர்மயப் பெருமானை உளங்கொள்ள, அதையறிந்த கலைமகளான சரஸ்வதி குறத்தியாகத் தோன்றி அம்பிகைக்குக் குறிசொல்ல, அதைக் கேட்டுக் காவிரி நதிக்கரையில் வடக்கு முகமாக அமர்ந்து, தேவி பரமனைக் குறித்துத் தவக்கோலம் பூண்டாள். அது கண்டு பரவசமடைந்த தேவர்களும், ரிஷிகளும் வேதங்கள் ஒலிக்க, நாரதரும் தும்புருவும் கீதங்கள் பாட, கந்தர்வர்கள் வாத்தியங்கள் முழங்க, நால்வர்கள் தேவாரப் பண் இசைக்க, நாட்டியப் பெண்கள் ஆட, ஓர் அரிய காட்சி உருவாகின்றது. இந்தக் காட்சி ஆண்டுதோறும் வைகாசி மாதம், வசந்த உற்சவமாக நிகழ்கின்றது. மருதவனத்தில் தவக்கோலம் பூண்டுள்ள மோகாம்பிகைக்கு உலாக் காட்சி அளித்து, திருமால் தாரை வார்த்துத் தர முதல்வன் திருக்கலியாணம் செய்துகொள்ளுகிறார். இக்காட்சியைக் கண்டு தேவர்களும், ரிஷிகளும் லோகம் சுபிட்சமாக இருக்க ஆனந்த கரகோஷம் செய்கின்றனர். பக்தர்கள் தம்தம் கோரிக்கைகளைக் கூறி இறைவனையும், அம்பிகையையும் வேண்டுகின்றனர். தேவி இறைவன் மீது மோகம் கொண்டதால், மோகாம்பிகை என்ற பெயரும் உண்டாயிற்று. சரஸ்வதியான குறத்தி, திருக்கல்யாண வைபோகமும் கண்டு, காவிரி நதியில் மஞ்சன நீராடும்போது, தான் சொல்லிய குறிப்பயனால் வெற்றியடைந்த தேவியிடம் சம்மானம் பெற்றுக்கொண்டு, விடை பெறுகிறாள். தேவியும் சிவபெருமானும் வெள்ளி ரதத்தில் ஊர்வலமாக வந்து அனைவருக்கும் அருள் புரிந்து காட்சி அளிக்கின்றனர்.

# திருமூலர் அன்பும் திருவள்ளுவர் அன்பும்

[ஜஸ்டிஸ் கிருஷ்ணசாமி ரெட்டியார், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி]

" கயிலாயத் தொருசித்தர் பொதியிற் சேர்வார்
காவிரிசூழ் சாத்தனூர் கருது மூலன்
பயிலாநோ யுடன்வீயத் துயர நீடும்
பசுக்களைக்கண் டவனுடலிற் பாய்ந்த போத
வயலாகப் பண்டையுடல் அருளான் மேவி
ஆவடுதண் டுறையாண்டுக் கொருபா லாகக்
குயிலாரு மரசடியி லிருந்து கூறிக்
கோதிலா வடகயிலை குறுகி னரே."

—உமாபதி சிவாசாரியர்

பொன்னி நதிக்கரையில் அமைந்த சாத்த னூரின் ஊர்ப்புறத்தே ஆநிரைக் கூட்டம் தம் கால்களைத் தூக்கியும் வாலை நிமிர்த்தியும் கதறிக் கண்ணீர் வழிய அழுது புலம்பின. அவற்றின் சோக உணர்ச்சியை உணர்ந்து அவற்றின் அவலக் காட்சியினைக் கண்டார் அருள்வள்ளலாய சிவயோகியார் ஒருவர். பசுக்களின் செயலைக் கண்டு வியப்புற்ருர்; உள்ளம் நெகிழ்ந்தார். உடனே தம் உடலைத் தக்க இடத்தே இட்டுக் கூடுவிட்டுக் கூடுபாயும் சித்தியினுல் ஆநிரைக் கூட்டத்தின் நடுவண் உயிர் அற்றுக் கிடக்கும் மாடு மேய்க்கும் மூலன் உடலில் தம் உயிரைச் செலுத்தினுர் யோகியார். மூலன் உயிர் பெற்றெழுந்தான். பசுக்கள் எல்லாம் நாத்தழும்ப நக்கி மோந்து அருகில் அண்மின; கனைத்தன; களிப்பினுல் வால் நிமிர்த்தித் துள்ளின. அன்று மாலை வழக்கம்போலப் பசுக்களை அவற்றின் இல்லங்களில் சேர்த்தான் மூலன். யோகியார் மறைத்து வைத்திருந்த தம் உடலைத் தேடினுர். ஆனுல் கிடைக்கவில்லை.

யோகியார், இறைவன் தம் உடலைக் கரப்பித்தமைக்கும் ஒரு காரணம் இருக்கவேண்டும் என்று எண்ணினுர். தம் மெய்ஞ்ஞானத்தால் ஆராய்ந்தார். சிவனுர் தந்த ஆகமப் பொருளை மண்மிசையுள்ளோர் நல்வாழ்வு பெறுதற்காக உணர்த்தவே தம் உடல் மறைக்கப்பட்டுள்ளது போலும் என்று உணர்ந்தார்.

யோகியாராய திருமூலர் திருவாவடுதுறை சென்ருர். மிக உயர்ந்த ஓர் அரசமரத்தின் நீழலில் அமர்ந்தார்; சிவயோகம் புரியலாயினுர். ஆண்டு ஒன்றுக்கு ஒரு தெய்விகப் பாடல் அருளினுர். மூவாயிரம் ஆண்டுகள் தவமிருந்தார். மூவாயிரம் திருமந்திரப் பாடல்களைப் பாடினுர். பாடியபின்னர் வந்த வேலை முடிந்தது எனத் திருக்கயிலை சேர்ந்தார். ஐந்தொழிலில் வல்ல பரமன் திருவடிநீழலில் இரண்டறக் கலந்தார்.

திருமூலர் திருமந்திரம் மக்கள் வாழ்வினுக்கு வளம் தரும் அற்புத மருந்தாம். வாழ்வு வேண்டும் என்று விரும்புபவர் யாவரிடமும் நல்வாழ்வினுக்கு மிகவும் இன்றியமையாதது யாது என்று வினவின், பொருளே தேவை என்று கூறுவர். பொருள் மக்களை ஆசாபாசங்களில் ஈர்க்கும் என்பதையும், பொருள் மும்மலங்களையும் யான், எனது என்ற செருக்கினையும் போக்கும் ஆற்றல் அற்றது என்பதையும் யாவரே உணரவல்லார்? மரத்தடி மந்திரவாதி ஒரு ரூபாய் நோட்டுக்களை இரண்டு ரூபாய் நோட்டுக்களாக மாற்றுகின்ருன் என்ற செய்தியைக் கேள்வியுற்ற செல்வர் பலர் தம் பொருளைக் கொண்டுபோய்க் கொடுத்து இழந்து திருடனுக்குத் தேள் கொட்டியதுபோலத் திகழ்வதை நாம் காண்கின்ருேம் அல்லவா? நிலையில்லாத உடல், பொருள்கொண்டு நிலையாக உளதாகும் முத்தி இன்பத்தை அல்லவா பெற முயல வேண்டும்? இந்த மெய்யறிவு வரப்பெறவில்லையெனில் கற்றதனுல் ஆய பயன்தான் என்ன? நெற்குற்றி, உமி தவிடு தள்ளி, அரிசி கொள்ளாமல் உமி குற்றிப் பயன்பெருது காலத்தை வீணுக்குகின்றனரே என்று திருமூலர் எண்ணினுர்; உயிர்கள்மீது கருணை கொண்டார். சிபி தன் சதையைப் புருவின் பொருட்டுத் தந்தான். ததீசி முனிவர் தம் முதுகெலும்பை இந்திரனுக்குக் கொடுத்தார். பாரி முல்லைக் கொடிக்குத் தன் மணிநெடுந்தேரினை வைத்துச்

சென்ருன். இராமலிங்க வள்ளலார் வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் உளங் கரைந்து உருகிப் பாடிஞர். இப்பெரியார்களின் நிகழ்ச்சிகள் யாவும் எந்த அரிய பொருளே விளக்குகின்றன? அன்புதான் உலக மக்களே வாழ்விக்கும் அருமருந்து என்பதனை விளக்கும். அன்பினுக்கு உள்ள ஆற்றல் எத்தகையது? நீர்வாயுக்குண்டு, அணுக்குண்டு, துப்பாக்கி முதலியவற்ருல் நிலைநாட்ட முடியாத அமைதியை-சாந்தநிலையை-நிலையாக உலகில் அன்பினுல் நிலைநிறுத்த முடியும் என்பதை அரலேயர், சாக்ரடிஸ், கொன்ஸ் புத்தன், திருவள்ளுவர், வள்ளலார், தாயுமானவர் போன்ற தெய்விக அருள் புலவர்கள் தத்தம் வாழ்வில் தம் அநுபவத்தால் கண்டறிந்த உண்மைகளே உலகம் உய்ய ஐயம்திரிபுஅற உள்ளங்கை நெல்லிக்கனியென அழியாத சொல்லோவியங்களாக எழுதியுள்ளார்.

திருமூலநாயனர் முதல் தந்திரத்தில் அன்புடைமை என்ற பகுதியில் அன்பின் இயல்புகளேயும் பயன்களேயும் சுருங்கச்சொல்லி விளங்க வைத்துள்ளார். அதற்கு அடுத்த பகுதியில் அன்பு செய்வாரைச் சிவன் எங்ஙன் உணர்வான் என்பதையும் அருள் உளங்கொண்டு தெளிவு படுத்தியுள்ளார்.

முதலில் மனிதனுக்கு அன்பு தோன்றும். அன்பு ஈன்ற குழந்தையே அருளாம். அருளாளன் முன்னேயநிலையில் அன்பாளனுக இருந்திருக்க வேண்டும். அன்பு இன்றேல் அருளும் இன்ருெ. தொடர்புடையாரிடத்தே நேயம் கொள்ளத் தெரியாதவன் தொடர்பில்லாத சகல உயிர்களிடத்தும் எங்ஙனம் அன்பு காட்ட இயலும்! இல்லறத்தான் அன்பிற் பழகிப் பழகித் துறவு நிலையில் அருள் பெறுகின்ருன். அன்பெனும் பிடியுள் ஐந்தொழில் வல்ல வித்தகனும் இத்தொழில்களே அலகிலா விளேயாட்டாகச் செய்பவனும் ஆகிய உலகநாத வள்ளலேக் கட்டிப் பிடிக்கின்ருன் அருளாளன். தான் அவன் ஆகின்ருன்; அவன் தான் ஆகின்ருன். அன்பால் சிவம் ஆகின்ருன். அன்பு வேறு அல்ல; சிவம் வேறு அல்ல. அன்பின் நிலேக்களமே சிவம். திணே, பால், நிறம், நாடு, கொள்கை ஆகிய குறுகிய வேறுபாடுகளேக் கடந்து நிற்கும் தன்மையது அன்பு. அன்புள்ள இடத்தில் அங்கிங்கெனுதபடி எங்கும் ஒளி வடிவாகி நிற்கும் பரம்பொருளேக் காண முடிகின்றது. அன்புள்ள இடத்தில் தியாகம் இருக்கும்; உள்ளக் குழைவு தெரியும். தான், அவன் என்னும் வேறுபாடு இராது. அன்பின் துணேகொண்டு அருளாளராகி இறைவன் திருவருளுக்குப் பாத்திரர் ஆன அடியார் அளவிறந்தவர் ஆவர்.

அன்பினேயும் சிவத்தையும் வெவ்வேருகக் கருதும் கருத்துக் கருகி அன்பே சிவம் என்ற முற்றிய கொள்கையில் வந்தவர்கள் அன்பிலே சிவத்தைக் கண்டு என்றும் அழிவில்லாத பேரின்பத்தில் நிலேயாக நிற்பர். அன்பினேப் பெறின், அன்பு வடிவாகின், என்பினே விறகாகவும் உடல் தசையைக் கறிகாய் போன்றும் அறுக்கவேண்டாம். அன்பால் அகம் குழைந்தால் சிவனுகத் திகழலாம்; தான் அவன் ஆகலாம். அன்பு வழியே இறைவனேத் தன்னுள் பெற்று அன்பு வடிவாதற்கு ஏற்ற உறுதியான வழி என்கிருர் திருமூலர். இத்தகைய அன்புப் பிழம்புகளே ஈசன் உணர்கிருன். அன்பால் நினேந்து நினேந்து உணர்ந்து உணர்ந்து உள்ளுருகி நிற்கும் அருளாளராய தொழும்பர் உளக் கோயிலில் ஒளிவிளக்காகக் காட்சி நல்குகின்ருன் இறைவன். அன்புடையவர் யாவர்? மக்கள் செய்யும் தியாகத்தின் அடிப்படையில் அன்பு தெரியும். உள்ளத்தில் அகந்தைக் கிழங்கை அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ள நிலேயில் அன்பு தெரியும். இம்முடிவையே தொடுக்கும் கடவுள் பழம்பாடல் தொகுதியின் முற்றிய சாரம் என்பர்.

திருமூலர் திருவருள் பாலித்துள்ள அன்புக் கருத்துக்கள்: "அன்பும் சிவமும் ஒன்றே. இதனே உணர்பவரே அமைதியாகச் சிவமாகத் திகழ்வர்; அன்போடு அகம் குழைவார்க்கன்றி வேறு யாவரும் இறைவனே அணுக ஒண்ணுது. ஆர்வம் உடையவரே அரன் தன்னேக் காணலாம். அன்புடையார்க்கே அருளாளன் துணேயாவான். அல்லும் பகலும் தன்னேப் பாசத்துள் வைத்துப் பரிவு செய்வாரை ஈசன் உண்மையில் அறிவான்."

திருமூலர் அன்புபற்றித் தந்தருளிய தனிப் பெருங் கருத்துக்களுக்கு ஏற்பவே உலகமக்கள் உய்யும்வண்ணம் திருவள்ளுவப் பெருந்தகை யாரும் தம் பொய்யா மொழியாம் திருக்குறட்பாக்களில் அருள்பாலித்துள்ளார்.

திருவள்ளுவர் கொண்ட அன்புக் கருத்துக்கள்: "அன்பினுக்கு அடைக்குந் தாழ் இல்லே; அன்புடையார் தம்மையே உலக உயிர்களின் நலத்தினுக்குத் தியாகம் செய்ய முன்நிற்பர்; தமக்கு எனப் பொருளேக் கொள்ளார்; தம் என்பினேயும் பிறர்க்கு உரிமைப்படுத்துவர்; அன்பு ஆர்வத்தையும் ஆர்வம் நண்பென்னும் நாடாச் சிறப்பையும் நல்கும்; வையகத்தில் இன்புற்று வாழ்தற்கு அன்பு மிகவும் வேண்டற்

பாலது. என்பு இல்லாத உயிரை வெயில் காயும்; அன்பு இல்லாத உயிரை அறக்கடவுள் காயும். உயிர் வாழ்க்கையில் அன்பு எனும் அகத்துறுப்பு இல்லையேல் புறத்துறுப்புக்களால் எட்டுணையும் பயன் இன்ரும். உயிர்நிலைக்கு அடிப்படையே அன்பு.''

திருவள்ளுவர், "உலகத்தில் பல்வேறு நிலைகளில் உள்ள மக்களுக்கு நலமான வாழ்வு அமைய அன்பு வழியே ஏற்றது'' என்ருர். திருமூல நாயனுர் மக்கள் உலகினையே தெய்வ உலகமாக்கவும் மக்களைத் தெய்வங்களாக மாற்றவும் தியாகக் கடவுளராக விளங்குமாறு செய்யவும் அன்புணர்வு மிகமிகத் தேவை என்று அருள் பாலித்துள்ளார்.

அன்புவழியே அறவழியாம்;
அன்பு வாழ்க; அறம் வளர்க.

# சேக்கிழாரும் சைவ சித்தாந்தமும்

[ராவ்சாகிப் நல். முருகேச முதலியார், சென்னை]

தெய்வச் சேக்கிழார் சைவத்திற்குச் செய்த பணிகள் பல திறத்தன. சைவ சமய வரலாற்றிலேயே அவருக்கு ஒப்பானுர் ஒருவரும் இலர் என்று சாற்றுவது மிகையாகாது. சைவ சமயாசாரியர்கட்குப் பின்பும் ஸ்ரீ மெய்கண்ட தேவ நாயனுருக்கு முன்பும் எழுந்த சித்தாந்த ஞான சூரியன் என அவரைச் சொல்லல் தகும். முதலாவது, அநபாய சோழன் அவைக்களத்தில் சீவகன் கதைக்கு முதலிடம் பெற ஒட்டாது சிவனடியார்களாகிய உண்மை நாயன்மார்கள் சரிதைகளை விளக்கி நிலைநாட்டியது. இல்லையேல் சிவபெருமான் அடியெடுத்துக் கொடுக்கப்பெற்ற திருத்தொண்டத் தொகையின் பெருமையும், இராசராச சோழனுல் பாராட்டப்பெற்ற திருத்தொண்டர் திருவந்தாதியும் விளக்கம் அடைந்திருக்கமாட்டா. நாயன்மார்கள் சரிதைகளும் செயற்கரிய செய்த பெருந் தொண்டுகளும் மறைந்தோ, குழறுபட்டோ போயிருக்கும். எனவே, நாடாண்ட மன்னனை அச்சரிதையில் ஈடுபடுத்தி அரசியலில் சமயத்தை வளர்த்தது தலையாய தொண்டு. ஒரு நெறியின் தத்துவம், அந்நெறி நின்று அருள்பெற்ற சான்ருேர் வாழ்க்கைகளாலும் வாய் மொழிகளாலுமே செம்பொருளாக விளங்கும்.

இரண்டாவதாக, சேக்கிழார் பெருமான் நாயன்மார்கள் சரிதைகளைத் திருவருள் வலிகொண்டு தம் அளவிலா உழைப்பினுலும் அன்பினுலும் உருவாக்கியது தெய்விகச் செயலாகும். எந்த நாட்டுச் சமயத்திலும் சரித்திர வரலாற்றிலும் சுமார் ஆயிரம் ஆண்டுகள் காலப்பரப்பில் பற்பல காலங்களில் வாழ்ந்த நல்லடியார்களின் வரலாற்றை உள்ளபடி, உணர்ந்தபடி, இறைவன் உணர்த்தியபடியே எழுதிய வேறு ஆராய்ச்சியாளரையும் சமயத் தலைவரையும் காண்கிலோம். ஆராய்ச்சி மட்டுமல்லாமல், அச்சரிதைகளை ஒரு பெருங்காப்பியமாக, உயர்ந்த சிவக் கவிதையாக அமைத்து, உலகம் உள்ளவரை சாத்திரங்கள் படிக்கப்படாவிடினும், சைவ உண்மைகளுக்கு அடிப்படையான அநுபூதிமான்கள் சரிதை மன்னி உலவச் செய்தது சேக்கிழாரின் பெருமையாகும்.

மூன்ருவதாக, சைவத்தின் குலக் கவிஞராகிய சேக்கிழார் சைவ சித்தாந்த உண்மைகளைத் தெளிவுபடத் தாம் இயற்றிய திருத்தொண்டர் புராணத்தில் உணர்த்தியதாகும். இது முன் இரண்டையும்விட மிகச் சிறந்த தொண்டாகும். இக்காரணம் பற்றியன்ருே மெய்கண்ட சாத்திரங்கள் பதினுன்கில், எட்டுச் சாத்திரங்கள் இயற்றியவரும் 'பௌஷ்கர ஆகம'த்திற்கு விருத்தியும் 'சதரத்தின சங்கிரகம்' எனப்படும் ஆகமத் தொகுப்புச் செய்து உரையும் வடமொழியில் இயற்றிய ஸ்ரீ உமாபதி சிவசாசாரியர் சேக்கிழார் அடிபோற்றி அவரது புராணத்தைப் பாடிப் பெரிய புராணத்தின் பெருமைகளைப் பரக்கக் கூறிப் புகழ்ந்துள்ளார்.

இனி, சேக்கிழார் பெருமான் சுத்தாத்துவித சைவ சித்தாந்தத்தை எந்த முறையில் நிலைநாட்டினுர் என்பதைச் சிந்திப்பாம். சேக்கிழார் காலம் சைவ சித்தாந்த ஞானசூரியனுன ஸ்ரீ மெய்கண்டாரின் காலத்துக்குச் சுமார் எழுபது ஆண்டுகள் முந்தியது என உறுதியாகக் கூறலாம். இராமாநுசர், மத்துவர், பராசரர், பசவேசுவரர் முதலியவர்களின் காலத்துக்குச் சிறிது சமமாகவோ சிறிது பின்ருே இருக்கும்.

அடியார்க்கு நல்லார் போன்ற இலக்கிய ஆசிரியர்களின் காலமும் ஏறக்குறைய அதுவே. இந்தச் சூழ்நிலையில் தமிழ் மறையாகிய சைவ சமயாசாரியர்களின் திருவோத்துக்கள் நிலவியிருந்த போதிலும், ஆகமசாரமாகிய 'திருமந்திர'மும் 'ஞானமிர்தம்' போன்ற சித்தாந்த சாத்திரங்களும் இருந்தபோதிலும், சித்தாந்தத்தின் முப்பொருள் உண்மைகளும் சாதனம், பயன் முதலிய இயல்களும் தெரித்துக் கூறப்படவில்லை. சைவ சமயாசாரியர்களின் அருள் மொழிகள் வழக்கில் இருந்தபோதிலும் அவற்றின் மந்தணப் பொருள்கள் விளக்கப்படவில்லை. மேலும் சாத்திரக் கொள்கைகளை மட்டும் கூறுது அநுபவம் சான்ற உண்மை அடியார்களின் சரிதைகள் வாயிலாக ஆராய்ந்து தெளிவு படுத்த ஒரு ஞானுசிரியர் தேவையாக இருந்தது. சேக்கிழார் பெருமான் தேவாரங்களிலும் திருவாசகம் முதலியவற்றிலும் திளைத்தாடி அவற்றில் அடங்கிய சாத்திர உண்மைகளைப் பெரிய புராணத்தில் ஆங்காங்கே எடுத்தோதியுள்ளார். திருமுறை ஆட்சிகளும், திருக்குறள் முதலிய உயர்ந்த நூல்களின் ஆட்சியும் தொட்ட இடத்திலெல்லாம் காணக்கிடைக்கின்றன. இறைவனின் பஞ்சகிருத்திய அருட்டிறத்தினையும் உயிரின் இயல்புகளையும் பசுபாச ஞானங்களின் இயல்புகளையும் பதிஞானத்தின் உயர்வையும் அணைந்தோர் தன்மையையும் அடியார்களின் பெருமையையும் அவர்கள் உலகுக்குக் காட்டிய நாற்பாத வழிகளையும் சேக்கிழார் பெருமான் கவின்பெற எடுத்தோதியுள்ளார்.

அப்பெருமான் நமக்குப் பின்னர் உதித்த ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனுர் அருளிய சிவஞான போத சூத்திரங்கட்கும் அதன் வழிவந்த வழி நூல்கட்கும் அடிகோலினுர் என்பது உண்மை. வேதாகமங்களின் ஞானசாரமாகிய சைவ சித்தாந்தத்தை இராசாங்கத்தில் அமர்த்தச் சேக்கிழார் செய்த பணி சைவ மரபு மறக்கற்பாலதன்று. இக்காரணம் பற்றியன்றே மாதவச் சிவஞான சுவாமிகள் சேக்கிழாரை, "எங்கள் பாக்கியப் பயன்" என்று போற்றியுள்ளார். தில்லை அம்பலவன் அடியெடுத்துத் தந்த "உலகெலாம்" என்ற முதல் பாட்டுத் தொடங்கிப் புராணம் முழுதிலும் சித்தாந்தக் கருத்துக்கள் மிளிர்கின்றன. அவற்றில் தலைசிறந்த ஒரு பகுதி சேக்கிழார் திருஞானசம்பந்தப் பெருமான் சைவம் தழைக்கத் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாசுரத்துக்கு அளித்துள்ள விளக்கமாகும். இப்பாடல்களைச் சித்தாந்த சாத்திரம் பதினுன்கிற்கு இணையாகவும், காட்சி, அநுமானம், சப்தம் என்ற முப்பிரமாணங்களாலும் அமைக்கப்பட்ட ஒரு பாடியமாகவும் கூறத்தகும்.

முதற்கண் "உலகெலாம்" என்று அம்பலவன் அடியெடுத்துத் தந்த முதற்பாட்டின் தத்துவக் கருத்துக்களைச் சிறிது ஆராய்வோம் :

"உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்"

என்ற திருப்பாட்டில், 'உலகம்' என்பது விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்ற மூவகையாராலாகிய சத்சித்தான பிரபஞ்சம் மலர்கின்ற இடம் பஞ்சகிருத்தியத்தின் ஒரு முதல்வனுகிய சிவபிரானே என்று அருண்மொழித் தேவர் எடுத்தோதியுள்ளார். இது மூவர் முதலிகள் ஓதிய திருமுறைக்குச் சான்ருகவும் பின்வந்த சிவஞானபோத முதற் சூத்திரத்திற்கு அடிகோலினது போன்றும் திகழ்கிறது. மேலும் மூவர் முதலிகள் தம் ஒவ்வோர் மொழியிலும் அநுமானித்துள்ள இறைவனின் சொரூப தடத்த இலக்கணத்தை நிலைநாட்டுகிறது. அம்பலத்தாடும் துரிய அதிகார சிவனுை முழுமுதல்வன் உலகெலாமுணர்ந்து ஓதற்கரிய சொரூப சிவமாயும், அலகில் சோதி மயமான இலய சிவனுயும், நிலவுலாவிய நீர்மலிவேணியுடைய போக சிவனுயும் எடுத்து ஓதிய சேக்கிழார் பெருமானின் அருட்டிறத்தை உணர்ந்து மகிழ்க. நிலவு, ஞானசந்திரக் கலையையும் நீர்மலி வேணியன் என்பது, அனைத்தையும் ஓரியல்பான் ஒருங்கறியும் சர்வஞ்ஞத்துவத்தையும் குறிக்கும். அலகில் சோதியன் என்பது சித்பிரகாசமாய் நிற்கும் சூழ் விளக்காகும். அம்பலத்தில் ஆடுவான் என்பது சிதாகாசத்தில் நடைபெறும் ஐந்தொழில் கூத்தும் ஐந்தெழுத்தின் உண்மையுமாகும். அம்பலவன் திருக்கூத்தானே மும்மல நீக்க மெனப்படும் பாசவிடுதியும், சிவத்துவ விளக்க மெனப்படும் பரமானந்த அநுபூதியும் கைகூடுமென்பதை 'உண்மை விளக்கம்' என்ற நூலிலும் கூறியுள்ளதால் உணர்ந்து கொள்ளத் தகும்.

இறைவனின் தன்னியல்பெனப்படும் சொரூப விலக்கணம் இதுவென்பார் உலகெலாமுணர்ந்து ஓதற்கரியவனென்றும், பொதுவியல்பெனப்படும் தடத்த இலக்கணம் இது வென்பார் நிலவுலாவிய நீர்மலிவேணியன், அலகில் சோதியன் அம்பலத்

தாடுவான் என்றும் சேக்கிழார் எடுத்தோதியுள்ளார். இத்திருப்பாட்டில் இறைவனது அருவம், அருவுருவம், உருவம் என்ற மூன்று தத்துவங்களையும் உலகிற்கு உணர்த்தும் பொருட்டுச் சேக்கிழார் எடுத்தோதியுள்ளார். மேலும் ஆசிரியர் தாம் பாட எடுத்துக்கொண்ட உண்மையானது நாயன்மார் சொரூபம், நிட்களம், நிட்களசகளம், சகளம் என்ற நான்கு திருமேனியும் பற்றி நாற்பாத நெறியினில் ஒழுகிப் பாமுத்தி, பதமுத்திகள் தலைக்கூடிய பெற்றிமையை விளக்கல் நோக்கியும் இவ்வாறு மங்கல வாழ்த்துப் பாடினர் என்று உணரத் தக்கது. அஞ்ஞான்று திருவருட் குறிச் சிவஞானத்தால் இறைவன் இவ்வியல்பினன் என்று அடியார்கள் உணர்ந்தும், அவ்வியல்பெடுத்து ஓத தற்கரியவன் என்றம் உணர்த்துவார். உணர்தற்கும் ஓதற்கும் அரிய தாம் பொருள் சூனியமாமால் என ஆசங்கை நிகழ்ந்துழி, பசுபாச ஞானங்களால் சிந்தித்தற்கும் விவகரித்தற்கும் எய்தா நுண்ணியன், தன்னருளானே உள்ளத்தின்கண் வைத்து ஆராயலுறுவார்க்கு முதற் பொருள் அவ்வாற்றனே உணரவும் ஓதவும் படுவதாகியுள்ள சிவ சத்தாமென வாழ்த்தி வணங்குதற்குரியதென்பது தேற்றம். இக்கருத்தையே, "பாசஞா னத்தாலும் பசுஞானத் தாலும், பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத் தாலே நேசமொடு முள்ளத்தே நாடி" என்று சிவஞான சித்தியார் கூறம்.

இனி, சேக்கிழார் சமயாசாரியர் நிரூபணம் செய்த முறையைத் திருஞானசம்பந்தர் புராணத்தில் அற்புதமாக விரித்துரைத்துள்ளார். ஞானசம்பந்தர் குழந்தைக்குச் சகலர்க்குரிய படர்க்கையாலன்றிப் பிரளயாகலர்க்குரிய முன்னிலையால் சிவஞானம் அளித்தருளல் சால்பாமோ என ஆசங்கிப்போர்க்கு, சேக்கிழார்,

"முன்னிலைமைத் திருத்தொண்டு முன்னியவர்க்
கருள்புரிவான் ;
பொன்மலைவல் லியும்தாமும் பொருவிடைமே
லெழுந்தருளிச்
சென்னியிளம் பிறைதிகழச் செழும்பொய்கை
மருங்கணைந்தார்"

எனத் தவமுதல்வர் சம்பந்தரின் முன்னிலைமையை ஞாபகப்படுத்துவார்.

"சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினி லோங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தாரந் நிலையில்"

என்ற பாட்டில் ஞான வாய்மையை முறைப்படுத்திய சீர்த்தி பின் ஸ்ரீ அருணந்தி சிவாசாரியர் சிவஞான சித்தியாரில் முறைப்படுத்தினதற்கு அடிகோலியதாகும். தவமுதல்வர் சம்பந்தர் உவமையிலாக் கலை ஞானமாகிய அபர ஞானமும் உணர்வரிய மெய்ஞ்ஞானமாகிய பரஞானமும் என்னும் இரண்டினையும் அந்நிலையில் உணர்ந்தார் என்று வினை முடிவு செய்யின், கேட்டல் சிந்தித்தலென்னும் இரண்டும் நூல்பற்றியும், தெளிதல் நிட்டையென்னும் இரண்டும் நூல் பற்றுதும் நிகழுமொப்புமையான், அவைதம்மை அங்ஙனம் இரண்டிரண்டு ஓரினமாக்கிச் சேக்கிழார் ஓதியருளினர். தெளிதலறிவும் நிட்டையறிவும் பரஞானமென ஒன்றுயினும், தெளிதலில் திருவருண் ஞானசக்தி குறைவாயும், நிட்டையில் நிறைவாயும் விளங்குதலின் தெளிதலறிவை விசேடணமாக்கியும் நிட்டையறிவை விசேடியமாக்கியும் ஆசிரியர் ஓதியருளினர். ஆசிரியரின் கருத்துணரமாட்டாது இடர்ப்படுவோர் பின்வந்த சித்தியார் பாடலை உற்றுநோக்குக :

"கேட்டலுடன் சிந்தித்த றெளித னிட்டை,
கிளத்தலென வீரிரண்டாங் கிளக்கின் ஞானம்."

சகலாகம பண்டிதர் சேக்கிழாரின் அடியொற்றியே கேட்டலுடன் சிந்தித்தலையும், தெளிதலுடன் நிட்டை கிளத்தலையும் ஈரிரண்டினமாக்கியது வியக்கத்தக்கது.

கண்ணப்ப நாயனர் புராணத்தில் சேக்கிழார், "யாக்கை தன்பரிசும் வினையிரண்டுஞ் சாருமல மூன்றுமற" என ஓதியவிடத்து, மூன்று மலத்துள் ஒன்ருகிய கருமமலமென்பது மூலகன்மமாதலின் இருவினையின் வேருக அதனைக் கருதினரென்க. மேலும் 'யாக்கை தன் பரிசு' என்றவிடத்து மாயமலங் குறிக்கப்பட்டாலும், யாக்கைக்கு மூலகாரணமாய மாயையை அதனின் வேறுகக் கருதினமை காண்க. "பேணுதத்துவங்களென்னும் பெருகுகோ பானமேறி ஆணையாம் சிவத்தைச் சார" என்றவிடத்துச் சேக்கிழார் தத்துவங்கள்படி முறையினையும், தசகாரியம் எனப்படும் சோபான முறையையும் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தது, பின் சித்தாந்த சாத்திரங்களிலும் குறிப்பாகச் சொல்லப்பட்டுப் பின் விரிந்து தெளிவு கூறும் பண்டார சாத்திரங்கள் என்னும் நூல்கட்கு அடிகோலியது போலாகும்.

திருஞான சம்பந்த நாயனரது 'திருப்பாசுரம்' சிவாகமங்களின் ஞானபாத முடிவாய்ச் சிவஞான போதத்துள் வடித்துக்காட்டிய பன்னிரண்டு சூத்திரங்களின் மூலபாடமாக உணரத்தக்கது. அப்பாசுரத்தில் முதல் மூன்று பாட்டுக்

கள் பொது வகையிலும், பின் பாட்டுக்கள் சிறப்பு வகையிலும் அமைந்துள்ளன. இவற்றிற்குச் சேக்கிழார் பெருமான் இருபத்திரண்டு பாட்டுக்களில் மெய்ப்பொருள் முடிவு காட்டும் வகையில் பேருரை அருளியுள்ளார். முதல் பாட்டாகிய "வாழ்க அந்தணர்" என்ற பாட்டின் விளக்கத்தில் சங்காரக் கடவுளாகிய சங்கரனை முதல்வன் என விளக்கி, எல்லாச் சந்த வேள்விகளும் அர்ச்சனையும் வழிபாடும் அவருக்கே உரியனவெனக் கூறியுள்ளார்.

"அந்தணர் தேவரா னினங்கள் வாழ்கவென்
றிந்தமெய்ம் மொழிப்பய னுலக மின்புறச்
சந்தவேள் விகண்முதற் சங்க ரர்க்குமுன்
வந்தவர்ச் சனைவழி பாடு மன்னவாம்"

என்பது சேக்கிழார் திருவாக்கு.

மற்றோர் அருமைப் பாட்டாகிய "அரிய காட்சியராய்" என்பதன் விளக்கம் சைவ சித்தாந்தத்தின் அரிய கொள்கையான இறைத் தத்துவத்தைக் கவின்பெற விளக்குகிறது.

"அரிய காட்சிய ரென்பதவ் வாதியைத்
தெரிய வாநிலை யாற்றெரி யாரென
உரிய அன்பினிற் காண்பவர்க் குண்மையாம்
பெரிய நல்லடை யாளங்கள் பேசினர்."

முன் பாட்டில் அரன் எனப்பட்ட ஆதியைப் பாச பசு ஞானங்களால் காண இயலாதாதலால், காண்பதற்குரிய அன்பின் திறத்தாலே காணும் பக்குவ முடையவர் காண, உள்ளன்பான நல்ல அடையாளங்களால் இறைவன் அருளுகின்றான் என்று அழகாகச் சேக்கிழார் விளக்கியுள்ளார். இந்திரியக் காட்சி, மானதக் காட்சி, தன் வேதனைக் காட்சி, யோகக் காட்சி என்ற நான்கினில் முன்னை மூன்றும் மாயைக்குட்பட்டமையால், யோகக் காட்சியில் காணத்தக்கதே சிவரூபமாகும். இறைவன் காட்சிப்படும் நிலை சிவஞான போதம் ஒன்பதாம் சூத்திரத்தில் காட்டியபடி "ஊனக்கண் பாச முணராப் பதியை, ஞானக் கண்ணிற் சிந்தை நாடி"ப் பெறும் பெற்றியாகும்.

"ஊனக்கண் பாச முணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
யுராத்துனைத் தேர்த்தெனப் பாச மொருவத்
தண்ணிழலாம் பதிவிதி யெண்ணுமஞ் செழுத்தே."

தம் முதல்வர் அடையாள நிலைகளை உடையவராகக் காணப்படுவராயினும் அக்காட்சியுள்ளே அடங்காத பெருமையுடையவர் என்றும், "பெரியராயிருத்தல் முதலாகிய இயல்புகளை உடைமையே யல்லாமல் விண்முதலாகப் பரந்த ஐம்பூதங்களும் பலவுயிர்களும் அண்டங்களும் இன்னும் உளவாகிய யாவும் பெருவடிவில் பொருந்துபவராயுள்ளார் என்பதைச் சேக்கிழார் விளக்கிக் காட்டும் பாட்டு:

"ஆயி னும்பெரி யாரவ ரென்பது
மேய விவ்வியல் பேயன்றி விண்முதற்
பாய பூதங்கள் பல்லுயி ரண்டங்கள்
ஏயும் யாவு மிவர்வடி வென்றதாம்"

என்பதாகும். இத்தகைய உண்மைகளைச் சித்தியார் திருவிருத்தங்கள் பலப்பல இடங்களில் எடுத்துக் கூறும். உதாரணமாக:

"கண்டசிவன் றனைக்காட்டி யுயிருங் காட்டிக்
கண்ணாகித் கரணங்கள் காணமல் நிற்பான்
கொண்டவனை யுளத்திற்கண் டடிகூடிற் பாசம்
கூடாது,"

"அருளின் வழிநின் றஞ்செழுத்தை
விதிப்படியுச் சரிக்க
மதியருக்க னணையரவம் போற்றோன்று
மான்மாவி லரனே!"

என்பனவற்றால் காண்க. "தொடர்வரும் அருளினாலே தோன்றுமா காணாராயின் உடையவனடிசேர்ஞான முணர்தலின் றனைத வின்றே" என்று சிவப்பிரகாசமும் கூறும். திருக்களிற்றுப் படியும்,

"நல்லசிவ தன்மத்தால் நல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தால் நானழிய—வல்லதனால்
ஆரேனு மன்புசெயி னங்கே தலைப்படுங்காண்
ஆரேனுங் காணா அரன்"

எனக் கூறிற்று.

குன்றைக் குலபதியும் காழிப் பிள்ளையாரும் இறைவன் காட்சிக்குரியர் என்னில் அழி பொருளாம்; எவ்வாற்றானும் காட்சிப் படாரெனின் பயனின்றாம்; ஆதலின் இவ்விருவகையுமன்றி உள்பொருளாய்ப் பாச ஞானத்தாலும் பசு ஞானத்தாலும் பார்ப்பரிதாய், பதி ஞானமொன்றானே காணப்படுவதாய் உள்ளது முதல்வன் இயல்பு என்று விளக்குவார். சிவஞான போதம் 6-ஆம் சூத்திரமாகிய "அறிபொருளசித்தாம், அறியாத தின்றாம்" என்பதற்கும் விளக்கமாயிற்று.

சித்தாந்தத்திற்கே தனிச் சிறப்பாயுள்ள சிவஞான போதம் எட்டாம் சூத்திரப் பொருளைப் பின்வரும் சேக்கிழார் வாய்மொழி முன்பே கூறிப் போயிற்று:—

"தம்மை யேசிந்தி யாவெனுந் தன்மைதான்
மெய்ம்மை யாகி விளங்கொளி தாமென
இம்மை யேநினை வார்தம் இருவினைப்
பொய்ம்மை வல்லிருள் போக்குவா ரென்றதாம்."

தியான உறைப்பினாலே இருவினையொப்பும் மலபரிபாகமும் வரச் செய்து மலத்துன்பத்தினின்றும் நீங்கலாம் என்ற செய்தியை,

"அவையே தானே யாயிரு வினையிற்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்க மின்றி நிற்கு மன்றே"

என்ற போதம் இரண்டாம் சூத்திரம் நினைவு படுத்துகிறது. சேக்கிழாரின் திருப்பாட்டும் பொய்ம்மையைப் போக்கி மெய்ம்மையை அடைவிக்கும் சாதனத்தையும் பாசநீக்கத்தின் பயனையும் குறிக்கின்றது.

"ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும்" என்ற திருப்பாசுரப் பாட்டுக்குச் சேக்கிழார் தந்துள்ள விளக்கம் போதம் எட்டு ஒன்பதாம் சூத்திரங்கட்கு அடிகோலிற்று.

"போதித்த நோக்குற் றெழுியாமற் பொருந்திவாழ்ந்து
பேதித்த பந்தப் பிறப்பின் னெறிபேர்மினென்றும்"

என்பது "தம் முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த" என்ற கருத்தை நினைவுபடுத்துகிறது. சித்தாந்தத்துக்கு உயிர் நாடியாக உய்வை உறுதிப்படுத்தும் இந்தக் கொள்கையைத் திருத்தொண்டர்களுக்கு இறைவன் எப்படி நிராதாரமாகவும் சாதாரமாகவும் பக்குவத்திற்குத் தக்கபடி குருவடிவாய்த் தோன்றி அருளுவர் என்பதனை உணர்வதே முன்னை வல்வினையை முடிப்பதற்கு வழியல்லாது வேறு ஆராய்ச்சி தேவையில்லை யென்பதும், ஆதலினாலே தாம் எழுதப் புகுந்த திருத்தொண்டர் புராணமும் இந்தச் சாதனத்துக்கு உதவி என்பதையும் உணர்த்தச் சேக்கிழார் பின் வருமாறு அருளியுள்ளார்,

"......... ஆதியார் தாளடைந்
தின்ன கேட்கவே யேற்றகோட் பாலவும்
முன்னை வல்வினை யும்முடி வெய்துமத்
தன்மை யார்க்குஎன் றனர்சண்பை காவலர்"

என்பது பாட்டு.

இவ்வாறாக, தெய்வச் சேக்கிழார் தம் பெரிய புராணத்தில் சைவ சித்தாந்த சம்பிரதாயத்தைத் தெளிவுற விளக்குதலை மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் தம் சேக்கிழார் பிள்ளைத் தமிழில்,

"பேர்கொண்ட சைவ பரிபாடையரி வறியசம்
பிரதாயம் முதல் யாவும்
பிறங்கத் தெரித்தெம்மை யாண்டகுன் றத்தூர்ப்
பிரானைப் புரக்க வென்றே"

என்று வியந்துள்ளார். நம் இறைவனின் ஆட்பாலவர்க் கருளும் திறத்தையும் அதிமாண்பையும் பத்திச் சுவை நனி சொட்டச் சொட்ட எடுத்துக் கூறியது மட்டுமன்றிச் சேக்கிழார் பெருமான் சித்தாந்தத்தின் செம்பொருளை எங்கெங்கும் விளக்கிக் காட்டிய ஞானாசிரியர் என்று நம்மனோர் போற்றி உய்வடைவோமாக. ஞான சாத்திரங்களின் மந்தணப் பொருள்களுக்குத் திறவுகோலாக விளங்குவது அவர் திருவாக்குகளாகும். "புவியிற் பத்திசெய் மார்க்க மறிந்தவரார், விமலா நீ யவதாரஞ் செய்யாவிடின்" என்ற உண்மையை உணர்வோமாக.



# அருள் வீழ்ச்சி

[வித்துவான் சு. சாமி ஐயா, எம். ஓ. எல்.
தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்]

அருவி இழிகின்றது. கோடையின் வெம்மை தாளாது மலைச்சாரல் நோக்கிச் சென்று அருவியிலே நீராடி அயர்ச்சி நீங்குவர் பலர். தன்னைச் சார்வார் இன்னார் என நோக்காது தன்பால் வந்தோர் அனைவர்க்கும் தண்ணிய நீரைக் கொடுத்து வெம்மையின் கொடுமையைப் போக்குகின்றது. அது போன்றதே இறைவனின் அருள் வீழ்ச்சியும் என்பது 'வீழ்ச்சி' என்ற சொல்லால் விளங்குகின்றது. இதனை, 'சத்தி நிபாதம்' என்பர். "சத்தி நிபாதம் என்னும் சொல் இயல்பு சத்தியினது வீழ்ச்சி என்றவாறு. நி என்பது ஏற்றமாக என்னும் பொருள் குறித்து நின்றதோர் இடைச்சொல். ஓரவைக் களத்தின் நடுவே ஒரு கல் வந்து வீழ்ந்தால் அவ்வீழ்ச்சி அவ்வவைக்களத்து உள்ளாரை ஆண்டுநின்றும் அகல்விக்கும். அதுபோலச் சத்தி நிபாதம் நிகழ்ந்த மாத்திரையே அஃது அவ்வான்மாவை மனைவி மக்கள் முதலிய உலகத்து உழனியின் அச்சம் நிகழ்ந்து அவ்வுலக வாழ்க்கையினின்று வெரீஇப் போந்து உண்மைக் குரவனை நாடிச் செல்லுமாறு செய்வித்தலின், அவ்வொப்புமை தோன்றச் சத்தி நிகழ்ச்சி யென்னாது சத்தி வீழ்ச்சி யென்றோதப் பட்டது" என மாதவச் சிவஞான முனிவர் கூறுகின்றார். சத்திநிபாதம் பெற்ற பல பெரியவர்கள் இத்தமிழகத்தில் வாழ்ந்த வரலாற்றினையே பெரிய புராணம் கூறுகின்றது. 'ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்' எனச் சேக்கிழார் இவர்கள்தம் பற்றற்ற நிலையினைத் தெளிவுபடுத்துகின்றார்.

"அகலிடமே இடமாக ஊர்கள் தோறும்
அட்டுண்பார் இட்டுண்பார் விலக்கார் ஐயம்
புகலிடமாம் அம்பலங்கள் பூமி தேவி
உடன்கிடந்தால் புரட்டாள்பொய் யன்று மெய்யே
இகலுடைய விடையுடையான் ஏன்று கொண்டான்
இனியேதுங் குறைவிலோம் இடர்கள் தீர்ந்தோம்
துகிலுடுத்துப் பொன்பூண்டு திரிவார் சொல்லும்
சொற்கேட்கக் கடவோமோ துரிசற் றோமே."

அப்பர் பாடிய இத்தீந்தமிழ்ப் பாடல் உலகத்து உழனிகளை எவ்வாறு துச்சமாக மதிப்பர் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. பிச்சை எடுத்து உண்டாலும், வெறுந்தரையில் படுத்தாலும் குறைவில்லாத வாழ்க்கைக்குக் காரணம் இகலுடைய விடையுடையான் ஏன்று கொண்டதேயாகும் என அடிகள் காரணம் காட்டிக் கூறுகின்றார்.

பேரரையனுக்குப் பித்தன் ஆகிய திறத்தை,

"சித்தம் சிவனொடும் ஆட ஆட
செங்கயற்கண் பனி ஆட ஆட
பித்தம் பிரானொடும் ஆட ஆட
பிறவி பிறரொடும் ஆட ஆட"

எனப் பொற்சுண்ணத்தில், மணிவாசகப் பெருந்தகை மாதொரு பாகத்தானைச் சார்ந்து அவன் மயமாய், அவனிடத்தில் முழுப்பற்று உடையவராய், பிறர் 'பித்தன்' எனக் கூறத்தக்க நிலையில் இருந்தமையைத் தெரிவிக்கின்றார்.

இவ்வருள் வீழ்ச்சியின் தன்மைகளைத் திருமந்திரம், சிவஞானபோதம் முதலிய நூல்கள் விரிவாகப் பேசுகின்றன. இது மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என நான்குவகைப் பட்டு நிகழும். 'தரம்' என்ற சொல்லுக்கு மிகுதி என்பது பொருளாகும். சிவநெறிப் பிரகாசம் போன்ற நூல்கள் மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம் என வரிசைப்படுத்தியுள்ளன.

ஆன்மாக்கள் மூவகைப்படும். அவை விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்பனவாம். மலங்களும் மூன்று வகைப்படும். ஆணவம், கன்மம், மாயை என்பன அவை. ஆணவம் ஒன்றுமே உடைய ஆன்மாவிற்கு விஞ்ஞானகலர் என்பது பெயர். ஆணவம், கன்மம் ஆகிய இரு மலமுடைய ஆன்மா பிரளயாகலர் என அழைக்கப்பெறும். ஆணவம், கன்மம், மாயை என மும்மலமுடைய ஆன்மாக்கள் சகலர் எனப் பெயர் பெறும்.

இறைவன் இம்மூவகை ஆன்மாக்களுக்கும் அவ்வவற்றின் பக்குவ நிலைகட்கு ஏற்ப உணர்த்தியருளுகின்றார். உணர்த்தும் நிலையில் இருவகை நிலைகளால் உணர்த்துகின்றார். ஒன்று நிராதாரம் எனவும் மற்றொன்று சாதாரம் எனவும்

கூறுவர். அருவாய் நின்று உணர்த்தும் முறைமைக்கு நிராதாரம் என்றும், குருவடிவில் வந்து உணர்த்தும் முறைமைக்குச் சாதாரம் என்றும் பெயர் கூறப்பெறும். திருப்பெருந்துறையில் மணிவாசகருக்கு உணர்த்திய முறை சாதாரம் ஆகும். விஞ்ஞானகலருக்குத் தன்மையிலும், பிரளயாகலருக்கு முன்னிலையிலும், சகலர்க்குப் படர்க்கையிலும் உணர்த்துவான் இறைவன் என்பது நூல்களால் அறுதியிட்டு உரைக்கப் பெறுகின்றது.

மன்னன் ஒருவன் மந்திரிகளுடன் மந்திராலோசனை செய்யும்பொழுது 'நாம்' என அவர்களையும் உளப்படுத்தியே பேசுவான். அது போன்றதே விஞ்ஞானகலர்க்கு இறைவன் அருளும் முறை. படைத் தலைவர்களை அழைத்து அம்மன்னன் ஆணை இடுங்காலத்து முன்னிலையில் 'நீ இதனைச் செய்' எனக் கட்டளையிடுகின்ருன். அதுபோலப் பிரளயாகலர்க்கு அருள் புரியும் இறைவன் முன்னின்று அருள் வழங்குகின்ருன். அம்மன்னனே மக்கட்கு உணர்த்த வேண்டும் என எண்ணும்பொழுது முரசு அறைந்து கூறச் செய்கின்ருன். அதுபோன்றது சகலர்க்குக் குருவடிவில் எழுந்தருளிச் சத்தி நிபாதம் நிகழ்த்தும் முறை.

" மெய்ஞ்ஞானந் தானே விளையும்விஞ் ஞானகலர்க்
கஞ்ஞான வச்சகலர்க் கக்குருவாய்—மெய்ஞ்ஞானம்
பின்னுணர்த்து மன்றிப் பிரளயா கலருக்கு
முன்னுணர்த்துந் தான்குருவாய் முன் "

என்னும் சிவஞானபோத வெண்பாவால் அறியலாம்.

" மிக்கதொரு பக்குவத்தின் மிகுசத்தி நிபாதம்
மேவுதலு ஞானம்விளைந் தோற்குருவி னருளாற்
புக்கதட்டித் தேநிட்டை புரிந்துளோர்கள்
பூதலத்திற் புகழ்சீவன் முத்த ராகித்
தக்கபிரி யாப்பிரிய மின்றி யோட்டிற்
றபனியத்திற் சமபுத்தி பண்ணிச்சங் கரனே
டொக்கவுறைந் திவரவனே யவனிவரை விடாதே
யுடந்தையாய்ச் சிவன்ருேற்ற மொன்றுமே காண்பர்"

எனவும்,

" அறியாமை யறிவகற்றி யறிவி னுள்ளே
யறிவுதனை யருளினு னறியாதே யறிந்து
குறியாதே குறித்தந்தக் கரணங்க ளோடுங்
கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாயிற்
பிறியாத சிவன்ருனே பிரிந்து தோன்றிப்
பிரபஞ்ச பேதமெல்லா ந் தானுய்த் தோன்றி
நெறியாலே யிவையெல்லா மல்ல வாகி
நின்றென்றுந் தோன்றிடுவ னிராதார னுயே "

எனவும் சித்தியார் தெளிவுற விளக்குகின்றது.

இந்நான்கு வகைச் சத்தி நிபாதங்களைப் பதினறு திருமந்திரங்களால் கூறியருளுகின்ருர் திருமூலர். இரவு, பகல் இரண்டையும் விளக்கம் செய்யும் மதியமும், ஞாயிறும் ஒளி பெறுதற்குக் காரணம் ஆனவனுகிய ஒப்பற்ற சுடராக விளங்குகின்ற தலைவன், உயிர்க்குயிராய் உள் புகுந்து உடலையும் ஒளியுடலாகச் செய்து உயிருடன் ஒன்றி நிற்பான் என்பதை,

" மாலை விளக்கும் மதியமும் ஞாயிறும்
சால விளக்கும் தனிச்சுடர் அண்ணலுள்
ஞானம் விளக்கிய நாதனென் உள்புகுந்
தூனை விளக்கி யுடனிருந் தானே "

என்னும் திருமந்திரம் இறைவன் உடன் இருந்து, மேற்கொண்டு ஆன்மாக்கள் வினைக்கு ஆட்படாமல் செய்கின்ற இயல்பினைப் புலப் படுத்துகின்றது.

இவ்வருள் வீழ்ச்சி வீழுங்காலத்து மலங்கள் ஓடுகின்றன. பேரொளிப் பிழம்பாகிய இரவியின் தோற்றம் எங்கெங்கோ மூலைமுடுக்குகளிலுள்ள இருளை எல்லாம் ஓட்டுவிப்பதுபோல மலங்கள் கெட்டு ஆன்மாக்கள் தூய்மை பெற்று உய்கின்றன என்பதனைச் சிவப்பிரகாசம்,

" சுத்தமாஞ் சத்தி ஞானச்
சுடராகுஞ் சிவமொ ழிந்தச்
சத்திதா னின்ரு முன்னைத்
தகவிலா மலங்கள் வாட்டி
அத்தனை யருளு மெங்கு
மடைந்திடு மிருள கற்றி
வைத்திடு மிரவி காட்டும்
வளரொளி போன்ம கிழ்ந்தே "

என்று கூறுகின்றது.

முடிவாகக் கூறுமிடத்து நான்குவகைச் சத்தி நிபாதங்களை (மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம்) மூன்றுவகை ஆன்மாக்களுக்கு (விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர்)தீ தன்மை, முனனிலை, படர்க்கையில் நின்று அருள் செய்வன் இறைவன். விஞ்ஞானகலருக்குத் தீவிர தரத்தால் அருளுவன். பிரளயாகலர்க்குத் தீவிரத்தால் அருள் செய்வன். சகலர்க்கு மந்த தரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் ஆகிய நான்கு வகையாலும் அவரவர் பக்குவங்களுக்கு ஏற்ப அருளுவன்.

இவற்றுள் மந்ததரம் என்பது காற்கூறு. மந்தம் என்பது அரைக்கூறு. தீவிரம் முக்காற் கூறு. தீவிரதரம் என்பது முழுமை ஆகும். எனவே காற்கூறு சத்திநிபாதம் நிகழ, காற்கூறு மலபரிபாகம் ஆகும். அரைக்கூறு சத்திநிபாதம் நிகழ, அரைக்கூறு மலபரிபாகம் ஆகும்.

முக்காற்கூறு சத்திநிபாதம் நிகழ முக்காற்கூறு மலபரிபாகம் ஆகும். முழுமையான சத்தி நிபாதம் நிகழ முழுமை ஆக மலபரிபாகம் ஆகும். 'தூரியம் தொடத்தொடத் துலங்கிடும் ஓவியம்போல' அருள் வீழ்ச்சியின் அளவிற்கு ஏற்ப மலபரிபாகம் ஆகும். வைகறை ஆதவன் கால்கூறு இருளைப் போக்குவன், விடியலில் அரைக்கூறு இருளைப் போக்குவன், காலைப் போதில் முக்கால்கூறு இருளைப் போக்குவன், உச்சிப்போதில் முழு இருளையும் போக்குமாறு போல இச் சத்திநிபாதமும் நிகழும் என்பதே பெறப்பட்ட கருத்தாகும்.

தீவிரதரத்தான் சத்திநிபாதம் நிகழும் விஞ் ஞானகலர்க்குப் பரமுத்தியும், தீவிரத்தான் சத்திநிபாதம் நிகழும் பிரளயாகலர்க்கு அபர முத்தியும் பயன் ஆகக் கூறப்பட்டுள்ளன. எறும்பு முதலாகத் தேவர்கள் ஈறுக உள்ள சகலர்க்கு நிகழும் சத்திநிபாதம் நான்கு வகை யில் நிகழும் என்பது முன்னரே சுட்டப்பட்டது. மந்ததரத்தால் சாதகநிலையும், மந்தத்தால் சீவன் முத்தி நிலையும், தீவிரத்தால் அபர முத்திநிலை யும், தீவிரதரத்தால் பரமுத்திநிலையும் பயக்கும் என்பது சாத்திரங்களால் உணரப்பெற்ற கருத் தாகும்.

# ஆனந்தத் தேன்

[பேராசிரியர் வே. சிவசுப்பிரமணியன், தமிழ்க் கல்லூரி, மயிலம்.]

உலகு, உயிர், இறைவன் என்னும் முப் பொருளையும் அநாதி நித்தம் என்று சைவ சித்தாந்தம் எடுத்தியம்பி வருகிறது. இடையே உள்ள உயிரை உலகினின்றும் பிரித்துத் தன்னோடு இணைத்துக் கொள்ளுதற்காக இறைவன் எடுத்துக்கொள்ளும் முயற்சியே திருவருள் எனப்படும் சக்தி என்பர். குணமும் குணியுமாம் தன்மையற்று ஞானசொரூபமாய் உள்ள எல்லையறு பரம்பொருள் எனப்படும் பரசிவம் தனக்கென ஓர் உருவம் கொண்டு அவனியில் பல்வேறு இடங்களில் எழுந்தருளு கின்றான். அவன் கொள்ளும் திருவுருவமே சத்தியாகும்—"சத்திதன் வடிவே தென்னில் தடையிலா ஞான மாகும்" என்பது சித்தியார் வாக்கு.

உருவமற்ற பரம்பொருள் தன்னை ஏன் ஓர் உருவத்தில் சிறைப்படுத்திக் கொள்ளவேண்டும்? உயிர் உயிர்களைச் சிறைவீடு செய்வதற்காக. உயிர் களின் உடற்சட்டையை நீக்குவதற்காகவே இறைவன் தனக்கொரு திருமேனியை எடுத்துக் கொள்ளுகிறான். பிறவி என்னும் பிணியை உயிர்கள் நீக்கிக்கொள்வதே இப்பிறவியின் பயன் என்பதைச் சாத்திரதோத்திர நூல்கள் அன்றிச் சங்ககால நூல்களுங்கூடக் குறிப்பிடு கின்றன.

> "செய்குவம் கொல்லோ நல்வினை எனவே......
> செய்வினை மருங்கின் எய்தல் உண்டெனின்...
> மாறிப் பிறப்பின் இன்மையும் கூடும்"

என்னும் சங்கப்பாடல் இக்கருத்தைத் தெளிவா கக் காட்டுகிறது. மாறிப் பிறத்தல் என்பது இறந்தும் பிறந்தும் மீண்டும் இறந்தும் பிறந் தும் எனத் திரும்பத் திரும்ப வருவதனை. பரி மேலழகர் கூறியவாறே 'காரணகாரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி வருவது' என்றும் குறிப்பிடலாம். இல்லையேல் 'உரைசேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனி பேதத்துள் ஒவ்வொன்றுகப் பிறந்து பிறந்து வருதலையும்' மாறிப் பிறத்தலே எனலாம்.

> "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
> பல்மிருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
> கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
> வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
> செல்லாது நின்றஇத் தாவர சங்கமத்துள்
> எல்லாப் பிறப்பும் பிறந் திளைத்தேன்"

என்று மணிவாசகப் பெருமான் இதனைக் குறிப் பிடுகிறார். "மாறிப் பிறப்பின் இன்மை" என்பது பெறலரும் பேறு உயிர்க்கு என்று இதனால் அறிகிறோம்.

பிறவிக்குக் காரணம் பற்று அல்லது அவா எனலாம். பற்றறுதலே பிறவியறுதற்கு வழியா கும் என்பது முற்றவுணர்ந்தார் முடிவு. "அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்னும் பெரியோர் வாக்கும் காண்க. இதனையே திருமூலரும்

> "ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்
> ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள்"

என்று கூறினர்.

ஆசை நீங்கினுல் பிறவி நீங்கும் என்பது உறுதியாகும். ஆசை உயிரியல்பாதலின் அவ்வளவு எளிதின் நீங்குதல் இயலாது. அதனுல் அவ்வாசைக்கு மாற்ருக ஒரு பொருள் வேண்டும். உயிரின் பற்று வேருேர் இடத்து நிலே பெறுமாறுல் மற்ற பற்றுக்கள் அனைத்தும் தாமே கழன்று போகும்.

சர்க்கஸ் விளையாட்டில் பார் விளையாடுகின்ற போது ஓர் ஊஞ்சலிலிருந்து மற்ருேர் ஊஞ்சலுக்குத் தாவுவது உண்டு. மற்ருேர் ஊஞ்சல் பற்று ஏற்பாட்டால், ஒன்றை விட்டதால் மேலும் விளையாட்டு நீடிக்கும் ; விபத்தாகாது. அப்படியின்றி வேருேர் ஊஞ்சலைப் பிடியாது விடின் விளையாட்டு விபத்தில் முடியுமல்லவா ? பற்று விடுவதற்கு வழி வேருேர் பற்றினைத் தொடுதலே என்ருர் வள்ளுவர். அப்பிறிதாகிய பற்ருவது இறைவனே என்றும் எடுத்துக் காட்டினுர்.

> " பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப்
> பற்றுக பற்று விடற்கு."

இறைவனே பற்ருவான் என்றும் அவனைப் பற்றுதல் பிறவியறுதற்கு ஏது என்றும் விளக்கினுர் வள்ளுவர். மற்ருெரு வகையிலும் இறைவனை விளக்கினுர் வள்ளுவர். இறைவனைப் பற்றுதல் பிறவியறுதற்குக் காரணம் என்பது மட்டுமல்ல ; பிறவியற்றபின் பெறும் காரியமாகிய பயனுகவும் விளங்குகின்றவன் அவ்விறைவனே என்று எடுத்துரைக்கின்ருர்.

பிறவி என்னும் பேதைமை விலகவேண்டுமாறுல் இறைவனை உணர்தல் வேண்டும். அது மட்டுமின்றிப் பிறப்பு நீங்க அங்கே வெளிப்படும் பயனுகவும் இருப்பவன் செம்பொருளாகிய இறைவனே என்ருர். இவ்விருவகைக் கருத்துக்களையும் ஒரு குறளிலேயே அமைத்து,

> " பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும்
> செம்பொருள் காண்ப தறிவு "

என்று கூறினுர். பிறப்பென்னும் பேதமை நீங்க வேண்டிச் சிறப்பென்னும் செம்பொருள் காண்டல் வேண்டும் என்பது காரண வகையில் உயிர்கட்கு இறைவன் உதவுகிருன் என்பதாகும். பிறப்பென்னும் பேதமை நீங்க அந்த அளவிலே ஆண்டு பயனுக வெளிப்படும் சிறப்பு என்னும் செம்பொருளைக் காண்பது அறிவு என்பது காரியமாய பயனுகவும் விளங்குவான் அவன் என்பதைக் காட்டுகிறது.

இங்ஙனம் பழங்காலத்தேயே பிறவி என்னும் பெருநோயை நீக்கி நலம் செய்துகோடற்கு உயிர்க்கு உற்ற கருவியாக விளங்குகின்றவன் இறைவனே என்னும் கருத்து நிலவி வந்திருக்கின்றமை புலனுகும். இக்கருத்து சாத்திரங்களும் தோத்திரங்களும் முதிர்ச்சிபெற்ற இடைக்காலத்தே விரிவடைந்து வளர்ச்சி பெற்றது.

உயிர்களால் அநுபவிக்கப்படும் பேரின்பப் பெருநலமாய் விளங்குகின்றவன் இறைவன் என்பதனை அப்பர் பெருமான்,

> " மாசில் வீணையும் மாலை மதியமும்
> வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
> மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
> ஈசன் எந்தை இணையடி நிழலே "

என்று குறிப்பிடுகிருர். ஐம்பொறிகளாலும் ஆரத்துய்க்கும் அனைத்தின்பங்களுமாய் விளங்குகின்றவன் இறைவனே என்பது கருத்து. இறைவனைக் கனியினும், கட்டிபட்ட கரும்பினும், பனிமலர்க் குழற்பாவை நல்லாரினும், தனிமுடி கவித்தாளும் அரசினும் இனியன் என்று குறிப்பிடுவார் அப்பர் ஓரிடத்தில். மற்ருேரிடத்தில் மனிதர்கள் அனைவரையும் வருக என அழைத்து, கனி தந்தால் உண்ணும் திறம் உங்கட்கு உண்டோ என்று வினவி, " புனிதன் பொற்கழல் ஈசன் எனும் கனி இனிது சாலவும் ஏசற்றவர்கட்கு " என்று பெருமானையே கனியாகக் காட்டி உண்ண அழைக்கிருர்.

இவ்வாற்ருல் இனிய பொருளில் எல்லாம் இனியவனுக இறைவனைக் காட்டுவதும், எல்லாப் பொறிகட்கும் இன்ப நுகர்ச்சிக்கு ஏதுவாம் பொருள்களைப் போலவே இறைவனும் உயிர்க்கு எல்லா வகையான நுகர்ச்சிகளையும் அளிப்பவன் எனப்படுவதும் போதருகிறது. பேரின்பப் பெருநல நுகர்ச்சியாகிய பெருமான் அந்நுகர்ச்சியை உயிர்கள் பெறுவதற்கு வாயிலாகப் பிறவி நோயை நீக்குகின்றவனுகவும் விளங்குகின்றவன் அல்லவா ! அவ்வகையில் நோய் நீக்கத்திற்கும் இன்ப ஆக்கத்திற்கும் பொருந்த இறைவனைத் தேன் என அழைக்கும் வழக்கும் ஏற்பட்டது.

> " தேன்ஆர்இன் அமுதமுமாய்த் தித்திக்கும்
> சிவபெருமான்... "

என்பது திருவாசகம். மாணிக்கவாசகப் பெருமான் அருளிய திருவாசகத்துக்குப் பொருள் எது என வினவியபொழுது அம்பலத்தாடும் எம்பிரானையே காட்டிமறைந்தனர் என்பர். தேனுக உள்ள சிவபிரானையே தனக்குப் பொருளாக உடைய திருவாசகத்தையே தேன் எனும் வழக்கும் ஏற்பட்டது என்பதனை,

> " தொல்லை இரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
> அல்லல்அறுத்து ஆனந்தம் ஆக்கியதே—எல்லை

மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்"

என்னும் பழம்பாடல் காட்டுகிறது.

நம்மாழ்வார் ஆண்டவனோடு உயிர்கலந்த கலப்பினைக் குறிப்பிட வந்தபொழுது,

"ஊனில்வாழ் உயிரே நல்லைபோ உன்னைப் பெற்று
வானுளார் பெருமான் மதுசூதன் என்னம்மான் [தோம்
தானும்யானும் எல்லாம் தன்னுள்ளே கலந்தொழிந்
தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுதும்ஒத்து"

என்னும் பல பொருள்களைக் குறிப்பிட்டுத் தேனை முதற்கண் வைத்தார்.

இம்மை வாழ்வில் இனிப்புடைப் பொருள்களில் முதற்கண் நிற்பது தேன். உடலுக்கு ஊட்டம் தரக்கூடிய பொருள்களாக மூன்றினைக் குறிப்பிடுவதுண்டு. அவை தேன், நெய், பால் என்பவையாகும். பால் பலத்தை வளர்க்கும். நெய் அறிவை வளர்க்கும். தேன் ஆயுளை வளர்க்கும் என்பர். உடலோடு உயிர்வாழும் காலத்தை வளர்ப்பது உலகத்தே உள்ள தேன். உயிர் என்றும் அழியாப் பெருவாழ்வை நிரந்தரமாகப் பெற்று வாழும்படித் தன்னை அநுபவிக்கக் கொடுத்துக் கொண்டிருக்கிறது இறைவனாகிய தேன். இறைவனோடு கலந்த உயிர் அந்தச் சுகாநுபவத்தை நுகர்தலேயன்றி வேறு எதனையும் செய்வதில்லை என்பதனைத் திருவருட்பயன்,

"ஐந்தொழிலும் காரணர்கள் ஆந்தொழிலும் போகநுகர்
வெந்தொழிலும் மேவார் மிக"

என்னும் குறளால் விளங்குகிறது.

தேனின் மற்றொரு நலம் தேன் தானும் கெடுவதில்லை. தன்னிலே விழுந்த பொருளையும் கெட வைப்பதில்லை. நல்ல பழத்துண்டு ஒன்றினைச் சுத்தமான தேனில் போட்டுவிட்டால் எவ்வளவு நாள் ஆனாலும் அப்பழத்துண்டு வீணாகாது. தானும் கெடாது. தன்கண் விழுந்த பொருளையும் கெடாது பாதுகாக்கின்ற தேனைப் போலவே நித்தமாய் இன்ப சொரூபமாய் விளங்குகிற பரம்பொருள் தன்னோடு இணைந்து இன்புறுகின்ற உயிரை எஞ்ஞான்றும் மீள விடாது. பிறவிவாதனைக் குட்படாது பாதுகாக்கிறது என்பதனைச் சொல்ல வேண்டுவதில்லை.

நோய் நீக்கத்திற்குரிய மருந்துகள் எல்லாம் தேனிலே தரப்பெறும். தேன் சிறந்த அநுபானமாகும். எப்பொருளைச் சார்கிறதோ அப்பொருள் தன்மையை மிகுவிக்கும் ஆற்றல் தேனுக்குண்டு. குளிர்ச்சி மிகஉடைய பொருளோடு கூடிய வழிக் குளிர்வித்தும் வெப்பம் மிக்குடைய பொருளோடு கூடியவழி அவற்றின் வெப்பத்தை மிகுவித்தும் அவ்வம் மருந்தின் தன்மையை மிகுவித்து நோய் நீக்கம் செய்யும் ஆற்றலில் சிறந்து விளங்குகிறது தேனாகும். அவ்வாறே சிவ பரம்பொருளும் உயிர் தன் முயற்சியால் பாசங்களைந்து தன்னைத் தேடிக்கொள்ளுதற்கு அநுபானமாக விளங்குகின்றமை சாத்திர நூல்கள் கூறுமாற்றால் அறியலாம். இதனையே இறைவனது திருவருட் சக்தியாகிய திரோதானம் என்றும் கூறுவார்கள். உலகினோடு சேர்ந்த வழி உலகினையே காட்டித் தன்னை மறைத்தும், இறைவனோடு கூடிய வழி இறைவனையே காட்டி உலகினை மறைத்தும் வருகின்ற திரோதானம் என்னும் மறைப்புச் சக்தியானது சார்ந்தவிடத்தின் தன்மையை மிகுவிப்பதனையே செய்து தன் தன்மை எனத் தனியே ஓர் ஆற்றலை வெளிப்படுத்தாமை காண்க.

இனித் தேன் நோய் நீக்கும் மருந்து என்ற வகையில் பயன்படுவதே அன்றி உணவாகவும் பயன்படுகின்றதன்றோ? உடலுக்கு உற்ற பிணிக்கு மருந்து கொடுப்போர் அம்மருந்து உண்ணும் காலத்தே மருந்து செரித்தற்கும், வினையாற்றற்கும், உடல் ஊற்றமடைதற்கும் இன்னின்ன சத்துணவுகளை உண்டல் வேண்டும் என்பர். ஆனால் தேனிலே கொடுக்கப் பெறும் மருந்து நோய் நீக்கும் ஆற்றல் பெறுதற்கு அத்தேனே ஊட்டமாகவும் உதவுகிறது. அதனால் தேனை மருந்துமாகும், உணவுமாகும் என்பர். அதுபோலவே பிறவியென்னும் பெருநோய் தீர்க்கும் மருந்தாகி விளங்கும் தேனாகிய சிவபெருமானே அநுபவிக்கப்படும் இன்ப ஊற்றாகிய உணவாகவும் விளங்குகிறான். ஆதலால் அவனை ஆனந்தத் தேன் என்று பரவுவார் மாணிக்கவாசகர்.

"ஆனந்தத் தேன் தேக்கெறியும் செய்ய
மாணிக்க வாசகன்"

என்பது சிவப்பிரகாச சுவாமிகள் வாக்கு.

ஆண்டவனே பிறவி நோயையும் தீர்த்து, தானே அது தீர்ந்தால் பெறற்குரிய பேருகிய பேரின்ப அநுபவமாகவும் விளங்கித் தனக்கு அருளியபடியை மாணிக்கவாசகர் தமது திருவாசகத்தே பலபடியாகப் பாடி மகிழ்ந்தார்.

"என்னில் கருணை வான்தேன் கலக்க"

என்று கூறித் தம்பால் அவ்விறைவன் கலந்த காட்சியை அறிவித்தார்கள். அத்தேன் உள்ளே கலந்து அதனால் "அற்புதமான அமுததாரைகள் மயிர்க்கால் தோறும்" தேக்கிடச் செய்த நிலையைக் காட்டினார்கள். "அவ்வின்ப அது

பவத்தைச் சொல்லுவதறியேன் வாழி" என்று சொல்லி அலமந்தார்கள்.

ஆண்டவனை ஆனந்தத் தேனுக்கி மகிழும் மாணிக்கவாசகப் பெருமான் அத்தேனில் சில வகைகளையும் காட்டினர். ஒன்று கொம்புத் தேனுகும்.

மரக்கிளைகளில் உள்ளதாகிய தேன் கொம்புத் தேன். சீவக சிந்தாமணியில்,

"தீங்கரும் பெருத்தின்தூங்கி ஈயின்றி இருந்ததேன்"

என்று வருகிறது. தேன் இனிது; அத்தேனடை உள்ள இடம் கரும்பின் கழுத்தாயின் அது எவ்வளவு இனிதாக இருக்கும் என்று நம்மை நினைக்குமாறு செய்கிருர் திருத்தக்கதேவர்.

"தாமரைத் தண்தா தூதிமீமிசைச்
சாந்தின் தொடுத்த தீந்தேன் போல"

என்று சங்கப் புலவர் கூறுவர். தாமரை மலரில் இருந்து எடுத்துச் சந்தனமரத்தின் உச்சியில் கட்டப்பெற்ற தேன் என்று சிறப்பிக்கப்படுகிறது. மணமும் இனிமையும் உள்ள இடங்களையெல்லாம் தேன்கூடு அமையும் இடங்களாகக் காட்டுவது வழக்கம். இக் கோல் தேன் எனப்படும் கொம்புத் தேன் தானே நமக்குக் கிட்டினல் அன்றி நாமே முற்றப் பெறுதல் அரிது என்று சிவப்பிரகாச சுவாமிகள் கூறுவர்.

"பூவாய் நெடுங்கோட் டுறுபசுந்தேன்
கைகால் முடங்கு பொறியிலிதன்
நாவாய் ஒழுக்கிற் றென"

என்பர்.

"கருவியும் முயற்சியும் அற்ற எளியவர்களுக்கு ஆண்டவனது அருளிப்பாடு கிடைத்தல் என்பது கையும் காலும் இழந்த கண்ணும் அற்ற குருட்டு முடவனுக்குக் கொம்புத்தேன் கிட்டியது போல." எனவே, அது எதிர்பாராமல் பெறும் பேறே அன்றி வேறன்று என்பர்.

ஆண்டவன் உயிர்க்குத் தன்னைப் பற்றுதற்குரிய கருவிகாரணங்களை யெல்லாம் கொடுத்திருக்கின்ருன். அவற்ருல் அவ்வுயிர்கள் தன்னைப் பற்றிக் கோடற்கு எளியவனுகத் திருமேனி கொண்டு இறைவன் எழுந்தருளியிருக்கின்ருன். இவ்வாறு உயிர்கள் தம்முடைய இயல்பான கருவியாகிய அவயவங்களையும் பொறி புலன்களையும் கொண்டு இறைவனைப் பெற்றுக் கொள்ளவே வள்ளுவரும்,

"கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"

எனக் கூறியுள்ளார். "வணங்காத் தலையும், சூழாத காலும், பாடாத நாவும், குவியாத கையும் பயனிலவன்ருே?"

"வணங்கத் தலைவைத்து வார்கழல் வாய் வாழ்த்த வைத்து, இணங்கத் தன்னடியார் கூட்டமும் வைத்து" என்பதும் காண்க. அப்பரடிகளும் இக்கருத்தையே திரு அங்கமாலைப் பதிகத்துள் வற்புறுத்தினர்.

இங்ஙனம் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை - திருவிடைமருதூர் என்னும் திருத்தலத்தே அடியார்க்கருள் பெருஞ் செல்வனும் மகாலிங்கப் பெருமானைத் "கோற்றேன்" என்று சொல்லுதல் இயலாது என்று கண்டார் மாணிக்கவாசகர். இறைவனைத் தேனுக்கி, ஆனந்தத் தேனுக்கு அத்தேனூறலின் தித்திப்பை உணர்ந்த மணிவாசகர் தாம் கூறியதனையே வழக்காக்குவார்போலப் "பொந்துத் தேன்" என்று குறிப்பிட்டார்.

பொந்தின் கண் உள்ள தேன் எடுப்பார்க்கினியதாகும். அணுகுதற் கெளியதாகும். அதுவேயன்றி வீட்டுத் தோட்டத்தே தேனீப்பெட்டி வளர்த்துத் தேன் எடுப்பார்க்குப் பொந்துத் தேனீ பயன்படுமேயன்றிக் கொம்புத்தேனீ பயன்படாது. ஆண்டவனுகிய தேனை அணுகிப் பெறுவதேயன்றி அவனைத் தம்மகத்தே கொண்டு சென்று நாளும் நாளும் தேனூற்றெடுக்க நோற்கும் அடியவர்க்கு உதவுவதற்கென்றே மகாலிங்கம் என உருக்கொண்டு இத்திருக் கோயிலிலே வீற்றிருக்கின்ருன் பெருமான் என்று சொல்ல வந்தார் மாணிக்கவாசகர்.

ஆண்டவனுகிய ஆனந்தத் தேனை அனைவரும் வழிபடுவர். ஆனல் அவனை நமக்கு எளிதாக்கிய இத்திருவிடைமருதூர் ஆலயம் என்னும் பொந்தினை வழிபடுவோம். இஃதன்ருே நம்மைப் பாதுகாத்தது என்று கூறுகின்ருர்.

"எந்தைஎந்தாய் சுற்றம்மற்றும்
எல்லாம் என்னுடைய
பந்தம் அறுத்தென்னை
ஆண்டுகொண்ட பாண்டிப்பிரான்
அந்த இடைமருதில்
ஆனந்தத் தேன்இருந்த
பொந்தைப் பரவிநாம்
பூவல்லி கொய்யாமோ"

என்னும் இத் திருப்பாடலை நாமும் வாயாரப் பாடி மகாலிங்கப் பெருமானை வலம் வந்து பேரா இன்பப் பெருவாழ்வு பெறுவோமாக.



துவார பாலகர்
(திருவிடைமருதூர்த் திருக்கோயில்)

ஒன்றே நினைமின் ஒருவனே தேவனென் றுட்கொளுமின் ;
நன்றே செயுமின் ; நமனால் இனியோர் நலிவுமிலை ;
இன்றே இடைமரு தீசன் இணையடி ஏத்துமினோ
என்றே திருவாயில் காப்பான் குறிப்பின் இசைத்தனனே.

# அருள்புரி முறுவல்

[திரு கி. வா. ஜகந்நாதன்]

ஆருயிர்கள் உய்யும்பொருட்டு இறைவன் அருள்திருமேனி தாங்கி எழுந்தருளுகின்ருன். அவ்வாறு அவன் ஏற்ற திருமேனிகள் ஒன்றல்ல, இரண்டல்ல; பலபலவாம். அவற்றுள் அருவுருவாகிய லிங்கோற்பவ மூர்த்தியைத் திருக்கோயில்கள் எங்கும் காண்கிறோம். உருவாகிய பல மூர்த்திகளில், ஆடல் வல்லானுகிய நடராசப் பெருமான் கண்டார் மனத்தைக் கவரும் பேரழகன்; அவன் சுந்தரதாண்டவமூர்த்தி. அந்த அழகிலே சொக்கிப்போய் மெய்ம்மறந்து நிற்பார்கள் அடியார்கள். 'இந்தத் திருவழகைக் கண்டபிறகு இந்தக் கண்கொண்டு பார்ப்பதற்கு வேறு என்ன இருக்கிறது?' என்று திருநாவுக்கரசர் பாடுவார்.

ஆனந்தநடனம் இடும் ஐயனுடைய திருவடிவில் அவன் திருவடி முதல் திருமுடி வரையில் எல்லாம் அழகியவை. அவன் குஞ்சிதபாதம் பக்தர்களுடைய உள்ளத்தில் என்றும் சுவைகுன்ருத அருள்தேனைப் பெய்வது. அவன் திருமுக மண்டலமோ அருள்மலரும் தாமரையாய், உலக வெம்மை போக்கும் திங்களாய், அஞ்ஞான இருள் நீக்கும் செஞ்சுடராய் விளங்குகிறது. இருவிழிகளோ கண்டார் பிறவியைப் போக்கும் மருந்தாய், உயிருக்குள் இன்ப உணர்ச்சியைச் செலுத்தும் ஆனந்த ஊற்ருய், பிரபஞ்சத்தில் வழிதடுமாறி அலையும் உயிர்களுக்கு ஒளிவிளக்காய், பக்குவம் பெருதவர்களையும் அருட்பார்வையால் கனிந்து நெகிழச்செய்து மலங்கெடுத்துப் பொன்னுக்கும் வேதகமணியாய், அடியார்கள் உள்ளப் பெட்டகத்தில் இறுகவைத்துப் பாதுகாக்கும் நாயகமணியாய் நிலவுவன.

அந்த எழில்முகத்தில் பூத்த முறுவலை எப்படி வருணிப்பது! தன்னையடைந்தார்க்கு அருள் விருந்து தருவதற்குமுன், முகத்தான் அமர்ந்து நோக்கி வாவென்று அருளும் குறிப்பு அந்தப் புன்னகையிலே பொலிகிறது. அன்று முப்புரத்தை நீருக்கிய முறுவல் இன்று நம் மும்மலத்தைப் பொடியாக்கப் பூத்திருக்கிறது. 'உனக்காகத்தான் காத்திருக்கிறேன். வந்தாயா அப்பா!' என்று தாயன்புடன் மலரும் அழகுநகை அது. பக்குவ ஆன்மாவாகிய காதலிக்கு, 'என்றும் பொன்ருத இன்பத்தைத் தருவேன்' என்று குறிப்பிக்கும் சிவகாமச் செழுநகை அது. அந்த முறுவல் உயிரைக் கவ்வுகிறது. இன்பக் கொள்ளையில் கண்டாரை அழுத்திவிடுகிறது. உடலை மறந்து உலகை மறந்து இன்பத்தேனில் பதிந்த ஈயைப்போல, சீவபோதங் கழன்று செயலற்று நிற்கச் செய்கிறது. அந்த முறுவலைக் கண்டு வசமிழந்த அருளாளர்கள் எத்தனை பேர்!

ஆசையறத் துறந்த மணிவாசகப் பெருமானுக்கு ஓர் ஆசை உண்டாகிறது. "ஆசையறுமின்கள்" என்று திருமூலர் கூறியது அவருக்குத் தெரியுமோ, தெரியாதோ? ஆசைப்பட்டால் பிறவிநோய் வரும் என்பது நிச்சயமாக அவருக்குத் தெரிந்திருக்கும். ஆனாலும் அவர் ஆசைப்படுகிருர். அது ஆசையா? இறைவன் திருவருளைப் பெறவேண்டும் என்று ஏங்குவது ஆசையானல், அன்பு, பக்தி, முமுட்சுத்துவம் என்றவை யாவுமே அதற்குள் அடங்கவேண்டியிருக்கும். ஆகவே, அது ஆசையன்று; அதுவே பக்தி; அதுவே ஞானம்; அதுவே அருளுக்காக ஏங்கும் ஏக்கம்.

மணிவாசகர் ஆசைப்பத்து என்ற பதிகமே பாடியிருக்கிருர். அதில் எம்பெருமானுடைய திருமுக மண்டலத்தில் ஒளிரும் முறுவலைக் காண ஆசைப்பட்டதாகச் சொல்கிருர்.

"இதுகாறும் பாசச்சுழற்பட்டு இருள்தருமா ஞாலத்தில் பிறந்து பிறந்து உழன்று இளைத்துப் போனேன். இனியும் இந்தப் பிரபஞ்சத்தோடு தொடர்புபட்டுக் கட்டுண்டு கிடப்பதை என்னால் ஆற்றமுடியாது; இத்தகைய வாழ்க்கையை எனக்கு அமைத்தவன் நீதான். பந்தமும் வீடும் புணர்ப்பவன் நீயேயாதலின் இந்தக் கட்டிலிருந்து விடுதலை பெற நீயே அருள்புரிய வேண்டும். பூட்டைப் பூட்டிச் சாவியை வைத்திருப்பவனே பூட்டைத் திறக்கவேண்டும். இவ்வாழ்க்கையை எனக்கு வைத்தவன் நீயே; ஆதலால் நீயே இதை வாங்கவேண்டும். வானேரும் அறியாத மலர்ச்சேவடியுடைய பிரானே, எளியேன் அந்த அடியையே பற்ருகப் பற்றியிருக்கிறேன். அங்கிருந்தபடியே உன்னுடைய திருமுக மண்டலத்தின் அழகைப் பார்க்க ஆசைப்படுகிறேன்.

நான் கட்டுப்பட்டவன்; பெத்தன். நீ கட்டுப் படாதவன்; அநாதிமுத்த சித்துருவானவன். உன்னால் நான் முத்திபெற வேண்டும்; உன் திருமுக ஒளியை நோக்கி அப்பால் உன்னுடைய அருள் மலர்ச்சியாகிய முறுவல் நகையைத் தரிசிக்கவேண்டும். என்னுடைய அத்தனே! என்னுடைய தலைவனே! இந்த ஆசை ஒருகாலைக்கு ஒருகால் மிகுந்துகொண்டே வருகிறது; சால ஆசைப்பட்டேன்" என்கிறார்.

"எய்த்தேன் நாயேன்; இனிஇங் கிருக்க
கில்லேன்; இவ்வாழ்க்கை
வைத்தாய்; வாங்காய்; வானோர் அறியா
மலர்ச்சே வடியானே,
முத்தா, உன்றன் முகஒளி நோக்கி,
முறுவல் நகைகாண,
அத்தா சால ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே!"

[எய்த்தேன் - இளைப்புற்றேன். இருக்ககில்லேன் - இருக்கும் ஆற்றல் இல்லாதேன். முத்தா - கட்டுப்படாதவனே.]

திருநாவுக்கரசு சுவாமிகளும் இந்தச் சிரிப்பைக் காண விழைந்தார்; கண்டு மகிழ்ந்தார். இந்தப் பிறவியினால் துன்பமே மிகுமென்றும் இந்த உடம்பு இழுக்கென்றும் இருந்த அவர், ஆனந்தத்தாண்டவ மூர்த்தியாகிய நடராசப் பெருமானைத் தரிசித்தார். கருவி கரணங்கள் ஒடுங்கி நிற்கும் சமாதிநிலையே அந்தத் தரிசனத்தினால் ஏற்பட்டுவிட்டது. அத்தகைய இன்பத்தை யோகம் செய்யாமல், பொறிபுலன்களை ஒடுக்காமல் நடராசப் பெருமானுடைய திருவடிவத்தைக் கண்ட அளவிலே பெறலாம் என்றால், அதற்காக எத்தனை பிறவி வேண்டுமானாலும் எடுக்கலாம் அல்லவா? இந்தப் பிறவியிலேயே இத்தகைய இன்பம் கூடுமென்றால், இதை வெறுக்க வேண்டிய அவசியம் இல்லையே! 'இந்த நிலவுலகில் பிறப்பெடுத்தல் வேண்டியதே' என்ற முடிவுக்கு அவர் வருகிறார்.

நடராசப் பெருமானுடைய வடிவப் பேரெழிலைக் கண்ணால் கண்டு, மொண்டு உண்டு தேக்கெறிந்து தன்னை மறந்த லயம் வருமானால், இன்பமே எந்நாளும், துன்பமில்லை என்று பெருமிதத்தோடு கூறும் நிலையை அடையலாம். அப்பர் சுவாமிகள் அந்த இன்பத்தை அநுபவிக்கிறார். மேலிருந்து கீழ்வரையில் கண்ணை ஓட்டுகிறார். 'ஆண்டவன் நடனம் செய்யும்போது பாவத்துக்கு ஏற்ப அவன் புருவங்கள் வளைகின்றனவே, அவற்றில் எத்தனை அழகு பொங்குகிறது! அதன் அழகைப் பார்க்க முடியுமானால் இந்தப் பிறவி வேண்டுவதுதானே? அப்போதுதானே இந்த உடம்பும் இந்தக் கண்களும் கிடைக்கும்? அது மட்டுமா? திருமுகமண்டலத்துக்கே ஒளிதந்து விளக்கம் செய்கிறது அவனுடைய செய்யவாய் முறுவல். செக்கச்சிவந்த கொவ்வை வாயில் அரும்புகின்ற அந்தப் புன்முறுவல் தூயவெண்மையாக விட்டு விளங்குகிறது. இதைப் பார்த்து இன்புறவே ஒரு பிறவி எடுக்கலாம். அவன் சிரத்தில் வேறு யாரிடமும் இல்லாத அழகு, பொன்னிறச் சடையின் பொலிவு இருக்கிறது. அதில் கங்கை இருக்கிறாள். அவன் ஆடும்போது அங்கிருந்து நீர்த்துளி துளிக்கிறது. அது பனித்த சடை. அதைப் பார்த்தால் எம்பெருமானுடைய தனிப்பெருமை தெரிகிறது. அவன் திருமேனி முழுதும் பவளம்போலச் சிவந்திருக்கிறது. அதன்மேலே பூசிய திருநீறு பாலைப் போன்ற வெள்ளை நிறமுடையது. அந்தப் பால் நிறத்தினூடே பவளமேனி தெரிகிறது. பார்க்கப் பதினாயிரம் கண்வேண்டும். அவனுடைய குஞ்சித சரணம் ஆனந்தமே உருவானது; அதுவே வீடு. இனிமையையுடைய எடுத்த பாதமே முத்தியை நினைப்பிக்கிறது. இவற்றையெல்லாம் காணும் பேறு கிடைக்குமானால், நிச்சயமாக இந்த மனிதப் பிறவி வெறுக்கப்படுவதன்று; விரும்பி ஏற்றுக்கொள்ளத் தக்கதே.'—இது அப்பர் கருத்து.

"குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயிற்
குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்
பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும்
காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேஇந்த
மாநிலத்தே."

[குனித்த - வளைத்த. குமிண் சிரிப்பு - அரும்பும் புன்னகை. பனித்த - நீர்துளித்த. இனித்தம் - இனிமை.]

இப்பொழுது கருவூர்த் தேவருடைய அநுபவத்தைப் பார்க்கலாம். அவரும் இறைவனுடைய குமிண் சிரிப்பிலே சொக்கிப் போனவர். திருவிடைமருதூருக்கு வந்தபோது அவர் இறைவனுடைய திருமுக மண்டலத்தைக் கண்டு மகிழ்கிறார். நள்ளிரவில் நட்டம் பயின்றாடும் நாதனை எண்ணிப் பார்க்கிறார். அழகை அநுபவிப்பதில் இரண்டு திறம் உண்டு. அழகான சூழ்நிலையில் எல்லா அழகிலும் மேலான அழகைக் கண்டு நுகர்வது ஒருதிறம். பலவகை மலர்களினிடையே ஓங்கி உயர்ந்த தாமரையைக் கண்டு



அதன் பெருமையை உணர்ந்தது போன்றது அது. மற்றொரு திறம், அழகற்ற சூழ்நிலையில் அழகைக் கண்டு மகிழ்வது. இங்கே அழகு பின்னும் விட்டு விளங்கும். பொன்னம்பலத்தில் தேவரும் அணங்கினரும் சூழ நடமிடும் தாண்டவமூர்த்தியின் பேரெழில் முன்னை வகையைச் சேர்ந்தது. அங்கே அழகுக்கெல்லாம் பேரழகாக ஆண்டவன் ஒளிர்வதை உணரலாம். கருவூர்த் தேவரோ இரண்டாவது திறத்தில் நடராசப் பெருமானுடைய எழிலைக் கண்டு வியக்கிறார்.

நள்ளிருள்; பயத்துக்கும் கொடுமைக்கும் திருட்டுக்கும் உரிய காலம். இடமோ சுடுகாடு. அங்கே இனிமையா இருக்கும்? அச்சத்தை உண்டாக்க வேறு இடமே வேண்டாம். இப்படிக் காலமும் இடமும் அழகுக்கு மாறாக அமைந்திருக்கின்றன; அச்சத்தை மூட்டும் சூழ்நிலை இது.

அந்த மயானத்தில் சுடும் பிணமும் உண்டு; இடும் பிணமும் உண்டு. சுடுகாடு, இடுகாடு இரண்டும் அதுதான். அங்கேதான் அழகேயற்ற, அஞ்சத்தக்க உருவமுடைய பேய்கள் விருந்தயர்ந்து களியாட்டம் போடுகின்றன. ஒரு பக்கம் பிணங்கள் எரிகின்றன; கரிகின்றன. எருதரு கரிகாடு அது. மற்றொரு பக்கத்தில் பிணங்களைப் புதைத்திருக்கிறார்கள்; இடுகாடும் அது. அங்கே இட்ட பிணங்களின் நிணங்களை உண்டு ஏப்பம் விடுகின்றன பேய்கள். அவற்றின் பற்கள் கோணல்மாணலாக வாயினின்றும் வெளியே நீட்டிக்கொண்டு தெளிவாகத் தோன்றுகின்றன. கொள்ளிவாய்ப் பேய்கள் சில உள்ளன. அவை ஆடும்போது அவற்றின் காலில் உள்ள கழல்கள், வீர கண்டைகள் ஒலிக்கின்றன. அவை இரும்பாலான துருப்பிடித்த கழல்கள். இத்தகைய வடிவமுள்ள பேய்கள் கூட்டமாக எழுந்து ஆடுகின்றன. இருள் தூங்கும் நடுயாமத்தில் அவை ஆடுகின்றன. மயானத்துக்கு மனிதர் வாராத நேரம் அது. அதுவே பேய்கள் கூத்தாடுவதற்கு ஏற்ற பொழுது.

"எரிதரு கரிகாட் டிடுபிண நிணமுண்
டேப்பமிட் டிலங்கெயிற் றழல்வாய்த்
துருகழல் நெடும்பேய்க் கணம்எழுந்தாடும்
தூங்கிருள் நடுநல் யாமத்தே."

அத்தகைய யாமத்தில் இறைவனும் நடனமாடுகிறான். ஒரே காலத்தில் பேய்கள் ஆடுகின்றன; இறைவனும் ஆடுகிறான். பேய்களின் நடனத்தில் அவலட்சணமும் அச்சமும் அருவருப்பும் தோற்றுகின்றன. இறைவன் நடனம் எப்படி இருக்கிறது?

நள்ளிருளானாலும் அவன் ஆடும் இடம் ஒளியுடையதாக இருக்கிறது. அவனுடைய புன்முறுவல் நிலவைப் போல ஒளி வீசுகிறது. பேய்களும் சுடுகாடும் இறப்பை நினைப்பூட்டி அச்சத்தை உண்டாக்க, இறைவனே அதைப் போக்கும் அருளைத் தன் புன்முறுவலாகக் காட்டுகிறான். இருளிடையே நிலாத் தோன்றியது போல மலமாயையிற் சிக்கி அஞ்ஞான இருளில் தடுமாறும் ஆன்மாவுக்கு வழிகாட்ட நிலவு புறப்பட்டது போல அவன் திருவாயில் அருள்புரி முறுவல் மலர்கிறது.

இறைவனுடைய திருமேனியோ அந்திச் செவ்வானம் போன்ற ஒளியுடன் இலங்குகிறது. முறுவல் நிலாவும், திருமேனிச் செவ்வொளியும் அந்தச் சூழ்நிலையை அழகிய நடனத்துக்கு ஏற்ற நிலைக்களமாக ஆக்கி விடுகின்றன. இறைவன் ஆடுகிறான். அவனுடைய அணிகலங்களாக உள்ள அரவினங்கள் ஆடுகின்றன. சீறும் பாம்புகள் இறைவன் ஆட ஆடுகின்றன. பாம்புப் பிடாரன் ஆடுவதில்லை; பாம்பை மட்டும் ஆட்டுகிறான். இங்கே பாம்பணியும் பெருமான், தானே ஆடிப் பாம்பையும் ஆடச் செய்கிறான். தன் மனம் போல ஆடிப் பிறருக்கு அச்சத்தை விளைவித்துச் சீறும் பாம்புகள், இப்போது இறைவனுடைய ஆட்டத்தோடு இசைந்து ஆடுகின்றன. பொல்லாதவர்களுடைய மனம் தெய்விகச் சூழ்நிலையில் பொல்லாங்கை மறந்து நல்ல உணர்வுடன் இயங்குவது போல இருக்கிறது, இந்தக் காட்சி.

ஆண்டவன் ஆடுகிறான்; அரவினமும் ஆடுகிறது. அங்கே அவன் எழுந்தருளியிருப்பதனால் இருளின் அச்சம் ஒழிந்து விடுகிறது. முறுவல் நிலாவும் செம்மேனியின் செவ்வான ஒளியும் கண்ணையும் கருத்தையும் குளிர்விக்கின்றன. கீழ்வானத்தே இளங்கீற்று நிலாவும் மேல் வானத்தே கதிரவன் மறையும்போது தோன்றும் செவ்வானமும் நடுநின்று பார்க்கும் நமக்குக் கண் கொள்ளாப் பேரழகுக் காட்சிகளாக நிலவுகின்றன. இறைவனிடம் இந்த அற்புதமான சோபையைக் கண்டு சுவைத்தவர் கருவூர்த் தேவர். இருள் செறிந்த இடத்தில் பிணத்தை உண்ட பேய்கள் ஆட, அங்கேயே இறைவன் தண்ணிலவும் செவ்வொளியும் பரவ, பொல்லாத பாம்பும் தன்னோடு இணைந்து ஆட, ஆடுகிறான். பேயாட்டத்தைக் கண்டு பயந்து

நடுங்குகிறவர்கள் பலர்; அதே இடத்தில் இறைவன் ஆட்டத்தைக் கண்டு வியந்து மகிழ்பவர் சிலர். கருவூர்த் தேவர் பின்கூறிய கூட்டத்தைச் சேர்ந்தவர்.

இவ்வாறு இருளிடையே ஒளியையும், சிறப்பிடையே இறவாமையையும், மருளிடையே அருளையும், அச்சத்தினிடையே தைரியத்தையும், அமங்கலத்தினிடையே மங்கலத்தையும், வெறுமையிடையே முழுமையையும், கறுப்பினிடையே செம்மையையும், அருவருப்பினிடையே விருப்பையும், அவலட்சணத்தினிடையே அழகையும் காட்டி நடனமாடும் எம் பெருமானே, இப்போது திருவிடைமருதூரில் வந்து பொருந்தி மகிழ்ந்து, வணங்குவாருக்கு அருள்புரியத் தங்கியிருக்கிறான்.

இந்தக் கருத்துக்களையெல்லாம் அமைத்துக் கருவூர்ச் சித்தர் பாடுகிறார்:

"எரிதரு கரிகாட் டிடுபிண நிணமுண்
டேப்பமிட் டிலங்கெயிற் றழல்வாய்த்
துருகழல் நெடும்பேய்க் கணம்எழுந் தாடும்
தூங்கிருள் நடுநல்யா மத்தே
அருள்புரி முறுவல் முகிழ்நிலா எறிப்ப
அந்திபோன் றொளிர்திரு மேனி
வரிஅர வாட ஆடும்எம் பெருமான்
மருவிடம் திருவிடை மருதே."

—திருவிசைப்பா

[கரிகாடு - சுடுகாடு. இடுபிணம் - இட்ட பிணம்; புதைத்த பிணம். நிணம் - ஊன். துருகழல் - துருவையுடைய வீரகண்டை. துருக்கழல் என்று வரவேண்டியது செய்யுள் நோக்கிச் ககரம் தொக்கது. அந்தி - அந்தி வானம்; மேனியில் வரி அரவு ஆட. வரி - கோடுகள்.]

மணிவாசகர் முறுவல் நகை காண ஆசைப்பட்டார்; அப்பர் குமிண் சிரிப்பைக் கண்டு மனிதப் பிறவியும் வேண்டுவதே என்றார்; கருவூர்ச் சித்தரோ அருள்புரி முறுவல் முகிழ் நிலா எறிப்பதைச் சொன்னார். இவ்வாறு மூவரும் நுகர்ந்த பேரெழில் முறுவலையும் ஒளி முகத்தையும் 200-ஆம் பக்கத்திலுள்ள படத்திலே காணலாம்.

# யாரை நினைப்பேன்?

[திரு. ந. சிங்காரம், கல்கத்தா]

உலகத்தில் ஒவ்வொரு பொருளினிடத்தும், ஒவ்வொரு மனிதனிடத்தும் ஒவ்வொரு சிறப்பு இயல்பு விளங்கித் தோன்றுகிறது. இந்தச் சிறப்பு இயல்பே பிறர் அந்தப் பொருளைப்பற்றியோ, அல்லது அந்த மனிதனைப் பற்றியோ அடிக்கடி நினைப்பதற்கும் புகழ்ந்து பேசுவதற்கும் காரணமாகிறது.

அழகைக் கண்டு மயங்காதவர் ஒருவரும் இல்லை. ஒருவன் அழகாக இருந்தால், 'ஆள் மன்மதனைப்போல் அல்லவா இருக்கிறான்? விசயனைப்போல் அல்லவா இருக்கிறான்?' என்று, காவியங்களில் காணப்படும் அழகுக்குப் பேர் போனவர்களை யெல்லாம் அவனுக்கு உவமை சொல்லிப் புகழ ஆரம்பிக்கிறோம். இது அழகிலே ஈடுபடுகின்றவர்களுடைய மனத்தின் நினைப்பு.

வேறு சிலர் அழகை அவ்வளவாகப் பாராட்டமாட்டார்கள். 'அழகிலே என்ன ஐயா இருக்கிறது? மரத்திலே வண்ணம் ஏற்றப்பட்ட பொம்மைபோல் இருந்தால்மட்டும் போதாது; ஆண்மை அல்லது வீரம் அல்லவா ஒருவனுக்கு வேண்டும்? மனிதன் என்றால் அவன் ஆண்மை படைத்தவனாக இருக்கவேண்டும். பாருங்கள்! வீமனைப்போல, அபிமன்யுவைப்போல வீர சாகசங்கள், சக்தி இவற்றை எல்லாம் உடையவனாக அல்லவோ இருக்கவேண்டும்?' என்று சொல்வதைக் கேட்கிறோம். இது வீர சாகசங்களில் ஈடுபடுகின்ற உள்ளத்தின் நினைப்பு.

வேறொரு சாரார் அறிவு ஒன்றைத்தான் மதிப்பார்கள். 'எல்லாவற்றையும்விட ஒருவனுக்கு அறிவுதான் நல்ல அணிகலம். அது தான் அழகு தருவது. உயர்ந்த அறிவு உடையவன் தன்னை உயர்த்திக்கொள்வதோடு நில்லாமல் பிறரையும் அறியாமையிலிருந்து விடுவித்து அவர்களுக்கு நல்ல வழியையும் காட்டுகிறான். சிறந்த கல்வி அறிவு இல்லாமல், வேறு வகையில் எவ்வளவு சிறந்தவனாக ஒருவன் இருந்

தாலும், அது அவனுக்குப் பெருமையைக் கொடுக்காது. கல்வி அழகுதான் அழகு' என்று கூறி,

" குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையாற்
கல்வி அழகே அழகு "

என்ற நாலடியார் பாட்டையும் மேற்கோளாக எடுத்துக் காட்டுவதைக் கேட்டிருக்கிறோம். இது அறிவு ஒன்றையே நாடுவோர் நெஞ்சின் நினைப்பு.

வள்ளல்களின் புகழைப் பாடாத புலவர்களே இல்லை. செல்வத்தைப் பெற்ற பயன் அதனைப் பிறருக்கு வாரி வழங்குவதுதான் என்ற உண்மையை உணர்ந்து அதன்படி நடப்பவர்கள் அவர்கள். கர்ணனையும், பாரியையும், குமணனையும் போன்ற வள்ளல்களையெல்லாம் உலகம் இன்னும் மறவாமல் போற்றுவதை நாம் காண்கிறோம். ஈகையும், இரக்கமும் பெறுதற்கரிய பெருங்குணம். "நட்பும், தயையும், கொடையும் பிறவிக் குணம்" என்று, இவற்றைப் பிறவியிலேயே அமைந்த குணம் என்று சொல்வார்கள். வேறு நலன்கள் பல இல்லாவிட்டாலும் ஒருவனுடைய கொடைத்திறம் ஒன்றைக் கொண்டே அவனைப் புகழ்ந்து பாராட்டுவதைக் காண்கிறோம். கர்ணன் துரியோதனனுடையவிடம் சேர்ந்து துஷ்ட சதுஷ்டயத்தில் ஒருவனாக இருந்தாலும் கொடையினால் அவன் மேன்மையுற்றான். இது வண்மை ஒன்றையே மதிக்கும் மனத்தின் நினைப்பு.

பதவி மோகத்தில் மயங்குபவர்கள் பலர் இருப்பார்கள். பதவிகள் பலதரப்பட்டவை. எல்லாவற்றையும்விட அரச பதவியே மிக உயர்ந்தது. அரசன் எங்கேயோ இருப்பான். ஆனால், அவன் ஆணையோ எங்கும் பரவி மக்களின்மேல் உரிமைகொண்டு ஆட்சி செலுத்தும். அவன் தூங்கினாலும் அவன் ஆணை தூங்காது. இதனால், அரச பதவி ஒன்றையே பெரும் பதவியாக மதிக்கிறோம். ஒவ்வொருவரும் தம் பிள்ளைகள் உயர்ந்த பதவிக்கு வரவேண்டும் என்ற நோக்கமுடையவராக இருக்கிறார். இதனை அத்தகையவர்கள் வெளிப்படையாகவும் சொல்கிறார்கள். தம்முடைய மகன் வணங்கும்போது "நீ மகாராஜனாக இருக்கவேண்டும்" என்று, வாழ்த்தாத பெற்றோர்கள் இல்லை. எனவே, அரச பதவிக்கு உள்ள ஏற்றத்தை நாம் காண முடிகிறது. இது பெரும் பதவி ஒன்றையே கருதுகின்ற உள்ளத்தின் நினைப்பு.

கல்வியிலும், செல்வத்திலும், பதவியிலும் மேலான நிலையில் பலர் இருக்கிறார்கள். அவர்கள் சாதாரணமான நிலையில் இருக்கும் மற்றவர்களுடன் கலந்து பழகுவதையும் நாம் காண்கிறோம். அப்பொழுதெல்லாம் நமக்கு என்ன தோன்றுகிறது? 'இவ்வளவு பெரிய படிப்பாளி, எவ்வளவு எளிமையாக நம்முடன் பழகுகிறார்! இவ்வளவு பெரிய பணக்காரர், எப்படி நம்முடன் அன்போடு உறவாடுகிறார்! இவ்வளவு பெரிய பதவியிலிருப்பவர், எப்படிச் சர்வ சாதாரண மனிதரைப்போல, நம்மோடு கலகலப்பாகப் பழகிப் பேசுகிறார்!' என்று, அவர்கள் மற்றவரிடத்தில் எளிமையாகத் தம்மைக் காட்டிக்கொள்ளும் பெருங்குணத்தைக் கண்டு வியக்கிறோம். அவர்களைப் பாராட்டிப் பேசுகிறோம். இது பெரியோரிடத்தில் காணும் சௌலப்ய குணம் ஒன்றையே பெரிதாக மதித்துப் போற்றுகின்ற உள்ளத்தின் நினைப்பு.

இவ்வாறு பெரியோர்கள் நம்மிடையே வந்து எளிமையாகத் தொடர்ந்து பழகும்போது நாம் சில சமயம் அவர்கள் பெருமையை மறந்து, அவர்கள் நமக்குச் சமமானவர்கள் என்று கருதி, அவர்களிடம் அலட்சியமாக நடந்துகொள்வதும் உண்டு. அதனால், அவர்கள் மெல்ல விலகிப் போவதும் உண்டு. அப்பொழுதுதான் அவர்களின் அருமையும், அவர்கள் நீங்குவதற்குக் காரணமாயிருந்த நம் சிறுமையும் தெரிகின்றன. இது கிடைத்தற்கரிய ஒன்றைப் பெற்றுப் பின் இழந்து தவிக்கும் மனத்தின் நினைப்பு.

பிறர் படும் துன்பம் கண்டு அதைத் துடைக்க முன்வரும் உபகாரிகள் பலர் உண்டு. இரக்கமுள்ள மனமே இதற்குக் காரணம். கைம்மாறு கருதாது செய்யும் இவ்வுபகாரிகளை உலகம் வாயார, மனமாரப் போற்றுவதைக் காண்கிறோம். அவர்களைத் 'தாய் ஒக்கும் அன்பில்' என்றுகூட அழைக்கும். இது தலையாய அன்பைக் கண்டு நெகிழும் உள்ளத்தின் நினைப்பு.

இவ்வாறு மக்கள் நினைப்பதற்கு ஏதுவாயுள்ள சிறப்பு இயல்புகளாகிய அழகு, ஆற்றல், அறிவு, வண்மை, உரிமை, எளிமை, அருமை, தாய்மை ஆகிய இவையெல்லாம் ஒருவரிடத்தே பொருந்தியிருப்பதில்லை. எங்கேயோ யாராவது ஒருவர், இருவரிடத்திலேதான் இவ்வியல்புகளில் ஒன்று, இரண்டு பொருந்தி மக்கள் மனத்தைக் கவரும். ஆனால் இந்த எட்டுக் குணங்களும் ஒருங்கே அமையப் பெற்றவன் ஒருவன் உண்

டென்றால் அவன் எம்பெருமானுகிய மழபாடி என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் ஈசன் ஒருவனேதான். எனவே, 'பிறர் நினைத்தற்கு ஏதுவாகும் குணங்களனைத்தும் உன்னிடமே இருத்தலால், ஈசனே! உன்னை யல்லாமல் யான் இனி யாரை நினைப்பேன்?' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடுகிருர். இனி அந்தப் பாட்டைப் பார்ப்போம்.

"பொன்னுர் மேனியனே!"

எம்பெருமானே! பொன்னைப் போன்று ஒளி விடும் திருமேனி உடையவனுக நீ இருக்கிருய். அந்த மேனி அழகை அள்ளி அள்ளிப் பருகிக் கொண்டே இருக்கலாம். அந்த இன்பத்திலே ஊழி முடிவு வந்தாலும் அதனையும் அறியாமல் திளைத்துக்கொண்டே இருக்கலாம். அத்தகைய பேரழகன் நீ; அதுமட்டுமா?

"புலித்தோலை அரைக்கசைத்து"

நீ உடலிலே புலித்தோலை உடுத்துக்கொண் டிருக்கிருய். அது சாதாரணமான காட்டிலே வாழும் புலிதானே என்று எண்ணிவிட முடியுமா? அன்று, தாருகாவனத்து முனிவர்கள் உன்பால் வெகுண்டு, வேள்வி ஒன்று இயற்றி, அந்த வேள்வியினிடத்து ஒரு கொடிய புலியைத் தோற்றுவித்து, உன்னைத் துன்புறுத்துமாறு ஏவினுர்களே; சீறிவந்த அந்தப் புலியைக் கிழித்து ஆடையாக அணிந்துகொண்ட உனது வீரந்தான் என்னே! புறப்பகையைக் கொல்லும் செயலே வீரச்செயல் என்று பாராட்டும் இயல்பு பழக்கத்தில் வந்துவிட்டது. உண்மையில் எது வீரம்? "புலனைந்தும் வென்ருன்தன் வீரமே வீரம்" என்பர் அறிவுடையோர். புறப்பகையை வெற்றி கொண்ட வீரர்கள் பலர், அகப் பகை யாகிய ஐம்புலச் சேட்டைகளில் அகப்பட்டுக் கொண்டு திண்டாடுகிருர்களே! எவன் ஐம்புலன் களை அடக்கி அவற்றைத் தன் விருப்பம்போல் ஆட்டிவைக்கிருனே அவனே வீரன் என்ற சொல்லுக்கு உரியவன். உன்மேல் சீறி வந்தது வெறும் புலி என்ரு சொல்வது? அது ஐம்புல வேட்கையாகிய புலியல்லவா? அதை நீ அடக்கி உன் விருப்பப்படி இசைத்துக் கொண்டாயே! ஆதலால், உன்னுடைய வீரந்தான் வீரம். அதனை அல்லாமல் வேறு எதனைப் புகழ முடியும்? இது மட்டுமா?

"மின்னுர் செஞ்சடைமேல்"

நீ பெரிய சடையைத் தலையில் தாங்கிக் கொண்டிருக்கிருய். அது மின்னலைப்போல் ஒளிவிட்டுச் சுடரும் செஞ்சடை. அந்தச் செஞ்சடையின் பிரகாசத்திற்கு முன்னே இருள் எல்லாம் விலகியோடும். நீ தரித்துக்கொண் டிருக்கும் செஞ்சடையைச் சாதாரணமாக முடித் துக் கட்டியிருக்கும் தலைமயிர்த் தொகுதிதானே என்று எண்ணிவிட முடியுமா? அந்தச் செஞ் சடை, செந்தீயைப் போன்ற ஞானத்தை அல்லவா குறிக்கிறது? உன்னைச் சார்ந்த அடியார்களின் மலங்கள் அத்தனையையும் நீருக்கி, மெய்ஞ்ஞானத்தைத் தருவதல்லவா அது? அப்படி இருக்க, மெய்ஞ்ஞானத்தை நாடு பவர்கள் உன்னையன்றி வேறு யாரிடத்தில் செல்ல முடியும்? இது இத்துடன் முடியவில்லை;

"மிளிர்கொன்றை அணிந்தவனே"

அந்தச் செஞ்சடையின்மேல் பொன்னிறமான கொன்றைப் பூவைச் சூடிக்கொண்டிருக்கிருய். அந்தக் கொன்றை அழகுக்கு அழகு செய்வது போல்தானே இருக்கிறது என்று நினைக்கத் தோன்றும். உண்மை அதுவல்ல. கொன்றை மலர்க்கொத்து பார்ப்பதற்குப் பொன்னைச் சொரிவது போன்ற தோற்றத்தை அளிக்கிறது. அது வந்தவர்களுக்கெல்லாம் வாரி வாரி வழங்கு கின்ற உன் வள்ளல் தன்மையை அல்லவா எடுத்துக் காட்டுகிறது! யார், யார் எதை வேண்டினுலும் இல்லை என்று சொல்லாமல் எடுத்து வழங்குவது உன் இயல்பல்லவா! வள்ளல்கள் தங்களை நாடி வந்தவர்களுக்கு அவர்கள் வேண்டியது அறிந்து வாரி வழங்கு கிருர்கள். ஆனல் நீ அப்படியல்லவே! உன்னைப் பெரியோர்கள், 'வேண்டத்தக்கது அறிவோய் நீ, வேண்ட முழுதும் தருவோய் நீ' என்றல்லவா உன் உயர்ந்த தன்மையைப் பாராட்டி இருக் கிருர்கள்? ஏன் தெரியுமா?

எமக்கு எது நல்லது, எது தீயது என்று தெரி யாது. எது வேண்டும், எது வேண்டாம் என் றும் தெரியாது. ஆன்மாக்களாகிய எமக்கு அறிவு இருந்தாலும் இறைவனுகிய நீ அறிவித்தாலன்றி நாங்கள் ஒன்றையும் அறியமுடியாது. ஆன் மாக்கள் பல பிறவிகள் எடுத்திருக்கிருர்கள். இச் சையினுல் பல கன்மங்களைச் செய்திருக்கிருர்கள். இக்கன்மங்களுக்கெல்லாம் பலன் உண்டு. நல்ல கன்மம் நல்ல பயனுகிய புண்ணியத்தையும், தீய கன்மம் தீய பயனுகிய பாவத்தையும் கொடுக்க வேண்டும் என்பது நீ ஏற்படுத்திய நியதி. ஆன் மாக்கள் செய்த வினைப்பயனெல்லாம் உனக்கு நன்ருகத் தெரியும். அவரவர் வினைப்பயனுக்கு ஏற்ப அவர்கள் எந்தப் புவனத்தில், எந்தச் சரீ

ரத்தில், எந்த எந்தச் சுக துக்க போகங்களை அநுபவிக்க வேண்டும் என்று, கருணையால் நீ அறிந்து, அதற்கேற்ற பிறவியைக் கொடுத்து, அருள் செய்கிறாய். எனவே, தான் இச்சித்த கன்மப் பயனைத் தானே தெரிந்துகொண்டு அநுபவிக்க முடியாத ஆன்மாக்களாகிய எங்களுக்கு நீ அல்லவா அறிந்து எல்லாம் வழங்குகிறாய்? இதுவல்லவோ வள்ளல் தன்மை? அத்தகைய உன்னை மறக்க முடியுமா? இதையெல்லாம் நீ ஏன் செய்கிறாய்?

"மன்னே"

நீ பசுக்களாகிய உயிர்களுக்கெல்லாம் இறைவன். அதனால்தான் உன்னைப் 'பசுபதி' என்று சொல்லுகிறார்கள். உன் ஆணையின்றி ஓர் அணுவும் அசையாது. உன்னுடைய பெருமையையும், எங்களது சிறுமையையும் உணர்ந்து, 'உன் வசமாயுள்ளோம்' என்ற நினைப்பிலே நின்று, நீ அருளால் இட்ட பணி எதுவோ, அதுவே எமது தொண்டாகக் கருதும் எமக்கெல்லாம் இறைவன் நீயல்லவா? இன்னும்,

"மாமணியே"

இவ்வளவு பெருமை உடையவனாகிய நீ எமது பக்திக்குக் கட்டுப்பட்டு, எளிமையாக வந்து, எம் இடர்களையெல்லாம் போக்குகின்ற உன்னுடைய சௌலப்ய குணந்தான் என்னே! எல்லாராலும் சுலபமாக எடுத்தாளக்கூடிய பலதரப்பட்ட மணியைப்போல, நீ பழகுகின்றாய். அத்தகைய எளிமைக் குணத்தை உன்னிடத்தில் அல்லாது வேறு யாரிடத்தில் காண இயலும்!

"மழபாடியுள் மாணிக்கமே"

உன்னை நினைந்து நினைந்து நையும் மனம் உடையார்க்கு எளிமையாக வந்து உதவுகின்ற நீ, இறுமாப்பினால் உன்னை அடைய முடியும் என்று முயற்சி செய்வார்க்கெல்லாம் அகப்படாமல், அவர்களுக்கு எட்டாத தூரத்தில் இருப்பவனாயிற்றே! கிடைப்பதற்கு மிக அரிதாயுள்ள மாணிக்கத்தைப் போலல்லவா நீ இருக்கிறாய்! ஆனாலும், எம்போன்ற அடியார்க்கெல்லாம் அருள் செய்வதற்கென்றே எளிமையுடைய திருக்கோலம் தாங்கித் திருமழபாடி என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கிறாய்.

"அன்னே"

தாயைப் போன்றவனே! தனயன் எவ்வளவு குற்றம் செய்தபோதிலும் அதைப் பொருட்படுத்தாது, அவனுக்கு நன்மை ஒன்றே செய்வது தாயுள்ளம். எம் குற்றத்தையெல்லாம் கருதாது அருளைப் பொழிகின்ற நீ எமக்குத் தாயல்லவா? ஆதலால்,

"உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே"

பிறர் நினைப்பதற்கு ஏதுவாயுள்ள அழகு, வீரம், அறிவு, வண்மை, உரிமை, எளிமை, அருமை, தாய்மை இவை யாவும் ஒருங்கே உன்னிடமே இருப்பதால் "வஜ்ரஸ்தம்பேச்வரர்" என்ற திருநாமத்தோடு திருமழபாடியில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே! இனி உன்னைத்தவிர வேறு யாரை நான் நினைப்பேன்!— இவ்வாறு பாடுகிறார் சுந்தரர்.

இப்போது இந்தப் பாட்டு முழுவதையும் பார்ப்போம்.

"பொன்னார் மேனியனே
புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல்
மிளிர்கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே
மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால்
இனியாரை நினைக்கேனே."

சுந்தரர் பெருமான் காட்டிய வழியைப் பின்பற்றி இறைவனையே நினைந்து நினைந்து உய்வு பெறுவோமாக!



# எங்கிருந்து கொடுத்தார்?

[கி. வா. ஜகந்நாதன்]

மன்னர்களுக்குரிய சிறப்புக்கள் பல. ஒவ்வொரு மன்னர்க்கும் தனியாக விருதாவளிகளும் அங்கங்களும் இருக்கும். பத்துவகையான அங்கங்களைத் தொடுத்துத் தசாங்கம் என்று கூறுவர். அந்தப் பத்தையும் புகழ்ந்துபாடும் சிறு பிரபந்தத்துக்குத் தசாங்கம் என்று பெயர் வழங்கும். அந்தப் பிரபந்தத்தில் ஒவ்வோர் அங்கத்துக்கும் ஒவ்வொரு பாட்டு இருக்கும். திருவாசகத்தில் உள்ள திருத்தசாங்கம் என்பது இத்தகையதேயாகும். ஒவ்வோர் அங்கத்தையும் சிறப்பித்துப் பத்துப் பத்துப் பாடல்கள் அமையப் பாடும் பிரபந்தம் ஒன்று உண்டு; அதற்குச் சின்னப்பூ என்று பெயர். அத்தகைய பிரபந்தத்திற்கு இலக்கணம் இருக்கிறதே ஒழிய இலக்கியம் ஏதும் இப்போது கிடைக்கவில்லை. உலா முதலிய நூல்களில் தசாங்கங்களையும் இடையே சிறப்பித்துப் பாடுவதும் உண்டு. திருநாமம், நாடு, நகர், ஆறு, மலை, குதிரை, படைக்கலம், பறை, தார், கொடி என்னும் ஒன்பதையும் மணிவாசகப் பெருமான் பாடியுள்ளார். இந்தப் பத்திலும் சில வேறுபட்டு வரும்.

இந்தப் பத்து உறுப்புக்களில் ஒன்று தார்; அது மார்பில் அணியும் மாலை. தலையில் அணியும் சிறிய மாலைக்குக் கண்ணியென்று பெயர்; அதை அடையாள மாலை என்பர். சிவபெருமானுக்கு உரிய தசாங்கங்களில் ஒன்று அப்பெருமானுடைய கொன்றை மாலை. அவன் மார்பில் அணியும் தாரும் கொன்றை; திருமுடியில் அணியும் கண்ணியும் கொன்றை.

"கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த்
தாரன் மாலையன் மலைந்த கண்ணியன்"

என்று அகநானூற்றில் வருகிறது.

"கண்ணி கார்நறுங் கொன்றை, காமர்
வண்ண மார்பில் தாரும் கொன்றை"

என்பது புறநானூறு.

கொன்றைக்குப் பிரணவ புஷ்பம் என்பது ஒரு பெயர். அதன் இதழ்களும் கேசரமும் ஓங்காரத்தைப் போல இருக்கும். ஓங்காரப் பொருள் தானே என்பதை, சிவபெருமான் கொன்றை மாலை அணிந்தமையால் குறிப்பிக்கிறான். இந்தக் கருத்தைத் திருவிடைமருதூர் உலாவில்,

"பிரணவத்துள் மேயோர் பிரமன்மால் என்பார்
முரணவிக்கும் கொன்றையந்தார் முன்றோன்"

என்று திரிசிரபுரம் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாடியுள்ளார்.

மாலைபோலக் கொன்றை மலர் பூத்திருந்தது; அது சிவபெருமானைப் போல இருக்கிறதென்று எண்ணி, அதை அடைந்து ஆனாய நாயனார் குழலில் பஞ்சாட்சரத்தை வாசித்தார்:

"சென்றணைந்த ஆனாயர்
செய்தவிரைத் தாமமென
மன்றல்மலர்த் துணர்தூக்கி
மருங்குதாழ் சடையார்போல்
நின்றநறுங் கொன்றையினை
நேர்நோக்கி நின்றுருகி
ஒன்றியசிந் தையில்அன்பை
உடையவர்பால் மடைதிறந்தார்."

கொன்றை மலர் மஞ்சள் நிறம் உடையது; பொன்னிறமும் மஞ்சள் நிறமும் ஒன்றே. ஆகவே கொன்றையைப் பொன்னிறமுடையது என்றும் சொல்வர். தம்முடைய காதலரைப் பிரிந்து வருந்தும் மகளிருக்குப் பசலை படரும். அது தேமலைப் போல உள்ளது. அது மஞ்சள் நிறமுடையது. அதைப் பொன் என்றும் பீர்க்கம் பூவைப் போல இருத்தலின் பீர் என்றும் இலக்கியப் புலவர் கூறுவர். பொன்னிறம் பெற்ற கொன்றையையும் பசலைக்கு உவமை கூறுவதுண்டு.

"சென்ற நாட்ட கொன்றையம் பசுவீ
நம்போற் பசக்கும் காலை"

(குறுந்தொகை 183)

"............ கொன்றை
ஊழுறு மலரிற் பாழ்பட முற்றிய
பசலை மேனி"

(அகநானூறு, 338)

"............ மெல்லியாள்
தன்உருவம் பூங்கொன்றைத்
தார் கொள்ளத் தான்கொன்றை
பொன் உருவம் கொண்டு புலம்புற்றாள்"

(ஆதியுலா)

என்பவற்றைக் காண்க.

கொன்றை சிவபெருமான் மார்பில் அணியும் தார், திருமுடியில் அணியும் கண்ணியும் அதுவே, காதலரைப் பிரிந்து வாடும் மங்கையர் மேனியில் உண்டாகும் பசலை கொன்றையைப் போல இருப்பது என்ற கருத்துக்களை இதுவரையில் பார்த்தோம். இந்த மூன்று கருத்துக்களையும் வைத்து ஓர் அரிய கற்பனையைச் செய்கிறார் திருநாவுக்கரசர்.

*

இறைவனை வழிபடும் முறைகள் பல. அவனைத் தந்தையாகவும் தாயாகவும் மன்னனாகவும் வள்ள

லாகவும் ஆண்டையாகவும் நண்பனாகவும் எண்ணி வழிபடுவதுண்டு. அவனை நாயகனாக வும் தம்மை நாயகியாகவும் வைத்து வழிபடு வதும் உண்டு. அதைச் சன்மார்க்கமென்றும் மதுரபாவ மென்றும் கூறுவர். இந்தக் காதல் சிவகாமம், உலகியலில் உள்ளது அவகாமம்.

நாயக நாயகி பாவத்தில் அல்லது காதல் துறையில் நான்கு சைவ சமயாசாரியர்களும் பாடியிருக்கிறார்கள். மற்ற அருளாளர்களும் பாடியுள்ளார்கள். திருமாலை நாயகனாக வைத்து ஆழ்வார்களும் பாடியிருக்கிறார்கள்.

காதல்துறையில் வரும் கூற்றுவகைகள் பல. தலைவி கூறுவது, நற்றாய் கூறுவது, செவிலித் தாய் கூறுவது, தோழி கூறுவது என்பவை போலப் பல உண்டு. இறைவனைப் பாட்டுடைத் தலைவனாக வைத்துப் பாடுவது ஒரு வகை; இறைவனையே காதலனாக வைத்துப் பாடுவது ஒருவகை. திருக்கோவையார் முழுவதும் இறைவனைப் பாட்டுடைத் தலைவனாகவே வைத்துப் பாடினார் மாணிக்கவாசகர். அதாவது திருக்கோவையாரில் உள்ள காதற் கதையில் வரும் பாத்திரங்களில் ஒருவனாக இறைவனை வைக்காமல், அந்தக் காதல் நிகழ்ச்சி நிகழும் இடத்தோடு தொடர்புடையவனாக வைத்திருக் கிறார்; அல்லது வேறு வகையில் திருச்சிற்றம்பல முடைய பெருமானைத் தொடர்புபடுத்திப் பாடி யிருப்பார். இப்படிப் பாடிய பாடல்கள் அகப் பொருள் துறைகளைச் சார்ந்தன. இறைவனையே காதலனாக வைத்துப் பாடிய பாடல்கள் புறப் பொருளில் பாடாண்திணையைச் சார்ந்தவை; மானிடப் பெண்டிர் கடவுளை நயந்த பக்கம் என்ற துறைக்கு உரியவை.

இறைவனையே காதலனாக வைத்துப் பாடிய பாடல்களைத் தேவாரத்திலும் திருவாசகத்திலும் காணலாம். தேவாரத்தில் திருஞானசம்பந்தப் பெருமான் பாடிய முதற்பதிகமே காதற் பாட்டுத் தான். ஞானசம்பந்த நாயகி பிரமாபுரம் மேவிய பெம்மான் தன் உள்ளம் கவர்ந்த கள்வன் என்று பாடுவதை அப்பதிகத்தில் காணலாம்.

இத்தகைய பாடல்களில் தலைவி கூற்றாகத் தன்மையிடத்திலும், தோழி செவிலியர் கூற்றுக் களாகப் படர்க்கையிடத்திலும் வரும் காதலி யைக் காணலாம். அப்பர் சுவாமிகள் திருவாக்கி லும் இத்தகைய பாடல்கள் உள்ளன.

"சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே" என்று வரும் திருப்பழனத் தேவாரம் முதலியன தலைவி கூறியதற்கு உதாரணம். "முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்" என்ற திருவா ரூர்த் திருத்தாண்டகம் போல்வன தோழி அல்லது செவிலி கூற்றாக அமைந்தவை.

திருவிடைமருதூருக்கு எழுந்தருளிய திரு நாவுக்கரசர் பல பதிகங்களைப் பாடினார். திருக் குறுந்தொகைப் பதிகத்தில் ஒரு பாடலில் உள்ள கற்பனையை இங்கே பார்க்கலாம்.

கொன்றையைப்பற்றி முன்னே கூறிய மூன்று கருத்துக்களையும் நினைத்து அவர் பாடு கிறார். அதை உரையாடல் வடிவத்தில் வைத்துப் பார்க்கலாம்.

ஒரு தோழி: நம்முடைய அருமையான தோழி எப்போதும் இடைமருதா, இடை மருதா என்று ஏங்கிக்கொண்டே இருக்கிறாள். அவளுக்கு அப்பெருமான் அருள் செய்யவில்லையே!

மற்றொருத்தி: என்ன அப்படிச் சொல்கிறாய்! அவள் எதற்காக வாடுகிறாள்?

முதல் தோழி: இறைவர் திருவருள் பெற வேண்டும் என்று ஏங்கி வாடுகிறாள்.

இரண்டாம் தோழி: அவர் அருளைப் பெற் றாள், பெறவில்லை என்பது எப்படித் தெரியும்?

முதல் தோழி: அவர் இவளுடைய காதலை உணர்ந்து இவளை ஏற்றுக்கொள்வதாகக் குறிப் பினால் ஏதேனும் பிரசாதம் அருளினாலே போதுமே!

இரண்டாம் தோழி: அப்படி என்றால்?

முதல்: இடைமருதர் தாம் அணியும் மாலையை இவளுக்குத் தந்தால், அவருடைய திருவருளைப் பெறலாம் என்ற நம்பிக்கை உண்டாகும். அவர் திருமேனியில் பட்ட அந்த மாலையை இவள் அணிந்து இன்புறுவாள்.

இரண்டாம்: அவர் அணியும் மாலை எது?

முதல்: கொன்றை மாலை.

இரண்டாம்: மஞ்சளாகப் பொன் போல நிறம் பெற்றிருக்கிறதே, அதுதானே?

முதல்: ஆம், ஆம்.

இரண்டாம்: நான் இன்று காலையில் அவளைப் பார்த்தேன். உடம்பெல்லாம் பொன் னைப் போன்ற நிறம் பெற்று, கொன்றை மலரின் நினைவு உண்டாகும்படி நிற்பதைப் பார்த்தேன்.

முதல்: அவருடைய அருள் பெருமையினால் அவள் தாபம் அடைந்தாள். அதனால் இந்தப் பசலை பூத்தது.

இரண்டாம்: நாம் அவளை அனுகி வேடிக்கையாக உரையாடி அவள் துயரம் தெரியாமல் பொழுது போக்கச் செய்யலாமா?

முதல்: செய்யலாம்; எப்படிச் செய்வது? என்ன செய்வது?

**இரண்டாம்:** நீ என்னுடன் வா; சொல்கிறேன்.

[இருவரும் காதலி உள்ள இடத்தை அணுகுகிறார்கள். அவர்களைக் கண்டவுடன் காதலி பேசுகிறாள்.]

**காதலி:** வாருங்கள், வாருங்கள்.

**முதல்:** நீ ஏன் இப்படிச் சோர்ந்திருக்கிறாய்?

**காதலி:** அதற்குக் காரணம் இன்னதென்று என்னோடு நெருங்கிப் பழகும் உங்களுக்கு நான் சொல்லவேண்டுமா?

**இரண்டாம்:** சொல்லவேண்டாம். நீ கவலைப்படவும் வருந்தவும் நியாயமே இல்லை.

**காதலி:** ஏன் அப்படிச் சொல்கிறாய்?

**முதல்:** கவலைப்படாமல் இருக்க இவளுக்கு என்ன சுகம் கிடைத்துவிட்டது?

**இரண்டாம்:** இவள் எதற்காக ஏங்கினாள்?

**முதல்:** இடைமருதருடைய மாலைக்காக?

**இரண்டாம்:** கொன்றை மாலைக்காகத் தானே?

**முதல்:** ஆம்.

**இரண்டாம்:** இவள் உடம்பு முழுவதும் கொன்றை மலராகவே இருக்கிறதே! இது எப்படி இவளுக்குக் கிடைத்தது?

[முதல் தோழி சிறிது யோசனையில் ஆழ்கிறாள். இரண்டாமவள் காதலி கவலையை மறைக்கப் பேசுகிறாள் என்பதை உணர்கிறாள்.]

**முதல்:** (காதலியை உற்று நோக்கி) அடடா! இதுவரையில் நான் கவனிக்கவில்லையே! இதோ இவளுக்குக் கொன்றை கிடைத்துவிட்டதே! இடைமருதர் அருளே கிடைத்துவிட்டதென்று தான் சொல்லவேண்டும்.

**இரண்டாம்:** ஒருகால் அவர் தம் மார்பில் அணிந்த கொன்றை மாலையை அனுப்பியிருக்கிறாரோ?

**முதல்:** அப்படிச் செய்திருக்கமாட்டார்.

**இரண்டாம்:** ஏன்?

**முதல்:** அவருடைய இடப்பாகத்தில் எழுந்தருளியிருக்கும் அம்பிகை, வேறொரு பெண்ணுக்கு அவர் தம் மாலையைக் கொடுப்பதைப் பார்த்துக்கொண்டிருப்பாளா? ஆகவே அந்த மாலையை அவரால் தர முடியாது.

**இரண்டாம்.:** அப்படியானால் அவர் திருமுடியில் அணியும் கொன்றைக் கண்ணியை அனுப்பியிருப்பாரோ?

**முதல்:** அதுவும் நடவாத காரியம். அங்கே ஒருத்தி இருக்கிறாள். அந்தக் கங்கை கண்டு சொன்ன மாட்டாளா?

**இரண்டாம்:** ஓ! அப்படியானால் மார்பில் உள்ள மாலையும் கிடைக்காது; தலையில் அணிந்த கண்ணியும் கிடைக்காது.

**முதல்:** ஆம். மங்கை காணக் கொடார் மண மாலையை; கங்கை காணக் கொடார் முடிக் கண்ணியை.

[இப்போது வேறு சில பெண்கள் அங்கே வருகிறார்கள்.]

**இரண்டாம்:** (அவர்களைப் பார்த்து) நங்கைமீர், இடைமருதர் இந்தப் பெண்ணுக்கு அருள் புரிந்துவிட்டார்; அந்தச் செய்தியை அறிவீர்களோ?

**நங்கைமார்:** அப்படியா? அவர் மார்பில் அணிந்த கொன்றை மாலையை அனுப்பியிருக்கிறாரா?

**இரண்டாம்:** அதை அனுப்ப உமாதேவியார் இசைவாரா? யாருக்கு அனுப்புகிறீர்கள் என்று கேட்டு ஊடமாட்டாரா?

**நங்கைமார்:** அவர் திருமுடிக் கண்ணியை அனுப்பினாரா?

**இரண்டாம்:** கங்கை அநுமதிப்பாளா?

**நங்கைமார்:** பின்னே இவளுக்கு எங்கிருந்து கிடைத்தது கொன்றை?

**இரண்டாம்:** அதுதான் எனக்குத் தெரியவில்லை. ஆனால் இவள் கொன்றை மலரை அணிந்திருக்கிறாள்; உடம்பு முழுவதும் கொன்றை மயம்.

**முதல்:** ஆமாம்; இவளுக்குத் தாம் அணிந்த கொன்றையை எங்கிருந்தோ வாங்கிக் கொடுத்திருக்கிறார் இடைமருதர் என்பது நிச்சயம்.

**இரண்டாம்:** எங்கே வாங்கிக் கொடுத்தார்?

**முதல்:** நங்கைமீர், உங்களுக்குத் தெரியுமோ? இந்நங்கைக்கு இடைமருதர் கொன்றையை எங்கே வாங்கிக் கொடுத்தார்?

கொன்றை மாலை பெறுமல் வாடும் காதலி பசலை பூத்திருப்பதைக் கண்டு அதுவே கொன்றையென்று தோழி கூறியதாக ஒரு பாசுரத்தை அமைக்கிறார் அப்பர் சுவாமிகள்.


"மங்கை காணக் கொடார்மண மாலையை
கங்கை காணக் கொடார்முடிக் கண்ணியை;
நங்கை மீர்,இடை மருதர்இந் நங்கைக்கே
எங்கு வாங்கிக் கொடுத்தார் இதழியே?"

[மங்கை - உமாதேவியார். மணமாலை என்றது மார்பில் அணிந்த கொன்றை மாலையை. முடிக்கண்ணி - தலையில் அணிந்த அடையாள மாலையாகிய கொன்றைக் கண்ணி. இதழி - கொன்றை.]




## திருஞான சம்பந்தர் தேவாரம்

அந்தம்அறி யாத அருங்கலம் உந்திக்
கந்தம்கமழ் காவிரிக் கோலக் கரைமேல்
வெந்தபொடிப் பூசிய வேத முதல்வன்
எந்தைஉறை கின்ற இடைமருது ஈதோ !



## திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்


கனியி னும்கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளும் அரசினும்
இனியன் தன்அடைந் தார்க்கிடை மருதனே.




## திருவாசகம்

(திருப்பூவல்லி)

எந்தையெந் தாய்சுற்றம் மற்றுமெல்லாம் என்னுடைய
பந்தம் அறுத்தென்னை ஆண்டுகொண்ட பாண்டிப்பிரான்
அந்த இடைமருதில் ஆனந்தத் தேன்இருந்த
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ !



## திருவாசகம்

(திருப்பொன்னூசல்)

மூன்றங் கிலங்கு நயனத்தன் மூவாத
வான்தங்கு தேவர்களும் காணு மலரடிகள்
தேன்தங்கித் தித்தித்து அமுதூறித் தான்தெளிந்தங்கு
ஊன்தங்கி நின்றுருக்கும் உத்தர கோசமங்கைக்
கோன்தங் கிடைமருது பாடிக் குலமஞ்ஞை
போன்றங் கனநடையீர், பொன்னூசல் ஆடாமோ!



## திருக்கோவையார்

(தலைவன், வரைபொருட்பிரிவை உரையெனத் தோழிக்குக் கூறல்)

குன்றங் கிடையும் கடந்துமர் கூறும் நிதிகொணர்ந்து
மின்றங் கிடைநும் மையும்வந்து மேவுவன், அம்பலஞ்சேர்
மன்றங் கிடைமரு தேகம்பம் வாஞ்சியம் அன்னபொன்னைச்
சென்றங் கிடைகொண்டு வாடா வகைசெப்பு தேமொழியே!



## வரகுண பாண்டியர்

வேம்பின் கனிகண்டு மேலாஞ் சிவலிங்கம்
ஆம்பெருமைத் தோற்றம் அமைந்தனவென் றேபணிந்து
மேம்படுவி தானம் விரைந்தமைக்கச் செய்வித்தே
ஓம்பும் வரகுணனுர் ஓங்குமன்பின் திறமென்னே !

# ஸ்ரீ மத்தியார்ச்சுன மான்மியம்*

[மகாமகோபாத்யாய உ. வே. சாமிநாதையர்]

### விநாயக வணக்கம்

" உலகமுணர்ந் திடுகருணை யதனொடுநெஞ்
சகமதினி டுவகை யெய்தி
அலகில்புக ழுறுகவிகை நிழறனின்மெய்
யன்பர்குல மதனைக் காக்கக்
குலவுமுப நிடதவரி யணைமீது
பரசெழிற்செங் கோல்கைக் கொண்டாங்
கிலகுமிடை மருதாண்ட விநாயகனை
யெப்பொழுது மிறைஞ்சி வாழ்வாம்."

நைமிசவனத்திலே சௌனகாதி முனிவர்கள் பௌராணிகோத்தமராகிய சூத முனிவரை வணங்கி, "ஸ்வாமீ! அடியேங்கள் உய்யும் வண்ணம் எல்லா விசேஷங்களும் அமைந்த சிவஸ்தலமொன்றை நவின்றருள்க" என்று பிரார்த்தித்தனர். அவர் நெடுநேரம் சமாதி பொருந்தியிருந்து பின்பு நெஞ்சு நெக்குருகக் கண்ணீர் வார மெய்ம்மயிர் சிலிர்ப்ப ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்க மூர்த்தியையும், ஸ்ரீபிருகத் சுந்தர குசாம்பிகையையும், தமதாசாரியராகிய வியாச முனிவரையும் தியானித்துத் துதித்து இந்த ஸ்தலத்தின் மகிமையை அருளிச் செய்வாராயினர்.

### தல மகிமை

" இலங்குமந் திரங்க டம்மி
லிசைக்குமஞ் செழுத்து நீடு
நலந்தரு நூல்க டம்மி
னவின்றிடு மறையு மெண்ணும்
பலன்தரு தேவர் தம்மிற்
பரமனு மதிக மென்னத்
தலங்களி லதிக மாகுந்
தனியிடை மருது மன்றே."

அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபெருமான் தம்மை ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும் பொருட்டுப் பற்பல ஸ்தலங்களை உண்டாக்கியருளினர். அவற்றுள் ஸ்ரீ அருணாசலம், ஸ்ரீ காசி, திருக்காளத்தி, திருக்கேதாரம், திருவாரூர், திருவலஞ்சுழி, திருவேரகம், ஸ்ரீ சிதம்பரம், திருவெண்காடு, ஸ்ரீ கும்பகோணம், ஸ்ரீ மத்தியார்ச்சுனம் என்னும் பதினொரு தலங்கள் சிறந்தன. அவற்றினுள்ளே அநாதியாக இருத்தலானும், எல்லா உயிர்களுமொடுங்கிய மஹாராத்திரியில் அவ்வுயிர்களை எழுப்புதற் பொருட்டு ஏகாதச ருத்திரர்கள் வந்து வழிபட்டுச் சிவாநுக்கிரகம் பெறும்படி விளங்கினமையானும், திருவலஞ்சுழி முதலிய மிகச் சிறந்த தலங்களை விநாயகர் முதலிய பரிவார தேவதா ஸ்தலங்களாகக் கொண்டிருத்தலானும், மத்தியார்ச்சுனமே சிறந்தது. திருவலஞ்சுழி விநாயகக் கடவுளுக்கும், சுவாமிமலை சுப்பிரமணியப் பெருமானுக்கும், திருவாப்பாடி சண்டேசுர நாயனாருக்கும், சூரியனார் கோயில், சூரியன் முதலிய நவக்கிரகங்களுக்கும், சிதம்பரம் நடேசப் பெருமானுக்கும், சீகாழி பைரவக் கடவுளுக்கும், திருவாவடுதுறை நந்தி தேவருக்கும், திருவாரூர் ஸோமாஸ்கந்தருக்கும், திருவாலங்குடி தக்ஷிணாமூர்த்திக்கும் இருப்பிடங்களாம்.

மத்தியம் - நடு. அர்ச்சுனம் - நின்மலம். இது நின்மலமான ஸ்தானமென்று பொருள்பட்டு மத்திய சப்தத்தோடு சேர்ந்து நின்று, இத்தன்மையையுடைய (ஆதி சக்தியின் ஹிருதய கமல) மத்திய ஸ்தானத்தை உணர்த்திப் பின்பு அந்த ஹிருதய கமல மத்தியில் தியானிக்கப்பட்டு விளங்கிய ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்கப் பெருமான் முனிவர்களுக்குக் காட்சியளித்தற் பொருட்டு இங்கே எழுந்தருளியிருக்கின்றமையால், அப்பெயர் இந்த க்ஷேத்திரத்திற்கும் வந்தது. அல்லாமல் பின்பு ஒரு காலத்தே தரிசித்தற்கு வந்த உரோமச மகாமுனிவர் அர்ச்சுன வனத்தின் மத்தியில் சிவலிங்கப் பெருமான் எழுந்தருளியிருப்பக் கண்டு, "இந்த க்ஷேத்திரம் மத்தியார்ச்சுனம்" என்று வழங்கியபடி கொள்வதும் பொருந்தும். இன்னும் இது தமக்கு ஆதிசக்தி காட்சி கொடுத்தற்கு முனிவர்கள் உண்டாக்கின சண்பகச் சோலையையுடைமையால் சண்பகவனமென்றும், ஆதிசக்தி எழுந்தருளியிருத்தலாற் சக்திபுரமென்றும், சக்தியும் முனிவர்களும் தவம் செய்து பேறு பெற்றமையால் தபோவனமென்றும், சிவபெருமான் ஜோதி

---

* இந்நூலை ஐயரவர்கள் எழுதி 1883-ஆம் ஆண்டு ஜூன் மாதம் புத்தக வடிவில் வெளியிட்டார்கள்.

வடிவாய் அவர்களுக்குக் காட்சி கொடுத்தருளினமையால் ஜோதி நகரமென்றும், எல்லாப் புண்ணிய தீர்த்தங்களையும் உடைமையால் சர்வ தீர்த்தபுரம் என்றும், வில்வத்தை உடைமையால் வில்வவன மென்றும், தன்னிடத்திலிருந்து செய்யப்படும் ஒவ்வொரு புண்ணியமும் பற்பலவாக விருத்தியாதலால் தரும விருத்திபுரமென்றும், பூமியின் கண் சிவலோகமாக இருத்தலாற் பூலோக சிவலோக மென்றும், வீரசோழன் வழிபட்டு ஆலயத் திருப்பணி செய்து காடு வெட்டி நகரம் உண்டாக்கி நித்திய நைமித்திகங்களை விதிப்படி புரிவித்தமையால் வீரசோழ நகர மென்றும் சொல்லப்படும். இந்த க்ஷேத்திர மகிமை ஸ்காந்த புராணத்திலும், லிங்க புராணத்திலும், பிரம கைவர்த்தத்திலும், சிவரகஸ்யாதிகளிலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

## மருத விருக்ஷத்தின் வரலாறும், சிவபெருமான் காட்சி கொடுத்தருளிய முறையும்

திருக்கைலாய மலையிலே ஒப்புயர்வில்லாத செம்பொன் திருக்கோயிலிலே அனந்தகோடி சூரியர் உதித்தாற் போன்ற ஒளியையுடைய ரத்தின சிங்காதனத்தின் மேலே எழுந்தருளியிருந்து மகாதேவர் தமது ஞான சக்தியாகிய உமாதேவியாருக்கு ஆகமங்களை உபதேசித்தருளினர். தேவியார் அவற்றையெல்லாம் திருவுளங்கொண்டு, மகிழ்ந்து எழுந்து வணங்கி, "எம்பெருமானே! இவ்வுலக வளங்களையும், ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும்படி தேவரீர் எழுந்தருளியிருக்கும் ஸ்தலங்களையும், அவற்றுள் சிறந்ததாகிய ஒன்றனையும் காட்டியருளல் வேண்டும்" என்று பிரார்த்திக்க, "நின்குறிப்பு மிகவும் அழகிது" என்று மகிழ்வுற்றுச் சிவபிரான் உமாதேவியாரோடும் ரிஷபாரூடராய்த் திருக்கைலாயத்தினின்றும் புறப்பட்டு, எல்லா விசேஷங்களையும் காண்பித்துக் கொண்டுவந்து காவிரி மாநதியை யடைந்து அதன் மகிமைகளை எடுத்து உரைத்து, அதன் தென் கரையில் உள்ளதாகிய இந்த க்ஷேத்திரத்திற்கு நேராக ஆகாயத்தில் எழுந்தருளினர். அப்போது கைலையங்கிரியானது தமது பிரிவாற்றாமையால் மிகவும் உன்னதமான மருத மரமாகி அவ்விடத்தே நிற்கக் கண்டு அதனுடைய நிழலில் ரிஷபத்தை நிறுத்தி உமாதேவியாரை நோக்கி, "ப்ரியே! இந்த ஸ்தலம் அநாதியாயுள்ளது; நமக்கு அதிகப் பிரீதியை உண்டு பண்ணுவது; இதற்கு ஒப்பான 'ஸ்தலம் எங்குமில்லை இதன் அழகை நீ காண்பாயாக" என்று திருவாய் மலர்ந்தருளினார். உமாதேவியார் ஆங்காங்குள்ள தபோவனங்களையும், அவ்வனங்களில் காசிபர் முதலிய முனிவர்கள் தவஞ் செய்தலையும், மற்ற விசேஷங்களையும் நோக்கி இன்புற்று ஆனந்தப் பெருக்கமடைந்தனர். அப்பொழுது உமாதேவியாருடைய திருவிழிகள் கருணை வெள்ளம் பொழிந்தன. அவ்வெள்ளம் கிழக்கே சென்று காருண்யாமிர்தம் என்று பெயர் பெற்று ஒரு தீர்த்தமாக விளங்கியது. அக்காலத்தில் சிவபிரானது திருவிழிகளும் கருணை வெள்ளம் பொழிந்தன. அவ்வெள்ளம் இரண்டு பிரிவாகப் பொன் நிறமுற்றுச் சென்று நீர்வற்றிக் கிடந்த வடமேற்கிலுள்ள தடாகத்திலும் தென் திசையிலுள்ள தடாகத்திலும் பாய்ந்தது. இவ்விரண்டனுள், வாயு திக்கிலுள்ள தடாகத்திலே உயிர் போய் உலர்ந்து கிடந்த ஜலசரங்கள் யாவும் உயிர் பெற்று ருத்ர கணங்களாகி ஸ்வாமியை வலஞ்செய்து வாழ்த்தி வணங்கி விமானத்தின் மீதேறிச் சிவபுரம் அடைந்தன. அங்கே தவஞ் செய்யும் முனிவர்கள் தம்முட் பேசிக்கொள்ளும் வினாவிடைகளைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு அப்பால் பார்வதி தேவியாரோடு சுவாமி ஒரு முகூர்த்த காலம் அவர்களுக்குத் தோன்றாதவண்ணம் எழுந்தருளியிருந்தனர். அப்போது அங்கே வந்த அகஸ்திய முனிவரை முனிவர்கள் கண்டு பேரானந்தமுற்று எதிர் சென்று வணங்கி, "தேவரீர் இங்கே எழுந்தருளியது அடியேங்கள் செய்த பெருந்தவமேயன்றி வேறன்று. ஆதலால் யாங்கள் உய்ந்தோம். 'யாக முதலிய கருமங்களைச் செய்யிற் பயனளிப்பது அக்கருமமோ? அன்றி யளிப்பவர் சிவபெருமானோ?' என்னுஞ் சந்தேகம் எமக்கு நெடுநாளாக வுள்ளது. இதனை நீக்கியருளல் வேண்டும்" என்று பிரார்த்திக்கவே அகஸ்திய முனிவர் 'கன்மம் தானே பயன் தராதென்றும், தருபவர் சிவபெருமானே' என்றும், பத்தி நெறியாலேயே அவரை அடைய வேண்டுமென்று அந்தப் பக்திநெறி பெருந்தவத்தா லெய்தற்பாலதென்றும் பற்பல நியாயங்களால் விளக்கி, "முனிவர்களே! அவனருளாலே அவனை அடைய வேண்டுமென்று வேதாகமங்கள் கூறுகின்றன; ஆதலால், நீவிர் அருளாகிய உமாதேவியாரைக் குறித்துத் தவஞ் செய்து அவராற் சிவபெருமானை அடையுங்கள்" என்று கூறியருளினர். அப்பொழுது உமாதேவியார், "இவர்களுக்குக் காட்சி கொடுத்தருளல் வேண்டும்" என்று பிரார்த்திக்கவே சிவபெருமான், "நாம் இப்பொழுது இவர்

களுக்கு வெளிப்படுவது முறையன்று; அகஸ்தியன் மொழிப்படியாகுக" என்று கூறி உமா தேவியாரோடும் கைலை மலைக்கு எழுந்தருளினர்.

பின்பு அகஸ்திய முனிவர் கட்டளையின்படி எல்லா முனிவர்களும் அவரோடு கூடி ஸரஸ்வதி தேவியைக் குறித்துத் தவஞ்செய்து, வேதாகமங்களின் உண்மைப் பொருளையறிந்து பின்பு லட்சுமிதேவியைக் குறித்துத் தவம் செய்து சிவாராதனத்துக்கு வேண்டிய பாக்கியத்தை அடைந்து, பின்பு சிவபெருமானைத் தமக்குப் பிரத்தியட்சமாகத் தரிசிப்பித்தற்குச் சிற்சக்தியான ஆதி சக்தியின் அருள்பெற வேண்டி, அந்தச் சக்திக்குப் பிரியமான சண்பகச் சோலையொன்றை உண்டாக்கி, அந்தச் சோலையில் காட்சியளிக்க வேண்டுமென்று தவஞ் செய்தனர்; அப்போது அம்பிகை பரமசிவனிடத்துப் பிரியாவிடை பெற்று எழுந்தருளிக் காட்சி கொடுக்கவே முனிவர்கள் தரிசனம் செய்து ஆனந்த பரவசர்களாகி, "தாயே! நாங்கள் சிவபெருமானையும் தரிசிக்கும்படி திருவுளங் கொண்டருள வேண்டும்" என்று பிரார்த்தித்தனர். உடனே பார்வதி தேவியார், ஹிருதய கமல மத்தியில் சிவபெருமானை நினைந்து மௌனமாய்ச் சிவயோகஞ் செய்தனர். முனிவர்கள் அம்பிகைக்குத் தொண்டு செய்துகொண்டு தவம் புரிந்திருந்தனர்.

இப்படி நிகழுங் காலத்தில் அம்பிகையின் ஹிருதயகமல மத்தியில் நினைந்தபடியே சிவபெருமான் ஜோதின்மய மகாலிங்க மூர்த்தியாய் அவர்களுக்குக் காட்சி கொடுத்தருளினர். முனிவர்கள் யாவரும் தரிசிக்க வாற்ருது திகைத்து, உமாதேவியாருடைய திருவருளால் தரிசித்துப் பேரானந்தப் பெருவாழ்வடைந்தார்கள். பின்பு சிவபெருமான் அருள்மயமாகிய அந்த ஜோதின்மய மகாலிங்கத்தினின்று பிறைமுடியும், மான் மழு அபயம் வரதம் அமைந்த திருக்கரங்கள் நான்கும், தரிசித்தற்கினிய மற்ற அவயவங்களும் விளங்க ஏகநாயக மூர்த்தியாக எழுந்தருளிக் காட்சி கொடுத்தருளினர். அப்பொழுது தேவர்கள் மலர்மழை பொழிந்தார்கள். குபேரன் பொன்மாரி பெய்தான். கந்தர்வர்கள் இனிமையான கானஞ் செய்தார்கள். பூதகணாதிபர்கள் வாத்தியங்களை முழக்கினர்கள். இங்ஙனம் காட்சி கொடுத்தருளிய ஏகநாயகரை உமாதேவியார் வணங்கித் துதித்தார். முனிவர்களும் வணக்கத்துடன் துதிசெய்து, "நாம் செய்த தவம் பலித்தது" என்று ஆனந்த பரவசர்களாயினர். அப்பொழுது சிவபிரான் பார்வதி தேவியாரை நோக்கி, "நினது தவங்கண்டு மகிழ்வடைந்தோம்; நினது கருத்தின்படிக்கும், நமது அன்பனாகிய அகஸ்திய முனிவன் முனிவர்களுக்குக் கூறியபடிக்கும், இம்முனிவர்களுக்குக் காட்சி கொடுத்தோம். எம்மோடு அபேதமாகிய உனக்கு எம்மால் தருதற்குரியது யாது? யாவரும் அறியும்படி நாம் முன்னர் வடிவமாகக் கொண்ட ஜோதின்மய மகாலிங்கத்தை இந்த க்ஷேத்திரத்தில் அநாதியாகவுள்ள நம் உருவமாகிய லிங்கத்தோடு கலப்பித்துப் பூசிக்கின்றேம்; இதனை ஒருதினம் பூசிப்பவர்கள் இருமைப்பயனையும் எளிதில் அடைந்து முக்தியின்பத்தையும் அடைவார்கள்" என்று மொழிந்தருளி, விஷ்ணு முதலிய தேவர்கள் தத்தமக்கு இயன்ற பணிகளை அன்போடு செய்து பக்கத்தே நிற்கையில், தாம் உரைத்தருளிய வேதாகம விதிப்படி அம்மூர்த்தியை அர்ச்சித்தனர்; பின்பு அருகே ஏவல் செய்து நின்ற தேவர்கள் யாவருக்கும் அவரவர் கருதிய வரங்களை அருளி உமாதேவியாரை நோக்கிப் புன்முறுவல் செய்தனர். அப்போது உமாதேவியார், "ஸ்வாமி! திருமால் முதலிய தேவர்கள் தத்தம் எண்ணம் வாய்ப்பத் தேவரீரைப் பூசிக்கின்றனர். தேவரீர் என்ன பயனைக் குறித்துப் பூசித்தீர்?" என்று கேட்கவே சிவபெருமான், "உமையே, நம்மைப் பூசிக்கும் முறையை இம்முனிவர்க்கு அறிவுறுத்தற் பொருட்டே" என்று சொல்லி உமாதேவியாரது வேண்டுகோளின்படி முனிவர்களை நோக்கி, "நீங்கள் வேண்டிய வரங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்" என்றனர்; அவர்கள் "கிருபாநிதியே! அடியேங்களுக்குச் சிவஞானம் அருளுக" என்ருர்கள். சிவபிரான் அப்படியே ஞானேபதேசஞ்செய்து சிவலிங்கத்தின் பெருமையையும், பூசை செய்யும் முறையையும், பூசிப்பவர்கள் அடையும் பயனையும் விரித்துச் சொல்லியருளினர். அப்பால் தேவர்களும் முனிவர்களும் விசுவகர்மாவை வருவித்து ஆலயம் அமைக்கும்படி கூற, அவன் விதிப்படி கர்ப்பக்கிருகமும், அர்த்த மண்டபம் முதலிய மண்டபங்களும், திருமாளிகைப்பத்தி முதலியனவும், ஆவரண தேவர்கள் ஆலயங்களும், வலப்பக்கத்தில் பிருகத் சுந்தரகுசாம்பிகையின் ஆலயமும் ஒரு கணப்போதில் மனத்தால் நிருமித்தனன். அவ்வவ்வாலயங்களில் அந்த அந்தத் தேவர் எழுந்தருளியிருப்ப அவர் விதிப்படி பூசை புரிந்து இன்புற்றனர்.

## உரோமச முனிவரும் வீரசோழனும் வழிபட்டது

உரோமசர் என்ற முனிபுங்கவர் மருதவனேசரை வணங்குதற் பொருட்டுத் தமது தபோவனத்தினின்றும் புறப்பட்டுப் பல நாடுகளையும் கடந்து இந்த ஸ்தலத்தை அடைந்து இதனது சிறப்பை நோக்கி வருங்கால், திருக்கோயிலின் வடமேற்கிலுள்ள தீர்த்தத்தில் ஒரு காகம் வந்து படிந்து பொன்னிறமுற்று, மருத மரத்திலிருந்து, பரமசிவனைத் துதிப்பதை வியப்புடன் நோக்கி, "காகமே! உன் வரலாறு யாது? சொல்" என்று வினவினர். காகம், "நான் முற்பிறப்பில் ஒரு பிராமணன். தேவ சாஸ்திர புராணங்களையும், விதிவிலக்குகளையும் நன்றாக அறிந்தவன். ஒரு நாள் சூரியக் கிரகண புண்ணிய காலத்தில் பலரும் ஸ்நானம் செய்து தானதர்மாதிகளைப் புரியும்போது நானும் சென்று ஸ்நானம் பண்ணிச் செய்யவேண்டுவனவற்றை எல்லாம் செய்து ஓர் அரசனிடத்தில் தானம் வாங்கினேன். ஆசை அடங்காமையால் மற்றோர் அரசனிடத்தும் சென்று தானம் வாங்கத் தொடங்கினேன். அவன் எனது மார்பிலுள்ள சந்தனத்தைக் கண்டு, 'நீ முன்னமே யாரிடத்தேனும் தானம் வாங்கியதுண்டோ?' என்று வினவ, நான் 'ஆம்' என்றேன். அரசன் கோபமுற்று, 'வீடுதோறும் சென்று, இரைகளைக் கவரும் காகம்போலப் பலரிடத்தும் தானம் வாங்கக் கருதினமையால் நீ காகவடிவம் அடையக் கடவாய்' என்று சபித்தான். நானும் அரசனைச் சபிக்க எண்ணுங்கால், அவனது புரோகிதனாகிய சுசங்கியன் என்பவன் என்னைப் பணிந்து, 'பல உயிர்களையும் காக்கின்ற அரசனைச் சபியற்க. அரசன் சபியாவிடினும் நீ காகவடிவமடைதற்குத் தடையில்லை; நீ அடையும் காகவடிவம் ஒரு புண்ணிய தீர்த்தத்தால் நீங்கும்' என்று கூறி மிகவும் பிரார்த்தித்துக் கொண்டமையால், நான் கோபம் தணிந்து காக வடிவம் பெற்றுப் பழைய ஞாபகத்தோடும் பல தீர்த்தங்களிலும் படிந்து முன்னர் அடைந்துள்ள தவப்பேற்றால், இந்த ஸ்தலத்தை அடைந்து இந்தத் தீர்த்தத்தில் படிந்து, இந்த ஜோதின்மய மகாலிங்கத்தின் கிருபையால் பொன்வடிவம் பெற்றேன். உம்மையும் தரிசித்தேன்; நற்கதியும் அடைவேன். இனி எனக்கு என்ன குறை?' என்று சொல்லிற்று. அப்போது சிவகிருபையால் கோடி சூரியப் பிரகாசமுள்ள விமானமொன்று பல தேவகணங்களோடும் வரவே, காகம் ருத்திரவடிவமுற்று அதிலேறிப் பல சிறப்புடன் கயிலையங்கிரியிற் சென்று அளவில்லாத இன்பமுற்றிருந்தது.

இவ்வாறு சென்றதைக் கண்ட உரோமச மகா முனிவர் மிக்க ஆச்சரியமுற்று மருதவனத்தால் மூடப்பட்ட திருக்கோயிலை அடைந்து ஸ்வாமியை வணங்கி, 'அடியேனையும் ஆட்கொண்டருளல் வேண்டும்' என்று பிரார்த்தித்து, வெளியே வந்து ஒருவரையும் காணாமல் திகைப்புற்றுப் பரமசிவனைப் பிரார்த்தித்து நின்றார். அப்பொழுது தமக்குக் காட்சியளித்த திருநந்தி தேவரை நமஸ்கரித்து, "இத்திருக்கோயிலில் எல்லாச் சிறப்பும் அமைந்திருப்ப, மனிதர்கள் மட்டும் இல்லாமைக்கு என்ன காரணம்?" என்று வினவினர். அப்போது திருநந்தி தேவர், "முன்னம் இங்கிருந்து சிவாராதனம் செய்து வந்த அகஸ்திய முனிவர் முதலானோர் சிவாஞ்ஞையால் திருவெண்காட்டை யடைந்து அங்குள்ள முனிவர்களோடு யாகம் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் நீங்கினமையால் பௌத்தர் மேலிட்டு இத்தேசத்தாரையும் சோழனையும் வேறுபடுத்தினர். அதனால் இந்நகரம் மருதங்காடு கொண்டது. பூசித்தற்கு வேறொருவரும் இல்லாமையால் விநாயகக் கடவுள் சிவாராதனம் செய்தலோடு சிவாஞ்ஞையால் அன்பர்களுக்கு யாதோர் இடையூறும் அணுகாவண்ணம் ஆண்டு வருகிறார். உமது வரவையும், உம்மால் இங்கே சிவநேயம் தழைத்தோங்குமென்பதையும், முன்பு சிவபிரான் விநாயகருக்குக் கூறியருளினர்" என்று கூறினர். முனிவர் ஆனந்தமுற்று, "ஸ்வாமி, அடியேனுக்குச் சிவபூசா விதியை அருளுக" என்று வேண்ட அப்படியே அவர் உபதேசித்தருளினர். பின்பு முனிவர் நாள்தோறும் பூசித்து ஸாம்பதக்ஷிணாமூர்த்தியாகத் தமக்குப் பரமசிவன் காட்சி கொடுத்தருளப் பெற்று மீட்டும் சிவாராதனம் செய்துகொண்டு இந்த ஸ்தலத்தே வசித்திருந்தனர்.

அக்காலத்தில் காஞ்சீபுரத்தில் சோழப் பரம்பரையில் தோன்றிய வீரசோழன் என்பவன் எல்லா வித்தைகளிலும் சிறந்து சிவபக்திச் செல்வம் வாய்ந்து அரசாண்டு வந்தான். அவன் ஸ்தல யாத்திரை செய்ய நினைந்து புறப்பட்டுப் பல தலங்களையும் தரிசித்துக்கொண்டே வந்து, இந்த க்ஷேத்திரத்தை அடைந்து ஸ்வாமி தரிசனம் செய்து, அளவிறந்த மகிழ்ச்சியுடையவனாகி உரோமச மகா முனிவரால் கட்டளையிடப்பெற்று விதிப்படி ஆலயத்தில் பணிசெய்து, காடுவெட்டி நகரமுண்டாக்கி அதில் நான்கு வருணத்தாரை

யும் மற்றையோரையும் முறையே குடியேற்றிச் சிவபிரானுக்கு நித்திய பூசை முதலியவற்றை முன்னையிலுஞ் சிறப்பாகச் செய்வித்துப் புஷ்யோத்ஸவத்தையும் விதிப்படி நடத்தி, மேலும் வேண்டுவனவற்றையெல்லாம் செய்து இந்த ஸ்தலத்திலிருந்தே பலநாள் அரசாண்டு வாழ்ந்து, தனது புத்திரனுக்கு மகுடம் சூட்டிப் பின்பு சிவபதமடைந்தான். உரோமச மகா முனிவரும் பல முனிவரோடு இந்த ஸ்தலத்திலேயே சிவயோகம் பயின்று வசித்திருந்தார்.

## மார்க்கண்டேய முனிவர் பேறுபெற்றது

மார்க்கண்டேய முனிவர் அர்த்தநாரீசுவர வடிவம் தரிசிக்க விரும்பி இந்த ஸ்தலத்தை அடைந்து தவம் செய்து பரமசிவன் அந்த வடிவினராகிக் காட்சியளிக்கவே தரிசனம் செய்து பேரானந்தமடைந்தார்.

## சுகீர்த்தி மகப்பேறடைந்தது

காஞ்சீபுரத்தில் முன்னம் அரசனாகவிருந்த சுகீர்த்தி என்பவன் தனக்குப் புத்திரன் இல்லாமையால் வருந்தினான். அக்காலத்தில் திருவெண்காட்டில் யாகம் செய்துகொண்டு எழுந்தருளியிருந்த அகஸ்திய முனிவரை அடைந்து பணிந்து தன் மனக்குறையை விண்ணப்பம் செய்தான். அவர், "பிதிரர்களுக்குத் திருப்தி செய்தால் புத்திரன் உண்டாவான். அதற்கு மற்ற இடங்கள் எல்லாவற்றினும் திருவிடைமருதூரே சிறந்தது. அந்த க்ஷேத்திரத்தில் அங்ஙனம் செய்து பேறுபெற்றார் அநேகர். நீயும் அங்கே சென்று நான் சொன்னபடி செய்து பேறு பெறுக" என்று கூறியருளினர். அரசன் விடைபெற்று இந்த ஸ்தலத்தையடைந்து சுவாமி தரிசனம் செய்து பிதிர்களுக்குத் திருப்தி செய்து, சற்புத்திரனை யடைந்து பெருமகிழ்வுற்றுப் பல நாள் இந்த ஸ்தலத்தின்கண் இருந்து அரசாண்டு பின்பு புத்திரனுக்கு முடிசூட்டிச் சிவபதமடைந்தான்.

## வசிஷ்டர் முதலியோர் சித்தி பெற்றது

வசிஷ்டர் முதலிய பல முனிவர் அஷ்டமா சித்தியைப் பெறுதற் பொருட்டு ஒரு யாகம் செய்ய நினைந்தனர். அப்போது ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளைப் பணிந்து தம்முடைய எண்ணத்தைக் கூறி, "யாகம் செய்தற்குரிய ஸ்தானமொன்று தெரிவித்தருளுக" என்று விண்ணப்பம் செய்ய, அவர் இந்த ஸ்தலத்தின் மகிமைகளை அறிவுறுத்தி அம்முனிவர்களுடன் இந்த க்ஷேத்திரத்தை அடைந்து ஸ்வாமியை அவர்களுக்குத் தரிசனம் செய்வித்துக் கங்கா தேவியை நினைத்தனர். உடனே வந்த கங்கா தேவியை நோக்கி அவர், "சிவபிரானுக்கு அபிஷேகித்தற் பொருட்டும், யாவருமாடி உய்தற் பொருட்டும் இந்த ஸ்தலத்தில் இருப்பாயாக" என்று வேண்டினார். எனவே, கங்காதேவி அவ்வாறே மூலஸ்தானத்துக்கு வடகிழக்கில் ஒரு கிணறு வடிவாய் அமர்ந்தனள். குமாரக் கடவுள் அந்தக் கங்கா தீர்த்தத்தினால் ஸ்வாமிக்கு அபிஷேகம் செய்து பூசித்தனர். முனிவர்களும் குமாரக் கடவுளின் கட்டளைப்படியே காவிரியிலும் மற்றத் தீர்த்தங்களிலும் இந்தக் கங்கா தீர்த்தத்திலும் ஸ்நானம் செய்து பரமசிவனை வழிபட்டு அவரது அநுக்ஞை பெற்றுப் பின்பு வேண்டுவனவற்றைக் கொண்டு குறித்தபடி யாகம் செய்தார்கள்; முடிவில் பரமசிவன் அம்பிகையோடும் ரிஷபாரூடராய்க் காட்சியளித்தனர். முனிவர்கள் தரிசனம் செய்து தாம் விரும்பிய சித்திகளை அடைந்து பல நாள் இந்த ஸ்தலத்தில் வழிபாடு செய்து கொண்டிருந்து தம்மை அடைந்தவர்களுக்கும் அந்தச் சித்திகளை அளித்து ஸ்வாமியிடத்தில் விடைபெற்றுத் தங்கள் தங்கள் தபோவனமடைந்து தவம் செய்வாராயினர்.

## தீர்த்த மகிமை

(1) காருண்யாமிர்தம்: இந்த ஸ்தலத்திலுள்ள எல்லாத் தீர்த்தங்களிலும் இது சிறந்தது. இதில் சித்திரை விஷு புண்ணிய காலத்தில் ஸ்நானம் பண்ணுதல் விசேஷம். இந்தத் தீர்த்தத்தின் வடகீழ்த் திக்கில் திரிமூர்த்தி வடிவினதாகிய அரச மரமொன்று உண்டு. சோமவார அமாவாசையின் காலையில், இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி, அந்த அரச மரத்தை ஏழு முறை வலம் வருபவர்கள் உலகை யெல்லாம் வலம் வந்த பலனையடைவார்கள். வேதாத்தியயனம் செய்யாத பிராமணனும், சிவலிங்கத்தையும் பெண்களையும் விற்றவனும், மதுபானம் செய்தவனும், சிராத்தம் செய்யாமல் விட்டவனும், களவு கொலை செய்தவனும், மாதா பிதாக்களை இகழ்ந்தவனுமாகிய இவர்கள் இதில் ஸ்நானம் பண்ணுவாராயின் அப்பாவத்தினின்றும் நீங்குவார்கள். இதில் ஸ்நானம் செய்பவன் அஷ்டைசுவரியத்தையும், சதுர்த்தச வித்தைகளையும் அடைவான்; விரோதிகளும் வியாதிகளும் நீங்கப்பெற்று, மறுமையிற் சிவ சாரூபத்தையும்

பெறுவான். உலகத்திலுள்ள எல்லாப் புண்ணிய தீர்த்தங்களிலும் ஸ்நானம் பண்ணின பலனை ஒருங்கே அடைவான். இதில் ஏதாவது ஒரு காலத்தில் ஸ்நானம் பண்ணிப் பிதிர்களைக் குறித்துத் தர்ப்பணம் செய்வோர் ஒரு வருஷத்தி லுள்ள பிதிர் தினங்களாகிய தொண்ணூற்றாறு தினத்திலும் பிதிர் சிராத்தம் பண்ணின பலனை அடைவார்கள். இந்தத் தீர்த்தத்தால் பேறு பெற்றோர் பலர். தொண்ணூற்றாறு சிராத்தங் களாவன: மந்வாதி 14; மாளயம் 16; யுகாதி 4; ஸங்கிராந்தி 12; தர்சம் 12; வியதீ பாதம் 13; வைதிருதி 13; அஷ்டகம் 12.

முன்னொரு காலத்தில் கங்கை, யமுனை, தாமிர பர்ணி, வாணி, சோணபத்திரை முதலிய நதிகள் திருக்கைலாயத்தை அடைந்து பரமசிவனை வணங்கி வழிபட்டு, "ஸ்வாமி, ஸ்நானம் பண்ணுபவர்கள் எம்பால் நீக்கிய பாவங்களால் மலினமுற்று வருந்துகின்றோம். இத்துன்பம் நீங்குமாறு அருள்புரிக" என்று பிரார்த்திக்கவே பரமபதி, "காருண்யாமிர்தத்தில் ஸ்நானம் பண்ணுங்கள். உங்கள் எண்ணம் வாய்க்கும்" என்று அருளினர். அது கேட்டு அவர்கள் மகிழ் வுற்று விடைபெற்று இந்த ஸ்தலத்தை யடைந்து இதில் ஸ்நானம் செய்து தமது மலினம் நீங்கினர். அவ்வாறே வருஷந்தோறும் சித்திரை விஷு புண்ணிய காலத்தில் இதிலாடித் தம் குற்றங்களைப் போக்கித் தமக்குரிய இடங்களை அடைவாராயினர்.

இவ்வண்ணம் நிகழுங்காலத்தில் மிதிலா நகரத்தின் அரசனாகிய இஷ்டரோமனென்பவன் புத்திரன் இல்லாமல் வருந்தி உதங்கமுனிவரால் ஏவப்பட்டு மனைவியோடு இந்த ஸ்தலத்தை அடைந்து, தினந்தோறும் காருண்யாமிர்தத்தில் ஸ்நானம் பண்ணிப் பரமசிவனை வழிபட்டிருக் கும்போது, அவன் மனைவி கருப்பமுற்று ஒரு சற்புத்திரனை ஈன்றாள். அரசன் மகிழ்ந்து சில நாள் மருதவனேசருக்கும் பல பணிகள் செய்து வந்து பின்பு தன் நகரமடைந்து புத்திரனுக்குப் பதினாறு பிராயமாகுகையில், காசிராஜன் புத்தி ரியை விவாகம் செய்யக் கருதி, தனக்குரிய எல்லாப் பரிவாரங்களோடும் காசி நகரமடைந்து, அந்நகரத்தரசனால் அமைக்கப்பட்ட மாளி கையை மேவி, மறுநாட் காலையில் ஸ்நானம் பண்ணுதற் பொருட்டுக் கங்கைக் கரையை அடைந்து நின்றான். அப்போது ராஜகுமாரன் முன்னதாக அக்கங்கையில் இறங்கினன். அந்தக் காலம் கங்காநதி இந்தக் காருண்யாமிர்தத்துக்கு வருங்காலமாதலால், அந்தக் குமாரனோடு அந்தர்வாகினியாக இந்தத் தீர்த்தத்தை அடைய, அக்குமாரன் கண்டோர் ஆச்சரியமுறும்படி கரையேறி இந்நகரில் அரசாண்டு வந்த சோழ ராஜன் மனையில் அவனால் ஆதரிக்கப்பட்டிருந் தனன். அங்கே இஷ்டரோமன் கங்கையில் இறங்கிய தன் புத்திரனைக் காணாமல் கவலையுற்று நிகழ்ந்ததை ஆகாயவாணியால் அறிந்து, உடனே புறப்பட்டுச் சில நாட்களில் இந்த க்ஷேத் திரத்தை யடைந்து, தன் புத்திரனைக் கண்டு மகிழ்வுற்று அவனுடன் சென்று சுவாமி தரிசனம் செய்து விடைபெற்றுக் காசியையடைந்து அப் புத்திரனுக்கு விவாகம் செய்வித்துத் தனது ராஜதானியாகிய மிதிலா நகரம் சென்று அரசாண்டு வாழ்ந்திருந்தான்.

(2) பாணதீர்த்தம்: இது திருக்கோயிலுக்கு வட கீழ்த்திசையில் உள்ளது. இதற்குத் தேவதை இராமன். தீர்த்த பாலர் முருகக் கடவுள். ரிஷி வசிஷ்டர். விருக்ஷம் அரசு. இதில் வைகாசி மாசத்துப் பௌர்ணமியில் ஸ்நானம் பண்ணுதல் விசேஷம். இதில் ஸ்நானம் பண்ணுவோர் பால், தயிர், நெய் என்பனவற்றைத் தானஞ் செய்தல் வேண்டும். இதில் பிதிர்களைக் குறித்துத் தர்ப்பணம் செய் தால் கயையில் செய்த பலன் உண்டாகும். முன்னம் தசரத சக்கரவர்த்தியின் ஆக்ஞைப்படி தண்டகாரணியத்தை அடைந்த ராமன் இந்த ஸ்தலத்தை அடைந்து, தனது நியமத்தை முடித்தற் பொருட்டுத் தீர்த்தமுண்டாக்க வேண்டி, ஒரு பாணத்தைப் பூமியில் பிரயோகம் செய்ய உண்டானமையால் இது பாணதீர்த்த மென்று பெயர் பெற்றது. இதன் வடகரையில் இராமனால் அர்ச்சிக்கப்பட்டு எழுந்தருளியிருக் கிற பாணலிங்கத்தைத் தரிசிப்போர் வேண்டிய வற்றைப் பெறுவர்.

(3) பராசர தீர்த்தம்: இது காருண்யாமிர் தத்துக்கு வடகிழக்கில் ஓரம்பு வீழ் தூரத்தில் உள்ளது. இதற்குத் தேவதை வாயு. தீர்த்த பாலர் வைரவக் கடவுள். ரிஷி கண்ணுவர். விருக்ஷம் வேம்பு. இதில் மார்கழி மாசத்தில் ஸ்நானம் பண்ணுதல் விசேஷம். இதில் ஸ்நானம் பண்ணுவோர் திலதானம் செய்தல் வேண்டும். பராசர முனிவர் மச்சகந்தியைச் சேர்ந்தமையால் அருவருப்படைந்து மனக் கலக்கமுற்று, அதை மாற்ற எண்ணி உரோமச மகாமுனிவரால் ஆஞ்ஞாபிக்கப்பட்டு இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி, அந்த அரு வருப்பு ஒழிந்து இன்புற்றனர். இதனால் இத் தீர்த்தம் பராசர தீர்த்தமென்று பெயர் பெற்றது.

(4) சோம தீர்த்தம்: இது காருண்யாமிர்த தீர்த்தத்துக்குக் கிழக்கே ஓரம்புவீழ் தூரத்தில் உள்ளது. இதற்குத் தேவதை சந்திரன். தீர்த்தபாலர் சண்டேசுரர். ரிஷி கௌதமர். விருக்ஷம் அடப்பு. இதில் சோமவாரத்தில் ஸ்நானம் பண்ணுதல் விசேஷம். ஸ்நானம் பண்ணுவோர் கன்னிகாதானம், பாயசதானம், பலதானம் முதலியவற்றைச் செய்தல்வேண்டும். இந்தத் தீர்த்த ஸ்நானத்தால் பஞ்ச மகாபாதகம் (கொலை, பொய், களவு, கள்ளுண்ணல், குரு நிந்தை) முதலியன நீங்கும். இந்த க்ஷேத்திரத்தி லுள்ள கனக தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி க்ஷயரோகம் ஒழிந்த சந்திரனால் உண்டாக்கப் பட்டதாதலின் இஃது இப்பெயர் பெற்றது.

(5) வேறொரு சோம தீர்த்தம்: இது கனக தீர்த்தத்துக்குத் தென்மேற்கே ஓரம்புவீழ் தூரத் தில் உள்ளது. இதற்குத் தேவதை ஸ்ரீ சங்கரர். தீர்த்த பாலன் சந்திரன். ரிஷி துர்வாசர். விருக்ஷம் மகிழ். இதில் ஸ்நானம் பண்ணு வோர் நெய், எள், வஸ்திரம், அரிசி, புஷ்பம், சந்தனம் என்பவற்றைத் தானம் செய்யவேண் டும். இந்தத் தீர்த்த ஸ்நானத்தால் இழிகுலத் தோருடைய ஆகார சேஷமும், ஸ்திரீ சேஷ முதலியனவும் புசித்ததனால் உண்டாகும் தோஷமும் நீங்கும். சந்திரன் முற்காலத்தில் பெரிய பாவமொன்றைச் செய்து அதனால் தனது கலை குறைதலைக் கண்டு மிகவும் கவலையுற்று இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணிக் கலை வளரப் பெற்று வாழ்வுற்றனன். இதனால் இந்தத் தீர்த்தமும் இப் பெயர் பெற்றது.

(6) ருத்ர தீர்த்தம்: இது மூலஸ்தானத் துக்குத் தெற்கே உள்ளது. இதன் தேவதை ஈசுவரன். தீர்த்தபாலன் கருடன். ரிஷி பிப்பிலர். விருக்ஷம் தமாலம். இதில் நீராடு வோர் தேன், கம்பளம் இவற்றைத் தானம் செய்தல் வேண்டும். இந்தத் தீர்த்த ஸ்நானத் தால் கொடிய வியாதிகள் எல்லாம் தீரும். "யாம் சிவபெருமானை ஒத்திருக்கிறோம்" என்று தருக்கிய உருத்திரர் பலர் அவரால் சபிக்கப்பட்டு மீன் வடிவமுற்றுச் சில நாளைக்குப் பின் இந்தத் தீர்த்த சம்பந்த விசேஷத்தால் அம்மீன் வடிவம் நீங்கிப் பண்டை வடிவமுற்றுச் சிவபெருமானுக்கு அணுக்கர்களாயினர். இத னால் இந்தத் தீர்த்தம் உருத்திர தீர்த்தமென்று பெயர் பெற்றது. மற்றொரு காலத்தில் நிமிச் சக்கரவர்த்தியின் குமாரனான திருஷ்டகேது என்பவன் தன் புத்திரனுக்கு ஏற்பட்ட கண்ட மாலை என்ற நோயைத் தீர்த்தற்குப் பலவாறு முயன்றும் அது தீராமையாற் கவலை கூர்ந்து, பூர்வ ஜன்மத்தில் செய்த சிவத்துரோகத்தால் அவனுக்கு அந்த நோய் வந்ததென்பதையும் இந்த ருத்ர தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினால் அது நீங்குமென்பதையும் காத்தியாயன முனிவ ரால் அறிந்தான்; பின்பு இந்த ஸ்தலத்தை யடைந்து, இதில் ஸ்நானம் பண்ணுவித்த வுடனே கண்டமாலை இருந்த இடம் தெரியாமல் காய்ந்து போயிற்று. அரசன் கண்டு மகிழ்ந்து வெகு காலம் இந்த ஸ்தலத்திலேயே வாசஞ் செய்து தன் தேசத்தில் பாதியை ஸ்ரீ மகாலிங்கப் பெருமானுக்கு அர்ப்பணம் செய்து பின்பு தன் நகரை அடைந்து வாழ்ந்திருந்தான்.

(7) பதும தீர்த்தம்: இது இரண்டாவதான சோம தீர்த்தத்துக்குத் தென் கிழக்கில் உள்ளது. தேவதை ஸ்ரீ மகாலிங்க மூர்த்தி. தீர்த்த பாலன் நாகமுகன். ரிஷி பிரம்மா. விருக்ஷம் வில்வம். இதில் ஸ்நானம் பண்ணுவோர் தானியம், வெல்லம், உப்பு, பருத்தி இவற்றைத் தானம் செய்தல் வேண்டும். இதில் நீராடினால் எல்லாச் செல்வங்களையும் பெறலாம்; பாவங்கள் எல்லாம் நீறாகும். முன்பு இதில் ஸ்நானம் பண்ணிய விசேஷத்தால் மகாபலி சக்கரவர்த்தி மூன்று உலகங்களையும் ஆண்டான்.

(8) பாண்டவ தீர்த்தங்கள்: இவை பதும தீர்த்தத்துக்குத் தெற்கே தரும தீர்த்தம், வீம தீர்த்தம், அர்ச்சுன தீர்த்தம், நகுல தீர்த்தம், சகாதேவ தீர்த்தம் என ஐந்தாக உள்ளன. இவற்றுக்குத் தேவதைகளும் தீர்த்த பாலகர் களும் முறையே சம்பு, நந்திதேவர், சுப்பிரமணி யர், பிருங்கி, சண்டேசுரர் என்பவர்களாவர். ரிஷிகள், பரத்துவாசர், ஜதுகர்ணர், கௌதமர், மாண்டவியர், பயிலர் என்பவர்கள். விருக்ஷங்கள் நாவல், மா, நெல்லி, ஆல், வேம்பு என்பன. இவற்றில் ஸ்நானம் பண்ணுவோர் முறையே உதகும்பம், குடை, விசிறி, வஸ்திரம், பாதுகை என்பவற்றைத் தானம் செய்தல் வேண்டும். இதில் ஸ்நானம் செய்தால் எல்லாச் செல்வமும் உண்டாகும்; நோயும் பகையும் நீங்கும். சூதாட்டத்தினால் தம் செல்வம் முழுவதையும் இழந்த பாண்டவர் ஐவரும் வனவாசம் பண்ணுகையில், கண்ணபிரானால் ஏவப்பட்டு இந்த ஸ்தலத்தை அடைந்து சிவபிரானைத் தரிசித்து அப்போது உண்டான அசரீரி வாக் கின்படி இந்தத் தீர்த்தங்களை முறையே உண் டாக்கி, இவற்றில் பலநாள் ஸ்நானம் பண்ணிக் கொண்டிருந்து பின்பு தமக்குரிய எல்லாச் செல் வங்களையும் அடைந்தனர். இதனால் இந்தத்

தீர்த்தங்கள் பாண்டவ தீர்த்தமென்று பெயர் பெற்றன.

(9) இந்திர தீர்த்தம் : இது திருக்கோயிலுக்குக் கிழக்கே உள்ள சோமதீர்த்தத்துக்குத் தெற்கே இருக்கிறது. தேவதையும், ரிஷியும் இந்திரன். தீர்த்தபாலர் சந்திரசேகரர். விருக்ஷம் முள்ளிலவு. இதில் ஸ்நானம் பண்ணுவோர் இரும்பு, வெள்ளி, எருமை, பால், தாம்பூலம் இவற்றைத் தானம் செய்தல்வேண்டும். இந்திரன் முன்பு வலாசுரனைப் போரில் வெல்ல மாட்டாமல் வஞ்சனையால் கொன்ற தோஷத்தையும், பகாசுரனைக் கொன்ற தோஷத்தையும் இந்தத் தீர்த்த ஸ்நானத்தால் அகற்றிப் பரிசுத்தனாயினன். இதனால் இஃது இந்திர தீர்த்தமென்று பெயர் பெற்றது.

(10) அக்கினி தீர்த்தம் : இஃது இந்திர தீர்த்தத்துக்குத் தெற்கே மூன்றம்புவீழ் தூரத்தில் உள்ளது. தேவதை ஸ்ரீ சங்கரர். தீர்த்த பாலன் அக்கினிதேவன். ரிஷி கபிலர். விருக்ஷம் நெல்லி. இதில் ஸ்நானம் பண்ணுவோர் தயிர், நெய், கறவைப் பசு இவற்றைத் தானம் செய்தல் வேண்டும். க்ஷேத்திர பாலராகிய பைரவக் கடவுள் ஒரு தினம் உலாவி வருகையில் அவருடைய சூலம் அழுந்திய இடத்தில் உண்டானமையால், முன்பு இதற்குச் சூலகாதமென்று ஒரு பெயர் உண்டாயிற்று. அக்கினிதேவன் காண்டவ வனத்திலுள்ள உயிர்களை எல்லாம் எரித்து வருந்தினபோது தனக்கு ஏற்பட்ட பாவத்தை இதில் ஸ்நானம் பண்ணிப் போக்கி உய்ந்தனன். அதனால் இது பின்பு அக்கினி தீர்த்தமென்று பெயர் பெற்றது.

(11) யம தீர்த்தம் : இஃது அக்கினி தீர்த்தத்துக்குத் தென்மேற்கில் ஏழம்புவீழ் தூரத்தில் இருக்கிறது. இதற்குத் தேவதை அகோரமூர்த்தி. தீர்த்தபாலன் ரிடன். ரிஷி யமன். விருக்ஷம் பாதிரி. இதில் ஸ்நானம் பண்ணுவோர் எள், இரும்பு, பொன், பருத்தி, கம்பளம், எருமை, எருமைக்கடா இவற்றைத் தானம் செய்தல் வேண்டும். இந்தத் தீர்த்த ஸ்நானத்தால் இம்மையில் குஷ்டநோய் முதலியனவும், மறுமையில் யமவாதையும் நீங்கும். இந்தத் தலத்தில் தவம் செய்த அம்பிகையின் தவச்சாலையைக் காத்திருந்த யமனால் உண்டாக்கப்பட்டதனால் இது யமதீர்த்தமென்று பெயர் பெற்றது. மற்றொரு காலத்தில் அகஸ்திய முனிவர் சிவபெருமானது அகோர வடிவத்தைக் காண எண்ணி, இந்தத் தீர்த்தத்தின் கரையில் தவம் செய்து, தம் எண்ணப்படியே பரமசிவன் காட்சி கொடுத்தருளப் பெற்றுப் பின்னும் வேண்டிய வரங்களைப் பெற்றனர். அகஸ்திய முனிவருக்குக் காட்சி கொடுத்த வண்ணமே இதன் கரையில் சிவபிரான் அகோர வடிவாக எழுந்தருளியிருக்கின்றனர். இதில் ஸ்நானம் பண்ணி இந்த மூர்த்தியைத் தரிசிப்போர் தம் இஷ்டசித்திகள் எல்லாவற்றையும் பெற்றுத் திருவருளுக்குப் பாத்திரராவர்.

(12) நிருதி தீர்த்தம் : இது யம தீர்த்தத்துக்கு மேற்கே மூன்று அம்புவீழ் எல்லையில் உள்ளது. இதற்குத் தேவதை விருபாக்ஷர். தீர்த்தபாலன் நிருதி. ரிஷி வசிஷ்டர். விருக்ஷம் கருங்காலி. இதில் ஸ்நானம் பண்ணுவோர் கூஷ்மாண்டம், உழுந்து, எண்ணெய், எள்ளன்னம் முதலியவற்றைத் தானம் செய்தல் வேண்டும். இதனால் ஜ்வரம் முதலிய நோயும், பைசாச முதலியவற்றால் உண்டாகும் வாதையும் நீங்கும். நிருதி இதனை உண்டாக்கி இதனால் யாவரும் நன்மையடையும் வண்ணம் சிவபெருமானிடத்து வரம் பெற்றனன். இதனால் இது நிருதி தீர்த்தமென்று பெயர் பெற்றது.

(13) வருண தீர்த்தம் : இது திருக்கோயிலுக்கு மேற்கே பதினைந்து அம்புவீழ் தூரத்தில் இருக்கிறது. இதற்குத் தேவதை சத்தியோஜாத மூர்த்தி. தீர்த்தபாலர் விநாயகக் கடவுள். ரிஷி பரத்துவாசர். விருக்ஷம் மகிழ். இதில் ஸ்நானம் பண்ணுவோர் தாம்பூலம், குதிரை முதலியவற்றைத் தானம் செய்யவேண்டும். இந்தத் தீர்த்த ஸ்நானத்தில் எவ்வித நடுக்கங்களும் நீங்கும். திரிபுரத்து அசுரர்களால் மிகுந்த துன்பமுற்ற தேவர்கள் இந்தத் தலத்தை அடைந்து காருண்யாமிர்த முதலிய தீர்த்தங்களில் ஆடிப் பின்பு இந்த வருண தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி இதன் கரையிலிருந்து தவம் செய்தனர் ; அப்போது ஸ்ரீ மகாலிங்க மூர்த்தி சத்தியோஜாத மூர்த்தியாக எழுந்தருளிக் காட்சி கொடுத்து, "தேவர்கள் சிறிதும் நடுக்கமடைய வேண்டாம்" என்று அபயமளித்து, அம்முப்புரங்களையும் அப்பால் நகைத்தெரித்துத் தத்தம் பதவியை அடையும்வண்ணம் தேவர்களுக்கு அருள் புரிந்தனர். இந்தக் காரணத்தால் இதன் கரையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்கு நடுக்கந் தீர்த்தவரென்னும் திருநாமம் வழங்குகிறது. இந்தத் தீர்த்தம் வருணனால் உண்டாக்கப்பட்டதாதலின் வருண தீர்த்தமென்று பெயர் பெற்றது.

(14) வாயு தீர்த்தம் : இது வருண தீர்த்தத்துக்கு வடக்கே ஓர் அம்புவீழ் தூரத்தில் உள்ளது. இதன் தேவதை வாயு. தீர்த்தபாலர்

முருகக் கடவுள். ரிஷி கண்ணுவர். விருக்ஷம் மகிழ். இதில் ஸ்நானம் பண்ணுவோர் கன்னிகா தானம், சத்திரதானம், சுவர்ணதானம் இவற்றைச் செய்தல் வேண்டும். இந்தத் தீர்த்த ஸ்நானத்தால் வாயு சம்பந்தமான நோய்கள் யாவும் நீங்கும். கிருகலன் என்ற ஒரு பிராமணன் தன் குலாசாரம் முழுவதையும் விட்டொழிந்து பதிதன், பதிதன் என்று எல்லாராலும் தள்ளப்பட்டான்; பின்பு வேடனாகப் பிறந்து இந்த ஸ்தலத்தை அடைந்தான்; இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தான்; அப்பால் மகா பரிசுத்தனாகிச் சிவபதமடைந்தான். இது வாயுவினால் உண்டாக்கப்பட்டதனால் வாயு தீர்த்தமென்று பெயர் பெற்றது.

(15) குபேர தீர்த்தம்: இது வாயு தீர்த்தத்துக்குக் கிழக்கே ஐந்து அம்புவீழ் எல்லையில் உள்ளது. இதன் தேவதை குபேரன். தீர்த்த பாலன் கண்டாகர்ணன். ரிஷி மார்க்கண்டேயர். விருக்ஷம் சண்பகம். இதில் ஸ்நானம் பண்ணுவோர் மோதகம், கரும்பு, சர்க்கரை, புஷ்பம், கோதுமை என்பவற்றைத் தானம் செய்தல் வேண்டும். குபேரன் இதை உண்டாக்கி இதில் ஸ்நானம் செய்வோர் எல்லாச் செல்வங்களையும் பெறுமாறு பரமசிவனிடத்து வரம் பெற்றான். இது குபேரனால் உண்டாக்கப்பட்டதனால் குபேர தீர்த்தமென்று பெயர் பெற்றது.

(16) ஈசான தீர்த்தம்: இது குபேர தீர்த்தத்துக்குக் கிழக்கே இரண்டு அம்புவீழ் தூரத்தில் உள்ளது. இதற்குத் தேவதை ஸ்ரீ சங்கரர். தீர்த்தபாலன் மாணிபத்திரன். ரிஷி வசிஷ்டர். விருக்ஷம் விளா. இதில் ஸ்நானம் பண்ணுவோர் ருத்திராக்ஷம், வஸ்திரம் இவற்றைத் தானம் செய்யலாம். இந்தத் தீர்த்த ஸ்நானம் நல்ல சந்தானத்தையும் சிவஞானத்தையும் அளிக்கும். மார்க்கண்டேய முனிவர் இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினமையால் சிவஞானமுற்று யமவாதையொழிந்து தீர்க்காயுளையும் பெற்றனர். ஈசானனால் உண்டாக்கப்பட்டமையின் ஈசான தீர்த்தமென்று இது பெயர் பெற்றது.

(17) கிருஷ்ண கூபம்: இது திருக்கோயிலுள் ஈசான திக்கில் கிருஷ்ணனால் உண்டாக்கப்பட்டது. இதில் அஷ்டமி திதியில் ஸ்நானம் பண்ணுதல் விசேஷம். இதனால் கடன் கொடாமை முதலிய பாவம் நீங்கும்; எல்லா ஐசுவரியங்களையும் பெறலாம். வாமனமூர்த்திக்கு மூன்றடி மண் கொடுக்க உடன்பட்ட மகாபலியைக் கொடாதே யென்று அசுர குருவாகிய சுக்கிராசாரியர் தடுத்தமையால் தம் கண்ணை இழந்தார். பிறகு இதில் ஸ்நானம் பண்ணிக் கண்ணைப் பெற்றார். இது சிவபெருமானை அபிஷேகித்தற் பொருட்டுக் கிருஷ்ணனால் உண்டாக்கப்பட்டதனால் இந்தப் பெயர் பெற்றது.

(18) கனக தீர்த்தம்: இது மூலஸ்தானத்துக்கு வடமேற்கில் உள்ளது. பரமபதியாகிய சிவபெருமானது திருவிழிகளினின்றும் பெருகிய பொன்னிறமுள்ள கருணை வெள்ளம் தன்னிடத்துப் பாயப் பெற்றமையால் கனக தீர்த்தமென்று பெயர் பெற்றது. இது காகத்துக்குப் பொன்னிறமருளி, உருத்திர வடிவம் அளித்தமையாற் காக தீர்த்தமெனவும் பெயர் பெறும். ஒருவன் இதை நோக்கினாலும், தொட்டாலும், எவ்வகைப் பாவத்தினின்றும் நீங்குவான். சந்திரன் குரு பத்தினியாகிய தாரையைப் புணர்ந்தமையால் தனக்குண்டான க்ஷயரோகத்தை இதிற் படிந்து மாற்றிக்கொண்டதுமன்றிப் பின்னும் சிவபெருமானுக்கு எட்டுத் திருமேனியில் ஒரு திருமேனியாகவும், இடக் கண்ணாகவும், முடியாகவும் விளங்கும் பேற்றையும் பெற்றான். துங்கபத்திரா நதி தீரத்திலுள்ள சப்த கோடீசுவர மென்னும் ஓர் அக்கிரகாரத்தில், சிவாராதனத்தில் சிறிதும் வழுவாத ஒரு பிராமணன் இருந்தான். அவன் ஒரு நாள் ஆராயாமல் புழு வெட்டுண்ட மலரைக் கொண்டு பூசித்ததனால், இரண்டு கண்களையுமிழந்து வசிஷ்ட முனிவர் நியமனத்தால் இந்த ஸ்தலத்தை அடைந்து, இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணிக் கண்களைப் பெற்றான். இவனே மதுரையில் விசுவாமித்திர முனிவனாகிப் பிரசித்தி பெற்றான்.

(19) கங்கா கூபம்: இது திருக்கோயிலுக்குள் மூலஸ்தானத்துக்கு வடகீழ்த் திக்கில் உள்ளது. இதன் வரலாறு முன்னே சொல்லப்பட்டது. இதைத் தொழுவோரும் புரோக்ஷணம் செய்து கொள்வோரும் எல்லாப் பாவங்களினின்றும் நீங்குவார்கள். இதில் ஸ்நானம் பண்ணுவோர் சிவலிங்கம், சிவிகை, ரதம், வெள்ளைக் குடை, சுவர்ணம் என்பனவற்றைத் தானம் செய்தல் வேண்டும். இதற்கு வடதிசையில் அர்த்தநாரீசுவரரும், அக்கினி திக்கில் விபண்டக முனிவரும், கீழ்த்திசையில் பைரவரும், நிருதி திக்கில் பிரமாவும் இதைக் காப்பவர்களாக எழுந்தருளியிருக்கின்றனர். இதன் மேற்கில் மருத விருக்ஷம் உள்ளது. இதன் சமீபத்தில் பிதிர்களைக் குறித்து எந்த விசேஷ காலத்திலாயினும் தர்ப்பணம் செய்யின், ஒரு வருஷத்திலுள்ள பிதிர் தினங்களாகிய தொண்ணூற்றாறு தினங்களிலும் காசி

க்ஷேத்திரத்தில் செய்ததாகப் பாவித்து அப்பிதிர்கள் மகிழ்வார்கள்.

(20) கருட தீர்த்தம்: இது திருக்கோயிலுக்கு எதிரே சிறிது தூரத்தில் உள்ளது. கருடன் இதில் ஸ்நானம் செய்து பராக்கிரமம் பெற்றுத் தேவலோகத்தில் சென்று அங்குள்ள எல்லாத் தடைகளையும் அகற்றி அமிர்தம் கொணர்ந்து நாககணங்களுக்கு ஈந்து அந்நாக கணங்களின் தாயாகிய கத்துருவுக்கு அடிமைப் பட்டிருந்த தன் தாயாகிய விநதையை அவ்வடிமைத்திறத்தினின்று மீட்டனன். இதனுல் இது கருடதீர்த்த மென்னும் பெயர் பெற்றது.

(21) வசுதீர்த்தம்: இது யமதீர்த்தத்துக்கு வடகீழ்த் திக்கில் உள்ளது. இதில் சுக்கில பக்ஷத்தின் அஷ்டமி திதியில் ஸ்நானம் பண்ணுதல் விசேஷம். இது வசுக்களால் உண்டாக்கப்பட்டமையால் இப்பெயர் பெற்றது.

(22) சூரிய தீர்த்தம்: இது வசு தீர்த்தத்திற்கு வடக்கே உள்ளது. இதில் ஆதிவாரம் உதய காலத்தில் ஸ்நானம் செய்தால் எல்லா நோய்களும் நீங்கும். இது சூரியனுல் உண்டாக்கப் பட்டதனுல் இப்பெயர் பெற்றது.

(23) மருத்துக்கள் தீர்த்தம்: இது சூரிய தீர்த்தத்துக்குப் பக்கத்தே இருக்கிறது. இதனுல் வாத நோய் நீங்கும். மருத்துக்கள் இதில் ஸ்நானம் பண்ணி, கர்ப்ப வாசம் செய்யும்போது இந்திரனுல் அறுபட்ட தம் குறையுடல் வளரப் பெற்றுர்கள். இதனுல் இஃது இப்பெயர் பெற்றது.

(24) நரசிங்க தீர்த்தம்: இது வருண தீர்த்தத்துக்குத் தெற்கே உள்ளது. இதில் நீராடுவதனுல் குஷ்ட நோய் நீங்கும். இது நரசிங்க மூர்த்தியால் உண்டாக்கப்பட்டமையின் இப் பெயர் பெற்றது.

(25) நந்தி தீர்த்தம்: இது வருண தீர்த்தத்துக்குக் கிழக்கே உள்ளது. இதில் ஸ்நானம் பண்ணுவோர் சிவஞானமடைவர். இது திரு நந்தி தேவரால் உண்டாக்கப்பட்டமையின் இப் பெயர் பெற்றது.

(26) துரோண தீர்த்தம்: இது வருண தீர்த்தத்துக்கு மேற்கே உள்ளது. இதில் துரோணுசாரியர் ஸ்நானம் பண்ணி அசுவத்தாமா என்னும் புத்திரனைப் பெற்றுர். இதனுல் இஃது இப்பெயர் பெற்றது.

(27) இராகவ கூபம்: இஃது அம்பிகையின் சந்நிதியில் உள்ளது. இராவணனைக் கொல்லுவதற்குச் சென்றபோது, இந்த ஸ்தலத்தை அடைந்த இராகவனுல் உண்டாக்கப்பட்டதாதலின் இஃது இப்பெயர் பெற்றது. இதில் ஸ்நானம் பண்ணுவோருக்குச் சத்துருபயம் நீங்கும்.

(28) சுர தீர்த்தம்: இது வருண தீர்த்தத்துக்கு வடக்கே பதினெட்டு அம்புவீழ் எல்லையில் உள்ளது. இது தேவர்களால் உண்டாக்கப்பட்டதனுல் இப்பெயர் பெற்றது. இது சிவப்பேற்றை அளிக்கும்.

(29) முனிதீர்த்தம்: மூலஸ்தானத்துக்குத் தெற்கே உள்ளது. இதில் ஸ்நானம் பண்ணுவோர் சிவகிருபைக்கு உரியராவர்.

(30) கச்சப தீர்த்தம்: இஃது இந்த ஸ்தலத்துக்கு உத்தர திசையிலுள்ள மகாமகிமை பொருந்திய காவிரி நதியின் வட புறத்திலுள்ள ஒரு துறை. இதற்குத் தேவதை வாம தேவர். தீர்த்தபாலர் வீரபத்திரர். ரிஷி கச்சபர். விருக்ஷம் மா. இதில் ஸ்நானம் செய்வோர் எள்ளன்னம், சிவிகை, தானியங்கள் முதலியவற்றைத் தானம் செய்தல் வேண்டும். இதில் ஸ்நானம் பண்ணுவோர் மறுமையில் அரசராவர். கச்சப முனிவர் நாள்தோறும் இதில் ஸ்நானம் பண்ணிப் பெருந்தவம் செய்து, ஸ்ரீ மகாலிங்கப் பெருமான் வாம தேவமூர்த்தியாக எழுந்தருளிக் காட்சி கொடுக்கத் தரிசித்து, "எம்பெருமானே! இந்தத் திருவுருவத்தோடு இவ்விடத்தே எக்காலத்தும் எழுந்தருளியிருத்தல் வேண்டும்" என்று பிரார்த்தித்தார். பரமசிவன் அவ்வாறே எழுந்தருளி யிருக்கின்றனர். அம்மூர்த்தியைத் தரிசித்துப் பேறு பெற்றவர் அநேகர். கச்சப முனிவர் தவம்புரிந்து பேறு பெற்றதனுல் இது கச்சப தீர்த்தம் என்ற பெயர் பெற்றது.

(31) கௌதம தீர்த்தம்: இது கச்சப தீர்த்தத்துக்கு மேற்கே ஓரம்பு வீழ் தூரத்தில் உள்ளது. தீர்த்தபாலர் சண்டேசுரர். ரிஷி கௌதமர். இதில் ஸ்நானம் பண்ணுவோர் பூமி, கறவைப்பசு இவற்றைத் தானம் செய்தல் வேண்டும். அகல்யை இந்திர சம்பந்தத்தால் தனக்கு நேர்ந்த தோஷத்தை இதில் ஸ்நானம் செய்து நீக்கிப் புனிதமானுள்.

(32) கல்யாண தீர்த்தம்: இது காவிரியின் தென்புறத்தே, மூன்றம்பு வீழ் அகலம் கிழக்கு மேற்கெல்லையில் உள்ள ஒரு துறை. இதன் தேவதை மத்தியார்ச்சுனேசுவரர். தீர்த்தபாலர் திருநந்திதேவர். ரிஷி உரோமசர். விருக்ஷம் அரசு. இதில் ஸ்நானம் செய்வோர் பசு, பொன் முதலியவற்றை அந்தணர்களுக்குத் தானம் செய்தல் வேண்டும். இஃது எல்லாத் தீர்த்தங்களிலும் உத்தமமாகச் சொல்லப்படுகிறது.

இந்த ஸ்தலத்தில் காசிபர் முதலிய முனிவர்களுக்குச் சிவ தத்துவத்தை உபதேசித்த ஸ்ரீ அகஸ்திய மகாமுனிவருடைய பூர்வப் பிரார்த்தனையை நிறைவேற்றுவதற்கு ஏக நாயகராகிய பரமசிவன் திருவுளங்கொண்டிருப்பதை உமா தேவியார் அறிந்து, இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி விதிப்படியே பூரகர்மா, ஆதி சக்தி பூசை இவற்றைச் செய்து அவரை விவாகம் செய்துகொண்டார். அகஸ்திய முனிவர் அந்தத் திருமணக் கோலத்தைத் தரிசித்துப் பேரானந்தப் பெருவாழ்வடைந்தார். இதனால் இது கல்யாண தீர்த்தமென்று வழங்கப்பட்டது.

ஆகாயத்தில் விமானத்தில் எழுந்தருளியுள்ள நித்திய கல்யாணி ரூபிகளாகிய பார்வதி பரமேசுவரர்கள் இந்த மஹா நதியினுடைய இரண்டு தீரங்களிலும், ஐந்து யோசனை அளவாக இருந்து தவம் செய்யும் முனிகணங்களின் சிரத்தா பக்திகளையும், தவச் செயல்களையும் கண்டு மகிழ்வுறுகையில், அவர்கள் திருவிழிகள் பொழிந்த ஆனந்தபாஷ்பம் இவ்விடத்தே வீழ்ந்தமையால், முன்னரே கல்யாண வடிவினதாகிய காவிரியிலுள்ள இந்தத் துறை கல்யாண தீர்த்தமென்று பெயர்பெற்றதாகக் கூறுவதுமுண்டு. இதையல்லாமல் தன்னிடத்து ஸ்நானம் பண்ணினோர் எல்லா மங்களங்களையும், முக்தியின்பத்தையும் எளிதினடையச் செய்தாலும் இது கல்யாண தீர்த்தமென்று சொல்லப்படும். இதில் விதிப்படி ஸ்நானம் பண்ணிக் கரையிலிருந்து ஸ்ரீ பஞ்சாக்ஷர ஜபம் பண்ணுவோர் சிவசாயுஜ்யத்தை அடைவர். கின்னரர் முதலிய தேவகணத்தினர் யாவரும் தினந்தோறும் இதில் ஸ்நானம் பண்ணித் தத்தம் நியமங்களை முடித்துச் சிவார்ச்சனை செய்து எப்போதும் மகிழ்ச்சியோடிருப்பர். இதில் ஸ்நானம் பண்ணுவதற்கு எல்லாக் காலமும் உரியனவாயினும் சோமவாரம் விசேஷம்; அதிலும் ஆதிவாரம் விசேஷம்; அதிலும் அமாவாசை விசேஷம்; அதிலும் சூரியோபராகம், சந்திரோபராகம் மிகவும் விசேஷமாம். எல்லாவற்றிலும் மிகச் சிறந்தது தைப்பூசம். அதிலும், குருவாரத்துடன் கூடிய புஷ்யநாள் மிகவும் விசேஷம். இந்தக் குரு புஷ்ய தினத்தில், கங்கை முதலிய எல்லாப் புண்ணிய தீர்த்தங்களும் இதில் வாசம் செய்கின்றன. இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினால் கோடி ஜன்மங்களில் செய்த பாவம் நீங்கும். இந்தக் காரணத்தால் இந்தக் கல்யாண தீர்த்தத்துக்குப் புஷ்ய தீர்த்தமென்னும் ஒரு பெயர் உண்டு. இதில் ஸ்நானம் பண்ணிப் பேறு பெற்றோர் பலர். அவருட் சிலர் சரித்திரம் வருமாறு:

(i) மகா பரிசுத்தனாகிய பரிட்சித்து மகாராஜனைக் கடித்துக் கொன்றமையால் கார்க்கோடகன் தனக்குண்டான தோஷத்தை இதில் ஸ்நானம்பண்ணி உய்ந்தனன்;

(ii) கலிபுருஷனால் அளவற்ற துன்பமுற்ற நள மகாராஜன் இதில் ஸ்நானம் பண்ணிப் பின்பு தன் மனைவியையும், மக்களையும், தேசத்தையும் அடைந்து வாழ்ந்தனன்;

(iii) தம்மைக் கண்டு சூதமுனிவர் எழவில்லை என்று பலராமன் சினந்து அவரைக் கொன்ற தோஷத்தை இந்தத் தீர்த்த ஸ்நானத்தால் போக்கினர்;

(iv) தைப்பூசத்தில் இதிற் படிந்தமையாலே பகீரதன் பெறுதற்கரிய ஆகாய கங்கையைப் பூமியில் வருவித்துத் தன் முன்னோரை நற்கதியடைவித்தனன்;

(v) மிகக் கொடியோனாகிய ஒருவன் சிவராத்திரி புண்ணிய காலத்தில் இதில் முழுகித் திருக்கோயிலிற் சென்று சிவத்திரவியத்தை அபகரித்துக் கொண்டு வெளியே வந்தபொழுது மரணமடைந்தான். உடனே அவனைக் கிங்கரர்கள் யமனிடம் கொண்டுபோய் விட யமன் அவனை நோக்கி, "நீ சிவராத்திரியில், கல்யாண தீர்த்தத்தில் முழுகினதால், எமது தண்டனைக்கு உரியரல்லன்; கைலையங்கிரிக்குச் செல்வாயாக" என்று விட்டு விட்டனன்;

(vi) விதேக நாட்டிலே, காபில மென்னும் ஊரிலுள்ள ஒரு பிராமணன் சில ஸ்திரீகளையும் சில பாலர்களையும் கொன்று சம்பாதித்த ஆபரணங்களைக் கொண்டு ஐந்து ஸ்திரீகளை விவாகம் செய்துகொண்டான். அவனுடைய பாவ மிகுதியால் அந்த ஐவரும் இறந்த பின்பு கள் விற்போர் குலத்தினளாகிய ஒருத்தியைச் சேர்ந்திருந்தான். ஒரு குழந்தையைப் பெற்று அவளுமிறக்க, "இதுவன்றோ இவள் மரணத்துக்குக் காரணமாயிற்று" என்று அக்குழந்தையைக் கிழித்து ஆற்றில் விட்டனன். பின்பு அப்பாவங்களால் பைத்தியம் பிடித்து முயலகன் (வலிப்பு) முதலிய கொடிய வியாதிகளை அடைந்து, எல்லாராலும் இழிவுபடுத்தப்பட்டு மிகவும் துன்பமுற்று, ஒருநாள் தற்செயலாய் இத்தலத்தை அடைந்து வீதியில் நோயினால் வசமற்றுக் கிடந்தனன். அன்றைய தினம் தைப்பூசமாதலால், புஷ்ய தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி வருவோர்களுள்ளே சில பிராமணர் இவனைக் கண்டு இரங்கி எடுத்தபோது, அவர்கள் கையீரம் பட்டதனால்

இவன் பித்த மயக்கமற்று உணர்ச்சியுற்று அவர்களை வணங்கிச் சென்று புஷ்ய தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணிப் பரிசுத்தனுகி மருதவாணரைத் தரிசித்துக்கொண்டு சில நாளிலிருந்து முத்தி பெற்ருன்.

(33) சேஷ தீர்த்தம்: இது காவிரியின் தென்புறத்திலுள்ள ஒரு துறை. ஆதிசேஷன் ஒரு காலத்தில் இந்தப் பூமியைத் தாங்கும் வன்மை இல்லாதவனுகி மெலிந்து இந்த ஸ்தலத்தை யடைந்து இத்துறையிற் படிந்து வன்மை பெற்று மகிழ்ச்சியுற்றுச் சென்ருன். இதனுல் இஃது இப்பெயர் பெற்றது.

(34) கந்த தீர்த்தம்: இது சேஷ தீர்த்தத்துக்குக் கிழக்கே உள்ளது. தேவகண்டகனுகிய சூரபன்மாவை வதம் செய்தற்பொருட்டு வீரபாகு தேவர் முதலிய தம்பிமாரோடும், லட்சம் வீரரோடும், இரண்டாயிரம் வெள்ளம் பூதகணங்களோடும், தேவர்களோடும் எழுந்தருளிய குமாரக் கடவுள் இதில் ஸ்நானம் பண்ணி மருதவனேசுரரைத் தரிசித்து அருள்பெற்று வீரமகேந்திர மடைந்து வெற்றி பெற்றனர். இதனுல் இத்துறை கந்த தீர்த்தம் என்று பெயர் பெற்றது.

(35) ஐராவத தீர்த்தம்: இது காவிரியின் தென்புறத்திலுள்ள ஒரு துறை. ஐராவதம் இத்துறையில் படிந்து துர்வாச முனிவர் சாபத்தால் தனக்குண்டான காட்டானை வடிவம் நீங்கப் பெற்றது. இதனுல் இத்துறை ஐராவத தீர்த்தமென்று பெயர் பெற்றது. இதற்கு முன்னமே இது விநாயக தீர்த்தமென்று வழங்கப்பட்டது.

## வரகுண பாண்டியர் வழிபட்டது

பாண்டி நாட்டிலே மதுராபுரியில் வைதிக நெறியும் சைவ நெறியும் தழைத்தோங்க அரசியற்றிய வரகுண பாண்டியர் ஒருநாள் காட்டுக்குச்சென்று வேட்டையாடி விரைந்து திரும்பி வருகையில் சூரியாஸ்தமனமாயிற்று. அப்போது வழியில் அயர்ந்து கிடந்த ஒரு பிராமணன் அவர் ஏறிய குதிரையினுல் மிதிக்கப்பட்டு இறந்தான். அரசர் அதனை அறியாமல் தம் நகரத்தை அடைந்தார். பிரமஹத்தி அவரைப் பற்றி மிகவும் வருத்தியது. அதனுல் அவர் மனம் நொந்து பல தான தருமங்களைச் செய்து வந்தார். ஒன்றினுலும் அது தீரவில்லை. பின்பு தமது குல தெய்வமாகிய சோமசுந்தர மூர்த்தியைப் பிரார்த்தித்து வந்தார். ஒருநாள் சிவபெருமானுடைய திருவருளினுலே, "வரகுண! இன்னும் சிலநாளில், நீ மத்தியார்ச்சுனம் அடைவை; அப்போது இது தீரும். கவலைப்பட வேண்டாம்" என்று ஆகாயத்தில் ஓர் அசரீரி உண்டாயிற்று. மன்னர் அதுகேட்டு மகிழ்ச்சியடைந்தார். சிலநாட்களுக்குப் பின் சோழராஜன் யுத்தம் செய்வதற்கு வர, அரசர் அவனேடு யுத்தம் செய்து அவனைத் துரத்திக்கொண்டே வந்து இந்த ஸ்தலத்தை அடைந்தார். அடைந்த தினம் குருபுஷ்யமாதலால் மிகவும் மகிழ்வுற்று விதிப்படி புஷ்ய தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி அளவிறந்த தானங்களை அந்தணர்களுக்கு அளித்தார். பின்பு காருண்யாமிர்தத்திலும் நீராடித் திருக்கோயிலுக்குள்ளே செல்கையில் அப்பிரமஹத்தி நடுநடுங்கி வெளியே நின்றுவிட்டது. அரசர் மகிழ்ந்து விதிப்படி சுவாமியையும் அம்பிகையையும் தரிசித்து இந்த ஸ்தலத்திலே என்றும் வசித்தல் வேண்டும் என்ற குறிப்புடையவராகிச் சிவபெருமான் கட்டளைப்படி மேலை வாயில் வழியே சென்று, திருவீதியில் ஒரு பக்கத்தில் ஒரு மாளிகை கட்டுவித்துக் காலந்தோறும் சென்று சுவாமி தரிசனத்தோடு நூறு அசுவமேதப் பிரதட்சிணமும் செய்துகொண்டு அம்மாளிகையில் தங்கி அரசியற்றுவாராயினர்; பின்பு மேலைக் கோபுரத்தைத் தம் பெயராற் கட்டுவித்துத் திருக்கோயிலுக்கு வடக்கே சோமசுந்தரக் கடவுளுக்கு ஓர் ஆலயம் இயற்றுவித்து இன்னும் பற்பல பணிகள் செய்து வந்தார்.

இப்படியிருக்க ஒரு தினம் சென்று நமஸ்காரம் செய்யும்போது மருதவாணர், "வரகுண! கைலையங்கிரியின் கொடுமுடியை யொப்ப ஒரு மதில் கட்டுவித்து அதனை வலஞ் செய்க; அதைச் செய்யுமொரு பிரதட்சிணம் ஆயிரம் பிரதட்சிணத்துக்கு ஒப்பாகும். நமக்கு மிக உவப்பாம்" என்றருளக் கேட்டு அரசர் அவ்வாறே புரிவித்து வலம் வருவாராயினர்.

பின்னெரு நாள், கொடிய கள்வனெருவனைச் சிரச்சேதம் செய்தற் பொருட்டுக் காவற்காரர்கள் இறுகக் கட்டிக் கொண்டு செல்லுகையில், அவன் நெற்றியில் திருநீறு விளங்குவதைக் கண்டு, கட்டை அவிழ்த்து விடுவித்து அவனுக்கு வேண்டும் பொருளை அளித்து நயமொழி புகன்று விடுத்தனர்.

வேரெருரு நாள், இரவிலே நரிகள் ஊளையிடுதலைக் கேட்டு, இவை ஆலவாயானை அழைக்கின்றன வென்று மனமுருகிப் பிடித்து வருவித்து நல்ல வஸ்திரங்களால் அவற்றைப் போர்த்து விடுத்தனர்.

மற்றொரு நாள் ஒரு தடாகத்தில் தவளைகள் சப்தித்தலைக் கேட்டு, "இவை ஹரஹர என்று சப்திக்கின்றன" என்று கருதி, இரத்தினங்களை

யும் பொன்களையும் அத்தடாகத்தில் வாரியிறைத்தனர்.

ஒருநாள் திருமஞ்சன தைலத்துக்காக உலர்த்திய எள்ளைக் கோயில் வேலைக்கார னொருவன் எடுத்து உண்பதைக் கண்டு, "நீ இதை உண்ணலாமோ?" என்றனர். அவன் 'எள்ளுண்ட கடனைத் தீர்க்க வேண்டும்' என்னும் பழமொழிப்படி "மருதவாணர்க்கு மறுபிறப்பிலும் அடிமையாய் வருதற்பொருட்டு உண்கின்றேன்" என்று கூற, "அப்படியாயின், எனக்கும் இதிற் சிறிது கொடு" என்று சொல்லி அவன் எச்சில் எள்ளை வாங்கி யுண்டனர்.

அப்பால் ஒரு நாள், தலையோடொன்று இந்த க்ஷேத்திர எல்லையில் கிடத்தலைக் கண்டு மன முருகி அதனைத் தமது மலர்க்கரத்தால் எடுத்துக் கண்ணீர் வெள்ளத் தாலாட்டி, "உம்மைப் போல் தமியேனும் இந்த ஸ்தலத்து எல்லையில் என் தலை கிடக்கப் பெறுவேனோ?" என்று மன முருகினார்.

பின்னொரு நாள், திருக்கோயிலின் முன்னே நாய்மலம் கிடத்தலைக் கண்டு, "இதை எடுப்பவர்க்கு என் தேசத்தில் காற் பங்கு கொடுப்பேன்" என்று எண்ணி முதற் பிரதட்சிணமும், அஃது எடுக்கப்படாமையால், "அரைப் பங்கு கொடுப்பேன்" என்று இரண்டாம் பிரதட்சிணமும், "முக்காற் பங்கு கொடுப்பேன்" என்று மூன்றாம் பிரதட்சிணமும், "முழுமையும் கொடுப்பேன்" என்று நான்காம் பிரதட்சிணமும் செய்தார். அதுவோ எடுக்கப்படவில்லை. அது கண்ட அரசர் "என் தேசம் எனக்கே உரியது" என்று சொல்லி அதைத் தமது திருக்கரத்தினால் எடுத்துப் புறத்தே எறிந்தார்.

வேறொரு நாள், திருவீதிப் பிரதட்சிணம் செய்யும்போது, பழுத்த வேப்ப மரங்கள் வெயிலில் நிற்றலைக் கண்டு, "அந்தோ! சிவலிங்கத்தை யொத்த திருவுருவங்கள் பலவற்றைத் தாங்கிய இவை வெதும்புகின்றனவே" என்று இரங்கி அம்மரங்களுக்கெல்லாம் மேற்கட்டி கட்டுவித்தனர்.

பின்னர் ஒரு நாள், தாம் விவாகம் செய்து கொண்ட சோழராஜன் புத்திரியை இரவில் அந்தப்புரத்தில் கண்டு, "இவள் எம்பெருமானுக்கே உரியவள்" என்று நினைத்து, உடனே ஒருவரும் அறியாவண்ணம் அழைத்துக் கொண்டு ஆலயத்தை அடைந்து திருமுன் நின்று, "மருதவாணா! இப்பெண்ணை அங்கீகரித்தருள்க!" என்று பிரார்த்தித்துக் கதவைத் தட்டி அழைக்கவே சிவபெருமான் கதவைத் திறந்து, "வரகுணா! வருக" என்றழைத்தார். அப்போது பாண்டியர், "ஸ்வாமி! இப்பெண்மணியை அங்கீகரித்தருள்க!" என்று பிரார்த்திக்க, எம்பெருமான், வலக்கை மாத்திரம் வெளியே தெரிய அப்பெண்ணை உட்கொண்டருளினார். அரசர் அது கண்டு, "இந்தக் கை மாத்திரம் எளியேனால் தீண்டப்பட்டதென்றோ நீக்கி யருளினீர்?" என்று மனம் தளரவே, சிவபெருமான், "உனது அன்பை உலகத்தார் அறியும்படி இக்கையை நாளை அங்கீகரிப்போம்" என்று கட்டளையிடுதலும் அரசர் மகிழ்ந்து வெளியே வந்தார். திறக்கப்பட்ட கதவுகள் முன் போலவே மூடப்பட்டிருந்தன. அரசரையும் தேவியையும் மனையிலுள்ளோர் தேடிப் பின்பு அரசரை மட்டும் கண்டு, "தேவியார் எங்கே?" என்று வினவ, அவர், "மகாலிங்க மூர்த்தியினிடத்தில் இருக்கிறார்" என்றார். அவர்கள் ஆச்சரியமடைந்து பூசிப்பவர்களோடு உள்ளே புகுந்து மகாலிங்கப் பெருமான் முடிமீது கை விளங்குதலைக் கண்டார்கள். சிவபிரான் உடனே அக் கையை உள்ளே வாங்கி யருளினர். அதுகண்ட அரசர் மகிழ்ச்சி யடைய, மற்றவர்கள் அச்சமும் அதிசயமும் அடைந்தார்கள். தேவர்கள் புஷ்பமாரி பெய்தார்கள்.

இவ்வாறு வரகுணர் பல நாள் இந்நகரில் வசித்துக்கொண்டிருந்து மருதவாணர் கட்டளையின்படி தமது மதுராபுரியை யடைந்து சோமசுந்தரமூர்த்தி சிவலோகம் காட்டியருளத் தரிசித்துப் பலநாள் அரசாட்சி செய்து சிவபத மடைந்தனர்.

## ஹம்ஸத்துவசன் பேறு பெற்றது

சோழ நாட்டில் உறையூரிலே நற்குண நற்செய்கை இயல்பாகவே அமைந்து அரசாண்ட ஹம்ஸத்துவசச் சோழ னென்னும் ஒருவன் இருந்தான். அவன் கங்கா ஸ்நானம் பண்ணும் விருப்பங் கொண்டான். தான் சென்று படிந்து வரக் கூடாமையை நினைந்து வருந்தி, தனக்கு மித்திரனாகிய பிராமணன் ஒருவனை அழைத்து, "நீர் என் பொருட்டுச் சென்று கங்கா ஸ்நானம் பண்ணி அந்தப் பலனை எனக்குத் தருக" என்று பிரார்த்தித்தனன். அந்தப் பிராமணன், "என் மனைவி இளையாளாதலாலும் வேறு துணை இல்லாமையாலும் நான் செல்வதற்கு இயலாது" என்றனன். அரசன், "உமது மனைவியை நான் பாதுகாப்பேன். நீர் கவலை அடைய வேண்டாம்" என்று உறுதிமொழி கூறிப் போகச் செய்து, தான் சொன்னபடியே அவன் மனைவி

யைப் பாதுகாத்து வந்தனன். காசிக்குச் சென்ற அந்தணன் கங்கா ஸ்நானம் செய்து, காவடி தாங்கி உறையூரை யடைந்து மறுநாட் காலையில் அரசனைக் காணலாமென்று எண்ணி, அன்றிர வில் தன் மனைக்குச் சென்று காசிக்குப் போய் வந்த வரலாறுகளை மனைவிக்குக் கூறிக்கொண் டிருந்தான். இங்கே இப்படி யிருக்க, முன் போலவே பாதுகாத்தற் பொருட்டு இவ்வந்தணன் வீட்டுப் புறம்பே வந்த அரசன், 'இவ்வீட்டிற்குள் ஆடவர் சப்தம் ஏது?' என்று ஐயுற்று, அந்நிய னொருவன் வந்துள்ளான் எனத் துணிந்து கடுங் கோபம் கொண்டு சுவரேறி வீட்டினுள்ளே சென்று தன் கையிலிருந்த வாளாயுதத்தால் அவனைக் கொன்று, பின்பு மித்திரன் என அறிந்து வருந்தினன். பிரமஹத்தி அவனைப் பற்றியது. அப்பால் அரசன் அதனால் அளவில் லாத துன்பமுற்று, அதனைப் போக்குவதற்கு வழி தெரியாமல் தடுமாறிச் சில பெரியோருடைய கட்டளையின்படி ஸ்தல யாத்திரை செய்து கொண்டே வந்தான். அப்படி வரும்போது இந்தத் தலத்தை யடைந்து வருண தீர்த்தத்தில் நீராடி அங்குள்ள ஶ்ரீகம்பகரேசரால் தன் நடுக்கம் முற்றும் ஒழிந்து, பின்பு புஷ்ய தீர்த்தத் திலும் காருண்யாமிர்தத்திலும் ஸ்நானம் செய்து கீழைக் கோபுர வாயில் வழியாகத் திருக் கோயி லுக்குள்ளே செல்லுகையில் பிரமஹத்தி கோபுரத் துக்கு வெளியே நின்றுவிட்டது. பின்பு அரசன் உவப்புற்றுச் சுவாமி தரிசனம் செய்து பல பணிகள் இயற்றிப் பல வரங்கள் பெற்றுத் தன்னகரை அடைந்து வாழ்வுற்றான்.

## வீரசேனன் பேறு பெற்றது

தாம்பிரபர்ணி தீரத்திலுள்ள ஒரு நகரின் அரச னாகிய வீரசேனன் என்பவன் வேட்டையாடும் போது மிருகத்தைக் குறித்து எய்த பாணங் களுள் ஒன்று குறி தப்பிச் சென்று ஒரு பிரா மணனைக் கொன்றது. பின்பு அரசன் பிரம ஹத்தியால் பிடியுண்டு வருந்தி இந்தத் தலத்தை அடைந்து புஷ்ய தீர்த்தத்தில் நீராடித் திருக் கோயிலுக்குள்ளே செல்லுகையில் பிரமஹத்தி நீங்கி முன்னவரோடு கூடியது. பின்பு அரசன் சுவாமி தரிசனம் செய்து தனது நகரத்தை அடைந்தான்.

## சித்திரகீர்த்தி பாண்டியன் மகப்பேறு பெற்றது

பாண்டிய நாட்டில் மதுராபுரியில் முன்னம் அரசாண்ட சித்திரகீர்த்தி பாண்டியன் என்பவன் புத்திரன் இல்லாமையால் மனம் வருந்தினன். சாபாலி முனிவரால் தனது முற்பிறப்பின் வர லாற்றை அறிந்து, அவரால் ஏவப்பட்டு அவன் இந்தத் தலத்தை அடைந்து காருண்யாமிர்தத் திலும் புஷ்ய தீர்த்தத்திலும் ஸ்நானம் பண்ணி மருதவனேசரைத் தரிசித்துச் சில நாளில் நல்ல புத்திரனைப் பெற்றான்; பின்பு பல நாள் இந்தத் தலத்தில் வசித்துக்கொண்டே யிருந்து மருத வாணருக்குப் பங்குனித் திருவிழாச் செய்வித்துத் தன் நகரை அடைந்தான்.

இன்னும் ஶ்ரீ மகாலிங்கப் பெருமான் ஒரு காலத்தில் பொதியிலிருந்த உலர்ந்த மீன்கள் உயிர் பெற்றுத் துள்ளித் தடாகத்தில் குதிக்கும் படி அருளினர்; செங்கல்லைப் பொன்னாக்கினர். தனக்குப் புத்திரன் இல்லாமையால் பொற் பதுமை ஒன்று செய்வித்து அதனைப் புத்திர னாகப் பாவித்துப் பாராட்டிக்கொண்டிருந்த ஒரு சோழன் பிரார்த்திக்க, அந்தப் பிரதி மைக்கு உயிர் அளித்து, உயிர்பெற்ற அந் தப் பொன்னுருவச் சோழனுக்கு உடனே முக்தியளித்து அச்சோழனுக்கு மகப்பேறு அளித்தார். ஒரு சிவயோகியினுடைய ஆகார சேஷம் புசித்து வந்த நாயொன்றைப் பூர்வ ஞானத்தோடு அரச கன்னிகையாகப் பிறக் கும்படி செய்து முக்தியளித்தார். தம் குரு மரண காலத்தில் தரையில் எழுதிய மஹா வாக்கி யத்தை ஒரு கழைக்கூத்தப் பெண் ஓலையில் எழுதிக் காதில் போட்டுக்கொள்ள, அதனைப் பெறுதற் பொருட்டு அவளுக்குப் பல நாள் அடிமை வேலை செய்து, அதனைப் பெற்ற திரியம்பக ரென்னும் ஒரு வேதியர் பெருமான் இந்தப் புஷ்ய தீர்த்தத்தில் நீராடத் தொடங்கிய போது வேதியர்கள், "ஸ்வாமி! இவர் தைப்பூச மாடல் தகுமோ!" என்று வினவ, "திரியம்பகன் தைப்பூசம் ஆடல் தகும் தகும் தகும்" என்று மூன்று முறை மொழிந்தனர். மருதவாணரது திருவிளையாடல்கள் இன்னும் பல உள்ளன.

## பிரதக்ஷிண மகிமை

முதலாவது அசுவமேதப் பிரதக்ஷிணம். இது திருக்கோயிலினது வெளிமதிலின் உள்ளதாக வலம் வருதலாம். இதன் மகிமைகளைப் பின் வரும் பாடல்களால் அறிக:

[எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்]

அதினுள் திசைவலம் வருவோர் பெறுவர்க
ளணிநீ டிலகிடு முயர்செல்வம்
மதிநன் குறுவர்கண் மகவுற் றிடுவர்கண்
மருவார் தமைவென் றிடுவார்கள்

சதிர்பெற் றிடுவர்களி பிணியற் றிடுவர்கள்
சகமெச் சுறுவர்க ளிவையன்றிப்
பதமொன் றவனுற மதனுக் கியல்புறு
பரிமெ தப்பல னடைவார்கள். (1)

மகரா லயம்வளை தருமிப் புவிதனை
வலம்வந் திடினுறு வதுமெய்தும்
புகழ்வா ரணமுக விறைவே லவன்மறை
புகல்வோ ரநுமதி முனமெய்தி
மிகுமா தரவொடு செயினெய் திடுபயன்
விரைவெய் திடும்வெங் கொலையாதி
இகழ்பா தகவினை யவர்செய் தனவுள
யாவுந் தெருமர லுடனேகும். (2)

வருநா ளொருமண் டலமரை மண்டல
மருவொரு கான்மண் டலவெல்லை
ஒருநா ளிருபதின் மேலா றிருதொகை
யொரே ழெனுமூன் றினுளொன்று
கருதா வவரவர் வன்மைக் கிசைதரு
கணிதம் பெறவந் திடல்வேண்டும்
ஒருவா றதில்வல னுற்றோர் களைவந்
துழிவந் துழியறை கிற்பாமால். (3)

கையா மிணைமலர் குவியா மனமொடு
கருணைத் திருமுக மலர்வெய்த
மெய்யா லொருவலஞ் செய்வா ரதனிடை
வினைநீத் துளமெண் ணியவெய்திப்
பையா டரவணி யெம்மா னுறைதரு
பதியுற் றுறைவர்கண் மகிழ்வோடு
தையா மதியினில் விழவிற் புரிதரு
தகையோர் பெறுபலன் புகல்வார்யார்? (4)

## இந்தப் பிரதக்ஷிணம் செய்து பேறு பெற்றோருள்ளே சிலர் சரித்திரம் வருமாறு:

(1) சூரியகுலத்தரசனாகிய யுவனாசுவன் மகப்பேறு கருதித் தனது குருவாகிய வசிஷ்ட முனிவரோடு இந்தத் தலத்தையடைந்து புத்திர காமேஷ்டி யாகம் செய்து தன் மனைவிக்குக் கருப்பமுண்டாதற் பொருட்டு அம்முனிவர் மந்திரித்து வைத்த தீர்த்தத்தைத் தாகமிகுதியால் அறியாமற் குடித்துக் கருப்பமடைந்து கருப்பசிசு வயிற்றைக் கிழித்துக்கொண்டு வெளிப்பட்டமையால் மூர்ச்சை யடைந்து விழுந்து, ஆயுள்வேதியர்கள் கிழிந்த அவ்வயிற்றைப் பொருத்தித் தைத்துப் பல மருந்துகளைக் கொடுக்க மூர்ச்சை தெளிந்து, அவ்வயிற்றுப் புண் ஒன்றாலும் தீராமையால் இந்த அசுவமேதப் பிரதக்ஷிணம் செய்து, புண் ஆறப்பெற்றுப் பின்பு வசிஷ்ட முனிவரோடும், குழந்தையோடும், மற்றவர்களோடும் தனது நகரத்தை அடைந்து இன்புற்றிருந்தான்.

(2) மேற்கூறிய யுவனாசுவனுடைய வயிற்றைக் கிழித்து வெளிப்பட்ட மாந்தாதா, தனக்குத் திறைகொடாத கலிங்கத் தேசத்தரசனோடு போர் செய்து புறங்கொடுத்தோடிய அவ்வரசனைக் கொன்று பழியடைந்து சோர்வுற்று வசிஷ்ட முனிவரால் அறிவுறுத்தப்பட்டு இந்தப் பிரதக்ஷிணம் செய்து, மருதவாணர்க்கு வசந்த மகோத்ஸவத் திருக்கல்யாணம் புரிவித்து, விளைநில முதலியவற்றை ஈந்து, சிவபிரான் ஆகாசவாணியால், "அரசனே! உனது பாவம் நீங்கியது. நீ நகரத்தையடைந்து அரசு புரிக; பின்பு நமதுலகடைக!" என்று கூறியருளக் கேட்டுத் தனது நகரை அடைந்து, பலநாள் அரசாண்டு சிவாஞ்ஞையின்படி சிவலோகமடைந்து பேரின்பமுற்றான்.

(3) தொண்டைநாட்டில் ஸ்ரீ காஞ்சீபுரத்தில், முன்னே அரசாண்டுவந்த வசுமானென்றும் ஓர் அரசன் கங்காஸ்நானத்துக்குச் சென்றான். அப்போது அவனது நாட்டைப் பகைவர் அபகரித்துக்கொண்டனர். அரசன் கேட்டுக் கவலையுற்றுச் சாபாலி முனிவரையடைந்து தனது குறையைக் கூறினன். அம்முனிவர், "அசுவமேதஞ் செய்" என்று கூற, அரசன், "பொருளில்லாமையால் என்னால் இயலாது" என்றனன். பின்பு அம்முனிவர், "திருவிடைமருதூரை அடைந்து அசுவமேதப் பிரதக்ஷிணம் செய்வாய்" என்றனர். அரசன் அப்படியே இந்தத் தலத்தை அடைந்து சிவபிரானை வணங்கி விதிப்படி இந்தப் பிரதக்ஷிணம் செய்து பராக்கிரமம் உடையவனாகிப் பகைவரை வென்று அவர் நாட்டைக் கவர்ந்து, அதனை மருதவனேசருக்கு அர்ப்பணம் செய்து மார்கழி மாதத்து உற்சவமும் நன்கு புரிவித்துத் தன் நகரடைந்து வாழ்ந்து முடிவில் சிவகதியுற்றான்.

இரண்டாவது கொடு முடிப் பிராகாரம்: இஃது அசுவமேதப் பிரதக்ஷிணத்துக்கு உள்ளே உள்ளது. பரமசிவன் கட்டளைப்படி வரகுண பாண்டியரால் கட்டுவிக்கப்பட்டது. இதனைப் பிரதக்ஷிணம் செய்தால் கைலாசகிரியைப் பிரதக்ஷிணம் செய்தலை ஒக்கும். தேவகணத்தினர் யாவரும் தினந்தோறும் இதைச் சூழ்ந்து வருவார்கள். இதனைப் பிரதக்ஷிணம் செய்வோர்க்குப் பிணி, தரித்திரம், பாவங்கள் முதலியன நீங்கும்; ஆரோக்கியம், செல்வம், புண்ணியங்கள் முதலியன ஓங்கும். ஞானம் வளரும்; அஞ்ஞானம் தளரும். புகழ் கூடும், இகழ் ஓடும்.

மூன்றாவது பிரணவப் பிராகாரம்: இது கொடுமுடி பிராகாரத்துக்கு உள்ளே இருக்கிறது. இது

பிரணவ பிராகாரமென்பதற்கு அடையாளமாக இப்போதும் நாதோற்பத்தி வழங்கி வருகின்றது.

## நாரத முனிவர் வழிபட்டது

நாரத மகாமுனிவர் ஒரு காலத்தில் சத்திய லோகத்தை அடைந்து பிரமதேவரை வணங்கி, "ஸ்வாமி! உலகத்திலே சிவஸ்தலங்கள் எவ்வளவு உள்ளன? அவற்றுள் சிறந்தன எவை? அருளல் வேண்டும்" என்று பிரார்த்திக்கவே, பிரமதேவர் மகிழ்வுற்று, "அநேக கோடி ஜன்மங்களிலே செய்த பெரும் புண்ணியத்தாலேயே கிருபா சமுத்திரமாகிய பரமசிவனது மகிமைகளைக் கேட்பதற்கு ஒருவருடைய மனம் விரும்பாநிற்கும்; ஆதலால் நீர் பெரும் புண்ணியம் உடையீர்; சொல்லுதலால் நானும் பெரும் புண்ணியமுடையேன்" என்று பின்வருமாறு சொல்லுகிறார்:

"முனிபுங்கவ! பூமியினிடத்து அளவில்லாத சிவஸ்தலங்கள் உள்ளன. அவற்றுள்ளே ஏழாயிரத்து நானூறும், அவற்றுள் ஆயிரத்தெட்டும், அவற்றுள் நூறும், அவற்றுள் அறுபத்தெட்டும், அவற்றுள் இருபத்துநான்கும், அவற்றுள் எட்டும் சிறந்தனவாம். அவ்வெட்டு ஸ்தலங்களாவன: திருக்கைலாயம், ஸ்ரீ அருணாசலம், ஸ்ரீ காசி, திருக்காளத்தி, திருவாலவாய், ஸ்ரீ சிதம்பரம், திருவாரூர், திருவிடைமருதூர். இந்த எட்டில் திருவிடைமருதூர் ஆதிசக்தியின் இருதயகமல மத்தியமாய் விளங்காநிற்கும். அநாதியாகிய அந்தத் தலத்தை உமாதேவியாருக்குக் காண்பித்தற்பொருட்டு மகாதேவர் திருக்கைலாயத்தினின்றும் முன்னொரு காலத்தில் எழுந்தருளினர். அவர் வருமுன்னமே அந்தக் கைலையங்கிரி அந்தத் தலத்தில் மருதவிருட்சமாகி நின்றது. அந்த விருட்சத்தைத் தரிசித்தால் கைலாயத்தைத் தரிசித்த பலன் உண்டாகும். அதனை வலம் செய்தாலும், பணிந்தாலும், பூசித்தாலும் கைலைக்குச் செல்லுதல் போலாம். அந்த மத்தியார்ச்சுனத்தில் பிறந்தாலும், இறந்தாலும், கணப்பொழுது தங்கினாலும், அதன் மகிமைகளைப் படித்தாலும், அதைத் தரிசித்தாலும், நினைத்தாலும் ஒருவன் எல்லாத் துன்பங்களினின்றும் நீங்கிச் சிவ சாயுஜ்யத்தை அடைவான். அன்றியும் யஜமானன், மாதா, பிதா, குரு இவர்களுக்குச் செய்த அபராதங்களும் அந்தத் தலத்தை அடைதலால் நீங்கும். முன்னம், வரகுண பாண்டியரையும் ஹம்ஸத்துவசச் சோழனையும் வேறோர் அரசனையும் பற்றி மிகவும் வருத்திய கொடிய பிரமஹத்திகள் அந்தத்தல விசேஷத்தால் நீங்கின. அதில் உள்ள புண்ணிய தீர்த்தங்களுக்கு அளவில்லை. அவற்றில் செய்த அணுவளவு புண்ணியமும் மேரு அளவாக வளரும். முற்காலத்தில் விபண்டகமுனிவர் பல முனிவர்களோடும் இருபத்துநான்கு சதுர்யுகம் அந்த ஸ்தலத்தில் தவம் செய்து சிவ சாயுஜ்யத்தை அடைந்தனர். பின்பு நானும் அந்தத் தலத்தை யடைந்து ஸ்ரீ மகாலிங்க மூர்த்தியைப் பூசித்துப் பங்குனித் திருவிழாவும் நடத்தினேன். என்னைப்போன்ற அநேக பிரம்மாக்களும், அவர்களைப் பெற்ற அநேக அச்சுதர்களும் அந்தத் தலத்தை அடைந்து பசுபதியைத் தரிசித்துத் தத்தமக்கு வேண்டிய பயன்களைப் பெற்றார்கள். இன்னும் அந்தத் தலத்தில், அசுவமேதப் பிரதக்ஷிணமென்று ஒன்றுண்டு. அதில் பிரதக்ஷிணம் செய்தால் குருடன் கண் பெறுவான். வறியன் செல்வமடைவன். குஷ்டம், க்ஷயம் முதலிய நோய்களெல்லாம் நீங்கும். பைசாசங்கள் எல்லாம் ஏங்கும். அந்தப் பிரதக்ஷிணம் செய்து பேறு பெற்றோர் பலர். அதன் பெருமையை அநேகம் நாவுடையோர் ஒருவாறு சொல்லலாமேயன்றி நான் சொல்லுதற்கு உரியனோ? அங்கே எழுந்தருளிய ஸ்ரீ மகாலிங்க மூர்த்தியின் திரவியங்களுள் அணுவளவேனும் ஒருவன் அபகரிப்பானாயின், அவன் எல்லா நரகத் துன்பங்களையும் அடைந்து பின்பு நூறு சண்டாள ஜன்மம் எடுத்து, அதன் பின்பு நூறு நாய்ப் பிறப்புற்று அப்பால் புழுவாய்ப் பிறப்பான். இது நிச்சயம், நிச்சயம். இதற்கு ஒரு கதை சொல்வேன்:

"சம்பகாவதி என்னும் பெயரையுடைய ஒரு நகரத்திலுள்ள அதிசீலனாகிய விநதனென்னும் வேதியன் ஒருவனுக்குப் பாபத்தால் தேவவிரதனென்று ஒரு புத்திரன் பிறந்தான். விநதன் உரிய காலங்களிலே அவனுக்கு ஜாதகர்மாதிகளை முறையே நடத்தி வேதாத்தியயனம் செய்வித்து வருகையில், ஒருநாள் தான் சொல்லியதைப் புத்திரன் உட்கொள்ளாமையால் அவனைக் கோபித்தான்; உடனே தேவவிரதன் தகப்பனைப் புடை பெயராவண்ணம் தூணோடு சேர்த்து இறுகக் கட்டிவிட்டு, அவ்வூரைவிட்டுப் புறப்பட்டுப் பல கீழ் மக்களோடும் கூடிப் பல விடங்களில் களவு செய்து பின்பு திருவிடைமருதூரை அடைந்தான். அடைந்த தினம் திருவிழாக் காலமாதலால், ஸ்ரீ ஏகநாயகப் பெருமான் உமாதேவியோடு எல்லா ஆபரணங்களும் அணிந்து, திருவீதியில் எழுந்தருளினார். அப்போது யாவரும் தரிசனம் செய்து கண்படைத்த பயனை அடைந்தார்கள். அந்தத் தேவவிரதன் சுவாமி

யினுடைய திருமேனியிலும் அம்பிகையின் திரு மேனியிலும் உள்ள திருவாபரணங்களை எல்லாம் நோக்கி, 'இவை கிடைத்தால் எவ்வளவோ செய்து கொள்ளலாம்; இவற்றை மட்டும் அபகரிப்பது விசேஷமன்று; இன்னும் சேமத்தி லுள்ள ஆபரணங்களை எல்லாம் கவர்ந்தால் எவ்வளவோ நன்மை அடையலாம்; இவற்றைக் கவர்வதற்கு இவ்வாலய விசாரணையை எப்படி யாவது பெறவேண்டும்' என்று தன்னைச் சூழ்ந்து நின்ற திருடர்களுக்கும் தூர்த்தர்களுக் கும் கூறி, அதிகாரம் பெறுதற்பொருட்டு அரசனை அடைந்து அவனை மகிழ்வித்து, 'இந்தக் கோயில் விசாரணை செய்வதற்கு எனக்கு அதிகாரம் கொடுத்தால் மிகவும் செவ்வையாக நடத்துவேன்' என்று கூறி, அதிகாரம் பெற் ருன். அந்தத் தலத்துத் திருவீதியிலுள்ள மனை ஒன்றிலே தங்கியிருந்து எல்லா ஆபரணங் களையும் ஒருங்கே கவர்ந்து போவதற்குச் சமயம் பார்த்துக்கொண்டே அதிகாரம் செய்துவரும் நாளில், அவனுக்கு வலப்புறத்தில் ஒரு பிளவை உண்டாயிற்று. அதில் ஈ மொய்யாதபடி ஆலயத் துள்ளே ஒரு திருவிளக்கிலிருந்த நெய்யில் ஒரு துளியை எடுத்து, அப்பிளவையின்மீது தடவித் தன் மனைக்குச் செல்லுகையில் ஒரு பாம்பு கடிக்க அவன் இறந்தான். அக்கொடிய பாவியை யமகிங்கரர் பிடித்துக் கட்டிக்கொண்டு போய், இருபத்தெட்டுக் கோடி நரகிலும் வீழ்த்தி, வெகு காலம் வருத்திய பின்பு அவன் நூறு சண்டாள ஜன்மத்தை அடைந்து பின்பு நாய்ச் சன்மம் நூறடைந்து, பின்பு அந்தத் திருவிடைமரு தூரில் மலப் புழுவாய் ஜனித்துக் கிடந்தனன். அந்தக் காலம் பூச விழாவாதலால் பூசத்துறை யில் ஸ்நானம் செய்த ஒரு பிராமணன் கூட்டத் தில் செல்ல முடியாமல் ஒதுங்கியபோது அவன் பாதம் புழுவின்மேற் பட்டது. படவே அந்தப் பாதம் பூச தீர்த்த சம்பந்தமுள்ளதாதலால், அவன் அப்புழு வடிவம் ஒழிந்து தேவர் உருவம் பெற்று, அரம்பையர் இருபுறத்தும் சாமரை வீச, விமானமேறி வானுலகடைந்து அளவற்ற இன் புற்று வீற்றிருந்தான்.

"ஆதலால், சிவத்துரோகம் பொல்லாது! பொல்லாது!" என்று கூறக் கேட்டு நாரத முனிவர், "ஸ்வாமி! அந்தத் தலத்தை அடை யும் முறையையும், அடைந்து அங்கே செல்வன வற்றையும், ஆங்குள்ள தீர்த்தங்களில் நீராடும் கிரமத்தையும் கூறியருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தார்; பிரமதேவர் அவற்றை முறையே கூறக்கேட்டு விடைபெற்று இந்தத் தலத்தை அடைந்து விதிப்படி எல்லாத் தீர்த்தங்களிலும் ஸ்நானம் பண்ணிச் சுவாமி தரிசனம் செய்து பூச விழாவும் தரிசித்துப் பேராத பேரானந்த முற்றனர்.

இந்த மகா சரித்திரத்தைக் கேட்ட சவுனகாதி முனிவர்கள் சூத முனிவரோடும் இந்த ஸ்தலத்தை அடைந்து ஸ்ரீ மகாலிங்க மூர்த்தி யையும், ஸ்ரீ பிருகத் சுந்தர குசாம்பிகையையும் வழிபட்டுப் பெரும்பேறு பெற்றனர்.

**(எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)**

"போற்றலுறு மருதவனப் புராண மென்னப்
புகலிதனைப் படிப்பவர்கள் கேட்போர் யாவரும்
மாற்றரிய வினையினேடு பகையை வென்று
மன்னுநெடுஞ் செல்வமொடு மகவு மெய்தித்
தேற்றமுறு புவியினிடை நீடு வாழ்ந்து
திகழுறுவிண் ணுலகில்வள ரின்பந் துய்த்துச்
சாற்றலுறு பரஞான மருவி யீசன்
சரணபங் கயநிழல்வீற் றிருப்பர் மன்னே!"

மத்தியார்ச்சுன மான்மியம்
முற்றும்

## வஸந்தோத்ஸவத் திருக்கல்யாண வரலாறு

ஸ்ரீ அகஸ்தியமுனிவர், இந்த க்ஷேத்திரத்தில் முன்னம் காசிபர் முதலிய முனிவர்களுக்குச் சிவதத்துவத்தை உபதேசித்து, அவர்களோடு அம்பிகையைக் குறித்துத் தவம் செய்து அருள் பெற்று, அந்த அம்பிகையோடும் முனிவர் களோடும் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்து கொண்டிருக்கையில், சிவபிரான் ஏக நாயக மூர்த்தியாய் அவர்களுக்குக் காட்சி கொடுத்து, "உங்களுக்கு வேண்டிய வரங்களைக் கேளுங்கள்" என்று திருவாய் மலர்ந்தருள, முனிவர்கள் யாவரும் தத்தமக்கு வேண்டியவாறே வரங்களைப் பெற்று உய்ந்தார்கள். அகஸ்திய முனிவர், "ஸ்வாமி! தேவரீரைப் பிரியாமல் விளங்கும் உமாதேவியார், பர்வதராசனுடைய வேண்டுகோளின்படி அவனுக்குப் புத்திரியாக அவதரித்துத் தவம் செய்தபோது காட்சி கொடுத்து, உமாதேவியாரைத் திருக்கல்யாணம் செய்து, ஸ்ரீஸ்கந்ததேவரைப் பெற்று, அவரால் ஹரிப்பிரமாதி தேவர்களுக்கு நேரிட்டிருந்த துன்பங்களை மாற்றிப் பாதுகாத்தருளினீர். அவ் வாறே இந்தத் தலத்திலும் தேவரீருடைய ஆக்ஞையினாலே பிரிந்து தவம் புரிந்து காட்சி பெற்ற உமாதேவியாரைத் திருமணம் செய்து

காட்சியளித்து அடியேங்களைக் காத்தருள வேண்டும்'' என்று பிரார்த்தித்தார். சிவபெருமான் அப்படியே வைகாச மாசத்தில் உத்தர நட்சத்திரத்தில் அம்பிகையைத் திருக்கல்யாணம் செய்து அகஸ்திய முனிவருக்கும் மற்ற முனிவர்களுக்கும் காட்சி கொடுத்தருளினர்.

பின்பு சூரிய குலத்தரசனுகிய மாந்தாதா என்பவன் பெரியோர்கள் சொல்ல அறிந்து, வஸந்தோத்ஸவத்தின் ஆரும் திருநாள் உத்தர நட்சத்திரத்தில் இந்தத் திருக் கல்யாணத்தை விதிப்படி புரிவித்துப் பெரும்பேறு பெற்றுன்.

இந்தத் திருக்கல்யாண மகோத்ஸவத்தை வேதாகம விதிப்படி பிரபலமாய் நடத்த வேண்டுமென்று வேதவித்துக்களாகிய அந்தணர்களும், ஆகம நிபுணர்களாகிய ஆதிசைவர்களும் விரும்பியபடி திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து 16-ஆம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் கட்டளைப் பிரகாரம், காசிவாசியும், மேற்படி ஆதீனத்துக் காறுபாறுமாகிய சுப்பிரமணிய சுவாமிகளால் சிவநேசமுள்ள சில கனவான்களுடைய உதவியால் கலியப்தம் ௪௯௮௯-இல் நிகழ்ந்த தாரணஞு முதல் வசந்தோத்ஸவத்தின் ஐந்தாம் திருநாள் அம்பிகை தவமும், ஆருந் திருநாள் உத்தர நட்சத்திரத்தில் திருக்கல்யாணமும், ஒன்பதாந் திருநாள் வரையினதாகிய மூன்று நாளும் ஔபாஸனுதி கிரியைகளும், பத்தாம் திருநாள் விசாகத்தில் ஔதும்பர பூசை முதலியனவும் தீர்த்தமும் அன்றிரவில் வெள்ளிரதக் காட்சியும் நடத்தப்பட்டு வருகின்றன.

பூமேவு மனுகுலத்து மாந்தாதா வெனுங்குரிசில்
புரைய விந்நாள்
தூமேவு மிடைமருத வாணருக்குத் திருமணத்தைச்
சுருதி யோடு
பாமேவு மாகமஞ்சொல் விதிப்படியே புரிவித்துப்
பயன்பெற் றுய்ந்த
மாமேவு துறைசையிற்சுப் பிரமணிய முனிவர்பிரான்
வாழ்க மன்னே!

மத்தியில் சில வருஷங்கள் இந்த மகோத்ஸவம் நடைபெருமல் நின்றிருந்தது. ஸ்ரீ மகாலிங்கமூர்த்தியினிடத்து விசேஷ ஈடுபாடுள்ளவர்களும் திருவாவடுதுறை ஆதீனத்தில் 20-ஆம் பட்டத்தில் இப்போது எழுந்தருளியிருப்பவர்களுமான ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக மூர்த்திகள் 1938-ஆம் ஆண்டு முதல் முன்னிலும் மிக்க சிறப்புடன் இவ்விழாவை நடப்பித்துப் பக்த கோடிகளுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளித்து வருகிறுர்கள்.



# திருவிடைமருதூர்த் திருக்கோயில் காட்சிகள்

'இடைமருதில் சீரார்ந்த கோயிலே கோயிலாகச் சேர்ந்தீரே.'



# ஸ்ரீ ஏகநாயகர் ஊசல்

சீர்பூத்த நான்மறையா கமங்கள் வாழத்
திருநந்தி கணங்களென்றுஞ் செழித்து வாழத்
தார்பூத்த சித்தாந்த சைவம் வாழத்
தமிழ்மறையு மைந்தெழுத்துந் தழைத்து வாழப்
பேர்பூத்த மறையவரோ டடியார் வாழப்
பெரும்பொன்னித் திருநாடு பிறங்கி வாழ
ஆர்பூத்த விடைமருதங் கோயி லாக்கொண்
டமரேக நாயகரே யாடி ரூசல் (க)

மாமேவு புகழ்வீர சோழ னூற்று
மணிமதில்சூழ் திருக்கோயி லிடையின் மேவும்
தூமேவு மலங்கார மண்ட பத்திற்
றுலங்குமணிப் பொன்னூச லிலங்க மேவிப்
பூமேவு பெருநலமா முலையா ளோடும்
பொன்னனைய மேனியினீ ராடி ரூசல்
தேமேவு மருட்கடலே யாடி ரூசல்
திருவிடைமா மருதுடையீ ராடி ரூசல் (உ)

தளம்பூத்த நறுங்கொன்றைத் தாம மாடத்
தடந்திரைமந் தாகினியாந் தைய லாடக்
குளம்பூத்த விழியாடக் குழைக ளாடக்
குலவுமணிப் பூம்பணிகள் குலவி யாட
வளம்பூத்த பல்லுயிரும் வருந்தா தின்று
வளர்த்தருளுந் தாய்மருங்கின் மகிழ்வுற் றாட
உளம்பூத்த விடைமருத ராடி ரூசல்
உவந்தேக நாயகரே யாடி ரூசல் (ங)

இந்திரனுஞ் சசியுமொரு வடந்தொட் டாட்ட
இந்திரையு முகுந்தனுமோர் வடந்தொட் டாட்டச்
சந்திரனேர் தவளசரோ ருகத்து மேய
தையலுநான் முகனுமொரு வடந்தொட் டாட்ட
அந்தரநாட் டவர்களொடு மரம்பை மாரும்
அகமகிழ்ந்து போற்றியொரு வடந்தொட் டாட்ட
மந்திரமா விடைமருதங் கொண்டு வாழும்
மகாலிங்க நாயகரே யாடி ரூசல் (ச)

ஒருஞானப் பாலருந்தி யம்பொற் றாளம்
ஒண்டரளச் சிவிகைபந்த ருவந்து பெற்றோர்
தருஞானத் தைப்பூசங் காண்பா யென்று
தவளவென்பைப் பெண்ணாக்கித் தந்த வெங்கோன்
திருஞான சம்பந்தச் செல்வ ரோதுஞ்
செந்தமிழ்மா மறையன்பர் தெரிந்து பாட
அருஞானத் திருவுருவி ராடி ரூசல்
அருண்மருத வாணரே யாடி ரூசல் (ரு)

புடைமருதப் பெருந்துறையி லருள்பெற் றென்றும்
பூசையறு காலத்தும் வழாம லாற்றி
இடைமருதா நந்தத்தே னென்றே யன்பின்
ஏத்துபிரா னருளூச லடியார் பாட
அடைமருதக் கிளிமொழியோ டாடி ரூசல்
அனைத்துயிரும் புரந்தருள்வீ ராடி ரூசல்
இடைமருத நாயகரே யாடி ரூசல்
ஏகநா யகப்பெருமா னாடி ரூசல் (சு)

அரசரெலா மடிவணங்க மதுரை காத்த
அண்ணல்வர குணதேவற் கச்ச நீங்க
விரசுபழி யோட்டியர லோகங் காட்டு
மேன்மைதனை மெய்யன்பர் வியந்து பாடப்
பிரசமலர்த் தொடையசைய வாடி ரூசல்
பிறையணிந்த செஞ்சடையீ ராடி ரூசல்
இரசதவெண் கிரியுடையீ ராடி ரூசல்
இடைமருத வாணரே யாடி ரூசல் (எ)

தேனாடு நறுங்கொன்றைத் தொடைய லாடத்
தெளிபுனற்கங் காநதியின் றிரைக ளாட
மானாடத் திருக்கரத்து மழுவு மாட
மாரனிளந் தென்றலந்தேர் மருவி யாட
வானாட மண்ணாட வனைத்து மின்ப
வாரிபடிந் தாடவுமை மருங்கின் மேவித்
தானாடத் தருமமெலாந் தழைவுற் றோடத்
தயங்குமிடை மருதரே யாடி ரூசல் (அ)

வரையரையன் மேனையொடு மகிழ்ந்து காண
வரைந்தாடுந் திருவூச லாட்டுங் கூடல்
அரையன்மலை யத்துவசன் மனைவி காண
அன்றாடுந் திருவூச லாட்டுங் காணப்
புரையுடையேங் கண்டுய்ய வாடி ரூசல்
புண்ணியவெள் விடையுடையீ ராடி ரூசல்
தரைசெய்தவப் பயனாய மருத நீழல்
தங்கியருள் செல்வரே யாடி ரூசல் (கூ)

பொருவிடைவா கனமுடையீ ராடி ரூசல்
பொங்கரவப் பூணுடையீ ராடி ரூசல்
கருவிடையாம் புகுந்தூச லாடா வண்ணங்
காத்தருளும் பெருமானே யாடி ரூசல்
வருவிடையர் குலந்தழைப்ப வருமா னுயர்
வடித்தவிசை கொளுஞ்செவியீ ராடி ரூசல்
திருவிடைமா மருதுடையீ ராடி ரூசல்
தேவாதி தேவரே யாடி ரூசல் (கo)

# ஸ்ரீ ஏகநாயகர் தாலாட்டு

சீர்மலிந்த கல்வியொடு செல்வமுமேன் மேல்வயங்கி
ஏர்மலிந்த மாட விடைமருத நாயகரோ ! (க)

எல்லாத் தலத்து மிடைமருதே மேலாமென்
றெல்லா மளித்தாட் கியம்பியருண் மாமணியோ (உ)

வாய்ந்த கயிலை வடிவா மருதநிழல்
ஏய்ந்த வுமையோ டெழுந்தருளி வாழரசோ. (ங)

மாகா ரிருளினிடை வந்தே ருத்திரர்கள்
ஏகா தசரு மிறைஞ்சவெளிப் பட்டவரோ. (ச)

மா துமையாள் பன்னாட்செய் மாதவங்கண் டன்னாண்முன்
சோதிமகா லிங்கமாய்த் தோன்றியருள் சின்மயரோ. (ரு)

கோனேயென் பார்தெளிந்து கொண்டாடு மாறுதன்னைத்
தானே யருச்சித்த தண்கருணை வாரிதியோ. (சு)

காக மொருதடத்தின் கட்படிய மற்றதன்றன்
ஆகம் பசும்பொன்னா வாக்கியரு ளாரமுதோ (எ)

பணவரவம் பூணும் பரனேயென் றுண்ட
கணபதிபூ சிக்கக் கவினு முதற்பொருளோ (அ)

மாட்சி யுரோமசன்றன் மாதவங்கண் டன்னையொடு
காட்சி கொடுத் தன்னான் கவலை கடிந்தவரோ (கூ)

இலங்கு குறுமுனிவ னென்றுவரு மென்று
நலங்கொ ளவன்வரவை நாடியுறை நாயகமோ. (க0)

மண்ணைக்கொ டேலென்று மாவலிக்குச் சொற்றவன்றன்
கண்ணைக் கொடுத்தவனைக் காத்தருளுங் கற்பகமோ. (கக)

இன்பகற்று பாவத் திடைப்பட்டோர் சூழ்கினவர்
துன்பகற்று பூசத் துறையாடுஞ் சுந்தரமோ (கஉ)

சீமான் வரகுணப்பேர்த் தென்னவன்றன் காதலியைக்
கோமானீ கொள்ளெனவே கொண்டகுணக் குன்றமோ (கங)

அல்லார் களத்தா யருளென்பார் காதலித்த
எல்லா மருளு மிடைமருத மார்கரும்போ (கச)

தேனோ சுவையமுதோ தித்திக்குஞ் செய்யகனி
தானோ மலைபயந்த தையலா ளாருயிரோ (கரு)

பிரமகத்தி முன்னும் பெரும்பாவ நீக்கி
வரமளித்து மன்னுயிரை வாழச்செய் மாமணியோ (கசு)

பிணிக்கோதில் பூம்புகார்ப் பிள்ளையார் சொன்மும்
மணிக்கோவை கொண்டு மனமகிழ்ந்த வள்ளலோ. (கஎ)

வயமேவச் சூழ்வோர்கள் வைக்குமடி யொன்றற்
கயமேதப் பேறருளு மாரருட்சிந் தாமணியோ (கஅ)

தெய்வமில்லை யென்னுஞ் சிதடர்கட வாய்மூடச்
செய்வரத ஞகியநந் தெய்வ சிகாமணியோ. (கக)

நீதஞ்ச மென்றவர்க்கா நீடுகம லைத்தெருவிற்
பாதஞ் சிவக்கப் பரவைமனை சென்றவரோ (உ௦)

விண்ணவரும் பாதலத்தின் மேயவரு மெண்டிசையின்
கண்ணவரு நந்தவத்தைக் காதலிக்க வந்தவரோ (உக)

காவணங் காட்டுங் கடிமனையிற் சுந்தரரை
ஆவணங் காட்டி யடிமைகொண்ட வந்தணரோ (உஉ)

திருந்தடியைப் போற்றிசெயுஞ் செல்வரைமுன் கோலக்
குருந்தடியி லாண்ட குரவர் சிகாமணியே (உங)

நந்தா வுலக நடுங்கா வணஞ்சடையில்
மந்தா கினியை மணந்தமண வாளரோ (உச)

மன்னுயிர்கள் யாவும் வயங்குவநா மென்பதைமுன்
தென்னன் பிரம்படியாற் றேற்றுவித்த மெய்ப்பொருளோ (உரு)

கானந் தனில்விசயன் காண்டீபத் தாலடியுண்
டீனந் தவிர்படையொன் றீந்தருளு மெம்மானே (உசு)

துங்கத் தமிழ்மொழியின் றூய்மையெவ ரும்மறியச்
சங்கப் புலவரிடைத் தங்கியரு ளுவலரோ (உஎ)

செயிரா வனவனைத்துந் தீர்த்தருளும் பொன்னி
அயிரா வணத்துறையி லாடியரு ளங்கணரோ (உஅ)

ஆராவமுதோ வருட்கடலோ வெம்முடைய
தீராத துன்பமெலாந் தீர்க்குஞ் சிவக்கொழுந்தோ (உகூ)

கருது மடியார் கவலையெலாம் போக்கி
மருத நிழலினிடை வாழ்ந்தருளு மாமணியோ (ங௦)

